Bible Power (TAMIL)

# பைபிள் வல்லமை

## பரிசுத்த ஆவியானவரைக் குறித்த திருமறைப் போதனை






2250 வசனக் குறிப்புகள்

50 அத்தியாயங்கள்

350 பக்கங்கள்

ஆங்கிலத்திலும் உண்டு.

**நிறைவானதோர் ஆராய்ச்சி!**

# பைபிள் வல்லமை

இப்புத்தகம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப்பற்றியது.
பிதாவாகிய தேவன், அவரது குமாரனாகிய கிறிஸ்து ஆகிய இருவரைப்போலவே
பரிசுத்த ஆவியானவரும் திரித்துவ தேவத்துவத்தில் ஒரு நபராவார்.
பைபிளில் மொத்தம் 350 தடவைக்குமேல்
பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.
இயேசு கிறிஸ்துவின் இன்றையத் திருச்சபையின் பிரதான கேடுபாடுகளுக்கு
அடிப்படைக் காரணம்
பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய சரியான அறிவின்மையே.
பெந்தெகொஸ்தே சபையினருக்கும் மற்ற சபையினருக்கும்
திடமான ஆன்மீக உணவை இந்நூல் வழங்குகிறது.

இந்நூலிலுள்ள 50 அத்தியாயங்கள் கீழ்க்கண்டவாறு
மூன்று பிரிவுகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளன:
(A) கட்டுரைச் செய்திகள்
(B) சுருக்கக் குறிப்புகள்
(C) கேள்வி பதில்கள்
வசன அட்டவணை உண்டு.



**R. STANLEY**
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>
www.stanleyonbible.com

# பைபிள் வல்லமை

### பரிசுத்த ஆவியானவரைக் குறித்து
### பைபிள் போதிப்பது

**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

Evangeline Stanley Jones
13 Church Colony
Vellore 632 006, India
<evangeline@stanleyonbible.com>

**BIBLE POWER** (Tamil)

Copyright 2018 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
*00 91 98437 07600*
*00 91 98430 11943*

First Edition: May 2018

திருமறையின் பழைய மற்றும் புதிய மொழியாக்கங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

Available in English also.

*தமிழாக்கம்:* ஆசிரியர்

*பக்க வடிவமைப்பு:*
K. குணசேகரன்
ஓய்வு பெற்ற மிஷனரி, ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

*அச்சுப் பிழை திருத்தம்:*
லினெட்டா சம்பத்குமார், M. மரியஜோசப்

*வசன அட்டவணை:*
C. சுதாகர், P. எபினேசர், A. கனிஷ்டன், N. குமார்

விலை ரூ. 150/-

*அச்சடிப்பு:*
New Shenbagam Offset, Sivakasi

**மூன்று ஆராய்ச்சி வேதாகமங்களின்**
**ஆக்கியோன்களது நினைவுக்கு**
**அர்ப்பணிப்பு ...**

**C.I. ஸ்கோபீல்டு,** 1843-1921
*1909இல் வெளிவந்த Scofield Reference Bibleஇன்*
*ஆசிரியர், பிரதரன் சபைப் போதகர்*

**F.C. தாம்சன்,** 1858-1940
*1915இல் வெளிவந்த Thompson Chain Reference Bibleஇன்*
*ஆசிரியர், மெதடிஸ்டு சபைப் போதகர்*

**F.J. டேக்,** 1902-1987
*1963இல் வெளிவந்த Dake's Annotated Reference Bibleஇன்*
*ஆசிரியர், பெந்தெகொஸ்தே சபை வேதப் பண்டிதர்*

திருவிவிலியத்தில் ஒரு பிடிப்பு கிடைப்பதற்கு
இம்மூன்று ஆராய்ச்சி வேதாகமங்களும்
எனக்குப் பெரிதும் உதவின.







# *இயேசுவின் அழைப்பு*

*''ஒருவன் தாகமாயிருந்தால்*
*என்னிடம் வந்து*
*பானம்பண்ணட்டும்.*
*வேத வாக்கியம் சொல்லுகிறபடி*
*என்னிடம் விசுவாசமாயிருக்கிறவனின்*
*உள்ளத்திலிருந்து*
*ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்!''*
*தம்மை விசுவாசிப்போர்*
*பெறவிருந்த ஆவியைக் குறித்து*
*இப்படிச் சொன்னார்.*

(யோவான் 7:37-39)

# உள்ளே ...

## (A) கட்டுரைச் செய்திகள்


1. பைபிள் வல்லமை ... 8
2. இறைவனது இணையான ஈவுகள் ... 14
3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி? ... 21
4. ஆவியானவருக்குள் நடக்கை ... 33
5. ஆவியானவர் தரும் ஆற்றல் ... 40
6. சொந்த பெந்தெகொஸ்தே ... 51
7. ஆவியானவர் சொல்லுகிறது ... ... 61
8. கிறிஸ்துமஸும் பெந்தெகொஸ்தேயும் ... 72
9. அன்னிய பாஷை இன்றும் அவசியமா? ... 82
10. அற்புத அடையாளங்கள் ... 101
11. வரங்களை அறிந்துகொள்ளுங்கள்! ... 113
12. வரங்களை அப்பியாசியுங்கள்! ... 123
13. பெந்தெகொஸ்தேயின் நோக்கம் ... 134
14. மிஷனரிப்பணியில் பரிசுத்த ஆவியானவர் ... 143
15. அபிஷேக எழுத்துப்பணி ... 155
16. ஆவிகளைச் சோதித்தறிவது எப்படி? ... 168
17. பரிசுத்த ஆவியானவரிடம் திரும்புவோம்! ... 182
18. பரிசுத்த ஆவியானவரும் இரண்டாம் வருகையும் ... 202


## (B) சுருக்கக் குறிப்புகள்


19. ஆவியானவரை நான் என்ன செய்யவேண்டும்? ... 210
20. பரிசுத்த ஆவியானவரும் பரிசுத்த ஆகமங்களும் ... 214
21. பரிசுத்த ஆவியானவரது உதவிகள் ... 218
22. பரிசுத்த ஆவியானவர்: சுத்திகரிக்கும் அக்கினி ... 223
23. அன்னிய பாஷை குறித்துத் திருமறை கூறுவது ... ... 227
24. அப்போஸ்தலர் நடபடிகளில் வல்லமை ... 231
25. தீர்க்கதரிசன வரம் ... 233





26. பகட்டு குறைவான வரங்கள் ... 241
27. வரங்களை வெளிப்படுத்துவதில் சகச்சார்பு ... 245
28. பரிசுத்த ஆவியானவர் எப்போது துக்கப்படுகிறார்? ... 250
29. திருச்சபை எவ்விதம் ஆவியானவரைப் புண்படுத்துகிறது? ... 252
30. ஆவியானவரும் ஆதிநிலையடைதலும் ... 258
31. தூயாவியானவரும் தூதறிவிப்பும் ... 266
32. மணமகளை ஆயத்தப்படுத்தும் தூயாவியானவர் ... 269
33. உனது உடல்: ஆவியானவரின் ஆலயம் ... 276


## (C) கேள்வி-பதில்கள்


34. ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் யாது? ... 282
35. ஜெபப் புத்தக முறையா, சுயாதீன ஆராதனையா? ... 285
36. அமைதியாய் ஆராதிக்க முடியாதோ? ... 289
37. நடனமாடி ஆராதிக்கலாமா? ... 291
38. பெண்கள் கரங்களை உயர்த்தி ஆராதிக்கலாமா? ... 294
39. அக்கினி அபிஷேகம் என்றால் என்ன? ... 297
40. அன்னிய பாஷை ஒன்றுதான் அடையாளமா? ... 299
41. அன்னிய பாஷைகள் ஓய்ந்துவிட்டனவா? ... 301
42. வரங்கள் ஒன்பதா, பத்தொன்பதா? ... 303
43. கைகளை வைக்குதல்பற்றி ...? ... 305
44. பிரசங்கிமார் மக்கள்மீது ஊதலாமா? ... 307
45. ஆவியில் தரையில் விழுதலைப் பற்றி ...? ... 310
46. பரிசுத்த சிரிப்பு என்றால் என்ன? ... 314
47. விசுவாசிகளுக்குப் பிசாசு பிடிக்குமா? ... 317
48. கத்தோலிக்கர் அபிஷேகம் பெறுவதைப்பற்றி ...? ... 320
49. எதுதான் ஆவிக்குரிய சபை? ... 325
50. இதுதான் எதிர்பார்த்திருந்த எழுப்புதலா? ... 329
- ☐ பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய பொன்மொழிகள் ... 332
- ☐ வசன அட்டவணை ... 336

# (A)

# பரிசுத்த ஆவியானவரைக்
# குறித்த
# கட்டுரைச் செய்திகள்



# 1

## பைபிள் வல்லமை
## Bible Power

இப்புத்தகம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பற்றியது. பழைய ஏற்பாட்டில் 100 தடவை, புதிய ஏற்பாட்டில் 250 தடவை எனப் பைபிளில் மொத்தம் 350 தடவைக்குமேல் குறையாது பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்பட்டுள்ளார். அப்போஸ்தலன் பவுல் தனது நிருபங்களில் தேவனுடைய ஆவியானவரை 112 தடவை குறிப் பிட்டுள்ளார். இயேசு கிறிஸ்துவின் இன்றையத் திருச்சபையின் முக்கிய கேடுபாடுகளுக்கு அடிப்படைக் காரணம் பரிசுத்த ஆவி யானவரைப் பற்றிய தெளிவான அறிவின்மையே. நாம் நமது கட்டமைப்புகளைக் கும்பிட்டுக்கொண்டிருக்கிறோம்; அவற்றில் ஆவியானவருக்கு இடமில்லையேல் ஆண்டவர் அவற்றை மதிப்பதில்லை (2 தீமோ 3:15; யூதா 19).

பரிசுத்த ஆவியானவர் என்று சொன்னவுடனேயே பலர் ஒதுங்கு கின்றனர்; ஏனெனில் அவர்கள் அவரைப் பெந்தெகொஸ்தே சபை களோடேயே சம்பந்தப்படுத்துகின்றனர். பிதாவாகிய தேவன், அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆகிய இருவரைப் போலவே பரிசுத்த ஆவியானவரும் திரித்துவ தேவத்துவத்தில் ஒரு நபர் என்று அவர்கள் அறியாதிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர் என்பவர் ஒரு நபர்; அவர் வெறும் சக்தியோ விசையோ அல்ல. அவர் சர்வ வியாபகர் (சங் 139:7-13), சர்வ வல்லவர் (லூக் 1:35-37), சர்வ ஞானி (1 கொரி 2:10,11). அவர் திடீரெனப் புதிய ஏற்பாட்டில் அறிமுகமானவர் அல்ல. திருவிவிலியத்தின் முதல் பக்கத்திலேயே நாம் அவரைச் சந் திக்கிறோம் (ஆதி 1:2). அவர் படைப்பில் ஈடுபாடு கொண்டிருந்தார் (யோபு 26:13; சங் 104:30). இஸ்ரவேலரை வனாந்தரத்தில் வழி நடத்தினார் (நெகே 9:20). திருமுழுக்கு கொடுக்கப்படவேண்டிய பெயரில் அவர் பிதாவாகிய தேவனோடும் குமாரனாகிய தேவ னோடும் சமநிலை வகிக்கிறார் (மத் 28:19,20); திரித்துவ ஆசீர் வாதம் கூறுதலிலும் அப்படியே (2 கொரி 13:14).

விண்ணகத்தில் தேவனுக்கு இயேசு சமமாயிருந்தும், அவர் மண்ணுலகிற்குள் வரும்போது தமது தெய்வீக மகிமையைக் களைந்தார் (பிலி 2:6,7). இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் ஈடுபாடு ஆச்சரியமானது. பிதாவானவரும் ஆவியானவரும் சேர்ந்தே இயேசுவை இவ்வுலகிற்குள் அனுப்பினர் (ஏசா 48:16). கன்னி மரியாளிடம் அவர் கருவானது பரிசுத்த ஆவியானவராலேயே (மத் 1:20; லூக் 1:35). யோர்தான் நதியில் அவர் திருமுழுக்கு பெற்று வெளிவந்தபோது புறாவைப்போல் பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்திறங்கினார் (மத் 3:16). பிசாசினால் அவர் சோதிக்கப்படும்படி அவரைப் பாலை நிலத்திற்குள் நடத்திச் சென்றது பரிசுத்த ஆவியானவரே (மத் 4:1; லூக் 4:1). கடுமையான சோதனைகளுக்குப் பின்னர் அவர் ''ஆவியானவரின் வல்லமையுடன்'' பாலை நிலத்திலிருந்து வெளிவந்தார் (லூக் 4:14). சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் சிறைப்பட்டோரை விடுதலையாக்கவும் அவர் ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (லூக் 4:18,19; அப் 10:38). புறவினத்தாருக்குப் பணியாற்ற இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்தார் (மத் 12:18-21). அவர் பிசாசுகளைத் தேவனுடைய ஆவியினால் துரத்தினார் (மத் 12:28). தமது சீடரது ஊழியத்தின்மீது அவர் ஆவியானவருக்குள் அகமகிழ்ந்தார் (லூக் 10:21). நித்திய ஆவியினாலேயே அவர் சிலுவையில் தம்மைப் பலியாக்கினார் (எபி 9:14). அவர் பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்டார் (ரோ 8:11; :1 பேது 3:18). ஆவியானவரால் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் (1 தீமோ 3:16). உயிர்த்தெழுந்த பின்னர் பரிசுத்த ஆவியினாலேயே தமது சீடருக்குக் கட்டளைகள் கொடுத்தார் (அப் 1:2). பாவமற்ற இறைமகன் இவ்வளவாய்ப் பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருந்தாரென்றால், அவரைப் பின்பற்றும் நம்மைப்பற்றி என்ன? இக்காரியத்தில் உங்களுக்கு உதவவே இந்நூல்.

ஆதிச்சபையின் முதல் 120 உறுப்பினர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்கள் (அப் 1:15; 2:4). பரிசுத்த ஆவியின் வரத்தை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இவர்கள் அடுத்த 3000 உறுப்பினர்களுக்குப் போதித்தனர் (2:38,41). கிறிஸ்துவுக்காய்ச்



சான்று பகரப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு வல்லமை அருளினார் (1:8; 5:32). அடுத்தடுத்து நிரப்பப்பட்டபோது அவர்களுக்கு ஆவியானவர் புதிய தைரியம் தந்தார் (4:31). பக்திவிருத்தி அடையவும் எண்ணிக்கையில் பெருகவும் அவர் விசுவாசிகளை ஊக்குவித்தார் (9:31). மேய்ப்பர்களும் தலைவர்களும் பரிசுத்த ஆவியானவரது நடத்துதலின்படியே நியமிக்கப்பட்டனர் (20:28). உபதேசத்துக்கடுத்த காரியங்களில் அவர் அவர்களுக்குத் தெளிவு தந்து நடத்தினார் (15:28). அவர்களது நற்செய்தியறிவிப்பிலும் மிஷனரிப்பணியிலும் ஆவியானவர் அவர்களை இயக்கினார் (8:29; 10:19,20; 13:2,4; 16:6,7). துன்புறுத்தப்படுதலுக்காய் அவர் அவர்களை முன்னதாகவே ஆயத்தப்படுத்தினார் (20:23). அவர்கள் துன்புறுத்தப்பட்டுத் துரத்தப்பட்டபோது அவர் அவர்களை மகிழ்ச்சியினால் நிரப்பினார் (13:50-52). முதலாம் இரத்தசாட்சியை அவர் நிரப்பி, விண்ணகத்தின் மகிமையைக் காணச் செய்தார் (7:55). அவர் திருச்சபைகளோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார் (வெளி 2:7,11,17, ...). நாமும் ஆவியானவருக்கு உரிய இடத்தைக் கொடுத்து அவர் சொல்லுவதைக் கேட்போமா? புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் புத்தகமாகிய ''அப்போஸ்தலர் நடபடிகள்'' என்பதை ''ஆவியானவரின் நடபடிகள்'' என்றழைத்தால் சாலப் பொருந்தும்!

நான் தென் தமிழகத்திலுள்ள நாசரேத் எனும் சிற்றூரில் பிறந்து ஆங்கிலிக்கன் திருச்சபைப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டேன். ஞாயிறு ஆராதனைகளில் விசுவாசப் பிரமாணம் சொல்லும்போதெல்லாம் எனது பத்து வயது முதல் ''பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்'' என்று அறிக்கையிட்டு வந்தேன். 1963ஆம் ஆண்டில் தேரி எனப்பட்ட செம்மணல் காட்டில் ஒரு சில மாணவர்களோடு ஜெபித்துக்கொண்டிருக்கும்போதுதான் தேவன் என்னைத் தமது பரிசுத்த ஆவியினால் நிறைத்தார். அப்பொழுது எனக்கு வயது பதினாறு. இவ்வனுபவம் எனது வாழ்க்கையைப் புரட்சிகரமாக்கிற்று. திருமறையின்மீது நேசத்தால் சோகமடைந்தேன். ஜெபம் எனது உயிர் நாடியாயிற்று. பரிசுத்தம் எனது கோட்பாட்டுச் சொல்லானது. கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகராமல் இருக்க முடியவில்லை. தேவ

னுக்காய் எரிந்து பிரகாசிக்கவேண்டும் என்ற வேட்கையை பரிசுத்த ஆவியானவர் எனது இருதயத்தில் பதித்தார். கடந்த 55 ஆண்டுகளில் திருமறையிலிருந்து பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நான் கற்றுக் கொண்டவற்றையும், எனது வாழ்விலும் பணியிலும் அனுபவித்த வற்றையுமே இப்புத்தகத்தில் எழுதியுள்ளேன். பரிசுத்த ஆவியான வரின் நிறைவு இல்லாத கிறிஸ்தவ வாழ்க்கை சாத்தியமா என்பதே எனது கேள்வி!

1960களில் காரைக்குடியிலுள்ள எங்களது பொறியியல் கல்லூரி ஜெபக்குழுக் கூடுகைகளில் ஆவியானவர் அசாதாரணமாய் அசை வாடினார். அநேக மாணவர் ஆவியின் அபிஷேகம் பெற்றனர். அவர் களில் ஒருவர்தான் அதே கல்லூரியில் எனக்கு ஈராண்டு பின்னர் படித்துக்கொண்டிருந்த சகோதரன் A. லயணல் பால் அவர்கள். தேவன் அவரை வல்லமையாய் அபிஷேகித்தார். தாகமுள்ளோரை அபிஷேகத்திற்குள் நடத்தும் சிறப்பான கிருபையை ஆண்டவர் அவ ருக்கு அருளியிருக்கிறார் என்பதை நான் நாளாவட்டத்தில் கண்ட றிந்தேன். அபிஷேகம் நாடுவோர்மீது கை வைத்து ஜெபிக்க நான் அவரை ஊக்குவித்தேன். தொடர்ந்து நிகழ்ந்தது சரித்திரம்! பரிசுத்த ஆவியானவரின் மகிமையான அபிஷேகத்திற்குள் கடந்த ஆண்டு களிலெல்லாம் பல்லாயிரங்களை நடத்த தேவன் அவரைப் பயன் படுத்திவந்திருக்கிறார். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளப் பல் லாண்டுகள் ‘‘காத்திருந்த’’ அநேகருக்கு, ‘‘ஏற்கனவே ஆவியானவர் வந்துவிட்டார்; இனிக் காத்திருக்க அவசியமில்லை; விசுவாசித்துப் பெற்றுக்கொள்ளவேண்டியதுதான்’’ என்று போதித்தபோது அவர்கள் உடனடியாக இவ்வனுபவம் பெற்றனர். நான் கட்டிடப் பொறியிய லில் பட்டம் பெற்றேன்; சகோதரன் லயணல் மின்சாரப் பொறியிய லில் பட்டம் பெற்றார். நான் கட்டும் கட்டிடங்களுக்கு அவர் மின் இணைப்பு கொடுக்கிறார் என்று நகைச்சுவையாய் மக்கள் கூறுவர். அது சரிதானே?

பெந்தெகொஸ்தே சபைகள் மற்றும் பெந்தெகொஸ்தேயல்லாத சபைகளின் பிரசங்கபீடங்களிலிருந்து ஐம்பதாண்டுகளுக்குமேல்



தமது வசனத்தை உத்தமமாய்ப் பிரசங்கிக்க என்னைத் தயவாய்ப் பயன்படுத்திய தேவனைத் துதிக்கிறேன். பெந்தெகொஸ்தே அனு பவத்திற்கு எதிரான சபைகளுக்கும் பிரசங்கித்திருக்கிறேன்! இது ஓர் அசாதாரண சிலாக்கியம். இறைமக்கள் அனைவரும் ‘‘கிறிஸ்துவாகிய தலையானவருக்குள் எல்லாவற்றிலும் வளரும்படி’’ நான் ‘‘அன்புடன் சத்தியத்தைப் பேசி’’ வருகிறேன் (எபே 4:15). எனது பிரசங்கங்களி லும் எழுத்துக்களிலும் ‘‘தேவனுடைய வார்த்தையையும்’’ ‘‘தேவனு டைய ஆவியானவரையும்’’ சமநிலைப்படுத்த முயலுகிறேன் (மத் 22:29). இறையியல் தத்துவத்தைப் பொருத்தவரை எனது நிலை என்னவென்று நீங்கள் அறிய விரும்பலாம். தேவனது ஏகாதிபத்தி யத்தையும் (God’s Sovereignty) மனிதனது பொறுப்பையும் (Man’s Responsibility) சமமாய் வலியுறுத்துகிறேன். கால்வின் மற்றும் ஆர் மீனியன் ஆகிய இருவர் எழுதியுள்ளவற்றையும் படித்து, அவற்றைத் திருவசனப் போதனையோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். அது என்னவெனில், இவ்விருவரின் கோட்பாடுகளும் (Calvinism & Arminianism) ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள், அவ் வளவுதான்! வேண்டுமானால் நீங்கள் என்னைக் கால்வின் தத்துவ முள்ள ஆர்மீனியன் என்றும் ஆர்மீனியன் தத்துவமுள்ள கால்வினி யன் என்றும் அழைத்துக்கொள்ளலாம்! குழப்பமாயிருக்கிறதோ? பெந்தெகொஸ்தேயினரும் பெந்தெகொஸ்தேயல்லாதவரும், அல் லது ஆவியின் அற்புத வரங்களை அப்பியாசிப்பவரும் அப்பியாசி யாதவரும், பரிசுத்த விவாகத்தில் இணைக்கப்பட்டால்தான் சபைச் சரித்திரத்தின் மிகப் பெரிய எழுப்புதலை நாம் காண முடியும்! இப் புத்தகத்தை மூன்று வேத வல்லுனர்களின் நினைவாக அர்ப்பணித் துள்ளேன். (பக்கம் 3). அவர்களில் ஒருவர் *பிரதரன்,* அடுத்தவர் *மெத டிஸ்டு,* அடுத்தவர் *பெந்தெகொஸ்தே* என்பதைக் கவனித்தீர்களா? வேறெந்த ஆராய்ச்சி வேதாகமங்களையும்விட இம்மூன்றினை நான் அதிகம் பயன்படுத்தியுள்ளேன்.

தமக்குச் சித்தமானதை நாம் செய்யும்படி நம்மை நடத்தத் தேவனுக்குப் பல்வேறு வழிமுறைகள் உண்டு. நாசரேத்தைச் சேர்ந்த தம்பி C. சுதாகர் அவர்கள் எனது நெருங்கிய ஜெபத் தோழரில் ஒரு வர். 2018 ஜனவரியில் நடக்கவிருந்த ஆசீர்வாத இளைஞர் இயக்கத்

தின் (BYM) இளம் வாலிபர் முகாம் ஒன்றில் ஆவியின் அபிஷேகம் பற்றிப் பேச இவர் அழைக்கப்பட்டிருந்தார். இதற்காய் ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில், இந்தத் தலைப்பைக் குறித்து நான் எழுதியுள்ள கட்டுரைகள் மற்றும் குறிப்புகளைப் படித்திருக்கிறார். அவர் என்னிடம் சொன்னது: ''அண்ணன், பரிசுத்த ஆவியானவரைக் குறித்து எவ்வளவு எழுதியிருக்கிறீர்கள் என்று உங்களுக்கே தெரியாதிருக்கலாம்! ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு கோணத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது. இவ்விதம் உங்களை நடத்திச் சென்றுள்ள தேவனைத் துதிக்கிறேன். இத்தலைப்பின்மீதுள்ள உங்கள் கட்டுரைகள், சுருக்கக் குறிப்புகள் மற்றும் கேள்வி-பதில்கள் யாவற்றையும் தொகுத்து ஒரு புத்தகமாய் வெளியிட்டால் கிறிஸ்தவச் சமுதாயத்திற்கு அது ஒரு பெரும் சொத்தாக அமையும்.'' இது தேவ நடத்துதல் என உணர்ந்தேன். உங்கள் கையில் தவழுவது அப்புத்தகமே! இதிலுள்ள அத்தியாயங்கள் குறிப்பிட்டதொரு வகையில் வரிசைப்படுத்தப்படாததால், எதில் வேண்டுமானாலும் நீங்கள் தொடங்கலாம். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு ''ஐம்பது'' நாட்களுக்குப் பின்னர் இறங்கிவந்த பரிசுத்த ஆவியானவரைக் குறித்து உங்களுக்கு முழுமையான புரிதல் கொடுப்பதற்கு இந்நூலில் ''ஐம்பது'' அத்தியாயங்கள் உண்டு! பரிசுத்த ஆவியானவரைக் குறித்த விரிவான ஆராய்ச்சிக்குப் பக்கங்கள் 336-349இலுள்ள வசன அட்டவணை கைகொடுக்கும். பிறரை ஆவியானவரோடுள்ள அனுபவங்களுக்குள் நடத்த விரும்புவோருக்கு இந்நூல் ஒரு கையேடாய் அமையும்.

இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளவை கடந்த 40 முதல் 50 ஆண்டுகளின் காலக்கட்டத்தில் நான் எழுதியவை. சில மிகவும் பழமையானவை; மற்றவை சமீபத்தில் எழுதப்பட்டவை. இவற்றைத் தொகுக்கும்போது நான் கண்டதென்னவென்றால், இவ்வத்தியாயங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடும் இல்லை. இத்தனை ஆண்டுகளிலும் ''நேரான பெரும்பாதையிலும்,'' ''நேர்த்தெருக்களிலும்'' என்னை இவ்விதம் நடத்திவந்த தேவனைத் துதித்து அவர்முன் நெடுஞ்சாடையாய் விழுகிறேன் (ஏசா 40:3; அப் 9:11; சங் 5:8).

இந்த *''பைபிள் வல்லமை''* உங்களை நிரப்பி உங்கள் வாழ்க்கை, வேலை, திருப்பணி ஆகிய யாவற்றையும் வளமாக்கட்டும்!



# 2

# இறைவனது இணையான ஈவுகள்

## God's Parallel Gifts

கிறிஸ்துமஸ் என்று வருகிறதென ஓய்வுநாள் பள்ளிச் சிறுவனுக்கும் தெரியும். ஆனால் கிறிஸ்தவ நாட்காட்டியில் பெந்தெகொஸ்தே என்று வருகிறதென மூத்த கிறிஸ்தவர் பலருக்கும் தெரியாது. முதல் கிறிஸ்துமஸ் அன்று திரித்துவத்தின் இரண்டாம் நபர் உலகிற்குள் வந்தார்; பெந்தெகொஸ்தே அன்று திரித்துவத்தின் மூன்றாம் நபர் வந்தார். பரிசுத்த ஆவியானவரைக் குறித்த குறைவான, தவறான, அறிவே சபையின் அனைத்துப் பிணிகளுக்கும் முதற் காரணமாகும். ''பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவேயில்லை!'' (அப் 19:2). சராசரி சபை அங்கத்தினரின் நிலை இதுவே. சமீபத்தில் பரிசுத்த ஆவியானவரையும் அவரது ஊழியத்தையும் குறித்துத் தியானித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது கிறிஸ்துவானவருக்கும் ஆவியானவருக்கும் ஒப்புமைப் பட்டியல் ஒன்றைக் கீழ்க்கண்டவாறு தயாரித்தேன். இவர்கள் இறைவனது இணையான ஈவுகளாவர்.

| கிறிஸ்துவானவர் | ஆவியானவர் |
|---|---|
| 1. தேவனது முதல் தேற்றரவாளன் (யோ 14:16) | தேவனது இரண்டாம் தேற்றரவாளன் (யோ 14:16) |
| 2. மிருகங்களில் மென்மையான ஆட்டுக்குட்டிக்கு ஒப்புமை (யோ 1:29) | பறவைகளில் மென்மையான புறாவுக்கு ஒப்புமை (மத் 3:16) |
| 3. பரிசுத்தமுள்ளவர் (அப் 3:14) | பரிசுத்தமுள்ள ஆவியானவர் (ரோ 1:4) |
| 4. போதிக்கிறவர் (யோ 3:2; 13:13) | போதிக்கிறவர் (யோ 14:26) |

| | |
|---|---|
| 5. வேதவாக்கியங்களின் மையப் பொருள் (லூக் 24:27,44) | வேதவாக்கியங்களின் ஆக்கியோன் (2 பேது 1:20,21) |
| 6. இவர் தேவனானவர் (தீத் 2:13) | இவர் தேவனானவர் (அப் 5:3,4) |
| 7. இவர் நமக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறார் (யோ 1:33) | இவர் கிறிஸ்துவுக்குள் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார் (1 கொரி 12:13) |
| 8. இவரை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளவேண்டும் (யோ 1:12) | இவரை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளவேண்டும் (யோ 7:38,39; அப் 15:7-9) |
| 9. ‘‘பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்’’ என்றார் இவர் (யோ 20:22) | கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத உலகைக் கடிந்துகொள்கிறார் (யோ 16:8,9) |
| 10. யூதர் பலரால் புறக்கணிக்கப் பட்டார் (யோ 1:11; அப் 14:1,2) | கிறிஸ்தவர் பலரால் புறக்கணிக் கப்படுகிறார் (வெளிப்படை!) |
| 11. ஜீவத் தண்ணீருள்ள ஊற்று (யோ 4:14) | ஜீவத் தண்ணீருள்ள நதிகள் (யோ 7:38,39) |
| 12. இவரை ஏற்றுக்கொண்டபின் வாயின் அறிக்கை (ரோ 10:8,9) | இவரைப் பெற்றுக்கொண்டபின் நவநாவுகள் (அப் 2:4; 10:45,46; 19:6) |
| 13. கிருபையும் சத்தியமும் இவர் மூலம் வந்தன (யோ 1:17; 14:6) | இவர் கிருபையின், சத்தியத்தின் ஆவியானவர் (எபி 10:29; யோ 14:17; 1 யோ 5:6) |
| 14. இவர் இறந்தது தேவன்பை வெளிப்படுத்துகிறது (ரோ 5:8) | இவர் இறங்கியது தேவன்பை நமக்குள் ஊற்றுகிறது (ரோ 5:5) |
| 15. நமது மீட்பின் கிரயமானவர் (தீத் 2:13,14) | நமது மீட்பின் முத்திரையானவர் (எபே 4:30) |
| 16. இவரது தழும்புகளால் நமது உடல் சுகமடைகிறது (ஏசா 53:4,5) | இவரால் நமது உடல் உயிர்ப் பிக்கப்படுகிறது (ரோ 8:11) |



| | |
|---|---|
| 17. இவரது நாமத்தில் ஜெபம் (யோ 16:23) | இவரது வல்லமையினால் ஜெபம் (எபே 6:18; யூதா 20) |
| 18. விண்ணில் பிதாவிடம் நமக்காய் வேண்டுகிறார் (ரோ 8:34) | இகத்திலிருந்து பிதாவை நோக்கி நமக்காய் வேண்டுகிறார் (ரோ 8:26) |
| 19. தீர்க்கதரிசிகளிலெல்லாம் தீர்க்கதரிசியானவர் (அப் 3:19-23; லூக் 24:19) | விசுவாசிகள் அனைவரும் தீர்க்கதரிசனம் சொல்ல அருளு கிறார் (அப் 2:17; 1 கொரி 14:31) |
| 20. மனிதரை வரங்களாக சபைக்கு அருளுகிறார் (எபே 4:7-13) | சபையிலுள்ள மனிதருக்கு வரங்களை அருளுகிறார் (1 கொரி 12:7-11) |
| 21. அன்புக்கு மாதிரி காட்டினார் (யோ 15:12) | அன்பை விளைவிக்கிறார் (கலா 5:22) |
| 22. பிதாவை மகிமைப் படுத்தினார் (யோ 17:4) | கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார் (யோ 16:14) |
| 23. தேவாலயம் தவறாய்ப் பயன் படுத்தப்பட்டபோது கோபங் கொண்டார் (யோ 2:13-17) | ஆலயமாகிய நமது உடல் கெடுக் கப்படும்போது கோபங்கொள்கிறார் (1 கொரி 3:16,17; 6:19; யாக் 4:5) |
| 24. ஆதிநிலை ஏகும்படி சபை யோடு பேசுகிறார் (வெளி 2:1,8,12,18; 3:1,7,14) | ஆதிநிலை ஏகும்படி சபையோடு பேசுகிறார் (வெளி 2:7,11,17,29; 3:6,13,22) |
| 25. மிஷனரிகளை அனுப்பினார் (மத் 10:1,5) | மிஷனரிகளை அனுப்புகிறார் (அப் 13:2-4) |
| 26. நமக்கு அதிகாரம் தருகிறார் (மத் 28:18,19) | நமக்கு வல்லமை தருகிறார் (அப் 1:8) |
| 27. பாடுகளுக்கு நமது மாதிரி (லூக் 23:31) | பாடுகளில் நமது பங்காளி (1 பேது 4:12-14) |

| | |
|---|---|
| 28. மகிமையின் நம்பிக்கை யானவர் (கொலோ 1:27) | மகிமையின் ஆவியானவர் (1 பேது 4:14) |
| 29. பொல்லாத கடைசிக் காலத்தை முன்னறிவித்தார் (மத் 24:4-12) | பொல்லாத கடைசிக் காலத்தை முன்னறிவிக்கிறார் (2 தீமோ 3:1) |
| 30. கடைசி நாட்களில் அனுப் பப்பட்டார் (எபி 1:1,2) | கடைசி நாட்களில் ஊற்றப்படுகிறார் (அப் 2:17) |

இப்பட்டியல் முடிவில்லாது செல்லும். இவ்வித ஒப்புமையைக் கவனிக்குங்கால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவர் தனது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் தேவையை எப்படிக் கண்டுகொள்ளத் தவறலாம்? தேவனது தன்மையை இயேசு வெளிக்காட்டினார்; தேவனது வல்லமையை ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். இயேசுவானவர் உடல் ரீதியில் தமது சீடரோடு இருந்ததையும், ஆவியானவர் இன்று நம்மில் குடிகொண்டுள்ளதையும் ஒப்பிட்டால், ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல. உத்தமக் கிறிஸ்தவர் பலரும்கூட பரிசுத்த ஆவியானவரின் செயல்களுக்குத் தங்களைத் திறந்து கொடுக்காதது எத்தனை துக்ககரமானது! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசியதும் பொதுவாக அவர்கள் மூன்று பிரச்னைகளைக் கூறுவார்கள் —

### 1. பயம்

''நான் ஆவியின் அபிஷேகத்திற்காய் ஜெபிக்கையில் ஒரு வேளை மாம்சத்திற்குள்ளாகி, வேறெதையாவது பெற்றுவிட்டால் ...?'' இது அடிப்படையற்ற பயமாகும். இவ்விதப் பயத்தை இயேசு முன்னறிவித்து அழகான விளக்கமொன்றையும் கொடுத்துவிட்டார்: ''உங்களில் தந்தையாயிருக்கிற ஒருவரிடத்தில் மகன் அப்பம் கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பாரா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பாரா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ***நல்ல ஈவுகளைக்*** கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?'' (லூக் 11:11-13). அப்பத்தைக் கேட்டு அப்பத்தையே



பெற்றுக்கொள்ளுங்கள்! மீனைக் கேட்டு மீனையே பெற்றுக்கொள்ளுங்கள்! முட்டையைக் கேட்டு முட்டையையே பெற்றுக்கொள்ளுங்கள்! பரிசுத்த ஆவியைக் கேளுங்கள், வேறொன்றும் வந்துவிடாது! போலி அனுபவங்கள் உண்டென்பது உண்மைதான். இதனால் உண்மை அனுபவத்தையும் உதறித் தள்ளிவிடும் பெருந்தவற்றைச் செய்துவிடக்கூடாது.

ஆன்மீகக் காரியங்களில் உணர்ச்சிவசமே கூடாது என்பது சிலரது கருத்து. உணர்வற்றிருப்பதைவிட உணர்ச்சிவசப்படுவதே மேல்! நம்மெல்லாருக்கும் உணர்வுகள் உண்டு. அப்படித்தான் கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார். அன்பு ஓர் உணர்வு. கோபம் ஓர் உணர்வு. கவலை, கருணை இவையெல்லாம் உணர்வுகள்தான். தங்கள் கிரிக்கெட் வீரர் தொலைக்காட்சித் திரையில் சில ஓட்டங்கள் எடுத்துவிட்டால் தங்கள் இருக்கைகளிலிருந்து குதித்தெழுந்து மக்கள் கூச்சலிடுகிறார்கள். ஓட்டப்பந்தயத்தில் தங்கள் நபர் முதலாவதாக வரும்போது கைதட்டி விசில் அடிக்கிறார்கள். அப்படியானால், மன்னரும் ஆண்டவருமாகிய கர்த்தர் முன் பரிசுத்த ஆவியின் ஆனந்தத்தினால் தேவ மக்கள் ஆரவாரமிட்டு நடனமாடுவது தவறோ? அழியும் காரியங்கள் மக்களைப் பைத்தியமாக்கக்கூடுமானால், நித்திய காரியங்களில் நான் ஏன் மூழ்கித் திளைக்கக்கூடாது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ''துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள்'' என்கிறது திருமறை (எபே 5:18). மதுபானம் மக்களை அடிமட்டத்திற்குத் (guttermost) தள்ளும்; ஆவியானவரோ என்னை உயர் மட்டத்திற்கும் (uppermost) கடையெல்லைக்கும் (uttermost) எடுத்துச்செல்கிறார்!

### 2. கவர்ச்சியற்ற சாட்சிகள்

ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லும் பலரது வாழ்க்கையில் ஆவியின் கனி காணப்படாதது மறுக்க முடியா உண்மையாகும். தேடுவோருக்கும் நாடுவோருக்கும் இது ஒரு பெரிய தடையாகும். ஆனால் கனி இல்லையென்று வரம் அல்லது ஈவு என்பதை அவமதிக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, இரட்சிப்பு என்பது தேவனது ஓர் ஈவாகும். நாம் நற்செயல்களினால் இரட்சிக்கப்படாமல் நற்செயல்களுக்காய் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 2:8-10).

அதாவது தேவனிடமிருந்து ஈவு அல்லது வரத்தைப் பெற்றபின் கனிகளை வெளிப்படுத்துவது மனிதனின் பொறுப்பாகிறது. மனிதன் தனது பொறுப்பில் தவறுகிறான் என்பதால் தேவனது இரட்சிப்பெனும் ஈவை நாம் குறைத்துப்பேச முடியுமா? அப்படியே, ஆவியின் வரம் என்பது தேவன் அருளுவது; ஆவியின் கனி என்பது அவரது வல்லமையால் நாம் நமது வாழ்வில் வெளிப்படுத்துவது. கனியின்மையைச் சரியென்று சொல்ல அல்ல; சாட்சிகள் கவர்ச்சியற்றிருந்தாலும் வரத்தின் மகிமையைக் குறைத்துப் பேசக்கூடாது என்பதற்காகவே இவ்விவாதம். கனியின்மைக்கு தேவனது நியாயத்தீர்ப்பு நிச்சயம் உண்டு (மத் 3:10). இதை ஒரு சவாலாய்க்கொண்டு ''கனி ***அத்துடன்*** வரங்கள்'' நிறைந்த வாழ்வை மேற்கொள்வோம். இது அல்லது அது என்றல்ல, இரண்டும் தேவை. ''அன்பை நாடுங்கள்; (அத்துடன்) ஞான வரங்களையும் விரும்புங்கள்'' (1 கொரி 14:1). இதுவே திருமறை தரும் ஆலோசனை.

### 3. பிரபலமானவர்களின் அனுபவங்கள்

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்த விவாதம் அல்லது ஆலோசனை வேளைகளில் இறுதியாகக் கேட்கப்படும் கேள்வி இது. எல்லா விளக்கங்களையும் கேட்டுவிட்டு, ஏதாவதொரு ஊழியர் அல்லது தலைவரைக் குறிப்பிட்டு, ''அவருக்கு இந்த அனுபவம் இல்லையே, ஆனாலும் தேவன் அவரை வல்லமையாய்ப் பயன்படுத்தவில்லையா?'' என்று கேட்பார்கள். இது ஒரு நல்ல கேள்வி.

''எல்லாச்'' சத்தியங்களின் ''முழு'' விளக்கமும் வெளிச்சமும் பெற்ற பிரசங்கியோ, தலைவரோ, குழுவினரோ எவருமிலர். இப்பொழுது நமக்கிருப்பது ''ஆவியின் ஒருமை;'' அதைக் காத்துக்கொள்ள வேண்டும். ஆனால் ''விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமை'' என்பது இப்பொழுது கிடையாது; அதை அடைய முயற்சிக்கவேண்டும் (எபே 4:3,11). கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்குள் கடந்து செல்வது இவையிரண்டிற்கும் இடையிலுள்ளதாகும். இப்பொழுது நாம் எல்லோரும் குறைந்த அறிவும் குறைந்த அனுபவமும் உள்ளவர்கள் (1 கொரி 13:9). இப்படியிருக்க எந்த ஓர் ஊழியரையும் குழுவினரையும் எல்லாவற்றிலும் பின்பற்றுவது ஆபத்து. இவ்வித முக்கியச் சத்தியங்



களில் திருமறையின் போதனையும் திருமறையிலுள்ள சாட்சியுமே போதுமானதாயிருக்க வேண்டும். ''திருமறை அப்படிச் சொல்கிறது; நான் அதை விசுவாசிக்கிறேன்; அதுவே முடிவானது'' — இதுவே நமது கொள்கையாயிருக்கவேண்டும்.

விசுவாசிகளை இரு பிரிவாகப் பிரிக்கலாம். கிருபாவரங்களை வலியுறுத்தும் அல்லது பெந்தெகொஸ்தே விசுவாசிகள்; வரங்களை வலியுறுத்தாத அல்லது பெந்தெகொஸ்தேயினரல்லாத விசுவாசிகள். ஒரு சாரார் அனுபவத்தையும் அடுத்தவர் உபதேசத்தையும் வலியுறுத்துகின்றனர். நமக்கு இரண்டும் தேவை. ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு பாராட்டுவதின்மூலம் ஒரு சாரார் அடுத்தவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். நீதிமானாக்கப்படுதலை லூத்தர் பேசினார்; பரிசுத்தமாக்கப்படுதலை வெஸ்லி பேசினார்; ஆவியின் அபிஷேகத்தை ஃபின்னி பேசினார். இப்படியே இருண்ட காலத்திலிருந்து திருமறைச் சத்தியங்கள் கொஞ்சம் கொஞ்சமாகவே மீட்கப்பட்டு வந்திருக்கின்றன. தேவனது உசிதம் அனைத்தையும் அனுபவிக்கத் திறந்த மனது எப்பொழுதும் அவசியம்.

■

*பரிசுத்தர் கூட்டம் நடுவில்*
*ஜொலித்திடும் சுத்த ஜோதியே,*
*அரூபியே, இவ்வேளையில்*
*அடியார் நெஞ்சம் வாரீரோ?*

*மீன் கேட்டால் பாம்பை அருள்வார் உண்டோ?*
*கல் தின்னக் கொடுக்கும் பெற்றோர் உண்டோ?*
*பொல்லாதோர்கூடச் செய்திடார்;*
*நற்பிதா நலம் அருள்வார்!*

— N. எமில் ஜெபசிங், 1941-2013

**3**

# பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி?

**How to receive the Holy Spirit**

''பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்!'' (யோ 20:22).

உயிர்த்தெழுந்த கர்த்தர் தந்த திருக்கட்டளையும் திருவாக்கும் இது! சீடர்களது எதிர்கால வாழ்வும் ஊழியமும் இதையே சார்ந் திருந்தன. ஆவியானவரின்றி அவர்கள் அனாதைகள் போல்தான் (யோ 14:16-18). திக்கற்றவர்கள்!

''நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர் களா?'' (அப் 19:1,2). சீடர் குழு ஒன்றிடம் பவுலடியார் கேட்ட முதல் கேள்வி இதுதான். காரணமின்றியல்ல. இன்றும் கிறிஸ்தவர் ஒவ் வொருவருக்குமுரிய அதிமுக்கிய கேள்வி இதுதான்.

ஆவியானவர் வெறும் சக்தியோ விசையோ அல்ல. அவர் கடவுள். பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், ஆவியானவரா கிய தேவன் எனத் திருமறையில் காண்கிறோம். தேவத்துவ நபர் களில் பரிசுத்த ஆவியானவர் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவதால் அவர் முக்கியமற்ற ''மூன்றாம்'' நபர்தான் என ஒருபோதும் எண்ணி விடக்கூடாது.

பிதாவானவர் பரத்திலிருக்கிறார். அங்கு அவரது வலது பக்கத் தில் குமாரனானவர் அமர்ந்திருக்கிறார். முழு ஆள்தத்துவத்தில் இன்று இகத்திலிருப்பது ஆவியானவர் ஒருவரே. அவரோடுள்ள நமது ஐக்கி யமே நமது வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கும். நாமிருப்பது பரிசுத்த ஆவியானவரின் காலமாம்.

கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துமஸ், ஈஸ்டர் எல்லாம் தெரியும்; ஆனால் போதுமான அளவு பெந்தெகொஸ்தே பண்டிகையைத் தெரியாதது துக்கம்! பெந்தெகொஸ்தே அன்று ஆவியானவர் வந்தார்.



அது ஈஸ்டருக்குப் பிறகு ஏழு வாரங்களுக்கு அடுத்தது. பெந்தெ கொஸ்தே எனும் கிரேக்கச் சொல்லுக்கு ஐம்பதாவது நாளென்று பொருள். பழைய ஏற்பாட்டுப் பண்டிகை ஒன்று இதற்கு நிழல் (யாத் 34:22; லேவி 23:15,16; 1 கொரி 15:23).

## ஆசீர்வாதங்கள்

ஆவியானவருக்குத் திருமறை பல பெயர்களைத் தருகிறது. அவை ஒவ்வொன்றும் ஓர் ஆசீர்வாதத்தைக் குறிக்கும் —

- அவர் ***பரிசுத்தமுள்ள*** ஆவி என்றழைக்கப்படுகிறார் (ரோ 1:5). நமது பரிசுத்தமே அவரது குறி. ''பரிசுத்த'' ஆவியானவர் என்பதே அவரது முக்கியப் பெயர். அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார். அவரது ''அக்கினி'' நமது வாழ்விலுள்ள அசுத்தமான அத்தனை யையும் சுட்டெரிக்கிறது (மத் 3:11,12). அவருக்கு முழு விடு தலை தந்தால் முழுமையாய் அவர் நம்மில் ஈடுபடுவார்.

- அவர் ***சத்திய*** ஆவியானவர் (யோ 14:17). அவரே வேதத்தின் ஆக்கியோனும் வியாக்கியானியுமாம் (2 பேது 1:20,21; யோ 14:26). தேவனது ஆழ்ந்த காரியங்களை அவர் நமக்குப் போதிக் கிறார். தேவனிடமிருந்து நாம் சுதந்தரிப்பவைகளை அவர் நமக்கு விளக்குகிறார் (1 கொரி 2:9-14). அவரே ஞானம், உணர்வு, ஆலோசனை, அறிவு எல்லாம் நமக்கு அருளுபவர் (ஏசா 11:2; யோபு 32:8).

- அவர் ***மன்றாட்டின்*** ஆவியானவர் என்றழைக்கப்படுகிறார் (சக 12:10). ஜெபத்தில் யாருக்குத்தான் வல்லமைக் குறைவில்லை? என்ன, எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைப் பூரணமாய் அறி யோம். ஆவியானவர் இங்கு நமக்கு உதவுகிறார். அவரே நமக் காகவும் வேண்டுதல் செய்கிறார் (ரோ 8:26,27). ஆவிக்குள் ஜெபிக்கும்போது நமது விசுவாசம் உறுதியாய்க் கட்டப்படுகிறது (யூதா 20).

- அவர் ***பலமுள்ள*** ஆவியானவர். அவர்கள் மீது ஆவியின் வல்லமை வந்திறங்கும்வரை காத்திருக்கும்படிக் கிறிஸ்து தமது சீடர் களுக்குக் கட்டளையிட்டார் (லூக் 24:49). ஆவியானவர் அவர்கள்

மீது வந்தபின்புதான் எங்கும் தைரிய சாட்சிகளாய் அவர்களால் புறப்பட்டுச் செல்ல முடிந்தது (அப் 1:8; 4:31). அதுவரை கோழை களும் பயங்காளிகளுமாய்த்தானிருந்தனர். பெந்தெகொஸ்தேக்கு முன் சோதனை வேளையில் பேதுரு இயேசுவை மறுதலித்தார்; சீடரனைவரும் அவரை விட்டோடினர். பெந்தெகொஸ்தேக்குப் பின்னரோ கேலியும் எதிர்ப்பும் நிறைந்த திரள்களுக்கு முன்பும் சிங்கம்போல் நிமிர்ந்து நின்றனர், ''இரத்த'' சாட்சிகளாயினர். இயேசுதாமே ஆவியானவரின் வல்லமையினாலேயே ஊழியம் செய்து நமக்கோர் மாதிரியை வைத்துச் சென்றார் (அப் 10:38). ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியை அல்ல, பலமுள்ள ஆவி யையே தந்திருக்கிறார்'' என்று இளம் தீமோத்தேயுவுக்குப் பவுல் நினைப்பூட்டினார் (2 தீமோ 1:7).

- பரிசுத்த ஆவியானவரை இயேசு ***தேற்றரவாளர்*** அல்லது ***உதவி யாளர்*** என அறிமுகம் செய்தார் (யோ 14:16-18). பிரச்னைகளும் கண்ணீர்களும் இல்லாதோர் உண்டோ? மனிதர் நம்மை எவ்வளவு தான் தேற்ற முடியும்? அடித்து அடைக்கப்பட்டபோதும் சீடர் ஆனந்தமாய்ப் பாடினர் (அப் 16:24,25). அதுதான் ஆவியானவ ரின் மகிழ்ச்சியாம் (அப் 13:50,52). எவரும் பாடுகளுக்குத் தப்ப முடியாது. ஆனால் பாடுகளை நமது நன்மைக்காகவும் தேவனது மகிமைக்காகவும் மாற்ற உதவுபவர் பரிசுத்த ஆவியானவரே.

- பரிசுத்த ஆவியானவர் ***கிறிஸ்துவின்*** ஆவியானவர் என்றழைக் கப்படுகிறார் (ரோ 8:9). கிறிஸ்துவின் சாயலை அவர் நம்மில் உருவாக்குகிறார் (2 கொரி 3:18).தெய்வீகக் குணங்களை தமது கனியாக நம்மில் விளைவிக்கிறார். ''அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், தன்னடக்கம்'' என்பவையே அவரது கனி (கலா 5:22,23). ஆவியானவர் தேவ அன்பினால் நம்மை நிரப்பும்போதுதான் நமது எதிரிகளை யும் அயலாரையும் நம்மால் தன்னலமின்றி நேசிக்க முடியும் (ரோ 5:5).

- பரிசுத்த ஆவியானவர் ***தேவனுடைய*** ஆவியானவர். திருமறை யின் முதல் பக்கத்தில் இப்படித்தான் அவர் அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறார் (ஆதி 1:2). தேவ சித்தம் செய்வதே இகத்தில் நமது முக்கிய வேலையாகும் (மத் 7:21). ஆனால் ஆவியானவரின்றி தேவ சித்தத்தை அறியவும் முடியாது, செய்யவும் முடியாது (ரோ 8:14).



தேவனை ஆராதிப்பது நமது அதிவுன்னத அழைப்பும் சிலாக்கிய முமாகும். உண்மையாய் ஆராதிப்போரையே பிதாவானவர் தேடு கிறார். தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரை ஆவியோடும் உண்மை யோடும் தொழுதுகொள்ளவேண்டும் (யோ 4:22-24). ஆவியில் நிறையும்போது நமது இருதயத்தில் தேவனைக் கீர்த்தனம்பண்ணும் பாடல் ஆர்ப்பரித்தெழும்புகிறது (எபே 5:18-20). நமது ஆவியில் ஒரு விடுதலையை உணருகிறோம்.

ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தை வேதம் பல பெயர்களால் அழைக்கிறது. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் (மத் 3:11; அப் 1:4), உன்னதத்திலிருந்து வரும் பலத்தினால் தரிப் பிக்கப்படுதல் (லூக் 24:49), நிரப்பப்படுதல் (அப் 2:4), பெற்றுக் கொள்ளுதல் (அப் 2:38; 8:15), அபிஷேகம் (அப் 10: 38). ஆம், ''பரிசுத்த ஆவியின் வரத்தைப்'' பெற்றுக்கொள்ளும்போது, நாம் அபிஷேகிக்கப்படுகிறோம், நிரப்பப்படுகிறோம், தரிப்பிக்கப் படுகிறோம்! ''பிதாவின் வாக்குத்தத்தத்தின்'' மகிமைதான் என்னே! (அப் 1:5). தேவப் பிள்ளைகளின் பிறப்புரிமை!

## ஆயத்தம்

திருமறையில் மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட சம் பவம் ஒவ்வொன்றும் பயனுள்ள படிப்பினைகளைத் தருகிறது —

- மேலறையில் கூடியிருந்த சீடர் நடுவில் ஓர் ***எதிர்பார்ப்பின்*** சிந்தை இருந்தது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவேண்டு மென்ற ஒரே நோக்கத்திற்காய்த் தங்கள் இருதயங்களை இணைத் தனர் (அப் 1:13,14; 2:1). அவர்களுக்குள் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்தார் (அப் 1:14). ஒருவேளை இவ்வனுபவம் தேவையில்லாத ஒருவருண்டானால் அது மரியன்னைதான். அவர் கருத்தரித்ததே ஆவியானவரால்தான். அவரது கருவறையிலிருந் தவர்தான் அபிஷேக நாதர். அவரது வாழ்த்துதலைக் கேட்ட மாத்

திரத்தில் எலிசபெத்து ஆவியால் நிறைந்தார். இவையெல்லாம் இருப்பினும், ஆவியின் அபிஷேகம் பெறத் தாகத்தோடு மற்றவர்களோடு மரியாளும் தாழ்மையாய்க் காத்திருந்தார். ''பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்பி, செல்வந்தரை வெறுமையாய் அனுப்பிவிட்டார்'' என்று அவர் பாடினார் அல்லவா? (லூக் 1:53). தங்கள் ''வறட்சியை'' ஒத்துக்கொண்டு ''தாகத்துடன்'' தம்மிடம் வருவோர்மீது தமது ஆவியை ஊற்றுவதாகத் தேவன் வாக்களித்துள்ளார் (ஏசா 44:3).

- எருசலேமிலுள்ள கிறிஸ்தவரை உபத்திரவம் சிதறடித்தது. எங்கும் திரிந்து நற்செய்தியைப் பறைசாற்றினர். பிலிப்பு ஓர் உதவிக்காரர் தான்; ஆனால் அவரது நற்செய்தி ஊழிய வாஞ்சை அவரைச் சமாரியப் பட்டணம் ஒன்றிற்குத் துரத்திச் சென்றது. அங்கு அவர் பிரசங்கித்தார், நோயுற்றோரைச் சுகமாக்கினார், பிசாசுகளைத் துரத்தினார். கிறிஸ்துவை விசுவாசித்தோருக்கு திருமுழுக்கு கொடுத்தார். நகரில் பேரானந்தம் உண்டாயிற்று. இச்செய்தி எருசலேமை எட்டியது. உடனே பேதுருவும் யோவானும் இப்புது விசுவாசிகளைச் சந்திக்கச் சென்றனர். அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை எனக் கண்டனர். எனவே அப்போஸ்தலர் ஜெபித்து அவர்கள்மீது கைகளை வைத்தனர். அப்பொழுது அவர்கள் ஆவியைப் பெற்றனர். பணம் கொடுத்தாவது ஆவியருளும் வரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனப் பிரபல வித்தைக்காரன் சீமோன் விரும்புமளவு அருமையான அனுபவமாயிருந்தது அது (அப் 8:1-19). சமாரியா விசுவாசிகளின் ***திறந்த மனதைக்*** கவனியுங்கள். ஏராளம் அற்புதங்களைக் கண்டும் அனுபவித்துமிருந்தனர். ஆனால் மற்ற ஊழியர் மூலம் தேவனிடமிருந்து இன்னும் கூடுதலாகப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தனர். அவர்களைக் கிறிஸ்துவிடம் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்த ஊழியனோடு நின்றுவிடவில்லை. பிலிப்புவைக் கதாநாயகனாய் வணங்காது வெளியேயிருந்து வரும் இன்னும் விரிவான ஊழியத்தையும் பயன்படுத்திக்கொண்டனர்.

- பவுலின் அனுபவமும் அருமையானது. தமஸ்கு செல்லும் சாலையில் கிறிஸ்துவைச் சந்தித்தார். உடனே அவரது ஆளுகைக்கு அடிபணிந்தார். உலகுக்கு மூன்று நாள் குருடனானார். அந்நாட்களை முழு உபவாசத்திலும் ஜெபத்திலும் செலவிட்டார். கடந்த காலத்திற்காய் மனந்திரும்பி எதிர்காலத்திற்காய்த் தேவனைத் தேடிக்கொண்டிருந்தார். எழுந்து வரப்போகிற இப்பெரிய அப்போஸ்தலனுக்குத் திருமுழுக்கு கொடுக்கவும் அவரை அபிஷேகத்திற்குள் வழிநடத்தவும் தேவன் எருசலேமிலிருந்த ஓர் அப்போஸ்தலனையல்ல, தமஸ்குவிலிருந்த ஒரு சாதா சீடனையே வேடிக்கையாகத் தெரிந்துகொண்டார் (அப் 9:1-18). எப்படி, யார் மூலம் தேவன் நம்மை அபிஷேகிக்கவேண்டுமென்று சொல்ல நமக்குரிமையில்லை. அவரது வழிகளுக்கு ***அர்ப்பணித்து, அடி பணிய*** வேண்டும்.

- இத்தாலிய இராணுவ அதிகாரியாகிய கொர்நேலியுவுக்குப் பிரசங்கிக்கத் தூயாவியானவர் பேதுருவைப் பணித்தார். கொர்நேலியு யூதனல்லாத புறவினத்தானாயிருந்ததால் பேதுரு பெரிதும் தயங்கினார். முடிவில் சென்றார். அங்கு தனது இல்லத்தில் இனத்தாரனைவரோடு கொர்நேலியு மிகுந்த ***ஆவலோடு*** காத்துக்கொண்டிருந்தார். பேதுரு தனது பிரசங்கத்தை முடிக்குமுன்னரே ஆவியானவர் குழுமியிருந்தோர் மீது இறங்கினார். இதனால் பேதுருவுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் உண்டான வியப்பு கொஞ்சமல்ல. ஆம், ''தேவன் ***பாரபட்சமுள்ளவரல்ல!''*** கொர்நேலியு மிகுந்த தேவ பக்தியுள்ளவர். குடும்பம் முழுவதும் கர்த்தருக்குப் பயப்பட்டது. தருமங்களை மிகுதியாகச் செய்தார். அவரது வாழ்வே ஜெபமாகத்தானிருந்தது. சமுதாயத்திலும் அவருக்கு நல்ல செல்வாக்கு. ஆனால் தேவனோடு ஆழ்ந்த, உன்னத அனுபவங்களுக்குக் கடந்து செல்ல அவருக்கிருந்த ***தாகத்தை*** இவையொன்றும் தடுக்க முடியவில்லை (அப் 10).

- எபேசுவிலிருந்த சீடர் ஆவியானவரைப்பற்றிய தங்கள் ***அறியாமையை*** உண்மையாய் ஒப்புக்கொண்டனர். யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை ஏற்கனவே பெற்றிருந்தனர். இப்பொழுது கிறிஸ்தவ விசுவாசிகளுக்குரிய ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டனர். அதற்குப்பின் பவுல் கரங்களை வைத்ததும் ஆவி

யானவர் அவர்கள்மீது வந்தார். எல்லாம் தெரியுமென்றிருப்போரைக் கடவுள் கடந்துசெல்வார். சிறு குழந்தைகள்போல் தம்மிடம் வருவோரோ அவருக்குப் பிரியம் (ஏசா 28:9).

## எதிர்ப்புகள்

ஆவியின் அபிஷேகத்தைக் குறித்த இப்போதனைக்கு மக்கள் பல எதிர்ப்புகள் தெரிவிப்பர். அவற்றில் முக்கியமானவை மூன்று —

- இது ஒரு குறிப்பிட்ட ***சபைப்பிரிவின்*** (denominational) அனுபவம் என்பர். நீதிமானாக்கப்படுதலைக் குறித்து லுத்தரன் சபையார் அதிகம் பேசுவதால் அது அச்சபைப்பிரிவுக்குத்தானோ? பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்து மெதடிஸ்டு சபையார் அதிகம் பேசுவதால் அது அவர்களுக்கு மட்டும்தான் உரியதோ? இல்லவே இல்லை! நீதிமானாக்கப்படுதலும் பரிசுத்தமாக்கப்படுதலும் திருமறை போதிக்கும் சத்தியங்களானதால் அவை எச்சபைப் பிரிவினருக்கும் உரியவை. ஆவியின் அபிஷேகமும் அப்படியே. பெந்தெகொஸ்தே சபையினர் அதனை அதிகம் வலியுறுத்துவதால் அது அச்சபைப்பிரிவினருக்கே உரிய அனுபவமாகிவிடாது. ''முழுச்'' சத்தியத்தின் ஏதாவது ஒரு ''பகுதி'' ஒவ்வொரு சபையாலும் வலியுறுத்தப்படுகிறது; நாம் அனைத்தையும் எடுத்துக்கொள்வோம்.

- இன்னும் சிலர் இதை வெறும் ***உணர்ச்சிவச*** (emotional) அனுபவமென்பர். உணர்ச்சிகள் தவறோ? அன்பு, மகிழ்ச்சி, கோபம், கவலை, இவை யாவுமே உணர்ச்சிகள்தானே? செத்தவனைத் தவிர யாருக்குத்தான் உணர்ச்சி கிடையாது? அன்பால் நிறைந்தால் அணைக்கிறேன். ஆனந்தம் பொங்கினால் ஆடுகிறேன். கோபப்பட்டால் அலறுகிறேன். கவலை நிறைந்தால் அழுகிறேன். இப்படித்தான் நாம் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நிறைவை வெளிப்படுத்துகிறோம். உள்ளனுபவம் ஒவ்வொன்றுக்கும் வெளிக்காட்டுதல் உண்டு (அப் 3:8). நிரம்புதலுக்கு அடையாளம் வழிந்தோடுதலே. அதே வேளையில் ஆவியின் வெளிப்பாடு எனக்கூறி அலங்கோலமான செயல்களைச் செய்வதையும் நாம் ஒத்துக்கொள்ள முடியாது. ஆனால், துர்ப்பிரயோகத்திற்கு மாற்று மருந்து நற்பிரயோகமா, பிரயோகிக்காதிருப்பதா? கிரிக்கெட்டும் டென்னிஸும் மக்களை



அப்படியே உலுக்கிவிடுகிறதே! யாரோ ஒருவர் விளையாடுவதைப் பார்த்ததும் இவர்கள் தங்களையே மறந்து துள்ளிவிடுகிறார்களே! பரலோகத் திராட்சரசத்தால் நாம் நிறையும்போது ஆடிப்பாடிக் கைதட்டி மகிழக்கூடாதா என்ன? தவறோ? நாம் என்ன ஜடமா?

- மூன்றாவது எதிர்ப்பு, இது ***பாரம்பரியத்திற்கு*** முரணானது (anti-traditional) என்பர். ஆவியின் அபிஷேகத்தைப்பற்றிய போதனை சபையைப் பிரிக்கிறது என்று குற்றஞ்சாட்டுவர். ஏதோ பெரிய ஒற்றுமை இருப்பதுபோல்! சத்தியம் பிரிக்கும் என்பது உண்மைதான். அது பட்டயம் அல்லவா? எல்லாப் பிரிவினைகளையும் தவறு என்று சொல்லிவிட முடியாது. ஆவியானவர் போலி ஒற்றுமையைத் தகர்த்து ஆன்மீக ஒருமைப்பாட்டை உருவாக்குவார். அவர் கோதுமையைச் சேர்ப்பார், பதரையோ எரிப்பார். இதோ ஓர் எடுத்துக்காட்டு: இயேசு யூதருடைய கூடாரப் பண்டிகையில் கலந்துகொண்டார். பாதிப் பண்டிகையின்போது தேவாலயத்திற்குப் போய் உபதேசம்பண்ணினார். பண்டிகையின் கடைசி நாளில் அவர் சத்தமிட்டு, ''ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணட்டும்'' என்று கூறினார். பரிசுத்த ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். மக்கள் இதைக் கேட்டபோது அவர்களுக்குள்ளே வாக்குவாதமும் பிரிவினையும் உண்டாயிற்று! (யோ 7:2,14,37-43). பாரம்பரிய யூதரே ஆண்டவரைச் சிலுவையிலறைந்தனர். பொதுவாக, பாரம்பரியக் கிறிஸ்தவரே ஆவியானவருக்கு எதிர்த்து நிற்பர். சரித்திரம் திரும்புகிறது.

## பிரச்னைகள்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாடுகையில் மக்கள் சில பிரச்னைகளைச் சந்திப்பதுண்டு —

- முதலாவது, ***பயம்*** எனும் பிரச்னை. வேறே ஆவி எதையும் பெற்றுவிடக்கூடாதே என அஞ்சுவர். இது அடித்தளமற்றது. பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கையில் இவ்விதப் பயம் மக்களுக்கு வரக்கூடுமென இயேசு முன்னறிந்ததால்தான் இப்படிச் சொன்னார்: ''உங்களில் தந்தை ஒருவரிடத்தில் மகன் அப்பம் கேட்டால் கல்லைக் கொடுப்பாரா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்

பாரா? முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பாரா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?'' (லூக் 11:11-13). இதற்கு விளக்கம் தேவையோ? சில விசுவாசிகள் தங்கள் தகுதியின்மையையே நினைத்துத் தயங்கி நிற்கின்றனர். ''பரிசுத்த'' ஆவியைப் பெற்றுக்கொள்ளுமளவு நீங்கள் ஒருபோதும் ''பரிசுத்தமாக'' முடியாது. அவர் பரிசுத்தமற்றவர்களை நிரப்பி அவர்களைப் பரிசுத்தமாக்குகிறார் (ரோ 15:15).

- அடுத்து, ***விசுவாசம்*** குறித்தப் பிரச்னை. இயேசுவை ஏற்றுக்கொள்வதற்குத் தேவையாயிருந்ததைவிடக் கூடுதலான, அசாதாரண விசுவாசம் இருந்தால்தான் ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பலர் கருதுகின்றனர். அப்படியல்ல. கிறிஸ்துவானவரும், ஆவியானவரும் பிதாவானவரின் இணையான ஈவுகளாவர் (அத்தியாயம் 2ஐப் பார்க்க). மேலறையில் காத்துக்கொண்டிருந்தபோது சீடருக்கு அபூர்வ விசுவாசம் ஒன்றுமில்லை (மத் 28:16, 17; மாற் 16:14; லூக் 24:41). அடிப்படை விசுவாசமே தேவையானது (யோ 7:39). ஆவியானவர் நம்மீது வந்த பின்னரே நாம் விசுவாசத்தில் வளருகிறோம். அவரது பெயரே ''விசுவாசத்தின் ஆவி'' என்றிருக்கிறது (2 கொரி 4:13).

- அடுத்து, ***உணர்ச்சி*** பற்றிய பிரச்னை. உணர்ச்சிகள் எல்லோருக்கும் ஒன்றுபோலிராது. ஆவியானவர் அவர்கள்மீது வரும்போது சிலர் துள்ளுவர், அசைவர், விழுவர். எல்லாரையும் அப்படிச் செய்ய எதிர்பார்ப்பது தவறு. அபிஷேகத்தின்போது மின்விசை உடலில் சென்றதுபோல் உணர்ந்ததாகச் சிலர் சாட்சியிடுகின்றனர். வேறு சிலருக்கோ அது திட்டமான ஆனால் மிதமான அனுபவமாயிருக்கும். முதலாவது சத்தியம் (fact) , அடுத்து விசுவாசம் (faith), இறுதிதான் உணர்வுகள் (feelings). இந்த வரிசை முக்கியம்.

- சில கிறிஸ்தவருக்குத் தங்கள் ***அவயவங்களை*** ஆவியானவரின் உந்துதலுக்கு இசைவாய்த் தளர்த்திக் கொடுப்பதில் பிரச்னையுண்டு. ஆவியானவர் கண்ணியமானவர். எவர்மீதும் எதையும் திணிக்கமாட்டார். புறாவைப்போல ஆட்டுக்குட்டியின்மீது வந்தவரல்லவா அவர்? தண்ணீரில் திருமுழுக்கு கொடுக்கும்போது



தளர்த்திக்கொடுக்கும்படி போதகர் அந்நபரிடம் சொல்லுகிறார். அந்நபர் ஒத்துழைக்காவிடில் எப்படியிருக்கும் பாருங்கள்! அப்படித்தான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும். பெந்தெகொஸ்தேயன்று ''ஆவியானவர்'' சீடர்களுக்கு வரமருளினார்; ஆனால் ''அவர்கள்தான்'' பேசத் துவங்கினர் (அப் 2:4). விசுவாசிக்கிறவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்களென்றார் இயேசு. இருக்குமிடத்திலேயே உட்கார்ந்து விசுவாசித்துக்கொண்டேயிருந்தால் பிசாசு போய்விடுமா? நாம் செயல்பட வேண்டும். அதே மூச்சில்தான் ''விசுவாசிக்கிறவர்கள் நவமான மொழிகளைப் பேசுவார்கள்'' என்றும் இயேசு சொன்னார். ஆவியானவர் உந்துகிறார்; நாம்தான் பேசவேண்டும் (மாற் 16:17,18).

## நவநாவுகள்

தனக்குத் தெரியாத மொழியில் விசுவாசியொருவன் ஆவியின் வரத்தினால் தேவனோடு பேசுவதே அன்னிய பாஷையாகும். நமக்குத் தெரிந்த மொழியில் பேசுகையில் நமது ''மனது'' வார்த்தைகளைத் தருகிறது; ஆனால் நவநாவுகளில் பேசுகையில் ஆவியானவரின் உந்துதலால் நமது ''ஆவி'' வார்த்தைகளைத் தருகிறது (1 கொரி 14:14). இது தேவனுக்குப் புரியும்; பேசுபவருக்கும் கேட்போருக்கும் புரியாது (வச 2). ஏசாயா இதைத் தீர்க்கதரிசனமாய் உரைத்தார் (ஏசா 28:11,12). இது நற்செய்தியின் காலத்துக்குரியதென இயேசு முன்னறிவித்தார் (மாற் 16:15-17). ஆதிச்சபையினர் இதை அனுபவித்தனர். மற்ற எத்தனையோ சத்தியங்கள், அனுபவங்கள், வரங்களைப் போல் இதையும் இருண்ட காலத்திற்குள் நுழைந்த பின்வாங்கிய திருச்சபை இழந்தது. இன்று தேவன் இவற்றைத் திரும்பத் தருகிறார்.

ஆவியின் அபிஷேகத்தோடு நவநாவுகள் பேசப்பட்ட சம்பவங்கள் பலவுண்டு. பெந்தெகொஸ்தேயன்று 120 சீடரும் நவநாவுகளில் பேசினர் (அப் 2:4). பவுல் நவநாவுகளில் பேசினார் (அப் 9:17; 1 கொரி 14:18). கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் நவநாவுகளில் பேசினர் (அப் 10:46). எபேசுவிலிருந்த சீடர் நவநாவுகளில் பேசினர் (அப் 19:6). தேவன் இந்த வரத்தை இவ்வளவு குறிப்பாகத் தெரிந்தெடுத்து ஓர் அடையாளமாகப் பயன்படுத்தியதற்குக் காரணங்கள் உண்டு. (அன்னிய பாஷை குறித்துக் கூடுதல் விளக்கம் பெற 9ஆம் அத்தியாயத்தைப் படியுங்கள்.)

1 கொரி 12:7-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆவியின் ஒன்பது வரங்களில், நவநாவுகளே பிரதானமாக ஜெபத்தில் தேவனை நோக்கிப் பயன்படுத்தப்படுவதாகும் (1 கொரி 14:2,14). பிற வரங்களெல்லாம் பெரும்பாலும் மனிதரை நோக்கிச் செயல்படுபவை. இரண்டாவது, அன்னிய பாஷையில் பேசுவது சுயபக்திவிருத்திக்கான ஓர் ஏதுவாகும் (1 கொரி 14:4). பிறரைப் பக்திவிருத்தியடையச் செய்யுமுன் நாம் பக்திவிருத்தியடைய வேண்டும் (1 கொரி 14:18,19). மூன்றாவது, வெளிக்காட்டுவதில் நமது அவயவங்களில் நாவுதான் பிரதானமானது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாவு அடக்கப்படும்வரை பூரணம் சாத்தியமில்லை (யாக் 1:26; 3:2). ஒருவேளை தேவன் தமது ஞானத்தின்படி முதலாவதாகவே நமது நாவைப் பிடித்துக்கொள்ளுகிறார் போலும்! விண்ணக அக்கினி ஏசாயாவின் நாவில் வந்ததல்லவா? நவநாவுகளில் பேசுகிறார்களா இல்லையா என வைத்து அவர்கள் அபிஷேகம் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நியாயந்தீர்க்காமல், பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கும்போது ஆசீர்வாதமான இந்த வரத்தை நாடும்படி விசுவாசிகளை ஊக்குவிக்கிறோம். நாம் பூரண நிலைக்கு வரும்வரை அன்னிய பாஷைகள் ஓய்ந்துபோகாது (1 கொரி 13:8-12).

உலகெங்கும் ஓர் அருள்மாரியைக் காண்கிறோம். ஆவியின் வெள்ளம் சபைப்பிரிவுச் சுவர்களைத் தாண்டிச் செல்கிறது. கிறிஸ்தவர்களுக்குள் அபிஷேகம் பெற்றோரின் எண்ணிக்கை விரைவாய் வளர்ந்துவருகிறது. ஒரு காலத்தில் இவ்வனுபவத்தைக் கண்டும் காணாமலுமிருந்த தலைவர் சிலர் சமீப நாட்களில் இவ்வனுபவத்திற்குள் வந்துவிட்டனர். ஆவியின் அசைவாட்டத்தை இன்னும் எதிர்த்து நிற்போருக்குத் தோல்விதான். நீட்டப்பட்ட தேவக்கரத்தை மடக்க யாரால் முடியும்?

## நீங்கள் ஆவியின் அபிஷேகம் பெறுவதெப்படி?

- ☐ பாவங்களைவிட்டு ***மனந்திரும்புங்கள்***. ஊனியல்பின் இச்சைகளை விட்டு எழுந்துவாருங்கள். பிதாவின் மடிக்கு வந்து சேருங்கள்.



- ☐ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ***விசுவாசியுங்கள்***. அவரே உங்களுக்குப் பதிலாகப் பலியான இரட்சகர். உங்களுக்காகவே மரித்துயிர்த்தெழுந்தார். அவருக்குக் கீழ்ப்படிந்து தண்ணீரில் திருமுழுக்கு பெற்றுக்கொள்ளுங்கள் (அப் 2:38,39; மத் 3:16). தண்ணீரில் மூழ்கி எழுவது கிறிஸ்துவின் இறப்பு, அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு நம்மை அடையாளப்படுத்துகிறது (ரோ 6:3,4).

- ☐ ஆவியின் வரத்தைத் தரும்படி தேவனிடம் ***கேளுங்கள்***. ஏற்கனவே அபிஷேகம் பெற்ற ஒருவரோடு ஜெபியுங்கள். தேவமனிதன் ஒருவர் உங்கள்மீது கைகளை வைத்து ஜெபிக்கட்டும். உங்கள் விருப்பு வெறுப்புகளை விட்டு வெளிவாருங்கள். பாரம்பரியக் கட்டுப்பாட்டை உடைத்தெறியுங்கள். தயக்கங்கள் வேண்டாம்.

- ☐ விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியைப் ***பெற்றுக்கொள்ளுங்கள்***. வழிந்தோடுமளவு நிரப்பப்படும்படி உங்களை முழுவதுமாய் விட்டுக்கொடுங்கள். நீங்கள் நிரப்பப்பட்டுவிட்டால், அது ''உங்களுக்கே'' தெரியும். வாயைத் திறந்து ஆவியானவரின் உந்துதலின்படி பேசுங்கள்.

ஆவியின் வரத்திற்காய்த் தேவனைத் துதியுங்கள். அவரில் அகமகிழுங்கள். உங்கள் பாத்திரம் நிரம்பி வழியட்டும்!

■

*ஊதும் தெய்வாவியை, புத்துயிர் நிரம்ப;*
*நாதா, என் வாஞ்சை செய்கையில்*
*உம்மைப்போல் ஆகிட.*

*ஊதும் தெய்வாவியை, முற்றும் ஆட்கொள்ளுவீர்;*
*தீதான தேகம் மனத்தில்*
*வானாக்னி மூட்டுவீர்.*

— Edwin Hatch, 1835-1889

**4**

# ஆவியானவருக்குள் நடக்கை

## Walking in the Spirit

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களுக்கு இச்செய்தி தரப்படுகிறது. ஆன்மீக வட்டாரங்கள் பலவற்றில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் படும் முதல் அனுபவமே வலியுறுத்திக் கூறப்படுகிறதே தவிர, தொடர்ந்து ஆவிக்குள்ளாக நடப்பது அதிகமாக வலியுறுத்தப்படுவ தில்லை (ரோ 8:1). மூன்று ஆண்டுகட்குமுன் மணவாழ்வில் புகுந்த தம்பதியரை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குத் திருமண வைபவம் ஒரு முக்கிய அனுபவமாயிருந்திருப்பினும், திருமணத் திற்குப் பின்னுள்ள இல்லற வாழ்க்கையே அதிலும் முக்கியம் என் பதை அவர்கள் இப்போது அறிந்திருப்பர். பரிசுத்த ஆவியானவரின் இடைபாட்டிலும் அப்படியே. ஆவியின் நிறைவை வல்லமையோடு பெறுவது ஓர் அற்புத அனுபவமெனினும், தொடர்ந்து ஆவிக்குள் ளான வாழ்க்கையே முக்கிய காரியம். கிறிஸ்து தரும் தூயாவியின் ஞானஸ்நானம் ஒரு துவக்கந்தானேயன்றி அது முடிவல்ல. கிறிஸ்து வோடுள்ள மகிமையான வாழ்வுக்கு அது நுழைவாயில். கணுக்கால் அளவிலிருந்து நீச்சல் ஆழத்திற்குள் கடந்துசெல்லவேண்டும் (எசேக் 47:1-5).

தூயாவிக்குள்ளான வாழ்க்கையிலுள்ள மூன்று முக்கிய பகுதி களை இங்கு ஆராய்வோம் —

*(1)* ***திருச்சித்தம்*** நிறைவேற்றுதல்
*(2)* ***திருவசனம்*** தியானித்தல்
*(3)* ***திருப்பணி*** செய்தல்

இவை மூன்றும் நித்திய நிலையுடையவை எனக் காண்கிறோம் —

''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும்; ***தேவனுடைய சித்தத்தின்படி*** செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப் பான்'' (1 யோ 2:17).



''புல் உலர்ந்து பூ உதிரும்; நமது ***தேவனுடைய வசனமோ*** என்றென்றைக்கும் நிற்கும்'' (ஏசா 40:8; மாற் 13:31).

''அதின்மேல் ஒருவன் ***கட்டினது நிலைத்தால்,*** அவன் கூலி யைப் பெறுவான்'' (1 கொரி 3:14).

### 1. தூயாவியானவரும் திருச்சித்தமும் (Will of God)

நமது முதல், முக்கியப்பணி தேவசித்தம் நிறைவேற்றுதலே. ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை'' என்று இயேசு தெளிவாகக் கூறினார் (மத் 7:21). நம்மைக் குறித்த திருச்சித்தத்தைத் திருமறையே நமக்கு வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, இரு காரியங்களைக் கவனிப்போம்—

- முதலாவது, 1 தெசலோனிக்கேயர் 4:3, ''நீங்கள் ***பரிசுத்தமுள்ள வர்களாகவேண்டும்*** என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.'' பரிசுத்த ஆவியானவர் ***'பரிசுத்த'*** ஆவியாயிருப்பதால் குமாரனில் வெளிப்பட்ட தேவனுடைய பரிசுத்தத்திற்கேற்றவாறு ஒவ்வொரு விசுவாசியையும் பரிசுத்தப்படுத்துவதே அவரது முதல் வேலை. 1 கொரிந்தியர் 6:11இல் ஆவியினால் கழுவப்படுவதை வாசிக் கிறோம். பரிசுத்தத்திற்கு இரு பக்கங்கள் உள்ளன — முதலாவது *அழித்தல்,* அடுத்தது *அமைத்தல்.* தீர்க்கதரிசிகள் செய்த ஊழிய மும் இதுவே. (எ.கா.) எரே 1:10: ''பார், (i) பிடுங்கவும், இடிக்க வும், அழிக்கவும், கவிழ்க்கவும், (ii) கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்று நியமித்தேன்.'' ஆவியானவரும் (i) பாவங்களைக் கண்டித்துணர்த்தி, (ii) அவருடைய கனிகளை நம்மில் உருவாக்கி இவ்விதம் இந்த இரட்டை வேலையை நம்மில் செய்கிறார் (யோ 16:8; கலா 5:22,23). தூயாவியால் நிரம்பிய ஒவ்வொருவரும் உள்ளத்தில் அனுமதித்த பாவங்களையும், தேவனுக்குப் பிரியமில் லாத யாவற்றையும் வெளிப்படுத்த ஆவியானவரை அனுமதிக்க வேண்டும் (ரோ 8:12,13). அத்துடன் ஆவியின் கனிகளை உரு வாக்க முற்றிலும் தன்னை ஆவியானவரின் ஆளுகைக்குள் கொண்டுவரவேண்டும். நான் ஆவியின் வரங்களை விசுவாசிக்

கிறேன், அப்பியாசிக்கிறேன், ஆதரித்துப் பேசுகிறேன். ஆனால் திருவசனத்தோடு சேர்ந்து, ''மரம் அதனதன் *கனியினால்* அறியப்படும்'' என்று அழுத்திச் சொல்லுகிறேன் (லூக் 6:44).

■ அடுத்து, 1 தெச 5:18ஐக் கவனிப்போம்: ''எல்லாவற்றிலேயும் ***ஸ்தோத்திரம்*** செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.'' துதி நிரம்பிய வாழ்க்கை வாழவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவரைப் போற்றவே நாம் படைக்கப்பட்டோம் (ஏசா 43:21). எப்பொழுதும் நிரம்பி வழிந்து தேவனைத் துதிக்கும் ஓர் அனுபவத்திற்குள் விசுவாசியை ஆவியானவர் நடத்துகிறார். நவநாவுகளில் பேசுவதின் பல்வேறு பயன்களைப் பகுக்கும்போது, ''நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் ... ஆவியோடும் ***பாடுவேன்''*** என்று பவுல் கூறுகிறார் (1 கொரி 14:15). 16 ஆம் வசனத்தில், ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணுவதைப்பற்றிப் பேசும்போது, பரிசுத்த ஆவியானவர் அவ்விதம் நம்மை இயலச் செய்வதால் ''நீ 'நன்றாய்' ***ஸ்தோத்திரம்*** பண்ணுகிறாய்'' என்று சொல்கிறார் (வச 17). இந்த ஆன்மீகப் பயிற்சி நமது தியான வாழ்க்கையை அழகுபடுத்தி வல்லமை, விசுவாசம் ஆகியவைகளை வர்த்திக்கச் செய்யும். ''ஆவியோடும் உண்மையோடும்'' ஆராதிப்பதே தேவனுக்கு ஏற்புடையது (யோ 4:24).

இவை தேவனுடைய பிள்ளைகளுக்குத் தேவ சித்தம் குறித்த ***'பொதுவான'*** சில எடுத்துக்காட்டுகள். இவ்விதம் ஆவியானவரை நம்மில் இடைபட நாம் நன்கு விட்டுக்கொடுக்கும்போது நம்மைக் குறித்த ***'குறிப்பான'*** தேவ சித்தத்தையும் அறிய தெளிவாக நம்மை நடத்துவார். ஏனென்றால், ''மனிதனிலுள்ள ஆவியேயன்றி மனிதரில் எவன் மனிதனுக்குரியவைகளை அறிவான்?'' (1 கொரி 2:11). ''ஆவியானவர் ***தேவனுடைய சித்தத்தின்படியே*** பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார்'' (ரோ 8:27). இவ்விதம் *'குழந்தைகள்' 'புத்திரர்களாக'* வளருகிறோம். ''நாம் இனிக் குழந்தைகளாயிராமலும், அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமலும்'' இருப்போம் (எபே 4:14). ''எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோ 8:14).



## 2. தூயாவியானவரும் திருவசனமும் (Word of God)

ஆவிக்குள்ளான விசுவாசியின் வாழ்க்கையில் வேத வசனம் அசாதாரண இடம் வகிக்கிறது. வல்லமை நிரம்பிய கிறிஸ்தவர்கள் வசனம் நிரம்பிய கிறிஸ்தவர்களாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்தவனுக்கு ஓர் இறக்கை ஜெபம் என்றால், மறு இறக்கை வேதத் தியானமே. கிரமமான வேத வாசிப்பையும், தியானத்தையும் புறக்கணிப்பவர் கீழ்க்கண்ட கேடான நிலைகளையடைவர் —

***(i) தோல்வி*** — பிசாசினால் சோதிக்கப்படும்போது இயேசு சுயமாய் விவாதம் செய்யாமல் ***''எழுதியிருக்கிறதே''*** என்று திரும்பத் திரும்பச் சொன்னார் (லூக் 4:1-12). வெளிப்படுத்தின விசேஷத்திலும் ''ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் ***வசனத்தினாலும்*** அவனை ஜெயித்தார்கள்'' என்று வாசிக்கிறோம். (12:11). தேவ வசனமே வாலிபரின் வழியைச் சுத்தம்பண்ணுகிறது (சங் 119:9). திருவசனமாகிய ஆவியின் பட்டயத்தைக் கொண்டு வெற்றிகள் பெறுவோம் (எபே 6:17).

***(ii) வளர்ச்சியின்மை*** — நாம் வளருவதற்குத் திருமறையைத் தவிர வேறு ஏதுவில்லை. ''நீங்கள் ***வளரும்படி*** புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்'' (1 பேது 2:2). ''மனிதன் அப்பத்தினாலே மட்டுமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' என்று பாலை நிலத்தில் சோதிக்கப்படும்போது இயேசு மேற்கோள் காட்டினார் (லூக் 4:4). ''பிழைப்பான்'' என்ற சொல் வெறும் பிழைப்பையல்ல, வளர்ச்சியையும் குறிக்கும். ஆன்மீக வளர்ச்சி என்பது கர்த்தரைப்பற்றிய அறிவில் வளருவதே. கர்த்தரை அவரது வசனத்தின் மூலமாக மட்டுமே அறிய முடியும்.

***(iii) சந்தேகம்*** — விசுவாசம் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே அளிக்கப்படுவது என்று பலர் எண்ணுகிறார்கள். இவ்வித எண்ணம் வேத உபதேசத்திற்கு எதிரிடையானது. விசுவாசம் வளரும் விதத்தை வேதம் விளக்குகிறது: ***''விசுவாசம்*** தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் வரும்'' (ரோ 10:17). நீங்கள் திருமறையைத் தியானிக்கும் அளவுக்குத்தக்கதாகவே வளருவீர்கள். ஏனெனில் வசனத்திற்கு

விசுவாசத்தை உருவாக்கும் வல்லமை உண்டு. ஒருவரை எவ்வளவு அறிகிறோமோ அவ்வளவுக்குத்தான் அவரை நாம் நம்புவோம். அப்படியே திருவசனத்தை வாசிக்க, வாசிக்கவே தேவனது வழுவாமையையும் வல்லமையையும் நன்கு அறிய முடியும். அப்பொழுது தானாகவே நமது விசுவாசமும் வளரும். தேவனுடைய வசனம் *''விசுவாச* வார்த்தை'' என்றழைக்கப்படுகிறது (ரோ 10:8).

***(iv) மனத்தொய்வு*** — விசுவாசிகள் பலர் வேதத்தைப் புறக்கணிப்பதினாலேயே மகிழ்ச்சியற்றிருக்கின்றனர். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அதைத் தன் தியானமாக்காத மனிதனுக்கு நிலையான மகிழ்ச்சி இல்லை (சங் 1:2). ''உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் ***மகிழ்ச்சி''*** என்று சங்கீதக்காரன் அறிக்கையிட்டார் (சங் 119:111). பாடுகள் நிறைந்துள்ள வேளைகளிலும் நமது இருதயங்களைப் பலப்படுத்தி மனத்தொய்வடையாதபடிக் காப்பது திருவசனமே. இதுவே திருப்பாடகனின் அனுபவம் (சங் 119:92). ஆண்டவரது தயவை அதிகமதிகமாய் ருசிக்க உதவுவதும் திருவசனமே (1 பேது 2:1-3).

***(v) இருள்*** — ''அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து ***விடிவெள்ளி*** உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள இடத்தில் பிரகாசிக்கிற ***விளக்கைப்*** போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்'' (2 பேது 1:19). சங்கீதக்காரனுக்கு வேத வசனமே அவரை வழிநடத்தும் மூல ஆதாரமாயிருந்தது: ''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் ***தீபம்,*** என் பாதைக்கு ***வெளிச்சம்''*** (சங் 119:105). ''உமது வசனத்தின் பிரவேசம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்'' என்றும் தேவனிடம் அறிக்கையிட்டார் (வச 130). வசனத்தை அற்பமாய் எண்ணும் விசுவாசி இருளில் தடுமாறுவது திண்ணம்.

பரிசுத்த வேதத்திலுள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க உதவுபவர் தேவ ஆவியானவரே. ஏனென்றால், அதின் ஆக்கியோன் அவரே (2 பேது 1:20,21). ''என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும்



உங்களுக்குப் ***போதித்து,*** நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' என்று இயேசு தம் சீடர்களுக்குச் சொன்னார் (யோ 14:26). நம்மைக் ''கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குதக்க பூரண மனிதராக்குவதற்குப்'' பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் திருவசனத்தையே பயன்படுத்துகிறார்.

## 3. தூயாவியானவரும் திருப்பணியும் (Work of God)

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் வல்லமை பெற்று, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூவுலகின் கடையெல்லைவரையும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்று இயேசு சொன்னார் (அப் 1:8). இவைகளே விண்ணேறுமுன் இயேசு மொழிந்த இறுதி வார்த்தைகள். ''இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவான ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது'' (வச 9).

பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததின் முக்கிய நோக்கம் விசுவாசிகள் தேவனுக்குச் சாட்சிகளாயிருக்கும்படிப் போதுமான ***''வல்லமையை''*** அவர்களுக்கு அளிப்பதே. ஆவியினால் நிரம்பியும் சாட்சி கூறத் தவறும் விசுவாசி தேவ வரத்தைப் பெற்ற நோக்கத்தையே மறந்துவிட்டான், அல்லது அறியவில்லை. ஆவியின் வல்லமை தன்னலத்திற்காக அடக்கிக்கொள்ளக் கொடுக்கப்படவில்லை. அப்போஸ்தலர் 1:8இல் வரும் 'வல்லமை' என்னும் பதம் 'dunamis' என்னும் மூல வார்த்தையிலிருந்து வருகிறது. பின்னர் அதுவே 'dynamite' என்று வெடிமருந்துகளுக்குப் பெயராயிற்று. இவ்வல்லமை நம்மை அவருடைய சாட்சிகளாக்குவதற்காகவே. இன்னும் இந்த இடத்தில் 'சாட்சி' என்ற பதத்தின் கிரேக்க மூலப் பதம் ***'இரத்தசாட்சிகள்'*** என்று பொருள்படும். அப்படியானால் ஆவியின் நிறைவுக்குள்ளடங்கியுள்ள வல்லமையின் அளவை எண்ணிப்பாருங்கள்! இறையரசின் முன்னேற்றத்துக்காக எதையுமே செய்யாமல் நம்மில் அநேகர் சோம்பேறித்தனமாக இருப்பது எத்தனை துக்ககரமானது!

தொடர்ந்து வாழ்க்கையினாலும் வார்த்தையினாலும் சாட்சி பகர்ந்துகொண்டேயிருக்கும்போதுதான் ஆவியின் நிறைவின் முழுப்

பயனை நாம் அனுபவிக்க முடியும். விறுவிறுப்பான ஆத்தும ஆதாய வீரனே புதிய ஏற்பாட்டை நன்கு புரிய முடியும். ஏனென்றால் புதிய ஏற்பாடானது ஆத்தும ஆதாய வீரர்களால் ஆத்தும ஆதாய வீரர்களுக்கு எழுதப்பட்டது. நிமிடத்துக்கு 83 பேர் இறக்கும்போது, ஆவியினால் நிரம்பியவன் அமைதியாக இருந்தால் அது மன்னிக்கவே முடியாதது. ஒவ்வொரு ஆணுக்காகவும், பெண்ணுக்காகவும் மரிக்கும்படி பாவம் நிறைந்த இவ்வுலகத்திற்குள் இயேசு கிறிஸ்துவை அனுப்பிய அதே ''தேவ அன்பு'' பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கவில்லையா? (ரோ 5:5).

அண்ணன் எமில் ஜெபசிங் (1941-2013) அவர்களது கீழ்க்கண்ட பாடலில் இக்கட்டுரையின் கருத்துக்கள் முத்தாய்ப் பதிந்துள்ளன —

*உம்மைப் போல் யாருண்டு, எந்தன் இயேசு நாதா,*
*இந்தப் பார்தலத்தில் உம்மைப் போல் யாருண்டு?*

*இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை*
*என்றைக்கும் காத்திட **ஆவியால்** நிரப்பும்;*
*நொறுக்கும் உருக்கும் உடையும் வனையும்,*
*உமக்கே உகந்த **தூய** சரீரமாய்;*
*ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்,*
*இயேசுவே **ஆவியால்** நிரப்பும்;*
*வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ*
***அக்கினி** என்னுள்ளம் இறக்கும்.*

*வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்*
***சோதனை** வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்;*
*மேசியா வருகை வரையில் பலரை*
*சிலுவைக் கருகில் **அழைக்க** ஏவிடும்;*
***முழங்காலில்** நிற்க **வேதத்தை** அறிய*
*தினந்தோறும் தேவா உணர்த்தும்;*
*உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்*
*என்றுமே வராமல் காத்திடும்.*



**5**

# ஆவியானவர் தரும் ஆற்றல்

## Energised by the Anointing

வெறும் உற்சாகத்தாலும் புயபலத்தாலுமே எல்லாவற்றையும் சாதிக்க நினைக்கும் இக்காலத்தில் ஆவியானவர் மீது சார்ந்தியங்க வேண்டிய அவசியத்தை அளவுக்குமீறி அழுத்திக் கூறிவிட முடியாது. இன்றையச் சபையில் சற்றும் கவனிக்கப்படாதவர் பரிசுத்த ஆவியானவரே. எங்கு நம்மைப் பெந்தெகொஸ்தேகாரர் என்று அழைத்து விடுவரோ என ஆவியானவரென்னும் பெயரை உச்சரிக்கவே கிறிஸ்தோர் பலர் அஞ்சுகின்றனர். அப்படி அழைத்துவிட்டால்தான் என்ன? பிதாவாகிய தேவன் விண்ணிலிருக்கிறார்; குமாரனாகிய தேவன் விண்ணில் பிதாவின் வலது பக்கம் அமர்ந்திருக்கிறார்; ஆள் தத்துவத்தில் இன்று மண்ணுலகில் இருப்பவர் ஆவியானவராகிய தேவனே. இது ஆவியானவரின் யுகமாகும். ஆவியானவரால் நிரப்பப்படாத கிறிஸ்தவன் எவனும் அனாதை போன்றவன்தான் (யோ 14:16-18). திக்கற்றோர் இல்லங்களாய் ஆலயங்கள் மாறிவிடவேண்டாம்! அப்படியே, ஆவியின் நிறைவைப் பெற்றோரும் பிதாவின் இவ்வாக்குத்தத்தத்தின் அருளை முழுமையாய் அனுபவித்து வாழவேண்டும். கீழ்க்கண்ட பகுதிகளில் நம்மைப் பலப்படுத்தி, பக்குவப்படுத்தி, பயன்படுத்த இப்பரம தேற்றரவாளனை வருந்தியழைப்போம் —

### 1. பாவத்தை மேற்கொள்ள ...

''தேவனது ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் ஊனியல்புக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள் ... ஊனியல்பின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே உடலின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்'' (ரோ 8:9,13). ''ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது உடலின் இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்'' (கலா 5:16).

இறக்கும்வரை நமது பாவ சுபாவம் நம்முடன் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நாம் அதற்குக் கீழே அல்ல, மேலே வாழவேண்டும்! ''இனிச் சோதனையில் விழாமலிருப்பேன்'' என்பது போன்ற தீர்மானங்களெல்லாம் நல்லதுதான்; ஆனால் அவை உத்திரவாதமாகாது. ஆவியானவரே பதில்! அவரே நம்மைப் பரிசுத்தமாய்க் காக்கிறவர். அதுவே அவரது பிரதான பணி. காலைதோறும் புதிதாய் அவரால் நிரப்பப்படக் கேளுங்கள். நாள் முழுவதும் அவரால் நிறைந்து வாழுங்கள். நிறைந்திருக்கும்போது பிசாசு நுழைய வெற்றிடமில்லையே! வீடு வெறுமையாயிருந்ததாலேயே இன்னும் மோசமான ஏழு பிசாசுகளைக் கூட்டிக்கொண்டு அசுத்த ஆவி திரும்பிவந்தது (மத் 12:44, 45). நம்மைச் சுற்றி எங்கும் பாவம் நிறைந்துள்ளது. சுவாசிக்கும் காற்றே கெட்டுவிட்டது. பரிசுத்தமாய் வாழ்வது நாள்தோறும் கடினமாகிக்கொண்டே வருகிறது. பாவத்திற்கு இல்லை என்பது பிரபலமல்ல. நண்பரே, நிமிர்ந்து நில்லுங்கள்! பிசாசின் பெரும்பான்மையோரைச் சேராது தேவனின் சிறுமந்தையோடு நில்லுங்கள். சோதனையை மேற்கொள்ள நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் கனம் பெறும். தமது ஆவியானவர் மூலம் நாம் வெற்றி வாழ்க்கை வாழ தேவன் வழிவகுத்துள்ளார். வெற்றி பெறுவோர் ஆவியானவருக்குப் பிரியமானவர்கள்! (வெளி 2:7,11,17...)

## 2. இல்வாழ்வு இனிதாக ...

''ஆவியினால் நிறைந்திருங்கள்'' (எபே 5:18). இக்கட்டளையைத் தொடர்ந்து மனைவியர், கணவர், பிள்ளைகள், பெற்றோர் ஆகியோருக்கு அறிவுரைகள் வருகின்றன (5:22-6:4). ஆம், இல்லத்திலுள்ளோரின் இதயங்கள் ஆவியானவரால் நிறைந்திருக்கும்போது இல்லம் இனிதாயிருக்கும். அதுதான் பூவுலகில் பரலோகம் என்பது! அங்கு பணிவு, அன்பு, கீழ்ப்படிதல், மரியாதை ஆகியவை யாவும் உண்டு. ''தந்தையர்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தைத் தந்தையர்களிடத்திற்கும்'' திருப்பும்படி எலியாவின் ''ஆவியும் பலமும்'' உடையவராய்த் திருமுழுக்கினன் யோவான் வந்தார் (மல் 4:5,6; லூக் 1:17). ஆம், குடும்பங்கள் சீர்பெறத் தூயாவியானவரின் உதவி தேவை.



சகரியாவும் எலிசபெத்தும் அழகான தம்பதிகள். கர்த்தருக்குமுன் பக்தி, மனிதர்முன் குற்றமில்லா நடத்தை, யாரும் பார்த்துப் பொறாமைப்படக்கூடிய ஒருமைப்பாடு (லூக் 1:5,6,60,62,63). பிள்ளையில்லாக் குறைவிலும் இவ்வித நிறைவான வாழ்வு (வச 7)! இதற்கு இரகசியம் என்ன தெரியுமா? ஆவியின் நிறைவு! (வச 41,67). இத்தனை ஆண்டுகள் எத்தனை ஆசியான இல்வாழ்வு! (வச 18).

பிலிப்புவின் குடும்பம் கவர்ச்சிகரமானது. ''அநேக நாட்கள்'' பவுலும் அவரது மிஷனரிக் குழுவும் அங்கு தங்க முடிந்தது! இரகசியம்? வீட்டிலுள்ளோர் ஆவியானவரால் நிறைந்திருந்தனர். உதவிக்காரனும், சுவிசேஷகனுமாகிய பிலிப்பு பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தார். அவரது நான்கு குமாரத்திகளும் பெந்தெகொஸ்தே விசுவாசிகள்! (அப் 6:3,5; 21:8,9). வாக்குவாதங்களும் இசைத்தட்டு இரைச்சலுமல்ல, ''இரட்சிப்பின் கெம்பீர சத்தம்'' நிறைந்திருந்த நீதிமான்களின் கூடாரம் அது! (சங் 118:15).

கணவனை ஆட்டுக்குட்டியாகவும், மனைவியைப் புறாவாகவும் மாற்றுவார் ஆவியானவர்! என்னே பொருத்தம்! உரையாடல் இருக்கும், உடைவு இருக்காது; வேறுபாடுகள் இருக்கும், மாறுபாடு இருக்காது! ஆ, இன்ப இல்லம்! குடும்பங்களுக்கெதிராகத்தான் இன்று சத்துரு வெள்ளமாய் வருகிறான். ஏதேனிலுள்ள ஆதிக் குடும்பத்திடமே விளையாடத் துவங்கிய இவன் முடிவுகாலத்தில் முழுமூச்சாய்ப் பாய்கிறான். பிசாசின் வெள்ளத்தை மேற்கொள்ளுவது ஆவியானவரின் வல்லமையே.

## 3. வேலையில் நேர்த்தியாயிருக்க ...

தனது பரிசுத்தக் கோட்பாடுகளுக்கு எதிராயிருந்த அந்நிய நாட்டிலிருந்தார் வாலிபன் யோசேப்பு. இங்குமங்கும் பார்த்து யாருமில்லையேல் பாவம் செய்வதுதான் எகிப்தின் கலாச்சாரம் (யாத் 2:11,12). அவர்கள் ''சுற்றிப்'' பார்ப்பர்; யோசேப்போ ''மேலே'' பார்த்தார்! ''தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?'' (ஆதி 39:9). பகைமை, பொறாமை எனும் அம்புகள் அவர் மீது எய்யப்பட்டன. ஆனால் அவரது வில் உறுதியாய் நின்றது! ஏனென்றால் தேவ

ஆவியானவர் அவர் மீது இருந்தார் (ஆதி 49:23-25; 41:38). ராஜ மரியாதையுடன் சிறையிலிருந்து சிங்காசனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்!

தேவ ஆவியைப் பெற்றிருந்த இன்னொரு வாலிபன் தானியே லாகும் (தானி 5:11; 6:3). பாபிலோனில் ராஜரீகப் பணியிலிருந் தார். அவரும் பொறாமைக்குத் தப்ப முடியவில்லை. முழு அங்கி கரிப்புக்கு முன் கட்டாயம் முழுப் புறக்கணிப்பு உண்டு. மனிதர்களின் அரசனுக்கும், மிருகங்களின் அரசனுக்கும் அஞ்சாது தானியேல் நின்றார் — தனியாய் நின்றார்! தனித்தோ, தோழருடனோ முழங் காலில் துதித்து நின்றபோதெல்லாம் தேவ ஆவியானவர் அவர் மீதிறங்கி புதிய துணிச்சலையும் கோட்பாட்டுத் தீவிரத்தையும் அருளினார். எனவே, சற்றும் விட்டுக்கொடுக்காமல் இரு புறவின அரசருக்கடியில் அவரால் ஜெயமாயிருக்க முடிந்தது (6:28).

பெசலெயேல் ஆவியால் நிரப்பப்பட்டபோது ஞானமும் புத்தியும் அறிவும் நிறைந்த விசித்திர வேலைக்காரனானார். பொன், வெள்ளி, வெண்கலம், இரத்தினங்கள், மரம் ஆகிய யாவற்றிலும் அவரால் திற மையாய் வேலை செய்யமுடிந்தது (யாத் 31:2-5). ஆவியானவரால் நிறைந்த டாக்டர் நன்றாய்ச் சிகிச்சையளிப்பார்; ஆவியானவரால் நிறைந்த என்ஜினியர் நன்றாய்க் கட்டிடம் கட்டுவார்; ஆவியானவ ரால் நிறைந்த ஆசிரியர் நன்றாய்க் கற்றுக்கொடுப்பார்; ஆவியானவ ரால் நிறைந்த ஓவியர் நன்றாய் வரைவார்; ஆவியானவரால் நிறைந்த மாணவன் நன்றாய்ப் படிப்பான்! ஆலயக் கட்டுமான வரைபடத்தைத் தாவீதுக்குக் கொடுத்தது ஆவியானவரே (1 நாளா 28:11,12).

மனதிலும் உடலிலும் களைப்படையும்போது அலுவலகத்தி லும், தொழிற்கூடத்திலும், பள்ளியிலும் மனநெருக்கம் உண்டாகும். அவ்விதச் சமயங்களில் ஆவியில் நிறைந்து நவநாவுகளில் பேசத் துவங்குங்கள். ''இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல்'' (ஏசா 28:11,12; 1 கொரி 14:21). எனது மாணவ நாட்களிலும், பொறியியற்பணி செய்த காலத்திலும் அடிக்கடி (அமைதியாக) நவநாவுகளில் பேசத் துவங்கிவிடுவேன்; எப்பொழுதுமே ஒரு விடுதலையையும் புத்துணர்வையும் பெற்றுள் ளேன். கர்த்தருக்குமுன் காத்திருந்து உங்கள் பலத்தைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள் (ஏசா 40:30,31).



## 4. உறவுப் பிரச்னைகளை மேற்கொள்ள ...

அன்பு, முகமலர்வு, சமாதானம், பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், தன்னடக்கம் ஆகியவை குறைவதாலேயே உறவுப் பிரச்னைகள் உருவாகின்றன. ஆனால் இவைதான் ஆவியானவரின் குணாதிசயங்களானதால் இவைகளை அவர் நிறைவாய் அருளு கிறார். இதைத்தான் ''அவரது'' கனி என்கிறோம்! (கலா 5:22, 23) ஆவியால் நிறைந்திருக்கும்போதுதான் ஒருவருக்கொருவர் கீழ்ப் படிந்திருப்பது சாத்தியமாகிறது (எபே 5:18,21). ''மிகுந்த மனத் தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பி னால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் *ஆவியின்* ஒருமையைக் காத்துக்கொள்ளக் கவனமாயிருங்கள்'' என்று பவுல் எபேசியருக்கு எழுதினார் (எபே 4:2,3). ஒருமையைக் கொடுப்பது பரிசுத்த ஆவியானவர்; அதைக் காப்பதோ நம் கடமை!

''விசுவாசிகளாகிய திரளானோர் ஒரே இருதயமும் ஒரே மனமு முள்ளவர்களாயிருந்தார்கள்'' — முடியாததாய்த் தோன்றும் இது சாத் தியமானது ஆவியின் அருள்மாரியினாலேயே! (அப் 4:32) ''ஒரு மனிதனாலும்'' அடக்க முடியாத நாவுதான் பெரும்பாலான பிரச்னை களுக்குக் காரணம் (யாக் 3:8). ஆனால் தேவனால் அதை அடக்க முடியும்! முதலிலேயே அந்த 120 பேரின் நாவுகளை தேவன் பிடித் துக்கொண்டது இதனால்தானோ? அந்தக் கலிலேயரின் நாவிலிருந்த நரக அக்கினியை அணைத்தது அப்பரம அக்கினி! நாவுகள் நாத னுக்குச் சொந்தமாயின! (அப் 2:3,4; யாக் 3:6).

பாறை போன்ற இதயங்களை உருக்கிக் கண்களை ஒப்புரவாகு தலின் கண்ணீரால் நிறைப்பது ஆவியானவரே. சந்தேகம், தவறாய்ப் புரிந்துகொள்ளுதல் போன்ற கயிறுகளை அவர் அறுத்தெறிகிறார். ஆவியானவரது உதவியின்றி ஒநேசிமுவைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளப் பிலேமோனால் முடிந்திருக்காது (பிலே 15-20). ஆவி யானவர் உணர்த்துகிறார், உற்சாகப்படுத்துகிறார், எண்ணெய் ஊற்று கிறார். ''சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணச்'' செய்யும் நல்ல தைல மும் இறங்கும் பனியும் அவரே! (சங் 133:1,2).

## 5. விடுதலையோடு துதிக்க, ஜெபிக்க ...

ஆவியானவருக்குத் தேற்றரவாளன் (Paraclete) என்று பெயர். அதாவது ''உதவுகிறவர்'' (யோ 14:26). நாம் யாவரும் ஜெபத்தில் பலமற்றிருப்பதால் அவரது பிரதான உதவிகளில் ஒன்று ஜெப வாழ்வுக்குரியது. எதற்காக, எப்படி ஜெபிக்கவேண்டுமென நாமறியோம். அவர் நமது ஜெபத்தில் உதவுவது மட்டுமல்ல, ''வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு'' அவரே நமக்காக வேண்டுதலும் செய்கிறார் (ரோ 8:26). ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவுடன் வரும் அடையாளங்களில் ஒன்று ஜெபத்தில் ஆர்வமும், ஆழமுமாகும், பெந்தெகொஸ்தேயை அடுத்து ஆதிச்சீடர் ஜெபத்தில் தீவிரமானார்கள். எக்காரணத்தைக்கொண்டும் அவர்கள் ஜெப வேளைகளைத் தவறவிடவில்லை! (அப் 2:42; 3:1)

தூயாவியால் நிறைந்த இதயத்திலிருந்து ''சங்கீதங்களும், கீர்த்தனைகளும் ஞானப்பாட்டுகளும்'' புரண்டோடும். தேவனுக்காய் நம் இதயத்தில் இசையெழுப்பச் செய்பவர் ஆவியானவரே. ''எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும்'' இயேசுவின் நாமத்தில் பிதாவைத் துதிக்கச் செய்கிறார் அவர் (எபே 5:18-20). ஆவியின் நிறைவையும் வரங்களையும்பற்றிப் பேசும் கூட்டத்தார் (Charismatics) திருச்சபைக்குப் புரிந்துள்ள பெருந்தொண்டு தொலைந்துபோன முத்தாகிய தொழுகையைத் திரும்பக் கொண்டு வந்ததே என அனைத்துச் சபைத்தலைவர்களும் ஒத்துக்கொள்கின்றனர். வசனங்களை அப்படியே இசையுடன் பாடுவதும், ஆச்சார ஆராதனைகளுக்குப் பதிலாக ஆனந்தமாய்த் தேவனை ஆர்ப்பரித்துப் போற்றுவதும் எங்கும் காணப்படத் துவங்கியுள்ளது. ''அல்லேலூயா'' என்று முழங்கியதும் இது பெந்தெகொஸ்தே சபைக் குரல் என்ற காலமெல்லாம் போய்விட்டது! *''குதூகலம், கொண்டாட்டமே''* எனும் பாடல் எங்கும் தொனிக்கிறது!

துதியிலும் தனி ஜெபத்திலும் நவநாவுகளின் பயன் அதிகம். இது மனதைக் கடந்து ஆவியை எழுப்பிவிடுகிறது (1 கொரி 14:4,14-17). நான் 1963இல் அபிஷேகம் பெற்றதிலிருந்து தினமும் கொஞ்ச நேரமாவது தனி ஜெபத்தில் நவநாவுகளில் பேசிவருகிறேன். அது புத்துணர்வு தருகிறது! 1 கொரி 12:8-10இல் கொடுக்கப்பட்டுள்ள ஆவி



யின் ஒன்பது வரங்களில் பிரதானமாக ''தேவனை நோக்கிச்'' செயல்படுவது நவநாவுகள்தான். எனவே தேவனோடு உறவாடி உறவு கொள்வதே அதின் முக்கியத்துவம்.

## 6. திருமறையைப் புரிந்துகொள்ள ...

''பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்'' என்றார் இயேசு (யோ 14:26). ''தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை ... நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினால் வெளிப்படுத்தினார் ... அவைகளை நாங்கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்'' என்று பவுல் எழுதினார் (1 கொரி 2:9-13). 1 கொரி 12:8-10இல் தரப்பட்டுள்ள வரங்களின் பட்டியலில் முதலாவது கூறப்பட்டுள்ள இரு வரங்களின் ஊழியம் இதுதான்: ''ஞானத்தைப் *போதிக்கும்* வசனம், அறிவை *உணர்த்தும்* வசனம்.''

ஆவியானவரே விவிலியத்தின் ஆக்கியோனாகையால் அவரே நிகரற்ற ஆசிரியருமாவார் (2 பேது 1:21; 2 தீமோ 3:16; எபி 9:8). அப்படியானால் நமக்குப் போதகர்களோ, உதவி நூல்களோ தேவையில்லை என்று பொருளல்ல. எல்லா அறிவையும் ஆவியானவர் அனலாக்குகிறார். சிரத்திலிருந்து அகத்திற்குக் கொண்டுவருகிறார். ஆவியானவரின் விரித்த குடைக்கீழ் அமர்ந்திருந்து பைபிளைத் தியானியுங்கள். படித்தாலும் தியானித்தாலும் அவர் பிரசன்னத்தை உணர்ந்தவண்ணமிருங்கள். எப்பொழுது பைபிளைத் திறந்தாலும், ''ஆண்டவரே, என் கண்களைத் திறந்தருளும்'' என ஜெபிக்க மறக்க வேண்டாம். தூயாவியினால் போதனை அல்லது திருவசனத்தினால் போதனை என்பதல்ல, தூயாவியினால் திருவசனப் போதனை!

நான் இன்னும் மோட்சம், நரகம் என்பதையெல்லாம் விசுவாசிக்கிறேனாவென்று சபைக் குருக்கள் சிலர் என்னிடம் சமீபத்தில் (1988) கேட்டனர். ஆம் என்று ஓங்கிச் சொல்லி, நீங்கள் வேதமே தேவ வார்த்

தையென்று விசுவாசிக்கிறீர்களாவென்று கேட்டேன். அவர்களில் பலரும் ''ஆம்'' என்று திட்டமாய்ச் சொல்லமுடியவில்லை. இறையியல் கல்லூரிகள் இப்படிப்பட்ட பலரை நமது பிரசங்கப்பீடங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றன. ஆவியின் அனலில்லாத வறட்டு அறிவு! (2 கொரி 3:6). அடிப்படை விசுவாசமே ஆடுகிறது ஏன்? படிப்புண்டு, பட்டமுண்டு, அபிஷேகமில்லை! விழிப்பாயிருங்கள்!

### 7. உலகை நற்செய்திமயமாக்க ...

உலகை நற்செய்திமயமாக்கத் தேவையான ஆவியானவரின் வல்லமையைக் குறித்த வாக்குத்தத்தமே விண்ணேறுமுன் கிறிஸ்து சொன்ன இறுதி வார்த்தையாகும் (அப் 1:8,9). ''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டுத் தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்'' என்று ஆதிக் கிறிஸ்தவரைக் குறித்து வாசிக்கிறோம் (அப் 4:31). ''என் பேச்சும், என் பிரசங்கமும், மனித ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன'' என்று சாட்சியிட்டார் பவுல் (1 கொரி 2:5). விளைவு? மூவாயிரம்! ஐயாயிரம்! திரளானோர்! ஆசாரியரில் பலர்! மதிப்பிற்குரிய கிரேக்கப் பெண்களிலும் ஆண்களிலும் பலர்! அது ஒரு சபைப் பெருக்கம்! ஏனென்றால், பரிசுத்த ஆவியின் வெடி குண்டு போன்ற சக்தி அவர்கள் மீதிருந்தது.

எனக்குப் பிரியமான நூலாசிரியர்களில் ஒருவராகிய பண்டிதர் ஜேம்ஸ் ஸ்டூவர்ட் (1896-1975) எழுதியதைக் குறிப்பிடுகிறேன்: ''நவீன காலச் சுவிசேஷ ஊழிய முறைகளே என் இதயத்தை நொறுக்கிப் புலம்பச் செய்கின்றன ... கிறிஸ்துவல்ல, பிரசங்கிகளும் பாடகருமே பகட்டான கவர்ச்சியாக்கப்படுகின்றனர் ... முன்பெல்லாம் சுவிசேஷக் கூட்டங்களில் மக்கள் பாவ உணர்வில் அழுது புரளுவர், இன்றையத் திரையுலகுப்பாணிக் கூட்டங்களோ மக்களைச் சிரிக்கவைக்கின்றன. நொறுங்குதலில்லாத இவ்வித ஆடம்பரச் சூழலில் ஆவியானவர் அசைவாட முடியாது. நமது பிரச்னைகளுக்கு முடிவு காண வேண்டுமானால் ஆவியானவரைக் கனப்படுத்தவேண்டும்; நவநாகரிக ஊழிய அசிங்கங்களை அப்புறப்படுத்தவேண்டும்!''



அழியும் ஆத்துமாக்களுக்காய் நம்மைப் பாரப்படுத்திப் புலம்பச் செய்பவர் ஆவியானவரே (ரோ 9:1,2; 10:1). மிஷனரிகளை அழைப்பவரும் அனுப்புபவரும் ஆவியானவரே (அப் 13:2,4). பாவிகளை உணர்த்திச் சிலுவையைக் காட்டுபவர் ஆவியானவரே (யோ 16: 8-11). விசுவாசிகளைக் கிறிஸ்துவின் உடலுக்குள் உட்படுத்துவது ஆவியானவரே (1 கொரி 12:13). மட்டுமல்ல, சபையோடு சேர்ந்து கொண்டு பாவிகளைக் கிறிஸ்துவிடம் அழைப்பவரும் ஆவியானவரே: ''ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள்!'' (வெளி 22:17). நற்செய்திப்பணியிலும் சபை கட்டுதலிலும் ஆவியானவரின் உதவிதான் என்னே!

### 8. சத்துருவை வீழ்த்த ...

தேவனது ஆறு போராயுதங்களில் ஐந்து தற்காப்புக்கானது; ஒன்று மட்டுமே தாக்குதலுக்குரியது. அதுதான் தேவ வசனமாகிய ''ஆவியின் பட்டயம்'' (எபே 6:10-17). சத்துருவுக்கு எதிராகச் சரியான வசனத்தைத் தெரிந்தெடுத்துக் கையாள நடத்துவது ஆவியானவரே. பிசாசு சோதித்தபோது பழைய ஏற்பாட்டிலிருந்து சரியான வசனங்களை இயேசுவுக்குப் பொறுக்கிக் கொடுத்தது ஆவியானவரே. தெரிந்தெடுத்த வசனங்கள் அவ்வளவு கூர்மையாயிருந்தபடியால் பிசாசுக்குப் பதிலேதும் சொல்ல முடியவில்லை! ''ஆவியின் வல்லமையினாலேயே'' இயேசு இதைச் செய்தார் (லூக் 4:1,14). அறுவகை ஆயுதங்களைக் குறிப்பிட்டபின் உடனே ''ஆவியில் ஜெபித்தல்'' பற்றிப் பவுல் எழுதுகிறார் (எபே 6:18).

பக்தியென்பது சிந்தையிலேயே இருப்பிடம் கொண்டுள்ளதால் பிசாசு அதிகமாய்த் தாக்குவது நமது சிந்தையையே. மனதில் சந்தேகங்கள், சிதைவுகள், சிதறல்கள், சோர்புகள் போன்றவற்றை உருவாக்கி தேவனிடமிருந்து ஆத்துமாவைப் பறித்துவிட அவன் முயலுகிறான். ஆனால் நமது அறிக்கை: ''எங்கள் போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குவதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற

எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக் கிறோம்'' (2 கொரி 10:4,5).

ஆவியானவரால் நிறைந்து அவரால் பிடிக்கப்பட்டிருக்கும்போது பிசாசு நம்மை நெருங்கவோ பிடிக்கவோ முடியாது. ''சத்துரு வெள் ளம்போல் வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்!'' (ஏசா 59:19). அதாவது, விரட்டித் துரத்துவார் என்று பொருள்!

**9. பாடுகள், துன்புறுத்தல்களைச் சகிக்க ...**

நமது உடல் சாவுக்கேதுவானதுதான், ஆனால் ஆவியானவர் அதை உயிர்ப்பித்து அதற்கு ஊக்கம் தருகிறார் (ரோ 8:11). ஆவி யானவரின் செட்டைகளில் ஆரோக்கியம் உண்டு. அவர் உயிர்தரும் காற்று. அவரே கீலேயாத்தின் தைலம். ஆவியின் வல்லமையினா லேயே இயேசு மக்களைக் குணமாக்கினார் (அப் 10:38; ஏசா 61: 1-3). சுகமாக்குதல் ஆவியானவரின் வரங்களில் ஒன்றாகும் (1 கொரி 12:9). ''நான் தேவ ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறேன்'' என் றார் இயேசு (மத் 12:28). நோயாளிகளுக்குப் பூசி ஜெபிக்கும் எண் ணெய் ஆவியானவருக்கு ஓர் அடையாளம். ஆவியானவரே தேற்றி, ஆற்றுகிறவர். வியாதிப்படுக்கையில் நமக்கு எவ்வளவாய் ஆறுதல் தேவை! நமது எல்லா நெருக்கத்திலும் ஆவியானவரும் நெருக்கப் படுகிறார். தாயானவள் நோய்வாய்ப்பட்ட பிள்ளையைத் தூக்கிச் சுமப்பதுபோல அவர் நமக்குச் செய்கிறார் (ஏசா 63:9,10).

அடுத்து, துன்புறுத்தப்படல். எவரும் தவிர்க்க முடியாது, தப்ப முடியாது. இங்கும் நமக்குத் துணை நிற்பது ஆவியானவரே. ''நீங்கள் கிறிஸ்துவின் பெயருக்காக நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவ ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்க ளாலே மகிமைப்படுகிறார்'' (1 பேது 4:14). கல்லெறியப்படும்போதும் கலங்கரையாய்ப் பிரகாசித்த ஸ்தேவானின் இரகசியம் ஆவியின் நிறைவே (அப் 7:54,55). துரத்தப்பட்ட மிஷனரிகள் துவளாதது ஆவியின் ஆனந்தத்தினாலேயே (அப் 13:49-52). துன்பத்தின் நடு விலும் சபைகள் பெருகியது ஆவியின் ஆறுதலினாலேயே! (அப் 9:31).



ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலிருந்து (BYM) ஓய்வு பெற்ற மிஷனரியும் என் நண்பருமாகிய அண்ணன் K. பொன்ராஜ் ஐசக் அவர்கள் இயற்றிய பாடல் அர்த்தமுள்ளது —

*அனுப்பும் தேவா வல்லமை உடனே*
*அனுப்பும் அக்கினி வல்லமையுடனே*

*வல்லவரே உம் தூயாவியின்*
*வல்லமை எம்மேல் இறங்கிடவே*

*இரண்டு நாளாகமம் பதினாறு ஒன்பதிலே*
*இருதய உத்தமன் தேடுகின்றீரே*
*தந்தோம் எம்மை வல்லமை விளங்கவே*
*தருவீர் உத்தம இருதயம் எமக்கே*
*தருவீர் தமது வல்லமை உடனே*

*பற்றாக்குறை பசி பஞ்சம் இந்நாட்களிலே*
*பயங்கரமாகவே தாண்டவமாடுதே*
*பரிசுத்தர் நடுவிலும் வல்லமை இல்லையே*
*பரிதாபமான இந்நிலை மாறிடவே*
*பரலோக வல்லமை எமக்கருள்வீரே*

*ஒன்று கொரிந்தியர் பன்னிரண்டில் உள்ளபடியே*
*ஒன்பது வரங்களும் வெளிப்பட வேண்டுமே*
*ஒருக்காலும் ஒழியா அன்பும் வேண்டுமே*
*விசுவாசம் நம்பிக்கை அன்பில் நிலைத்தே*
*விரைவுடன் செயல்பட வல்லமை தாருமே*

*திருச்சபை ஒரு மறுமலர்ச்சியைப் பெற்றிடவே*
*திருவசனம் வேரூன்றி நிலை பெற்றோங்கவே*
*திறப்பினில் நிற்கவே ஜெபவீரர் வேண்டுமே*
*தெருக்களில் நிற்கவும் வாலிபர் வேண்டுமே*
*திருப்பிடத் தேசத்தை வல்லமை வேண்டுமே*

*அப்போஸ்தலர் ஒன்று எட்டின் பலம் எம்மையே*
*அன்றுபோல் சாட்சிகள் ஆக்கிட வேண்டுமே*
*அர்ப்பணிக்கின்றோம் அடிமைகள் எம்மையே*
*பூமியின் கடைசி பரியந்தம் செல்லவே*
*புது பலத்தால் எம்மை நிரப்பிடுவீரே*

# 6

# சொந்த பெந்தெகொஸ்தே

## Personal Pentecost

விசுவாசியின் வாழ்வில் ஆவியானவர் தங்கியிருந்து நிறைவேற்றும் பணியைக் குறித்து வேதத்திலேயே *ரோமர் 8*ஆம் அத்தியாயத்தில்தான் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இயேசு அவரைத் ''தேற்றரவாளன்'' என்றழைத்தார். (மூல மொழியில் ''உதவியாளர்'' என்பது பொருள்). பிதாவாகிய தேவன் பரலோகத்திலிருக்கிறார்; குமாரனாகிய தேவன் பிதாவின் வலது பக்கத்திலிருக்கிறார்; பரிசுத்த ஆவியாகிய தேவன் இன்று உலகத்திலிருக்கிறார். இதனால்தான் பெந்தெகொஸ்தே அன்று துவங்கிய புது யுகத்தை நாம் ஆவியானவரின் யுகம் என்றழைக்கிறோம். திரித்துவ தேவனின் வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் ஆவியானவர் நமக்கு எவ்விதம் சொந்தமாக்குகிறார் என்பதை இவ்வத்தியாயம் விளக்குகிறது. இங்கு நாம் நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட பெந்தெகொஸ்தேயையும் அனுபவிக்கிறோம். அதாவது, ஆற்றோரத்திலிருந்து நீச்சலாழத்திற்குச் செல்லுகிறோம் (ஒப்பிடுக: எசேக் 47:1-5,12).

ரோமர் 8ஆம் அத்தியாயத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஏழு காரணப் பெயர்களைக் காண்கிறோம் —

**1. ஜீவனுள்ள ஆவி** — *''விடுதலையாக்க''* (To liberate)

வசனம் 2, ''கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ***ஆவியின்*** பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே!''

பரிசுத்த ஆவியானவர் ஒருவனை விடுதலையாக்குவது எப்படி? பாவமானது விசுவாசியைக் கீழிழுக்கும் சக்தி. அது அடிமைத்தனம் அல்லது *மரணம்*. ஆனால் பரிசுத்த ஆவியானவர் *ஜீவன்* தரும் ஆவியாம். பாவம் கீழே தள்ளுமானால், ஆவியானவர் மேலே தூக்குவார்.



''அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ***ஆவியின்படி*** நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ***ஆவியின்படி*** நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது'' (வச 3-7).

பாவத்தினாலே கீழே இழுக்கப்பட்டதின் விளைவு ஊனியல் பின்படியான வாழ்க்கை; ஆவியினால் மேலே உயர்த்தப்பட்டதின் விளைவோ ஆவிக்குரிய வாழ்க்கை. மாம்ச இச்சையை நிறைவேற்றாத வாழ்வே ஆவிக்குரிய வாழ்வு. 5 மற்றும் 6ஆம் வசனங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். 5ஆம் வசனத்தில் ஆவியின் நடத்துதலைக் குறித்து வாசிக்கிறோம். 6 மற்றும் 7ஆம் வசனங்களில் ''சிந்தை'' என்னும் புதிய வார்த்தையைக் காண்கிறோம். மாம்ச சிந்தைக்கு எதிரானது ஆவியின் சிந்தை. ஆவியின்படி நடத்தல் என்றால் என்னவென்பது இங்கு தெளிவாகிறது. ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறவர்கள் ஆவிக்குரியபடி நடக்கிறார்கள்.

கொலோசெயர் 3:1-4இல் வாசிப்பது இதுவே: ''நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பக்கத்தில் அமர்ந்திருக்கும் மேலானவைகளைத் தேடுங்கள்.'' அதாவது, ''பூவுலகிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.'' ஏனென்றால், ''நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடுகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.''

பிரியமானவரே, நமது மனதே மார்க்கத்தின் இருக்கையாகும். ஆவியில் நடப்பவர்கள் மாம்சத்திற்குரியவைகளுக்கு ''இல்லை'' என்று கூறி, பரலோகத்திற்குரியவைகளை வாஞ்சிப்பார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மனதைப் பிரகாசிப்பிப்பதால், இம்மைக்குரியவைகளின் அசுத்தத்தையும், நித்தியத்திற்கடுத்தவைகளின் பிரகாசத்தையும் தெளிவாக உணருகிறார்கள். இதுதான் இரட்சிப்பினால் ஏற்படும் முழுத் திருப்பத்தின் இரகசியம். இளைய மகனின் *புத்தி* தெளிந்தபோது, ''நான் என் தகப்பனிடம் போவேன்'' என்றான். இது மனதின் தீர்மானம். ஜீவனுள்ள ஆவி இப்பொழுது அவனை விடுதலையாக்கிவிட்டது!

### 2. தேவனுடைய ஆவி — *''குடியிருக்க''* (To indwell)

வசனம் 9, ''தேவனுடைய ***ஆவி*** உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.''

தேவனுடைய ஆவியானவர் நம்மில் குடியிருக்கிறார். வேதம் முழுவதையும் மூன்று யுகங்களாகப் பிரிக்கலாம்: கிறிஸ்துவுக்கு முந்தினது பிதாவானவரின் யுகம்; சுவிசேஷங்களின் காலம் குமாரனானவரின் யுகம்; இப்பொழுது நாமிருப்பது ஆவியானவரின் யுகம். பிதாவின் யுகத்தில் தேவன் மக்கள் ''நடுவில்'' இருந்தார். குமாரனின் யுகத்தில் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தங்கொள்ளும் இம்மானுவேலாக தேவ மக்கள் ''உடன்'' இருந்தார். பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தேவன் நமக்கு ''உள்ளே'' இருக்கிறார். இதைத்தான் இயேசு, யோவான் 14:17இல், ''உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி, *உங்களுக்குள்ளே* இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்'' என்று கூறினார். ஆவிக்குரிய மனிதன் தேவனை உடையவன். அவன் தேவனால் நிரப்பப்பட்டவன், அல்லது தேவனால் ஆட்கொள்ளப்பட்டவன்.

வாசஞ்செய்தல் என்பது வீட்டில் தங்கியிருப்பது போன்றது. 1 தீமோத்தேயு 6:16, ''ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத



ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்.'' இங்கு கூறப்பட்டுள்ள ''வாசம்பண்ணுதல்'' என்ற வார்த்தையும் ரோமர் 8:9இல் கூறப்பட்டுள்ள வாசமாயிருத்தலும் ஒரே அர்த்தமுடையவை. இது ஓர் இரகசியமேயன்றி கட்டுக்கதையல்ல. சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிற தேவன் இப்பொழுது அவருடைய ஆவியினால் மனிதனில் வாசஞ்செய்கிறார்! இதை அறிந்து விளங்கிக் கொள்ளுங்கள்.

1 கொரிந்தியர் 3:16, ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், ***தேவனுடைய ஆவி*** உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'' நீங்கள் இதை ''அறிந்திருக்கிறீர்களா?'' சத்தியம் இருக்கிறது, அதைக் குறித்த அறிவோ இல்லாமற்போகிறது. உங்களில் தங்கியிருக்கும் ஆவியினால் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். அது உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இது ஒரு சிலாக்கியம். அதோடுள்ள பொறுப்பையும் கவனியுங்கள்: ''ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.'' இது மிகவும் பயங்கரமான காரியம். இதனால்தான் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினவர்களிடம் இயேசு அவ்வளவு கண்டிப்பாக நடந்துகொண்டார் (மாற் 11:15-17).

### 3. கிறிஸ்துவின் ஆவி — *''அடையாளங்காண''* (To identify)

வசனம் 9, ''கிறிஸ்துவின் ***ஆவி*** இல்லாதவன் அவருடையன் அல்ல.''

கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவுடனும், கிறிஸ்துவை நம்முடனும் அடையாளப்படுத்துகிறார். ''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு உரிமை கொடுத்தார்.'' இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருக்கும்போது இருதயத்தில் அவரை ஏற்றுக்கொள்வது எப்படி? கொலோசெயர் 1:27, ''கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்.'' கிறிஸ்துவை நமது இருதயத்தில் நாம் கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது, பரிசுத்த

ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியை நமக்கீந்து, அதன் மூலம் கிறிஸ்து நம்மில் வாழ்வதை நாம் உணரச் செய்கிறார். எடுத்துக் காட்டாக, கிறிஸ்துவின் பெயரில் நாம் கூடும்போது, ஆவியானவர் கிறிஸ்துவின் பிரசன்னத்தை அருளுகிறார் (மத் 18:20). சுவி சேஷத்தை நாம் பிரசங்கிக்கச் செல்லும்போது, எப்பொழுதுமே நம் முடன் தங்கியிருக்கும் கிறிஸ்துவின் சமுகத்தைப் பரிசுத்த ஆவி யானவர் நமக்கு மெய்ப்பிக்கிறார் (மத் 28:18-20).

இதைத்தான் 2 கொரிந்தியர் 5:1,5-7இல் பவுலடியார் பின்வரு மாறு விளக்குகிறார்: ''பூவுலகுக்கடுத்த கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக் கிறோம். இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே. ***ஆவி*** என்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே ... இந்த உடலில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோ மென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்.'' ஆகவே இந்த உடலில் நாம் குடியிருக்கும்போது, பௌதீக ரீதியில் கிறிஸ்து வானவர் நம்மோடிருப்பதை ஆவியின் மூலம் தேவன் உறுதிப்படுத்து கிறார். ''ஏனெனில், நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக் கிறோம்.''

### 4. வல்லமையின் ஆவி — *''உயிர்ப்பிக்க''* (To quicken)

வசனம் 11, ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின வருடைய ***ஆவி*** உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித் தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ***ஆவியினாலே*** சாவுக்கேதுவான உங்கள் உடல்களையும் உயிர்ப் பிப்பார்.''

மற்றுமோர் இடத்தில் அவர் ''பலமுள்ள'' உயிர்த்தெழுதலின் ஆவி என்றும் அழைக்கப்படுகிறார் (ரோ 1:5). சாவுக்கேதுவான நமது உடல்களை உயிர்ப்பிக்க அவர் பலமுள்ள ஆவியாயிருக்கிறார். மனி தன் பிறந்த நாள் முதல் மரணம் நோக்கி நடக்கிறான். ஆனால் நமக்கு ஆவியானவரைத் தந்த தேவன் துதிக்கப்படுவாராக! இந்த ஆவியான வரே கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இன்று நாம் அதே உயிர்த்தெழுதலின் வல்லமையை ஓரளவு அனுபவிக்கிறோம்.



இரு காரியங்கள் உடலைச் சாவுக்கேதுவானதாக்குகின்றன. ஒன்று, காரணமாகிய பாவம்; அடுத்தது, விளைவாகிய வியாதி. கீழ்வரும் வசனங்களைக் கவனியுங்கள்: ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன. எழுந்து நட'' (மத் 9:1-7). ''அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கினார்.'' (சங் 103:2,3). ''இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் ... அவருடைய தழும்புகளால் குணமாகி றோம்'' (1 யோ 1:7; ஏசா 53:5). அடிக்கடி நாம் இந்த இரு சக்திகளோடு போராடவேண்டியிருக்கிறது. இந்த சக்திகளை எதிர்க்க நாம் செய்ய வேண்டுவதென்ன?

அ) பாவத்திற்கு *மறுப்பு* தெரிவியுங்கள். வசனம் 12,13, ''ஆகையால் சகோதரரே, ஊனியல்பின்படிப் பிழைத்தால் சாவீர்கள்; ***ஆவியினாலே*** உடலின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.'' வேறு விதமாய்ச் சொன்னால், ஆவியானவராலே ''இல்லை, இல்லை'' என்று கூறிக்கொண்டிருங்கள்.

ஆ) வியாதிக்கு *எதிர்த்து* நில்லுங்கள். ஆவியின் பலத்தினா லன்றி வியாதியைக் கடிந்துகொள்வது கூடாத காரியம். நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ***ஆவியினாலும்*** வல்லமையினாலும் அபிஷேகித்தார். அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து பிசாசினால் பாதிக்கப்பட்டவர்களைச் சுகப்படுத்தினார் (அப் 10:38). காய்ச்சலை இயேசு கடிந்துகொண்டார். வியாதியை உண்டுபண்ணின பொல்லாத சக்திகளைக் கடிந்துகொண்டார்.

பாவத்தை வெறுத்து வியாதியைக் கடிந்துகொள்ளுங்கள். (Resist sin. Rebuke sickness.) இது பரிசுத்த ஆவியானவரின் உயிர்ப்பிக்கும் பலத்தினாலேயே சாத்தியமாகும்.

### 5. வழிநடத்தும் ஆவி — *''பாதை காட்ட''* (To guide)

வசனம் 14, ''எவர்கள் தேவனுடைய ***ஆவியினாலே*** நடத்தப்படு கிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.''

யோவான் 1:12இல் ''பிள்ளைகள்'' என்றும், ஆனால் இங்கு ''புத்திரர்'' என்றுமிருக்கிறது. பிள்ளைப் பருவத்திற்கும் புத்திரப் பருவத்திற்கும் இடையே முதிர்ச்சிக்கான வளர்ச்சி உண்டு. பிள்ளையானது தன் சிலாக்கியங்களை எண்ணி மகிழும்; ஆனால் வளர்ந்த மகனோ சிலாக்கியத்தோடு பொறுப்பையும் உணருகிறான். ஆவியானவர் வழிநடத்தும் ஆவியாக, நமது மனதோடு ஈடுபாடு கொண்டு தமது திட்டங்களை நம்மோடு பகிர்ந்துகொள்ளும்போது நாம் புத்திரராகிறோம்.

இந்த வழிநடத்துதல் வாழ்வின் பல பகுதிகளைப் பாதிக்கிறது. □ யோவான் 16:13, ''சத்திய ***ஆவியாகிய*** அவர் வரும்போது, எல்லாச் சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.'' இங்கு தேவனுடைய அறிவுக்குள்ளாக நம்மை நடத்துகிறார். □ 1 கொரிந்தியர் 6:11, ''கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ***ஆவியினாலும்*** கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.'' ஆவியானவர் இங்கு நம்மை பரிசுத்தத்திற்குள் நடத்துகிறார். □ அப்போஸ்தலர் 16:6,7, ''அவர்கள் பிரிகியா, கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ***ஆவியினாலே*** தடைபண்ணப்பட்டு, மீசியா தேசம் மட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போக முயன்றனர். ***ஆவியானவரோ*** அவர்களைப் போகவிடாதிருந்தார்.'' இங்கு ஆவியானவர் சரியான வழியில் நடத்துவது மட்டுமல்ல, நாம் தவறான திட்டங்களைத் தீட்டும்பொழுது தடுத்தும் விடுகிறார். ஆவியானவர் உங்களைச் சகல சத்தியத்திற்குள் நடத்தவும், அவரது சித்தத்திற்கு மாறாகச் செல்லும்போது தடுக்கவும் உங்கள் அனுதின ஜெபத்தில் கேளுங்கள். தேவன் நமது வழிகளைக் கவனிக்கிறார். நமது பலமின்மை அவருக்குத் தெரியும். நமது உருவத்தை அவர் அறிவார். எனவே வலது பக்கமாவது, இடது பக்கமாவது சாயும்போது திருத்தி நடத்தும் சத்தம் நமக்குப் பின்னே கேட்கும்! (ஏசா 30:21)

### 6. சாட்சியிடும் ஆவி — *''உற்சாகப்படுத்த''* (To cheer)

வசனம் 16, ''நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ***ஆவியானவர்தாமே*** நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.''



இந்தச் சாட்சி நம்மை உற்சாகப்படுத்தக் கொடுக்கப்படுகிறது. வசனங்கள் 17-25 பாடுகளை விவரிக்கின்றன. நமது ஆவியும், மனதும் சோர்ந்துவிடும் சமயம் கர்த்தருடைய ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று நம்முடைய ஆவியுடன் சாட்சியிடுகிறார். அதாவது, ''நீ தேவனுக்குச் சொந்தம்'' என்று சொல்லிக்கொண்டேயிருப்பார். மனிதனின் கீழ்ப்படியாமையினால் படைப்பு அனைத்தும் வேதனையோடு தவிக்கிறது. பாடுகளினூடே நாம் கடந்து செல்லும்போது நாம் தேவனுக்குச் சொந்தம் என்பதை ஆவியானவர் அடிக்கடி நினைப்பூட்டி நம்மை உற்சாகப்படுத்துகிறார். ''எவ்வளவோ உடைமைகள் பெற்றிருந்தும் மனிதர் ஏன் இன்னும் கவலையோடிருக்கின்றனர்'' என்று ஒரு குருவி மற்றொன்றைப் பார்த்துக் கேட்டதாம். ''நமக்கிருப்பதுபோல அவர்களுக்கு ஒரு கடவுள் இல்லை போலும்'' என்று அடுத்த குருவி பதிலுரைத்ததாம்! இப்படியிருக்கவேண்டாம். ஆவியானவரின் சாட்சியை நினைவிற்கொண்டு பாடுகளின் நடுவிலும் பரவசமாயிருப்போம். அவர் தேற்றுகிறவர் அல்லவா?

### 7. புத்திர சுவிகார ஆவி — *''மன்றாட''* (To intercede)

வசனம் 15, ''திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ***ஆவியைப்*** பெற்றீர்கள்.''

''அப்பா, பிதாவே!'' என்று கூப்பிடுவதற்காகவே பிரதானமாக நமக்குப் புத்திர சுவிகார ஆவி கொடுக்கப்பட்டுள்ளது. 'அப்பா' என்பது அவர் நமக்கு யார் என்பதையும், 'பிதா' என்பது நாம் அவருக்கு யார் என்பதையும் குறிக்கிறது. இது நெருக்கமான உறவு. ஆவியானவர் நமது பலக்குறைவுகளில் எப்படி நமக்கு உதவிசெய்கிறார் என்பதை வசனங்கள் 26,27 காண்பிக்கின்றன. ''என்னால் தனியாகச் சமாளிக்க முடியாது. அப்பா, வந்து எனக்கு உதவி செய்யுங்கள்.'' அப்பா, பிதாவே! என்பது உருக்கமான கதறல். கெத்செமனேயில் இயேசுவின் கதறலும் அதுவே. ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருப்பதே நமது பலக்குறைவு. இந்த பலக்குறைவுப் பட்டியலில் எல்லாருமே அடங்கியிருக்கிறோம். நாம் வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாதிருக்கிறபடியால், ***ஆவியானவர்தாமே*** நமக்காகப் பரிந்து பேசுகிறார். இது ஆவியில் நிறைந்து ஜெபிப்பதோ, ஆவியோடு ஜெபிப்பதோ அல்ல; ஆவியானவரே

ஜெபிப்பது! ஏன்? சொல் வடிவம் கொடுக்கமுடியாத பெருமூச்சோடு ஜெபிக்கவேண்டிய சூழ்நிலை. இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். அவர் தேவ சித்தத்தின் படியே ''பரிசுத்தவான்களுக்காக'' வேண்டுதல் செய்கிறார். (''பரிசுத்தவான்களோடு'' அல்ல). இதனால்தான் இவ்வத்தியாயத்திலுள்ள 28ஆம் வசனத்திலுள்ளவை சம்பவிக்கின்றன. ''சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது.'' ''நாம்'' ஜெபிக்கிறபடியெல்லாம் காரியம் நடந்தால் எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்காது! ''நாம்'' ஜெபிப்பது போதுமானதல்ல; ''ஆவியானவர்'' வேண்டிக்கொள்வதாலேயே சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது.

வசனங்கள் 29,30 மிக அருமையானவை. அவர் நம்மை முன்குறித்திருக்கிறார், அவர் நம்மை அழைத்திருக்கிறார், அவர் நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார், அவர் நம்மை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். ''அவர்'' செய்யும் அடுக்கடுக்கான காரியங்கள் அனைத்தும் அழகானவை, அர்த்தமுள்ளவை. நான் முதலாவது அவர் பின்னே போகவில்லை, அவரே முன்குறித்தார். நான் அவரைத் தெரிந்துகொள்ளவில்லை, அவரே என்னைத் தெரிந்துகொண்டார். என்னை நீதிமானாக்க எனக்கு முடியவில்லை, அவரே என்னை நீதிமானாக்கினார். நான் என்னை ஒருநாளும் மகிமைப்படுத்த முடியாது, அவரே என்னை மகிமைப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா முழங்குவோம்!

## முடிவுரை

வசனங்கள் 31-39 இவ்வத்தியாயத்திற்கு நல்ல முடிவுரை: ''இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம் பக்கம் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?'' முந்தின அத்தியாயத்தில்தான், ''நிர்ப்பந்தமான மனிதன் நான். யார் என்னை விடுதலையாக்குவார்?'' என்று பவுல் கதறினார் (7:24,25). ஆனால் இப்பொழுது கொடுமுடியில் நின்று கம்பீரத் தொனியோடு, ''எனக்கு விரோதமாயிருப்பவன் யார்? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவின் அன்பைவிட்டு என்னைப் பிரிப்பவன் யார்?'' என்று சவாலிடுகிறார். ஒருவரும் நம்மைத் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்க முடியாது. ஒருவரும் நம்மைப் பிரிக்க முடியாது. ஒருவரும் நம்மை ஜெயிக்க முடியாது. இவையெல்லாவற்றிலேயும் ''நாம்'' நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். ''நாம்'' என்பதே முக்கியம். ஒரு வினாடிக்கு முன்புதான்



மனந்திரும்பிய ஏழைப் பாவியும், அனுபவம் மிகுந்த பவுலும் கைகோர்த்து ''நாம்'' முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் என்று கூறலாம். இருவரும் தேவனுக்கு முன்பாகச் சமமாயிருக்கிறார்கள். ஏனெனில் ''அவரே'' முன்குறித்தார், அழைத்தார், நீதிமான்களாக்கினார், மகிமைப்படுத்தினார். நான் ஒன்றும் செய்யவில்லை. கர்த்தர் சொல்வதை ஏற்றுக்கொண்டு, அவரைப் பணிந்திடுவோம். ஒருவரும் நம்மைத் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்க முடியாது. ஒருவரும் நம்மைப் பிரிக்க முடியாது. ஒருவரும் நம்மைத் தோற்கடிக்க முடியாது. இதுவே சொந்த பெந்தெகொஸ்தே அனுபவம்!

*சுத்த ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் சுத்தன் ஆகவே;*
*பாவ அழுக்கெல்லாம் நீக்கும்;*
*உம் ஆலயமாகவே*
*என்னை நீர் சிங்காரியும்,*
*வாசம்பண்ணும் நித்தமும்!*

*சத்ய ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் சத்யன் ஆகவே;*
*தெய்வ பக்தி என்னில் முற்றும்*
*வளர்ந்தேறச் செய்யுமே;*
*நீர் என்னில் பிரவேசியும்,*
*ஆண்டுகொள்ளும் நித்தமும்!*

*நேச ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் நேசன் ஆகவே;*
*துர்ச் சுபாவம் போகப்பண்ணும்;*
*அன்பில் நான் வேரூன்றவே,*
*அன்பின் ஸ்வாலை எழுப்பும்,*
*மென்மேலும் வளர்த்திடும்!*

*தெய்வ ஆவி, என்னில் தங்கும்,*
*நானும் உம்மில் தங்கவே;*
*மோட்சப் பாதையில் நடத்தும்.*
*இயேசுவின் முகத்தையே*
*தெளிவாகக் காண்பியும்;*
*என்னை முற்றும் ரட்சியும்!*

(கிறிஸ்து சபை பாமாலை, 276) — T. T. Lynch, 1818-1871

# 7

# ஆவியானவர் சொல்லுகிறது ...

## What the Spirit says ...

எனக்கு முன்னிருந்தவரான இயேசு தமது சீடருக்கு என்னை ''வேறொரு உதவியாளர்'' என்று அறிமுகம் செய்தார் (யோ 14:16). அவர் அவர்களை விட்டு எடுக்கப்படும்போது என்ன செய்வதென்று அவர்கள் கலங்கிக்கொண்டிருந்தனர். அவர் அவர்களுக்கு ஆண்டவராக மட்டுமல்ல, நண்பராகவும் இருந்தார். எதற்கு வேண்டுமானாலும், உதவியும் ஆலோசனையும் நாடி, அவரிடமே சென்றனர். அவர்கள் கவலைப்பட்டுக் கலங்கவேண்டியதில்லை; ஏனெனில் தமக்குப் பதிலாக என்னை அனுப்பிவைப்பதாக அவர் அவர்களிடம் கூறினார். அவர் செய்த கடைசிப் பிரசங்கமே என்னைப் பற்றியது தான். அவருக்கு நெருங்கிய சீடனான யோவான் அதைத் தனது சுவிசேஷப் புத்தகத்தில் எழுதிவைக்கும்படி நான் அவரைத் தூண்டினேன் (யோவான் 14 & 16).

என் பெயரைச் சொன்னாலே அநேகருக்கு நெடுங்காலம் ஒவ்வாது. விண்ணகத்திலிருந்து நான் பெந்தெகொஸ்தே நாளன்று தான் இறங்கி வந்ததால் நான் பெந்தெகொஸ்தே சபைக்கே உரியவன் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் நாளாவட்டத்தில், அவர்கள் திருமறையை ஆராய்ந்து படித்த பின்னர், என்னை விரும்பும் எவருக்கும் விண்ணகத் தந்தை அருளும் வரமே நான் எனப் புரிந்துகொண்டனர் (லூக் 11:13; அப் 2:39).

கிறிஸ்தவர்களில் பலர் இப்பொழுது என்னைப் பெற்றுக்கொண்டிருந்தாலும் என்னோடு அனுபவித்த முதல் சந்திப்பிலேயே நின்றுவிடுகின்றனர். ''தூயாவியால் திருமுழுக்கு'' என்று திருமுழுக்கினன் யோவான் குறிப்பிட்டது என்னோடுள்ள வாழ்வின் துவக்கம்தான்.



ஒவ்வொரு நாளும் நீ என்னோடு நடைபோடவேண்டுமென நான் விரும்புகிறேன் (கலா 5:25). *''பாராக்ளீட்டஸ்'' (Parakletos)* என்பதே எனது கிரேக்கப் பெயர். அதற்குப் பொருள் ''எப்பொழுதும் பக்கபலமாய்க் கூடவே இருப்பவர்'' என்பதாகும். நான் உனக்கு எப்படியெல்லாம் பக்கபலமாய் இருக்கமுடியுமென நான் சொல்ல விரும்புவதை, என் பிள்ளையே, நீ கவனமாய்க் கேட்பாயா? செல்லமே, அது எல்லாமே உனது நலனுக்காகத்தான்!

■ விண்ணகத் தந்தைக்குத் தொழுகைமீது அலாதிப் பிரியம். நித்திய நித்தியமாய்த் தேவ தூதர்கள் விடாது அவரைத் தொழுது கொண்டிருப்பினும் அவர் திருப்தியடையவில்லை. மனிதரிடமிருந்தே அவர் ***தொழுகையைப்*** பிரதானமாய் எதிர்பார்க்கிறார். தொழுது கொள்ளுகிறவர்களை அவர் எங்கும் தேடுகிறார் (யோ 4:23). நீ அவரைத் தொழுதுகொள்வதால் அவருக்கு ஒன்றும் கூடிவிடுவதில்லை; ஆனால் அங்குதான் நெருக்கமான உறவு துவங்குவதால் அதில் அவ்வளவாய் மகிழுகிறார் (அப் 17:25).

மோசேயின் மூலம் கடவுள் தமது மக்களுக்குத் தொழுகையைக் குறித்த அநேகச் சட்டங்களைக் கொடுத்திருந்தார். ஆனால் அவையெல்லாம் அர்த்தமும் ஆவியும் இழந்து வெறும் சடங்குகளாய் மாறிவிட்டன. கடவுள் ஆவியாய் இருக்கிறார்; அவர் ஒரு திடப்பொருஎல்ல. எனவே ஆராதிப்பதும் ஆவியிலேயே இருக்கவேண்டும் (யோ 4: 20-24; அப் 17:22-25). உனது தொழுகைக்கு உயிரூட்டவே நான் அனுப்பப்பட்டேன். நீ உன்னை எனக்குத் திறந்து கொடுக்கும்போது, நான் உனது உள்ளான மனிதனை அவிழ்த்துவிடுவேன்; அப்பொழுது உன் ஆன்மா களிப்புடன் துள்ளி ஆரவாரமாய் ***ஆராதிக்கும்*** (பிலி 3:3).

நீ எந்த அளவு உன்னை வெறுமையாக்கி என்னைத் தேடுகிறாயோ அந்த அளவு நான் உன்னை நிரப்புவேன். உன் உள்ளத்தை ***மகிழப்பண்ணுவேன்;*** உன் உதடுகளை மலரப்பண்ணுவேன். திருப்பாடல்களும், புகழ்ப்பாக்களும் உன் இருதயத்திலிருந்து கிளம்பிவரச் செய்வேன். நீ பரவசமாய் இசை பாடுவாய். உன் ஆவி சிறகடித்து மேலெழும்பும் (எபே 5:18-20). இந்த அளவுக்குத் தாவீதோ தெபோ

ராளோ அனுபவித்ததில்லை. எனது இறுதிக்கால அருள்மாரியில் நனையும் உனக்கென்றே இதை வைத்துவைத்திருந்தேன்!

மொழியின் மூலமாகத்தான் தொழுகையானது பிரதானமாய் வெளிப்படுவதால் நான் குறிப்பாய் உனது ***நாவைத்*** தொடுகிறேன். நீ படியாத, உனக்குப் புரியாத, மொழிகளில் பேசும் கிருபாவரத்தை நீ விரும்பினால் உனக்குத் தருவேன் (அப் 2:4; 10:46). இந்த வரத்தின் மூலம் நீ உனது அறிவாற்றலைக் கடந்துசென்று உனது ஆவியில் கடவுளுக்குப் புகழ் சாற்றலாம். உனது உள்ளான மனிதனில் உனக்கு நான் ஆழ்ந்த அமைதியைக் கட்டளையிடுவேன்; நீ புத்துணர்வடைவாய்.

என் பிள்ளையே, ***ஜெபத்தில்*** உனக்கிருக்கும் பிரச்னைகளும் எனக்குத் தெரியும். அநேக வேளைகளில், அதிலும் குறிப்பாய்ச் சிக்கலான, குழப்பமான சூழல்களில் நீ அகப்படும்போது, எப்படி அல்லது என்ன ஜெபிக்கவேண்டுமென்றே உனக்குத் தெரிவதில்லை. கடவுள் என்னதான் நினைக்கிறாரென்பதே உனக்குப் புரிவதில்லை. கவலை வேண்டாம். அதற்காகத்தான் நான் இருக்கிறேன். ஜெபத்தில் நான் உனக்கு உதவுவதுமட்டுமல்ல; நானே உனக்காய் ஜெபிக்கவும் செய்வேன். உனது துக்கத்தை உன்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாதிருக்கும்போது நான் உனக்காய்ப் பெருமூச்சு விட்டுப் புலம்புவேன். என்னைச் சார்ந்திரு. உனது பலக்குறைவுகளில் நான் உனக்கு உதவுவேன் (ரோ 8:26,27).

■ ***பைபிள்*** உனக்கு ரொம்பப் பிடிக்குமென்று எனக்குத் தெரியும்; ஆனால் அதிலுள்ள பல பகுதிகள் உனக்குப் புரியக் கடினமாயிருக்கின்றன. என் பிள்ளையே, மனம் தளர்ந்துவிடாதே. திருவசனங்களின் அர்த்தத்தை உனக்கு விளக்கவே நான் வந்திருக்கிறேன். வேதத்தின் ஆக்கியோனே நான்தான் என்பது உனக்குத் தெரியுமா? மோசே எழுதினார், தாவீது எழுதினார், ஏசாயா எழுதினார், தானியேல் எழுதினார், லூக்கா எழுதினார், பவுல் எழுதினார், இப்படி ஏறத்தாழ 40 பேர் எழுதினர். ஆனால் அவர்களையெல்லாம் ஏவியதும் அவர்களுக்கு அருளுரைத்ததும் நான்தான். அவர்கள் எழுதிக்கொண்டிருந்தபோது மேற்பார்வையிட்டதும் நானே. எனது உத்தரவின்றி ஒரு வார்த்தைகூட



எழுதப்படவில்லை (2 பேது 1:20,21). அப்படியிருக்கும்போது, என்னைவிடச் சிறப்பாய் உனக்குத் திருவசனத்தை யாரால் விளக்கிட முடியும்? எனவேதான் இறைமகன் என்னைச் சத்திய ஆவியானவர் என்றழைத்தார். எல்லாச் சத்தியத்திற்குள்ளும் உன்னை நடத்துவதற்காக நான் என்னை அர்ப்பணித்துள்ளேன் (யோ 16:13).

இயல்பான உனது மனதைக் கொண்டு நீ கடவுளின் ஆழ்ந்த காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாது. அவரது மறைபொருள்களை நீ விளங்கிக்கொள்ளும்படி நான் உனது மனதைப் ***பிரகாசிப்பிப்பேன்***. தம்மீது பாசமாயிருப்பவர்களுக்காகக் கடவுள் ஆயத்தம் செய்திருப்பவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, மனிதனின் சிந்தனையில் அவை தோன்றியதுமில்லை. ஆனால் அவர் அவைகளை என் மூலமாகவே உனக்கு வெளிப்படுத்துகிறார். உனக்குள் இருப்பது உனது ஆவிக்கு மட்டும்தானே தெரியும்? அப்படியே, கடவுளின் காரியங்கள் கடவுளின் ஆவியாகிய எனக்கு மட்டுமே தெரியும். கடவுள் தமது திருவசனத்தில் உனக்காய் வாக்குப்பண்ணியிருக்கும் எதையும் நீ இழந்துபோக நான் விரும்பமாட்டேன். எனது உத்தம ஊழியர் அந்த ஆசிகளைத் தங்கள் அறிவாற்றலினாலேயே உனக்கு விளக்க முயலமாட்டார். மாறாக, எனது அபிஷேகத்தைக்கொண்டே அவர்கள் உன்னுடன் பேசுவர் (1 கொரி 2:9-13). எனது குரலை நீ அடையாளங்காணக் கற்றுக்கொண்டால், தவறான உபதேசத்தினால் யாரும் உன்னை ஏமாற்ற முடியாது (1 யோ 2:26,27). ***பகுத்தறியும்*** கலையில் நான் உன்னைத் தேறச் செய்வேன் (1 கொரி 2:15; எபி 5:14).

***வேதத் தியானத்தை*** ஒருபோதும் அலட்சியம் பண்ணாதே. இருள் சூழ்ந்த இவ்வுலகில் வழிகாட்டும் ஒரே நட்சத்திரம் வேதமே (2 பேது 1:19). அந்நிய குரல்களால் மோசம்போகாதே. நானும் எனது சொந்த அதிகாரத்தினால் எதையும் பேசமாட்டேன். தந்தையானவரும் குமாரனானவரும் பேசியவைகளிலிருந்தே நான் எடுப்பேன் (யோ 16:13; 15:26). எழுதப்பட்டுள்ள திருவசனத்தினால் உனது உள்ளத்தையும் மனதையும் நீ நிரப்பிக்கொள்ளாவிட்டால், இக்கட்டான சூழல்களில் நான் எதை உனக்கு நினைவுபடுத்த முடியும், யோசித்துப்பார்! (யோ 14:26).

நான் புறாவைப்போல் மென்மைக்குணம் படைத்தவன். உனக்கு உதவும்படி நீ என்னை அழைக்காவிடில், வேதத்தை ஆராய்வதில் நான் உனக்குத் துணைவனாயிருக்க முடியாது (சங் 119:18). நீ மட்டும் எனக்கு முழுச் சுதந்திரம் அளித்துவிட்டால், தேவப் பிள்ளையாகிய உன்னைப் பரிசுத்த வேதத்தில் நீ சந்திக்கும் தேவக்குமாரனைப் போலவே படிப்படியாய் உருமாற்றுவேன் (2 கொரி 3:18).

■ என் கண்ணே, வாழ்வில் நீ சந்திக்கும் ***போராட்டங்களிலும்*** நான் உனக்கு உதவ விரும்புகிறேன். நாங்கள் விண்ணகத்திலிருந்து லூசிபரைக் கீழே தள்ளியதிலிருந்து அவன் எங்களுக்கும் படைப்பு அனைத்திற்கும் விரோதமாகக் கோபத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறான். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோரே அவனது முக்கிய குறி. அவனது இருட்டரசும் எங்களது ஒளியரசும் எப்பொழுதும் ஒன்றையொன்று மோதிக்கொண்டேயிருக்கின்றன. முடிவான வெற்றி நமதே; ஆனாலும் சண்டை கடூரமாய்த்தானிருக்கும்.

உனக்கு உள்ளேயும் உனக்கு வெளியேயும் நடக்கும் யுத்தத்தில் நீ இறங்கியுள்ளாய். அது உள்ளத்தின் போராட்டமானாலும் உலகின் தாக்குதலானாலும் எனது உதவி நிச்சயம் உனக்குண்டு.

***உள்ளான போராட்டம்*** உனது உடலுக்கும் உனது மனதுக்கும் இடையில் நடக்கிறது. நீ விரும்புவதை உன்னால் செய்யமுடியவில்லை; ஆனால் நீ வெறுப்பதையே செய்துகொண்டிருக்கிறாய். ''இந்தப் பரிதாப நிலையிலிருந்து என்னை விடுவிப்பது யார்?'' என்ற உன் கதறலை நான் கேட்கிறேன். பயப்படாதே, நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நான்தான் உயிர்தரும் வல்ல ஆவி. நான் உனக்குப் புதுப் பலம் அருளுவேன். உனது பாவ ஆசைகளை மேற்கொள்ளும் வலிமையை உனக்கு அளிப்பேன் (ரோ 7:22-24). என்னுடன் கரம் பிடித்து நடந்துகொண்டிரு. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் சொல்லுகிறவைகளுக்குக் கீழ்ப்படி. உனக்கு உதவவே வந்துள்ள என்னையே நீ எதிர்த்துவிட்டால் நான் உனக்கு உதவமுடியுமா? நீ தொடர்ந்து என்னை மனமடிவாக்கிக்கொண்டேயிருந்தால் நான் மவுனமாகிவிடுவேன் (1 தெச 5:19). அது உனக்கு நல்லதல்ல, செல்லமே (கலா 5:16).



நான் ஒரு ''பரிசுத்த'' ஆவி. உன்னில் அசுத்தம் எதுவும் இருப்பதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. நீதான் எனது கோயில். எனது கோயில் கறைப்படுத்தப்படுவதை நான் எப்படிச் சகிக்க முடியும்? (1 கொரி 6:19). நான் உன்னில் ***தூய்மைக்கு*** விருப்பையும் தீமைக்கு வெறுப்பையும் உண்டாக்குகிறேன். உனது மனச்சாட்சியை எப்பொழுதும் கூர்மையாகவும் தெளிவாகவும் காத்துக்கொள். துருவிப் பார்க்கும் எனது ஒளிக்கதிர்களை நான் உன்மீது வீசும்போது உன்னை மூடிக்கொள்ளாதே (வெளி 2:23). எனது குரலைக் கேட்காமல் என்னை விட்டு நீ விலகி ஓடினால், பீறிப்போடும் ஓநாய் போலவும் கர்ஜிக்கும் சிங்கம் போலவும் சுற்றியலைகிற சாத்தானுக்கு நீ எளிதில் பலியாகிவிடுவாய். நீ பிசாசை விரட்டியடிக்க வேண்டுமானால் நான் உன்னோடு பக்கபலமாய் நிற்கவேண்டும். நீ எனக்கு அடிபணிந்திருக்கும்போதுதான் நான் உனக்கு ஆதரவாய் நிற்பேன் (யாக் 4:5,7).

சத்துரு வெள்ளம்போல் திடீரென்றும் திரளாகவும் வருவான். பயந்து விடாதே. உறுதியாய் நின்றிடு. அவனுக்கு எதிராக நான் போர்க் கொடியை உயர்த்துவேன் (ஏசா 59:19ஆ). ***தீய சக்திகள்*** மற்றும் பொல்லாத ஆவிகளுக்கு எதிராக எனது பட்டயத்தை நீ பயன்படுத்தும்படி உனது கைகளுக்கும் விரல்களுக்கும் பயிற்சியளிப்பேன் (சங் 144:1; எபே 6:12,17). எனது வார்த்தையையும் கிறிஸ்துவின் இரத்தத்தையும் அவனால் எதிர்க்க முடியாது (வெளி 12:11). ஆனாலும், உடனடி வெற்றியை எதிர்பாராதே. யுத்தம் நீடிக்கலாம். அவ்வளவு எளிதில் பிசாசு சரணடைந்துவிடமாட்டான். எனது நிறைவான செல்வத்திலிருந்து எடுத்துக்கொண்டேயிரு. எனது வற்றாத ஆறுகளிலிருந்து குடித்துக்கொண்டேயிரு. அப்பொழுதுதான் நீ தளர்ந்து போகாதிருப்பாய். யுத்தங்களில் வெற்றி பலத்தினாலோ பராக்கிரமத்தினாலோ அல்ல, என்னாலேயே கிட்டும் (சக 4:6).

ஒரு போராட்டத்தில் தோற்றுவிட்டால் உடனே சோர்ந்துபோகாதே. தோல்வி என்பது எப்பொழுதுமே எனது மக்களுக்கு முடிவானதல்ல. நான் இங்கே உன்னோடு இருக்கும்வரை, தந்தையும் குமாரனும் அங்கே உனக்காக இருக்கும்வரை, விட்டுவிடாதே. தனித்து வெளியே என்னுடன் வா; நீ ஏன் தவறினாய் என்று நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். அமோக வெற்றி உனதாகும்.

■ எனது மக்கள் சோகம் நிறைந்த முகத்துடன் நடந்து திரிவது எனக்குப் பெரும் துக்கம். இம்மண்ணுலகில் உனது வாழ்வு கவலைகளின்றி இருக்காது; ஆனால் அவைகளுக்கு மேலாக நீ வாழக் கற்றுக்கொள்ளவேண்டும் (யோ 16:33ஆ). நான்தான் ***பேரின்ப நதி***. விண்ணிலுள்ள சிங்காசனத்திலிருந்து நான் புறப்பட்டுத் திருச்சபையின் வழியாய் மண்ணுலகில் பாய்ந்தோடுகிறேன். எனது தண்ணீர்களில் நீராடு. கரையோர மரங்களின் நிழலில் உட்காரு. உனது மனக்காயங்கள் ஆறும் (சங் 46:4,5; எசேக் 47:12; வெளி 22:1,2). நான்தான் வான்காற்று. எனது தென்றலை அனுபவி. உனது பாரம் பறந்து போகும். நான்தான் ஆனந்த தைலம். உனது தலைமீது அதைப் பூசிக்கொள். உனது மனதின் இறுக்கங்கள் தளர்ந்துவிடும். உனது கண்ணீரைக் களிப்பாக்கு வேன். புலம்பலைப் பாடலாக்குவேன்.

பிரச்னைகள் பெருகி, வேதனைகள் கூடும்போது, நீ தனியாக இல்லை என்பதை மட்டும் நினைத்துக்கொள். நான் ''உன்னோடு'' மட்டுமல்ல, ''உனக்குள்ளும்'' இருக்கிறேன்! (யோ 14:17ஆ). உனது வலியை நீ உணருவதற்கு அதிகமாய் நான் அதைப் புரிந்துகொள்ளுகிறேன்; ஏனெனில், உனக்குள் தங்கியிருக்கும் கடவுளாகிய எனக்கு எதுதான் தெரியாது? உன்னோடு நானும் வேதனைப்படுகிறேன் (ஏசா 63:9). எப்பொழுதும் நானே உன்னைத் தேற்றும் ஆதரவாளன். உனது பதறும் கைகளையும் நடுங்கும் கால்களையும் நான் பலப்படுத்துவேன். என்மேல் சாய்ந்துகொள், என் பிள்ளையே, என்மேல் சாய்ந்துகொள்! நொறுங்கியிருக்கும் உன் இருதயத்தை நான் சுகப்படுத்துவேன். சாம்பலுக்குப் பதிலாக சான்டல் பவுடரையும், பரிதாபத்திற்குப் பதிலாகப் பரவசத்தையும் கொட்டுவேன் (ஏசா 61:1-3).

சாப்பிடுவது, பானங்கள் பருகுவது, மற்றும் இது போன்ற உடலுக்கடுத்த இன்பங்களெல்லாம் அதிக நேரம் நீடிக்காது. என்னில் களித்திரு. அதுவே இறையரசின் வாழ்வென்பது (ரோ 14:17). இயேசுவின் மகிழ்ச்சியையும் ***சமாதானத்தையும்*** நீ அனுபவிக்கச் செய்வேன். அதைத்தான் உலகம் தரவும் முடியாது; புரிந்துகொள்ளவும் முடியாது (யோ 14:26,27).



சில சமயங்களில் நீ ***தனித்துவிடப்பட்ட*** அநாதைபோல் உணரலாம். நானும் உன்னை விட்டுவிட்டேனோ என்று நீ நினைக்கலாம். என் பிள்ளையே, எனது விருப்பம் போலவும் உனது நிலைமைக்கேற்பவும் நான் விண்ணுக்கும் மண்ணுக்கும் போக்குவரத்தாய் இருக்கிறேன் என்று நினைக்காதே. இல்லை, இல்லவே இல்லை! நீ உணருகிறாயோ இல்லையோ, நான் எப்பொழுதும் உன்னோடேயே இருக்கிறேன் (யோ 14:16ஆ). நீ என்னைத் துக்கப்படுத்தும் ஒவ்வொரு வேளையிலும் நான் உன் இருதயத்தைவிட்டு வெளியேறவேண்டுமானால், இவ்வுலகிலுள்ள ஒரு பரிசுத்தவானின் இருதயத்தில்கூட நான் தங்கியிருக்க முடியாது (சங் 51:11).

■ கிறிஸ்துவின் பெயர்ப் புகழைப் பரப்புவதில் உனக்கிருக்கும் தயக்கங்களிலிருந்து உன்னை வெளிக்கொண்டுவர விரும்புகிறேன். மக்கள் உன்னைக் கேலி செய்வார்களென்று நீ பயப்படுகிறாய். ***நற்செய்தியைப்*** பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று நீ வாயைத் திறக்க நினைக்கும்போதெல்லாம் உன் தொண்டை அடைத்துக்கொள்ளுகிறது. பகடியைப்பற்றிய பயம் உன்னை ஊமையாக்கிவிடுகிறது. என் பிள்ளையே, இந்நிலை குறித்துச் சோர்ந்துபோகாதே. மூன்றாண்டுகளுக்குமேல் இயேசுவோடேயே அவரது சீடர்கள் இருந்தும் அவர்களுக்கும் இதே பிரச்னைதான். பேதுருவைப் போன்றதொரு முக்கிய சீடன் கிறிஸ்துவைத் தனக்குத் தெரியவே தெரியாதென்று சொல்ல முடிந்ததை உன்னால் கற்பனை செய்தும் பார்க்க முடிகிறதா? சீடர்களது வலுவின்மை அவர்களது விருப்பத்தை மேற்கொண்டது. எனது வருகையால்தான் அப்பிரச்னை தீர்ந்தது. எனவேதான் எனது வல்லமையால் நிரப்பப்படும்வரை அவர்களை வெளியே புறப்பட்டுச் செல்ல இயேசு அனுமதிக்கவில்லை (அப் 1:4). நான் அவர்கள்மீது இறங்கிய போதோ, கோழைகள் வீரர்களானார்கள்!

என்னால் நிரப்பப்படு. உனது கோழைத்தனத்தை எண்ணித் தைரியமிழக்காதே; அதே வேளையில் உனது பேச்சுத்திறனை நம்பிப் பெருமையுமடிக்காதே. என்னையே சார்ந்திரு. சிலுவையின் செய்தியைப் பறைசாற்ற எல்லாச் சூழல்களிலும் நான் உனக்குத் ***தைரியம்***

தருவேன் (அப் 4:31). உனது கல்வித் தகுதி காரியமல்ல. எனது வல்லமையினாலேயே நீ கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரும்போது மக்கள் இரட்சிக்கப்படுவதைக் காண்பாய் (அப் 1:8).

எனது ***வரங்களினாலும்*** உன்னை நிரப்புவேன் (1 கொரி 12: 7-10). நீ ஆவிகளை அடையாளங்காணலாம். நீ பிசாசுகளைத் துரத்தலாம். நீ மக்களைப் பாவத்திலிருந்தும் வியாதியிலிருந்தும் விடுவிக்கலாம். நீ அற்புத அடையாளங்கள் மூலம் எனது வல்லமையை வெளிப்படுத்திக் காட்டலாம். நீ தீர்க்கதரிசன வார்த்தைகள் மூலம் தீயவற்றைக் கண்டிக்கலாம். நீ நம்பிக்கையேயற்ற சூழல்களில் விசுவாச வார்த்தைகளைப் பேசலாம். நீ எதிரியின் கையாட்களைப் பல மிழக்கச் செய்யலாம். நீ அரசிலுள்ள உயர் அதிகாரிகளுக்குப் பின்னர் செயல்படும் தீய சக்திகளைக் கட்டுப்படுத்தலாம். நீ மதுவுக்கும் மாதுவுக்கும் மயங்கிப் போகும் வாலிபரைத் திசைதிருப்பலாம். இது போன்று எத்தனையோ காரியங்களை எனது வல்லமையால் நீ செய்யமுடியும்!

சுவிசேஷத்தை நீ அறிவித்துக்கொண்டு முன்செல்கையில் சாத்தான் முழுக்க முழுக்க உன்னை எதிர்ப்பான். ஆத்துமாக்கள் மீதுள்ள அவனது பிடிப்பை அவ்வளவு எளிதில் அவன் விட்டுவிடமாட்டான். நீ எனது வல்லமையினால்தான் செயல்படுகிறாய் என்பதால் அவன் சும்மா இருந்துவிடுவான் என்று எண்ணாதே. உனக்கு விரோதமாய்ச் செயல்பட அவன் மக்களை எழுப்பிவிடுவான். உன்னை உதைக்க அல்லது எரிக்க அவர்களை ஏவிவிடுவான். உன்னை நோக்கி எறியப்படும் ஒரு கல்லும் உன்மீது விழாது என்று நான் வாக்குப்பண்ண மாட்டேன்; ஆனால் நீ இரத்தவெள்ளத்தில் சாக நேர்ந்தாலும் உனது முகத்தைத் ***தேவதூதனைப்போல்*** பிரகாசிக்கச் செய்வேன். உன்னைத் துன்புறுத்துவோர்மீது உனக்குக் கசப்பெண்ணம் வராமல் நீ அவர்களிடம் கனிவாகவே இருந்துகொள்ள உனக்கு அருள்தருவேன் (அப் 6:15; 7:60). நீ எனது மகிழ்ச்சியில் திளைத்திருப்பாய் (அப் 13:50-52). நான் மாட்சிமையின் ஆவியானவராய் உன்மீது அமர்ந்திருப்பேன் (1 பேது 4:14). உற்சாகம்கொள்!



உனது வார்த்தைகளை நான் அபிஷேகிப்பது போலவே, உனது வாழ்க்கையையும் எனது ***பழங்களால்*** அலங்கரிப்பேன். நான் உன்னில் தீவிரமாய்ச் செயல்பட நீ இடங்கொடுத்தால் நான் உனது குணத்தையே மாற்றிவிடுவேன். நான் உன்னை அன்புள்ள கிறிஸ்தவனாகவும், மகிழ்ச்சியான நண்பனாகவும், சமாதானமான குடிமகனாகவும், பொறுமையாகப் பாடுபடுகிறவனாகவும், தயவுள்ள அதிகாரியாகவும், நற்குண அயலானாகவும், நம்பகமான கணவனாகவும், சாந்தமுள்ள மனைவியாகவும், தன்னடக்கமுள்ள ஊழியனாகவும் மாற்றுவேன் (கலா 5:22,23). நல்லதொரு வாழ்க்கைக்கு யாரும் எதிர்பேச முடியாது.

■ என் பிள்ளையே, உனது ***உலக அலுவலிலும்*** நான் உனக்கு உதவ விரும்புகிறேன். உனது வேலையில் நீ திறமையாய்த் திகழ வேண்டுமென்பது எனது பேரவா. நீ எனது வலிமையில் சார்ந்து எனது ஞானத்தைத் தேடினால் உன்னை நான் வைத்திருக்கும் வேலைத்தலத்தில் நீ சிறந்து விளங்குவாய். நீ ஒரு மருத்துவரானால், எனது உதவியுடன் நோயாளிகளைப் பிற மருத்துவரைவிட நேர்த்தியாய்க் கவனிப்பாய்; ஒரு பொறியியலரானால் நேர்த்தியாய்க் கட்டுவாய்; ஆசிரியரானால் நேர்த்தியாய்க் கற்பிப்பாய்; ஓவியரானால் நேர்த்தியாய் வரைவாய்; விவசாயியானால் நேர்த்தியாய்ப் பயிரிடுவாய்; இல்லக்கிழத்தியானால் நேர்த்தியாய்ச் சமைப்பாய்; மாணவனானால் நேர்த்தியாய்ப் படிப்பாய்!

நான் யோசேப்பை எனது ஞானத்தினால் நிரப்பினேன்; அவர் கொடிய பஞ்ச காலத்தில் எகிப்தைக் காப்பாற்றினார். பெசலயேலை அறிவு நுட்பத்தினால் நிரப்பினேன்; அவர் தேவாலயச் சிற்ப வேலைகளை அபாரமாய்ச் செய்தார். தானியேலை அறிவினால் நிரப்பினேன்; அவர் எனது வெளிப்பாடுகளை அரசர்களுக்கு விளக்கினார். நானே ஞானத்தின் ஆவி, மெய்யுணர்வின் ஆவி, ஆலோசனையின் ஆவி, வல்லமையின் ஆவி, அறிவின் ஆவி (ஏசா 11:2). நான் உனக்கு உதவ முடியாத வேலையோ துறையோ கிடையாது (யாத் 31:1-5; 1 நாளா 28:11,12). ஆனால் நான் ஏற்கனவே சொன்னதை மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன்: நீ எனது உதவியைக் கேட்க வேண்டும், வாங்கிக் கொள்ளவேண்டும், அதற்காய் நன்றிசொல்ல வேண்டும்.

நீ வேலைக்குப் போகுமுன்னால் தினமும் காலையில் எனக்கு முன் காத்திருக்கும்போது நான் உன்னைப் புதிதாய் எனது அருளால் நிரப்புவேன். ***பணித்தலத்தில்*** எனது திருப்பிரசன்னம் உன்னோடு இருக்கும்.

உலகெங்குமுள்ள அலுவலகங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் வணிக மையங்களில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. தவறான வழிகளுக்கு மறுப்பு தெரிவித்துவிடு. எதிர்நீச்சல் போடத் துணிந்திடு. நான் உன்னை ஆதரிப்பேன். உன்னைக்கொண்டு பதரை எரித்துவிடுவேன். நான் உன்னை எனது ஞானத்தால் நிரப்பியிருப்பதால் உன் அதிகாரிகளும் உடன் பணியாளரும் உன்னிடம் ஆலோசனை கேட்டு வருவர் (ஆதி 41:37-40). நீ அநியாயமாய் நடத்தப்பட்டால் என்னிடம் திரும்பு. ***பொறுமை*** எனும் பொற்பழத்தை நான் உனக்குத் தருவேன். வேலையுயர்வு தருவது நானே.

■ நீ நல்ல ***சுகத்துடன்*** இருக்கவே நான் விரும்புகிறேன். உனது உடல் ஒருநாள் சாகத்தான் போகிறது; ஆனாலும் அதற்கு உயிரூட்டிக் கொண்டிருப்பது நானே (ரோ 8:11). உனது உடலே எனது ஆலயம். அது செவ்வனே இருப்பதையே நான் ஆசிக்கிறேன். அதற்குள் எனது ஆரோக்கியம் நதிபோல் ஓடிச்செல்ல விரும்புகிறேன். சிலுவையின் ஆசிகளை உனதாக்கிக்கொள். அவைகளை நான் உனக்குப் பலிக்கச் செய்வேன்.

நான் திருச்சபைக்குச் சுகமளிக்கும் வரங்களைக் கொடுத்துள்ளேன். ஒருவருக்காக ஒருவர் நம்பிக்கையுடன் பிரார்த்தியுங்கள். அப்பொழுது அருள்வரங்கள் செயல்படுவதைக் காண்பீர்கள். உனது மனதும் எப்பொழுதும் ஆரோக்கியமாயிருக்க விரும்புகிறேன்.

என் செல்லப் பிள்ளையே, நீ இயேசுவை மணக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறாய். விண்ணகத்திலுள்ள அவரது பாசக் கரங்களில் உன்னைக் கொண்டுபோய்ப் பத்திரமாய்ச் சேர்க்கும்வரை நான் உன்னோடேயே இருப்பேன். ஆவியாகிய நானும் மணமகளாகிய நீயும் சேர்ந்து ''ஆமென்'' சொல்லுவோம்!



# 8

# கிறிஸ்துமஸும் பெந்தெகொஸ்தேயும்

## Christmas & Pentecost

''இன்று பரிசுத்த ஆவியானவர் சபையிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவாரானால், நாம் செய்துகொண்டிருப்பவைகளில் 95 சதவீதம் எத்தடையுமின்றித் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்; யாருக்கும் ஒரு வித்தியாசமும் தெரியாது'' என்றார் தீர்க்கன் A.W. டோசர் (1897-1963)!

தனது முதல் அங்கத்தினர்கள் ஆவியின் அபிஷேகம் பெற்ற நாளில்தான் சபை பிறந்தது. ஆவியில் துவங்கியதை மாம்சத்தில் முடிப்பது எத்தனை மடமை (கலா 3:3)! இதுவரையில்லாத அளவு உலகெங்கும் ஆவியானவர் ஊற்றப்பட்டுக்கொண்டிருந்தாலும், இன்னும் ஆயிரமாயிரமான கிறிஸ்தவர்கள் ஆவியானவரது வரங்கள், ஊழியங்கள், வல்லமையைத் தங்கள் தனி, குடும்ப, சபை வாழ்வில் சற்றும் அனுபவிக்காத நிலையில்தான் இருக்கின்றனர். பிதாவானவரும் குமாரனானவரும் பரலோகத்திலும், ஆவியானவர் மட்டுமே முழு ஆள்தத்துவத்தின்படி பூலோகத்திலும் இருக்கும் இக்காலத்தில், இங்கு தங்கியிருக்கும் நித்திய ஆவியானவருக்கு உரிய இடம் தராதிருப்பது தேவத்துவத்தை அவமதிப்பதாகும்.

கிறிஸ்துமஸ் சம்பவத்தைச் சற்று உற்று நோக்கின், கிறிஸ்துவின் பிறப்பில் ஆவியானவர் எவ்வளவாகச் செயல்பட்டார் என்பது தெளிவாகும். ஆவியானவர் குறைந்தது ஏழு விதங்களில் வெளிப்பட்டதை இச்சரித்திரத்தில் காண்கிறோம். பெந்தெகொஸ்தே யுகத்திலுள்ள நாம் அவைகளை எதிர்பார்த்து, அனுபவிக்கவேண்டும். ''தேற்றரவாளன் வரும்போது அவர் ***என்னைக்*** குறித்துச் சாட்சி கொடுப்பார் ... ***என்னை*** மகிமைப்படுத்துவார்'' என்றார் இயேசு (யோ 15:26; 16:14). ஆம், பெந்தெகொஸ்தேயை ஒதுக்கி வைத்துவிட்டுக் கிறிஸ்துமஸை அனுபவிப்பது சாத்தியமன்று!

## 1. சொப்பனங்கள் & தரிசனங்கள்

முடிவுகாலத்தின் அருள்மாரியில் பின்னிப் பிணைந்தவையாகச் சொப்பனங்களும் தரிசனங்களும் முன்னறிவிக்கப்பட்டுள்ளன (யோவேல் 2:28; அப் 2:16,17). இதற்கு ஆதிச் சபையில் ஏராளம் எடுத்துக்காட்டுகளுண்டு (அப் 10:3,9-11; 16:9; 18:9; 22:17,18; 23:11; 27:23,24). கிறிஸ்துமஸ் சரிதையில் அவை நிறைந்திருப்பதைக் கவனியுங்கள் —

தேவன் தமது செய்தியை மரியாளுக்குக் காபிரியேல் *தூதன்* மூலம் அனுப்பினார் (லூக் 1:26,27). அவருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்பு அவரை இரகசியமாகத் தள்ளிவிட எண்ணிக்கொண்டிருந்தபோது, ஒரு தூதன் அவருக்குச் *சொப்பனத்தில்* தோன்றி மரியாளை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படிக் கூறினான் (மத் 1:18-20). ஏரோதிடம் திரும்பச் செல்லவேண்டாமென்று ஞானிகள் *சொப்பனத்தில்* தேவனால் எச்சரிக்கப்பட்டனர் (மத் 2:12). சதி செய்துகொண்டிருந்தவர்களிடமிருந்து பாலகன் இயேசுவைக் காப்பாற்ற யோசேப்பு மும்முறை *சொப்பனங்கள்* மூலம் முன்னெச்சரிப்பும் நடத்துதலும் பெற்றார் (மத் 2:13,19,22).

தூக்கத்தில் மனதின் வழியாகச் செல்லும் காட்சிகள், எண்ணங்கள், நினைவுகள் போன்றவையே சொப்பனங்களாகும். தரிசனங்களோ விழித்திருக்கும்போது அல்லது சொப்பனம் காணுகிறது போன்ற நிலையிருக்கும்போது கிடைப்பவையாகும். தமது சிந்தையை வெளிப்படுத்த கடவுள் சொப்பனங்கள், தரிசனங்கள் ஆகிய இரண்டையும் பயன்படுத்துகிறார் (எண் 12:6). விவிலியம் முற்றுப்பெற்ற இக்காலத்தில் உபதேசங்களையும் போதனைகளையும் தேவன் சொப்பனங்கள் மூலம் கொடுப்பதில்லை. ஆனால் குறிப்பான நடத்துதல்களுக்கு அவற்றைப் பயன்படுத்துகிறார். சொப்பனங்கள், தரிசனங்களை நாம் நாடிச் செல்லவேண்டியதில்லை. ஆனால் இந்த வாய்க்காலுக்கும் நாம் திறந்திருக்கவேண்டும். சொப்பனங்கள், தரிசனங்களில் போலியும் உண்டு. எனவே எழுதப்பட்ட வெளிப்பாட்டைக் கொண்டு அவை பரிசீலிக்கப்படவேண்டும் (உபா 13:1-5).



சொப்பனங்கள் எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்துவிடக் கூடாது. பல சொப்பனங்கள் வேலைத் தொல்லையினாலேயே பிறக்கின்றன (பிர 5:3). ஆனால் ஒரு சொப்பனம் மனதில் அப்படியே நிலைத்திருக்குமானால், அதை ஜெபத்துடன் சிந்திக்கவேண்டும். தனிப்பட்ட சொப்பனங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்வது நல்லதல்ல. ஆனால் ஒரு சொப்பனம் அல்லது தரிசனம் மூலம் ஒரு குழுவுக்குத் தேவன் குறிப்பாக ஒன்றைச் சொல்லுகிறாரென்று உணர்ந்தால், பகிரங்கமாக அதைச் சொல்லுமுன் மூப்பர்கள், தலைவர்கள், முதிர்ந்த விசுவாசிகளிடம் அதைப் பகிர்ந்துகொண்டு கலந்துரையாட வேண்டும். சொப்பனங்கள், தரிசனங்களைத் தேவன் தரும்போது பெருமைக்கு இடந்தராமலும் பார்த்துக்கொள்ளவேண்டும் (2 கொரி 12:1,7).

## 2. திருவசனம் & விசுவாசம்

ஆவியானவரே திருமறையின் ஆக்கியோனாயிருப்பதால் உண்மையான அருள்மாரியைத் தொடர்ந்து திருவசனத்திற்கான அர்ப்பணிப்பும் அடிபணிதலும் அதிகமாகும் (2 பேது 1:20,21). வேதவசனங்களும், அவை மீதுள்ள தனி நபர்களின் விசுவாசமும் கிறிஸ்துமஸ் சரித்திரத்தில் திரும்பத் திரும்பக் காணப்படுகின்றன—

''உமது *வார்த்தையின்படியே* எனக்கு ஆகட்டும்'' என்று சொல்லி மனிதனால் கூடாததற்கு மரியாள் அடிபணிந்தார் (லூக் 1:34,38). கன்னிப் பிறப்பானது தீர்க்கன் ஏசாயாவின் மூலம் வந்த கர்த்தரின் *வார்த்தையின்* நிறைவேறுதலாகும் (மத் 1:22,23; ஏசா 7:14). *''விசுவாசித்தவளே* பாக்கியவதி'' என்ற வார்த்தைகளுடன் எலிசபெத்து தனது வாழ்த்துதலை முடித்தார் (லூக் 1:55). ''நம்முடைய பிதாக்களுக்கு அவர் *சொன்னபடியே''* என்று பாடி மரியாள் தன் கீதத்தை முடித்தார் (லூக் 1:54,55). கிறிஸ்து பிறக்குமிடத்தைப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மீகாவின் *புத்தகத்திலிருந்து* ஏரோதுக்குக் கண்டுபிடித்துச் சொன்னார்கள் (மத் 2:6; மீகா 5:2). மரியாளையும் இயேசுவையும் கூட்டிக்கொண்டு யோசேப்பு இரவில் தப்பிச்சென்றது *ஓசியா* தீர்க்கதரிசி சொன்னதின் நிறைவேறுதலாகும் (மத் 2:15; ஓசி 11:1). குற்றமில்லாப் பாலகர் துண்டிக்கப்பட்டது

*எரேமியாவினால்* முன்னறிவிக்கப்பட்டதாகும் (மத் 2:17,18; எரே 31:15). ''கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் *எழுதியிருக்கிறபடி*'' விருத்தசேதனம்பண்ணும்படிக் குழந்தை இயேசுவை மரியாளும் யோசேப்பும் தேவாலயத்திற்குக் கொண்டுவந்தார்கள் (லூக் 2:21-24).

கர்த்தரது சிந்தனைகளையும் செயல்களையும் புரிந்துகொள்ள ஆவியினால் நிறைந்திருந்த ஆதிச்சபை மறைநூலுக்கே திரும்பத் திரும்பத் திரும்பியது. இதோ சில எடுத்துக்காட்டுகள் —

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் ஆவியானவர் ஊற்றப்பட்டதையும் தாவீதும் யோவேலும் உரைத்தவைகளிலிருந்து பேதுரு விளக்கினார் (அப் 2:25-28, 34,35, 16-21). பயமுறுத்தப்பட்ட சபை சங்கீதப் புத்தகத்திலுள்ள சவால்களால் தனது ஜெபத்தை நிறைத்தது (அப் 4:25,26). தனது செய்தி விளக்கத்தில் முதல் இரத்தசாட்சியானவர் ஆதியாகமம், யாத்திராகமம், உபாகமம், ஆமோஸ், ஏசாயா புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டினார் (அப் 7:3,7,32-34, 37,42, 43,48-50). ஏசாயா 53ஆம் அத்தியாயத்திலுள்ள ஒரு பகுதி மூலம் எத்தியோப்பிய மந்திரியைக் கிறிஸ்துவிடம் பிலிப்பு வழிநடத்தினார் (அப் 8:32-35). ஏசாயா 49:6ஐப் புரிந்துகொண்டபோது அப்போஸ்தலர் புறவினத்தாரிடம் திரும்பினர் (அப் 13:46,47). ஆமோஸ் 9:11,12இன் விளக்கத்தின் மூலம் எருசலேம் சங்கத்தின் வாக்குவாதம் தீர்ந்தது (அப் 15:15-17).

''விசுவாசம்'' என்பது ஆவியின் வரங்களில் ஒன்றாகும் (1 கொரி 12:9). இந்த விசுவாசம் பிரதானமாக வசனத்தின் வல்லமை மீதுள்ளதாகும். விசுவாச அத்தியாயத்தின் முதல் குறிப்பே வேத வார்த்தையின் வல்லமையைப் பற்றியதே (எபி 11:3). ஆன்மீகப் போராட்டத்தில் ''எல்லாவற்றிற்கும் மேலாக'' விசுவாசக் கேடகத்தைப் பிடித்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளோம் (எபே 6:16). ''எழுதப்பட்டிருக்கிறதே'' என்று பிசாசுக்கெதிராகத் தைரியமாக முழங்கும்போதுதான் எந்தச் சோதனையிலும் நமக்கு முடிவான வெற்றி கிட்டுகிறது (மத் 4:4,7,10; வெளி 12:11). திருவசனத்தால் நிறைந்திருப்போமாக. வாயிலும் மனதிலும் திருவசனமிருந்தால் பலமாகவும் பக்குவமாகவும் காணப்படுவோம்.



## 3. அற்புதங்கள் & அடையாளங்கள்

கிறிஸ்துவின் பிறப்பு அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம். ஆண் வித்தின்றி ஒரு கன்னி கருத்தரித்தார்; விசுவாசிக்க முடியாதது! இறைவன் மானிடனானார்; சிந்திக்க முடியாதது! அவிசுவாசத்திற்காக ஓர் ஆலயக் குரு ஊமையாக்கப்பட்டார்; கேள்விப்படாதது! பிள்ளை இருந்த சரியான இடத்திற்கு ஒரு நட்சத்திரம் ஞானிகளை வழி நடத்திற்று; ஆராய முடியாதது! ஆம், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக் 1:34-37).

பெந்தெகொஸ்தேயை அடுத்துள்ள ஆண்டுகளில் திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் அற்புத அடையாளங்கள் நிறைந்திருந்தன. ஆனால் அடுத்து வந்த தலைமுறைகள் மனிதத் திறமையிலும், பண பலத்திலும் சார்ந்துகொள்ளத் துவங்கியபோது ஆவியானவரின் அற்புத வெளிப்பாடுகள் குறையத் துவங்கின. எனவே, அற்புதங்களின் காலங்கள் முடிந்துவிட்டனவென்று சில இறையியல் நிபுணர்கள் முடிவுகட்டிவிட்டனர். எவ்வளவு பெரிய பொய்! அற்புதங்களின் தேவன் என்றுமே மாறிப்போகவில்லை. அவரது கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை. ஆவியின் வரங்கள் ஒன்றுகூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. ''விசுவாசிக்கிறவர்கள்'' மூலம் அற்புத வரங்களும் சுகமளிக்கும் வரங்களும் இன்றும் வெளிப்படத் தயாராயுள்ளன (1 கொரி 12:9,10; மாற் 16:17,18).

இன்றுள்ள அறிவியல் வளர்ச்சிக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தேவன் தமது குமாரனது உயிர்த்தெழுதலை நிரூபிக்க அத்தனை அசாதாரண அற்புதங்களைச் செய்தார் (அப் 3:15,16). அப்படியானால் இன்று எவ்வளவு செய்வாரென்று சிந்தித்துப் பாருங்கள்! ''அடையாளங்கள், அற்புதங்கள், பலவித பலத்த செய்கைகள்'' மூலம் நமது பிரசங்கத்தை உறுதிப்படுத்த தேவன் ஆவலாயிருக்கிறார். ஆனால், நாம் அவைகளுக்காய் ஜெபித்து நமது விசுவாசத்தைப் பயிற்சிக்கவேண்டும் (எபி 2:4; அப் 4:30). ''எதையும் விளக்கக்கூடுமானால் அது அற்புதமல்லவே'' என்றார் ஒருவர். எனவே தேவனது அற்புதச் செயல்பாட்டைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ள நமது மூளையறிவைப் பயிற்றுவிக்கவேண்டும் (பிர 11:5; 1 கொரி 2:9,14). (இக்குறிப்பை 10ஆம் அத்தியாயம் இன்னும் விரிவாய் விளக்குகிறது.)

## 4. தீர்க்கதரிசனங்கள் & வெளிப்பாடுகள்

கிறிஸ்துவின் பிறப்பின்போது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் பல குறிப்பிடப்பட்டதுமன்றி, தீர்க்கதரிசன ஆவியும் பெருமளவில் துடிப்பாக வெளிப்பட்டது —

எலிசபெத்தை மரியாள் வாழ்த்தியபோது, எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிறைந்து ''உரத்த சத்தமாய்'' மரியாள் மீதும் இயேசுவின் மீதும் ஆசீர்வாத வார்த்தைகளைத் *தீர்க்கதரிசனமாய்* உரைத்தார் (லூக் 1:40-45). அதையடுத்து மரியாள் *தீர்க்கதரிசனமாய்ப்* பாடத் துவங்கினார் (லூக் 1:46-55). அப்பாடலின் கருத்தாழந்தான் என்னே! அவரது வாய் திறக்கப்பட்டபோது சகரியா பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு யோவான் மற்றும் மேசியாவின் ஊழியத்தைக் குறித்துத் *தீர்க்கதரிசனமாக* மகிமையான வார்த்தைகளைப் பேசினார் (லூக் 1:64, 67-79). அது ஒரு தரிசனப் பாடலாகும்.

குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்திய சிமியோன், ''அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்'' என்று *தீர்க்கதரிசனம்* உரைத்தார். குழந்தையானது தொட்டிலில் இருக்கும்போதே தொழுமரத்தைக் குறித்துப் பேசிவிட்டார்! (லூக் 2:28-35). ஆவியின் நடத்துதலும் வெளிப்பாடுகளும் இப்படித்தான்! (லூக் 2:25-27). மட்டுமல்ல, அந்த 84 வயது விதவையாகிய அன்னாள் மீட்பரைக் குறித்துத் *தீர்க்கதரிசன* வார்த்தைகளைப் பொழிந்தார் (லூக் 2:36-38). உண்மையாகவே இயேசுவைப்பற்றிய சாட்சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது! (வெளி 19:10).

*Prophetes* என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் முன் *(pro)* சொல்லுதல் *(phemi)* என்பதாகும். எனவே தேவனது செய்தியை, சில சமயங்களில் பின்வரும் சம்பவங்களைக் குறிப்பிட்டு, மனிதருக்கு முன் திடமாகச் சொல்லுகிறவன் என்பதே தீர்க்கதரிசி என்பதற்குப் பிரதான பொருளாகும். அவன் ஆவியின் அகத்தூண்டுதலால் பேசுகிறவன். அதைக் கேட்போரிடம் காணப்படும் விளைவே அதற்கு நிரூபணம்.



பரிசுத்த ஆவியின் நிறைவு அனைத்து விசுவாசிகளுக்குள்ளும் தீர்க்கதரிசனம் சொல்லும் வல்லமையை வைத்துவிடுகிறது (அப் 2:17,18). பெந்தெகொஸ்தேயன்று அபிஷேகம் பெற்ற 120 சீடரும் தேவனது மகத்துவங்களைப் பேசினார்கள் (அப் 2:4,11). சில ஆண்டுகள் கழித்து எபேசுவிலுள்ள 12 சீடர் பவுலின் மூலம் அபிஷேகம் பெற்றபோது நவநாவுகளில் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (அப் 19:1,2,6,7). எல்லா விசுவாசிகளையும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அப்போஸ்தலன் ஊக்குவித்தார் (1 கொரி 14:5). தீர்க்கதரிசனம் சொல்லுதலை வேத வசனத்திற்கு மேலாக உயர்த்தாமல், வேத ஒழுங்குமுறைகளுக்குள் நிறுத்தினால், இவ்வரமானது ''பக்தி விருத்தி, புத்தி, ஆறுதல்'' மூலமாகச் சபையைப் பலமாகக் கட்டியெழுப்பும் (1 கொரி 14:3,4).

எல்லா விசுவாசிகளாலும் தீர்க்கதரிசனம் சொல்ல முடியுமென்றாலும், பரமேறிய கர்த்தர் தமது சபைக்குச் ''சிலரை'' தீர்க்கதரிசிகளாகத் தந்துள்ளார் (எபே 4:13). தீர்க்கதரிசிகளாகவும் தீர்க்கதரிசினிகளாகவும் அழைக்கப்பட்டுள்ள இவர்கள் ஓர் உயர் மட்டத்திலிருந்து மந்தைக்குத் திசை காட்டுவர். (இக்குறிப்பை 25ஆம் அத்தியாயம் இன்னும் விரிவாய் விளக்குகிறது.)

## 5. பரவசம் & உற்சாகம்

தேவனது சொல்லி முடியாத ஈவினால் சொல்லி முடியாத சந்தோஷம்! *''வாழ்க''* என்ற வாழ்த்துடன் நாசரேத்திலுள்ள மரியாளின் எளிய இல்லத்திற்குள் காபிரியேல் நுழைந்தார் (லூக் 1:26-28). அவர் மெய்சிலிர்க்கும் ஆனந்தமடைந்தார். அவர் எலிசபெத்தை வாழ்த்தியபோது, எலிசபெத்தின் வயிற்றிலிருந்து பிள்ளை ''களிப்பாய்த் துள்ளிற்று!'' ஆண்டவரின் தாயார் அவரிடம் வந்ததினால் அவருக்குண்டான ஆனந்தம் கொஞ்சமல்ல. உற்சாகத்தினால் ''உரத்த சத்தமாய்'' அவர் கன்னியம்மையாரை வாழ்த்தினார் (லூக் 1:40-45). ஞானிகள் நட்சத்திரத்தைக் கண்டபோது ''மிகுந்த *ஆனந்த* சந்தோஷமடைந்தார்கள்'' (மத் 2:10). அப்படியே முன்னணைக்கு விரைந்தோடிய மேய்ப்பரின் மகிழ்ச்சிப் பெருக்கை யாரால் வர்ணிக்க முடியும்? (லூக் 2:15,16).

மகிழ்ச்சியுண்டாக்குவதில் ஆவியானவருக்கு நிகரில்லை. அவர் மேலறையிலுள்ள 120 பேரைப் பரவசப்படுத்தியபோது, வெளியிலுள்ளோருக்கு அவர்கள் குடித்து வெறித்தவர்போல் காணப்பட்டனர் (அப் 2:13). விசுவாசிகளிடமிருந்த ஆவியானவரின் சந்தோஷம் ஆயிரங்களைச் சபைக்குள் இழுத்தது (அப் 2:46,47). அவர்களது ஊழியக் கனிகள் அமைதியாய்க் கிடந்த ஆலயத்திற்குள் பெந்தெகொஸ்தே வெளிப்பாடுகளாகிய குதியையும் துதியையும் கொண்டுவந்தன (அப் 3:8). சீடர்கள் அடித்துத் துரத்தப்பட்டபோதும் ஆவியானவரின் மகிழ்ச்சி வெள்ளத்தால் துதியெழுப்பினர் (அப் 5:40,41; 13:50-52).

கிறிஸ்தவமே, நீ எப்பொழுது, எங்கே, ஏன் இந்த மகிழ்ச்சிப் பரவசத்தை இழந்தாய்? ஆனந்த சத்தத்தைத் திரும்பக் கொண்டுவரும் குழுக்களுக்காகத் தேவனைத் துதிப்போம். ''கம்பீர சத்தத்தை அறியும் மக்கள் பாக்கியமுள்ளவர்கள் ... அவர்கள் உமது நாமத்தில் நாடோறும் களிகூருவார்கள்'' (சங் 89:15,16). சந்தோஷமில்லாத சபைகள் சத்துவமில்லாத சபைகளாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதுதானே நமது பலம்? (நெகே 8:10). ஆனந்தமும் ஆரவாரமும் சபையில் அற்றுப்போகுமானால், ஊழியரும் மக்களும் ஆண்டவரை நோக்கி இன்னொரு பெந்தெகொஸ்தேயை அருளுமென அழுகுரலெழுப்ப வேண்டும் (யோவேல் 1:13,16; 2:28,29; சங் 85:6; எரே 33:11).

பரிசுத்தவான்களின் கூடுகையிலெல்லாம் குதூகலம் காணப்பட வேண்டும் (சங் 122:1). குறிப்பாக, மரணத்தின்மீது அவர் எடுத்த வெற்றியை கர்த்தருடைய நாளில் நாம் கொண்டாடுகிறோம் (சங் 118:24). அப்படியானால் நமது ஆராதனைகள் பல அடக்க ஆராதனை போலிருப்பதேன்? ஏனென்று மறுபடியும் கேட்கிறேன். பீடத்திற்கும் ஆசனங்களுக்கும் பரவசத்தையும் உற்சாகத்தையும் சபையானது திரும்பக் கொண்டுவராவிட்டால், நமது வாலிபர் தெருவீதிகளின் ஆபாசங்கள் நோக்கி விரைவர் என்பது நிச்சயம்.

## 6. தொழுகை & காணிக்கை

மரியாளின் கீதம் தொழுகையால் நிறைந்து பொங்கியது. அவர் ஆண்டவரை இரட்சகர், வல்லவர், பரிசுத்தர், இரக்கமுள்ளவர், ஆதரிக்கிறவர், உடன்படிக்கையைக் காக்கிறவர் என்று பல கோணங்களில்



*துதித்தார்* (லூக் 1:46-55). மேய்ப்பருக்குத் தூதன் நற்செய்தியை அறிவித்ததையடுத்துத் திரளான பரம சேனையினர் அவனுடன் சேர்ந்து தொனிப்பாய்த் *துதித்தார்கள்.* எவ்வளவு சத்தமாயிருந்திருக்கும்! (லூக் 2:13,14). பாலகனை மேய்ப்பர் கண்டதும் *துதியின்* ஆவியினால் நிறைந்தனர் (லூக் 2:20). சிமியோன் தேவனுடைய ஒரே பேறான குமாரனைக் கையிலேந்தித் தேவனை *''ஸ்தோத்திரித்தார்''* (லூக் 2:28). தேவனது சந்திப்புக்காக அன்னாள் கர்த்தரைப் *''புகழ்ந்தார்''* (லூக் 2:38). குழந்தையாகிய அரசனைப் *''பணிந்து கொள்ள''* வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக ஞானிகள் கிழக்கிலிருந்து அவ்வளவு தூரம் வந்தார்கள்! அவர்கள் ''நெடுஞ்சாடையாய் விழுந்து'' பொன்னான காணிக்கைகளை அவருக்குப் படைத்தார்கள் (மத் 2:2,11).

''தேவன் தமது குமாரனைக் கீழுலகுக்கு அனுப்பினார்''— இதுவே கிறிஸ்துமஸ் செய்தி. ''தேவன் தமது குமாரனை மேலுலகில் அமர்த்தினார்'' — இதுவே பெந்தெகொஸ்தே செய்தி. முதல் சம்பவம் எங்கும் அவ்வளவு துதியைக் கிளறிவிட்டதென்றால், அடுத்த சம்பவம் எவ்வளவு துதியைக் கிளப்பிவிடவேண்டும்? இயேசுவைக் கர்த்தரென்று மகிமைப்படுத்துவதே ஆவியானவரின் பிரதான ஊழியமாம் (1 கொரி 12:3). ''தேவனது மகத்துவங்களைத்தான்'' சீடர்களை நவநாவுகள் மூலம் ஆவியானவர் தொனிக்கச் செய்தார் (அப் 2:4,11). அது தூயாராதனை (அப் 10:46). சாலையிலோ, சபையிலோ, சங்கிலியிலோ, எங்கிருந்தாலும் சீடர்களிடமிருந்து துதி வழிந்தோடியது.

ஆவியின் நிறைவையும் வரங்களையும் வலியுறுத்தும் ஊழியங்கள் மிகவும் சிறப்பாக ஆவியில் ஆராதிப்பதையும் துதிபாடுவதையும் சபைக்குத் திரும்பக் கொண்டுவருகின்றன. தாவீதின் விழுந்துபோன கூடாரம் திரும்பவும் எழுப்பப்படுகிறது (அப் 15:16). கிறிஸ்தவம் இழந்த முத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

இப்படிச் சொல்வதால், பழைய முறைகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டுப் புதியவற்றையே பிடித்துக்கொள்ளவேண்டும் என்று பொருளல்ல. டெரி வார்டேல் என்பவர் சொல்லுகிறபடி, ''மனதிற்கும் ஆவிக்கும் சமநிலை; ஒழுங்கிற்கும் சுயாதீனத்திற்கும் சம

நிலை; எழுதி ஆராதிப்பதற்கும் எழுச்சியுடன் ஆனந்திப்பதற்கும் சம நிலை; பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் சமநிலை; பணிவுக்கும் பரவசத்திற்கும் சமநிலை'' ஆகியவை காணப்படவேண்டும்.

மட்டுமல்ல, கொடுக்கத் தூண்டுவதில் ஆவியானவர் வல்லமை யானவர். சீடர்கள் ஆவியால் நிறைந்ததும் தேவையிலிருப்போரோடு பகிர்ந்துகொள்ள எவ்வளவு தன்னார்வமாக முன்வந்தார்கள் (அப் 2:44,45; 4:34,35)! ஆவியானவர் நமக்குப் பரத்தின் மகிமையைக் காட்டி, இகத்தின் பொருட்கள் மீதுள்ள நமது பிடிப்பைத் தளர்த்திவிடு கிறார்.

### 7. நற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி

பெத்லகேமின் செய்தி ''எல்லா மக்களுக்கும்'' நற்செய்தி என் றான் தூதன். மேய்ப்பர்கள் அதை எங்கும் ''பிரகடனம் பண்ணினார் கள்'' (லூக் 2:10,17). ''புறவினத்தாருக்கு'' ஒளி என்றும், ''சகல மக்களுக்கும்'' இரட்சிப்பு என்றும் சிமியோன் இயேசுவைப்பற்றிச் சாட்சியிட்டார் (வச 30-32). எருசலேமில் காத்திருந்த ''யாவருக் கும்'' அன்னாள் அவரைக் குறித்துப் பேசினார் (வச 38).

எக்காலத்திலும் நிகரற்ற செய்தியாம் சுவிசேஷத்தை அறிவிக்க நமக்கு வல்லமையும் தைரியமும் அருளுவதே பெந்தெகொஸ்தே யின் நோக்கம் (அப் 1:8; 4:31). வெட்கத்தை உதறித்தள்ளுங்கள். பயத்தை உதைத்துத்தள்ளுங்கள். உறக்கம் தெளியுங்கள். உற்சாகம் கொள்ளுங்கள்.

85 வயதான இந்தியக் கிராமவாசி ஒருவரிடம் ''இயேசுவைத் தெரியுமா'' என்று சில மிஷனரிகள் கேட்டபோது, ''அவர் இங் கில்லை, அடுத்த கிராமத்தில் விசாரித்துப் பாருங்கள்'' என்று பணி வாகப் பதிலுரைத்தார். எண்ணிலடங்காதோர் கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்தே கேள்விப்படாதிருக்கையில், நாமோ இரண் டாம் வருகையின் விபரங்களைக் குறித்துச் சண்டையிட்டுக்கொண்டி ருக்கிறோம். நற்செய்தியைவிட நல்ல செய்தி வேறில்லை. பேரா ணையைவிடப் பெரிய ஆணை வேறில்லை. கிறிஸ்து வந்தார், திரும்ப வருகிறார் என்று எங்கும் போய்ச் சொல்லுங்கள். யாவருக்கும் ''மிகுந்த சந்தோஷம்'' உண்டாக்குவீர்கள்!



# 9

# அன்னிய பாஷை இன்றும் அவசியமா?

## Tongues Today?

அன்னிய பாஷை வரத்தைக் குறித்த கேள்விகள் பெந்தெ கொஸ்தேயினரல்லாதவர்களுக்குள் மட்டுமல்ல, அன்னிய பாஷை பேசுகிறவர்களுக்குள்ளும் நிறைந்திருக்கின்றன. சுவாரஸ்யமாக இவ்வரத்தைக் குறித்த பல ***கேள்விகள்*** திருமறையில்தானே காணப் படுகின்றன. அவைகளை ஆராய்ந்தால் பெருமளவில் விவாதிக்கப் படும் இக்காரியத்தைக் குறித்து நமக்குக் கூடுதல் தெளிவுண்டாகும். குழந்தை போன்ற எளிமையும் கற்றுக்கொள்ள வாஞ்சையும் நிறைந்த விருப்பு வெறுப்பற்ற மனநிலையானது திருமறையின் எவ்வுபதேசத் தையும் சீராகப் புரிந்துகொள்ள அத்தியாவசியம்.

?

*''இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?*
*அப்படியிருக்க, நம்மில் அவரவருடைய சொந்த பாஷைகளிலே*
*இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?*
*... இதென்னமாய் முடியுமோ?''*
(அப் 2:7,8,12)

கிறிஸ்துவின் கட்டளைக்கு இணங்கி துதியோடும் விண்ணப்பத் தோடும் காத்திருந்த 120 சீடர்மீது பெந்தெகொஸ்தேயன்று பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது இயற்கைக்கப்பாற்பட்ட பல்வேறு வெளிப்படையான காரியங்கள் நிகழ்ந்தன. ''பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல் வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம்!'' ''பிரிந் திருக்கும் அக்கினிமய நாவுகள்!'' ஆனால் வெளியிலிருந்தோரைப் பிரமிப்பில் ஆழ்த்தியது பற்பல பாஷை வரமே (அப் 2:1-12).

அறியாத மொழிகளில் தெய்வீக வல்லமையால் பேசும் கிருபா வரத்தைத் தேவன் தமது புது உடன்படிக்கையின் மக்களுக்காய்ப் பிரத்தியேகமாக வைத்து வைத்திருந்தார். ''ஞானம், அறிவு, விசுவாசம், சுகமளித்தல், அற்புதங்கள், தீர்க்கதரிசனம், பகுத்தறிதல்'' போன்ற மற்ற வரங்களெல்லாம் (1 கொரி 12:7-10) ஓரளவுக்காவது பழைய ஏற்பாட்டுக் காலங்களில் செயல்பட்டுக்கொண்டிருந்தன. யுகங்களின் அடிப்படையில் சொன்னால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தமது ''மக்களுடன்'' இருந்தார்; புதிய உடன்படிக்கையிலோ அவர் தமது ''மக்களுக்குள்'' வந்துவிட்டார் (யோ 14:17). அதாவது, அவர் தமது மக்களோடுள்ள ஐக்கியத்தில் நெருங்கி வந்துகொண்டிருந்தார். உறவாடலுக்கு உரையாடல் உறுதுணை. ஆவி மண்டலத்தில் தேவனோடு உரையாடுவதற்காய் அவர் தந்துள்ள பாஷை வரத்திற்காய் அவரைத் துதிப்போம்.

பெந்தெகொஸ்தே நாளானது ஏழாம் ஓய்வு நாளுக்கு மறு நாளாகிய ஐம்பதாம் நாளாகும் (லேவி 23:15,16). கிறிஸ்தவ நாட்காட்டியில் அது உயிர்த்தெழுதலுக்கடுத்த ஐம்பதாம் நாளாகும். பெந்தெகொஸ்தேயானது வரங்களின் பண்டிகையென்றும் (உபா 16:10), அறுப்புக்காலப் பண்டிகையென்றும் (யாத் 23:16) அழைக்கப்பட்டது. பக்தியுள்ள யூதன் எவனும் ஆலயத்தில் ஆசரிக்கச் செல்லவேண்டிய மூன்று முக்கிய அறுப்புக்கால பண்டிகைகளில் வாரங்களின் பண்டிகையாகிய இது இரண்டாவதாகும் (யாத் 23:14-17; 34:18-23). ''யூதருடைய முக்கியப் பண்டிகைகளில் ஏறத்தாழ 1,80,000 பேர் ஆராதிக்க வருவார்கள்; அவர்களில் 1,20,000 முதல் 1,50,000 பேர் வரை மற்ற நாடுகளிலிருந்து வேற்று மொழியினர் புண்ணிய யாத்திரிகர்போல் வருவர்'' என்று யோயாக்கீம் எரேமியா என்ற சரித்திராசிரியர் *''இயேசுவின் காலத்து எருசலேம்''* என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அன்று நடந்த மேலறைச் சம்பவத்தைச் சுற்றி நின்று பார்த்தோர் குறைந்தது பதினான்கு மொழி வகையினர் என அப்போஸ்தலர் 2:9,10இலிருந்து அறியலாம். பெரும்பாலும் ''படிப்பறியாத, பேதமையான'' அந்தக் கலிலேயச் சீடர்கள் தங்களுக்குத் ''தெரியாத'' தெளிவான மொழிகளில் பேசியது என்னே விந்தை! (அப் 4:13; 2:7,8).



பாஷை வரமானது எந்தப் பாணியில், எந்த அளவில், வெளிப்பட்டாலும் அதில் இருக்கும் அற்புத சக்தியை அவமதிக்கவோ அலட்சியப்படுத்தவோ துணியாதிருப்போம். தமது மக்களை இவ்விதம் பல பாஷைகளில் பேச அருள்புரிவது பரிசுத்த ஆவியானவராகிய தேவனே (அப் 2:4). வரங்கள் அவைகளின் மூலகாரணராகிய தேவனிடமிருந்து புறப்படும்போது பூரணமாகவே இருக்கின்றன. ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது'' (யாக் 1:17). ஆனால் அவ்வரங்கள் பூரணமற்ற மனிதர் மூலம் வெளிப்படுவதால் செயல்படும் மட்டத்தில் எந்த வரமும் குறைவுள்ளதே. ''நமது அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது'' எனப் பவுலடியார் அறிக்கையிட்டார் (1 கொரி 13:9).

பரத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்ட பெந்தெகொஸ்தே நாள் நிகரற்றது. கிறிஸ்துமஸ் நாள் ஒன்றுதான் இருக்க முடியும். அப்படியே சிலுவையிலறையப்பட்ட நாள் ஒன்றே. உயிர்த்தெழுந்த நாள் ஒன்றே. இந்நாட்கள் மறுபடியும் வராது. அப்படியே, சரித்திரப் பாணியில் பேசினால், நமக்கு இன்னொரு பெந்தெகொஸ்தே நாள் வராது. அந்த நாள் அவ்வளவு நிகரற்றதாயிருந்ததால், அன்று பல பாஷை வரம் வெளிப்பட்ட விதமும் அது பிறரைப் பாதித்த விதமும் நிகரற்றவையே. அன்று சீடர்கள் பேசிய வேற்று மொழிகள் மேலறையைச் சுற்றிக் கூடிய ஆயிரமாயிரமான யாத்திரிகர்கள் ''ஒவ்வொருவரும்'' புரியக்கூடியவையாயிருந்தன. அதே விளைவை ஒவ்வொரு வேளையிலும் எதிர்பார்த்து, அப்படியில்லையென்றால் அது போலி என்றெண்ணுவது ஒருபுறச் சாய்வாகும். பெந்தெகொஸ்தேயன்று பேதுரு பிரசங்கித்தபோது மூவாயிரம் பேர் மனந்திரும்பி அன்றே திருமுழுக்கும் பெற்றனர். அங்கு பின்மாற்றங்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. அவர்கள் ''உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என்று லூக்கா அறிவிக்கிறார் (அப் 2:42). இந்நாட்களில் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதோடு இதை ஒப்பிட முடியுமோ? நமது கூட்டங்களில் எப்போதும் ஆயிரங்கள் திருமுழுக்கு பெறவில்லை என்பதால் நமது பிரசங்கங்களையே குறைகூறிக் கண்டனம்பண்ணிவிட முடியுமோ?

பாஷை வரத்தைத் தேவன் அருளியது மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க அல்ல. பெந்தெகொஸ்தேயன்று பல பாஷைகள் மக்களைக் கவர்ந்தன, அவ்வளவுதான். ஆனால் பேதுரு தனது சொந்த மொழியில் நிகழ்த்திய தெளிவான, கோர்வையான, பிரசங்கமே மக்களை மனந்திரும்புதலுக்கும் விசுவாசத்திற்கும் நடத்தியது (அப் 2:40,41). அப்படியே மாற்கு சுவிசேஷத்திலுள்ள கிறிஸ்துவின் பேராணையில் நவமான பாஷைகளில் மக்களுக்கு நற்செய்தியறிவியுங்கள் என்று அவர் சீடருக்குச் சொல்லவில்லை. மாறாக, நற்செய்தியை விசுவாசிப்பவர்கள் நவமான பாஷைகளைப் பேசுவார்கள் என்றே முன்னறிவித்தார் (மாற் 16:15-17).

**?**

*''எல்லாரும் அன்னிய பாஷைகளைப் பேசுகிறார்களா?*
*எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?''*
(1 கொரி 12:30)

இக்கேள்விகளின் வரிசையில் இதையே மிக முக்கியமானதெனலாம். இக்கேள்விக்கு நாம் திருப்திகரமான பதிலைக் கண்டுபிடித்துவிட்டால் பாஷை வரத்தைக் குறித்த பல குழப்பங்களைத் தீர்த்துவிடலாம்.

பவுலின் இக்கேள்விக்கு இயல்பான பதில் ''இல்லை'' என்பதே! அப்படியானால் எல்லாரும் அன்னிய பாஷை பேசவேண்டுமென்று உலகெங்குமுள்ள வைதீகப் பெந்தெகொஸ்தேயினர் வற்புறுத்துவதேன்? அப்போஸ்தலர் நடபடிகளில் தனி நபர்களோ குழுக்களோ பரிசுத்த ஆவியைப் பெற்ற நான்கைந்து சம்பவங்களிலிருந்து அவர்கள் புரிந்துகொண்ட கருத்தே அதற்குக் காரணம். ஆவியானவரால் நிரப்பப்பட்ட 120 பேரில் அத்தனை பேரும் பாஷை பேசினர் என்பது அப்போஸ்தலர் 2:4இலிருந்து தெளிவு. அனனியா மூலம் ஆவியால் நிரப்பப்பட்ட பவுல், பின்னர் கொரிந்தியருக்கு எழுதுகையில், தான் பாஷை பேசும் வரத்தைப் பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிடுகிறார் (1 கொரி 14:18). கொர்நேலியு இல்லத்தில் குழுமியிருந்த யூதரல்லாத தொழுகைக்காரர் மீது ஆவியானவர் இறங்கியபோது அவர்கள்



பற்பல பாஷைகளைப் பேசினர் (அப் 10:44-46). எபேசுவிலிருந்த திருமுழுக்கினன் யோவானின் பன்னிரு சீடர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படிப் பவுல் அவர்கள் மீது கைகளை வைத்தபோது அவர்கள் அன்னிய பாஷையில் பேசினர் (அப் 19:1-7).

இச்சம்பவங்களின் அடிப்படையில், ஆவியானவரை அவரது அபிஷேக வல்லமையோடு ஒருவர் பெற்றுக்கொள்ளும்போது அவர் அன்னிய பாஷை பேசுவாரென்று *பொதுவாக* எதிர்பார்க்கலாம். ஆனால் வெறுமனே சம்பவங்களை மட்டும் வைத்து ஓர் உபதேசத்தை உருவாக்க முடியாது. அன்னிய பாஷைதான் ஆவியின் நிறைவுக்குக் கட்டாய அடையாளம் என்று நாம் சாதிக்க முடியாது. தேவனைப் புகழுதல் (அப் 10:46), தீர்க்கதரிசனம் உரைத்தல் (19:6), தரிசனங்கள் காணுதல் (7:55; 2:17), ''இயேசுவே கர்த்தர்'' என்று தொனிப்பாய்க் கம்பீரித்தல் (1 கொரி 12:3), ''அப்பா, பிதாவே!'' என்று உரிமையாய்க் கூப்பிடுதல் (ரோ 8:15), திருவசனத்தை வல்லமையாய் எடுத்துரைத்தல் (அப் 4:31; 1:8), இவை போன்ற எத்தனையோ வெளிப்படை அடையாளங்களையும் திருமறை குறிப்பிடுகிறது. மட்டுமல்ல, சமாரியாவிலுள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது அங்கு அன்னிய பாஷை வரம் வெளிப்பட்டதாகச் சொல்லப்படவில்லை. சீமோன் அதைக் ''கண்டான்'' என்பதிலிருந்து பார்க்கக்கூடிய அடையாளமொன்று அங்கிருந்தது என்றுதான் சொல்ல முடியுமே தவிர அது கேட்கக்கூடிய அடையாளமென்று அழுத்திக் கூற முடியாது (8:17,18).

விசுவாசியொருவர் அன்னிய பாஷையில் பேசாவிட்டால் அவர் பரிசுத்த ஆவியினால் இன்னும் நிரப்பப்படவில்லையென்று நியாயந்தீர்க்க நான் விரையமாட்டேன். மாறாக, இவ்வருமையான அருள் வரத்தை அவர் கர்த்தரிடம் கேட்கும்படிக் கீழ்க்கண்ட காரணங்களினால் அவரை ஊக்குவிப்பேன். □ 1 கொரிந்தியர் 12: 7-10இல் தரப்பட்டுள்ள ஒன்பது வரங்களில் பாஷை வரம் ஒன்றுதான் பிரதானமாக தேவனை நோக்கிச் செயல்படுவதாகும். மற்ற வரங்களெல்லாம் மனிதரை நோக்கிச் செயல்படும் ஊழிய ஏதுக்களாகும். □ ஒரு விதத்தில் கவனித்தால், மற்ற வரங்களைச் செயலாற்றுவதற்கு முன்னர் பாஷையில் பேசுவதை ஓர் ஆயத்தப் பயிற்சி

யாக நான் கருதுகிறேன் (அப் 19:6; 1 கொரி 14:18,19). நம்மை நாமே பக்திவிருத்தியாக்கிக்கொள்வது பிறரைப் பக்திவிருத்திய டையச் செய்ய நம்மை ஆயத்தப்படுத்துகிறது (லூக் 22:32). இது பலருடைய சாட்சியாகும். ஏணியின் அடிப்படி போல் வரங்களின் பட்டியலின் அடியில் பாஷை வரம் குறிப்பிடப்பட்டிருப்பது இதற் கொரு காரணமாயிருக்கலாம். அது போலவே, மற்ற பண்புகளுக்கு அடிப்படையான தன்னடக்கம் அல்லது இச்சையடக்கம் என்பது கனிகளின் பட்டியலில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (கலா 5:22,23). □ வாயின் அறிக்கையானது இருதய அனுபவத்தின் பொது வான வெளிக்கொட்டுதலாகும். ''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'' (மத் 12:34ஆ,35). இரட்சிப்பிற்கான இருதய விசுவாசத் தைத் தொடர்ந்து வாயின் அறிக்கை கட்டளையிடப்பட்டிருக்கிறது (ரோ 10:9,10). ''என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது'' என்ற தாவீதின் அழகான வார்த்தைகளைப் பேதுரு சீடர்களின் பெந் தெகொஸ்தே அனுபவத்திற்கு விளக்கம் கூறும்போது மேற்கோள் காட்டினார் (அப் 2:26).

''எல்லாரும் அன்னிய பாஷைகளைப் பேசுகிறார்களா?'' என்ற அப்போஸ்தலனின் கேள்வியை அதன் சூழமைவில் கவனித்துப் படித் தால் இன்னொரு தெளிவும் கிடைக்கிறது. இப்பகுதியில் அவர் எழுப் பியுள்ள ஏழு கேள்விகளில் இது ஒன்று (1 கொரி 12:29,30) —

□ *''எல்லாரும் அப்போஸ்தலர்களா?''* இல்லை! ஆனால், அப் போஸ்தலர் என்றால் அனுப்பப்பட்ட தூதுவர் என்றுதான் பொருள். ஒரு வகையில் கிறிஸ்தவர்கள் எல்லாருமே சுவிசேஷத்தின் தூது வர்தானே!

□ *''எல்லாரும் தீர்க்கதரிசிகளா?''* இல்லை! ஆனால் தீர்க்கதரிச னம் என்பது அதன் விரிவான கருத்தில் தேவனிடமிருந்து வரும் செய்தியின் அகத்தூண்டுதலான வார்த்தை எதையும் குறிக்கும். ''இயேசுவைப்பற்றிய சாட்சியைப்'' பகிர்ந்துகொள்ளக் கிறிஸ்த வர்கள் அனைவருக்கும் ''தீர்க்கதரிசனத்தின் ஆவி'' உண்டே (வெளி 19:10). விசுவாசிகளனைவரும் தீர்க்கதரிசனம் உரைக் கக்கூடிய சாத்தியத்தையும் பவுல் சுட்டிக்காட்டியுள்ளார் (1 கொரி 14:5அ, 24அ).



□ *''எல்லாரும் போதகர்களா?''* இல்லை! ஆனால் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், மற்றவர்களுக்குச் சீடத்துவத்தின் அடிப்படை களைப் போதிக்கும் கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண் டல்லவா? (மத் 28:20; எபி 5:12).

□ *''எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?''* இல்லை! ஆனால், எந்த விசுவாசியின் ஜெபங்களைக் கேட்டு தேவன் ஒருபோதும் அற்புதங்களைச் செய்யாதிருந்திருக்கிறார்?

□ *''எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா?''* இல்லை! ஆனால், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்போது தேவன் விசு வாசிகளைக் குணமாக்குவதில்லையோ? (யாக் 5:16). சொல்லப் போனால், எலியாவின் அதே ஜெப வல்லமையை ஒவ்வொரு விசுவாசியும் எதிர்பார்க்க யாக்கோபு ஊக்குவிக்கிறார்! (வச 17).

□ அடுத்து வருகின்றன பாஷைகளைப்பற்றிய கேள்விகள்! *''எல் லாரும் அன்னிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம்பண்ணுகிறார்களா?''*

மேலேயுள்ள அதே விவாதப் பாணியைத் தொடர்ந்தால், பாஷை வரமானது தனிமையில் துதி விண்ணப்பத்திற்காக ஒரு மட்டத்திலும், பொதுவிடத்தில் ஓர் ஊழியச்சாதனமாக இன்னொரு மட்டத்திலும் செயல்படுகிறதெனப் புரிந்துகொள்ளலாம். முதல் மட்ட வெளிப் பாட்டை விசுவாசிகள் யாவரும் அனுபவிக்க விரும்பலாம்; இரண்டா வதையோ தேவன் தமது ஏகாதிபத்தியச் சித்தத்தின்படிப் பொது நன் மைக்காக ஒரு சிலருக்கு மட்டுமே பகிர்ந்து கொடுக்கிறார். இதை இன்னும் விரிவாக அடுத்த கேள்வியில் படிப்போம்.

?

*''நான் உங்களிடத்தில் வந்து இரகசியங்களை உங்களுக்கு வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அன்னிய பாஷையிலே பேசினால் என்னாலே உங்களுக்குப் பயனென்ன?''*
(1 கொரி 14:6)

பாஷை வரத்திற்கும் தீர்க்கதரிசன வரத்திற்குமுள்ள வேறுபாடுகளை விளக்கும்போது, பாஷை வரத்தின் தனிப் பிரயோகத்திற்கும் பொதுப் பிரயோகத்திற்குமுள்ள வேறுபாடுகளையும் பவுல் சுட்டிக்காட்டினார். ''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்'' என்று அவர் சாட்சியிட்டார் (1 கொரி 14:18). இதற்குப் பொருள் கொரிந்து விசுவாசிகளைவிட அவருக்குக் கூடுதல் மொழிகள் தெரிந்திருந்தன என்பதல்ல. வரங்களைப்பற்றிய இவ்வத்தியாயங்களில் இயற்கையான தாலந்துகளையோ பயிற்சி தரும் திறமைகளையோ அல்ல, திரித்துவ தேவனின் தெய்வீக வல்லமையால் வெளிப்படும் ஆவிக்குரிய ''வரங்கள், ஊழியங்கள், செயல்பாடுகளைக்'' குறித்தே பவுல் விளக்கிக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது (12:1,4-7).

ஆவிக்குரிய வரங்களை, குறிப்பாகப் பாஷைகள், தீர்க்கதரிசனங்களை, புரிந்துகொள்வதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் கொரிந்து சபையில் ஒரே குழப்பம். குழந்தைகள் கையிலுள்ள பொம்மையைப் போல் அங்குள்ள விசுவாசிகள் பாஷை வரத்தை வைத்துக்கொண்டு ஆராதனைகளில் விளையாடிக்கொண்டிருந்தனர். எனவே பவுல் அவர்களுக்கு, ''சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ (புரிந்துகொள்வதிலோ) தேறினவர்களாயுமிருங்கள்'' என்றெழுதினார் (14:20). சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் பெருமளவில் நன்மை பயக்கும்படி ஒரு சில ஒழுங்கு முறைகளை அவர்களுக்கு எழுதினார். அதே வேளையில், தனக்குப் பாஷை வரம் இல்லாததால் தான் இப்படியெல்லாம் சட்டதிட்டங்களை அவர் கொண்டுவருகிறாரென்று சபையார் எண்ணிவிடக்கூடாதென்று எண்ணியே, தான் அவர்களெல்லாரையும்விட ''அதிகமாய்ப்'' பாஷைகளைப் பேசுவதாகத் தெளிவுபடுத்திவிட்டார்!

அர்த்தம் சொல்லுதல் இல்லாமல் அன்னிய பாஷைகள் பொதுவிடங்களில் பேசப்படக்கூடாதென்று பவுல் திருத்தமாய்ச் சொல்லிவிட்டார். ''அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசட்டும்'' (14:28).



உதடுகளை அசைத்து, ஆனால் சத்தமில்லாமல், அன்னாளைப் போல ஜெபிக்க முடியுமே (1 சாமு 1:13). நடபடிகள் புத்தகத்திலுள்ள சரித்திரச் சம்பவங்களைச் சுட்டிக்காட்டி பொதுவிடங்களில் நாம் பாஷை பேசுவது தவறல்ல எனக் கூறமுடியாது, நடபடிகளில் அப்பொழுது தான் சபையானது உருவெடுத்துக்கொண்டிருந்தது. அது யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துகொண்டிருந்த இடைக்காலமாகும். சபை வாழ்விற்கும் உபதேசத்திற்கும் அடுத்த நிருபங்கள் இன்னும் எழுதப்பட்டிருக்கவில்லை. தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தான், சத்திய ஆவியானவர் அடித்தள ஊழியரான அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகச் சபையைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தினார் (யோ 16:13; எபே 2:19,20), வரங்களைப்பற்றிய 1 கொரி 12,13,14 ஆகிய அத்தியாயங்களைப் பவுல் எவ்விதம் முடிக்கிறாரென்று பாருங்கள்: ''ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசி என்றாவது, ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்; ஒருவன் அறியாதவனாயிருந்தால் அவன் அறியாதவனாயிருக்கட்டும்!'' (14:37.38).

பாஷை வரமானது வியாக்கியானம் இல்லாமல் பிறருக்கு ஊழியம் செய்யும் பாணியில் சபையில் செயல்படுத்தப்படக்கூடாதென்பதை ஒத்துக்கொள்வதில் நமக்குச் சிரமமில்லாதிருக்கலாம் (14:27,28). ஆனால் விசுவாசிகள் அனைவரும் ஒருமனமாய் விரும்பி அன்னிய பாஷையில் தங்கள் சத்தத்தை உயர்த்தித் தேவனைத் துதிக்க வாஞ்சித்தால்...? இப்படி யாவரும் சேர்ந்து அன்னிய பாஷையில் தேவனைத் துதிப்பதை வேதம் ஒட்டுமொத்தமாகக் கண்டனம் செய்கிறதா? இல்லை! (14:39), ஆயினும், இன்றைய ஆராதனைகள் அதிகமதிகமாய்ச் சுவிசேஷத்தை அறிவிக்கும் வேளைகளாக மாறிவந்துகொண்டிருப்பதால் 1 கொரி 14:23இல் பவுல் கரிசனையோடு கூறும் கருத்தை நாம் உன்னிப்பாய்க் கவனிக்கவேண்டும்: ''சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி வந்து, எல்லாரும் அன்னிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது (தெளிவில்லாதவர்களாவது), அவிசுவாசிகளாவது உள்ளே நுழைந்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்கள் என்பார்களல்லவா?''

காலாகாலமாய் நாம் பழகிவிட்ட பாரம்பரியத்தைத் திடீரென விட்டொழிப்பது அவ்வளவு சுலபமல்ல. எனினும், எந்தவொரு வழக்கத்தைக் குறித்தும் நாம் என்ன நினைக்கிறோம் என்பதைவிடத் திருமறை என்ன சொல்லுகிறது என்பதே முக்கியம்.

சபையில் ஓரிருவர் அன்னிய பாஷையில் கூச்சலிட்டுப் பிறரது சத்தத்தை அமுக்கி அவர்களது கவனத்தையும் பாதிப்பது, அர்த்தம் சொல்லப்படாத அன்னிய பாஷைகளை ஒலிபெருக்கியில் கத்துவது போன்ற அஞ்ஞானப் பழக்கங்கள் எவ்விதத்திலும் களையப்பட வேண்டும். மற்றவர்களுக்கு முன்பாக நமது ஆன்மீக ஆழத்தைக் காட்டுகிறோமென்று ஒருவேளை நாம் நினைக்கலாம்; ஆனால் இவ்விதமான செயல்கள் அலங்கார ஆராதனைகளை எவ்வளவு அலங்கோலமாக்குகின்றன என நாம் உணருவதில்லை. தேவனுடைய வீட்டில் நடந்துகொள்ளவேண்டிய வகையைக் குறித்த பயிற்சி ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவை (1 தீமோ 3:15).

**?**

*‘‘நான் அன்னிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால்,*
*என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி*
*என் கருத்து பயனற்றதாயிருக்கும்.*
*இப்படியிருக்க நான் செய்யவேண்டியதென்ன?’’*
(1 கொரி 14:14,15அ)

‘‘பாஷை வரமென்பது பரிசுத்த ஆவியானவர் உள்ளுணர்வளித்து வெளிப்படும் உடனடி வாக்காகும்; அதில் நமது குரல்வளை பயன்படுத்தப்படும், ஆனால் சிந்தனாசக்தி இடம் பெறுவதில்லை. பேசப்படும் அல்லது பாடப்படும் மொழிகள் பேசுகிறவனுக்குச் சற்றும் தெரியாதவை’’ என்று டேவிட் பிட்ச்சஸ் என்பவர் *‘‘உள்ளூர்ச் சபையில் ஆவியின் வரங்கள்’’* (Gifts in the Local Church) எனும் தனது நூலில் வரையறுத்துள்ளார்.

உயர் ஆங்கிலிங்கன் சபைப் பாரம்பரியத்திலிருந்து வரும் நான் 1963இல் பெந்தெகொஸ்தேயினரல்லாத மாணவர் கூடுகையொன்



றில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றதிலிருந்து அன்னிய பாஷையில் பேசிவருகிறேன். இவ்வருமையான வரத்திற்காகப் பவுலடியாரோடு சேர்ந்து நான் தேவனைத் துதிக்கிறேன். அன்னிய பாஷையில் பேசுவதால் எனக்குக் கிட்டும் நன்மைகள் பலப்பல —

☐ முதலாவது, அன்னிய பாஷையில் பேசுவது என் ஜெப வாழ்வை வலுப்படுத்துகிறது. வழக்கமான ஜெபத்தில் எனது மனது எனது தேவைகளைத் தேவனிடம் வார்த்தைகள் மூலம் தெரிவிக்கிறது. அன்னிய பாஷையில் ஜெபிக்கும்போதோ எனது மனது கடந்து செல்லப்பட்டு எனது ஆவி முன்னுக்கு வருகிறது (1 கொரி 14:14). வரம்பிற்குள்ளான எனது மனது அல்லது அறிவைத் தாண்டிச் செல்லும் விடுதலையை இதில் அனுபவிக்கிறேன். ஒரு சில வேளைகளில் என்ன ஜெபிப்பதென்றே தெரியாத திகைப்புண்டு. இன்னும் சில நேரங்களில் எனது அங்கலாய்ப்பை வாய்விட்டுச் சொல்லப் போதுமான வார்த்தைகள் கிடைக்காத திண்டாட்டமுண்டு. இவ்விதச் சந்தர்ப்பங்களில் அன்னிய பாஷையில் ஜெபிப்பது என்னைத் தூக்கி விடுகிறது. ரோமர் 8:26இல் சொல்லப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் ஜெப ஒத்தாசையின் ஒரு பகுதி அன்னிய பாஷை ஜெபத்தில் அனுபவமாகிறதென நான் நம்புகிறேன். ‘‘ஆவியானவர் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே சொல் வடிவம் பெறமுடியாத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.’’

☐ அன்னிய பாஷையில் பேசுவது எனது தனிப்பட்ட துதி ஸ்தோத்திர ஆராதனை வேளையை மேம்படுத்துகிறது. நான் ‘‘நன்றாய்’’ ஸ்தோத்திரிக்க அருள் பெறுகிறேன் (1 கொரி 14:17அ). ஆவியாயிருக்கிற கடவுளை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (யோ 4:24). நான் அன்னிய பாஷையில் தேவனைத் துதிக்கும்போது என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துவதாகவும், என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருவதாகவும் உணருகிறேன் (லூக் 1:46.47). அடிக்கடி அன்னிய பாஷையில் எனக்குத் தெரிந்த அல்லது புதிய ராகங்களில் பாடும் நிலைக்குள்ளும்

கடந்து வருகிறேன் (1 கொரி 14:15ஆ). ஆவியினால் நிறைந்து நமது இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுவது மது போதை யின் சிற்றின்பத்தையும் தோற்கடிக்கும் (எபே 5:18,19).

□ மூன்றாவது, அன்னிய பாஷையில் பேசுவது எனது உள் ளார்ந்த உணர்வுகளைத் தேவனுக்குப் புரியும் மொழியில் அவரிடம் கொட்டிவிட ஏதுவுண்டாக்குகிறது. ஆவியினாலே இரகசியங்களைப் பேசுதல் என வேதம் குறிப்பிடுவது இதுவே (1 கொரி 14:2ஆ). அதா வது, எனது மனதுக்கே புரியாத, ஆனால் உள்ளே மறைந்திருக்கும், காரியங்களை இது குறிக்கும். நமது உணர்வுகள், ஏக்கங்கள் அத்த னையையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாதல்லவா? கொஞ்ச நேரம் அன்னிய பாஷையில் பேசிய பின்னர் மிகவும் நம்பிக்கைக் குரிய ஒருவரிடம் எனது இருதயத்தை ஊற்றிவிட்ட உணர்வு எனக்கு அடிக்கடி உண்டாகிறது. என்னே ஆறுதல், என்னே இளைப்பாறுதல்! தேவ ஆவியானவர் எனது ஆவியோடு பேசுவதற்கும் அன்னிய பாஷை ஒரு வாய்க்காலாகும் (1 கொரி 14:28; 2 சாமு 23:2).

□ அடுத்து, அன்னிய பாஷையில் பேசும்போது நான் பக்திவிருத் தியடைகிறேன் (1 கொரி 14:4அ). அன்னிய பாஷையில் சற்று நேரம் பேசியதையடுத்து எனது விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட்டவனா கவும், எனது நம்பிக்கையில் திடப்படுத்தப்பட்டவனாகவும் உணரு கிறேன் (யூதா 20,21). நான் நிறைவடைந்து பூரணப்படும்வரை, அல்லது நிறைவான பூரணர் வரும்வரை, அன்னிய பாஷையில் பேசு வதைத் தொடர்வேன். அதற்குப் பின்னர் அன்னிய பாஷை மட்டு மல்ல, அறிவில் வளரவேண்டிய தேவையும் இல்லாது போகும்! (1 கொரி 13:8-10). அன்னிய பாஷையில் பேசுகையில் எனது மனது கடந்து செல்லப்பட்டாலும் பேசி முடித்தபின் எனது மனதும் புத்து ணர்வடைந்ததாய் உணருகிறேன். கட்டிடவியல் பயின்றுகொண் டிருந்த எனது மாணவப் பருவத்தில் (1963-1970) சில பரீட்சை களில் ஒரு சில கேள்விகளுக்குப் பதில் எழுதும்போது ஒரே குழப்ப மாயிருந்தால் கொஞ்ச நேரம் அமைதியாக அன்னிய பாஷையில் பேசிவிட்டுப் பின்னர் எழுதத் துவங்குவேன். நல்ல தெளிவுடன் பதில் எழுத முடியும் (1 நாளா 28:11,12). இன்று எனது ஊழியப் பொறுப்புகளில் இக்கட்டான சூழ்நிலைகளின்போது அன்னிய பாஷையில் பேசுவது அவ்விதமே பேருதவியாயிருக்கிறது.



□ அன்னிய பாஷையில் ஜெபிக்கும்போது தனது ஆவி ஜெபிக் கிறதென்றும் தனது மனதிற்கு ஒன்றும் புரியாதிருக்கிறதென்றும் பவுல் நாம் தியானித்துக்கொண்டிருக்கும் வசனப் பகுதியில் திட்ட மாய்க் கூறுகிறார். எனவே அவரது ஆவியில் ஜெபித்த பின்னர் தனக்குத் தெரிந்த மொழிகளில் அர்த்தமுடன் ஜெபிக்கச் செல்லு கிறார். ''நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத் தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடு வேன்; கருத்தோடும் பாடுவேன்'' (14:15). இவ்வித இரு பரிமாண துதி விண்ணப்ப அனுபவத்தை யார்தான் விரும்பமாட்டார்?

நான் அன்னிய பாஷையில் பேசுவது வாகனங்கள் ஓட்டும்போது, பயணம்பண்ணும்போது அல்லது உடற்பயிற்சிக்காய் ஓடும்போதெல் லாம் ஜெப ஆவியோடிருக்க உதவுகிறது. ஏனெனில் இவ்வித ஜெபத் திற்குச் சிந்தனை தீவிரமாய் செலுத்தப்பட அவசியமில்லையல் லவா? தூக்கத்திலிருந்து நள்ளிரவு வேளைகளில் விழிப்புண்டாகும் போது தாங்கள் அன்னிய பாஷையில் அமைதியாய்ப் பேசிக்கொண் டிருப்பதைக் காணுவதாகச் சிலர் சாட்சி பகருகின்றனர் (உன் 5:2அ).

ஒரு விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் செயலாற்றிக்கொண் டிருக்கும்போது அங்கு இயேசுவைச் சபிக்கும் அல்லது தூஷிக்கும் போலி வரங்களுக்கு இடமில்லை (1 கொரி 12:3). வரங்களைப் பற்றிய அத்தியாயத்தின் துவக்கத்திலேயே பவுல் இதை நிச்சயமாய் அறிவித்துவிட்டார்! அஞ்ஞான மார்க்கங்களிலிருந்து வந்த பலர் கொரிந்து சபையில் இருந்தனர். எனவே அவ்வித நிச்சய உறுதி ஏற்ற தாயிருந்தது! பரிசுத்த ஆவியின் வரத்தைக் குறித்து மூன்று எடுத்துக் காட்டுகளுடன் இயேசுதாமே இவ்விதம் கொடுத்த நிச்சயத்தையும் இங்கு ஒப்பிட்டுப் பாருங்கள் (லூக் 11:11-13).

*''நீங்கள் தெளிவான பேச்சை நாவினால் பேசாவிட்டால்*
*பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்?*
*ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே!''*
(1 கொரி 14:9)

சபை பக்திவிருத்தியடையவேண்டும் என்பதே ஆவியின் வரங்களின் முக்கிய நோக்கமென்பதைக் கொரிந்து விசுவாசிகள் தெளிவாய்ப் புரிந்துகொள்ளவேண்டுமென்பதே முதல் நிருபத்தின் இவ்வத்தியாயங்களில் அப்போஸ்தலனின் முக்கிய கரிசனையாகும். அதை அவர் இப்படி எழுதினார்: ''நீங்கள் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால் *சபைக்குப்* பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்'' (14:12). வரங்களினால் கிட்டும் சொந்த நன்மைகள் இரண்டாந்தரமானவையே. அன்னிய பாஷை வரமானது பேசுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய இரு தன்மையுடையதாயிருப்பதால் மற்ற வரங்களை விட இவ்வரம் துர்ப்பிரயோகிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் கூடுதலாயிருக்கலாம்.

பாஷை வரமானது பல்வேறு வகைகளில் வெளிப்படலாம் (''பலவித பாஷைகள்'' — 1 கொரி 12:28). அது பேசுகிறவனுக்குப் புரியாத பூவுலக மொழிகளாகவோ தூதர்களின் மொழிகளாகவோ, வாக்குக்கடங்காத, அதாவது வார்த்தைகளால் சொல்ல முடியாத, இரகசியங்களாகவோ, பெருமூச்சுகளாகவோ, ஆனந்த துதி ஒலிக் கீர்த்தனங்களாகவோ, மகிழ்ச்சிப் பரவசத் தொனிகளாகவோ, இப்படிப் பலவாய் இருக்கலாம். நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாஷைகளும் கொரிந்தியர் நிருபத்தில் விளக்கப்பட்டுள்ள பாஷைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவை என்பார் சிலர். அப்படியிருக்க வாய்ப்பில்லை என்றே நான் எண்ணுகிறேன். ஏனெனில், நடபடிகளின் ஆக்கியோனாகிய லூக்காவும் கொரிந்தியர் நிருப ஆக்கியோனாகிய பவுலும் மிஷனரிப் பயணங்களில் மிக நெருக்கமாய் இணைந்து ஊழியம் செய்தவர்கள். இவ்விரு ஆக்கியோன்கள் இணையான வார்த்தைகளால் விவரிக்கும் ஒரே ஆவியின் வெளிப்பாடு ஒன்றுக்கொன்று வித்தியாசமானது என்று சொல்வது திருமறை வியாக்கியான விதிமுறைக்கு உட்பட்டதல்ல. வெளிப்படும் வகைகளும் நோக்கங்களும் வித்தியாசமாயிருக்கலாம்; ஆனால் அந்த வரத்தின் சாராம்சமோ ஒன்றேதான்.

''பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்'' என்றும் (அப் 1:4), ''உன்னதத்திலிருந்து வரும் பலத்தால் தரிப்பிப்பு'' என்றும் (லூக் 24:49) இயேசு வாக்களித்த அனுபவத்தை லூக்கா விவரிக்கும்போது



''பரிசுத்த ஆவியின் நிறைவு'' என்றும் (அப் 2:4), ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல்'' என்றும் (8:15-17; 10:47; 19:2) குறிப்பிட்டார். பரிசுத்த ஆவியின் ஆளுகைக்குக் கீழிருந்து வேதத்தை எழுதிய ஆக்கியோன்களுக்குத் தங்களது பின்னணி மற்றும் சொல்வளத்திலிருந்து தங்களுக்குப் பிரியமான வார்த்தைகளைப் பொறுக்கியெடுக்க முழுச் சுதந்திரம் இருந்தது. ஒரே அனுபவத்திற்குப் பல்வேறு பெயர்கள் கொடுக்கப்படும்போது அது நமது அறிவை விரிவாக்குகிறது. அப்படியே, ''நவமான பாஷைகள்'' (மாற் 16:17) என்று இயேசு வாக்கருளியதை ''வெவ்வேறு பாஷைகள்'' (அப் 10:45), அல்லது ''அன்னிய பாஷைகள்'' (அப் 19:6) என்று லூக்காவும், ''பற்பல பாஷைகள்'' (1 கொரி 12:10), அல்லது ''அன்னிய பாஷைகள்'' (12:30; 13:8; 14:5,39), அல்லது ''அன்னிய பாஷை'' (14:2,4, 13,14) என்று பவுலும் குறிப்பிட்டனர். ஒரே வெளிப்பாட்டைப் பல்வேறு கோணங்களிலிருந்து நாம் பார்க்க ஏதுவாகவே இவ்விதம் பலவிதப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இது அது, அது இது என்று கூறுபோடுவது அர்த்தமற்றது.

அடுத்து, பாஷைகளை வியாக்கியானப்படுத்துதல் வருகிறது. அன்னிய பாஷையில் பேசுவதைப் போலவே அர்த்தம் சொல்லுதலும் சிந்தனை அறிவிற்கு அப்பாற்பட்ட ஆவியானவரின் செயல்பாடாகும். இதற்கும் மனிதத் திறன் அவசியமில்லை. இரண்டுமே மூளையறிவிற்கு அப்பாற்பட்ட ரீதியில் செயல்படுகின்றன. தனிமையில் தேவனை நோக்கி அன்னிய பாஷையில் பேசினால் அதற்கு அர்த்தம் சொல்லுதல் தேவையில்லை. அது ஆவியில் தேவனுக்கும் பேசுகிறவனுக்கும் இடையில் நடக்கும் உள்ளார்ந்த உறவாடலின் உரையாடல் (1 கொரி 14:2,28). அன்னிய பாஷையானது ஜெபமாகவோ, துதியாகவோ, ஒரு வெளிப்படுத்துதலாகவோ சபையிலோ மற்ற கூடுகைகளிலோ வெளிப்படும்போது அதற்குக் கட்டாயம் அர்த்தம் கொடுக்கப்படவேண்டும். பேசுகிறவர் தனக்கே அர்த்தம் சொல்லும் கிருபையருளப்படத் தேவனிடம் கேட்கலாம்; அல்லது வேறொருவர் அர்த்தம் சொல்ல எதிர்பார்க்கலாம் (14:13,27,28). இரண்டுமே நிகழாவிடில் அவர் அக்கூடுகையில் அன்னிய பாஷையைத் தொடரக்கூடாது; ஏனெனில், அதினால் சபைக்கும் பயனில்லை; எல்லாருடைய நேரமும் வீணாகும். அர்த்தம் சொல்லுதல் இருந்தாலும் ஒரு

கூடுகையில் இரண்டு அல்லது மூன்று சுருக்கமான அன்னிய பாஷைப் பேச்சுக்குமேல் பவுல் அனுமதிக்கவில்லை. அது எவ்வளவு பரவசமாயிருந்தாலும் திருமறையில் சொல்லப்பட்ட அளவை மீறக் கூடாது. ''உடல் முழுவதும் செவியானால் மோப்பம் எங்கே?'' (1 கொரி 12:17ஆ). தன்னால் அடக்கமுடியவில்லையென்றும் எவரும் பழியை ஆவியானவர்மீது போட்டுவிடக்கூடாது. ''தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கின்றனவே!'' (14:32). மனித உடன்பாடும் ஒத்துழைப்புமின்றி எவ்வரமும் செயல்படாது. தமது சபையில் எவ்வித ஒழுங்கின்மைக்கும் குழப்பத்திற்கும் தேவன் காரணரல்ல (வச 33,40). பெந்தெகொஸ்தே நாளில்கூடத் திரண்டு வந்தோருக்குப் பேதுரு தெளிவாய்ப் பிரசங்கிக்கும்படி மற்ற சீடர்கள் அன்னிய பாஷைகளில் பேசுவதை நிறுத்தினார்களே!

அவிசுவாசிகளுக்கு அடையாளமாய் அன்னிய பாஷைகள் வெளிப் படுவதைப்பற்றி என்ன? (1 கொரி 14:21,22). ஏசாயாவிலுள்ள ''பரி யாச உதடுகள், அன்னிய பாஷை'' என்ற மேற்கோள் கிறிஸ்தவர் பலருக்குப் பெரிய குழப்பம். தேவன் யூதா மக்களுக்கு ''இளைப்பாறு தலையும், ஆறுதலையும்'' வாக்களித்தபோது அவர்கள் தேவனது தீர்க்கதரிசிகள் அறிவித்ததை ''கேட்கமாட்டோம்'' என்றார்கள். எனவே அவர்கள் தங்களது அவிசுவாசத்தில் இன்னும் கடினப்பட அன்னியப் படையினரிடம் விடப்பட்டனர். தேவ மக்களுக்குப் புரி யாத அசீரியரின் பாஷையைக் கொண்டு தேவன் தம் மக்களை நியா யந்தீர்த்துத் தண்டித்தார் (ஏசா 28:11,12; நெகே 9:30). கொரிந்து சபையில் அன்னிய பாஷை பேசியவர்களை வெளியேயுள்ள அவி சுவாசிகள் ''பைத்தியம் பிடித்தவர்கள்'' எனக் கேலி செய்துவந்தனர் (14:23இ). ஆம், அர்த்தம் சொல்லப்படாத அன்னிய பாஷை வெளியே இருந்த அவிசுவாசிகளுக்கு அவர்களது அவிசுவாசத்தின்மீது தேவ னது வெறுப்பின் அடையாளமாய்த்தானிருக்கும். ஆனால் தீர்க்க தரிசன வார்த்தைகளோ அவர்களில் ஒரு சிலரது இரகசியப் பாவங் களையாவது அவர்களுக்கு உணர்த்தி அவர்களை மனந்திரும்புதலுக் குள் நடத்தும். எனவே, ஏசாயா 28:11ஐப் பவுல் தன் காலத்திற்கும் பழங்கால இஸ்ரவேலருக்குமிடையே ஓர் இணையான எடுத்துக்காட் டாகத்தான் மேற்கோள் காட்டினாரே தவிர அதை இன்றைக்குரிய ஒரு தீர்க்கதரிசனம் என்று சொல்லவில்லை.



இந்த வசனங்களில் திடீரென்று ஏன் பவுல் சபைகளில் பெண் களின் பங்கேற்பைக் குறித்துப் பேசத் துவங்குகிறாரென்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. *NIV Study Bible* என்ற ஆராய்ச்சி வேதம் இதற்குப் பயனுள்ளதொரு விளக்கம் தருகிறது: ''பொது ஆராதனை களில் பெண்கள் ஜெபிப்பதையோ தீர்க்கதரிசனம் சொல்லுவதையோ பவுல் எதிர்க்கவில்லை (1 கொரி 11:5); மாறாக, பொது ஆராதனை களில் பெண்கள் சத்தமாக விவாதங்களில் ஈடுபட்டு ஆராதனைக்கு இடையூறு செய்வதைப்பற்றியே அவர் பேசுகிறார் (14:34,35). பொதுவிடத்தில் விளக்கங்கள் கேட்டுக் கேள்விகள் எழுப்புவதைவிட அவற்றைத் தங்கள் கணவரிடம் வீட்டிலேயே கேட்கும்படி அவர் அறிவுறுத்துகிறார்.''

?

*''தேவ வசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது?*
*அது உங்களிடத்திற்கு மட்டுமா வந்தது?''*
(1 கொரி 14:36)

1 கொரிந்தியர் 12,13,14 ஆகிய அத்தியாயங்களில் ஆன்மீக வரங்களைக் குறித்துப் பவுல் விவாதிக்கும்போது அவர் கேட்ட கடைசிக் கேள்வி இதுவே.

ஆவியின் வரங்களை, அதுவும் குறிப்பாக பாஷை வரத்தை, குறித்த காரியத்திலேயே இயேசு கிறிஸ்துவின் சபையானது பெந்தெ கொஸ்தேயினர் மற்றும் பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் என இரு பெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது. இரு திறத்தார் நடுவிலும் தேவன் வல்லமையாய்ச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஒவ் வொரு பிரிவுக்கும் அதின் பலங்களும் பலக்குறைவுகளும் உண்டு. மொத்தத்தில் சொன்னால், ஒரு குழுவைவிட அடுத்த குழு மேம் பட்டதல்ல; இரு குழுவினரும் ஒருவரிடமிருந்து ஒருவர் எவ்வளவோ கற்றுக்கொள்ளவேண்டும். பெந்தெகொஸ்தேயினருக்குச் சரியான இறையியல் கிடையாது என்று அவர்களைப் பெந்தெகொஸ்தேயின ரல்லாதவர் குற்றம் சாட்டுகின்றனர். பெந்தெகொஸ்தேயினரல்லா தோருக்கு ஆழமான ஆன்மீகம் கிடையாது என்று அவர்களைப் பெந்தெகொஸ்தேயினர் குறை கூறுகின்றனர். பெந்தெகொஸ்தே யினரல்லாதோர் தங்கள் அறிவின் அகந்தையிலிருந்தும், பெந்தெ

கொஸ்தேயினர் தங்கள் ஆன்மீகத்தின் அகம்பாவத்திலிருந்தும் மனந்திரும்பியாக வேண்டும். இல்லையேல் கிறிஸ்து இன்னும் தமது சிநேகிதரின் வீட்டில் காயப்பட்டுக்கொண்டேதானிருப்பார் (சக 13:6). சில புராதனத் திருச்சபைகளின் மலட்டுப் பகுத்தறிவோ மற்ற நவீனத் திருச்சபைகளின் வறட்டுப் பரவசமோ திருமறைக்கு அடுத்த தல்ல. பைபிள் போதிக்கும் ஆராதனையானது மனிதனது முழு மன தையும் முழு இருதயத்தையும் முழு ஆத்துமாவையும் ஈடுபடுத்தும்.

## முடிவுரை

இந்த விளக்கக் கட்டுரையில் நான் எழுதியுள்ள சில காரியங்கள் பெந்தெகொஸ்தே உலகிலுள்ள ஒரு சிலருக்குக் கோபமுண்டாக்க லாம். ஆனால் ''அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக அசை வுள்ளவைகள் அசைக்கப்பட'' விட்டுவிட்டாலென்ன? (எபி 12:27). ஈராயிரம் ஆண்டுகட்குமுன் கொரிந்தியப் பெந்தெகொஸ்தே யினரைப் பார்த்துப் பவுல் கேட்ட அதே கேள்விகளை நாம் நமக்குத் தானே கேட்டுப் பார்ப்போம்: ''தேவ வசனம் நம்மிடத்திலிருந்தா புறப் பட்டது? அது நம்மிடத்திற்கு மட்டுமா வந்தது?'' (1 கொரி 14:36). வேதாகம ஆராய்ச்சித் துறைக்குப் பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் வழங்கியுள்ள தொன்றுதொட்ட விளக்கவுரைகள், வியாக்கியானத் தெளிவுரைகளுக்காய் நாம் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட் டுள்ளோம். பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் எழுதிய ஆராய்ச்சி நூல்களைப் பயன்படுத்தாத பிரபலப் பெந்தெகொஸ்தே மேய்ப்பர் அல்லது பிரசங்கியார் ஒருவரைக் காட்டுங்களேன்! பெந்தெகொஸ்தே யினரும் பெந்தெகொஸ்தேயினரல்லாதோரும் கிறிஸ்துவின் திருவுட லில் இரு கைகள் போன்றவர்கள். ''ஒரு கை வைத்துக் கைகொட்ட முடியாது'' என்பது ஓர் அரபிய முதுமொழி!

மக்கள் தங்களது மகிமையைத் தேடியதற்காய்ப் பாபேலில் தேவன் அவர்களைப் பல்வேறு மொழிவகையினராய்ப் பிரித்துச் சிதறடித்தார் (ஆதி 11:4). தமது மகத்துவத்தை வெளிப்படுத்துவதற் காய்ப் பெந்தெகொஸ்தேயன்று பல்வேறு மொழிவகையினரை அவர் ஒன்று சேர்த்தார் (அப் 2:11). ''எல்லாம்'' திரும்பப் பெறப்பட்டு நிறைவேறித் தீரவேண்டுமென்பது நாமெல்லாரும் ''ஒருமனப் பட்டுத்'' தேவனுக்கு ஆராதனை செய்ய ஒரு ''சுத்தமான பாஷை யைப்'' பெற்றுக்கொள்ளுதலையும் உள்ளடக்கும் (அப் 3:21; செப் 3:9; வெளி 7:9,10). தேவனது இவ்விதத் தீர்மானங்கள் நிறை வேற்றப்படுவதற்குத் தடையாயிருக்கக்கூடிய எச்செயலையும் எச் சிந்தையையும் களைந்துவிடுவது அவரது உடன் வேலையாட்களா கிய நமது தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

*''The Fourth Wave''* எனும் தனது புத்தகத்தில் இங்கிலாந்தின் பிரபல வேதப் பண்டிதர்களில் ஒருவராகிய டேவிட் பாசன் அவர்கள் ஞானமான சில கருத்துக்களைத் தந்துள்ளார்; ''அன்னிய பாஷைகள் தான் எல்லாம் என்று சொல்ல முடியாது; அன்னிய பாஷைகளெல் லாம் ஒன்றுமில்லை என்றும் சொல்லமுடியாது ... பெந்தெகொஸ்தே யினர் அன்னிய பாஷை அன்னிய பாஷை என்று அடித்துக்கொள்ளு கின்றனர்; பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் அன்னிய பாஷை யையே அடித்துவிடுகின்றனர். முதற்குழுவினர் பொதுவிடங்களிலும் இவ்வரத்தை அளவுக்குமீறிப் பயன்படுத்துகின்றனர்; அடுத்த குழு வினர் தனியறைகளிலும் இவ்வரத்தைக் கொஞ்சங்கூடப் பயன் படுத்தத் தயங்குகின்றனர். வேதாகமம் போதிக்கும் சமநிலையைத் தங்கள் மனப்பான்மையிலும் செயல்களிலும் திரும்பப் பெற்றுக் கொள்ளும் தேவை இருதிறத்தாருக்கும் உண்டு.''

நிர்வாகக் கூட்டமைப்புக்காய் அல்ல, ஆன்மீக ஐக்கியத்திற்காய் இரு திறத்தாரையும் ஒன்றிணைக்க உழைக்கும் பொறுப்பு பெந்தெ கொஸ்தேயினரல்லாதோரைவிடப் பெந்தெகொஸ்தேயினருக்கே அதிகமுண்டு என்றே பெந்தெகொஸ்தே அனுபவம் பெற்றுள்ள நான் சொல்லுவேன். பெந்தெகொஸ்தேயினரல்லாத எனதருமைச் சகோதர சகோதரிகளின் உணர்வுகளை நான் மதித்து என்னிடமுள்ள கேள்விக் குரிய மற்றும் ஒத்துக்கொள்ளமுடியாத பழக்கவழக்கங்களைப் புறம்பே ஒதுக்கிவைக்கவேண்டும். அன்பில்லாது அன்னிய பாஷை பேசிப் பயனென்ன? (1 கொரி 13:1). எருசலேம் சங்கத்தில் விவாதிக் கப்பட்ட விருத்தசேதனம்பற்றிய சர்ச்சைக்குக் கண்ட தீர்வுக்குப் பின்னிருந்த மனப்பான்மையை தேவன் எனக்குத் தருவாராக. இந்தப் பாஷையின் அர்த்தம் யாருக்கெல்லாம் விளங்குகிறதோ அவர்களெல் லாரும் ''ஆமென்'' சொல்லட்டும்!

# 10

# அற்புத அடையாளங்கள்

## Signs & Wonders

''ஒருவனும் தன்னுடன் கடவுள் இராவிட்டால் நீர் செய்கிற இவ்வித அற்புதங்களைச் செய்யமாட்டான்'' (யோ 3:2). இயேசுவிடம் நிக்கொதேமு என்ற யூத மார்க்கப் போதகன் மொழிந்த இச்சொற்கள் தொன்று தொட்ட எபிரெய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன.

ஆம், யேகோவா அற்புதங்களின் தேவன்தான்! இஸ்ரவேலர் ஒரு நாடாக உருவமைந்ததே அற்புத அடையாளங்கள் நிறைந்த ஒரு சூழலில்தான். இறைமக்கள் எகிப்திலும், செங்கடலிலும், பாலைவனத்திலும் அவரது ஓங்கிய கரத்தின் அற்புதங்களைக் கண்டனர். அவர்கள் கடவுளை விட்டுத் தூரம் போனபோதோ அற்புதங்கள் அரிதாயின. ஒருமுறை கிதியோன் தனக்குத் தரிசனமான தேவதூதனானவரிடம் இப்படிக் கேட்டார்: ''கர்த்தர் எங்களோடு இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவதேன்? எங்கள் தந்தையர் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவரது அற்புதங்களெல்லாம் எங்கே?'' (நியா 6:13).

கடவுளைப் பொருத்தவரை அவர் மாறவேயில்லை. அவரது வல்லமை குறையவேயில்லை. ஆனால், அற்புதங்களின் காலம் கடந்துவிட்டதென வாதாடுவோர் உண்டு. அவர்களுக்கு அப்படித்தான்! ஒருவனுடைய விசுவாசத்தின்படியே அவனுக்கு ஆகும்! விசுவாசிக்கிறவர்களோ இறைமாட்சியைக் காண்பர் (யோ 11:40).

கடவுளுடைய மகிமை வெளிப்பட அற்புதங்கள் ஓர் ஏதுவாகும். ''இயேசு இந்த முதலாம் அற்புதத்தைச் செய்து தமது *மகிமையை* வெளிப்படுத்தினார்'' என்று கானாவூரில் நடந்ததை யோவான்



விமர்சிக்கிறார் (யோ 2:11). ஆசியாவில் பவுலின் மூலம் நடந்த அற்புதங்களால் ''இயேசுவின் பெயர் *மகிமைப்பட்டது''* (அப் 19:17).

இயேசுவின் பெயரே ''அற்புதமானவர்'' என்பதுதானே? (ஏசா 9:6). அவரது ஊழியத்தில் அற்புதத்திற்குக் குறைவேயில்லை. இயேசுதான் மேசியாவா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா என்ற யோவானின் விசாரிப்புக்கு இயேசு தந்த பதில் இதோ: ''குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், தொழுநோயாளிகள் சுகமடைகின்றனர், செவிடர் கேட்கின்றனர், இறந்தோர் எழுப்பப்படுகின்றனர் ...'' (மத் 11:5). அற்புத அடையாளங்களை நடப்பித்து இயேசுவைக் கடவுள் உங்களுக்கு வெளிப்படுத்தினார் என்று பெந்தெகொஸ்தேயன்று பேதுரு முழங்கினார் (அப் 2:22).

''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' (எபி 13:8). சபைதான் அவரது உடல். நாம்தான் சபை. அப்படியானால் நாம்தான் அவரது பாதங்கள், அவரது கரங்கள். இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் அவர் செய்ததை இன்றும் நம்மூலம் செய்ய வல்லவர், செய்ய விரும்புகிறார். ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற செயல்களைத் தானும் செய்வான், இவைகளிலும் பெரிய செயல்களையும் செய்வான்'' என்றாரல்லவோ இயேசு? (யோ 14:12). விசுவாசமே இரகசியம்.

உயிருள்ள விசுவாசத்தைச் சபை இழந்தால் அது ஓர் இயக்கமாயிராமல் (movement) வெறும் சிற்பமாய் (monument) மாறிவிடுகிறது. மகிழ்ச்சியிழந்து மந்தமாகிறது. ஆராதனைகளெல்லாம் பிரமாதம், ஆனால் வாசலில் கிடக்கும் சப்பாணிக்கு ஓர் உதவியும் செய்ய முடியாது (அப் 3:2). அலங்கார வாசல்; அலங்கோலக் காட்சி! ஆனால் பெந்தெகொஸ்தே மழையில் அப்பொழுதுதான் குளித்து வந்த இரு மனிதர் நாற்பதாண்டின் சோகக்கதையையே மாற்றிவிட்டனர்!

உன்னைவிட மேல் எனும் ***பரிசேயரின்*** மனப்பான்மை கூடாதென அடிக்கடி திருச்சபையை எச்சரிக்கிறோம் (யோ 9:34). ஆனால் சபையில் அற்புதங்களையும் இயற்கைக்கப்பாற்பட்ட எதையும்

நம்பாத ***சதுசேயர்*** கூட்டமும் ஏராளம் (அப் 23:7,8). பரிசுத்தவான் களுக்கு அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம் தரும் பொதுவான பெயர் ''விசுவாசிகள்'' என்பதாம் (அப் 5:14). அதாவது, ''தேவ வசனம்'' ''தேவ வல்லமை'' ஆகிய இரண்டையும் விசுவாசிப்ப வர்கள். இதில் ஒன்றை விட்டாலும் நாம் அரை விசுவாசிகள்தான்! (மத் 22:23-29).

நமது தேவன் யார் என நாம் மறுபடி அறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் தங்கள் தேவனை அறிந்தோர்தான் ''பலப்பட்டு, அதற் கேற்றபடி செயலாற்றுவார்கள்'' (தானி 11:32). ''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்'' (யோபு 9:10). ''நமது தேவனைப்போல் பெரிய தேவன் யார்? அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே'' (சங் 77:13,14). ''ஒரு வராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவர்'' (136:4).

''கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; கடவு ளுக்காய்ப் பெரிய காரியங்களை முயற்சியுங்கள்'' என்றார் வில்லியம் கேரி (1761-1834). நாம் எதிர்பார்ப்போம், ஆனால் முயற்சியோம்! இறைவனுக்கேற்ற செயல்களைச் செய்ய என்ன செய்யவேண்டு மெனச் சீடர் ஆண்டவரிடம் வினவினர். ''விசுவாசியுங்கள்'' என்று பதில் தந்தார் (யோ 6:28,29).

கடவுளால் எல்லாம் கூடும் (லூக் 1:37). "Imp" என்றால் பிசாசு என்று பொருள். Possible (முடியும்) என்பதை imp-ossible (முடியா தது) என மாற்றுவதே அவன்தான்! அவன் பொய்யன். ''கடவுளால் முடியுமா?'' என்று கேட்கவே வேண்டாம்; ''கடவுளால் முடியும்'' என்று கெம்பீரியுங்கள். (Ask not, Can God? Affirm, God can!)

''தேவனானவர் திருச்சபையில் முதலாவது அப்போஸ்தலரை யும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களை யும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித மொழி பேசுதலையும் ஏற்படுத்தினார்'' (1 கொரி 12:28). ''போதகர்கள்,'' ''ஊழியங்கள்,'' ''ஆளுகைகள்'' ஆகியவைகளைக் குறித்துத் தாராளமாய்ப் பேசு



கிறோம். ஆனால் ஏன் ''அற்புதங்கள்,'' ''குணமாக்கும் வரங்கள்'' குறித்தெல்லாம் அவ்வளவு பேசுவதில்லை? திருமறைக்கு இவ்விதப் பாரபட்சம் காட்டலாமோ?

அப்படியே, 1 கொரிந்தியர் 12:7-10இலுள்ள ஆவியின் வரங் களில் ''ஞானம்,'' ''அறிவு,'' ''விசுவாசம்'' ஆகியவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு, ''சுகமாக்கும்'' வரங்களையும் ''அற்புதங்களைச்'' செய்யும் சக்தியையும்பற்றிப் பேசாதது ஏன்? இப்படித்தான் நாம் தேவனது ''முழு'' ஆலோசனையைப் பெறத் தவறிவிடுகிறோம். நமது வசதிக்கும் நிலைக்கும் ஏற்றாற்போல் திருமறைக்கு விளக்கம் கொடுக்கக்கூடாது.

அப்போஸ்தலர் காலம் போன்று நமக்கு இன்று அற்புத அடை யாளங்கள் இல்லாவிடில், ஆண்டவர் அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டார் என்று உடனே முடிவுகட்டிவிடக்கூடாது. மாறாக, ''எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம்; தீர்க்கதரிசியும் இல்லை; இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடம் இல்லை. கடவுளே, எதுவரைக்கும் எதிரி பழித்துக்கொண்டிருப் பான்?'' எனக் கதறவேண்டும் (சங் 74:9,10).

அற்புதங்களில்லாமலே வாழப் பழகிவிட்டதாலேயே நமக்கு அற்புதங்களில்லை. நமக்கிருக்கும் சாதனங்களும் வசதிகளும் ஆதிச் சபைக்கு இல்லை. அவர்கள் முழுவதும் தேவ வல்லமையையே சார்ந்திருந்தனர். விளம்பரப்படுத்த அவர்களுக்குப் பத்திரிகையோ, ஒலிபரப்போ, ஒளிபரப்போ கிடையாது. அற்புதங்களே அவர்களது கமிஷனில்லா ஏஜெண்டுகள்!

''இந்த மனிதரை நாம் என்ன செய்யலாம்? எல்லாருக்கும் தெரிந் திருக்கிறபடி வெளிப்படையான அற்புதம் இவர்களால் செய்யப்பட் டதே; அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது'' என்றனர் நற்செய்தியை எதிர்த்தவர்கள் (அப் 4:16). நமது திருச்சபைகளுக்கு இவ்விதச் சாட்சி என்று கிடைக்குமோ?

அவிசுவாசத்திலிருந்து மனந்திரும்புவோம். திருவசனத்திற்குப் புறம்பான பாரம்பரியங்களைக் களைந்தெறிவோம். பின்மாற்றத்தி

லிருந்து திரும்புவோம். நமது இருதயங்களைக் கிழிப்போம். ''உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்'' என்ற திருவாக்குண்டு (யோசு 3:5).

நமது ஊழியர், மிஷனரிகள் யாவருக்காகவும் ஆதிச்சபையின் ஜெபத்தையே ஏறெடுப்போம்: ''கர்த்தாவே, உமது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் பெயராலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படிச் செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உமது கரத்தை நீட்டி, உமது ஊழியக்காரர் உமது வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்ல அவர்களுக்கு உதவி செய்தருளும்'' (அப் 4:29,30). அப்பொழுது அவர்கள் பிரசங்கிக்கும் திருவசனத்தை அற்புத அடையாளங்களால் கடவுள் உறுதிப்படுத்துவார் (மாற் 16:20; அப் 14:3).

நாம் நம்மை அப்போஸ்தலர் வரிசை என்கிறோம். நல்லது, அப்போஸ்தல வல்லமை எங்கே? அற்புத அடையாளங்களெனும் அப்போஸ்தலனின் அடையாளங்கள் எங்கே? (2 கொரி 12:12). அப்போஸ்தல உபதேசம் போதாது; அப்போஸ்தல செயல்களும் வேண்டும். செயலற்ற உபதேசம் செத்தது. சபையின் முதல் புத்தகம் ''நடபடிகள்'' என்றழைக்கப்படுகிறது. நமக்கோ ''வார்த்தைகள்''தான் ஏராளம்!

அற்புதம் இல்லாத அத்தியாயங்கள் நடபடிகள் புத்தகத்தில் மிகக் குறைவு. அப்பம் பிட்கும் ஆராதனையிலும் அமரரை எழுப்பும் அடையாளம்! (அப் 20:7-12). நமது சபை வாழ்விலும் ஊழியப் பாதையிலும் அற்புதங்கள் பெருகட்டும். நடபடிகள் புத்தகத்தில் ''ஆமென்'' இல்லை (28:31). ஆம், அது முடிவடையவில்லை. நடபடிகள் தொடரட்டும். 29ஆம் அத்தியாயம் நம்மைப்பற்றி இருக்கட்டும்.

அப்போஸ்தலரால் ''அநேக'' அற்புத அடையாளங்கள் நடத்தப்பட்டன என லூக்கா திரும்பத்திரும்ப எழுதுகிறார் (அப் 2:43; 5:12; 15:12). ஆண்டவரே, எங்களுக்கு அவைகளில் ''கொஞ்சமாவது'' தரமாட்டீரோ? ஆனால் துவக்கத்தைவிட முடிவு சம்பூரணமாயிருக்கும் என்று அவர் வாக்கருளியுள்ளார். பிந்திய ஆலயத்தின் மகிமை முந்தியதைவிட அதிகமாயிருக்கும் (ஆகாய் 2:9).



இன்று நாம் பெரும்பாலும் கேள்விப்படுவது தலைவலி, முதுகு வலி சாட்சிதான். பிறவிக்குருடர் பார்வையடையவேண்டும், முழுச் செவிடர் கேட்கவேண்டும், ஊமையர் பேசவேண்டும், முடவர் நடக்க வேண்டும். ஆனால் நாம் உபவாசத்தோடு ஆண்டவருக்குமுன் நெடுஞ்சாடையாய் விழுந்து கிடக்காவிடில் இதெல்லாம் நடக்காது (மத் 17:19-21). கடவுளும் நம்மை நம்ப முடியவேண்டும். அவருக்கே புகழ் அனைத்தையும் கொடுக்கப் பழகிவிட்டோம் என்று அவர் அறிய வேண்டும். ''ஆண்டவரே, உமது மகிமையை நான் தொட்டு விடா திருக்கச் செய்யும்'' என்று பழம் பரிசுத்தர் ஒருவர் ஜெபித்தார்.

சாதாரண மனிதர் மூலம் இறைவன் நடப்பித்த அசாதாரண காரியங்கள் பற்றிய சரிதைகளால் திருமறை நிறைந்திருக்கிறது. மோசே செங்கடலைப் பிளந்தார். மோசேயின் தேவன் எங்கே? யோசுவா சூரியனையும் சந்திரனையும் நிறுத்தினார். யோசுவாவின் தேவன் எங்கே? எலியா வான் அக்கினி இறக்கினார். எலியாவின் தேவன் எங்கே? தானியேல் சிங்கத்தின் வாயை அடைத்தார். தானியேலின் தேவன் எங்கே? எபிரெயர் பதினோராம் அத்தியாயத்தின் தேவன் எங்கே? முடிவு காலத்தின் முடிவுக்குள் வரவர இதிலும் பெரிதானவைகளை எதிர்பார்க்கலாமே (யோவேல் 2:28-30).

பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து அப்போஸ்தலர் மூலம் மட்டுமே அற்புதங்கள் நடந்தன என்று சொல்ல முடியாது. ''பந்தி விசாரிப்புக்காகவே'' ஸ்தேவானும் பிலிப்புவும் நியமிக்கப்பட்டனர். ஆனால், ''ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவராக மக்களுக்குள் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்.'' ''பிலிப்பு செய்த அதிசயங்களை மக்கள் கேள்விப்பட்டு, கண்டு, அவரால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள்'' (அப் 6:8; 8:6).

தேவன் தங்கள் மூலம் அற்புதங்களை நிகழ்த்த விசுவாசிகள் அனைவரும் எதிர்பார்க்கலாம். பின்வரும் இயேசுவின் வாக்குமொழிகளை அப்படியே இருதயத்தில் இருத்துங்கள்: ''விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான் ... விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் இவை: என் பெயரால் பிசாசுகளைத்

துரத்துவார்கள்; நவமான மொழிகளைப் பேசுவார்கள்; பாம்புகளை எடுப்பார்கள் ... வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது அவர்கள் சுகமடைவார்கள்'' (மாற் 16:16-18). புறப்பட்டுப் போவதும், திருவசனத்தின்படிச் செயல்படுவதுமே இரகசியம்.

முழுச் சபையும் கிறிஸ்துவின் குணமாக்கும் ஊழியத்தில் ஈடுபட வேண்டும். ''நீங்கள் சுகமடையும்படி, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'' (யாக் 5:16). தமது மக்கள் ஆன்மாவிலும் உடலிலும் ஆரோக்கியமாயிருக்கவேண்டும் என்பதே தேவனது பொதுவான சித்தம் (3 யோ 2).

சபை மேய்ப்பர்கள் கிராமப்புறங்களுக்குத் தங்கள் சபையாரை அழைத்துச் சென்று நோயாளிகளுக்காக ஜெபிக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் விசுவாசிகளுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் முடங்கிக் கிடக்கும் விசுவாசமும் மறைந்து கிடக்கும் வரங்களும் வெளிவரும். ஒருவன் நோயாளி மீது கரம் வைத்து ஜெபித்துப் பார்க்காவிடில் தனக்குக் குணமாக்கும் வரம் உண்டு என்று எப்படி அறிய முடியும்? கடினமான, அசாதாரணமான சூழ்நிலை ஒன்றிற்காக ஜெபிக்காத ஒருவன் தனக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியுண்டு என அறிவதெப்படி? வரங்கள் எதற்காக? பரணில் தூசி தட்டி வைக்கவா, அல்லது பட்டிதொட்டிகளில் பயன்படுத்தவா?

மண்ணுலகெங்கும் கடைசி எல்லைவரை நாள் தோறும் ஆண்டவரது இரட்சிப்பை அறிவிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். அதுதான் ''அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவித பலத்த செயல்களினாலும் ... ஆவியின் வரங்களினாலும் கடவுள் தாமே சாட்சி கொடுத்த இவ்வளவு பெரிதான'' இரட்சிப்பாம்! (எபி 2:3,4).

மந்திரத்தினாலும், பிசாசுகளினாலும் செய்யப்படும் அற்புதங்களைக் குறித்துக் கவலை வேண்டாம். அவை இருக்கத்தான் செய்யும். ஆனாலும் மந்திரவாதிகளின் கோல்களை ஆரோனின் கோல் விழுங்கிவிடுமே! (யாத் 7:10-12). சீமோன், எலிமாஸ்



போன்ற மாய வித்தைக்காரர் மருண்டுவிடுவர்! (அப் 8:13; 13:8). விசுவாச நண்பரே, நிமிர்ந்து நில்லுங்கள்! ''உலகிலிருப்பவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்'' (1 யோ 4:4).

நமது நாட்டில் மந்திரம், பில்லிசூனியம் யாவும் மலிந்துகொண்டிருக்கிறது. அப்போஸ்தலர் 19:19இல் உள்ளபடி தேவ வல்லமை அசாதாரணமாக வெளிப்பட ஜெபிப்போம். அப்பொழுது தேவ வசனம் எங்கும் பரவி வெற்றிகொள்ளும். மந்திர, வஞ்சக சக்திகளுக்கெதிராக வெறும் விவாதம் போதாது. பேசிக்கொண்டேயிருக்கிறோம், செய்துகாட்டத் துவங்குவோம் (1 கொரி 2:4,5). நற்செய்தி ஊழியத்தில் பணம், வழிமுறைகள், சாதனங்கள், இவை யாவும் இரண்டாவதுதான். அற்புதங்கள்தான் வேலையை அபாரமாய்ச் செய்து முடிக்கும்.

ஒரு சில தோல்விகளைக் குறித்து மனம் தளர்ந்துவிடக்கூடாது. பிரசங்கம் கேட்கிற அனைவரும் இரட்சிக்கப்பட்டுவிடுவதில்லை. அப்படியே ஜெபிக்கப்படுகிற அத்தனை பேரும் சுகமாகிவிடமாட்டார்கள். பிரசங்கித்துக்கொண்டேயிருப்போம் — பாவிகளுக்கு! ஜெபித்துக்கொண்டேயிருப்போம் — பிணியாளிகளுக்காக!

அப்படியே சுகம்பெறும் அத்தனைபேரும் ஆண்டவரிடம் திரும்பிவிடுவதில்லை. கடவுளிடமிருந்து அற்புதத்தைப் பெற்ற பின்பும் தீய வழியிலும், சிலைவணக்கத்திலும் தொடர்ந்து வாழும் பலருண்டு (யோ 12:37). இதை ஒரு தோல்வி என்று எண்ணத் தேவையில்லை. நமது தேவன் தயாளர். ''அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்'' (மத் 5:45). மக்களின் மனந்திரும்புதலே நமது குறியாயிருக்கவேண்டும்; நமது உள்ளமோ மனதுருக்கத்தால் நிறைந்திருக்கவேண்டும்.

அற்புதங்களைப்போல திரள்களைக் கவருவது வேறொன்றுமில்லை. ''இயேசு செய்த அற்புதங்களைத் திரளான மக்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்'' (யோ 6:2). இது இன்றும் அப்படியே. இயற்கைக்கப்பாற்பட்ட தெய்வீக வல்லமையைக் காணவும், அனுபவிக்கவும் மனிதனுக்கிருக்கும் நாட்டத்தை அறியலோ,

அறிவுப்பெருக்கமோ தணிக்க முடியாது. இயேசுவின் பெயரால் நடக்கும் அற்புதங்கள் அவரது உயிர்த்தெழுதலை நிரூபிக்கின்றன (அப் 3:14-16). அவர் உயிரோடிருக்கிறாரென அவை உலகுக்கு அறிவிக்கின்றன. சுகமளிப்புக் கூட்டமொன்றில் தன்னார்வலர் ஒருவர் அணிந்திருந்த T-ஷர்ட்டில் இருந்த வாசகம்: ''உன் தெய்வத்திற்கு உயிரில்லையென்றால், என் தேவனிடம் வந்து அனுபவித்துப்பார்!''

அற்புத அடையாளங்களோடு நற்செய்தியைப் பிரசங்கிப்பதே புதிய ஏற்பாடு அறிந்த நற்செய்திப் பணியாகும். நாம் ஏற்கனவே கண்டபடி, வசனத்தை மட்டும் பிரசங்கித்துவிட்டு அற்புத அடையாளங்களைப் பற்றியே பேசாத ஒரு சாரார் உண்டு. அடுத்தவர் அற்புதங்களிலேயே கவனம் செலுத்தி, ஆனால் தெளிவாக வசனத்தைப் போதிப்பதிலேயோ கவலையீனமாயிருக்கின்றனர். இரண்டும் ஒரு புறச்சாய்வுதான். இருபுறங்களும் ஒருங்கே இணைந்தால்தான் அப்போஸ்தல காலம் திரும்பும். நற்செய்தியைப் பிரசங்கிக்கவேண்டும், *அத்துடன்* பிணியாளிகளைக் குணமாக்க வேண்டும். இதுதான் இயேசுவின் சமநிலைப் போதனை.

ஆத்தும இரட்சிப்புதான் அற்புதங்களிலெல்லாம் பிரதானமானது என்பது உண்மை. ஆனால் கிறிஸ்து உடலுக்கும் ஆண்டவரும் இரட்சகருமானவர் (1 கொரி 6:13; எபே 5:23). சிலுவையில் நமது பாவங்களை மட்டுமல்ல, நோய்களையும் இயேசு சுமந்தார் (ஏசா 53:4,5; மத் 8:16,17).

உடல் சம்பந்தப்பட்ட அற்புதங்களை மட்டும் பேசுகிறீர்களே, பௌதீக அற்புதங்களைப்பற்றி என்ன என்று ஒருவேளை வினவலாம். இயேசுவின் ஊழியத்தை உற்று நோக்குங்கால் தண்ணீரைத் திராட்சை ரசமாக்கியது, ஆகாரத்தைப் பெருக்கியது, இதுபோன்றதெல்லாம் தினமும் நடந்தன என்று சொல்லமுடியாது. மாறாக, குணமளிக்கும் அற்புதங்களோ நடந்தவண்ணமிருந்தன. அப்படியே இன்றும். கட்டாயம் தேவைப்படும்பொழுது மட்டுமே இயற்கை விதிகளைக் கடந்து செல்லும் அற்புதங்களைக் கடவுள் அருளிச் செய்வார்.

இந்தியாவெங்கும் கிறிஸ்தவத்திற்கெதிரான சக்திகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. ஊழியரும் மிஷனரிகளும் தாக்கப்படுகின்றனர். என்றுமில்லாத அளவு இன்று கடவுளின் வல்லமை வெளிப்பட்டாக வேண்டும். வெள்ளம்போல் எதிரி வரும்போது ஆவியானவர் கொடியேற்றவேண்டுமே! வாக்குண்டே! (ஏசா 59:19). இறைவனோடு ஒத்துழைப்போம். எழுந்து அவரது வல்லமையை அணிந்து கொள்ளுவோம். அவர் ஒருவரே தேவன், வேறொருவருமில்லை என நிரூபிப்பார். ''என் மக்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை ... பயப்படாதிருங்கள்!'' இதுதான் அவரது வாக்கு (யோவே 2:27,21). எதிர்ப்பாயிருக்கும் நாட்டுத் தலைவர்களும் அரசியல் வாதிகளும்கூட அற்புதங்களைக் கண்டு அரண்டுபோவர் (யோ 11:47,48), மாறியும் விடுவர் (தானி 6:26,27).



அற்புத அடையாளங்களுக்குத் தடங்கலாயிருக்கும் யாவற்றையும் அகற்றிவிடுவது நமது பொறுப்பு —

□ அவைகளில் ஒன்று ***எதிர்மறை எண்ணம்*** (negativism). மாற்கு 16:17,18இல் செலவழிப்பதைவிட அதிக நேரம் மத்தேயு 7:21-23இல் செலவழிக்கிறோம். எப்பொழுது பார்த்தாலும் போலியைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தால் உண்மையானதையும் விட்டுவிடுவோம்.

சுகமளிக்கும் ஊழியங்கள் சிலவற்றிலுள்ள திருமறைக்கு ஒவ்வாத செயல்முறைகள், சுகபோக வாழ்வு உபதேசத்தை அளவுக்குமீறி வலியுறுத்துதல் போன்றவை நல்ல கிறிஸ்தவர் பலரையும் எரிச்சலடையச் செய்துள்ளன. எனவே அற்புத அடையாளம் என்றதும் வேண்டவே வேண்டாமென்கின்றனர். அன்பரே, துர்ப்பிரயோகத்திற்கு மாற்றுமருந்து எது? பயன்படுத்தாதிருப்பதா, சரியாய்ப் பயன்படுத்துவதா? பிள்ளை குளித்த தண்ணீரைக் கொட்டலாம், ஆனால் பிள்ளையையும் சேர்த்துக் கொட்டிவிடக்கூடாது, கவனம்!

அற்புதங்களை எதிர்ப்பது அறிவீனம். ''கடவுளுடன் போர் செய்வது தகாது'' என்பதே மாய்மாலக்காரராய் இருந்தாலும் பரிசேயரின் உபதேசம் (அப் 23:9). அப்போஸ்தலரைத் துன்புறுத்தியவர்களைப் பார்த்துப் பெயர்பெற்ற பரிசேயனாகிய கமாலியேல் சொன்னது: ''தேவனால் உண்டாயிருந்ததானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிப் பாருங்கள்'' (அப் 5:34,39).

□ அடுத்தத் தடங்கல் ***குழுவெறி*** (groupism) ஆகும். தங்கள் குழுவைச் சேராதவன் என்ற ஒரே காரணத்தால் பிசாசு துரத்திக் கொண்டிருந்த ஒருவனை யோவான் தடுத்து நிறுத்தினார். ஆனால் இயேசு, ‘‘அவனைத் தடுக்கவேண்டாம்; என் பெயராலே அற்புதம் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்ல மாட்டான்’’ என்றார் (மாற் 9:38-40).

□ அடுத்தது ***ஊழியப் பட்டப் பெருமை*** (hierarchism). தலைவர் அல்லது மூப்பர் என்றில்லாத ஒருவரைக் கர்த்தர் பயன்படுத்தி அற்புதங்களை நிகழ்த்தினால் நாம் அகமகிழ்வதில்லை. இது தவறு என்று யோசுவாவை மோசே கண்டித்தார் (எண் 11:24-30). ஊழியத்தில் நடந்த ஆச்சரியமான காரியங்களை இளைஞர் திரும்பி வந்து அறிவிக்கையில், மூப்பரும் தலைவர்களும் உளங்குளிர வேண்டும்; இல்லையேல் வாலிபர் உடனே குளிர்ந்துவிடுவர்! பிசாசு துரத்திய ‘‘மகிழ்ச்சியோடு’’ அந்த எழுபது சீடர் திரும்பவந்தபோது, இயேசுவும் ‘‘அகமகிழ்ந்தார்’’ (லூக் 10:17,21). தலைவர்கள் இப்படியல்லவா இருக்கவேண்டும்!

□ நமக்குத் தெரியாமலே நமது இதவாதிகள் ***இயற்கை விளக்கத் தத்துவத்தை*** (naturalism) நமது நரம்புகளுக்குள் செலுத்திவிடுகின்றனர். கவனம்! வேதத்திலுள்ள அற்புதங்கள் அத்தனைக்கும் ஏதாவதொரு விளக்கம் அல்லது ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிடுவார்கள். ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரத்திற்கு உணவளித்த அற்புதத்தைச் சொல்லி முடித்ததும் ஒரு சிறுமி எழுந்து, ‘‘அது எப்படி முடியும்?’’ என்று ஆசிரியையிடம் கேட்டாள். ‘‘அதெல்லாம் மிகப் பெரிய அப்பங்கள்’’ என்றார் ஆசிரியை. ‘‘சின்னப் பையன் அவ்வளவு பெரிய அப்பங்களை எடுத்துச் சென்றதேன்?’’ என்று சிறுமி திருப்பிக்கேட்டாள்!

பின்வாங்கிப்போன இஸ்ரவேலருக்காக எரேமியா புலம்பிக் கொண்டிருக்கையில் கடவுள் அவரிடம், ‘‘என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?’’ என்றார். ‘‘உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை’’ என்ற பதிலை அவர் ஆயத்தமாக வைத்திருந்தார் (எரே 32:27,17). நமது பதிலென்னவோ?



அற்புத அடையாளங்களைத் தேவனிடமிருந்து திட்டமாக எதிர்பார்க்கலாம் என்ற கருத்தினைச் சகோதரி சாராள் நவரோஜி (1938-2014) அவர்கள் தனது பாடலில் கச்சிதமாய் வலியுறுத்தியிருக்கிறார்கள் —

*ஆச்சரியமே, அதிசயமே,*
*ஆண்டவர் செயல்கள் ஆதி பக்தரிடம்!*

*செங்கடல் இரண்டாய்ப் பிரிந்துபோக*
*சொந்த ஜனங்களைக் கடத்தினாரே;*
*இஸ்ரவேலின் துதிகளாலே*
*ஈன எரிகோ வீழ்ந்ததுவே!*

*ஏழு மடங்கு எரி நெருப்பில்*
*ஏழை தம் தாசருடன் நடந்தார்;*
*தானியேலைச் சிங்கக் கெபியில்*
*தூதன் துணையால் காத்தனரே!*

*பனி மழையை நிறுத்தினாரே*
*பக்தன் எலியா தன் வாக்கினாலே;*
*யோசுவாவின் வார்த்தையாலே*
*யேகும் சூரியன் நின்றதுவே!*

*மதிலைத் தாண்டி சேனைக்குள் பாயும்*
*மாபெலன் தேவனிடம் அடைந்தான்;*
*வீழ்த்தினானே கோலியாத்தை*
*வீரன் தாவீது கல் எறிந்தே!*

*நம் முற்பிதாக்கள் நம்பின தேவன்*
*நேற்றும் இன்றும் என்றும் மாறிடாரே;*
*தம்மை நோக்கி வேண்டும்போது*
*தாங்கி நம்மை ஆதரிப்பார்!*

**11**

# வரங்களை அறிந்துகொள்ளுங்கள்!

## Understanding the Spiritual Gifts

கிறிஸ்துவின் ஆளுகைக்கும், திருமறையின் அதிகாரத்திற்கும் தங்களை அர்ப்பணித்து, கிறிஸ்துவின் நற்செய்திப் பேராணைக்குக் கீழ்ப்படிந்து வாழும் விசுவாசிகளைப் பெந்தெகொஸ்தே அனுபவ விசுவாசிகளென்றும், பெந்தெகொஸ்தே அனுபவமில்லா விசுவாசி களென்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆவியின் அபி ஷேகம், வரங்களின் வெளிப்பாடு ஆகியவை பற்றிய அபிப்பிராய அல்லது அனுபவ வேறுபாடுகளே இதற்குக் காரணம். முதற்குழுவில் சில காரியங்கள் வரம்பை மீறிவிடுகின்றன என எண்ணும் இரண்டாம் குழுவினர் அதிக எச்சரிப்பாய் ஒதுங்கி நிற்பர். உலகில் கிறிஸ்துவின் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானால் இரு குழுவினரும் ஒருவரையொருவர் நேசித்து, பாராட்டி, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு வளரவேண்டுமெனத் திட்டமாய் நம்புகிறேன்.

நான் உயர் ஆங்கிலிக்கன் பாரம்பரியத்தில் பிறந்து வளர்க்கப் பட்டேன். 1963ஆம் ஆண்டு சில கல்லூரி மாணவருடன் ஜெபிக்கை யில் ஆவியின் அபிஷேகம் பெற்றேன். கடந்த ஆண்டுகளிலெல்லாம் பெந்தெகொஸ்தே சபைகளிலும், பிற சபைகளிலும் பிரசங்கித்தும், இரு ஓரங்களிலுமுள்ள விசுவாசிகளோடு ஐக்கியப்பட்டும் வந்திருக் கிறேன். இந்தச் சூழலில் ''ஆவியின் வரங்கள்'' பற்றி 1 கொரிந்தியர் 12,13,14ஆம் அத்தியாயங்களிலிருந்து நான் கற்றவற்றை இங்கு வரிசைப்படுத்தியுள்ளேன். 12ஆம் அத்தியாயத்திலுள்ள வரங்களின் பட்டியல் முழுமையானதல்ல என்பதை நினைவிற்கொள்ளவேண்டும்.

1. தேவப் பிள்ளைகள் எவரும் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து ***அறியாமலிருப்பது*** பேரிழப்பு (12:1).



2. தேவ மக்கள் இயேசுவைக் கர்த்தரென்று ***தொழுதுகொள்ள*** வழி நடத்துவதே பரிசுத்த ஆவியானவரின் பிரதான ஊழியமாகும் (12:2,3).

3. தேவன் தம் மக்களிடத்திலும், தேவ மக்கள் தேவனிடத்திலும் ***பேச்சுத்தொடர்பு*** கொள்ளப் பரிசுத்த ஆவியானவர் ஏதுவாயிருக் கிறார் (''ஊமையான விக்கிரகங்கள்'' மாறானவை) (12:2,3).

4. பிதாவாகிய தேவன் ஊழியங்களை (அல்லது ஆளுகைகளை) கிறிஸ்துவின் மூலமாகவும், வரங்களை ஆவியானவர் மூலமாகவும் செயல்படுத்துகிறார். ஊழியங்கள் அல்லது ஆளுகைகள் தேவனது ***அதிகாரத்தையும்,*** வரங்கள் அவரது ***வல்லமையையும்*** வெளிப் படுத்துகின்றன (12:4-6).

5. வரங்கள் ஏதுக்களாகும்; ஊழியங்கள் மனிதராவர்; கிரியைகள் செயல் முறைகள் ஆகும். ஏதுக்களும், மனிதரும், செயல்முறை களும், தங்களுக்குள்ளும் ஒன்றோடொன்றும், தேவத்துவத்தின் திரித்துவ ஒருமைப்பாட்டின் அழகிய பாணியிலேயே, ***வேற்றுமை யில் ஒற்றுமையை*** வெளிப்படுத்துகின்றன (12:4-6).

6. ஆவியானவர் தமது வரங்களை ***ஒவ்வொருவர்*** மூலமாகவும் வெளிப்படுத்துகிறார் (12:7,11).

7. ஒவ்வொரு விசுவாசிக்கும் பிற விசுவாசிகளுக்கு ***ஊழியம்*** செய்யும் கடமையுண்டு (12:7).

8. ஆவியின் வரங்களே ஆவியின் அனுக்கிரகம் அல்லது ***வெளிப் பாடு*** ஆகும். அதாவது வரங்களின் மூலமாக ஆவியானவர் கேட்கக் கூடிய, காணக்கூடிய, உணரக்கூடியவராகிறார் (12:7-10).

9. விசுவாச வரத்தை அனைத்து வரங்களையும் இயக்கும் அடிப்படை வரமாகப் பொதுவாக்கினால், மற்ற எட்டு வரங்களும் ***நான்கு ஜோடிகளாக*** அமையும். அவையாவன: (அ) ஞானத்தைப் போதிக் கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும்; (ஆ) குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் சக்தியும்; (இ) தீர்க்கதரி

சனமும் ஆவிகளைப் பகுத்தறிதலும்; (ஈ) பற்பல பாஷைகளைப் பேசுதலும், வியாக்கியானம் பண்ணுதலும். (இவை விவிலியத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையிலேயே உள்ளன) (12:8-10).

10. ''என்ன'' என்பதற்கு அறிவும், ''எப்படி'' என்பதற்கு ஞானமும் பதில் தரும் (மத் 22:15-22; அப் 15:25-28). மனிதருக்குள் அதிக மாக விரும்பப்படும் அற்புதங்கள் தெய்வீக சுகங்களே (அப் 4:30). தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு ஊடுருவிப் பார்க்கும் பகுத்தறிதல் அடிப்படையானதாகும் (1 கொரி 14:24,25,29,30). வியாக்கியானம் இல்லாது சபையில் பேசப்படும் பற்பல பாஷை கள் பயனற்றவை (14:27,28).

11. 1 கொரிந்தியர் 12:8-11இல் நான்கு முறை வலியுறுத்தப்படுவது ***''அதே ஆவியானவர்''*** என்பது. இதன் படிப்பினை: எல்லா வரங்களின் தன்மை அல்லது சாரம் ஒன்றே. எனவே போட்டி என்பது மடமை.

12. தேவையான வரத்தையும், அதை வெளிப்படுத்தவேண்டிய நபரையும் ஆவியானவர் தமது சித்தம் அல்லது விருப்பப்படி ***தெரிந்தெடுக்கிறார்*** (12:11). உற்சாகமும் கீழ்ப்படிதலுமுள்ள வனே பொதுவாகத் தெரிந்தெடுக்கப்படுகிறான் (14:12,37). அந்தந்தச் சூழ்நிலையின் குறிப்பான தேவையானது தகுதியான வரத்தைத் தீர்மானிக்கிறது (14:19,26).

13. உடலின் உறுப்புகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் இணைந்து செயல்படுவதுபோல, ஆவியின் வரங்களும் ***சக சார்புத் தன்மையில்,*** அதாவது ஒன்றையொன்று சார்ந்து, ஒருவர் அல்லது பலர் மூலமாக வெளிப்படும். ஒரு வரத்திற்கு அடுத்த வரம் தேவை (10ஆவது குறிப்பைக் கவனிக்க) (12:12,15-21).

14. இரு தேற்றரவாளரின் ஊழியங்களும் ஒன்றையொன்று ***சார்ந்து நிறைவாக்குபவை.*** இரண்டாம் தேற்றரவாளன் (பரிசுத்த ஆவியா னவர்) நம்மை முதலாம் தேற்றரவாளனுக்குள் (இயேசு கிறிஸ்து) ஞானஸ்நானப்படுத்துகிறார். அடுத்து, முதலாமவர் இரண்டா



மவருக்குள் ஸ்நானப்படுத்துகிறார். முதற்செயல் (கிறிஸ்துவுக் குள்) நமக்கு அதிகாரத்தையும், இரண்டாம் செயல் (ஆவியானவர் மூலம்) நமக்கு வல்லமையையும் அருளுகிறது (12:13).

15. தேவ மக்களின் ஒருமனப்பாட்டிற்குத் ***தடையானவை*** யாவற் றையும் ஆவியானவர் தகர்க்கிறார் (12:13).

16. எல்லா வரங்களும் ***ஒருங்கே விருத்தியடைய*** நாம் முயற்சிக்க வேண்டும். சில வரங்களில் தனிக் கவனமும் தேர்ச்சியும் அவ சியம்தான்; ஆனால் மற்றவற்றை விட்டுவிட்டு அப்படிச் செய்யக் கூடாது (12:17,19).

17. ''பலவீனமுள்ளவைகளாய்'' அல்லது ''கனவீனமாய்க்'' காணப் படுகிற வரங்களை அற்பமாய் எண்ணவோ ***அசட்டை*** செய்யவோ கூடாது (12:21-24).

18. குறிப்பிட்ட ஒரு சில வரங்களை மட்டும் அளவுக்குமீறி ***முக்கியப் படுத்துவது*** நிச்சயமாய்ப் பிரிவினைகளை உண்டாக்கியே தீரும் (12:25).

19. ஒருவருக்கொருவர் ***கவனிப்பும், ஊக்குவிப்பும்*** காணப்பட்டால் வரங்கள் விருத்தியடையும் (12:25-27). எடுத்துக்காட்டாக, தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் பற்பல பாஷைகளைப் பேசு கிறவனையும், அல்லது, ஞானவரத்தை வெளிப்படுத்துகிறவன் பகுத்தறிகிறவனையும், இப்படியாக ஊக்குவிக்கவேண்டும்.

20. ஒரு நபர் ஏதாவதொரு வரத்தை வெளிப்படுத்துகையில் அதில் ***குறைவோ குற்றமோ*** இருப்பின், நியாயந்தீர்த்துவிட அல்ல, ஆனால் கரிசனையோடு உதவி செய்ய பிற அங்கத்தினர்கள் அவரைச் சந்தித்துப் பேசவேண்டும். அப்படியே, ஒருவன் ஒரு வரத்தை வெளிப்படுத்தும்போது, மகிமையாய் ***வெற்றி*** காணும் போது, மற்ற அங்கத்தினர்கள் எவ்விதத்திலும் பொறாமைக்கு இடங்கொடாமல் அவனோடு மகிழவேண்டும் (12:26).

21. சபைகளுக்கிடையேயுள்ள ஊழியத்திற்கும், வெளியுலக ஊழி யத்திற்கும், உள்ளூர்ச் சபைக்குள் இருக்கும் ஊழியத்திற்கும்

தேவன் சபையில் ஏதுக்களைத் தந்துள்ளார். நமக்கு மூவகைக் கடமை யுண்டு: (அ) நமது சொந்த ***உள்ளூர்ச் சபையின்*** அங்கத் தினருக்கு ஊழியம்; (ஆ) ***மற்ற சபைகளின்*** அங்கத்தினருக்கு ஊழியம்; (இ) ***சபைக்கு வெளியேயிருக்கும்*** திரளுக்கு ஊழியம். இக்கடமை அல்லது பொறுப்பின் அளவும் தன்மையும் எல்லா ருக்கும் ஒன்று போலிராது (12:28-30).

22. எல்லாரும் அப்போஸ்தலரல்ல, ஆனால் எல்லாரும் அப்போஸ் தலரைத் ***தாங்கவேண்டும்;*** எல்லாரும் குணமாக்கும் வரங்களு டையவரல்ல, ஆனால் எல்லாரும் இத்தகைய நற்செய்தி ஊழி யரை ***ஊக்குவிக்கவேண்டும்;*** எல்லாரும் சபையில் ஆளுகிறவர் களல்ல, ஆனால் எல்லாரும் இவ்விதத் தலைவரோடு ***ஒத்து ழைக்கவேண்டும்*** (12:26-30).

23. தேவனிடம் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர வரங்கள் கிடையா. ***''முக்கியமான''*** வரங்கள் என்பது அந்தந்தச் சூழ் நிலைக்கு ''மிகப் பொருத்தமான'' வரங்களைக் குறிக்கும் (12:31; 14:5).

24. ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்துவதில் அடிப்படை ***நோக்கம்*** அன்பாக இருக்கவேண்டும். இங்கு ''அன்பு'' என்பது பிறருக்குப் பணி செய்யும் கரிசனையாகும். இதுவே ''அதிக மேன்மையான வழி'' என்பது (12:31; 14:6,12).

25. பிறருக்குப் பணி அல்லது ஊழியம் செய்து அவர்களுக்குப் பக்தி விருத்தி உண்டாக்கும் உண்மையான ஆவலின்றி பற்பல பாஷைகள், தீர்க்கதரிசனம், ஞானம், அறிவு, விசுவாசம் போன்ற ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்துவது சாத்தியம். தேவன் நியமித்துள்ள முழுமையான பலனை வரங்களினால் பெற வேண்டுமானால் ***தன்னல நாட்டத்தை*** அறவே ஒழிக்கவேண் டும் (13:1,2; 14:12).

26. அன்னதானம் பண்ணுதல், இரத்தசாட்சியாய் மரித்தல் போன்ற தியாகச் செயல்களையும், மக்களுக்குப் பணி செய்யும் அல்லது தேவனை மகிமைப்படுத்தும் நோக்கின்றி, ***தற்புகழுக்காக*** மேற் கொள்ள முடியும். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்குத் தேவன் பலனளிப்பதில்லை. இப்படி, ஆவிக்குரிய வரங்கள் மட்டுமல்ல, சமூக நலச் சேவைகளும் தவறான நோக்குடையவையாய் இருக்க முடியும் (13:13).



27. வரங்களை ***அன்புடன்*** — அதாவது பிறருக்குத் தொண்டு செய்யும் கரிசனையுடன் — செயல்படுத்தும்பொழுது, நாம் சாந்தமாக, தயவாக, பாராட்டுகிறவர்களாக, கண்ணியமாக, தன்னலமின்றி, பொறுமையாக, சத்தியத்தை நேசிக்கிறவர்களாக, ஆத்திரமின்றி, நிதானமாக நடந்துகொள்ளுவோம் (13:4-6).

28. ***சகிப்புத்தன்மை,*** சந்தேகமின்மை எனும் நிலத்தில்தான் ஆவியின் வரங்கள் செழித்தோங்கும் (13:7).

29. தீர்க்கதரிசனம், பற்பல பாஷைகள் பேசுதல், அறிவு ஆகியவை ***தற்காலிகமானவை,*** அல்லது இகத்துக்கடுத்தவை. அதாவது, பர லோகத்தில் இவை நமக்குத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, பரலோகில் என்ன தீர்க்கதரிசனம் உரைப்போம்? யாவும் நிறை வேறியிருக்குமே! ஆனால் அன்போ நித்தியமானது. பரலோகில் ஒன்றித்து வாழ எல்லா விசுவாசிகளுக்கும் அது தேவைப்படும்! (13:8).

30. புதிய வானம், புதிய பூமி எனும் ***நிறைவான நிலை*** வரும்போது நமது தற்போதைய குறைந்த அறிவும், நாம் குறைவாய்த் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் ஒழிந்துபோகும். எடுத்துக்காட்டுகள்: (அ) குழந்தைப் பருவம் — புருஷத்துவம்; (ஆ) கண்ணாடியில் நிழல் — முகமுகப் பார்வை (13:9-12).

31. பரிசுத்த ஆவியானவரில் நாம் மூழ்கியிருக்கும்போது, அவர் நம்மை விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றில் ***கட்டி யெழுப்புகிறார்***. இன்றைக்கான விசுவாசம், நாளைக்கான நம்பிக்கை, என்றைக்குமான அன்பு! (13:13; யூதா 19-21).

32. சபையில் ஆவியின் வரங்களை வெளிப்படுத்த விரும்பும்போது, பிறர்பால் அன்பினால் உந்தப்படுவோமானால், அன்னிய பாஷை யில் பேசுவதைவிடத் தீர்க்கதரிசனம் சொல்லவே நாடுவோம்.

ஏனெனில், தீர்க்கதரிசனம் சொல்லுதல் சபைக்குப் பக்திவிருத்தியுண்டாக்கும்; அன்னிய பாஷையோ அர்த்தம் சொல்லப்படாவிட்டால் பேசுபவருக்கு மட்டும் பக்திவிருத்தியுண்டாக்கும் (14:1,4,5).

33. அன்னிய பாஷை தேவனை நோக்கியதாகும். எனவே அது ஜெபத்திலும் துதியிலும் சேரும்; தீர்க்கதரிசனமோ சபையாரை நோக்கியதால் பிரசங்கத்தோடும் அல்லது புத்தி சொல்லுதலோடும் சேர்ந்து வரலாம் (14:2,3).

34. அன்னிய பாஷையானது ஒருவரும் அறியமுடியாத இரகசியங்களை உள்ளடக்கியுள்ளது; தீர்க்கதரிசனமோ பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் நிறைந்த நேரடிச் செய்திகளை மனிதருக்குக் கொண்டு வருகிறது (14:2,3).

35. அன்னிய பாஷை சொந்த பக்திவிருத்திக்கு மிக ஆசீர்வாதமானது; எனவே அது எல்லாருக்கும் தேவை. தீர்க்கதரிசனமானது சபைக்குப் பெரிதும் பக்திவிருத்தியளிப்பதால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்படி யாவரும் அதை நாடவேண்டும் (14:4,5,31).

36. ***அர்த்தம்*** சொல்லுதலோடுள்ள அன்னிய பாஷையானது சபைக்குப் பக்திவிருத்தி உண்டுபண்ணுவதில் கிட்டத்தட்ட தீர்க்கதரிசனத்தைப் போலமைகிறது (14:5).

37. சபையினருக்குத் தேவ ஊழியர் ஆசீர்வாதமாயிருக்கவேண்டுமானால், அவர்கள் திட்டவட்டமான வெளிப்பாடு, அறிவு, தீர்க்கதரிசனம் அல்லது போதக வார்த்தைகளுடன் சபையாருக்கு ஊழியம் செய்யவேண்டும். 1 கொரிந்தியர் 12:28இல் சொல்லப்பட்டுள்ள மூன்று ஊழியருக்கு முறையே இவை அடிப்படை வரங்களாகும். ஞானத்தாலும் அறிவாலும் அறியப்படுபவர் அப்போஸ்தலர்; தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுவர்; போதகர் போதிப்பர். இம்மூவரும் பொதுவாக சபைகளுக்கிடையே பணிசெய்யும் சலன ஊழியராவர். (''நான் உங்களிடத்தில் *வந்து*'' எனும் பவுலின் வார்த்தைகளைக் கவனிக்க) (14:6).



38. அர்த்தம் சொல்லுதல் இல்லாத அன்னிய பாஷைகள், சத்தத்தில் வித்தியாசம் காட்டாவிட்டால் மக்களைக் குழப்பும் புல்லாங்குழல், சுரமண்டலம், எக்காளம் போன்றவையாகும். படைக்கா, பந்திக்கா, எதற்கு ஆயத்தப்படவேண்டுமெனத் தெரியாமல் மக்கள் திகைப்பர்! (14:7-11).

39. தனிமையில் ஜெபித்தலையும், ஸ்தோத்திரம் செய்தலையும், துதித்தலையும், தொழுதலையும் அன்னிய பாஷை மேம்படுத்தும் (14:14-18).

40. அர்த்தம் சொல்லப்படுமானால் அன்னிய பாஷையில் ஜெபித்தலும் பாடுதலும் சபையில் அனுமதிக்கப்படும். அன்னிய பாஷையில் பேசுகிறவர் அல்லது கேட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் அர்த்தம் சொல்லலாம். அர்த்தம் சொல்லுதலுக்காக ஜெபிக்க வேண்டும் (14:13,15,27,28).

41. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டதும் (28:7-14), பெந்தெகொஸ்தே நாளன்று நடந்ததும்போல, சத்தியத்தை எதிர்க்கும் அவிசுவாசிகளுக்கு எச்சரிப்பின் அடையாளமாகத் தேவன் சில வேளைகளில் அன்னிய பாஷைகளைப் பயன்படுத்துவார். தீர்க்கதரிசனம் உரைத்தலோ முக்கியமாக விசுவாசிகளுக்கே பயனளிக்கிறது. தீர்க்கதரிசனம் உரைத்தலால் வெளிப்படையாய் உணரப்படும் தேவப் பிரசன்னத்தால் விசுவாசிகள் ஓர் அறையில் பக்திவிருத்தியடைந்து கொண்டிருக்கையில் இரட்சிப்பையோ ஆவியின் வரங்களையோ அறியாத ஒருவன் அறைக்குள் நுழைய நேரிட்டால், அவன் மெய்ச்சிலிர்க்கும் தேவப் பிரசன்னத்தால் தாக்கப்பட்டு அவர்முன் அறிக்கையோடு நொறுங்கி விழுந்து அவரைத் தொழுதுகொள்ளுவான் (14:22-25).

42. புதிய ஏற்பாட்டுச் சபைக் கூடுகையில், அங்கத்தினர் ***ஒவ்வொருவரும்*** சபையின் பக்திவிருத்திக்காக, ஒரு சங்கீதம், போதனை, அன்னிய பாஷை, வெளிப்பாடு, அல்லது வியாக்கியானம் மூலம் உற்சாகமாய்ப் பங்கேற்க வேண்டும் (14:26).

43. சபை கூடிவரும்போது ஒவ்வொரு அங்கத்தினரும் தீவிர ஈடுபாடு கொள்ளும்படி சாதகச் சிந்தையோடு தேவ ஊழியர் சபையினரை

ஊக்குவிக்கவேண்டும். பாதகச் சிந்தையும், எதிர்மறை வார்த்தைகளும் மக்களைக் கொல்லும் (14:26,5,31,39).

44. சபை கூடுகையில் ஆவியின் வரங்கள் தகுதியான ***சமநிலையில்*** செயல்படவேண்டும். எடுத்துக்காட்டாக, நேரம் முழுவதும் அன்னிய பாஷையிலோ அல்லது தீர்க்கதரிசனத்திலோ செலவழித்துவிடக்கூடாது. இருவர் அல்லது மூவர் பற்பல பாஷைகளில் பேசலாம்; இருவர் அல்லது மூவர் தீர்க்கதரிசனம் சொல்லலாம். பாஷைகள் வியாக்கியானம் செய்யப்படவேண்டும்; தீர்க்கதரிசனம் நிதானிக்கப்படவேண்டும் (14:27-29).

45. ஆவியின் வரங்களது பூரண ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்க ***குழுச்சிந்தை*** அத்தியாவசியம். எடுத்துக்காட்டாக, அடுத்த விசுவாசியும் பகிர்ந்துகொள்ள ஏதாவது இருப்பதாக நான் உணருவேனானால், எனக்குத் தோன்றும் எல்லா ஏவுதல்களையும் முழுமூச்சாய்ப் பேசித் தீர்த்துவிடவேண்டுமென்று நான் எண்ணக்கூடாது. இருக்கும் நேரத்தில் எவ்வளவு அதிகமான பேருக்குச் செயல்பட வாய்ப்பு கொடுக்கமுடியுமோ அவ்வளவு என்பதே சட்டமாயிருக்க வேண்டும் (14:29-31).

46. ஆவியின் வரங்கள் செயல்படுவதின் இறுதி விளைவு கற்றலும் தேறுதலுமே (Learning and Comfort). அதாவது, ***அறிவும் ஆறுதலுமே.*** கிறிஸ்து இயேசு சத்தியமாகவும் தேவனது முதல் தேற்றரவாளனாகவும் வந்தார்; பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியாகவும், இரண்டாம் தேற்றரவாளனாகவும் அனுப்பப்பட்டார் (14:31; யோ 14:16).

47. ஆவியின் வரங்களின் வெளிப்பாடு ஒருபோதும் ***மனிதக் கட்டுப்பாட்டுக்கு*** மீறியதல்ல. வரங்கள் விருத்தியடைய நமது ஒத்துழைப்பு எப்படித் தேவையோ, அப்படியே வரங்களின் ஒழுங்கும் கிரமமுமான செயல்பாட்டிற்கும் வேத வசன ஒழுங்குகளின் படியான நமது கட்டுப்பாடு அவசியம் (14:32-40).

48. வரங்கள் இயற்கைக்கப்பாற்பட்டு உன்னத ரீதியில் செயல்பட்டாலும், நாம் தேவ வழிநடத்துதலுக்கு முழுவதும் இசைந்து அவரோடு இணங்கிச் செல்வோமானால் எவ்விதக் குழப்பமும் ஏற்படாது (14:33).



49. வரங்களின் செயல்பாட்டில் சபையினரைத் தெய்வீக ஒழுங்கின்படி, தேவன் தங்களுக்குத் தரும் வழிநடத்துதலால், கிரமமாய் அவர்களை முதிர்ச்சிக்கு நடத்திச்செல்லும் பெரும் பொறுப்பு சபைத் ***தலைவர்களுக்கு*** உண்டு (14:37,20).

50. ஆவிக்குரிய வரங்களைக் குறித்த போதனைகள் தங்களுக்கு வேண்டாமென்று தள்ளி ***அறியாதிருக்கும்*** சிலருண்டு. நாம் அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் சபையில் எவ்விதத் தலைமைக்கும் பொறுப்புக்கும் வருவார்களானால் மிகுந்த சேதம் விளைவிப்பர் (12:1; 14:37,38).

■

*ஆவியின் வரங்களை அறிந்திடுவோம்,*
*ஆண்டவர் வழிதனில் நடந்திடுவோம்.*

*இயேசுவை ஆண்டவர் என ஏற்போர்*
*மாசற ஆவியின் அருள் பெற்றோர் — அவர்*
*தாசராய் வாழ்ந்திடத் துணிந்திடுவார்,*
*பாசமாய் என்றுமே பணிபுரிவார்.*

*வரங்களில் பற்பல வகை உண்டு;*
*பரமனே அவரவர்க் களிப்பதுண்டு — என்றும்*
*திறமுடன் அவைகளை வாழ்வினிலே*
*பிறர் நலம் கருதியே பேணிடவே.*

*யாவிலும் சிறந்த நல் வழியறிவோம்,*
*பாரினில் அதுவே அன்பென்போம் — அது*
*சாவினைச் சிலுவையில் வென்றதுவே;*
*சாவிலும் அழிந்திடாப் பண்பதுவே.*

— யாரோ?

*(''ஏற்றுக்கொண்டருளுமே, தேவா''*
*என்ற பாடலின் மெட்டு பொருந்தும்.)*

**12**

# வரங்களை அப்பியாசியுங்கள்!

## Using the Spiritual Gifts

உலகெங்கும் ஆன்மீக வரங்களில் காணப்படும் புத்தார்வம் தேவன் தமது சபையை ஆதிநிலைக்கு விரைவாய் எடுத்துச்செல்லு கிறார் என்பதை நிரூபிக்கிறது. பின்மாரி வாக்குகளெல்லாம் நிறை வேறிவருகின்றன (யோவேல் 2:23-29). பூவுலகில் அவரது பணியை முடிக்க தேவன் தரும் ஏதுக்களே வரங்களாகும். நாம் அவற்றைப் பயன்படுத்தாவிடில் அவரது திட்டம் பாதிக்கப்படும்.

### வரங்களின் பட்டியல்கள்

புதிய ஏற்பாட்டில் குறைந்தது ஆறு இடங்களில் வரங்களின் பட்டியல் உண்டு —

**அ) மாற்கு** 16:17,18, ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடை யாளங்களாவன: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான மொழிகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியுள்ளோர்மீது கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள்.''

**ஆ) ரோமர்** 12:6-8, ''நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியால், நம்மில் தீர்க்க தரிசனம் சொல்லுகிற வரமுடையவன் விசுவாசப்பிரமாணத்திற் கேற்றதாகச் சொல்லட்டும். ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கட்டும்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கட்டும்; தலைவனானவன் கவனத் தோடிருக்கட்டும்; இரக்கம் செய்கிறவன் உற்சாகத்துடன் செய்யட்டும்.''



**இ) 1 கொரிந்தியர்** 12:7-10, ''ஆவியின் வெளிப்பாடு அனை வருடைய பயனுக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினால் ஞானத்தை போதிக்கும் வசனமும், வேறொ ருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொ ருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவ னுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவி களைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.''

**ஈ) 1 கொரிந்தியர்** 12:28, ''தேவனானவர் சபையில் முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.''

**உ) எபேசியர்** 4:7-11, ''கிறிஸ்துவின் ஈவின் அளவிற்கேற்ப நம்மில் ஒவ்வொருவனுக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது ... அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.''

**ஊ) 1 பேதுரு** 4:10,11, ''அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனது வாக்கியங்களின்படி போதிக்கட்டும்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பலத்தின்படி செய்யட்டும்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக.''

இந்த ஆறு வேதப் பகுதிகளையும் கவனித்துப் பார்க்கும்போது சில குறிப்புகள் தெளிவாகின்றன —

## 1. ஒவ்வொருவருக்கும் வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வரம் பெற்றோர் என்று விசுவாசிகளுக்குள் சிறப்புக்கூட்டம் ஒன்றில்லை. தேவப் பிள்ளைகள் அனைவரும் வரம் பெற்றவர்களே. வரமில்லாத விசுவாசியே கிடையாது.

சபையென்பது கிறிஸ்துவின் உடலாகும். ஒவ்வொரு விசுவாசியும் அதில் ஓர் அங்கம் (1 கொரி 12:27). இந்த அங்கங்களை மனிதவுடலின் உறுப்புகளுக்கு வேதம் ஒப்பிடுகிறது (1 கொரி 12:14-27). ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட திறன் உண்டு. கண்களுக்குப் பார்க்கும் வரமுண்டு; காதுகளுக்குக் கேட்கும் வரமுண்டு; நாக்குக்கு ருசிக்கும் மற்றும் பேசும் வரமுண்டு; மூக்குக்கு முகரும் வரமுண்டு; தோலுக்குத் தொடுதலை உணரும் வரம். அப்படியே உள்ளுறுப்புகளும் குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும் வரம் பெற்றுள்ளன. இருதயத்திற்கு இரத்தத்தை எங்கும் சுற்றியனுப்பும் வரம்; நுரையீரலுக்குச் சுவாசிக்கும் வரம்; ஈரலுக்கு நச்சு அகற்றும் வரம்; இரைப்பைக்குச் செரிக்கும் வரம்; இப்படி ஏராளம்.

தாலந்துகளின உவமையில் ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் ஒன்று அல்லது கூடுதல் தாலந்துகள் கொடுக்கப்பட்டதைக் காண்கிறோம் (மத் 25:14,15). ஒன்றும் பெறாதவன் ஒருவனுமில்லை!

## 2. வரங்களின் வகையும் அளவும் வேறுபடும்.

''விசுவாச அளவு'' என்பது நபருக்கு நபர் வேறுபடும் (ரோ 12:3). ''அருளப்பட்ட கிருபைக்கேற்ப'' வரங்கள் இருக்கும் (ரோ 12:6; 1 பேது 4:11). ஆவியானவர் ஒவ்வொருவனுக்கும் ''பகிர்ந்து கொடுக்கிறார்'' (1 கொரி 12:11). ஒரே நபர் மீது அத்தனையையும் கொட்டிவிடுவதில்லை. அவர் பகிர்ந்துகொடுக்கிறார்! ''கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத்தக்கதாக'' நம்மில் ஒவ்வொருவருக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது (எபே 4:7).

தாலந்துகளின் உவமையை மறுபடியும் கவனியுங்கள். ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், அடுத்தவனுக்கு இரண்டும், மற்றவனுக்கு ஒன்றும் கொடுக்கப்பட்டன. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக,



அதாவது, ஒவ்வொருவனும் எவ்வளவு செய்வானென்று தலைவனுக்குத் தெரிந்தபடி, தாலந்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டன (மத் 25:15). வேலை இல்லாமலுமில்லை, வேலைக் குறைவுமில்லை.

## 3. வரங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று.

''தேவன் பகிர்ந்த ...'' (ரோ 12:3). ''நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்களானபடியினாலே ...'' (ரோ 12:6). ''ஆவியின் அனுக்கிரகம் அளிக்கப்பட்டிருக்கிறது'' (1 கொரி 12:7). ''தேவனானவர் சபையிலே ... ஏற்படுத்தினார்'' (1 கொரி 12:28). ''நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது'' (எபே 4:7). ''அவனவன் பெற்ற வரத்தின்படியே ...'' (1 பேது 4:10).

கிறிஸ்துவை விசுவாசித்துப் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்போது, குறிப்பிட்ட பணிகளோடும் தகுந்த வரங்களோடும் நாம் கிறிஸ்துவின் உடலாகிய சபையில் வைக்கப்படுகிறோம் (1 கொரி 12:18). அவ்வரங்களைப் பயன்படுத்தி, பணிகளை நிறைவேற்றுவது நமது கடமை (ரோ 12:6). நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் பயன்படுத்தப்படாது உறங்கிக்கிடப்பது ஏராளம் என்பது எத்தனை துக்கம்! நமக்குள் இருக்கும் ''தேவ வரத்தை அனல்மூட்டி எழுப்பி''விடுவோம் (2 தீமோ 1:6,7). பவுலோடு அவ்வளவு நெருங்கியிருந்த தீமோத்தேயுவுக்கும் இந்த நினைவூட்டுதல் தேவையாயிருந்தது!

வரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது நமது விருப்பத்தின்படியல்ல, தேவ சித்தத்தின்படியே. ''தமது சித்தத்தின்படியே பகிர்ந்துகொடுக்கிறார்.'' ''தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் உடலிலே வைத்தார்'' (1 கொரி 12:11,18). இல்லாததை நாடுவதல்ல, இருப்பதை வெளிப்படுத்தவேண்டுமென்பதே ஆன்மீக வரங்களை ''விரும்புங்கள்'' என்பதின் பொருளாகும் (1 கொரி 14:1). அதே வசனத்தில் ''அன்பை நாடுங்கள்'' என்று பவுல் எழுதினார். இதற்குப் பொருள் அன்பைத் தேடுங்கள் என்பதல்ல, அன்பைக் காட்டுங்கள் என்பதே!

குறிப்பான பொறுப்புகளில் தேவன் நம்மை நியமிக்கையில் அதற்குத் தேவையான வரங்களையும் கூடவே தந்துவிடுகிறார். அப் போஸ்தலராகப் புறப்பட்டுச் செல்ல சீடரில் பன்னிருவரை இயேசு அழைத்தபோது குணமாக்கும் வரங்கள் மற்றும் அற்புதங்கள் செய்யும் சக்தியை அவர்களுக்களித்தார் (மத் 10:1-5). அப்படியே தீமோத்தே யுவும் மூப்பர்களால் குறிப்பிட்டதொரு பணிக்காக நியமிக்கப்படுகை யில் அதற்குரிய வரத்தைப் பெற்றார் (1 தீமோ 4:14). படைக்கலன் கொடுக்காது தனது படைவீரரைப் படைக்கு எந்தப் படைத்தலை வனாவது அனுப்பிவைப்பானா?

### 4. இன்னும் மற்ற வரங்களுமுண்டு.

இந்த வரங்களின் பட்டியல்களை ஒன்றோடொன்று ஒப்பிடுகை யில், இப்பட்டியல் ஒன்றும் முழுமையானது (exhaustive) அல்ல, எடுத்துக்காட்டுகளாகத்தான் (suggestive) தரப்பட்டவை என்பது தெளிவாகும். இந்தப் பட்டியல்களில் நேரடியாகச் சொல்லப்பட்டிராத வரங்கள் எத்தனையோ உண்டு என்பது நிச்சயம். இதோ சில எடுத்துக் காட்டுகள்—

அகத்தூண்டுதலான பாடல்களை இயற்றவும், குயில்போல் பாடவும், இனிமையாய் ***இசைக்கவும்*** தம் பரிசுத்தர் பலருக்குத் தேவன் வரமளித்துள்ளார். இவ்வித அசாதாரண வரம் பெற்றதில் தாவீது ஒருவர். ''அபிஷேகம் பெற்று ... இன்பமாய்ப் பாடின தாவீது!'' (2 சாமு 23:1).

பிறந்து ஆறு வாரங்களில் காய்ச்சலினால் பார்வையிழந்த அந்த ஃபேன்னி கிராஸ்பி (1823-1915) அம்மையார் 92 வயதில் இறந்தார் கள். ஒருநாளும் பழைமையாகாத ஆயிரக்கணக்கான ***பாடல்களை*** இயற்ற தேவன் அவர்களை அற்புதமாய்ப் பயன்படுத்தினார். *"Blessed assurance, Jesus is mine"* என்பது அவர்களது பாடல்களில் ஒன்று!

தமது புகழைப் பாடுவதிலும், பறைசாற்றுவதிலும் தேவன் ***கலையை*** வெகுவாய்ப் பயன்படுத்தி வந்திருக்கிறார். ஆராதனைக்



கூடத்திற்கு ''சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும்'' உண்டாகத் தேவன் பெச லெயேலை ஆவியினால் நிரப்பினார் (யாத் 31:1-5). நண்பர் சுவி சேஷ ஜெபக்குழுவின் சகோதரன் நவநீதர் இதற்கோர் நவீன எடுத்துக் காட்டு. அவரது ஓவியங்கள் அநேகரைக் களங்களுக்குத் துரத்தி விட்டுள்ளன.

மிஷனரிகளும் வேத மொழியாக்கர்களும் புதிய ***மொழிகளைக்*** குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள முடிவது தேவனருளும் வரத்தி னாலேயே. இல்லையேல், அத்தனை இந்திய மொழிகளில் வேதத்தை மொழிபெயர்க்க வில்லியம் கேரிக்கு (1761-1834) எவ்விதம் முடிந் திருக்கும்? தேவன் வரமளித்தார்; அவரும் உழைத்தார்.

தேவன் சர்வ வல்லவர். அவரது செல்வம் அளவிட முடியாதது. தனது வாளியைக் கொண்டு சமுத்திரத்தையே காலியாக்கிவிட சிறுவனொருவன் முயன்றானாம். மொத்தமே ஒன்பது வரங்கள்தான் என்று நாம் சாதித்தால் நாமும் அவனைப்போன்ற அறிவாளிதான்! (பக்கங்கள் 241-244 மற்றும் 303-304ஐப் பார்க்க.)

பாடுதல், வரைதல், மொழி பயிலுதல் போன்றவையெல்லாம் தாலந்துகள்தானே தவிர வரங்களல்ல என ஒருவேளை வாதாடலாம். ஆனால் தாலந்துகள் எனப்படுபவைகளைக் கொடுப்பதும் தேவன் தானே? தேவன் ஈவாகத் தரும் எதுவும் ஈவு அல்லது வரம் எனப்படும். 1 கொரிந்தியர் 4:7 இதை விளக்குகிறது. ''உன்னைச் சிறப்பானவனா கும்படிச் செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் பெருமிதம் கொள்ளுகிறாய்?'' இயற்கை யான தாலந்துகள் என அழைக்கப்படுபவை தேவனது பரம திட்டங் களுக்குப் பயன்படும்படி அவரது பலிபீடத்தில் படைக்கப்பட வேண்டும்.

எல்லா விசுவாசிகளுக்கும் வரமுண்டு என அறிந்துகொண்ட நாம் இப்போது ஒவ்வொருவரும் தனது வரங்களை அடையாளங்கண்டு அப்பியாசிப்பது எப்படி எனக் காண்போம். கீழ்க்கண்ட நான்கு கேள்விகளைக் கவனியுங்கள்—

## 1. உங்கள் விருப்பம் எங்குள்ளது?

திருப்பணியில் எப்பகுதி உங்களை அதிகமாய்க் கவருகிறதெனப் பாருங்கள். தேவனே ''விருப்பத்தையும் செய்கையையும்'' உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி 2:13).

பந்தி பரிமாறுவதில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க இதற்கென்றே ஏழு பேர் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்டனர். ஆனல் இந்த எழுவர் குழுவில் முதல் இருவரான ஸ்தேவானுக்கும் பிலிப்புவுக்கும் நாட்டமெல்லாம் நற்செய்திப்பணி நோக்கியே இருந்தது. ஸ்தேவான் தனது மாநாட்டை எருசலேமிலேயே துவங்கிவிட்டார். பிலிப்பு சமாரியாவுக்கு விரைந்தார். நற்செய்திப்பணியோடு இணைந்த குணமாக்கும் வரங்களும், அற்புதங்களும் இருவர் மூலமும் வெளிப்படத் துவங்கின (அப் 6:5,8; 8:5-7).

குணமாக்குதலும் அற்புதங்களைச் செய்தலும் பிரதானமாக நற்செய்திப்பணி மற்றும் மிஷனரி ஊழியத்திற்கடுத்த அடையாள வரங்களாகும். தமது சீடரை ஊர் ஊராகச் செல்லும் மிஷனரிகளாக அனுப்பும்போது இவ்வரங்களை இயேசு அவர்களுக்களித்தார் (மத் 10: 1,7,8). நற்செய்திப் பேராணையோடு இவ்வரங்களை இணைத்துச் சொன்னார் (மாற் 16:15,17,18). தனது மிஷனரிப் பயணங்களில் எவ்வாறு தேவன் ''அற்புத அடையாளங்களை'' நிகழ்த்தினார் என்று பவுல் எழுதினார் (ரோ 15:18,19). தொலைந்துபோனோருக்கு நன்மை செய்ய இயேசு புறப்பட்டுச் சென்றபோது ஆவியின் அபிஷேகம் இயேசுவின் மூலம் சுகமளித்தலிலும் விடுவித்தலிலும் வெளிப்பட்டது (அப் 10:38). உங்களது வாஞ்சையும் சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதில் இருக்குமானால் இதே வரங்களை உங்கள் ஊழியத்திலும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

## 2. உங்கள் திறமை எதிலுள்ளது?

எந்தவொரு ஊழியப்பகுதியிலும் உங்களுக்குச் சிறப்பானதோர் விருப்பம் இல்லாவிடில், பிற பகுதிகளைவிட எப்பகுதியில் நீங்கள் நன்றாய்ச் செயல்படுகிறீர்களெனக் கண்டுகொள்ள முயற்சியுங்கள்.



எடுத்துக்காட்டாக, பிறருக்கு ஓர் உதவியாளராய் இருப்பதில் நீங்கள் சிறந்து விளங்கலாம். 1 கொரிந்தியர் 12:28இலுள்ள வரங்களின் பட்டியலில் குணமாக்கும் வரங்களுக்கடுத்து உடனே ''உதவிகள்'' என்ற வரம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று அதிகம் தேவையான, ஆனால் அதிகம் விரும்பப்படாத, வரங்களில் இது ஒன்று. எவ்வளவுதான் வரம் பெற்றிருந்தாலும் உத்தம உதவியாளரின்றி எந்தத் தலைவனும், பிரசங்கியும் தனது பணியை நிறைவேற்ற முடியாது. இவர்கள்தான் மேடைப் பகட்டை விரும்பாது மறைவில் நின்றுகொண்டு தேவன் வெளியுலகில் பயன்படுத்தும் தாசருக்கு உதவியாயிருப்பார்கள். இவர்களை மாலைசூடா மாணிக்கங்கள் என்றொருவர் வர்ணித்தார்! ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திலிருந்து (BYM) ஓய்வு பெற்ற ஊழியர் சகோதரன் A. ஜெயராஜ் அவர்கள் இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு.

நீங்கள் நன்றாய்ச் செய்யக்கூடிய ஊழியப் பகுதியில் உங்களை முழுவதுமாய் ஊற்றிவிடும்போது அதில் வளருவதைக் காண்பீர்கள். ''உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு'' (1 தீமோ 4:14.15). கொஞ்சத்தில் உத்தமமாயிருப்பவர்களைத் தேவன் உயர்த்துவார் (மத் 25:21; 1 தீமோ 3:13).

## 3. உங்கள் பொறுப்பு என்ன?

உங்கள் கரங்களில் தேவன் ஒப்படைத்திருக்கும் வேலைக்கு உங்களை முற்றும் கொடுத்துவிடுங்கள். ''அசதியாயிராமல் கவனமாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்'' (ரோ 12:11). அப்பொழுது தேவையான வரங்கள் தானாகவே வெளிப்படும்.

திருவசனத்தைப் பிரசங்கிக்கவோ, போதிக்கவோ அழைக்கப்பட்டிருந்தால், அதை உத்தமமாய், ஊக்கமாய்ச் செய்துகொண்டேயிருங்கள். ஞான வசனம், அறிவு வசனம், தீர்க்கதரிசனம், போதித்தல் (ரோ 12:7ஆ) போன்ற வரங்கள் தனித்தோ சேர்ந்தோ நீங்கள் செய்தி கொடுக்கும்போது செயல்படுவதைக் காண்பீர்கள்.

நீங்கள் ஓர் ஆலோசகராக அழைக்கப்பட்டிருந்தால், பகுத்தறிதல், ஞான வசனம், அறிவு வசனம், தீர்க்கதரிசனம், புத்தி சொல்லுதல் (ரோ 12:8அ), ஆறுதல்படுத்துதல் (அப் 4:36) போன்ற வரங்கள் வெளிப் பட எதிர்பார்க்கலாம்.

ஆளுகைகள் (1 கொரி 12:28), ஜார்ஜ் முல்லர் (1805-1898) போன்று துணிந்து காரியங்களில் இறங்கும் விசுவாசம், கவன நிறைவு (ரோ 12:8ஆ) போன்ற வரங்கள் தலைமைப்பணிக்கு முக்கியம்.

மிஷனரிகளாகப் புறப்பட்டுச் செல்வோர் பலவிதமான வரங்கள் தங்களுக்கருளப்படுவதைக் காண்கின்றனர். விசுவாச வரமானது அவர்கள் வசதிகளைத் தியாகம்பண்ணி, வாழ்வைப் பணயம் வைத்து, களங்களுக்குப் புறப்பட்டுச்சென்று, திரும்பிவராதிருக்கச் செய்கிறது (எபி 11:8,17,15). *Peace Child* என்ற சரிதை ஞான வசன வரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. குழப்பமான கலாச்சாரச் சூழலில் நற்செய் தியை விளக்கும்போது எழும் விநோதப் பிரச்னைகளைத் தீர்க்க அறிவு வசன வரம் உதவும். புறவினத்தாரிடையே மிஷனரிப்பணி செய்த போது உருவாகியதோர் பிரச்னையைத் தீர்க்க இந்த வரத்தை அப் போஸ்தலன் யாக்கோபு வெளிப்படுத்தினார் (அப் 15:13-22). தன் கையைக் கவ்விக்கொண்ட பாம்பை அலட்சியமாய்ப் பவுல் உதறி யெறிந்தார் (அப் 28:3-5). இது மாற்கு 16:18இன் நிறைவேறுதலாம். விஷப்பூச்சிகளிலிருந்து அற்புதமாய்த் தப்பியதைக் குறித்த சாட்சிகள் காடு மலைகளில் பணியாற்றும் மிஷனரிகளுக்கு ஏராளம். பணிக் களங்களில் குடிநீர் வசதி மிகவும் குறைவு. எல்லாவிதத் தண்ணீரையும் மிஷனரிகள் குடிக்கவேண்டிய நிலையுண்டு. அவர்கள் மாற்கு 16:18ஐ உரிமைபாராட்டிப் பத்திரமாயிருக்கிறார்கள்.

எளியவர் பராமரிப்பு, நிவாரணப்பணிகள், அனாதைகளுக்கு உதவி போன்ற பொறுப்புகளுக்கு சிலர் அழைக்கப்படுகின்றனர். ''உற்சாகத்துடன் இரக்கம் செய்தல்'' எனும் வரம் இவர்களுக்கு இன்றி யமையாதது (ரோ 12:8ஆ). பொறுமையிழக்கச் செய்யும் வேளை களிலும் இப்பணிகளிலுள்ள சகோதர சகோதரிகளின் முகங்களில் காணப்படும் புன்முறுவலே அவர்கள் வரத்திற்கு நிரூபணம்! ''தயக்க மில்லாமல் கொடுத்தல்'' என்பது இவ்வித ஊழியத்திற்குத் தேவை யான இன்னொரு வரமாகும் (ரோ 12:8அ). ''ஊழியம்'' அல்லது



பணிவிடை எனும் வரமின்றி இவ்விதப் பொறுப்புகளை நிறை வேற்றுவது சாத்தியமில்லை (ரோ 12:7அ).

குறிப்பிட்டதொரு சூழலில் எந்த வரம் செயல்படுகிறது என்று துல்லியமாக வகையறுக்க அவசியமில்லை. அப்படியே வரமொன்று வெளிப்படுமுன் அதற்கு அறிவிப்பெல்லாம் தேவையில்லை! மனித உடலின் உறுப்புகளைப் போலவே, வரங்கள் இசைவாய், இயல்பாய், இயற்கைக்கப்பாற்பட்டுச் செயல்படும்.

## 4. தேவை எங்கே?

தேவையுள்ள இடங்களுக்கும் மக்களிடமும் விரையுங்கள். மக்களின் தேவைகளால் தேவன் மனதுருகும்போது தமது வரங்களை வெளிப்படுத்துகிறார். விளையாட்டு மைதானத்தையே எட்டிப்பார்க் காமல் இருந்துகொண்டு விளையாட்டு விதிமுறைகளைக் கற்பதில் பயனென்ன?

நோயாளிகள் இருக்குமிடத்தில்தான் வைத்தியர் இருக்கவேண் டும். ''தேவனாகிய கர்த்தர் மனிதருக்குள் குடியிருப்பதற்காகத் துரோகி களாகிய மனிதருக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்'' என்று ஆவியானவர் மூலம் கிறிஸ்து பொழிந்தருளிய வரங்களைக் குறித்துத் தாவீது தீர்க்கதரிசனம் உரைத்தார் (சங் 68:18,19).

பெரும்பாலும் கிறிஸ்தவர்களே பங்குபெறும் கூட்டங்களில் அற் புதங்கள் குறைவு. மாறாக, கிறிஸ்தவரல்லாதோரிடையே நடக்கும் நற்செய்திப்பணிகளில் குணமாகுதலும், அற்புதங்களும் சாதாரணம். இரகசியம் என்ன? இதோ ஏசாயா தரும் பதில்: ''என்னைத் தேடாத வர்களாலே கண்டறியப்பட்டேன் ... இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப் படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற மக்களிடத் திற்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேன்'' (ரோ 10:20,21).

கிறிஸ்து உதித்தார், உயிர்கொடுத்தார், உயிர்த்தெழுந்தார் என்று பெயர்க் கிறிஸ்தவர்களுக்கு ஏற்கனவே தெரியும். அவர்களுக்கு வேண் டியது சுவிசேஷ அற்புதங்களல்ல, தீர்க்கதரிசன எச்சரிப்புகளே! (மத் 12:38,39). மனந்திரும்ப மறுக்கும், வணங்காக் கழுத்துள்ள, கிறிஸ் தவச் சமுதாயங்களுக்குத் திரும்பத் திரும்ப அற்புதங்களைச் செய்ய கிறிஸ்து விரும்புவதில்லை. கானாவூர், கோராசின், கப்பர்நகூம் ஆகிய

இடங்களிலுள்ளோர் இதயக் கடினத்தை இயேசு கடிந்துகொண்டார் (யோ 4:46-48; மத் 11:20-24).

கிறிஸ்துவின் பெயரே சொல்லப்பட்டிராத பிராந்தியங்களுக்குச் செல்லுங்கள். தாழ்த்தப்பட்டோரைச் சந்திக்கக் கிராமங்களுக்குப் புறப்படுங்கள். வெள்ளம், பஞ்சம், இன்னும் இதுபோன்றவற்றால் பாதிக்கப்பட்டு நலிந்துகிடப்போரைச் சந்திக்க விரையுங்கள். தொன்று தொட்டு மூடப் பழக்கங்களுக்கும் பயங்களுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிவாசிகளைச் சந்திக்கக் காடுமலைகளுக்குள் ஊடுருவுங்கள். இவ்விதம் ''தரித்திரருக்கு'' அதாவது சந்திக்கப்படாதோர், சிந்திக்கப்படாதோர் ஆகியோருக்கு நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கையில் அற்புத வரங்கள் செயல்படும்! (லூக் 7:22; 4:18,19).

## வரங்களும் ஆன்மீக நிலையும்

வரங்கள் அருளப்படுவது நமது தகுதியைப் பொறுத்ததல்ல என்பது உண்மையாயினும், வரங்களை அப்பியாசிப்பதில் நமக்கு ஆன்மீகப் பொறுப்பு அதிகமுண்டு. படைவீரர் காலைதோறும் உடற்பயிற்சி செய்வர். அது எவ்வேலைக்கும் அவர்களை ஆயத்தமாயிருக்கச் செய்யும். நாமும் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி நம்மை உறுதியாய்க் கட்டியெழுப்ப வேண்டும் (யூதா 20). அணையாத அக்கினி நமது தியானப் பலிபீடத்தில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும் (லேவி 6:12,13). ''வெளியே'' வந்து மக்களை ஆசீர்வதிக்குமுன் மோசே ''உள்ளே'' சென்று தேவனை ஆராதித்தார் (லேவி 9:23). வரங்கள் ஆயுதங்கள் போன்றவை. ''ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும்'' அவைகள் எண்ணெய் பூசி கூர்மையாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும் (மத் 17:19-21). கிரமமான வேதத் தியானத்திற்கும், ஆராய்ச்சிக்கும் போதுமான நேரம் செலவழிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் வரங்களைச் சரியாய்ப் பயன்படுத்தவும், தவறாய்ப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் ஞானம் பெறுவோம்.

■

*''எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?'' (How not to operate Gifts)* என்ற தலைப்பில் நான் கொடுத்துள்ள 10 தொலைக்காட்சிச் செய்திகளின் தொகுப்பு 5 மணி நேரம் ஓடக்கூடிய இரட்டை ஒளித்தட்டுகளில் உண்டு.



**13**

# பெந்தெகொஸ்தேயின் நோக்கம்
## The Purpose of Pentecost

ஆவியின் அபிஷேகம் ஏதாவதொரு சபையினருக்கு மட்டும் உரியது என்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. இவ்வனுபவத்தை எதிர்ப்போரின் எண்ணிக்கையும் குறைந்துவருகிறது. பெந்தெகொஸ்தே சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத தலைவர்கள், இறையியல் வல்லுநர் பலர் தாங்களே இப்புதுத் திராட்சரசத்தை ருசித்துவிட்டதால் தங்கள் கோட்பாடுகளை மாற்றிக்கொண்டனர். ஆவியின் அபிஷேகக் கூட்டத்தாரிடையேதான் திருச்சபை வளர்ச்சி அதிகம். அருள்மாரியின் கடைசி நாட்களின் கடைசியில் வேறெப்படி இருக்க முடியும்?

ஆனாலும் கவனிக்கவேண்டிய, கவலைக்கிடமான, ஒரு காரியமுண்டு. அதாவது, பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை நாம் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அபிஷேகத்தின் சுற்றுவட்ட நன்மைகளேயே பெரிதுபடுத்தி, மையக்கருத்தையோ விட்டுவிட்டோம். முக்கியமானதை இதர ஆசீர்வாதங்கள் கிரகணம்போல் மறைத்துவிட்டன. இந்தியாவைப் பொருத்தவரை பெரும்பாலான பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் இது மறுக்க முடியாதது.

பெந்தெகொஸ்தேயின் பிரதான நோக்கத்தைக் கிறிஸ்து விண்ணேகுமுன் தெள்ளத்தெளிவாய் இப்படிக் கூறினார்: ''பரிசுத்த ஆவி உங்கள் மீது வரும்போது நீங்கள் வல்லமை பெற்று ... பூமியின் எல்லை முடிவு வரை எனக்குச் ***சாட்சிகளாயிருப்பீர்கள்***'' (அப் 1:8). இதைச் சரிவரப் புரிந்துகொள்வோம். கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருக்க வல்லமை அருளுவதே பெந்தெகொஸ்தேயின் முதல் நோக்கம். பிற யாவும் பின்னரே.

பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவை குறித்து உலகைக் கண்டித் துணர்த்தவே ஆவியானவர் வந்திருக்கிறார் (யோ 16:8). பாவத்தைப் பாவிகள் அருவருத்து நீதியை அரவணைத்துக்கொள்ள அவர் ஆசிக் கிறார். வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை அறிவித்து எச்சரிக்கிறார். சபை தான் அவரது வாயாகும். ஜீவத் தண்ணீருக்கு அழைப்பு எனும் அவரது செய்தியைச் சொல்லால் அறிவிப்பது விசுவாசிகளே. ''ஆவியும் மண வாட்டியும் வா என்கிறார்கள் ... தாகமாயிருக்கிறவன் வரட்டும்'' (வெளி 22:17).

பெந்தெகொஸ்தேயின் பெரிய அற்புதம் வான் சத்தமோ, பலத்த காற்றோ, அக்கினி நாவுகளோ, அன்னிய பாஷைகளோ அல்ல. இவை யெல்லாம் முன்னுரைதான். 3000 பேர் திருமுழுக்கு பெற்றதுதான் அந்நாளின் சிகரம்! நரலோகைச் சூறையாடிப் பரலோகை நிரப்புவது தான் பெந்தெகொஸ்தே!

120 ''விசுவாசிகள்'' பெந்தெகொஸ்தே வல்லமை பெற்றபோது 3000 ஆத்துமாக்களைப் பெற்றெடுத்தனர். பெந்தெகொஸ்தே அனு பவம் பெற்றிருக்கிறோமெனக் கூறும் பெரிய ''சபைகள்'' சென்னை நகரில் மட்டும் குறைந்தது 1200 உண்டு. அந்தோ, ஒரே நாளில் ஒரு 1000 பேர் திருமுழுக்கு பெறுவதைக்கூட இந்நகர் இன்னும் காண வில்லையே! பிரச்னை எங்கே? நற்செய்தியைப் பொதுவிடங்களில் பறைசாற்றவே பெந்தெகொஸ்தே வல்லமை! ''அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று ... உரத்த சத்தமாய் ... '' (அப் 2:14). கிறிஸ்தோரே, எழுந்திருங்கள்! எடுத்தியம்புங்கள்!

உன்னத வல்லமையால் நிறையும்வரைதான் காத்திருப்பு! அடுத்து உடனே இயேசுவின் பெயரால் மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் பிரசங்கிக்கக் கால்கள் விரையவேண்டும் (லூக் 24:47-49). தமது சீடர்மீது இயேசு ஆவியை ஊதியதேன்? அனல் கொடுத்து அகமகிழச் செய்யவா? இல்லை! தமது மன்னிப்பு ஊழியப் பிரதிநிதிகளாக அவர்கள் எங்கும் செல்லவே ஆவியை ஊதினார் (யோ 20:22,23; 2 கொரி 5:18-20).



கோழைகளைப் பெந்தெகொஸ்தே தைரியசாலிகளாக்குகிறது. பெந்தெகொஸ்தேக்கு முன்னரும் பின்னரும் பேதுருவைக் கவனியுங் கள். பேதமை, படிப்பறிவின்மை, ஆனால் பயமின்மை! (அப் 4:13). நம்மிலுள்ள தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பிவிடுவோம். ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (2 தீமோ 1:6-8). அந்தகார ஆதிக்கங்களுக்கெதிராகப் ''பலமாய்ப்'' போராடி சாட்சிபகர! மாளும் மாந்தருக்கு ''அன்புடன்'' சாட்சிபகர! துன்பத்தில் துவளுவோருக்குத் ''தெளிந்த புத்தியுடன்'' சாட்சிபகர!

பதுக்கலுக்குப் பெந்தெகொஸ்தே பரம எதிரி! அது தன்னலத்தைத் தகர்க்கிறது. அதின் முதற்கனியே அன்புதானே? (கலா 5:22). இல்லா தோரோடு பகிர அது பணப்பையைத் திறக்கிறது. ''விசுவாசிகளெல் லாரும் ஒருமித்திருந்து, அனைத்தையும் பொதுவாய் வைத்து அனு பவித்தார்கள். உடைமைகளையும் சொத்துக்களையும் விற்று, ஒவ் வொருவனுக்கும் தேவையானதற்குத் தகுந்தபடி அவைகளில் எல்லா ருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்'' (அப் 2:44,45; 4:34,35). எனவே தான் பந்தி விசாரணைத் தலைவர்களும் ''பரிசுத்த ஆவியால் நிறைந்த வர்களாய்'' இருக்கவேண்டியிருந்தது! (அப் 6:3).

''எனக்கு அக்கறையுண்டு!''—இதுவே பெந்தெகொஸ்தே விசுவாசியின் முழக்கமாயிருக்கவேண்டும். எளியோருக்கு நற்செய்தி அறிவிக்க அவன் செல்லவேண்டும். இதயம் உடைந்தோருக்குத் தைலம் எடுத்துச் செல்லவேண்டும். தேம்பியழுவோரைத் தேற்ற வேண்டும். அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் கொடுக்கவேண்டும். ஒடுங்கிய ஆவிக்குப் பதிலாக அவர்களுக்கு துதியின் உடையை அணிவிக்கவேண்டும் (ஏசா 61:1-3).

தொழுகையானது பெந்தெகொஸ்தேயில் புதுப்பிறப்படைகிறது (அப் 2:11). அப்படியே தொழுகையானது சாட்சிபகருதலைப் பிறப்பிக்க வேண்டும். அபிஷேகம் பெற்ற சீடர் ''தேவனைத் துதித்து ***(அத்துடன்)*** மக்கள் எல்லாரிடமும் தயவு பெற்றிருந்தார்கள்'' (வச

47). தொழுகையில்லா சாட்சி அகமற்றது; சாட்சியில்லா தொழுகை அர்த்தமற்றது. சொல்லப்போனால், சாட்சிபகருதலே தொழுகையின் ஒரு வெளிப்பாடுதான். அது இருளிலிருப்போருக்குத் தேவனது மகத் துவங்களை அறிவிப்பதாம் (1 பேது 2:9,10).

ஆதிநிலையேகும் முயற்சிப் பணி இயக்கங்கள் தொழுகையில் தனிக் கவனம் செலுத்துகின்றன, நல்லது. தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்தலைக் குறித்த பிரசங்கங்களும் ஏராளம், பிரமாதம். ஆனால், ஆதிநிலையேகுதலும் திரும்பக் கட்டுதலும் ஏன்? ''மற்ற மனிதரும், என் நாமம் சூட்டப்படும் எல்லா இனத்தாரும் கர்த்தரைத் தேடும்படி!'' (அப் 15:15-17). தேவப்புகழ் பாடுவதைத் தேவப்புகழ் பரப்புதலிலிருந்து பிரித்தல் கூடாது (ரோ 15:9-11). மேல்நோக்கிய, சமதள, ஆகிய இவ்விரு பரிமாணங்களில் ஒன்றில்லாவிட்டாலும் இன்னும் நமது பெந்தெகொஸ்தே சரியாக ''வரவில்லை'' என்றுதான் சொல்லவேண்டும்!

பைபிளைப் பாதி விசுவாசிப்போர் அற்புதங்களின் காலம் கடந்து விட்டதென்பர். தேவனது மீந்த மக்களோ இவர்களுக்குச் செவிமடுக் காது, ஆவியின் வரங்களைக் குறித்து விவிலியத்தை ஆராய்ந்து படிக் கின்றனர். இதவாதிகளெனும் வெட்டுக்கிளிகளும், பச்சைப் புழுக் களும் அழித்துப்போட்டவைகளைத் தேவன் சபைக்குத் திரும்பத் தந்துகொண்டிருக்கிறார். இங்கும் நாம் வரங்களின் நோக்கத்தை மறந்துவிடக்கூடாது. மனிதனது சொந்த நன்மையெனும் பீடத்தில் தேவனது உன்னத நோக்கு பலமுறை பலியாகிறது.

வரங்களின் குறும் பட்டியலொன்றை இயேசு மாற்கு 16:15-18 இல் தந்தார். அது நற்செய்திப்பணியையே மையமாய்க் கொண்டது. ''நீங்கள் உலகமெங்கும் போய்ப் படைப்பு அனைத்திற்கும் சுவிசே ஷத்தைப் பிரசங்கியுங்கள் ... விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடை யாளங்களாவன ...'' பெந்தெகொஸ்தேயை அடுத்த முதல் அற்புத சுகம் சீடரின் எண்ணிக்கையை 5000 எனப் பெருக்கியது. ஆடவர் மட்டும் அத்தனை பேர்! (அப் 4:4). நற்செய்திப் பிரசங்கத்தை உறுதிப் படுத்துவதே அடையாள வரங்களின் பிரதான நோக்கம் (மாற் 16:20).



''அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் ... பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சி கொடுத்த இவ்வளவு பெரிய இரட்சிப்பு!'' (எபி 2:3,4).

வரங்களைப் போதிக்கும் கருத்தரங்குகள், பங்குபெறுவோரை வரங்களைப் பயிற்சிக்க வேண்டிய களங்களுக்கு விரையச் செய்யத் தவறினால் அது பெரும் தோல்வி. களங்களிலல்லவா கயவனின் கட்டுக்குள் கோடிகள் கலங்கி நிற்கின்றன? சில ஆதிவாசிக் கிராமங் களில் ஒருவர் விட்டு ஒருவருக்குப் பிசாசு பிடித்திருக்கிறது; பிசாசு களைத் துரத்த அங்கு படையெடுங்கள். மருத்துவ வசதியேதுமின்றி கற்கால மனிதர்போல் ஆயிரங்கள் வியாதிகளில் சாகின்றன; குண மாக்கும் வரங்களை அங்கு போய்ப் பயிற்சியுங்கள். அறிவாளிகளை யும் திக்குமுக்காடச் செய்யும் சூழல்கள் மிஷனரிக்களங்களில் ஏராளம்; ''அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனம்'' ஆகிய உங்கள் வரங்களை அங்குச் சென்று பயன்படுத்துங்கள். சத்து ருவை முறியடித்து மக்களை மீட்கப் புறப்படாவிட்டால் படைக்கலன் களால் பயனென்ன?

*''சந்தைவெளிகளில் வரங்கள்'' (Gifts for the Marketplace)* எனும் காலத்திற்கேற்ற புத்தகத்தில் பண்டிதர் R. L. பிராண்ட் இப்படி எழுதி யுள்ளார்: ''படித்துக்கொண்டும், பரவசப்பட்டுக்கொண்டும் இருப்பதற் காக வரங்கள் கொடுக்கப்படவில்லை ... ஆலயத்தின் நான்கு சுவர் களுக்குள்ளேயே வரங்கள் பெரும்பாலும் செயல்படவேண்டுமென் பது பெந்தெகொஸ்தே உலகின் பொதுவான கருத்து ... ஆனால் ஆதிச்சபையின் சரித்திரத்தைக் கவனித்தால் ஜெபக்கூட்டங்களை விடத் தெருச்சந்திகளிலேயே அதிகமாய் வரங்களைச் செயல்படுத்தி னார்களென்பது தெளிவாகிறது.'' அமெரிக்க ''அசெம்பிளி ஆப் காட்'' (AG) தலைவர் ரேமண்ட் கார்ல்சன் இப்புத்தகத்திற்கு எழுதியுள்ள அணிந்துரையில் ஆசிரியரது கருத்தை அப்படியே ஆமோதிக்கிறார்.

சுயபக்திவிருத்திக்கும், சபை பக்திவிருத்திக்கும் முறையே அரு ளப்படும் அன்னிய பாஷைகளும் தீர்க்கதரிசனமும்கூட நற்செய்திப் பணிப் பயனுள்ளவை என்பதைக் கவனியுங்கள். அன்னிய பாஷைகள்

கேட்டுக் கொண்டிருக்கும் ''அவிசுவாசிகளுக்கு'' ஓர் அடையாளம். தீர்க்கதரிசனமானது உள்ளே வரும் ''அவிசுவாசியொருவனுக்கு'' உணர்த்துவிப்பாயிருக்கிறது (1 கொரி 14:22,24,25).

ஆவியானவரின் எழுப்புதலின் அழகிய சித்திரமொன்று எசேக்கியேல் 37இல் உண்டு. தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொன்னதும் உலர்ந்த எலும்புகளுக்குள் கர்த்தர் தமது ஆவியை நுழையச் செய்தார். சத்தம், அசைவு, எல்லாம் உண்டாயிற்று. ஆனால் அவைகள் மகா பெரிய சேனையாய்க் ''காலூன்றி'' நிற்கும்வரை வேலை முடியவில்லை! நற்செய்தியை அறிவிக்க விரையும் அழகிய பாதங்கள்! (ஏசா 52:7; நாகூம் 1:15; ரோ 10:15).

தனி நபரின் உயிர்மீட்சிக்குச் சங்கீதம் 51க்கு இணையான ஜெபம் வேறில்லை. ''தேவனே ... உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்'' என்று தாவீது கதறினார். எதற்காக? ''***அப்பொழுது*** பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடம் மனந்திரும்புவார்கள்'' (வச 11-13). எழுப்புதல் கூட்டம் ஒன்று தவறாமல் போகிறோமே, விளைவென்ன? நமது சாட்சி கேட்டு எத்தனை பேர் மனந்திரும்பியிருக்கின்றனர்? கணக்கெடுப்போம்.

பெந்தெகொஸ்தே மாரியைத் தொடர்ந்து தீர்க்கதரிசனம், சொப்பனம், தரிசனம் இவையெல்லாம் வரும் (அப் 2:17,18). ஆனால் இவைகளின் விளைவு என்னவாயிருக்கவேண்டும் தெரியுமா? ''அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்'' (வச 21). முதலும் முக்கியமுமாக தேவன் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலேயே கரிசனை கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறதல்லவா? தேவாசீர்வாதங்கள் நம்மில் தேங்கிவிடக்கூடாது, நம்மிலிருந்து புறப்பட்டு ஓடவேண்டும் (யோ 7:37,38). ''நான் உன்னை ஆசீர்வதிப்பேன் ... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' (ஆதி 12:2).



இன்று தரிசனங்களுக்கும் சொப்பனங்களுக்கும் ஒரே கிராக்கி. நடபடிகள் புத்தகத்திலுள்ள தரிசனங்கள், சொப்பனங்களைக் கவனித்தால், அவற்றில் பெரும்பாலானவை மிஷனரிப்பணியை அடுத்தவையே என விளங்கும். பேதுருவுக்கு வந்த தரிசனம் புறவினத்தாருக்கு நற்செய்தியை எடுத்துச்செல்ல அழைப்பு (அத் 10). பவுலின் தரிசனங்களில் ஒன்று மக்கெதோனியாவுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல அழைப்பு (அத் 16). இன்னொரு தரிசனம் எதிர்ப்பு நிறைந்திருந்த இடத்திலும் தைரியமாய்ச் சாட்சிபகர தேவன் அவருக்குத் தந்த உயிர்ப்பிப்பு (அத் 18). பொன் மாளிகைகள், பொன் கிரீடங்கள் என்றெல்லாம் தரிசனம் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். அபாரம்! ஆனால், அறுப்புக்கு ஆயத்தமாயிருக்கும் பொன்னிற வயல் நிலங்கள் தரிசனத்தில் வரவில்லையோ? சொப்பனக்காரர் செயல்வீரராய் மாற வேண்டும்.

இந்தியாவிலுள்ள பெந்தெகொஸ்தே சபைகள் பிற சபைகளை விட அதிகமாக மிஷனரிப் பணிக்குச் செல்லும், செலவிடும் நாள் என்று வரும்? வருமா? திரள்கள் அழிவதைக் கண்டு தேவன் முடிவில்லாது பார்த்துக்கொண்டிருப்பாரோ? தேவன் இவ்வுலகில் இவ்வளவாய் அன்புகூர்ந்து தமது ஒரே குமாரனைத் தந்துவிட்டார். நாமோ நமது குமாரர், குமாரத்திகளில் அவ்வளவாய் அன்புகூர்ந்து உலகை மறந்துவிட்டோம்! அநியாயம்!

நடபடிகள் புத்தகத்தில் ''சந்தோஷம்'' என்பது பெரும்பாலும் நற்செய்திப் பணியை அடுத்தே கூறப்பட்டுள்ளது. சீடர் தங்களது சாட்சிக்காக அடிபட்டபோது அகமகிழ்ந்தனர். (5:40,41). பிலிப்புவின் நற்செய்திப் பணியால் சமாரியாவில் சந்தோஷம் (8:8). அந்தியோகியாவில் பலர் மனம் மாறுவதைக் கண்டபோது பர்னபா பரவசமடைந்தார் (11:22,23). அப்போஸ்தலர் சுவிசேஷத்தோடு தங்களிடம் வந்தது புறவினத்தாருக்குப் பூரிப்பு (13:47,48). பவுலையும் பர்னபாவையும் அடித்துத் துரத்தியதைக் கேட்ட சீடருக்கு ஆவியில் ஆனந்தம் (13:50-52). பெனிக்கே, சமாரியா நாடுகளில் புறவினத்தார் மனந்திரும்பிய செய்தி கேட்ட சகோதரர்க்கு ஒரே சந்தோஷம் (15:3). விளைச்சலால் பொங்கும் குதூகலமே ஆவியானவரின் ஆனந்தம். ஏனெனில், அவரே மிஷனரிப் பணியின் இயக்குநர் (13:4).

ஆவியானவரைக் குறித்து இயேசு சொன்ன வசனங்களில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒன்று மாற்கு 13:11 ஆகும். ''என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலு மிருங்கள்; அந்நொடியிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்.'' நண்பரே, இப்பகுதி பிரசங்கிப்பதைக் குறித் துப் பேசவேயில்லை. அதுவும் ஆயத்தமில்லாத சோம்பேறிப் பிரசங் கத்தை இது குறிப்பிடவேயில்லை! சொல்லப்பட்ட இடம், பொருள், காலத்தைக் கவனியுங்கள்: ''எல்லா இனத்தாருக்கும் சுவிசேஷம் முத லாவது பிரசங்கிக்கப்படவேண்டும். அவர்கள் உங்களைக் கொண்டு போய் ஒப்புக்கொடுக்கும்போது ...'' (வச 10,11).

இந்தியாவில் கிறிஸ்தவத்திற்கெதிராக தங்கள் பேய்த்தலைகளை உயர்த்தும் சக்திகள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. பெந்தெ கொஸ்தே என்றால் சித்திரவதை, சிறைவாசம், சிரச்சேதம் எல்லாம் உண்டு. யார் உண்மையான பெந்தெகொஸ்தேகாரர் என்பது நாளடை வில் புலப்படும்! ''நீங்கள் கிறிஸ்துவின் பெயருக்காய்ப் பழிக்கப்பட் டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனது ஆவியாகிய மகிமை யுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்'' (1 பேது 4:14).

பூரணப்படுதல் பற்றிய விபரீத உபதேச வலையில் சிக்கிக் கொண்டோருமுண்டு. அவர்கள் தங்கள் காலணிகளுக்குப் பாலிஷ் போட்டுக்கொண்டேயிருப்பார்கள் — பணிக்களம் நோக்கி நடக்க அல்ல, ஜமுக்காளம் விரித்த மொசைக் தரையில் சுற்றிச்சுற்றி வர! வெளியே போய்விட்டால் தூசி படிந்துவிடுமே என்ற பயம்! அப்பப்பா, ஏமாற்றுவதில் பிசாசு எத்தனை கில்லாடி!

நம்மிலுள்ள பதரையெல்லாம் எரித்து நம்மைத் தூய்மையாக்கத் தான் ஆவியின் அக்கினி என்பது உண்மை. அவர் நம்மை உள்ளும் புறம்பும் சுத்திகரிக்கிறார். ஆனால் எதற்காக? அலமாரியில் அடுக்கவா? இல்லை, ''எஜமானுக்குப் பயனுள்ளதும், எந்த நற்செயலுக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்திற்குரிய பாத்திரமாய்'' இருக்க! (2 தீமோ 2:21). இயேசுவைப்போல் இருப்பதென்றால் அவரைப்போல் இயங்கவும் வேண்டும். ஒன்றில்லாது அடுத்தது முற்றுப்பெறாது.



ஆவியின் முதல் அருள்மாரியைத் தொடர்ந்து சீடர்கள் மகிழ்ச்சி யோடு தேவனது மகத்துவங்களைப் பேசினார்கள் (அப் 2:11). இரண்டாம் அருள்மாரியைத் தொடர்ந்து, அவர்கள் தைரியத்தோடு தேவனது வசனத்தைப் பேசினார்கள் (4:31). இதோ, பெந்தெகொஸ் தேயின் நோக்கம் தெளிவாகிவிட்டது: ***தேவனது மகத்துவங்களை யும், வசனத்தையும், மகிழ்வோடும் துணிவோடும் அறிவிப்பது!***

■

திருநெல்வேலி அருளானந்தம் பிரசங்கியாரது கீர்த்தனைப் பாடல் ''பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை'' அழகாய் எடுத்துக்கூறு கிறது —

*ஆவியை மழைபோலே யூற்றும் — பல*
*சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.*

*பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,*
*பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும் —*

*அன்பினால் ஜீவனை விட்டீர் — ஆவி*
*அருள்மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;*
*இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ*
*ஏராளமான ஜனங்களைச் சேரும் —*

*சிதறுண்டலைகிற ஆட்டைப் — பின்னும்*
*தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,*
*பதறாதே நான்தான் உன் நல்மேய்ப்பன் யேசு*
*பாக்கியரென்னும் நல் வாக்கையருளும் —*

*தோத்திரக் கீதங்கள் பாடி — எங்கும்*
*சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்*
*பாத்திரராக அநேகரெழும்பப்*
*பரிசுத்த ஆவியின் அருள்மாரி ஊற்றும் —*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 116)

# 14

# மிஷனரிப்பணியில் ஆவியானவர்

## Holy Spirit & Missionary Work

அகிலவுலக நற்செய்திப்பணி என்பது மலை போன்றது. உடல் பலத்தாலோ பண வசதியினாலோ அதைச் செய்து முடித்துவிட முடியாது. செருபாபேலுக்குக் கடவுள் சொன்னதுபோல், அது ''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல; என் ***ஆவியானாலேயே*** ஆகும்'' (சக 4:6,7). நாம் பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருந்தால் அவர் மிஷனரிப்பணியில் எவ்விதம் நமக்கு உதவுவாரென்று இவ்வத்தியாயத்தில் படிப்போம்.

### 1. அவர் நம்மை ஜெபிக்கப் பாரப்படுத்துகிறார்.

மிஷனரிப்பணியில் வழிநடத்துதலுக்காக இறைமக்கள் கடவுளைத் தேடும்போது பரிசுத்த ஆவியானவர் ''மன்றாட்டின் அல்லது விண்ணப்பத்தின் ***ஆவியாக''*** அவர்கள்மீது இறங்குகிறார் (சக 12:10). நற்செய்தியை எடுத்துச் செல்லவேண்டிய இடங்கள் மற்றும் அங்குள்ள இனங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் நமக்குக் கிடைத்துவிடாது. விபரங்கள் நமக்குத் தெரிந்த அளவிற்குத்தான் நாம் ஜெபிப்போம். நாம் ஆவியானவரின் ஏவுதல்களால் ஆட்கொள்ளப்படும்போதோ நமது கற்பனைகளுக்கு அப்பாலுள்ள உயர்மட்டத்திற்குள் சென்று ஜெபிக்க முடியும் (ரோ 8:26,27). ஜெபத்தில் பிறக்காத தீவிர மிஷனரி இயக்கம் எதுவுமில்லை.

1965ஆம் ஆண்டு ஞாயிறு பிற்பகல் ஒன்றில் எங்கள் கல்லூரி ஜெபக் குழுவில் பரிசுத்த ஆவியானவர் மன்றாட்டின் ஆவியாக வல்லமையாய் அசைவாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஆப்பிரிக்க நாட்டு வனவாசிகளுக்காய் ஜெபிக்க எங்களைப் பாரப்படுத்தினார். ஏனென்று அப்பொழுது எங்களுக்குப் புரியவில்லை. அக்குழுவில்



நாங்கள் பெரும்பாலும் மாணவர்தான். எங்களில் எவரும் தென்கோடி தமிழகத்திலிருந்து 300 கிலோ மீட்டர்கூட பயணம் செய்திருந்ததில்லை. ஆனாலும் அந்த வனவாசிகளைப்பற்றி நினைத்துக்கொண்டேயிருந்தோம். கர்நாடக மாநிலக் காடுகளில் நீக்ரோ இன உடலமைப்புள்ள ஆதிவாசிகளை 1970களில் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) ஊழியக்குழு ஒன்று சந்தித்தபோது வியப்பில் ஆழ்ந்தோம். அவர்கள் அடிமை வியாபாரிகளிடமிருந்து தப்பி இவ்விதம் மறைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனரென அறிந்துகொண்டோம். இப்பொழுது இவ்வினத்தாரிடையே வளர்ந்து வரும் சபையொன்று நமக்குண்டு.

நமது மிஷனரி ஜெபங்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்கும்போது ஆத்தும இரட்சிப்பின்றி தொலைந்துபோனோரைத் தேவனது கண்ணோட்டத்தில் பார்க்கவும் இயேசு அவர்களை நேசிப்பதுபோல் நாம் அவர்களை நேசிக்கவும் முடிகிறது. அக்கிரமக்காரருக்காய்க் கல்வாரியில் வெளிப்பட்ட தேவ அன்பைப் பரிசுத்த ஆவியானவர் நமது இருதயங்களில் அபரிமிதமாய் ஊற்றிவிடுகிறார் (ரோ 5:5,6). பவுலின் சாட்சி இதுவே: ''எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று ***பரிசுத்த ஆவிக்குள்*** என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது'' (ரோ 9:1-3). அப்படியே சுவிசேஷத்தைத் தைரியமாய்ப் பிரசங்கிப்பதற்காகவும் தனக்காய் ***''ஆவியினாலே''*** ஜெபிக்கும்படி அவர் விசுவாசிகளை வேண்டினார் (எபே 6:18-20).

### 2. அவர் நம்மைச் சாட்சிபகரப் பலப்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் வந்ததின் பிரதான நோக்கத்தைப் பரமேறுமுன் கிறிஸ்து சொன்னதாய் எழுதப்பட்டுள்ள இறுதி வார்த்தைகள் விளக்குகின்றன. அப் 1:8, ***''பரிசுத்த ஆவி*** உங்கள்மீது வரும்போது நீங்கள் வல்லமை பெற்று எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.'' சுவிசேஷத்தை மக்களுக்கு எடுத்துச்செல்லவேண்டிய அவசரம் எப்பொழுதுமே இருந்திருந்தாலும், தமது சீடர்கள் உன்னத வல்லமை

யால் நிரப்பப்படும்வரை அப்பணிக்காய்ப் புறப்பட்டுச் செல்ல இயேசு அவர்களை அனுமதிக்கவில்லை (லூக் 24: 47-49). இயேசுவானவர் இறைமகனாயிருந்தாலும் தமது சொந்த வல்லமையினால் மக்களுக்கு ஊழியம் செய்யவில்லை. மூன்றாண்டுகள் இயேசுவை நெருங்கிக் கவனித்த பேதுரு கூறியது: ''நாசரேத்து இயேசுவைத் தேவன் ***பரிசுத்த ஆவியினாலும்*** வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார்'' (அப் 10:38). ஆவியானவரின் வல்லமை இல்லையேல் வாய்ச் சாதுரியமும் விற்பனைத் திறனும் ஒன்றும் சாதிக்காது (1 கொரி 2:4).

ஏதோ ஒருமுறை பெற்ற அனுபவமல்ல, பரிசுத்த ஆவியானவரால் நெடுகவே நிறைந்துகொண்டிருப்பது தைரியமாய்ப் பயனுள்ள வகையில் சாட்சிபகர இன்றியமையாதது. பெந்தெகொஸ்தே நாளன்று மேலறையில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் நிரப்பப்பட்டு ''தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்'' (அப் 4:31). எவ்வித அச்சுறுத்தலுக்கும் பலியாகிவிடாதபடி அடிக்கடி நாம் நமக்குள்ளே அனல் மூட்டப்படவேண்டும் (2 தீமோ 1:6,7).

பெந்தெகொஸ்தேக்கு முன்னர் பேதுரு சரியான கோழையாயிருந்தார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவரை மனித பயத்திலிருந்து விடுவித்து ஆயிரங்களுக்குச் சவால்விடும் தைரியத்தால் நிரப்பினார். வெறும் உற்சாகத்தினாலல்ல, ''பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட ***பரிசுத்த ஆவியினாலே''*** சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பதை அவர் புரிந்துகொண்டார் (1 பேது 1:12; மத் 26:34; மாற் 14:31). ஆலோசனைச் சங்கத்தினர் முன் அவர் சுவிசேஷத்திற்காய்ப் பதில் சொல்லியதில் அவர் எவ்வளவாய்ப் பரிசுத்தாவியானவர் மீது சார்ந்திருந்தார் என்பது தெளிவாகிறது: ''மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிடக் கடவுளுக்குக் கீழ்ப்படிவதே அவசியம் ... நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம் ... ***பரிசுத்த ஆவியும்*** சாட்சி'' (அப் 5:29,32).

*அச்சம் தவிர்ப்போம், தைரியம் கொள்வோம், சரித்திரம் சான்றுகூறும்;*
*இரத்தசாட்சிகள் நம்மிடைத் தோன்றி நாதனுக்காய் மடிவோம்!*



சாத்தான் தனது கைதிகளைச் சும்மா விடுவித்துவிடமாட்டான். மிஷனரிப்பணி ஓர் ஆன்மீகப் போராட்டம். நற்செய்தியின் காலணிகளை அழகிய பாதங்கள் அணிந்துகொண்டு எதிரியின் கோட்டை நோக்கி நடைபோடும்போது, துரைத்தனங்கள், அதிகாரங்கள், இருட்டதிபதிகள், பொல்லாத ஆவிகள் அத்தனையும் தடுக்க முயலும் (எபே 6:12,15). மாய வித்தை, கள்ளத் தீர்க்கதரிசனம் போன்றவை கொண்டு வசனம் கேட்போரைத் திசைதிருப்ப எலிமாஸ் போன்ற பிரதிநிதிகளைச் சாத்தான் ஆங்காங்கே வைத்திருப்பான். சாட்சி பகர்வோர் ***''பரிசுத்த ஆவியினால்*** நிறைந்திருக்கும்போதுதான்'' அவர்கள் சத்துருவை முறியடித்துச் சிறைப்பட்டோரை விடுவிக்க முடியும் (அப் 13:6-10; ஏசா 61:1).

''ஆவிக்குரிய வரங்களை நாடுங்கள்'' என்று திருமறை போதிக்கிறது (1 கொரி 14:1). புதிய ஏற்பாட்டில் முதன்முதல் வரங்களின் பட்டியல் நற்செய்தியறிவிப்புப் பணியை அடுத்தே கொடுக்கப்பட்டுள்ளது (மாற் 16:15-18). ஆவியின் வரங்களில் (1 கொரி 12: 7-10) ஞான வசனம் (அப் 15:13-21), அறிவு வசனம் (அப் 8:23), விசுவாசம் (அப் 28:3-6), குணமாக்கும் வரங்கள் (அப் 9: 33-35), அற்புதங்களைச் செய்தல் (அப் 14:3) மற்றும் ஆவிகளைப் பகுத்தறிதல் (அப் 16:16-18) ஆகியவை மிஷனரிப்பணிக்கு அத்தியாவசியமானவை. நாம் அவரிடம் கேட்டால் இவ்வரங்களை நமக்கருள தேவன் ஆவலாய்க் காத்து நிற்கிறார் (மத் 7:11). தமது படை வீரரை யுத்தக்களத்திற்கு அனுப்புமுன் போராயுதங்களையும் தளவாடங்களையும் கொடுத்துவிடுவதில் சேனைகளின் கர்த்தர் கவலையீனமாயிருப்பாரோ?

## 3. அவர் நம்மைப் புறப்பட்டுச்செல்ல நடத்துகிறார்.

பேராணையின்படி நாம் எங்கும் எவருக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டும். ஆனால் நிலத்திற்கு நிலம் வேறுபடும். சில நிலங்கள் இன்னும் உழப்பட்டிருக்காது. சில நிலங்கள் விதைப்புக்கு ஆயத்தமாயிருக்கும். இன்னும் சில அறுவடைக்கே ஆயத்தமாயிருக்கும். அப்படியே தேவனுடைய அழைப்பும் கிருபாவரங்களும் மிஷனரிக்கு மிஷனரி வேறுபடும். சில ஊழியர் உழுவதில் கெட்டிக்காரராயிருப்பர்; மற்றவர்களோ விதைப்பதிலோ அறுப்பதிலோ திறமைசாலிகளாயிருப்பர் (யோ 4:37,38; 1 கொரி 3:5-7). மிஷனரிப்பணியின்

பிரதமரான பரிசுத்த ஆவியானவரே எவரை, எங்கு, எப்பொழுது என்பதையெல்லாம் நிர்ணயிக்கிறார். தமது விருப்பத்தின்படி அவர் நடையையும் நபரையும் மாற்றிவிடுவார். வளைந்து கொடுப்போர் பாக்கியவான்கள்; அவர்கள் முறிந்துபோவதில்லை!

நடபடிகள் புத்தகமே மிஷனரிப் பணிக்குப் பாட நூலாகும். ஆவியானவரின் சத்தத்திற்குச் செவிமடுத்தால் நாம் எவ்விதம் மிஷனரிப் பணியில் வெற்றி காணலாம் என்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் அது நமக்குப் போதிக்கிறது. கீழ்க்கண்ட மூன்று சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை —

□ சமாரியாவில் சுவிசேஷகன் பிலிப்பு வெற்றிகரமான சுகமளிப்பு ஊழியம் நடத்திக்கொண்டிருந்தார் (அப் 8:5-7). ஊரெங்கும் அதுதான் பேச்சு (வச 8). அவரைக் கேட்கவும் அற்புதங்களைக் காணவும் திரள்கள் கூடிவந்தன. மக்கள் திருமுழுக்கு பெற்றனர்; ஆவியினால் நிரப்பப்பட்டனர் (வச 16,17). இவ்வளவு பெரிய திரள் கூட்ட ஊழியத்தின் நடுவிலிருக்கும்போது ***பரிசுத்த ஆவியானவர்*** பிலிப்புவை ஒரேயொரு நபருக்கு நற்செய்தியறிவிக்கக் காசா எனும் பாலைவனம் செல்ல நடத்தினார்! (வச 26,29). மனித அறிவுக்கு இது ஒவ்வாததாயிருக்கலாம்; ஆனால் பரலோகக் காற்றானவர் தமக்குப் பிரியமான இடத்தில் வீசுவார்! ஆவியினால் பிறந்தவர்கள் ஆவியினால் சுமந்து செல்லப்படவும் தங்களை விட்டுக்கொடுக்க வேண்டும்! (யோ 3:8).

□ தோல் பதனிடும் சீமோன் வீட்டில் சீமோன் பேதுரு கடற்காற்றை அனுபவித்து, ஓய்வெடுத்து, ஜெபத்தில் நேரம் செலவழித்துக்கொண்டிருந்தார் (அப் 9:43; 10:5,6,9). புறவினத்தாரின் உலகிலிருந்து அந்த வேளையில் தனக்கொரு மிஷனரி அழைப்பு வருமென அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார். அவர் இனவுணர்வு கொண்ட ஒரு யூதன். ஆனால் ''***ஆவியானவர்:*** இதோ, மூன்று மனிதர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து ஒன்றும் சந்தேகப்படாமல் அவர்களுடன் போ; நானே அவர்களை அனுப்பினேன்'' என்றார் (அப் 19:19,20; 11:12அ). அடிப்படையில் யூதருக்கு அப்போஸ்தல



னாகவே பேதுரு அழைக்கப்பட்டிருந்தார் (கலா 2:7,8). யூதரல்லாதவர்மீது அவருக்குப் பிரியமும் கிடையாது. ஆனால் விண்ணரசின் சாவிகளைக் கிறிஸ்து முதலாவது பேதுருவிடம் கொடுத்திருந்ததால், யூதரல்லாத புறவினத்தார் நடுவில் ஊழியத்தைத் துவக்கிவைக்கப் பரிசுத்த ஆவியானவர் அவரையே பணித்தார் (மத் 16:16-19). தேவனுடைய மிஷனரித் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் ஆவியானவரின் உந்துதல்களுக்கு உடனடியாய் உடன்படும் மனப்பக்குவம் நமக்குத் தேவை.

□ அந்தியோகியா சபையில் தீர்க்கதரிசிகளாகவும் போதகர்களாகவுமிருந்த ஐவரில் பவுலும் பர்னபாவும் இருவர். இந்தச் சபையிலுள்ள சீடர்கள்தான் முதன்முதலாவது கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர் (அப் 11:26; 13:1). இந்த உள்ளூர்ச் சபையில் பவுலும் பர்னபாவும் எவ்வளவு ஆசீர்வாதமாயிருந்திருப்பார்கள்; ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் அங்குள்ள மற்ற தலைவர்களிடம் பேசி இவ்விருவரையும் இடம் விட்டு இடம் செல்லும் வெளியுலக ஊழியத்திற்குப் பிரித்துவிடச் சொன்னார் (அப் 13:2). இவர்களை அனுப்பிவைத்தது அங்குள்ள பிற தலைவர்களெனினும் அவர்கள் ''***பரிசுத்த ஆவியினால்*** அனுப்பப்பட்டுப்'' புறப்பட்டுச் சென்றார்களெனச் சொல்லப்படுமளவிற்கு ஆவியானவர் அக்காரியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார் (வச 3,4ஐ ஒப்பிடுக). தங்களுக்கிருக்கும் தலைசிறந்த ஊழியரை மிஷனரிப்பணிக்காய் அனுப்பிவிடும் சபைகள் நம்மிடை உண்டோ? இந்த நாட்களில் பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் பேசுவதில்லையோ? அல்லது நாம்தான் கீழ்ப்படியாமலிருக்கிறோமா?

ஆவியானவர் நம்மைப் பணிக்களங்களுக்கு அனுப்பிவைப்பது மட்டுமல்ல, பணியிலும் நமக்கு நடத்துதல் தருகிறார். அவரது வழிநடத்துதல் திறந்த வாசல்கள் அல்லது மூடிய கதவுகள் மூலமாய் இருக்கலாம் (அப் 16:6-9). மிஷனரிகளின் இருதயங்களிலும் குறிப்பிட்ட இடங்கள் அல்லது இனங்களைக் குறித்துத் தணியா தாகத்தை வைத்துவிடுகிறார். இதோவோர் எடுத்துக்காட்டு: ''எருசலேமுக்குப் போகவேண்டுமென ***ஆவியில்*** தீர்மானித்துக்கொண்டு ரோம் நகரையும் பார்க்கவேண்டுமென்று பவுல் சொல்லிக்கொண்டார்''

(அப் 19:21). எல்லா மக்களுக்கும் செய்தி ஒன்றுதான் எனினும் கலாச்சாரத்திற்கேற்ப செயல்முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் (1 கொரி 9:20-22). ‘‘ஞானத்தையும் அறிவையும் அருளும் ஆவியாக’’ பரிசுத்த ஆவியானவர் நாம் சூழ்நிலைக்கேற்ப விவேகமாய் நடந்துகொள்ள நம்மை நடத்துவார் (ஏசா 11:2; 1 கொரி 12:8).

### 4. அவர் நம்மைக் கொடுக்க உற்சாகப்படுத்துகிறார்.

மிஷனரிப்பணிக்குப் பணம் முதன்மையானதல்ல, ஆனால் முக்கியமானது. ஏற்கனவே நிறுவப்பட்ட சபைகளைப் பராமரிக்க ஆகும் செலவைவிடப் புதிய இடங்களில் மிஷனரிப்பணி செய்வதற்குக் கூடுதல் பணம் தேவைப்படும். தசமபாகம் கொடுத்தல் ஆரோக்கியமானதொரு பழக்கமாயினும், பத்திலொன்றிற்குமேல் கிறிஸ்தவர்கள் கொடாவிடில் அகிலவுலக நற்செய்திமயம் என்பது வெறும் கனவாய்த்தானிருக்கும்.

பெந்தெகொஸ்தேயின் ஆவியானவர் அவரைப் பெற்றுக்கொண்டவர்களிடையே தயாளமாய்க் கொடுக்கும் ஆவியைக் கிளறிவிட்டார். வேதத்திலிருக்கும் விபரத்தின்படி, நேரடியாகவோ மறைமுகமாகவே, அப்போஸ்தலர்கள் சீடர்களைத் தங்களது உடைமைகளையெல்லாம் விற்றுத் தேவையுள்ளோருடன் பகிர்ந்துகொள்ளும்படிப் பொதுவாய் வைத்து அனுபவிக்கவேண்டுமென்று சொல்லவேயில்லை. தாங்களாகவே அவர்கள் அப்படிச் செய்ததுதான் அற்புதங்களிலெல்லாம் அற்புதம்! (அப் 2:44,45; 4:34,35).

ஆவியானவர் அபரிமிதமாய் ஊற்றப்படுகிறாரென்று உலகெங்கும் பேசப்படுகிறது. மக்கள் நவநாவுகளில் பேசுகிறார்கள், கூச்சல் போடுகிறார்கள், குதிக்கிறார்கள், நடனமாடுகிறார்கள், கீழே விழுகிறார்கள், உருளுகிறார்கள், இப்படிப் பல. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுவிட்டதால் தனது செல்வத்தை ஏழை எளியவர்க்கு வாரி வழங்குகிறாரென்று எவரைக் குறித்தாவது கேள்விப்படுகிறோமோ? ஆவியின் அபிஷேகத்திற்கு நடைமுறையில் நிரூபணமான அடையாளம் அப்போஸ்தலர் இரண்டு நான்கா, இரண்டு நாற்பத்தினான்கா? கொடுப்பதில் முதன்மையாயிருக்கும் இருபது



அமெரிக்கச் சபைகளில் ஒன்றுகூட பெந்தெகொஸ்தே சபையல்ல என்று மிஷனரிப்பணி ஆய்வாளர் டேவிட் பேரட் என்பவர் கூறுகிறார். நாம் எங்கே தவறிவிட்டோம்?

பரிசுத்த ஆவியானவர் மகிமையின் ஆவியானவர் (1 பேது 4:14). அவர் நம்மை ஆட்கொள்ளும்போது நித்திய மகிமையின் காட்சிகளை நமது விசுவாசக் கண்களுக்குக் காட்டுகிறார். அதின் விளைவாக இவ்வுலகச் செல்வத்தின் மீதுள்ள நமது பிடிப்பு தளர்கிறது. சாலேமின் ராஜாவாகிய மெல்கிசெதேக்கிடமிருந்து அப்பமும் ரசமும் பெற்றுக்கொண்ட ஆபிரகாம் சோதோமின் ராஜா கொடுத்த பொருட்களை வாங்க மறுத்துவிட்டார் (ஆதி 14:18-24). பரிசுத்த ஆவியானவரது ஊழியத்தின் இப்பரிமாணம் நமது வாழ்விலும் போதனையிலும் திரும்பப் பெறப்படவேண்டும். அப்பொழுதுதான் கொடுத்தலில் இதுவரை எதிர்பார்த்திருக்கும் எழுப்புதல் வரும்.

### 5. அவர் நமக்கு அறுவடைசெய்ய உதவுகிறார்.

விளைந்த பலனை அறுப்பதுதான் மிஷனரிப் பணியில் மிகக் குதூகலமான கட்டம். ஆவியானவரின் கடைசிக்கால அருள்மாரியானது இறுதிக்கால ஆத்தும அறுவடையைத் துரிதப்படுத்துகிறது. யோவேலின் தீர்க்கதரிசனத்தைப் பேதுரு தனது பெந்தெகொஸ்தே பிரசங்கத்தில் மேற்கோள் காட்டி, ‘‘கடைசி நாட்களில் மானிடர் யாவர்மீதும் ***என் ஆவியை*** ஊற்றுவேன் ... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனும் இரட்சிக்கப்படுவான்’’ என்று கூறினார் (அப் 2:16,17,21). முழுநேர ஊழியரை மட்டுமல்ல, முழுச்சபையையும் — ‘‘குமாரர் ... குமாரத்திகள் ... வாலிபர் ... முதியோர் ... வேலைக்காரர் ... வேலைக்காரிகள்’’ — பரிசுத்த ஆவியானவர் திரட்டித் தானியத்தைச் சேகரிக்க வைக்கிறார் (வச 17,18). பரிசுத்த ஆவியானவரது எழுப்புதலின் விளைவே தீவிர நற்செய்திப் பணியாகும். தமது மலைமீதிருக்கும் தமது மக்கள்மீது ஆண்டவர் ஆசீர்வாதமான மழையைப் பொழியும்போது அவர்கள் தவறாமல் சுற்றியிருப்போருக்கு ஆசீர்வாதமாகிறார்கள் (எசேக் 34:26).

சபை மொத்தமாக மட்டுமல்ல, தனிநபர் ஒவ்வொருவரும் ஆவியின் நிறைவினால் வல்லமையான ஆத்துமாதாயகராய் மாறு

கின்றனர். பர்னபாவைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள்: ''அவர் நல்லவரும் ***பரிசுத்த ஆவியினால்*** நிறைந்தவருமாயிருந்தார்; அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டார்கள்'' (அப் 11:24).

வாயின் அறிக்கை மற்றும் திருமுழுக்கு மூலம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் வெளிப்படையாய் நடத்தப்படுமுன்னரே சுவிசேஷத்தைக் கேட்போர்மீது ஆவியானவர் அருளப்படுவதை மிஷனரிப்பணிக் களங்களில் அடிக்கடி கண்டிருக்கிறோம். இவ்வித நிகழ்வுகளிருந்தால் சபை வளர்ச்சி அமோகமாயிருக்கும். கொர்நேலியுவின் வீட்டில் நடந்தது இவ்விதத் தெய்வீகச் செயலுக்குச் சிறந்ததொரு சான்று (அப் 10:44-48). யூதரோ கிரேக்கரோ, அடிமைகளோ சுயாதீனரோ, எக்கலாச்சாரத்திலும் எத்தரத்திலும் இருப்பவர்களைக் கிறிஸ்துவின் ஒரே உடலுக்குள் ஞானஸ்நானப்படுத்துகிறவர் (உட்படுத்துகிறவர்) பரிசுத்த ஆவியானவர்தானே? (1 கொரி 12:13)

அறுவடை குறைவு அல்லது தாமதம் என்றால் பரிசுத்த ஆவியானவரின் செயல் அங்கு இல்லை என்றும் முடிவுகட்டிவிடக்கூடாது. எல்லா நிலமும் ஒன்றுபோலிராது. விதைப்பதிலும் நீர்ப்பாய்ச்சுவதிலும் நாம் உத்தமமாயிருக்கவேண்டும்; கனி தருதலைக் கர்த்தர் கரத்தில் விட்டுவிட வேண்டும். ''நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலேயே எல்லாம் ஆகும்'' எனத் திருமறை அழுத்திக் கூறுகிறது (1 கொரி 3:7). எல்லாம் செய்து முடித்தபின், கர்த்தர் நமது நிலங்களில் மழையைப் பெய்யப்பண்ணும்படி அவருக்குக் காத்திருக்கவேண்டும் (ஓசி 10:12). அவர் நம்மை வெட்கப்படுத்தமாட்டார். நமக்காக ***முன்மாரியையும் பின்மாரியையும்*** அருளிச்செய்வார் (யோவேல் 2:23). சாதகச் சிந்தையுடன் எதிர்பார்த்துக் காத்திருப்போம் (வச 21). நமது உழைப்பு வீண் போகாது (1 கொரி 15:58). ''நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்'' (கலா 6:9ஆ).

### 6. அவர் சபைகளை வளரச் செய்கிறார்.

தனது மகன் ஈசாக்கிற்குப் பெண் தேட எலியேசரை ஆபிரகாம் அனுப்பியதுபோல், பிதாவாகிய தேவன் தமது மகனுக்கு மணப்



பெண்ணை ஆயத்தம்பண்ணப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியுள்ளார். சபையைத் தேவாட்டுக்குட்டியானவருக்கு மணமுடிக்க இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அதை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். கிறிஸ்து திரும்ப வரும்வரை சபையின் வளமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பரிசுத்த ஆவியானவர் வைராக்கியமாய்ச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆதிச் சபைகளைக் குறித்து அவைகள் ***''பரிசுத்த ஆவியின்*** ஆறுதலோடு நடந்து பெருகின'' என வாசிக்கிறோம் (அப் 9:31).

தேவ சபையை மேய்ப்பதற்காய்க் கண்காணிகளை ஏற்படுத்துவது பரிசுத்த ஆவியானவரே (அப் 20:28). ஞான வசனம், அறிவுணர்த்தும் வசனம், பகுத்தறிதல் ஆகிய தமது வரங்களை அவர் அவர்களுக்கு அளித்து தலைமைத்துவத்தில் அவர்களை நடத்துகிறார். அவர் சத்திய ஆவி என்ற பாணியில் சபையை எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார் (யோ 16:13). அவரது புதிய சந்திப்புகள் அவரது மக்களுக்குச் சத்தான உணவைக் கொண்டுவருகின்றன (ரூத் 1:6). மணவாளனுக்குப் பிரியமாய் மணவாட்டி நடந்துகொள்ளும்படி அவருடைய வார்த்தைகளை அவளுக்கு ஆவியானவர் நினைவூட்டுகிறார் (யோ 14:26). உபதேசத்துக்கடுத்த சர்ச்சைகள் உருவாகும்போது ஆவியானவர் வசனத்தின்மீது புது வெளிச்சம் வீசிக் கூடுதல் தெளிவுக்குள் நடத்துகிறார். விருத்தசேதனப் பிரச்னைக்குத் தீர்வு காண எருசலேம் சங்கத்திலிருந்த தலைவர்களை ஆவியானவர் எவ்வளவு அழகாய் நடத்தினார் பாருங்கள்! ***''பரிசுத்த ஆவிக்கும்*** எங்களுக்கும் நலமாய்க் கண்டது'' என்பதல்லவா அவர்களது முடிவாயிருந்தது (அப் 15:28)?

ஒவ்வொரு மூட்டும் ஒவ்வொரு உறுப்பும் முழுமையாய்ச் செயல்படும்போதுதான் கிறிஸ்துவின் உடலாகிய சபையின் வளர்ச்சி சமநிலையாயிருக்கும் (எபே 4:16). அமைதியாயிருப்போரே பெரும்பான்மையினர் என்றிருக்கும் திருச்சபை புதிய ஏற்பாட்டுச் சபையே அல்ல. பரிசுத்த ஆவியானவருக்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்படும்போது அவர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஊக்கமும் உற்சாகமும் தந்து தேவன் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ள முழுக் கிருபையுடன்

அவர்கள் செயல்படச் செய்கிறார். சபைக்குள்ளிருக்கும் எதையும் அது ஆன்மீகப்பணியல்ல என்று சொல்லவே முடியாது. அது கலைத் திறனோ தலைமைத்துவமோ அதற்கு விசை கொடுப்பவர் ***ஆவியான வரே*** (யாத் 31:1-5; அப் 6:3).

## 7. அவர் நம்மைப் பாடுபடப் பலப்படுத்துகிறார்.

பாடுகளில்லாது மிஷனரிப்பணியில்லை. பரிசுத்த ஆவியான வரை வேறொரு ''தேற்றரவாளன்'' என்று ஆண்டவராகிய இயேசு அறிமுகம் செய்தார். தேற்றுகிறவரான அவர் துன்புறுத்தல்களை மிஷனரிகள் சந்திக்குமுன்னரே அவர்கள் இருதயங்களைப் பலப் படுத்திவிடுகிறார். மிஷனரி பவுலின் அறிக்கை: ''கட்டுகளும் உபத் திரவங்களும் எனக்குக் காத்திருக்கின்றன எனப் ***பரிசுத்த ஆவியான வர்*** நகர்தோறும் தெரிவிக்கிறதை அறிந்திருக்கிறேன்'' (அப் 20:23).

பன்னிருவரைப் பணிக்கு அனுப்பிவைக்கும்போது தாம் கொடுத்த உரையில் இயேசு, ''எனக்காய் அதிபதிகள், அரசர்கள் முன் கொண்டுபோகப்படுவீர்கள்; அவர்கள் உங்களை ஒப்படைக்கும் போது, எப்படி என்ன பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள்; பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ***ஆவியானவரே*** உங்களிலிருந்து பேசுகிறவர்'' என்று தைரியப்படுத்தினார் (மத் 10:18-20). ஸ்தேவானில் இது அப்படியே நிறைவேறியதைக் காண் கிறோம். அவர் பிரதானமாக ஒரு பிரசங்கியோ போதகரோ அல்ல, சபையின் நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க நியமிக்கப்பட்ட உதவிக்காரர்தான் (அப் 6:2-5). ஆனால் அவரது எதிராளிகள் ''அவர் பேசிய ஞானத்தையும் ***ஆவியையும்*** எதிர்த்து நிற்கக்கூடாமல் போயிற்று'' (வச10). அவர் ***''பரிசுத்த ஆவியினால்*** நிறைந்தவ ராய்'' இரத்தசாட்சி மரணத்தைத் தழுவினார் (அப் 7:55). படிப்பறி வில்லாத, ஆனால் தூயாவியினால் நிரம்பிய, சில ஊழியர் புதிய மிஷனரிக்களங்களில் எதிர்ப்பாளர்களுக்குக் கொடுக்கும் பதில்கள் தேர்ந்த இறையியல் நிபுணர்களையும் திகைக்க வைத்துவிடும்!

பாடு பாடுதான். வேதனை வேதனைதான். ஆனால் விளங்கிக் கொள்ள முடியாத மகிழ்ச்சியினால் ஆவியானவர் துன்புறுவோரை



நிரப்புகிறார் (அப் 13:50-52). இது துன்புறுத்துவோரும் துன்புறு வோரும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று. நெடுகவே சபைச் சரித் திரத்தில் வரும் இரத்தசாட்சிகளின் சரிதைகள் இதற்குச் சான்று. வெளிப்படுத்துதல் 2 மற்றும் 3ஆம் அத்தியாயங்களிலுள்ள ஏழு சபைகளில் கடிந்துகொள்ளப்படாத இரண்டும் மிஷனரிச் சபைகளாம். சிமிர்னா கிறிஸ்தவர்களுக்கு ''ஜீவ கிரீடம்'' வாக்களிக்கப்பட்டது. பிலதெல்பியா விசுவாசிகள் ''ஆலயத்தில் தூண்களாய்'' நிறுத்தப் படுவரென வாக்களிப்பட்டனர். இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்?

***ஆவியானவர்*** சபைக்கு வெளியிலிருப்போரைக் குறித்துச் சபையினருக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்!

■

*யேகோவா நிசி, யேகோவா நிசி,*
*யேகோவா நிசியை, யேகோவா நிசியை*
*யேற்றிப்பாடுவோம் —*
*எங்கள் கொடி வெற்றிக் கொடியே!*

*ஆவியில் நிறைந்து ஜெபம் செய்வோமே,*
*ஆயுதங்களணிந்து களம் செல்வோமே,*
*ஆர்ப்பரித்தலங்கமதை வீழ்த்தியே*
*ஆவிகளின் சேனைகளை வெல்வோமே!*
*கொடிகள் ஏந்தும் படைகளல்லவோ?*

*நமக்கிருக்கும் இந்தப் பலம் போதுமே,*
*நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே;*
*பட்டயமோ புயபலமோ தேவையா?*
*பரமதேவ ஆவி நம்மில் இல்லையா?*
*ஜீவ தேவ சேனையல்லவா?*

— V. எசேக்கியா பிரான்சிஸ்

# 15

# அபிஷேக எழுத்துப்பணி

## Anointed Writing

தூயாவியானவரின் வல்லமை மற்றும் வரங்களில் காணப்படும் புதிய ஆர்வத்தினால் ''அபிஷேகிக்கப்பட்ட'' (Anointed) எனும் சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. நற்செய்திக் கூட்டங்களின் அழைப்புகளிலும் அறிக்கைகளிலும் ''அபிஷேகிக்கப்பட்ட செய்திகள்,'' ''அபிஷேகிக்கப்பட்ட பாடல்கள்'' என்றெல்லாம் வாசிக்கிறோம். இச்சொற்களினால் மக்களுக்கு என்ன விளங்குகிறது என்பதும் திருமறை தரும் அர்த்தம் என்ன என்பதும் ஒன்றல்ல. எடுத்துக்காட்டாக, பிரசங்கியார் நன்கு சத்தம்போட்டு, விரைவாய்ப் பேசி, மேடையில் அங்குமிங்கும் ஆடிக்கொண்டு பிரசங்கிப்பாரானால் அவர்மீது வல்லமையான அபிஷேகம் இறங்கியிருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால் எந்தச் செயலிலும் ஆவியானவரின் குணநலன்கள் வெளிப்படும்போது மட்டும்தான் அதை ''அபிஷேகிக்கப்பட்டது'' எனக் கூறலாம்.

திருமறையானது அபிஷேகத்தினால் எழுதப்பட்டது. ''வேதத்திலுள்ள எந்த இறைவாக்கும் மனிதனது சொந்தக் கற்பனையில் தோன்றியதல்ல என்று நீங்கள் முதலாவது அறியவேண்டும். இறைவாக்கானது ஒருபோதும் மனிதனது சொந்த விருப்பத்தினால் வரவில்லை; கடவுளது புனிதர்கள் ***தூயாவியினால்*** ஆட்கொண்டு அசைக்கப்பட்டுப் பேசினார்கள்'' (2 பேது 1:20,21). தங்களுக்கு அருளப்பட்டிருந்த இந்த அதிகாரத்தை வேதாகம ஆசிரியர்கள் அவ்வப்போது குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக இதோ தாவீதின் சாட்சி: ''மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் ***அபிஷேகம்*** பெற்று, இஸ்ரவேலின் திருப்பாடல்களை இன்பமாய்ப் பாடிய ஈசாயின் மகனாகிய தாவீது என்பவன்



சொல்லுவது: ஆண்டவருடைய ***ஆவியானவர்*** என்னைக்கொண்டு பேசினார்; அவரது வார்த்தை எனது நாவில் இருந்தது'' (2 சாமு 23:1,2).

இன்றையக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளுக்கு வேதாகம ஆக்கியோன்கள்போல தவறமுடியாமையை (infallibility) உரிமைபாராட்ட முடியாதெனினும், பரிசுத்த ஆவியானவரின் தன்மைகள் அதில் காணப்பட்டால் மட்டுமே எந்த எழுத்தையும் ''அபிஷேகிக்கப்பட்டது'' எனக் கூறமுடியும். ஒருவேளை எழுதப்பட்டதில் இலக்கியத் திறன் காணப்படாவிட்டாலும், அது எவ்வளவாய் வாசிப்போரை ஆர்வங்கொள்ளச் செய்கிறது, மற்றும் அவர்களை எவ்வளவாய் ஆக்கிரமித்து ஆண்டவர்பால் ஈர்க்கிறது என்பதே அபிஷேக எழுத்துக்கள் என்பதற்கு நிரூபணம். பேதுருவும் யோவானும் ''படியாதவர்களும் பயிற்சியில்லாதவர்களுமாய்'' இருந்தார்கள் (அப் 4:13). ஆனால் புதிய ஏற்பாட்டிலுள்ள அவர்களது ஏழு புத்தகங்களும் வெறும் செய்தியறிக்கை என்று சொல்ல முடியாதே. யோவானின் உள்நோக்கும் பேதுருவின் தொலைநோக்கும் நமது கிறிஸ்தவச் சிந்தைக்கும் சேவைக்கும் காலாகாலமாய் எவ்வளவு நன்மை பயக்கின்றன! கல்வி அறிவு என்பது எழுத்தாளர்களுக்குக் கர்த்தரின் அகத்தூண்டுதலுக்குப் பக்கபலமே தவிர அதற்குப் பதிலானது அல்ல.

தூயாவியானவரின் குணநலன்களைத் திருமறை நமக்குப் பல்வேறு உருவகங்கள் (emblems) மூலம் விளக்கியுள்ளது. எழுத்துப்பணிக்குச் சம்பந்தப்பட்ட ஐந்து உருவகங்களை இங்கு தெரிந்தெடுத்துள்ளேன். அபிஷேக எழுத்து என்றால் என்ன என்று விளங்கிக்கொள்ள இந்த உருவகங்கள் ஒவ்வொன்றையும் சுருக்கமாய்ப் பகுத்தாய்வோம் —

### 1. தண்ணீர்

பரிசுத்த ஆவியானவருக்கு வேதத்தில் பல முறை பயன்படுத்தப்பட்டுள்ள உருவகம் தண்ணீர் ஆகும். ஆசீர்வாத மழை, பின்மாரி, வாழ்வளிக்கும் ஊற்று மற்றும் நதி போன்றவற்றின் மூலம் பரிசுத்த ஆவியானவர் விளக்கப்பட்டுள்ளார் (எசேக் 34:26; சக 10:1; யோ 7:38,39).

■ தண்ணீர் தாகம் தீர்க்கும். ஒவ்வொரு மனிதனிடமும் காணப் படும் ஆன்மீகத் தாகத்தை அபிஷேக எழுத்து தணிக்கவேண்டும். தங்களது ஆழ்ந்த விருப்பங்களைத் தீர்த்துக்கொள்ள மக்கள் உலகில் எதையெல்லாமோ முயன்று பார்த்தும் தோல்விகண்டுவிட்டனர். ''என் மக்கள் தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்க ளுக்கு வெட்டிக்கொண்டார்கள்'' என்று இறைவன் புலம்புகிறார் (எரே 2:13). அவர் அவர்களைப் பார்த்து, ''திருப்தி செய்யாதவற்றிற்காக நீங்கள் பணத்தைச் செலவழிப்பானேன்? ... தண்ணீர்களருகே வாருங்கள்'' என்றழைக்கிறார் (ஏசா 55:1,2). எழுதப்பட்ட ஒரு செய்தி அதை வாசித்த பின்னரும் வாசகரது நிலையை மாற்றாவிடில் அதை அபிஷேகிக்கப்பட்டதென்று எப்படிச் சொல்லமுடியும்?

■ தண்ணீர் புத்துணர்வளிக்கும். வேதாகமக் காலங்களில், வெயிலிலும் தூசியிலும் நெடுந்தூரம் பயணப்பட்டுவரும் விருந்தி னரின் கால்களுக்கு வீட்டிலுள்ளவர்கள் தண்ணீர் ஊற்றுவார்கள் (லூக் 7:44). காடுகள், பாலைவனப் பகுதிகளில் நடந்துசெல்லும்போது குளிர் நீரோடைகளில் கால் வைத்தால் எப்படியிருக்கும்! வேலை யெல்லாம் முடித்து வீடு திரும்பியதும் ஒரு குளிப்பு குளித்துவிட்டால் பின்னர் உட்கார்ந்து வாசிக்கவோ உரையாடவோ எவ்வளவு தெம்பா யிருக்கும்! இறுக்கங்களும் இன்னல்களும் நிறைந்த உலகில்தான் நாம் வாழுகிறோம். எழுதப்படும் கிறிஸ்தவச் செய்திகள் மக்களுக்குப் புத்துணர்வூட்டி, அழுத்தங்களை அகலச்செய்து, அவர்கள் சமாதானம் தரும் ஆண்டவரையே சார்ந்திருக்கச் செய்யவேண்டும்.

■ தண்ணீர் சுத்தம்பண்ணுகிறது. இறைவார்த்தையைக் கொண்டு தண்ணீரினால் கிறிஸ்து திருச்சபையைக் கழுவித் தூய தாக்குகிறார் (எபே 5:26). அசுத்தனின் ஆட்சி உலகைக் கறையாக்கி விட்டது. சுய உதவி நூல்கள் (self-help books) நமது இருதயங்களைப் பாவத்திலிருந்து கழுவியெடுக்கவோ நம்மைக் குற்றவுணர்விலிருந்து விடுவிக்கவோ முடியாது. கடவுளது உயிர்தரும் வார்த்தைதான் நம் மைத் தூய்மையாக்க முடியும் (யோ 15:3). திருவசனத்தின் வலி மையைக் கொண்டுதான் வாலிபர் நங்கையர் தீய விருப்பங்களை மேற்கொள்ளமுடியும் (சங் 119:9). அபிஷேக எழுத்துக்கள் அவற்றை



வாசித்துக்கொண்டிருக்கும்போதே வாசகர்களைக் கழுவித் தூய்மைப் படுத்தக்கூடிய பொருத்தமான திருவசனத்தைக் கொண்டதா யிருக்கும்.

## உ. எண்ணெய்

எண்ணெய் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறதென்று வேதத் தில் நேரடியாய்க் காணமுடியாது. ஆனால் ஆலய ஆவணங்களையும் ஆட்களையும் அபிஷேகம்பண்ணப் பிரதானமாய்ப் பயன்படுத்தப் பட்ட பொருள் எண்ணெய் ஆனதால் அது ஆவியானவரைக் குறிக் கும் ஓர் உருவகமாகும் (யாத் 30:22-33; 1 சாமு 10:1). வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணெயின் குணங்களும் பயன்களும் தூயா வியானவரின் செயல்பாட்டைத் தெளிவாய் விளக்குகின்றன. எழுத்து ஊழியத்திற்குச் சம்பந்தப்பட்ட சிலவற்றை இங்கு கவனிப்போம் —

■ உயர்ந்த பொறுப்புகளுக்கு நியமிக்கப்படும்போது அந்நபர்கள் எண்ணெயால் அபிஷேகிக்கப்பட்டனர். அக்காலத்தில் இறை மக்களுக்கு இருந்த முப்பெரும் தலைவர்கள் தீர்க்கதரிசிகள், ஆசாரியர் மற்றும் அரசர்கள் ஆவர் (1 இரா 19:16; யாத் 28:41; 1 சாமு 16:13). அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க அவர்கள் அபிஷேகிக்கப் பட்டனர். எழுதப்படுவது எந்தப் பொருளைப்பற்றியதாயிருந்தாலும் அது அபிஷேகிக்கப்பட்டிருக்குமானால் அதில் ஓர் ஆன்மீக அதிகாரம் இருக்கும். அதிகாரத்தையும் (authority) அகங்காரத்தையும் (arrogance) குழப்பிக்கொள்ளக்கூடாது. பவுலுக்கு அப்போஸ்தல அதிகாரம் எவ் வளவோ இருந்தும் அவர் கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, ''உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல் உங்கள் மகிழ்ச்சிக்கு ஆதரவாயிருக்கிறோம்'' என்றார் (2 கொரி 1:24). பவுலின் கடிதங்கள் ''கடுமையானவை, வன்மையானவை'' என மக்கள் கூறினர். அவரோ தான் எழுதியதெல்லாம் அவர்களை உருக் குலைக்க அல்ல, உறுதியாக்கவே என்று அழுத்திக் கூறினார் (2 கொரி 10:8-10).

■ எண்ணெய் மிருதுத் தன்மையுள்ளது. இடைவெளிகள் மற்றும் துவாரங்கள் வழியே அது மெதுவாய் இறங்கும். இயந்திரப் பாகங்

களின் உராய்வை அது குறைக்கும். வேகமாய் ஓடும்போதும் இயந் திரங்களில் வெப்பம் அதிகரித்துவிடாமல் அது பாதுகாக்கும். இதைச் சகமனிதரோடு நமக்குள்ள உறவுகளில் ஆவியானவர் அருளும் உதவி என அர்த்தப்படுத்தலாம். நாம் எழுதுவது இறைமக்கள் நடுவில் இசைவையும் சமுதாயத்தில் இணக்கத்தையும் பெருக்கவேண்டும். நாம் பூவுலகில் சமாதானத்தைக் குலைத்துவிட்டு, மக்கள் நடுவில் பூசல்களைக் கிளப்பிவிட்டு, விண்ணகத்திலுள்ள கடவுளுக்குப் பூரிப் பைக் கொண்டுவர முடியாது (லூக் 2:14). ஆவியில்லாத எழுத்து கொல்லும்! (2 கொரி 3:6).

■ எண்ணெய்க்கு இதமாக்கிக் குணமாக்கும் தன்மையுமுண்டு. தட்பமேயில்லாத வெப்பத்தில் பாதுகாப்பாயிருக்க ஆடுகளின் தலை களில் எண்ணெய் ஊற்றுவார்கள் (சங் 23:5). குற்றுயிராய் விடப் பட்டிருந்த பயணியின் காயங்களில் நல்ல சமாரியன் எண்ணெய் ஊற்றினார் (லூக் 10:34). வியாதிப்பட்டிருப்போர் உடல்மீது எண் ணெய் தேய்க்கப்பட்டு அவர்களுக்காய்ப் பிரார்த்தனை ஏறெடுக்கப் பட்டது (யாக் 5:14). இவை யாவும் தூயாவியானவரின் ஆறுதல் பணியைக் குறிப்பிடுகின்றன. ஆவியானவரது உதவிகொண்டு எழு தப்பட்டவை உடைந்த உள்ளங்களை ஆற்றும், அடைபட்டவர்களை விடுவிக்கும், சிறைப்பட்டவர்களை வெளிக்கொண்டுவரும், அழுது கொண்டிருப்போரை ஆறுதல்படுத்தும் (ஏசா 61:1-3). மக்களை அவர்களது பயங்கள் மற்றும் தயக்கங்களிலிருந்து வெளியே கொண் டுவரும் வலிமை அபிஷேக எழுத்துக்களுக்குண்டு. தேற்றுகிறவர் அல்லது உதவியாளர் என்றே ஆண்டவராகிய இயேசு பிரதானமாய்த் தூயாவியானவரை அறிமுகம் செய்தார். அவரை ''இன்னொரு'' தேற் றரவாளன் என்று இயேசு அழைத்ததால் ''வளர்ச்சியையும், ஊக்கத் தையும் ஆறுதலையும்'' அளிக்கும் தமது தீர்க்கதரிசனப் பணியைப் பரிசுத்த ஆவியானவர் தொடருவார் என்றுதானே அவர் நமக்கு அறி விக்க விரும்பினார்? (யோ 14:16; 1 கொரி 14:3).

■ வாசனை எண்ணெய் வகைகள் கொண்டாட்டங்களிலும் மகிழ்ந்திருக்கும் வேளைகளிலும் பயன்படுத்தப்பட்டன. ''ஆனந்த தைலம்'' என்று பலமுறை வாசிக்கிறோமல்லவா? (எஸ்தர் 2:12; ஏசா



61:3; எபி 1:9). பிலிப்பிய சபைக்குப் பவுல் எழுதிய திருக்கடிதம் சிறைவாசகத்திலிருந்து எழுதப்பட்டதாயினும் அது துவக்கமுதல் முடிவுவரை மகிழ்ச்சியைப்பற்றியதே. சிறைச்சாலைச் சங்கிலிகளும் கம்பிகளும் பவுலின் ஆவியை நசுக்கமுடியவில்லை; அவரைக் கசப் புணர்வுள்ளவராக்கவும் முடியவில்லை. கிறிஸ்தவ எழுத்துக்கள் வாச கரிடமிருந்து அனுதாபத்தை எதிர்நோக்காமல், அன்னாரில் உற்சா கத்தையும் ஆனந்தத்தையும் கிளப்பவேண்டும். எழுத உட்காருமுன் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தங்கள் இதயங்களிலிருந்து எல்லாக் கசப் பையும் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். இல்லையேல் பல்லாயிரங் கள் கெடுக்கப்படுவர் (எபி 12:15). எழுத்தாளர்கள், ஆக்கியோன்கள் மற்றும் பதிப்பாசிரியர்களுக்கு இதோ ஓர் ஆலோசனை: ''உண்மை யானவை ... கண்ணியமானவை ... நேர்மையானவை ... தூய்மையா னவை ... விரும்பத்தக்கவை ... பாராட்டுதற்குரியவை ... நற்பண்பு டையவை ... போற்றுதலுக்குரியவை எவையோ'' அவற்றையே எழு துங்கள்! (பிலி 4:8ஐத் தழுவியது). தூயாவியானவரால் அபிஷே கிக்கப்பட்ட எழுத்துக்கள் கிறிஸ்துவின் வாசனையைத்தான் எங்கும் பரப்புமே தவிர துர்நாற்றத்தைக் கிளப்பிவிடாது (2 கொரி 2:14,15). யாரையாவது தாக்கிக்கொண்டேயிருக்கும் எதிர்மறைச் சிந்தையுள்ள பத்திரிகைகள் கிறிஸ்தவத்திற்கு ஏற்றவையல்ல.

■ விளக்குகளுக்கு எரிபொருளாகவும் எண்ணெய் பயன்படு கிறது. ''குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயைக் கொண்டுவரும் படி'' மோசே இஸ்ரவேலரைப் பணித்தார் (யாத் 27:20; லேவி 24:2). பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை இது எவ்வளவு அழகாய்ச் சித்தரிக்கிறது! இருளடைந்துள்ள நமது மனதில் தூயாவியானவர் ஒளிவீசச் செய்கிறார். அவர் சத்திய ஆவியானவரல்லவா? (யோ 14:17; 16:13). அபிஷேக எழுத்துக்களில் ஒரு தெளிவு இருக்கும். முன்னால் இருந்ததைவிடச் சில சமயங்களில் வாசித்த பின்னர் நமக்குக் குழப்பம் கூடி விடுகிறது! ஆனால் ஆவியானவரோ குழப்பம் இருக்குமிடத்தில் ஒழுங்கையும், முரண்பாடு இருக்குமிடத்தில் வெளிப்பாட்டையும் கொண்டுவருகிறார். ''விரும்பும்போதெல்லாம் பேசிவிடலாம், எழுதுவதோ அப்படியல்ல'' என்றார் ஒருவர்! ஏதாவ

தொரு பொருள்மீது எழுதுவதற்காக உட்காருமுன், எழுத்தாளன் திறந்த மறைநூலோடும் திறந்த மனதோடும் தூயாவியானவரின் விரித்த குடையின் கீழ் போதுமான நேரம் செலவழிக்கவேண்டும். ஆனால், கிறிஸ்தவப் பத்திரிகைகள் பல கருச்சிதைவுச் சிசுக்களாலும் குறைமாதக் குழந்தைகளினாலுமே நிறைந்திருக்கின்றன. சர்ச்சைக் குரிய சில காரியங்களைக் குறித்துத் தனது சொந்தக் கருத்தைச் சொல்லும்போதுகூட அப்போஸ்தலன் பவுல், ''என்னிடமும் கட வுளின் ஆவி உண்டென்று எண்ணுகிறேன்'' என்றெழுதுகிறார் (1 கொரி 7:40). தூயாவியானவருக்கு மட்டுமே கடவுளின் ஆழங்கள் தெரியும் (1 கொரி 2:10,11). எழுத்தாளன் எவ்வளவு திறமையும் கல்வியறிவும் உள்ளவனாயிருந்தாலும் அவன் எழுதும்போது முழுக்க முழுக்கத் தூயாவியானவரையே சார்ந்திருக்கவேண்டும். கிறிஸ்தவ எழுத்துப்பணி நித்தியத்திற்கடுத்ததாகும். அதை எவரும் ஏனோ தானோ என்று செய்யவேண்டாம்!

### 3. காற்று

நிக்கோதேமுவுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது இயேசு தூயாவியானவரின் செயல்பாட்டை வீசும் காற்றிற்கு ஒப்பிட்டார். அவர் சொன்னது: ''காற்றின் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது, எங்கு செல்கிறது என்று உமக்குத் தெரியாது; அப்படியே மக்கள் எவ்விதம் தூயாவியால் பிறக்கிறார்களென்று உம் மால் விளக்க முடியாது'' (யோ 3:8). பரிசுத்த ஆவியானவர் மாட்சி மையோடு இறங்குமுன் கடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் உண்டானது (அப் 2:2). பரிசுத்த ஆவியானவரது காற்றைப் போன்ற தன்மை எழுத்து ஊழியத்தில் எப்படிக் காணப்படுகிறதென்று கவனிப்போம் —

■ அசைவற்ற காற்று என்று ஒன்றும் கிடையாது. அது எப் பொழுதுமே வீசிக்கொண்டே இருக்கும். வேதாகமப் புத்தக ஆக்கி யோன்கள் பரிசுத்த ஆவியானவரால் ''அசைக்கப்பட்டு'' (ஏவப் பட்டு) பேசினார்கள் என வாசிக்கிறோம் (2 பேது 1:21). விவிலியத் தின் முதல் பக்கத்திலேயே, ஒரு பறவை தனது கூட்டின்மீது பறந்து ஆடிக்கொண்டிருப்பதுபோல, ஆவியானவரைத் தண்ணீர்கள் மீது



''அசைந்தாடிக்'' கொண்டிருக்கிறவராய்ச் சந்திக்கிறோம் (ஆதி 1:2). எழுதப்பட்டது எதுவும் அபிஷேகிக்கப்பட்டதாயிருக்குமானால் வாசகர்களின் உள்ளத்தில் அது ஒரு சலனத்தை உண்டாக்கும். இது கருவறையில் குழந்தை அசையும்போது கர்ப்பமாயிருப்பவளுக்கு உண்டாகும் உணர்வு போன்றது. எழுதப்படுவது தூயாவியானவரால் உந்தப்பட்டதாயிருக்குமானால், நமக்குள் தங்கியிருக்கும் அதே ஆவியானவர் அந்தச் செய்திக்கு நாம் செவிமடுக்கும்படி நம்மைத் தூண்டிவிடுவார் (1 யோ 2:27). மரியாளின் அருள் வாழ்த்து எலிச பெத்தின் காதுகளில் விழுந்ததும் அவரது கருவறையிலிருந்த சிசு வாகிய யோவான் உள்ளேயே துள்ளினான்! (லூக் 1:41). அபிஷேக எழுத்துக்கள் வாசகரை அசைத்துச் செயல்பட எழுப்பிவிடும்!

■ நல்ல காற்று இல்லையேல் மூச்சு முட்டும். துர்ப்பாக்கியமாக, நமது சபைகள் பலவற்றிற்குக் கதவுகள் மட்டும்தான் உண்டு — அது வும் உள்ளே மட்டும்தான் திறக்கும் கண்ணிக் கதவுகள் — ஜன்னல் களோ வென்டிலேட்டர்களோ கிடையாது. உயிருள்ளவை எனப் பெயர் பெற்றும் சபைகள் பல வியாதிப்பட்டும் செத்தும் இருப்பதில் ஆச்சரியமில்லையே! அபிஷேக எழுத்துக்கள் வாயிலாகக் கடவுள் தமது மக்கள்மீது ஆரோக்கியமான காற்றை வீசுகிறாரென்று நான் ஆணித்தரமாய் நம்புகிறேன். எனவேதான் பவுல் சபைகளுக்கு எழு தும்போது மற்ற சபைகளுக்கு அவர் எழுதிய அருட்கடிதங்களையும் வாசிக்கும்படிச் சொன்னார். கொலோசெயர் 4:16இல் ஓர் எடுத்துக் காட்டு: ''இந்நிருபத்தை நீங்கள் வாசித்தபின்பு லவோதிக்கேயா திருச்சபையிலும் வாசிக்க ஏற்பாடு செய்யுங்கள். அவ்வாறே லவோ திக்கேயா திருச்சபையிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசி யுங்கள்.'' காற்று வீசும்போது வெளியே நடக்கும் பெண்களின் முகத் திலுள்ள முக்காடுகள் விலகிப் பறக்குமல்லவா? அபிஷேக எழுத்துக் களும் இப்படித்தான். அவை வாசகரை விடுவித்து வாக்களிக்கப் பட்ட நாட்டிற்குள் அவர்களைக் கொண்டுவரும் (2 கொரி 3:15-17).

■ மார்ட்டின் லூத்தர் (1483-1546) மற்றும் ஜான் வெஸ்லி (1703-1791) போன்ற தேவ மனிதரின் அபிஷேக எழுத்துக்கள் ஐரோப்பாவிலும் உலகெங்கிலும் சீர்திருத்தக் காற்றைத் தீவிரமாய்

வீசச்செய்தன. இருண்ட காலத்தின் உலர்ந்த எலும்புகள் மீது நாலா பக்கத்திலிருந்தும் கடவுளின் சுவாசக் காற்று வீசியபோது அவை ஒன்றோடு ஒன்று சேர்ந்து வீர சேனையாய் எழும்பி நின்றன (எசே 37:9,10). சீர்திருத்தம் முடிந்துவிட்டதோ? இல்லை, இல்லை, இல்லவே இல்லை! எழுப்புதல் இன்று தேவைதானா? தேவை, தேவை, கட்டாயம் தேவை! நமது தலைமுறையில் அசாதாரண ஆன்மீக அசைவு ஏற்படும்படி அருட்செய்திகளை எழுதியனுப்பும் மனிதர் எழும்ப மாட்டாரா? தமிழ்க் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் தலைசிறந்த அண்ணன் J. சாம் ஜெபத்துரை அவர்களது ஒரு பாடல் —

*அசைவாடும் ஆவியே, தூய்மையின் ஆவியே,*
*இடம் அசைய, உள்ளம் நிரம்ப, இறங்கி வாருமே!*

■ எழுத்தாளனின் வரங்களையும் திறமைகளையும் வாசகர்கள் பாராட்டவேண்டுமென்பதில் அபிஷேக எழுத்துக்கு அக்கறையே இருக்காது. வாசகர்களை இன்னும் பரிசுத்தமாய் வாழச் செய்யவும், அவர்கள் இன்னும் பரவசமாய் வேலை செய்யவும் அவர்களிலிருந்து நன்மையானவற்றை வெளிக்கொண்டுவருவதே அதின் நோக்கமாயிருக்கும். இதைச் சித்தரிக்கும் வசனப்பகுதி ஒன்று உன்னதப்பாட்டில் உண்டு: ''வாடைக் காற்றே, எழும்பு! தென்றல் காற்றே, வா! கந்தப் பிசின்கள் வடியும்படி என் தோட்டத்தில் வீசு. எனது அன்பர் தமது தோட்டத்திற்கு வந்து தமது நேர்த்தியான பழங்களைச் சாப்பிடட்டும்!'' (உன் 4:16). எழுத்துக்களில் வரும் சவால்களும் வாசகரைத் தைரியமிழக்கச் செய்யாது, அவர்கள் கடவுளுக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்யவும் மனிதருக்காய் அரிய செயல்களைச் சாதிக்கவும் அவர்களைத் தட்டியெழுப்ப வேண்டும். இதைப் பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் செய்கிறார்; ஏனெனில் அவர் பயப்படுத்தும் ஆவியல்ல, பரிவும் பாசமும் நிறைந்தவர். பயந்த சுபாவமுள்ள தீமோத்தேயு போன்றோரைச் சபைத் தலைமைத்துவத்திற்காய்ப் பக்குவப்படுத்த பவுலின் உற்சாகமூட்டும் கடிதங்கள் எவ்வளவாய் உதவின! (1 கொரி 16:10,11; 1 தீமோ 4:13-15)!

### 4. நெருப்பு

நமது ஆண்டவர் அழிக்கும் நெருப்பு போன்றவர் (எபி 12:29). திரித்துவத்தில் ஒருவராகிய தூயாவியானவரும் நெருப்பானவர்தான்.



அவரது இத்தன்மையைப் புதிய ஏற்பாட்டில் முதலாவது குறிப்பிட்டது திருமுழுக்கினன் யோவான். இயேசு கிறிஸ்துவை அவர் பாவங்களைச் சுமக்கிறவராக மட்டுமல்ல, பரிசுத்தாவியினாலும் நெருப்பினாலும் நம்மை அபிஷேகிக்கிறவராகவும் அறிமுகம் செய்தார் (யோ 1:29; மத் 3:11). பெந்தெகொஸ்தே நாளன்று தூயாவியானவர் வந்தது சீடர் மீது அமர்ந்த நெருப்புப் பிழம்புகளால் சுட்டிக்காட்டப்பட்டது (அப் 2:3). ஆவியானவரின் உதவி கொண்டு எழுதப்படுபவை அவரது நெருப்புத் தன்மையை எவ்வளவாய் வெளிப்படுத்துமெனக் காணுவது உற்சாகம் தரும் —

■ நெருப்பு அழிக்கும். இது எதிர்மறையாய்த் தோன்றினாலும் ஆன்மீக வாழ்வில் நல்ல காரியம் எதுவும் இங்குதான் துவங்கும். கற்குமுன் களையவேண்டும். ''கட்டுவதற்கும் நட்டுவதற்கும்'' முன்னர் ''பிடுங்குவதற்கும், இடிப்பதற்கும், அழிப்பதற்கும், அகற்றுவதற்குமே'' இறைவாக்கினன் எரேமியா அழைக்கப்பட்டார் (எரே 1:10). அசைக்கப்பட முடியாதவை மட்டுமே மிஞ்சும்படி அசைக்கப்படக்கூடிய யாவும் அசைக்கப்படவேண்டும் (எபி 12:27). கிறிஸ்தவ எழுத்துக்கள் வாசகருக்கு ஆராரோ பாடி அவர்களைத் தூங்கவைத்துவிடக் கூடாது. அது அவர்களுக்கிருக்கும் போலிச் சமாதானத்தைக் குலைத்துப்போடவேண்டும். அவர்களது தூக்க மயக்கத்திலிருந்து அது அவர்களை உலுப்பி எழுப்பிவிடவேண்டும். ''விழி ... எழு'' என்பவை கடவுளின் ஓயாத குரல்! (ஏசா 60:1; எபே 5:14)

■ தூயாவியானவரின் நெருப்பு நமது வாழ்விலுள்ள பதரையெல்லாம் பொசுக்கிவிடும் (மத் 3:12). உத்தமக் கிறிஸ்தவர்கூட முக்கியமில்லாதவைகளுக்கு வாழ்வில் முதலிடம் கொடுத்துள்ளனர். சிறிய பாடங்களில் அதிகக் கவனம் செலுத்திப் பெரிய பாடங்களில் தவறிவிடுகின்றனர். தங்கள் வாழ்வில் முக்கியமானவைகளை அடையாளங்கண்டு வரிசைப்படுத்துவதற்கு வாசகருக்கு உதவியான கருத்துக்களைக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் எழுதவேண்டும். அபிஷேகிக்கப்பட்ட எழுத்தாளர்கள் மக்கள் ''விரும்புவதை'' அல்ல, மக்களுக்கு ''வேண்டியதை'' எழுதுவார்கள். கிறிஸ்தவ இலக்கியங்கள் வியாபார

மயமாகிவிடக்கூடாது. இறுதிக்கால அடையாளங்களில் ஒன்று என்ன தெரியுமா? மக்கள் தாங்கள் கேட்க (வாசிக்க) விரும்புவதற்கேதுவான வற்றைச் சொல்லும் (எழுதும்) போதகர்களைத் திரட்டிக்கொள்வார் கள் (2 தீமோ 4:3ஆ).

■ இன்று இரட்சிப்பின் செய்திகளடங்கிய பத்திரிகைகள்தான் ஏராளம்; விசுவாசிகளுக்குப் பக்திவிருத்தியளிக்கும் பத்திரிகைகளோ மிகக் குறைவு. இரட்சிப்பின் செய்திகளும் கிறிஸ்தவர்களுக்கென்றே எழுதப்படுகின்றன. விசுவாசிகள் இன்னும் பால் குடிக்கும் பாலக ராகவே இருக்கின்றனர் (எபி 5:12). ஞாயிறு ஆராதனை ஓய்வு நாள் பள்ளி போலவே இருக்கிறது! வேதப் போதகர்கள் தங்கள் அழைப்பை மறந்து கிராக்கிக்கேற்றவாறு சுவிசேஷகர்களாய் மாறிவிட்டனர். எழுத் தாளர்களுக்கு உற்சாகந்தரும் பகுதியொன்றை எரேமியாவின் புத்த கத்திலிருந்து இங்கு குறிப்பிடுகிறேன்: ‘‘சொப்பனம் கண்ட தீர்க்க தரிசி சொப்பனத்தைச் சொல்லட்டும்; எனது வார்த்தையுள்ளவனோ என் வார்த்தையை உத்தமமாய்ச் சொல்லட்டும்; கோதுமைக்கு முன் பதர் நிற்க முடியுமா? என்று கர்த்தர் சொல்லுகிறார். என் வார்த்தை நெருப்பைப்போல் இருக்கிறதல்லவோ?’’ (எரே 23:28,29). உங்கள் நெஞ்சுக்குள்ளிருக்கும் நெருப்பு உங்கள் பேனா மூலம் வெளியே கொட்டட்டும்! (20:9)

■ அபிஷேக எழுத்துக்களை வாசிப்போருக்கு எம்மாவூர் சீடரின் அனுபவம் கிடைக்கும். அதை வாசிக்கும்போது ‘‘நமது இருதயங்கள் கொழுந்துவிட்டு எரியவில்லையா’’ என வியந்து பேசுவர்! (லூக் 24: 32). நெருப்பைக் கவனியாமல் இருக்கமுடியாது. அபிஷேக எழுத்துக் களால் கொளுத்தப்பட்ட இதயங்கள் கடவுளுக்காய் எரிந்து பிரகாசிக் கும்; மற்றவர்களையும் எரிந்து பிரகாசிக்கச்செய்யும்! நெருப்பு பிறப் பிப்பது நெருப்பு!

### 5. புறா

■ யோர்தான் நதிக்கரையில் தேவ குமாரனாகிய தேவ ஆட்டுக் குட்டிமீது தேவ ஆவியானவர் புறாவைப்போல் வந்திறங்கியது போன்ற அழகிய கட்டம் புதிய ஏற்பாட்டில் எங்குமில்லை. ஆட்டுக்



குட்டியின்மேல் வெண் புறா! (மத் 3:16; யோ 1:29). எல்லா மிருகங் களையும்விடச் சாதுவான ஆட்டுக்குட்டியின்மீது எல்லாப் பறவை களையும்விடச் சாந்தமான புறா வந்தமர்ந்தது! சிங்கங்கள் மீதோ புலிகள் மீதோ புறாக்கள் வந்து உட்காராது. இயேசுவானவர் யூதாவின் சிங்கமாயிருந்தாலும் அவர் பலியாடாய் மாறினார். இதுதான் முழுக்க முழுக்க அடையாளப்படுத்திக்கொள்ளுதலின் (Incarnational Identification) விளக்கம். கிறிஸ்தவ எழுத்தாளர்கள் வாசகரது போராட் டங்கள், பாடுகள், குழப்பங்கள், கேள்விகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், குறைவுகள் மற்றும் கலக்கங்களோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டால் தவிர அவர்களது செய்தி வாசகருக்குப் புரியாத புதிரா கவே இருக்கும். மேடைகளிலிருந்து எழுத்தாளர்கள் இறங்கிவந்து மனுக்குலத்திற்குச் சகோதரரும் சகோதரிகளுமாக வேண்டும் (எபி 2:11,12). வாசகரின் உணர்வுகள் எழுத்தாளர்களின் உள்ளத்தை அசைக்கவேண்டும்.

■ புறா கபடற்றது. தமது பன்னிரு சீடரை இயேசு அனுப்பி வைத்தபோது அவர்களிடம், ‘‘பாம்புகளைப் போல முன்மதி உடைய வர்களாகவும் புறாக்களைப் போல கபடு அற்றவர்களாகவும் இருங் கள்’’ என்று சொன்னார் (மத் 10:16). கிறிஸ்தவ எழுத்தாளர்களுக்குப் பாம்பின் குணம்தான் கூடுதலாயிருக்கிறதோ என்று அஞ்சுகிறேன்! நமது விவேகத்திற்குச் சமமாக உத்தமமும் இல்லையேல் நமது வாழ்வில் நாம் இறையழைப்பை நிறைவேற்ற முடியாது. புறா போன்ற தூயாவியானவர் எழுத்தாளனை அபிஷேகிக்கும்போது, அவன் சரியானதைத் தெளிவாய்த் தெரிந்தவனாகவும், தவறானதைச் செய்யத் தெரியாதவனாகவும் இருக்கும்படி மாற்றப்படுவான் (ரோ 16:19ஆ). எழுத்தாளர்கள் நிறைய வாசிக்கவேண்டியது அவசியம். ஆனால் செய்தித்தாள்களிலும் வாராந்திர மற்றும் மாதாந்திரப் பத்தி ரிகைகளிலும் அரசியல் சாக்கடை நிறைந்துள்ளதால், கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தங்களது மனது கறைப்படாதபடியும், தெரிந்தும் தெரி யாமலும் கோணலான வழிகளைக் கிறிஸ்தவத்திற்குள் கொண்டு வராதபடியும் கவனமாயிருக்கவேண்டும். சமாதானத்திற்கும் சுத்தத் திற்கும் புறா ஓர் அடையாளம்.

■ புறா மென்மையான தன்மையுள்ளது. மக்கள் தம்மிடம் வந்து படித்துக்கொள்ளும்படி இயேசு அவர்களை அழைத்தார். எதைக் கற்றுக்கொள்ள? சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் (மத் 11: 28,29). சாந்தமென்றால் பலமின்மையல்ல. தாழ்மையென்றால் உறுதியின்மையல்ல. நமது எழுத்துக்களில் நாம் துர்வுபதேசங்களை யும் திருமறைக்கு விரோதமான செயல்முறைகளையும் எதிர்க்கலாம்; ஆனால் ஒருபோதும் எந்த நபரையும் நிறுவனத்தையும் தாக்கக் கூடாது. கடவுள் பாவத்தைத்தான் வெறுக்கிறார், பாவியை அல்ல! அபிஷேக எழுத்துக்கள் ஆவியின் கனிகளால் அலங்கரிக்கப்பட்டி ருக்கவேண்டும். பேசியது மறக்கப்படலாம், எழுதியதோ எழுதியதே. பேனாதான் எழுத்தாளனின் வாள். இந்த வாள் இன்னொருவரின் காதை அறுப்பதற்காகக் கொடுக்கப்படவில்லை! நாம் சத்தியத்திற் காய்ப் போராடுகிறோம், விசுவாசத்திற்காய் நிற்கிறோம் என்றெல்லாம் நினைத்துக்கொள்வோம்; ஆனால் உண்மையில் சாத்தானது கரங் களில் ஓர் ஆயுதமாய்ச் சிக்கியிருப்போம். கிறிஸ்தவ எழுத்தாளர்கள், அதிலும் குறிப்பாய் இந்தியாவில், இங்கு கிறிஸ்தவரல்லாதோரே பெரும்பான்மையினராயிருப்பதால், இரண்டு மடங்கு கவனமா யிருக்கவேண்டும். பிலிப்பியர் 4:5ஐக் கிறிஸ்தவ எழுத்தாளர் அனை வருக்கும் எனது முடிவான ஆலோசனையாய்க் கூறுகிறேன்: ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் சமீபமாயிருக்கிறார்!''

*(2002 ஆகஸ்டு 24-25இல் நெய்வேலியில் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் நடத்திய எழுத்தாளர் கருத்தரங்கில் ஆசிரியர் கொடுத்த செய்தியே இக்கட்டுரை.)*



# 16

# ஆவிகளைச் சோதித்தறிவது எப்படி?

## How to Discern the Spirits

எழுப்புதல் காலங்களில் ''அன்னிய அக்கினியும்'' சேர்ந்தே எரி வதைச் சபைச் சரித்திரம் நெடுகவே கண்டிருக்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலுமுள்ள சபையானது இவ்வித அக்கினியைக் குறித்து முன்னெச்சரிக்கப்படவேண்டுமென ஆதி அப்போஸ்தலர் விரும்பி யிருந்தனர். முன்னெச்சரிக்கப்பட்டால்தான் முன்னதாக ஆயுத மணிந்து நிற்கலாம். இதனால்தான் அவர்கள் தேவ மக்களை ''வேறொரு இயேசு,'' ''வேறொரு சுவிசேஷம்,'' மற்றும் ''வேறொரு ஆவி'' ஆகி யவை குறித்து எச்சரித்தனர் (2 கொரி 11:4). இவ்விதமானதோர் எச்ச ரிப்பை விடுக்கையில் அப்போஸ்தலன் யோவான் தனது வார்த்தை களில் தெளிவாயிருந்தார். அவர் சபைக்கு எழுதியது: ''பிரியமான வர்களே, உலகத்தில் அநேகம் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்ப தால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவ னால் உண்டானவைகளோ என்று ***சோதித்தறியுங்கள்''*** (1 யோ 4:1).

தேவனது உண்மை ஊழியரைவிடக் கள்ளத் தீர்க்கரும் கள்ளப் போதகருந்தான் அதிகம் போலத் தோன்றுகிறது. ''***அநேகம்*** கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதால் ...'' (1 யோ 4:1). ''கள்ளத் தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் ... அந்நாளில் ***அநேகர்*** என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! ...'' (மத் 7:15,22). ''***அநேகர்*** வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு ... ***அநேகரை*** வஞ்சிப்பார்கள்'' (மத்24:5). ''***அநேகரைப்*** போல நாங்கள் தேவ வசனத்தைக் கலப் பாய்ப் பேசாமல் ...'' (2 கொரி 2:17). ''***அநேகர்*** வேறுவிதமாய் நடக் கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்'' (பிலி 3:18). ''பிள்ளைகளே, இது கடைசிக்காலம் ... இப்பொழுதும் ***அநேக*** அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள்'' (1 யோ 2:18). ஆம், சத்துரு

பொதுவாக ‘‘வெள்ளம்’’ போலவே வருவான் (ஏசா 59:19). கள்ள ஊழியரைப்பற்றிப் பேசும்போது இயேசு ‘‘மழை,’’ ‘‘வெள்ளம்’’ மற்றும் ‘‘காற்று’’ ஆகிய பதங்களைப் பயன்படுத்தினார் (மத் 7:15,25). அப்படியே அப்போஸ்தலன் பவுல் பலவிதப் போதகக் ‘‘காற்று’’ மற்றும் ‘‘அலைகள்’’ எனக் குறிப்பிட்டார் (எபே 4:14). இவ்வித ஒப்புமைகளெல்லாம் துர்வுபதேசங்களின் வாரிக்கொண்டுபோகும் தன்மையைச் சித்தரிக்கின்றன. பரிசுத்த ஆவியானவரும் மழைக்கும் காற்றுக்கும் தண்ணீருக்கும் ஒப்பிடப்பட்டுள்ளார். ஆனால் சாத்தான் தந்திரமாய் இவற்றிற்குப் போலிகளை உருவாக்கி, ஆவியானவர்தான் அசைவாடுகிறாரென்று மக்களை நம்பச்செய்வான்.

‘‘கடைசி நாட்கள்’’ மற்றும் ‘‘முடிவு காலம்’’ போன்ற பதங்களைப் பயன்படுத்துகையில் அவற்றின் பொருளை நாம் சரிவர நினைவிற் கொள்ளவேண்டும். கடைசி நாட்களோ முடிவு காலமோ 2001 அல்லது 2011இல் தொடங்கவில்லை. இயேசுவானவரின் முதல் வருகையும் ஆவியானவர் இறங்கி வந்ததுமே கடைசி நாட்களைத் துவக்கின (எபி 1:1,2; அப் 2:16,17). முதல் நூற்றாண்டையே அப்போஸ்தலன் யோவான் ‘‘கடைசி மணிநேரம்’’ (last hour) என்றழைத்தார்! (1 யோ 2:18).

புதிய ஏற்பாட்டுச் சபையின் அனைத்துவகை ஊழியர் மூலமாகவும் வேறே ஆவிகள் செயல்படமுடியும் (எபே 4:13). கள்ள அப்போஸ்தலர் (2 கொரி 11:13), கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத் 7:15), கள்ளச் சுவிசேஷகர் (வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போர்) (கலா 1:6-8), கள்ள மேய்ப்பர் (யோ 10:12), கள்ளப் போதகர் (2 பேது 2:1) என்றெல்லாம் வாசிக்கிறோம். முடிவு காலத்தின் முடிவுக்குள் நாம் வருகையில், வஞ்சிக்கிற ஆவிகள் மிகத் தீவிரமாய்ச் செயல்படும். இது பரிசுத்த ஆவியானவரால் ‘‘வெளிப்படையாய்’’ முன்னறிவிக்கப்பட்டுள்ளது (1 தீமோ 4:1). கவனக் குறைவான விசுவாசிகள் இதனால் ‘‘விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.’’ வழி விலகல் படிப்படியாகவும் அறியாமல் நடப்பதாகவுமிருக்குமென்ற கருத்து மூல மொழியிலுண்டு. இது திடீரென்றோ முழுமையாகவோ இராமல் கொஞ்சங்கொஞ்சமாய் நடைபெறும். இந்நிலையின்



ஆபத்தை உணர்ந்த அப்போஸ்தலரில் ஒருவராகிய யூதா தனது நிருபத்தில் எழுதவிருந்த பொருளையே மாற்றிவிட்டார். இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைக் குறித்து ஆறுதலானதொரு நிருபம் எழுத உட்கார்ந்த அவர் ‘‘ஒரே தரம் ஒப்புவிக்கப்பட்ட’’ மூல வெளிப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நவீனக் காரியங்களுக்கு எதிராய்த் தைரியமாய்ப் ‘‘போராடக்’’ குரலெழுப்பினார் (யூதா 3). அவரது நிருபம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள்.

வேறே ஆவிகளால் ஆட்கொள்ளப்பட்டுள்ள ஊழியரை அப்போஸ்தலர் அனைவரும் முழுமூச்சாய் எதிர்த்தனர். இவர்களைப் பவுல் தனது நிருபங்களில் எவ்விதம் அழைக்கிறாரென்று கவனியுங்கள்: ‘‘கபடமுள்ள வேலையாட்கள்’’ (2 கொரி 11:13), ‘‘கலகக்காரர்’’ (கலா 1:7), ‘‘கள்ளச் சகோதரர்’’ (2:4), ‘‘மயக்குகிறவர்கள்’’ (3:1), ‘‘நாய்கள், பொல்லாத வேலையாட்கள்’’ (பிலி 3:2), ‘‘சிலுவைக்குப் பகைஞர்’’ (3:18), ‘‘தந்திரக்காரர், கொள்ளைக்காரர்’’ (கொலோ 2:4,8), ‘‘வஞ்சிக்கிறவர்கள்’’ (2:18), ‘‘பொய்யர்’’ (1 தீமோ 4:2), ‘‘இறுமாப்புள்ளவர்’’ (6:4), ‘‘கெட்ட சிந்தையுள்ளோர்’’ (6:5), ‘‘வீண் பேச்சுக்காரர் ... கள்ளப் போதகர்’’ (2 தீமோ 2:16), ‘‘அரிபிளவை’’ (2:17), ‘‘பிசாசினால் பிடிபட்டிருப்போர்’’ (2:26), ‘‘எத்தர்கள், மோசம்போக்குகிறவர்கள்’’ (3:13), ‘‘வீண் பேச்சுக்காரர்’’ (தீத் 1:10), ‘‘கவிழ்த்துப்போடுகிறவர்கள்’’ (1:11), ‘‘வேதப் புரட்டர்’’ (3:10). தனக்கடுத்து ஊழியத்தில் எழுந்து வந்துகொண்டிருந்த தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய முதல் ஆலோசனையே இதைப் பற்றியதுதான்: ‘‘வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடி அவர்களுக்குக் கட்டளையிடு’’ (1 தீமோ 1:3).

சபையெங்கிலும் இந்நாட்களில் வினோதமான அநேக சம்பவங்களும் அனுபவங்களும் நடப்பதாய்க் கேள்விப்படுகிறோம். தாங்கள் பல்லாண்டுகளாய் ஜெபித்து எதிர்பார்த்த எழுப்புதல் இதுதான் எனக் கூறும் பிரசங்கிமாருண்டு. மக்கள் தரையில் விழுகிறார்கள், அடக்க முடியாமல் சிரிக்கிறார்கள், சிலர் வாந்தியெடுக்கிறார்கள், சிலர் கர்ஜிக்கிறார்கள், உறுமுகிறார்கள், மற்றவர்கள் தரையில் ஊருகிறார்கள். எழுப்புதலை அனுபவிக்கிறோமெனக் கூறப்படும் கூட்டங்களில்

இவை போன்ற பல காரியங்கள் நடக்கின்றன. விசுவாசிகளுக்கு ஒரே குழப்பம். எது தேவனிடமிருந்து வருவது, எது அவரிடமிருந்து வருவதல்ல எனப் பகுத்தறிய முடியுமா?

ஆவியின் வரங்களை முழுக்க முழுக்க விசுவாசிக்கும், அப்பியாசிக்கும், நான் கிறிஸ்துவின் உடலாகிய சபைக்கு இன்று தேவையான அதிமுக்கிய வரம் ''ஆவிகளைப் பகுத்தறிதல்'' என்றே அழுத்திக் கூறுவேன். கிருபாவரங்களின் பட்டியலில் தீர்க்கதரிசன வரத்திற்கு அடுத்ததாக உடனே ''ஆவிகளைப் பகுத்தறிதல்'' சொல்லப்பட்டிருப்பது கவனத்திற்குரியது (1 கொரி 12:10). ஆவியின் மற்ற வரங்களைப் போலவே ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் ஒரு சிலருக்கே கொடுக்கப்பட்டாலும், பகுத்தறியும் கலையில் ஒவ்வொரு விசுவாசியும் தேறவேண்டும் (எபி 5:14). நிசமானதையும் போலியானதையும் சோதித்தறிய தேவன் நமக்குக் குறைந்தது நான்கு ஏதுக்களைத் தந்துள்ளார் —

## 1. திருவசனத்தின் மூலம் சோதித்தறிதல்

பரிசுத்த ஆவியானவர் இறங்கிய பெந்தெகொஸ்தே நாளானது யூதச் சரித்திரத்தில் அசாதாரணமானதொரு நிகழ்வாகும். மேலறைச் சம்பவங்களைக் கவனித்தோர் மிகுந்த குழப்பமடைந்தனர். தாங்கள் கண்ட வினோதமான காரியங்களைக் குறித்து ''இதெப்படி? ... இதென்னமாய் முடியுமோ?'' என்றெல்லாம் வினவத் தொடங்கினர் (அப் 2:8,12). ''தீர்க்கதரிசியாகிய யோவேலினால் ***உரைக்கப்பட்டபடியே*** இது நடந்தேறுகிறது'' என்று சீடர்களின் புது அனுபவத்தைப் பேதுரு அப்போஸ்தலனால் விளக்கம் கூறமுடிந்தது (வச 16). எழுதப்பட்டிருந்த வேத வசனமே அந்த நாளில் ''கண்டது, கேட்டது'' யாவற்றிற்கும் அவர்களுக்கு முழு அதிகாரமும் அங்கீகாரமும் கொடுத்தது.

இந்நிகழ்ச்சியில் மட்டுமல்ல, தங்கள் வாழ்க்கை மற்றும் ஊழியம் முழுவதிலும் அப்போஸ்தலர் ***''எழுதப்பட்டிருக்கிறது''*** என்னவென்பதையே தங்களது செய்திகள் மற்றும் செயல்பாடுகள் யாவற்றிற்கும் உரைகல்லாய்க் கொண்டிருந்தனர். இதோ சில எடுத்துக்காட்டுகள் —



''விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று ***எழுதியிருக்கிறபடி***, ... விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்'' (2 கொரி 4:13).

***''எழுதியிருக்கிறபடி*** மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக ...'' (1 கொரி 1:31).

''பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ***எழுதியிருக்கிறபடியால்***, நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்'' (ரோ 12:19; 14:10,11; 15:2,3).

தங்களிடமிருந்து விசுவாசிகள் என்னத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்பினார்களென்று கவனியுங்கள்: ***''எழுதப்பட்டதற்கு மிஞ்சி*** எண்ணவேண்டாம் என்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும் ...'' (1 கொரி 4:6).

அதிமுக்கியமான இத்தத்துவத்தை அப்போஸ்தலர் எங்கிருந்து கற்றிருப்பர்? தமக்குப் பிதாவானவர் ஆவியை அளவில்லாமல் கொடுத்திருந்தும் ***''எழுதப்பட்டிருப்பதற்கு''*** உள்ளேயே செயல்பட்ட தங்கள் ஆண்டவர் கிறிஸ்துவிடமிருந்துதான் அதைக் கற்றனர். எழுதப்பட்ட திருவசனத்திற்கு மிஞ்சிச் செல்லக்கூடிய ஆவியின் அபிஷேகம் தனக்கிருக்கிறதென்று எவனாகிலும் நினைத்தால் அது என்னே மடமை!

குறிசொல்லுதல் மற்றும் அஞ்சனம் பார்க்குதலுக்கு எதிராய்ப் பேசிக்கொண்டிருந்த தீர்க்கன், ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்'' என்று ஓங்கிச் சொன்னார் (ஏசா 8:19,20). அதாவது, திருவசன உபதேசத்திற்கும் அதற்கு இணையான திருவசன உதாரணங்களுக்குமே நாம் எப்பொழுதும் திரும்பவேண்டும். ''இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால்'' நமக்கு ''விடியற்கால வெளிச்சம்'' இராது. எழுப்புதல் என்றழைக்கப்படும் இன்றையச் சம்பவங்கள் பல இந்தப் பரீட்சைக்கு நிற்காது.

பிரியமானவர்களே, திருவசனத்திற்கு மிஞ்சிய வெளிப்பாடுகள் மற்றும் அனுபவங்களுக்கு எச்சரிக்கை! சில பிரசங்கிமார் யோவான் 20:30ஐச் சுட்டிக்காட்டித் தங்களது விகற்பமான வெளிப்பாடு

களுக்குப் புகலிடம் தேடுகின்றனர்: ''இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு செய்தார்.'' ஆனால் அடுத்த வசனத்தில்தானே யோவான் சொல்வதை இந்நவீன அனுபவக்காரர் வாசிக்கத் தவறிவிடுகின்றனர்: ''இயேசு, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவர் நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன'' (வச 31). வேறு வார்த்தைகளில் சொன்னால், கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்க்கைக்குத் தேவையானது எழுதப் பட்டிருப்பதற்குமேல் ஒன்றுமில்லை, எழுதப்பட்டதே போதும்! ''அமைதியிலிருந்து (அதாவது, எழுதப்படாதவைகளிலிருந்து) விவாதியாதே'' என்பது வேத வியாக்கியானச் சட்டங்களில் முக்கிய மானதொன்று. (Do not argue from silence.) வேதம் எங்கே நிறுத்து கிறதோ அங்கே நிறுத்திவிடவேண்டும். ''உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே'' (நீதி 22:28).

கி.மு. 200க்கும் கி.மு.100க்கும் இடையில் apocrypha (= மறைக் கப்பட்டவை) எனும் பல நூல்கள் எழுதப்பட்டன. எவரும் இவை களைத் திருவசனமென்று ஒத்துக்கொண்டதேயில்லை. ஆனால் மரித் தோருக்காய் ஜெபிப்பது, நற்செயல்கள் மூலம் பாவமன்னிப்பு பெறு வது போன்ற தங்களது செயல்பாடுகளைத் தற்காப்பதற்காய், சீர்த் திருத்தவாதிகளுக்கு எதிராய், ரோமன் கத்தோலிக்கர் 1546இல் மேற்குறிப்பிட்ட புத்தகங்களை விவிலியத்தோடு சேர்த்துவிட்டனர். எனவேதான் பழைய ஏற்பாட்டில் அவர்களுக்கு நம்மைப்போல் 39 அல்ல, 46 புத்தகங்கள் உண்டு. ஆனால் ரோமன் கத்தோலிக்கரே பின்னர் ஏற்றுக்கொண்ட புதிய ஏற்பாட்டில் ஒரு முறைகூட இந்த ''மறைக்கப்பட்ட'' ஆகமங்கள் மேற்கோள் காட்டப்படவில்லை!

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நான் ஒரு புராட்டஸ் டன்ட்! ''புராட்டஸ்டன்ட்'' என்றால் ''தேவ கிருபைக்கும் தேவ வச னத்திற்கும் முரண்பாடானவைகளை எதிர்க்கிறவன்'' என்று பொருள். விவிலியம் பிரதானமானது என்பது மட்டுமல்ல, விவிலியமே போது மானது என்பதும் எனது முழக்கம். கிறிஸ்தவர்களே, ''புதிய'' காரியம் என்றெல்லாம் சொல்லப்படுபவைகள் பின்னே போகாதீர்கள்! புதிய உடன்படிக்கையில் எழுதப்பட்ட ஆசீர்வாதங்களே பரிபூரணமா



யிருக்கின்றன. அவைகளிலேயே திருப்தியடைந்திருங்கள். நவீன கவர்ச்சிகளை நாடிப்போகத் தேவையில்லாத அளவு ''நமக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்'' ஜீவத்தண்ணீரை இயேசு கொடுத்துவிட்டாரே! (யோ 4:14). இங்குதானே ஏவாள் தோல்வியடைந்தாள்! அவளைத் திருப்திப்படுத்த அத்தோட்டத்தில் அவ்வளவு இருந்ததே. அவளோ ''புசிப்புக்கு நல்லதும்,''அதாவது உடலுக்கு உணர்ச்சிவச அனுபவங்களைத் தருகிறதும்; ''பார்வைக்கு இன்பமும்,'' அதாவது பரவசமூட்டுவதற்கான பகட்டு நிறைந்ததும்; ''புத்தியைத் தெளிவிக்கிறதுமான,'' அதாவது புதுப்புது வெளிப்பாடு கள் தருகிறதுமான விலக்கப்பட்ட கனியைச் சாப்பிடும்படி வரம்பைத் தாண்டினாள்.

ஆம், மாற்றப்படாத இயல்பான சுபாவமுள்ள மனிதனுக்கு எப் பொழுதுமே புதிது புதிதான நவீனங்களில்தான் நாட்டம் அதிகம் (அப் 17:21). ஆனால் நமதாண்டவரோ பழமையாய்ப் போகாதவர். ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (ஆகையால்) பலவித அந்நிய ***போதனைகளால்*** அலைப்புண்டு திரியாதிருங்கள்'' (எபி 13:8,9).

பிரியமானவர்களே, பெரோயா நகர்வாசிகளைப்போல, நீங்களும் வாசிப்பது, கேட்பது அல்லது காண்பது எதுவும் வசனத்திற்கு ஒத்தி ருக்கிறதாவெனச் சோதித்துப் பாருங்கள். பவுல் பிரசங்கித்ததை அவர் கள் அப்படியே விழுங்கிவிடவில்லை (அப் 17:11). உபதேசத்தைக் கற்றுக்கொள்ளும் காரியத்தில் கொஞ்சம் சந்தேகம் இருப்பது நல் லதே! திருவசனத்தில் நேரடியாகச் சாட்சிகளோடு போதிக்கப்படாத எந்த உபதேசத்தையும், வெளிப்பாட்டையும் அல்லது அனுபவத்தை யும் ஏற்றுக்கொள்ள நாம் கடமைப்பட்டவர்களல்ல.

### உ. பரிசுத்த ஆவியானவர் மூலம் சோதித்தறிதல்

கர்த்தராகிய இயேசு பரிசுத்தாவியானவரை நமக்கு உதவியாள ராகவும் வழிகாட்டியாகவும் அறிமுகப்படுத்தினார். ''சத்திய ஆவி'' என்ற வகையில் அவர் நம்மை எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்து வார் (யோ 16:13).

பரிசுத்தாவியானவர் விசுவாசிகள் அனைவருக்குள்ளும் குடிகொண்டுள்ளார்; தாகமாயிருக்கிறவர்களை நிரப்புகிறார். நாம் கேட்கும் உபதேசமோ நாம் காணும் வெளிப்பாடோ தேவனிடமிருந்து வராததாயிருந்தால் நமக்குள்ளேயே ஒருவித எதிர்ப்புணர்வும் அமைதிக்குலைவும் ஏற்படும். இதைத்தான் அப்போஸ்தலன் யோவான் இப்படி எழுதினார்: ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் அவராலே பெற்ற ***அபிஷேகம்*** உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக'' (1 யோ 2:26,27). தமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காய்த் தேவன் சபையிலே நியமித்திருக்கும் போதக ஊழியத்தை யோவான் இங்கு குறிப்பிடவில்லை. ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து'' என்று அவர் குறிப்பாய் எழுதியதைக் கவனியுங்கள்.

''வஞ்சிக்கிற ஆவிகள்'' மற்றும் ''பிசாசின் உபதேசங்கள்'' குறித்து நம்மைத் தீர்க்கதரிசனமாய் முன்னெச்சரித்தவர் ***பரிசுத்த ஆவியானவரே*** (1 தீமோ 4:1). ஆனால் இன்று விவேகமுள்ள ஒரு விசுவாசி ஆவிக்குரிய கூட்டமொன்றில் நடக்கும் வினோதமான காரியங்களை நிதானிக்க முற்பட்டால் உடனே அவன் ஆவியைத் துக்கப்படுத்துகிறானென்று குற்றஞ்சாட்டப்படுகிறான்! மன்னிக்கப்பட முடியாத பாவத்தை அவன் செய்துவிட்டானென்று அச்சுறுத்தப்படுகிறான்! இதுதான் லூசிபருக்குக் கொண்டாட்டம். கேள்விக்குரிய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதல்ல, அவைகளை அப்படியே அணைத்துக்கொள்வதுதான் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும். ஏனெனில், அவர் ''சத்திய'' ஆவியாச்சுதே!

ஆவியானவரை அவிக்கும் மூன்று செயல்களைப் பவுல் 1 தெசலோனிக்கேயர் 5:19-22இல் வரிசைப்படுத்துகிறார்: (1) தீர்க்கதரிசனங்களை ஒட்டுமொத்தமாய்க் கண்டனம் செய்தல்; (2) எல்லாக் காரியங்களையும் நல்லதா போலியா என்று சோதித்துப் பார்க்கத் தவறுதல்; (3) கேள்விக்குரிய காரியங்களை அணைத்துக்கொள்ளுதல். தெசலோனிக்கேயரின் சபை வாழ்வில் கிரேக்க அஞ்ஞான மார்க்கம் எங்கோ உட்புகுந்துவிட்டதோவென்ற அச்சம் பவுலுக்கிருந்தது (3:5). அலசிப்பார்க்கும் சிந்தனையாளர்களை அமைதிப்படுத்த இன்றைய நவீன எழுப்புதலைப் பரப்புவோர் மேலே குறிப்பிட்டுள்ள முதல் செயலை மட்டும் சுட்டிக்காட்டுவர். ஆனால் மென்மையான தேவப்புறாவானவரைப் பெருமளவில் துக்கிக்க வைப்பது அடுத்த இரு செயல்களே என்பது எனது கருத்து. நமக்குள் குடியிருக்கும் ஆவியானவரின் உந்துதலால் காரியங்களை அலசிப் பார்க்காமல் அசதியாய் அங்கீகரிக்கும் போக்கு முடிவில் அவரை அவித்துப்போடும். பரிசுத்த ஆவியானவர் அவித்துப்போடப்பட்டவுடன் மற்ற ஆவிகளெல்லாம் ஆரவாரிக்கும். எவ்வளவு பயங்கரம்!

மற்ற ஆவிகளோடு நாம் சரசம் பண்ணுவதைப் பார்த்துக்கொண்டு பரிசுத்த ஆவியானவர் சும்மா இருக்க மாட்டார். அவர் சீறியெழுவார். காதலுக்குக் கண்ணில்லை என்பர். கேள்விக்குரிய அனுபவங்கள்மீது முதற்பார்வையிலேயே நாட்டம் ஏற்பட்டுவிட்டால் பின்னர் திருத்தும் உபதேசங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல்தான். எனவேதான் ''எல்லாவற்றையும்'' சோதித்துப் பார்த்து உசிதமற்றதாய்த் ''தோன்றுகிற'' காரியங்களைக்கூட அகற்றிவிடவேண்டுமாம்.

### 3. பரிசுத்தர் மற்றும் மேய்ப்பர் உதவியுடன் சோதித்தறிதல்

ஒரு கிறிஸ்தவனும் தன்னில்தானே நிறைவானவன் அல்ல. ஒரு சபையும் தன்னில்தானே நிறைவானது அல்ல. நம்மெல்லாருக்கும் ஒருவருக்கொருவர் தேவை. நாம் வியாதிப்படும்போது நமது உடல் முழுவதும் கிருமிகளுக்கெதிராய்ப் போரிடுகிறது. அதேபோல பொல்லாங்கனின் ''காற்றுகளையும் அலைகளையும்'' எதிர்த்து நிற்க நமக்குக் கிறிஸ்துவின் உடலாகிய உள்ளூர்ச் சபையும் அகிலவுலகச் சபையும் தேவை. ''நாம் இனிக் குழந்தைகளாயிராமல் ... தந்திரமுள்ள போதகமாகிய பலவிதக் காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்'' பக்திவிருத்தியடைந்து பலப்பட்டு வளருவதற்காகவே பல்வேறு ஊழியர்கள் வரங்களாய்த் திருச்சபைக்கு உயிர்த்

தெழுந்த கர்த்தரால் அருளப்பட்டுள்ளனர் (எபே 4:11-16). ''ஞானம், அறிவு, பகுத்தறிதல்'' ஆகிய வரங்கள் நிறைந்த தலைவர்களை நமக்குப் பகுத்தறிதலில் உதவும்படி நாடவேண்டும்.

புறவின விசுவாசிகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டு மென்று கிளம்பிய புயலைத் தடுத்து நிறுத்தும்படிக் கூடிய எருசலேம் சங்கத்தில் இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாய் நிற்கிறது (அப் 15). யாதொரு வேறுபாடுமின்றிப் புறவினத் தார் மீதும் தேவன் பரிசுத்த ஆவியானவரை அருளினதைக் கண்ட தாய் அப்போஸ்தலன் பேதுரு ''அறிக்கையிட்டார்'' (வச 6-9). இச் சம்பவத்தை அப்போஸ்தலன் யாக்கோபு ''எழுதப்பட்டதிலிருந்து'' ''வியாக்கியானித்தார்'' (வச 13-17). இதன் மூலம் கருத்தொற்றுமை உண்டானது (வச 22,28). இதனால் விசுவாசிகள் ''ஆறுதலும் ஆனந்தமும்'' அடைந்து ''திடப்பட்டார்கள்'' (வச 30-32).

மூப்பர்களோடும் தலைவர்களோடும் கலந்தாலோசிக்கவேண்டு மென்பது சபைச் சரித்திரத்தை ஆராய்வதையும் உள்ளடக்கும். ''புதிய'' காரியங்கள் எனத் தோன்றியவை பல போலி மார்க்கங்களாகவே (Cults) முடிவடைந்திருக்கின்றன என்பதே சபைச் சரித்திரத்தின் சான் றாகும். எழுப்புதலின் காலங்களில் தேவனது செயல்பாடுகளுக்கு முரணாய்ச் செயல்படப் பிசாசும் அவனது ஆவிகளும் கொந்தளித்துக் குதிக்கும். நிசமானதும் போலியானதும் பெரும்பாலும் ''கலந்தே'' காணப்படும் என்பதே சென்ற காலங்களின் எழுப்புதல் வீரர் பலரின் சாட்சி. இதுவே 17ஆம் நூற்றாண்டின் மாபெரும் உயிர்மீட்சியில் பயன்படுத்தப்பட்ட பிரசங்கியாகிய ஜோனத்தான் எட்வர்ட்ஸ் என்ப வரும், 1904இன் வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் முக்கிய பாத்திரமா கிய ஈவான் ராபர்ட்ஸும் முடிவில் கூறியதாகும். எனவே திருவசன வரம்புகளை மீறி அன்னிய அக்கினிகளை உள்ளே கொண்டுவராத படி விசுவாசிகளை இந்த பக்தர்கள் எச்சரித்தனர்.

''கலப்பு (mixture) என்பதுதான் மிகுந்த ஆபத்தானது. முழுப் பொய்யைவிடப் பாதி உண்மையே கூடுதல் சேதம் விளைவிக்கும்'' என்றார் ஒருவர். ''சத்தியத்தைவிடச் சத்தியமாய்த் தோன்றுமளவு



அசத்தியமானது அலங்கரிக்கப்பட்டிருக்கும்'' என இரண்டாம் நூற் றாண்டின் விசுவாச வீரர் இரேனியஸ் கூறினார்!

கேள்விக்குரிய இன்றைய அனுபவங்களுக்குச் சாதகமாய்ப் பேசும் சிலர் பொதுவாகச் சொல்வது, ''கனிகளைப் பாருங்களேன்'' என்பதாகும். கனிகள் என்றால் அது வாழ்க்கை மாற்றத்தையும் வாழ்க்கை முறையையும் மட்டும் குறிப்பிடாது. இந்துவாயிருந்தும் எத்தனையோ கிறிஸ்தவர்களைவிடச் சிறந்த வாழ்க்கை நடத்தித் திரள்களுக்கு நன்மைசெய்த மகாத்மா காந்தியைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? சுவிசேஷத்தைக் கலப்படம் பண்ணினாலும் ஒரு சில நல் விளைவுகளைத் தரக்கூடிய அளவு அதில் வல்லமையுண்டு. இது நம்மைத் தவறாய் நடத்திவிடக்கூடாது. இன்று பத்து சதவீதம் கூடச் சுத்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவில்லையென்பதே எனது கணிப்பு. அப்படியானால், அற்புத சுகங்களும், அடையாளங்களும், ஆசீர்வாதங்களும் மக்களுக்குக் கிடைக்கின்றனவே, அதெப்படி? பதில் எளிது. நாம் சரியாய், செம்மையாய், செயல்படுவதினால் அல்ல, இத்தனைக் குறைபாடுகளும் தவறுகளுமிருந்தாலும் மக் களைக் கடவுள் நேசிக்கும் ஒரே காரணத்தினால் நமது ஊழியங்களை அவர் பயன்படுத்துகிறார். ''நான் மக்களுக்காய்ப் பரிதபிக்கிறேன்'' என்று இயேசு சொல்லித் தமது சீடரின் தந்திர ஆலோசனையைத் தாண்டிச் சென்றார் அல்லவா? (மத் 14:15,16; 15:32).

இறைவனின் சித்தத்திற்குச் சம்பந்தப்படாமலே எத்தனையோ காரியங்களை இயேசுவின் நாமத்தில் பேசலாம், செய்யலாம். இது கற்பனை செய்யக் கடினம்தான். ஆனால் நியாயத்தீர்ப்பின் நாளில் தீர்க்கதரிசிகள், அற்புதங்கள் செய்வோர் மற்றும் பிசாசு துரத்துவோர் அநேகருக்கு ''நான் உங்களை அறியேன்'' என்ற கர்த்தரின் கடின வார்த்தைகள் பரலோகத்தின் கதவடைக்கும் (மத் 7:22,23). இதெப் படி? இவர்கள் தேவனுடைய ''வேலையைச்'' செய்ததாய்க் கூறி னாலும் அவருடைய ''சித்தத்தைச்'' செய்யத் தவறியவர்கள் (வச 21). அவர்கள் ஒருவேளை தாங்கள் இறையரசைக் கட்டிக்கொண்டி ருக்கிறோமென்று சொன்னாலும் ''இயேசு சொல்லிய வார்த்தைகளின் படி'' செய்யப்படாத எந்த ஊழியமும் மணல்மேல் கட்டப்பட்ட கட்டிடந்தான் என்பதை மறந்துவிட்டனர் (வச 26).

''ஆட்டுத் தோலைப் போர்த்துவரும் பீறுகிற ஓநாய்கள்'' எளிய விசுவாசிகளை எளிதில் ஏமாற்றிவிடும் (மத் 7:15). அனுபவமும், முதிர்ச்சியும், ஞானமுமுள்ள மேய்ப்பர்களும் போதகர்களுமே ஆடுகளைப் பாதுகாக்க முடியும். போலியை அடையாளங்காட்ட அவர்கள் தைரியங்கொள்ளவேண்டும். யாரோவொரு பிரபலப் பிரசங்கியின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோமென்றோ, செல்வாக்குள்ள ஒரு சில விசுவாசிகளை இழந்துவிடுவோமென்றோ பயந்து அவர்கள் வாய் திறவாது இருந்துவிடக்கூடாது (அப் 20:17, 29-31). ''நீதியின் ஊழியர்'' போல் வேஷம்போடும் ''கள்ள அப்போஸ்தலரின்'' முகத்திரைகளைக் கிழித்தெறிய ஞானமும், அறிவும், பகுத்தறிதல் திறனுமுள்ள ஊழியர் எவ்வளவாய்த் தேவை! (2 கொரி 11:13-15)

## 4. பொது அறிவின் மூலம் சோதித்தறிதல்

மற்ற அநேகப் பாதுகாவல்களைவிடப் பொது அறிவே (common sense) அதிகப் பாதுகாப்பானது என்பதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். ''பொது அறிவானது அறிவு தருமானால் வேறே அறிவு தேடாதே'' என்ற ஞானமொழி ஒன்றுண்டு. (If common sense makes sense, don't look for any other sense!)

''இதை அலசியெல்லாம் பார்க்காதீர்; மனித அறிவைக் கொண்டு இதையெல்லாம் புரிந்துகொள்ள முயற்சிக்காதீர்; இவையெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்டவை'' என்றெல்லாம் நம்மிடம் வஞ்சகர் சொல்லுவார்கள். ஆனால் இவ்வித விவாதம் மதியீனம். ஏனெனில், தேவன் நமக்குத் ''தெளிந்த புத்தியுள்ள'' ஆவியைக் கொடுத்திருக்கிறார் (2 தீமோ 1:7). கிறிஸ்தவ அர்ப்பணிப்பில் நமது மனதைப் ''புதிதாக்கத்தான்'' அழைக்கப்படுகிறோமே தவிர அதைப் ''புதைத்துவிடப்'' போதிக்கப்படவில்லை (ரோ 12:1,2). ''நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானமும் அறிவும் உடையவர்களே'' முதிர்ச்சியடைந்தவர்களாம் (எபி 5:14).

வேறொரு சுவிசேஷத்தைத் தழுவிக்கொண்டு ''மயக்க'' நிலையில் இருந்த கலாத்திய விசுவாசிகளைப் பவுல் ''புத்தியில்



லாத'' கலாத்தியரே என்று கடிந்துகொண்டார் (கலா 3:1). ஆவியில் ஆரம்பம்பண்ணின அவர்கள் உடலுக்கடுத்த சடங்காச்சாரத்தின்பின் செல்லத் தொடங்கினர் (வச 3). வஞ்சிக்கப்பட்டவர்கள் பிசாசின் கண்ணியிலிருந்து தப்ப வேண்டுமானால் ''மயக்கம்'' தெளிந்து சுய ''நினைவுக்குள்'' வரவேண்டுமாம் (2 தீமோ 2:26). கள்ளப் போதகர்களைக் குறித்து 2 பேதுரு 2இல் பேதுரு எழுதியுள்ள கண்டனமே புதிய ஏற்பாட்டில் மிகக் கண்டிப்பானதும் நீளமானதுமாகும். அதற்கு முந்தியதும் அடுத்ததுமான அத்தியாயங்களில் அவர் விசுவாசிகளின் ''மனதையே'' நினைப்பூட்டி எழுப்ப முயன்றார் (1:14; 3:2). எனவே நலம் பொலம் ஒன்றும் சொல்லாமல் மனதில் நடுநிலையாய் இருப்பது ஆன்மீகமல்ல, அறிவீனம்! (Neutrality is not spirituality but stupidity.)

மக்களுக்காய்ப் பிரசங்கியார் ஜெபித்தபோது அவர்கள் வாந்தியெடுக்கத் தொடங்கிய மேலை நாட்டு நற்செய்திக் கூட்டமொன்றை ஒளித்தட்டு மூலம் பார்த்தேன். தொழுகைக்காய்க் கூடுமிடங்களில் என்னே அவலட்சணம்! (ஏசா 28:8). பிசாசினால் மூளை பாதிக்கப்பட்டுக் காக்காய் வலிப்பினால் ''நுரை'' தள்ளுவதோடு ''வாந்தி'' எடுப்பதை ஒப்பிடுவது சரியா? (மத் 17:14-18; மாற் 9:14-27). நமக்கு உணர்வில்லையா? அறிவில்லையா? (மத் 15:16,17). ''சுபாவமே'' நமக்குப் போதிக்கிறதில்லையா? (1 கொரி 11:15).

எழுப்புதல் வந்திருக்கிறதென்று சொல்லப்படும் சில கூட்டங்களில் மக்கள் கர்ஜிக்கிறார்களாம். இது யூதா கோத்திரச் சிங்கத்தின் சத்தமாம்! இவற்றையெல்லாம் ''பரிசுத்த ஆவியானவரின் மிருகச் சத்தங்கள்'' (Animal Sounds of the Holy Spirit) என வியாக்கியானிக்கும் புத்தகங்களும் உண்டு. கிறிஸ்தவர்களே, நாம் எங்கே விரைந்து கொண்டிருக்கிறோம்? அடுத்து, தரையில் ஊருதலும் பாம்புபோல் சீறுதலும் நடக்கிறதாம். அடுத்து என்னதோ?

நண்பரே, இப்படிப்பட்ட ''புதிய'' அசைவாட்டம், ''புதிய'' வெளிப்பாடுகள் எல்லாம் உங்களைத் திருப்திப்படுத்தாது; உள்ளான மனிதனைப் பக்திவிருத்தியும் ஆக்காது. இவையெல்லாம் ''தண்ணீரற்ற

கிணறுகள்,'' ''மழையற்ற மேகங்கள்'' (2 பேது 2:17). பிரியமானவர்களே, ''பூர்வ'' பாதைகளுக்குத் திரும்புங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்! (எரே 6:16).

## முடிவுரை

இவையெல்லாவற்றையும் சொன்னபிறகு, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் ''நிதானிக்கத்தான்'' அழைக்கப்பட்டிருக்கிறோமே தவிர ''நியாயந்தீர்க்க'' அல்ல. நியாயத்தீர்ப்பு தேவனது வேலை. நிதானிப்பது மட்டுமே நமது பொறுப்பு. நமது அறிவு குறைவுள்ளது. இச்செய்தியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பரிசோதனைகளில் எந்தவொரு அனுபவமும் நிகழ்வும் தேறாவிடில், அதை அப்படியே கவனியாது விட்டுவிடுங்கள். இவ்விதக் காரியங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்குவிக்கும் அல்லது வலியுறுத்தும் ஊழியரோடும் மக்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். 1 தெசலோனிக்கேயர் 5:21,22இல் பவுல் கொடுத்த ஆலோசனையே முடிவானது —

**அலசிப்பாருங்கள்** — எல்லாவற்றையும்!
**அணைத்துக்கொள்ளுங்கள்** — நல்லவற்றை மட்டும்!
**அகற்றிவிடுங்கள்** — கேள்விக்குரியதையெல்லாம்!

ஆமென்!

*(1997 முதல் 2001 வரை, தமிழகம், கர்நாடகம், கேரளம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும், ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் சார்பில், ஆசிரியர் நடத்திய 5-நாள் ஆரோக்கிய உபதேசக் கருத்தரங்குகளில் போதிக்கப்பட்ட பாடங்களில் ஒன்றுதான் இவ்வத்தியாயம்.)*



# 17

# பரிசுத்த ஆவியானவரிடம் திரும்புவோம்!

### Back to the Holy Spirit

பரிசுத்த ஆவியானவர்மீது நாம் சார்ந்திருக்கவேண்டுமென்று நம்மை அழைக்கும் வேதப் பகுதிகளில் பிரதானமானதொன்று யூதர்களுக்கு ஆளுநராயிருந்த செருபாபேலுக்கு ஆண்டவர் சொன்ன வார்த்தைகளே: சக 4:6, ''செருபாபேலுக்குச் சொல்லப்படும் கர்த்தரது வார்த்தை என்னவென்றால்: ஆற்றலினாலும் அல்ல, வலிமையினாலும் அல்ல, எனது ***ஆவியினாலேயே*** ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' இந்தச் சத்தியம் செருபாபேலுக்குச் சொல்லப்பட்டது ஏன்? அவர் பின்வாங்கியிருந்தாரோ? சேனைகளின் கர்த்தரை விட்டு அவர் அஷ்டரோத் அல்லது பாகாலுக்குப் பின்னால் போய்விட்டாரோ? இல்லை! அதற்கான காரணம் 8ஆம் 9ஆம் வசனங்களில் தரப்பட்டுள்ளது: ''செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு ***அடித்தளம்*** போட்டன; அவன் கைகளே இதை ***முடிக்கும்.''*** இங்கு வலியுறுத்தப்படுவது என்னவென்றால், தூயாவியால் துவங்கியதை நாம் மனிதனின் ஆற்றலால் முடிக்க முயலக்கூடாது என்பதே. கலாத்தியச் சபையினரின் தவறுதல் இதுவே (கலா 3:3). நமது வாழ்க்கையையும் பணியையும் ஆவியானவரின் வல்லமையில் துவங்கி, நாளாவட்டத்தில் நமது திறமைகள் மற்றும் வசதிகள்மீது சார்ந்திருக்க வழிவிலகுவது மடமையிலும் மடமை என்பதையே பவுல் இங்கு வலியுறுத்துகிறார்.

அறிவுத் திறன், நிறுவனக் கட்டமைப்பு, பொருளாதாரச் செழிப்பு, உடல் பலம், மக்கள் ஆதரவு போன்றவற்றையே சபைகளும் சங்கங்களும் தங்களை அறியாமலே ஆவியானவரின் வல்லமைக்கு மாற்றுக்களாக்கிவிடுகின்றன. துவக்கக் காலங்களில் தீர்மானங்கள் எடுக்கு முன்னர் தேவனுக்குமுன் முழங்காலிட்டு அவரது மனதை அறிந்து

கொள்ள விழைகிறோம். நாளாவட்டத்தில் அதிகமதிகமாய் நிர்வாகக் குழுக் கூடுகைகளையே சார்ந்து மேலிருந்து வரும் நடத்துதலைவிட விவாதங்களையே பெரிதாக எண்ணுகிறோம். ஜெபக்கூடுகைகளை விடத் திட்டமிடுவதற்கான கூடுகைகளே அதிகரிக்கின்றன. ஆரம்ப காலத்தில் நமக்குக் கட்டிடங்களோ அதுபோன்ற வசதிகளோ கிடையாது. காலப்போக்கில் கட்டிடங்களும் சாதனங்களுமே நமக்குப் பக்க பலமாகவும் அந்தஸ்தின் அடையாளங்களாகவும் மாறிவிடுகின்றன. ஒரு காலத்தில் நமது தேவைகள் எல்லாவற்றையும் தேவனிடம் ஜெபத்தில் சொல்லிவந்தோம். இப்பொழுதோ தேவைகளை மக்கள் முன் சமர்ப்பித்து, வணிகப் பாணிகளில் பணம் திரட்ட முயலுகிறோம். இந்தப் போக்கு நீடிக்குமானால் நாமும் லவோதிக்கேயரது நிலைக்கு வந்துவிடுவோம். நமது ஆன்மீகத் தரித்திரத்தைப் பார்க்க முடியாதபடி நமது கண்களைச் செல்வப் பெருக்கும் வசதிகளின் நிறைவும் குருடாக்கும் (வெளி 3:17). நமது கட்டமைப்புகளில் கிறிஸ்துவுக்கு இடமேயில்லை எனுமளவிற்கு நாம் சுயதிருப்தியடைந்துவிடுகிறோம். அவரோ நம்மை விட்டுவிடாதபடி வாசற்கதவைத் தட்டி நிற்கிறார் (வச 20). முதல் நூற்றாண்டுச் சபை ஒன்றிற்கே இந்நிலை வரக்கூடுமானால், இன்று என்னதான் நடக்காது? தலையாகிய கிறிஸ்து இல்லாமலேயே நமது நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் நடத்திக்கொண்டிருப்பதுதான் இங்கு பரிதாபம்!

நமது பல சபைகளும் ஊழியச் சங்கங்களும் அன்றைய சிம்சோன் போலிருக்கின்றன என்பது பெரும் துக்கம். அவனைவிட்டுக் கர்த்தர் விலகியதை அவன் ''அறியாதிருந்தான்'' (நியா 16:20). நாமும் அவனைப்போலவே நம்மை நாமே ''உலுக்கிக்''கொள்ளுகிறோம்! இன்று நமது சபைகளை விட்டுப் பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுவாரானால், நாம் செய்து கொண்டிருப்பவைகளில் எதுதான் நின்றுவிடும்? ஆடல் பாடல் இல்லாதுபோகுமோ? பிரசங்கம் நின்றுபோகுமோ? அப்பம் பிட்குதல் ஒழிந்துபோகுமோ? இல்லை, எல்லாமே வழக்கம்போல் நடந்துகொண்டேயிருக்கும். ஆவியானவர் போய்விட்டார் என்று நமக்குத் தெரியவே தெரியாது! சிம்சோனைப் போல நம்மை நாமே உலுக்கிக்கொண்டுதானிருப்



போம்! சபையில் ஓர் உறுப்பினர் குலுங்கத் துவங்கியதும் தொற்று நோய்போல் எல்லாரும் குலுங்குவர்! உடனே நாம், ''ஆவியானவர் வல்லமையாய் அசைவாடுகிறார்'' என்று இன்னும் குதிப்போம். இவ்விதம் நம்மீதே சார்ந்திருப்பதிலிருந்து மனந்திரும்பி ஆவியானவர்மீதே சார்ந்திருக்கும் பழக்கத்திற்குத் திரும்புவோம். பரிசுத்த ஆவியானவர்மீது எப்பகுதிகளிலெல்லாம் சார்ந்திருக்கவேண்டுமென்று பார்ப்போம் —

## 1. பரிசுத்த ஆவியானவரும் மறுபிறப்பும்

யோவான் 3:6-8இல் ஆண்டவராகிய இயேசு மறுபிறப்பை அழகாய் வரையறுக்கிறார். நிக்கொதேமு எனும் யூதத் தலைவன் ஒருவரோடு ஓர் இரவில் உரையாடியபோது மறுபிறப்பில் ஆவியானவரின் செயல்பாட்டைக் கர்த்தர் விளக்குகிறார்: ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்; ***ஆவியினால்*** பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு விருப்பமான இடத்தில் வீசுகிறது; அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆனாலும் அது எங்கிருந்து வருகிறதென்றும் எங்கு போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ***ஆவியினால்*** பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான்.'' தெய்வீக வல்லமை வெளிப்படுவதே இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. மறுபிறப்பையோ தனிப்பட்டவரது இரட்சிப்பையோ இரண்டு மூன்று படிகளில் கிடைத்துவிடும் என்று சாரமற்றதாக்கிவிடாதீர்கள். இவ்விதப் படிகள் அவசியம்தான். ஆனால் வாய்ப்பாட்டின்படி விடை கிடைத்துவிடுவதுபோல் மறுபிறப்படைவது உத்திரவாதமல்ல. அது ஆவியானவராகிய தேவனது செயல். அது ஓர் அற்புதம்! இரட்சிப்பு ''கர்த்தருடையது'' (யோனா 2:9).

பிரசங்கி 11:5இலும் மறுபிறப்பிலுள்ள விந்தை குறிப்பிடப்பட்டுள்ளது: ***''ஆவியின்*** வழி இன்னதென்றும், கர்ப்பிணியின் கர்ப்பத்தில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருப்பது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனது செயல்களையும் நீ அறியாய்.'' மக்களது மனந்திரும்புதலிலும் குணப்படு

தலிலும் ஆச்சரியமானதை எதிர்பார்த்து அதனைத் தழுவிக்கொள்வோம். இறையியல் தத்துவம் எதுவும் இதற்கு முழு விளக்கம் தர முடியாது. ''நீங்கள் எதையும் விளக்க முடிந்தால் அது அற்புதம் அல்ல; தேவன் அதில் செயல்படவில்லை'' என்றார் ஒருவர்! அநேகர் இரட்சிக்கப்படவேண்டும் என்ற நமது ஆர்வக் கோளாறினால் நாம் மக்களை அதற்குள் பிடித்துத் தள்ளக்கூடாது. குறைப்பிரசவம் நன்றல்ல!

மக்கள்மீது இரட்சிப்பின் அனுபவத்தை நாம் திணித்தால், ஈசாக்குகளை அல்ல, இஸ்மவேல்களையே பெற்றெடுப்போம். ***ஆவியின்படிப்*** பிறப்போரை ஈசாக்கும், மாம்சத்தின்படிப் பிறப்போரை இஸ்மவேலும் அடையாளப்படுத்துகின்றனர் (கலா 4:29). இருவரும் ஆபிரகாமின் வித்தாயிருக்கிறபடியால் இஸ்மவேலும் ஈசாக்கு போலவே காணப்படுவான். விருத்தசேதனம் எனும் சடங்கும் இஸ்மவேலுக்குச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவன் ஒருபோதும் ஈசாக்காய் மாறமாட்டான். நமது அநேக சபைகளில் ஈசாக்குகளைவிட இஸ்மவேல்கள்தான் அதிகம். இவர்களுக்கிடையே எப்பொழுதும் போராட்டம்தான். இஸ்மவேல்மீது தண்ணீர் தெளிப்பதாலேயோ அல்லது அவனை முழுக்காட்டுவதாலேயோ அவனுக்கு ஈசாக்கு என்று பெயர் வைத்துவிடமுடியாது! தனி நபர்களைப் பரிசுத்த ஆவியானவர் பாவ உணர்வுக்குள் நடத்தி, அவர்களது பாவப் பரிகாரியாக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள அவர் அவர்களைச் சிலுவையிடம் நடத்தவேண்டும். அதுதான் இரட்சிப்பிற்கேதுவான மனந்திரும்புதல்.

வெறும் விவாதம் ஒரு மனிதனைச் சம்மதிக்கச் செய்யும், ஆனால் உணர்த்தாது. பாவவுணர்வு என்பது முழுக்க முழுக்க ஆவியானவர் அருளுவது. அப்போஸ்தலன் பவுலுக்கிருந்த அறிவுத்திறன் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் அவரது அறிக்கையைப் பாருங்கள்: 1 கொரி 2:4,5, ''உங்கள் விசுவாசம் மனிதருடைய ஞானத்தில் அல்ல, தேவனுடைய வல்லமையில் நிற்கும்படி என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய கவர்ச்சியான சொற்களாயிராமல், ***ஆவியினாலும்*** பலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன.'' சுவிசேஷத்தின் சரித்திரப் பூர்வமான தகவல்களை நம்புவதால் மட்டும் எவனும் இரட்சிக்கப்பட்டுவிடமுடியாது. அவன் கிறிஸ்தவத்திற்கு இன்னொரு ரசிகனாவான், அவ்வளவுதான். மறுபிறப்பிற்கான விசுவாசத்திற்குள் நடத்துவது ஆவியானவரது உணர்த்துதலே. மக்களை இரட்சிப்பிற்குள் நடத்தப் பலவித யுக்திகளைக் (techniques) கையாளுவதைக் குறித்து எச்சரிக்கை! ''நீ இரட்சிக்கப்பட்டுவிட்டாய்'' என்று எவரிடமும் நீங்கள் சொல்லவேண்டிய அவசியமில்லை; அவனுக்கே அது தெரியும்; அதுதான் அற்புதம்! அவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான் என்று ***ஆவியானவரே*** அவனது உள்ளத்தில் சான்று பகர்வார் (ரோ 8:16).

அப்போஸ்தலன் பேதுருவின் பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்தது. பெந்தெகொஸ்தே நாளன்று அது 3000 பேரைப் பாவவுணர்வுக்குள் நடத்தியது. ''இரட்சிக்கப்பட விரும்புவோர் முன்னால் வாருங்கள்'' என்று அவர் அழைப்பு கொடுக்கவில்லை; மாறாக, மக்களாகவே ''நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டு முன்வந்தனர் (அப் 2:37). அவர்கள்மீது ஆவியானவர் கொணர்ந்த பாவவுணர்வு அவர்களது ''இருதயங்களைக் குத்தியதாம்!'' இதனால்தான், நாம் மக்களுக்குப் ''பிரசங்கிக்குமுன்'' அவர்கள் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்காய்ப் ''பிரார்த்திக்கவேண்டும்'' (1 தீமோ 2:1,4). ''ஆண்டவரே, மக்களை இரட்சியும்'' என்று ஏனோதானோவென்று கேட்டுவிடுவதல்ல; அவர்களுக்காக ''விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், நன்றிகளையும்'' ஏறெடுக்க வேண்டும். பாவிகளை இயேசுவிடம் வரும்படிக் கூவியழைக்கும்போது ஆத்துமாதாயகரும் பிரசங்கிமாரும் முழுக்க முழுக்க ஆவியானவர்மீது சார்ந்திருக்க வேண்டும். இயேசுவிடம் திருத்துவத்தின் இரண்டாம் நபரது வல்லமை இருந்தாலும், அவர் திருத்துவத்தின் மூன்றாம் நபரது வல்லமையின்மீதே சார்ந்திருந்து நமக்கு முன்மாதிரியை வைத்துச் சென்றார் (லூக் 4:16-20; அப் 10:38). விவிலியத்தின் இறுதிப்பக்கத்திலும்கூட இரட்சிப்பிற்கான அழைப்பு ***ஆவியானவரிடமும்*** திருச்சபையாகிய மணமகளிடமுமிருந்து சேர்ந்தே வருகிறது (வெளி 22:17).

மனந்திரும்புதலின் செய்திகள் இன்று வெகுவாய்க் குறைந்து வருகின்றன. பாவவுணர்வுக்குள் மக்களைப் பரிசுத்த ஆவியானவர் கொண்டுவரவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதில்லை. மனந்திரும்புதல்கள் இன்று ஆழமாயில்லாதிருப்பதில் ஆச்சரியமில்லையே. நாம் விதைப்பதைத்தானே அறுப்போம்? உருவக் குத்துகிற மனந்திரும்புதலின் செய்திகளை ஆவியானவரது வல்லமையில்தான் பிரசங்கிக்கமுடியும். இதோ, தீர்க்கன் மீகாவின் அறிக்கை: மீகா 3:8, ''யாக்கோபுக்கு அவனது மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவனது பாவத்தையும் அறிவிக்கும்படி, ***கர்த்தருடைய ஆவி*** அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்.'' இன்று போல் நாடெங்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளும், தரிசனம் பார்க்கிறவர்களும், குறிசொல்லுகிறவர்களும் நிறைந்திருந்த காலத்திலேயே மீகா இவ்விதம் சொன்னார் (வச 6,7). மக்களைப் பிரியப்படுத்திப் பெருந்திரள்களைக் கவருவதற்காகவே அவர்கள் ''சமாதானம், சமாதானம்'' என்று கூறினர் (வச 5). தேவ ஊழியனாகிய டேவிட் வில்கர்சன் (1931-2011) அவர்கள் இவ்வித ஊழியரைத் ''தலையணைத் தீர்க்கர்கள்'' (Pillow Prophets) என்றழைக்கிறார்.

## 2. பரிசுத்த ஆவியானவரும் திருப்பணியும்

எல்லாவற்றையும் அல்ல, தேவன் நாம் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை மட்டும் செய்வதுதான் இறைப்பணி. இயேசுவின் வாழ்நாட்களில் இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஜீவ அப்பம் இல்லாது ஆத்துமாக்கள் மாண்டுகொண்டுதானிருந்தார்கள்; ஆனால் அவர் இந்தியாவுக்கும் வரவில்லை, ஆப்பிரிக்காவிற்கும் செல்லவில்லை. ஆனாலும் சிலுவையில் தொங்கிய வேளையில் ''எல்லாம் முடிந்தது'' என்ற வெற்றி முழக்கமிட்டாரே! சிலுவைக்குச் செல்லு முன்னர்கூட தமது பிதாவிடம் ''நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த வேலையைச் செய்துமுடித்தேன்'' என்று அறிக்கையிட்டார் (யோ 17:4ஆ). நாம் தேவனது ''வேலைக்காரர்.'' தான் விரும்புவதையெல்லாம் வேலைக்காரனால் செய்ய முடியாது: தனக்கு இடப்படும் ஆணைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும்தான் அவன் அடிபணிய வேண்டும். சங்கீதக்காரன் கர்த்தரிடம் எவ்விதம் அறிக்கையிடுகிறார்,



பாருங்கள்: ''இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் தலைவர்களின் கையைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும், வேலைக்காரியின் கண்கள் தனது தலைவியின் கையைப் பார்த்துக்கொண்டிருப்பது போலவும் எங்கள் கண்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரைப் பார்த்த வண்ணமிருக்கின்றன'' (சங் 123:2). நாம் என்ன செய்யத் தேவன் விரும்புகிறார் என்று எப்படி அறிந்துகொள்வது? தமது ஆவியானவர் மூலமாகவே அவர் அதை நமக்கு வெளிப்படுத்துகிறார். இறைப் பணியில் நம்மை நடத்தும் ஆளுநர் பரிசுத்த ஆவியானவரே (ரோ 8:14). நாம் தினமும் ஜெபிக்கவேண்டியது: ''கர்த்தாவே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உமது நல்ல ***ஆவி*** என்னைச் செவ்வையான வழியில் நடத்துவாராக'' (சங் 143:10).

ஊழியச் சங்கங்களுக்கிடையே ''பங்காளித்துவம்'' (partnership) என்று பேசுகிறேம். நமது பிரதான பங்காளித்துவம் பரமனோடுதான் இருக்கவேண்டும். நாம் தேவனுக்கு ''உடன் வேலையாட்களாய்'' இருக்கிறோம் (1 கொரி 3:9அ). தேவனோடுள்ள இந்த உடன்பாடு பரிசுத்த ஆவியானவரின் மூலமே செயல்படும். ஆதிச் சீடருக்கு இந்த அறிவும் உணர்வும் தெளிவாயிருந்தன. அவர்கள் எருசலேமைக் கிறிஸ்துவின் உபதேசத்தினால் நிரப்பியபோது, ''நீங்கள் அந்தப் பெயரைக் குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா?'' என்று பிரதான ஆசாரியன் அவர்களிடம் கேட்டார் (அப் 5:27,28). பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் கொடுத்த உடனடிப் பதில்: ''மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட மகிபனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம்'' (வச 29). அதைத் தொடர்ந்து அவர்கள் சொன்னது: ''இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின ***பரிசுத்த ஆவியும்*** சாட்சி!'' (வச 32). அவ்வளவு பயமுறுத்தல்களின் நடுவிலும் இவ்விதத் தைரியத்தைச் சீடருக்குக் கொடுத்தது பரிசுத்த ஆவியானவரே. பரிசுத்தப் பங்காளித்துவம்! Holy Partnership! தமது மரணத்திற்குமுன் அவர்களுக்கு இயேசு வாக்களித்ததும் இதுவே: யோ 15:26,27, ***''சத்திய ஆவியாகிய*** உறுதுணையாளர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்;

நீங்களும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.'' ஆதிச்சபையுடன் ஒப் பிடும்போது நாம் நற்செய்தியறிவிப்புப்பணியில் பலங்குன்றிதான் இருக்கிறோம். அதற்கு அடிப்படைக் காரணம் நாம் ஆவியானவர்மீது போதுமான அளவு சாராதிருப்பதே. ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசுவிடம் வருவதற்கான கடைசி அழைப்பு திருமறையில் கொடுக்கப்படும்போது தூயாவியானவரும் திருச்சபையும் சேர்ந்தே செயலாற்றுகின்றனர்: ***''ஆவியாரும்*** மணமகளும், வா, என்கிறார் கள்!'' (வெளி 22:17).

பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நாம் பேசும்போதும் அவரது நடத்துதலைவிட அவரது வல்லமையையே அதிகம் நாடுகிறோம். அவரோடு நெருக்கவுறவை நாடாமல், அவரது வல்லமையை மட்டும் விரும்பினால், அது நமது தேவைக்கான தொடர்புதானே (utilitarian relationship) தவிர அவரது ஆளுகைக்கு (lordship) நாம் அடிபணிவ தாய் இருக்காது. அதாவது, அவரால் நாம் பயன்படுத்தப்பட அல்ல, அவரை நாம் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம் என்பதே பொருள். ''அப்போஸ்தலர் நடபடிகள்'' புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசித்துப்பாருங்கள். இப்புத்தகத்திற்கு ''ஆவியானவர் நடபடிகள்'' என்ற பெயர் இன்னும் அதிகம் பொருத்தமாயிருக்கும் என்ற முடிவுக்கே வருவீர்கள். அதாவது, அப்போஸ்தலரும் சீடரும் ஆவியானவரது நேரடி ''நடத்துதலுக்குக்'' கீழ்ப்படிந்து வாழ்ந்தனர் என்பது தெளிவாகும். இதை நடைமுறையில் நமக்கு விளங்க வைக்கும் சில எடுத்துக்காட்டுகள் இதோ —

■ சமாரியாவில் சுவிசேஷகன் பிலிப்பு மாபெரும் சுகமளிப்புக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்தார் (அப் 8:5-8). அநேகர் சுகம் பெற்றனர், பிசாசுகள் துரத்தப்பட்டன. நகரில் பேரானந்தம் உண்டா யிற்று. ஊரெங்கும் அதுதான் பேச்சு! ஆனால் திடீரென்று பிலிப் புவை ஆவியானவர் காசா வனாந்திரத்திற்குப் போகச் சொன்னார் (வச 26). காட்டிற்குள்ளிருந்து நாட்டிற்குள் வருவது சுலபம்; நாட்டிற்குள் ளிருந்து காட்டிற்குள் செல்வது? இந்தியாவிலிருந்து அமெரிக்கா செல்வது எளிது; ஆனால் அமெரிக்காவிலிருந்து இந்தியா வருவது கடினம். சிறிய சபையிலிருந்து பெரிய சபையைப் பொறுப்பேற்கச்



செல்வது எளிது; பெரிய சபையை நடத்திக்கொண்டிருப்பவர் சிறிய சபையைப் பொறுப்பெடுக்கப் புறப்பட்டுச் செல்வது கடினம். திரள் களுக்கு விடுதலைக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருந்த பிலிப்பு வுக்குப் பாலைவனத்திற்குச் சென்று ஒரு தனி நபரைச் சந்திக்கச் செல்வது சுலபமாயிருந்திருக்காது. ஆனாலும் அவரைப் போகச் சொன்னது ***''ஆவியானவர்''*** என்பதால் உடனே கீழ்ப்படிந்தார் (வச 29). பாலைவனத்திற்குள் சென்று அதிவேக ரதம் ஒன்றை ஓடிப் பிடிப்பது சுலபமா? ஆனாலும், ஆவியானவரின் சத்தத்திற்குப் பிலிப்பு உடனே கீழ்ப்படிந்ததால், அவர் திரும்பி வருவதற்கு ஆண் டவர் அவருக்கு இலவச விமானப் பயணச்சீட்டு கொடுத்தார் (வச 39)! வளைந்து கொடுப்போர் பாக்கியவான்கள்: அவர்கள் முறிந்து போகமாட்டார்!

■ அடுத்த எடுத்துக்காட்டு, சீமோன் பேதுரு. பெந்தெகொஸ்தே நாளையடுத்து அவரது முதல் சுவிசேஷப் பிரசங்கம் 3000 ஆத்து மாக்களைத் திருச்சபைக்குள் கொண்டுவந்தது. என்னே அறுவடை! ஏற்கனவே பழைய ஏற்பாட்டை யூதர்கள் நன்கறிந்திருந்ததால் அவர் களது கூட்டங்களுக்குப் பிரசங்கிப்பது பேதுருவுக்குப் பரவசமாயிருந் தது. விசுவாசிகளின் எண்ணிக்கை விரைவில் 5000 என உயர்ந்தது. ஆனால் திடீரென்று ஆவியானவர் பேதுருவை வேறொரு திசைக்குத் திருப்பினார். அது யூதரல்லாத ஒரு குடும்பத்தைச் சந்திக்கச் செல்ல வேண்டியது. யூதமார்க்கத்தில் மூழ்கியிருந்த பேதுருவுக்கு இப்புதிய பணியை மேற்கொள்வது கடினமாகத்தானிருந்தது. விண்ணிலிருந்து மூன்று முறை வந்த தரிசனமும் அவரது மனதை மாற்றமுடியவில்லை (அப் 10:9-16). ஆனாலும், அவரது வீட்டுக் கதவைத் தட்டி நின்ற மூவருடன் புறப்பட்டுச் செல்லும்படி ***ஆவியானவர்*** அவரோடு பேசி யபோது அவர் கீழ்ப்படிந்தார் (வச 19,20). ''சந்தேகப்படாமல்'' அம் மூவருடன் புறப்பட்டுச் செல்ல ***ஆவியானவர்*** அவரைப் பணித்தார். இதைக் கனப்படுத்தி, அவர் பிரசங்கத்தை முடிக்குமுன்னரே, மாரி போல் ஆவியானவர் கூடியிருந்தோர் மீது இறங்கினார் (வச 44). தமது மெல்லிய சத்தத்திற்குக் கீழ்ப்படியும் பிரசங்கியின் பிரசங்கங்களை ஆவியானவர் உறுதிப்படுத்துகிறார்.

■ நடபடிகள் புத்தகத்திலிருந்து மூன்றாம் எடுத்துக்காட்டு அப்போஸ்தலன் பவுல் மற்றும் அவரது குழுவினரைப்பற்றியது. இது அவரது இரண்டாம் மிஷனரிப்பயணத்தின்போது நடந்தது. தெர்பை, லீஸ்திரா மற்றும் சில இடங்களுக்குச் சென்று வந்த பின்னர், ஆசியாவில் வசனத்தைப் பிரசங்கியாதபடி ***''ஆவியானவர்*** அவர்களைத் தடைபண்ணினார்'' (அப் 16:6). எனவே அவர்கள் பித்தினியாவிற்குச் செல்ல முயன்றபோது ***''ஆவியானவரோ*** அவர்களைப் போக விடவில்லை'' (வச 7). ஆசியாவிற்கும் பித்தினியாவிற்கும் கதவடைத்த ஆவியானவர் மக்கெதோனியாவிற்கு வாசலைத் திறந்தார். அங்குதான் லீதியாள் என்பவள் அவர்களுக்கு முதல் ஐரோப்பிய விசுவாசியாய்க் கிடைத்தாள் (வச 14). இது சில கேள்விகளை எழுப்புகிறது. அனைத்து நாடுகளையும் கண்டங்களையும் நற்செய்தியால் சந்திக்கவேண்டும் என்பதுதானே நற்செய்திப் பேராணை? ஆவியானவர்தானே மிஷனரிப்பணியின் பிரதான இயக்குநர்? இப்படியிருக்க, விறுவிறுப்பானதொரு குழுவின் ஓட்டத்தை அவர் தடுப்பானேன்? அதற்குப் பதில்: திருமறையின் ''பொதுவான'' போதனைகள் மற்றும் கட்டளைகளின்படி நாம் நடந்துகொண்டிருக்கவேண்டும்; அதே வேளையில் ஆவியானவரது ''குறிப்பான'' நடத்துதலையும் கவனியாது விடக்கூடாது. ஆவியானவரது நடத்துதலை நமது உற்சாகம் அமர்த்திவிடக்கூடாது. அவர் மிஷனரிகளை அனுப்புகிறார்; அத்துடன் அவர்களை வழிநடத்துகிறார் (அப் 13:4). விவசாயத்தில் பல்வேறு வேலைகள் உண்டு: உழுதல், விதைத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல். அறுப்பின் ஆண்டவராகிய அவருக்குத்தான் எதை, எப்படி, எப்பொழுது செய்யவேண்டுமென்று தெரியும். அவரது குரலைக் கவனித்து நடப்போம்.

உற்சாகம் மட்டும் இருந்தால் ஊழியம் கனியுள்ளதாயிருக்கும் என்று சொல்லிவிடமுடியாது. ஓர் ''இதய பாரத்துடன்'' உழைக்க வேண்டும். இந்தப் பாரத்தை நமது இதயங்களில் ஊன்றுபவர் ஆவியானவரே. இதை எவ்வளவு பயபக்தியுடன் அப்போஸ்தலன் பவுல் எழுதுகிறார் பாருங்கள். ரோ 9:1-3, ''எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; நான் சொல்லுகிறது பொய் அல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்



என்று ***பரிசுத்த ஆவிக்குள்*** என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாய் இருக்கிறது. என் சொந்த இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே.'' இதய பாரம் இல்லாத உற்சாகம் ''அறிவு இல்லாத வைராக்கியம்'' ஆகும் (10:1,2). ஆவியானவர் அருளும் பாரத்தை ஓர் இயக்கம் (Mission) இழக்குமானால் அது வெறும் இயந்திரம் (machine) ஆகிவிடும்.

பரிசுத்த ஆவியானவரின் அற்புத அசைவாட்டத்திற்குப் பதிலாகச் செயற்கையான பல காரியங்கள் நமது ஊழிய நிறுவனங்களுக்குள் நுழைந்துவிட்டன. நிசமற்ற ''மனந்திரும்புதல்கள்'' இருப்பது போலவே நிசமற்ற ''அபிஷேகங்களும்'' காணப்படுகின்றன. நமது அருள்மாரிக் கூட்டங்களில் திடீர் நிகழ்வுகள், அற்புத வெளிப்பாடுகள் போன்றவையெல்லாம் அபூர்வமாகிவிட்டன. காப்பியடிப்பதும் இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லிக்கொடுப்பதும்தான் நிறைந்துவிட்டன. நமது கூட்டங்களில் அதையும் இதையும் செய்து மக்களை ஒருவிதப் பரவசத்திற்குள் கொண்டு வந்துவிடுகிறோம். நடபடிகளில் வாசிக்கும் அருள்மாரிச் சம்பவங்களெல்லாம் அற்புத நிகழ்வுகளாய் இருந்தன. அவை நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டவையல்ல! பெந்தெகொஸ்தே நாளன்று ''சடுதியாய்'' (திடீரென்று) ஒரு முழக்கமுண்டாயிற்று; அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து நவநாவுகளில் பேசினர் (அப் 2:1-4). கொர்நேலியுவின் இல்லத்தில் பேதுரு ''பேசிக்கொண்டிருக்கும்போதே'' வசனம் கேட்ட யாவர்மீதும் ஆவியானவர் இறங்கினார் (10:44). எருசலேமில் பின்னர் இச்சம்பவத்தைப் பேதுரு விவரித்துச் சொல்லும்போது, அவர் பேசத் ''தொடங்கினபோதே'' பரிசுத்த ஆவியானவர் மக்கள்மீது இறங்கிவிட்டார் என்று குறிப்பிட்டார் (11:15).

தேவனது வல்லமையின் பிரசன்னம் அபரிமிதமாக வெளிப்பட்ட இரு பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளைக் கவனிப்போம். □ ஒன்று ஆலயத்தை அரசன் சாலமோன் பிரதிஷ்டை செய்தபோது நடந்தது. இது குறிப்பிடப்பட்டுள்ள 2 நாளாகமம் 5:13,14ஐ வாசிப்பது நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது: ''அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி,

ஏக சத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள் ... கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தின் பொருட்டு ஆசாரியர்கள் ஊழியம் செய்து நிற்க முடியாமல் போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆல யத்தை நிரப்பிற்று.'' ஒருமிக்க நேர்த்தியாய்ப் பாடியதைத் தொடர்ந்து இப்படி நடந்தது. □ அடுத்த நிகழ்வு சாலமோனின் ஜெபத்தை அடுத்து நடந்தது (7:1-3). அக்கினி! மகிமை! மக்கள் தளவரிசை வரை தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து துதித்தார்கள்! இவையெல்லாம் மனிதன் உண்டாக்காமல் தேவனே செய்தவை என்று உங்களால் உணரமுடிகிறதா? இப்படிச் செய்யுங்கள் என்று எதுவுமே சொல்லிக்கொடுத்துச் செய்யப்படவில்லை. நாமோ நமது வித்தைகளைத்தான் காட்டுகிறோம், வெட்கம்! ''மனிதரால் பிறப்பது மனித இயல்பாயிருக்கும்; ***ஆவியானவரால்*** பிறப்பது ஆவியானவ ரின் இயல்பாயிருக்கும்'' (யோ 3:6)! ஆவியானவரின் இவ்விதப் பூர்வ பாதைகளுக்குத் திரும்புவோம்!

பரிசுத்த ஆவியானவரின் நிசமான செயல்பாடுகளுக்கு மாற்றுக் களாகப் பல நவீன, கேள்விக்குரிய காரியங்களை நாம் கண்டு பிடித் துள்ளோம். திருமறை நமக்குத் தரும் அறிவுரைகள்: ''தேவனை ஆவி யோடு தொழுதுகொள்ளவேண்டும்'' (யோ 4:24); ''ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளவேண்டும்'' (கலா 5:25); ''ஆவியினால் நடத்தப்பட வேண்டும்'' (ரோ 8:14); ''ஆவிக்குள் ஜெபம்பண்ணவேண்டும்'' (யூதா 20); மற்றும், ''ஆவியோடு பாடவேண்டும்'' (1 கொரி 14:15). ஆனால் ஆவியில் கீழே விழுதல், ஆவியில் சிரித்தல், இப்படியெல் லாம் திருமறை எதுவும் சொல்லவில்லை! ஆவியில் சாப்பிடுதல் என்று வந்தால்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்! மலிவான மாற்று களினால் பரவசமடைந்து வஞ்சிக்கப்படுகிறோம்.

''ஆவியோடு பாடுதல்'' என்பதிலும்கூட முற்காலத்தில் இயற் றப்பட்ட நேர்த்தியான பாமாலை, கீர்த்தனைகளை (Hymns and Lyrics) நாம் ஒதுக்கிவைத்துவிட்டோம். நாம் ''புதுப்பாட்டு'' பாடுகிறோம் என்று பெருமிதம் கொள்கிறோம். ''புதுப்பாட்டு'' என்று வேதம் சொல் லும்போது புதிதாய் இயற்றப்பட்டவை என்றா அர்த்தங்கொள்வது?



அப்படியிருக்க முடியாது! கி.பி. 2000இல் இயற்றப்பட்ட பாடல்கள் 2010இல் பழையதாகிவிடுமே! 2020இல் இன்னும் பழையதாகி விடுமே! ''புதிய'' பாடல் என்பது இயற்றப்பட்ட காலத்தை அல்ல, புதிதாக்கப்பட்ட வாழ்க்கையையே குறிக்கும். எடுத்துக்காட்டாக, சங்கீதம் 40:1-3ஐப் பாருங்கள்: 3ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட் டுள்ள ''புதுப்பாட்டு'' என்பது ''உளையான சேற்றிலும் பயங்கரமான குழியிலும்'' உழன்ற சீர்கெட்ட வாழ்க்கையிலிருந்து வேறுபடுவதே. நாம் ஆவியினால் நிரப்பப்பட்டு அதைச் ''சங்கீதங்கள், கீர்த்தனை கள், ஞானப்பாட்டுகள்'' மூலம் வெளிப்படுத்த அழைக்கப்பட்டிருக் கிறோம் (எபே 5:18-20). இவையெல்லாவற்றிற்கும் துதியிலும் ஆராதனையிலும் இடமுண்டு. இவற்றில் எதையும் ஒதுக்காதீர்கள். இவையெல்லாம் இசையோடு எழுப்பப்படவேண்டிய பல்வகை துதியாகும். முந்திய காலப் பாடல்கள் தியானச் செறிவும் (devotional content) உபதேசத் தெளிவும் (doctrinal clarity) உள்ளவையாயி ருந்தன. துர்ப்பாக்கியமாக இன்றையப் பாடல்களில் பல சோகை பிடித்தவையாயிருக்கின்றன; அவை செய்யுள் நடையிலும் இல்லை!

சபைகளிலும் சங்கங்களிலும் தேவனால் அபிஷேகிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் குறைந்துவருவது இன்னொரு துக்க மான காரியம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் ஆவியான வரின் அபிஷேகமே தலைமைத்துவத்திற்கு அடிப்படை நிபந்தனை யாகப் போதிக்கப்பட்டுள்ளது. அடுத்த வரிசைத் தலைவர்களாக எழு பதுபேரைத் தெரிந்தெடுக்கும்படி மோசேயிடம் தேவன் சொன்ன போது அவர் வாக்குப்பண்ணியது: ''உன்மேல் இருக்கும் ***ஆவியை*** அவர்கள் மேலும் வைப்பேன்'' (எண் 11:16,17). கர்த்தருடைய வார்த்தையின்படியே மோசே செய்தபோது, கர்த்தர் ''அவன்மேல் இருந்த ***ஆவியை*** மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார்; அந்த ***ஆவி*** அவர்கள்மீது வந்து தங்கியவுடன் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்'' (வச 25,29).

ஆதிச்சபையில் விதவைகளுக்கு ஆகாரம் பகிர்ந்துகொடுப்பதில் ஒரு பிரச்னை உருவாகியது. பன்னிரு அப்போஸ்தலரும் விசுவாசி களை அழைத்து அவர்களிடம் சொன்னது: ''நாங்கள் தேவ வசனத்

தைப் போதியாமல், பந்திப் பரிமாற்றம் செய்வது விரும்பத்தக்கதல்ல'' (அப் 6:1,2). இப்பொறுப்பை மேற்கொள்ள ஒரு குழுவை ஏற்படுத்த அவர்கள் சீடரிடம் சொன்னார்கள். அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''சகோதரரே, ***பரிசுத்த ஆவியும்*** ஞானமும் நிறைந்து, நற்சான்று பெற்றிருக்கும் ஏழு பேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காய் நியமிப்போம்'' (வச 3). இப்பொறுப்பை ஏற்போருக்கு இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் கூறிப்பிட்ட மூன்று தகுதிகளில் முதலாவது வருவது ஆவியின் நிறைவே. நாமோ இதை விட்டுவிடுகிறோம். கிறிஸ்தவத் தலைமைத்துவத்தின் பிரச்னைகள் இங்குதான் துவங்குகின்றன.

தங்களைத் தாங்களே தலைவர்களாக்கிக் கொள்வோர் இன்று ஏராளம். ஆட்களைக் காக்கா பிடிக்கின்றனர்; அல்லது குடும்ப வாரிசு என்று உரிமை கொண்டாடுகின்றனர். இவ்விதத் தலைவர்களைத் தேவன் அங்கீகரிப்பதில்லை. இதைக் குறித்து அவர் சொல்லுவதைக் கவனியுங்கள்: ஓசி 8:4, ''அவர்கள் இராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்; ஆனாலும் என்னாலே அல்ல. அதிபதிகளை வைத்துக்கொண்டார்கள்; ஆனாலும் நான் அறியேன்.'' இவ்விதத் தலைவர்கள் ஆசனங்களில் அமரலாம்; ஆனால் அவர்கள் மீது சால்வை (mantle) விழவேண்டுமே! தலைவர்கள் என்பவர்கள் மனிதனது தத்துவ ஞானத்தின்படியல்ல, ஆவியானவரின் தெய்வீக நடத்துதலின்படிச் செயல்படவேண்டும். அந்தியோகியாவிலுள்ள திருச்சபைத் தலைவர்களுக்கு ஒரு மிஷனரி அழைப்பு வந்தது. பவுலும் பர்னபாவும் அவர்களுக்கு இரு கண்கள் போன்றவர்கள். தத்துவ ரீதியின்படியே அவர்கள் செயல்பட்டிருப்பார்களெனில் பவுலையும் பர்னபாவையும் தவிர வேறு இருவரையே அனுப்பிவைத்திருப்பார்கள்! ஆனால், ''பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று ***பரிசுத்த ஆவியானவர்*** திருவுளம்பற்றினார்'' (அப் 13:1,2). அவர்கள் ஆவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து இவ்விருவரையும் மிஷனரிப் பணிக்கு அனுப்பிவைத்தனர். ''அவர்கள் ***பரிசுத்த ஆவியினாலே*** அனுப்பப்பட்டார்கள்'' என்று லூக்கா எழுதுகிறார் (வச 3,4). என்னே ஆசீர்வாதமான பங்காளித்துவம்!



தகுதியற்ற தலைமைத்துவத்தைக் குறைகூறிக்கொண்டேயிருப்பதற்குப் பதிலாக, பக்தியும் பரிசுத்த ஆவியும் நிறைந்த தலைவர்களைத் தேவன் எழுப்பவேண்டுமென்று இறைமக்கள் ஜெபிக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக ஏசாயா 1:26இல் தேவன் நம்மை ஊக்குவிக்கும் வாக்கு ஒன்றைத் தந்துள்ளார்: ''உன் நீதியரசர்களை ***முன்னர்*** இருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை ***ஆதியில்*** இருந்ததுபோலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் நீ பெயர்பெறுவாய்!'' ''ஆசீர்வாதமான மழை பெய்யும்'' என்பது நமக்கு எப்பொழுதும் உற்சாகம் தரும் திருவாக்கு (எசேக் 34:26). ஊழல் மலிந்த தலைவர்களால் மக்கள் அவதியுற்ற வேளையில்தான் இவ்வாக்கு கொடுக்கப்பட்டது என்பது தெரியுமா? தங்களைத் தாங்களே மேய்த்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களை இரண்டாம் வசனத்தில் ஆண்டவர் வெகுவாய்க் கண்டித்தார். ஆடுகளை மேய்ப்பதற்குப் பதிலாக அவர்கள் ஆடுகளையே மேய்ந்து கொண்டிருந்தனர். அவ்வித வேளையில்தான் தேவன் தந்த வாக்கு: ''கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாய் இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாய் இருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்'' (வச 24). இதையடுத்துதான் ''ஆசீர்வாதமான மழை பெய்யும்'' எனும் வாக்கு உடனே வருகிறது (வச 26). தமது மந்தையை ஆசீர்வதிப்பதோடு மட்டும் நிறுத்தாமல், அதனை ஆசீர்வாதமாகவும் மாற்றுவதாகத் தேவன் வாக்களித்துள்ளார். ''சுற்றுப்புறமெங்குமுள்ள'' மக்களுக்குக் கிறிஸ்துவின் மந்தையை ஆசீர்வாதமாக்கத் தேவனோடு இணைந்து செயல்படும் தலைவர்களைத் தேவன் தருவாரெனில் அது என்னே ஆசீர்வாதம்! ஆனால் துக்ககரமான காரியம் என்னவெனில், திருச்சபைகளில் ஆயர்கள்தான் ஆட்டக்காரர் என்றும் சபை மக்கள் வெறும் நேயர்கள் என்றும்தான் ஆகிவிட்டது. ''ஆதியில் இறங்கினதுபோலவே'' ஆவியின் அருள்மாரி திரும்பப் பொழியப்பட்டால்தான் நிலைமை மாறும்.

*அருள் ஏராளமாய்ப் பெய்யும், உறுதி வாக்கிதுவே,*
*ஆறுதல் தேறுதல் செய்யும், சபையை உயிர்ப்பிக்குமே!*

*அருள் ஏராளம், அருள் அவசியமே,*
*அற்பமாய் சொற்பமாய் அல்ல, திரளாய்ப் பெய்யட்டுமே!*

## 3. பரிசுத்த ஆவியானவரும் வேலைகளும்

பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைத் திருப்பணிக்கு மட்டும்தான் என்று நாம் குறுக்கிவிடக்கூடாது. ஆன்மீகத்துக்கடுத்தவை மற்றும் உலகுக்கடுத்தவை (sacred and secular) என்று நாம் எல்லாவற்றையும் பாகுபடுத்தக்கூடாது. சாப்பிட்டாலோ, பருகினாலோ, அல்லது எதைச் செய்தாலும் அதைத் தேவனது மகிமைக்காகத்தானே செய்யவேண்டும் (1 கொரி 10:31)? நாம் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்த ஆவியானவரின் உதவி இன்றியமையாதது. ஆவியானவரின் உதவியின்றி இயேசுவைக் கர்த்தர் என்று அழைப்பதுகூட இயலாத காரியம் என்கிறது வேதம் (1 கொரி 12:3ஆ). நமது செயல்பாடுகள் அனைத்திலும் ஆவியானவரது உதவி நாடவேண்டுமென்பதற்குப் பைபிளிலிருக்கும் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகள் நம்மை ஊக்குவிக்கும் —

■ யாத்திராகமம் 31:1-5, ''கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக அவனைத் ***தேவ ஆவியினால்*** நிரப்பினேன்.'' தொழில்நுட்ப வேலைகளுக்குப் பரிசுத்த ஆவியானவரின் உதவி! பொறியியல் துறை, மருத்துவத் துறை, தகவல்நுட்பத் துறை, கல்வித் துறை, இதுபோன்ற எதுவாயிருந்தாலும் இவற்றில் நேர்த்தியாய்ச் செயல்பட ஆவியானவர் உதவுவார் (1 நாளா 28:11,12).

■ ஆதியாகமம் 41:38-40, ''பார்வோன் தனது வேலைக்காரரைப் பார்த்து: ***தேவ ஆவியைப்*** பெற்ற இந்த மனிதனைப்போல வேறொருவன் உண்டோ என்றான். பின்பு பார்வோன் யோசேப்பைப் பார்த்து: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமும் உள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரண்மனைக்கு அதிகாரியாயிருப்பாய்,



உன் வார்த்தையின்படியே என் மக்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள் என்றான்.'' பரிசுத்த ஆவியானவரே ''ஞானத்தையும் உணர்வையும் ஆலோசனையையும் அறிவையும்'' அருளும் ஆவியாயிருக்கிறார் (ஏசா 11:2). பார்வோன் போன்ற புறமதத் தலைவனால் அடையாளம் காணப்பட்டது நம்மால் முடியவில்லையே என்பதுதான் பரிதாபம். இது கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதுபோல்! தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், இன்னும் இவைபோன்றவற்றில் தலைமை வகிக்கும் கிறிஸ்தவ நிர்வாகிகளுக்கு இது ஒரு சவால்! பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள். உங்களது அனைத்து வேலைகளிலும் பொறுப்புகளிலும் அவரது அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்த அவரை வேண்டுங்கள். கிறிஸ்தவ வாலிபர் நங்கையர் பலர் இந்திய ஆட்சிப் பணிக்கு (IAS) வராதது துக்கமான காரியம். அவர்களுக்கு அறிவு (intelligence) இருக்கலாம்; ஆனால் உழைப்பு (industriousness) எங்கே? உயர் மட்டங்களில் நமக்கு யோசேப்புகளும் தானியேல்களும் நெகேமியாக்களும் இல்லையேல் நாட்டளவில் எவ்விதம் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்?

■ யாத்திராகமம் 35:34, ''பெசலெயேலின் இருதயத்திலும், தாண் கோத்திரத்து அகிசாமாயின் குமாரனாகிய அகோலியாவின் இருதயத்திலும் போதிக்கிற ***வரத்தையும்*** தேவன் அருளினார்.'' நுண்ணிய வேலைகளை நேர்த்தியாய்ச் செய்வதற்கு மட்டுமல்ல (31:1,2,), மற்றவர்களுக்குப் ''போதிக்கவும்'' (35:34) தேவன் அவனைத் தமது ஆவியினால் நிரப்பினார். சரியாய்ச் சொன்னால், பிறருக்குப் போதிக்க ஆண்டவர் ஒரு குழுவையே அபிஷேகித்தார். திறமையான ஆசிரியர் மட்டுமல்ல, அதற்கான அபிஷேகமும் பெற்றுள்ள ஆசிரியர் நமக்குத் தேவை. சேகரிக்கப்பட்ட தகவல்கள் (informations) தலைகளைத்தான் நிரப்பும்; மேலிருந்து வரும் அகத்தூண்டல்களோ (inspirations) இதயங்களைக் கொழுந்துவிட்டெரியச் செய்யும்! 1 கொரிந்தியர் 12:8-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஒன்பது வரங்களில் ''ஞானத்தைப் போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும்'' முதல் இரண்டாகும். இவ்விரண்டும் போதக ஊழியத்தோடு நேரடிச் சம்பந்தப்பட்டவை அல்லவா? ஆதி அப்போஸ்தலர் தங்களது போதக ஊழியத்தில் இவ்வரங்களை நாடினர்:

1 கொரி 2:13, ''நாங்கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளால் பேசாமல், ***பரிசுத்த ஆவி*** போதிக்கிற வார்த்தைகளால் பேசி, ஆவிக் குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திக் காண் பிக்கிறோம்.'' ஆவியின் அபிஷேகத்தோடு போதிக்கும்போது கேட் போருக்குத் தெளிவும் (enlightenment) உண்டாகும், பக்திவிருத்தியும் (edification) உண்டாகும். ''சத்திய ஆவி'' என்ற வகையில் ஆவியான வர் ஒரு போதகர் (யோ 14:17,26).

நமது வேதாகமக் கல்லூரிகளுக்காய்த் தேவனைத் துதிப்போம். அதே வேளையில், அங்கு போதிக்கும் பேராசிரியர்கள் ஆவியினால் அபிஷேகிக்கப்படாவிடில் இக்கல்லூரிகள் கல்விப் பாலைவனங் களாய் (academic deserts) மாறிவிடும். மேலறை அனுபவம் இல் லாத ஆசிரியர், பட்டங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு காசும் பெறமாட்டார். உங்கள் நாவில் ஆவியின் அக்கினி இல்லை யேல், உங்கள் உரைகள் அனலற்றுப் பனிக்கட்டி போலிருக்கும்; உங்கள் மாணவர் உறைந்து ஆன்மீக மரணமடைவர் (2 கொரி 3:6).

■ 2 சாமுவேல் 23:1,2, ''தாவீதின் கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் ***அபிஷேகம்*** பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது எனும் மனிதன் சொல்லுவது என்னவென்றால்: கர்த்தருடைய ***ஆவியானவர்*** என்னைக் கொண்டு பேசினார்; அவரது வசனம் எனது நாவில் இருந்தது!'' அபிஷேகிக்கப்பட்ட பாடலும் இசையும் தேவனருளும் வரங்கள். ***பரிசுத்த ஆவியினால்*** நிறைந் திருக்கும் இருதயத்திலிருந்து ''சங்கீதங்களும் கீர்த்தனைகளும் ஞானப்பாட்டுகளும்'' வெடித்துக் கிளம்பிவரும் (எபே 5:18,19). அன்றும் இன்றும் பாடல்கள் இயற்றும், இசை அமைக்கும், கிறிஸ்தவ விசுவாசிகளுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். சர்வ வல்லவரை நாம் துதிப்பது அவர்களது படைப்புகளால் மேம்படுகிறது. பண்டைக் காலப் பாடல்கள் பல எழுப்புதலின் காலங்களில், ஜெப அறைகளி லிருந்து, உபவாச ஜெபத்தோடு இயற்றப்பட்டவை. அவை தியானச் செறிவும் உபதேசத் தெளிவும் நிறைந்தவையாயிருப்பதில் ஆச்சரிய மில்லை. ஆண்டவருக்கு மகிமையாகவும் அவரது மக்களுக்குப் பக்தி



விருத்தியாகவும் இருக்கும்படிப் பாடல் நடத்துவோரும், இசைப் போரும், பாடகரும் அதிகமதிகமாய்ப் பரிசுத்த ஆவியானவர்மீது சார்ந்திருந்தால் நலமாயிருக்கும்.

யூதர்களின் துதி விண்ணப்பப் பாடல் புத்தகமான சங்கீதப் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளார் (சங் 51:10-12; 104:30; 106:33; 139:7; 143:10). முற்காலங்களில் இசைக் கருவிகளோடு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (1 சாமு 10:5). தனது சுரமண்டலத்தைத் தாவீது வாசித்தபோது கலங்கப் பண்ணும் பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்கியது (1 சாமு 16:23). இசைப்பவன் ஒருவன் தனது இசைக்கருவியை எடுத்து வாசித்தபோது தீர்க்கன் எலிசா மீது புதிய தீர்க்கதரிசனச் செய்தியுடன் கர்த்தரது கரம் வந்தமர்ந்தது (2 இரா 3:15-19). தீர்க்கதரிசனம் உரைத் தலும், இசையும் அடிக்கடி இணைந்திருந்தன (1 நாளா 25:1,3). கிறிஸ்தவ இசையில் பயபக்தி நிறைந்திருக்கவேண்டும் என்றும், அது வெறுமனே பரவசப்படுத்தும் பொழுதுபோக்காகிவிடக்கூடாது என்றும் இவ்வசனப் பகுதிகள் நமக்குப் போதிக்கின்றன.

■ தானியேல் 1:7, ''இந்த நான்கு வாலிபருக்கும் தேவன் எல்லா இலக்கியத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலை எல்லாத் தரிசனங்களையும் சொப்பனங் களையும் புரியக்கூடிய அறிவுள்ளவனாக்கினார்.'' தனது சொப்பனத் திற்கு அர்த்தம் தேடியபோது மன்னன் நேபுகாத்நேச்சார் இதனை எவ்விதம் அடையாளம் கண்டார் பாருங்கள்: 4:18, ''என் ராஜ்யத்தி லுள்ள ஞானிகள் எல்லாராலும் என் சொப்பனத்தின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கக்கூடாமல் போயிற்று; நீயோ இதைத் தெரிவிக்க முடியும்; பரிசுத்த தேவர்களுடைய ***ஆவி*** உனக்குள் இருக்கிறதே.'' எல்லாருக்கும் ஆண்டவர் ஒரே அளவில் ஞானம் தருவதில்லை; ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைந்துள்ள கிறிஸ்தவர்கள் கடின மாய் ஊழைத்து, ஆவியானவர் அருளும் ஞானத்துடன், தங்கள் வேலைகளில் பிறரைவிடச் சிறந்திலங்க வேண்டும். இது பிறர்முன் தேவனுக்கு மகிமை சேர்க்கிறது.

மேற்குறிப்பிட்ட பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் பல்வேறு துறைகளில் பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் நமக்குதவ முடியும்

என்று பார்த்தோம்; ஆனாலும், எதைச் செய்யும்படித் தேவன் நம்மை அழைத்திருக்கிறாரோ அதற்கு மட்டும் தேவையான அபிஷேகத்தையே அவர் தந்து நம்மைப் பயன்படுத்துவார். நித்திய நோக்கில் எது மேலானது என்று யோசிப்பதைவிட எதில் அதிகம் சம்பாதிக்கலாம் என்றே இன்றைய வாலிபர் நாட்டம் கொண்டுள்ளனர். இங்கு சவால் நிறைந்த எடுத்துக்காட்டாய் மோசே வருகிறார். எபிரெயர் 11:24-27ஐ வாசித்துப் பாருங்கள்: ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, தற்காலிகமான பாவச் சிற்றின்பங்களை அனுபவிப்பதைவிடத் தேவனது மக்களுடன் துன்பம் அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மீது நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள செல்வங்களிலும் கிறிஸ்துவின் பொருட்டு வரும் இகழ்ச்சியை அதிக பாக்கியம் என்று எண்ணினார்.''

நமது வாலிபர் நங்கையருக்கு இப்பகுதியில் போதுமான ஆலோசனை கிடைப்பதில்லை. பிள்ளைகளோடு உட்கார்ந்து ஜெபித்து அவர்களுக்கு இறைச்சித்தம் எது என்று கண்டுபிடிப்பதைவிடக் கவர்ச்சிகரமான துறைகளுக்குள்ளேயே அவர்களைப் பெற்றோர் புகுத்திவிட முயலுகின்றனர். வாலிபப் பருவத்திலேயே திருச்சித்தம் கண்டுபிடிக்கப் பயிலாவிடில் வாழ்நாள் முழுவதும் அதனைத் தவறவிட்டுக்கொண்டேதானிருப்போம். தேவனது பரிபூரண சித்தம் இல்லாதது எதுவும் இரண்டாம் தரமானதே. 1960களில் பொறியியல் கல்லூரிகளில் மூன்றே பாடப்பிரிவுகள்தான் உண்டு: கட்டிடவியல், இயந்திரவியல், மின்னியல் (Civil, Mechanical, Electrical). ஐந்தாண்டுப் படிப்பிற்கு மூன்றாம் ஆண்டில்தான் விருப்பமான பாடப்பிரிவைத் தெரிந்தெடுக்கவேண்டும். கிராக்கி என்று வரும்போது முதலாவது இயந்திரவியல், அடுத்து மின்னியல், இறுதியாகக் கட்டிடவியல். நான் வகுப்பில் முதல் தர மாணவனாயிருந்தாலும், தேவ சமூகத்தில் காத்திருக்கும்போது நான் கட்டிடவியலைத் தெரிந்தெடுக்க அவர் என்னை நடத்தினார். இது எனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக இருந்தும் நான் தேவ நடத்துதலில் உறுதியாயிருந்தேன். நான் கட்டிடப் பொறியியலில் பெற்ற பயிற்சி எனது ஊழியக் காலம் முழுவதிலும், குறிப்பாக எனது பிரசங்கங்களை வடிவமைப்பதில், எனக்கு நேரடியாய் உதவியுள்ளது!



# 18

# பரிசுத்த ஆவியானவரும் இரண்டாம் வருகையும்

## Second Comforter & Second Coming

கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாய் அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தத் திருமுழுக்கினர் யோவான் வந்தார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் அவரது திருச்சபையை ஆயத்தப்படுத்தப் பரிசுத்த ஆவியானவர் வந்திருக்கிறார். கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியானவரது செயல்பாடுகள் குறித்து நிறைய குறிப்புகள் பைபிளில் உண்டு —

- நமது இறுதியான மீட்பின் நாளுக்காய் நாம் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிறோம். நமது இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது (2 கொரி 1:22). தேவனுக்குச் சொந்தமானவர்கள் அவரது மகிமைக்குப் புகழ்ச்சியாய் மீட்கப்படுவார்கள் என்பதற்கு வாக்குப்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவராய் அவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபே 1:13,14). எனவேதான் நாம் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தக்கூடாதென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம் (4:30).

- பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் இறைமக்களைத் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக்க (condemn) மாட்டார் (ரோ 8:1); மாறாக, அவர் பிரதானமாக ''உலகையே'' கண்டித்து உணர்த்துவார்; ஏனெனில் உலகத்தாரில் பெரும்பாலானோர் இயேசுவை விசுவாசிக்கவில்லை. இதுவே பாவங்களிலெல்லாம் ''பாவம்'' (யோ 16: 8-11). கிறிஸ்துவின் மறுவருகையை அடுத்து இவ்வுலகின் அதிபதியானவன் நித்தியமாய் நியாயந்தீர்க்கப்படவிருப்பதால் ஆவியானவர் ''நியாயத்தீர்ப்பு'' குறித்தும் ''உலகைக்'' கண்டித்து உணர்த்துவார்.

■ இயேசுவின் சீடர் தாகத்துடன் காத்திருந்த வேளையில் அவர்கள் மீது பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பொழியப் பட்டார். இது யோவேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் (அப் 2:16-18). ஆனாலும் அது முழுமையான அல்ல, பகுதியான நிறைவேற்றம்தான். அன்று அவர்கள் ''அற்புதங்கள், அடையா ளங்கள், இரத்தம், இருண்ட சூரியன், செந்நிறச் சந்திரன்'' போன்ற வற்றையெல்லாம் பார்க்கவில்லையே (வச 19,20). எனவே ''கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்'' வருமுன் நாம் இன்னும் அதிக அளவில் ஆவியானவர் ஊற்றப்படுவதை எதிர் பார்க்கலாம் (வச 20). இதனால் இறையரசிற்கு இதுவரையில்லாத ஆத்தும அறுவடை கிட்டும் (வச 21). அளவில்லாத அருள்மாரி, அளவில்லாத அறுவடை! ''பின்மாரியைத்'' தொடர்ந்து களங்கள் தானியத்தினால் நிரம்பும் (யோவேல் 2:23,24; சக 10:1).

■ ''கடைசிக் காலங்களில்'' மக்கள் ஆரோக்கியமான விசுவாசத்தை விட்டு, வஞ்சக ஆவிகளால் இழுக்கப்பட்டு, பிசாசின் உபதேசங் களைப் பின்பற்றிச் செல்வார்கள் என்று ''வெளிப்படையாய்'' முன்னறிவித்துள்ளது பரிசுத்த ஆவியானவர்தான் (1 தீமோ 4:1). ''தீங்கு நாளில்'' இருட்டின் சக்திகளுக்கு எதிராக அவற்றைத் தாக்குவதற்கு நம் வசமிருப்பது தேவ வசனமாகிய ''ஆவியின்'' பட்டயம் மட்டுமே (எபே 6:13,17). ''தீங்கு நாள்'' என்பதில்தான் கடைசி நாட்கள் உச்சமடைகின்றன! இறுதிக்காலத்தின் இறுதிக் கட்டத்திற்குள் வந்திருக்கும் நாம் துர்வுபதேச வெள்ளங்களுக்குத் தப்ப ஒரே வழி ஆவியானவரது துணையுடன் பைபிளைப் புரிந்துகொள்வதுதான்.

■ விண்ணக மாளிகையில் தமது சீடருக்கு ஓரிடத்தை ஆயத்தம் பண்ணப்போவதாக இயேசு அவர்களிடம் கூறினார் (யோ 14:2). ''எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மிடம் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணியவற்றைக் கண் காணவுமில்லை, காது கேட்க வுமில்லை, அவை மனிதனின் இருதயத்தில் தோன்றவுமில்லை'' (1 கொரி 2:9). அந்த அதிசயமான ஒளிமய நாட்டிற்குள் நம்மை அழைத்துச்செல்ல ஆண்டவர் வரப்போகிறார் (யோ 14:3). விண்



ணகத்தின் மகிமையை ஓரளவாவது நமக்கு வெளிப்படுத்துவது பரிசுத்த ஆவியானவரே (1 கொரி 2:10). நமது எதிர்கால விண் வீட்டைக் குறித்த குதூகலமான எதிர்பார்ப்பை நமக்குள் உருவாக் குவது ஆவியானவரே!

■ கிறிஸ்தவப் பக்தி முயற்சிகளில் முக்கியமானதொன்று ஜெபம். பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் நாம் ஜெபிக்கும்போதுதான் மகா பரிசுத்த விசுவாசத்தின்மீது நம்மை உறுதிப்படுத்திக் கொண்டு, தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறுவதற்காய் நாம் சோர்ந்துபோகாமல் காத்திருக்க முடியும் (யூதா 20,21). கிறிஸ்துவின் வருகைக்காய் நம்பிக்கை யுடன் காத்திருக்க நமக்குதவுவது ஆவியானவரே (கலா 5:5).

■ விண்ணகத்திற்குச் செல்லும் பாதையில் உபத்திரவங்கள் எனும் கற்கள்தான் பதிக்கப்பட்டிருக்கின்றன (அப் 14:22). இது உடலின் வாதைகளையும் உள்ளடக்கும். பரலோகத்தில் நமக்காய் ஆயத்தம் பண்ணப்பட்டிருப்பதைச் சுதந்தரிப்பதற்காய் நாம் நெருக்கங்களு டன், தற்காலிகமான கூடாரமாகிய நமது உடலில் தவித்து நிற் கிறோம். இதற்கு உத்திரவாதமாய் ஆவியானவர் நமக்கு அருளப் பட்டிருக்கிறார் (2 கொரி 5:1-5). நாம் இப்பொழுது பெற்றிருப்பது ஆவியின் ''முதற்பலன்கள்'' மட்டுமே. முடிவான நமது சரீர மீட்பு எவ்வளவு மகிமையாயிருக்கும்! (ரோ 8:23). கிறிஸ்துவுக்காய் நாம் அனுபவிக்கும் நிந்தைகளைப் பொருத்தவரை கிறிஸ்துவின் வரு கையின்போது நம்மில் வெளிப்படவிருக்கும் தேவனது மகி மையை நமக்கு இன்று பரிசுத்த ஆவியானவர்தான் ''மகிமையின் ஆவியானவராய்'' வெளிப்படுத்தி நம்மைப் பேரானந்தத்தால் நிறைக்கிறார் (1 பேது 4:13,14).

■ நாம் நீதிமான்களாக்கப்பட்டபோது தொடங்கிய பரிசுத்தமாகுதல் கிறிஸ்துவின் வருகையில் நாம் மகிமையடைதலாய் முற்றுப் பெறும் (ரோ 8:30). தேவ குமாரனின் சாயலுக்கொப்பாய் நாம் மாறிவிடுவோம் (வச 29). பரிசுத்தமாகுதல் என்பது நமக்குள்

நிகழ்வது பரிசுத்த ஆவியானவர் மூலமாகத்தான் (1 கொரி 6:11; 1 பேது 1:2). தேவ குமாரனின் சாயலுக்கொப்பாய் நாம் மாறும் இந்த மறுரூப அனுபவம் எனும் பயணத்தில் நம்மை மகிமையின் மேல் மகிமைக்கு நடத்திச் செல்லுபவர் பரிசுத்த ஆவியானவரே (2 கொரி 3:18).

- நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் பின்வாங்கி மனப்பூர்வமாய்ப் பாவம் செய்தால், தேவனது கிருபையை அவ்வளவாய் நாம் அனுபவிக்க உதவும் பரிசுத்த ஆவியானவரை ''நிந்திக்கிறோம்'' என்றே பொருள் (எபி 10:26,29). உலகத்தோடு நாம் சரசம் பண்ணுவதை ஆவியானவர் பொறுத்துக்கொள்ள மாட்டார் (யாக் 4:4,5). கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான ஈசாக்கிடம் திருச் சபையாகிய மணமகளைப் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்க் கும்வரை எலியேசர் போன்ற ஆவியானவர் அமரமாட்டார் (ஆதி 24:55,66). விசுவாசிகளைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து வுக்கு ஒப்புக்கொடுக்க அவர்களுக்காய்ப் பவுல் கொண்டிருந்த தேவ வைராக்கியத்திற்கு ஒப்பானது இது (2 கொரி 11:2). ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் நெருங்கி வந்துகொண்டி ருக்கிறது!

- திருச்சபைகளுக்குக் கிறிஸ்துவின் இறுதியான செய்தியைச் சுமந்து வருவது பரிசுத்த ஆவியானவரே. வெளிப்படுத்தலிலுள்ள அந்த ஏழு கடிதங்களிலும் என்ன எழுதவேண்டுமென்று யோவா னுக்குச் சொன்னது கிறிஸ்து எனினும் ஒவ்வொரு கடிதத்தின் முடிவிலும் ***''ஆவியானவர்*** சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கட்டும்'' என்றுதான் வாசிக்கிறோம் (வெளி 2:7,11,17, ...). கிறிஸ்துவின் வருகைக்காய்த் திருச்சபையை ஆயத்தப்படுத்துவதற்காகவே இக்கடிதங்கள்: ''இதோ, நான் சீக்கிரம் வருகிறேன் ... நான் திருடனைப்போல் வருகிறேன் ... இதோ, நான் சீக்கிரம் வருகிறேன்'' (2:5,16; 3:3,11). வாக்குப் பண்ணப்பட்ட பலாபலன்கள் அத்தனையும் நித்தியமானவை: ''ஜீவ விருட்சம் ... இரண்டாம் மரணமின்மை ... மறைக்கப்பட்ட மன்னா ... புதிய பெயர் எழுதப்பட்டுள்ள வெள்ளைக்கல் ...



நாடுகள்மீது அதிகாரம் ... விடிவெள்ளி நட்சத்திரம் ... வெள்ளை ஆடைகள் ... தேவாலயத்தில் தூண் ... கிறிஸ்துவின் அரியணை'' (2:7,11,17,26,28; 3:5,12,21).

- இறுதிக்கட்டத்திற்குள் வரும்போது ''அக்கிரமம் மிகுதியாகும்'' என இயேசு முன்னறிவித்தார் (மத் 24:12). ''பொல்லாதவர்களும் எத்தர்களும் வஞ்சிக்கிறவர்களாகவும் வஞ்சிக்கப்படுகிறவர்களா கவும் மேலும் மேலும் கேடுள்ளவர்களாவார்கள்'' என்று பவுல் முன்னறிவித்தார் (2 தீமோ 3:13). அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பி வழியப்போகிறது. அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து ஏற் கனவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறான்; முழுமையாய்ச் சீக்கிரம் வெளிப்படுவான். திருச்சபை தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், உலகம் மனந்திரும்பவும் கூடுதல் நேரம் கொடுப்ப தற்காகப் பரிசுத்த ஆவியானவர்தான் அக்கிரமக்காரனின் முழு வெளிப்பாட்டைத் தடைசெய்துகொண்டிருக்கிறார். முடிவாக அந்திக்கிறிஸ்துவைக் ''கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினால் அழித்து, தமது வருகையின் பிரசன்னத்தினால் நாசம்பண்ணுவார்'' (2 தெச 2:7,8). பரிசுத்த ஆவியானவரின் அருள் நிறைந்த செயல்பாட்டிற்காய்த் தேவனைத் துதிப்போம்!

- கடைசிக் காலம் மற்றும் அவரது வருகைக்கான அடையாளங்கள் எவை என்று சீடர்கள் இயேசுவிடம் கேட்டபோது, அவர் வரிசைப் படுத்தியவற்றில் ஒன்று சுவிசேஷத்திற்காய்த் துன்புறுத்தப்படல் ஆகும். இதோ, அவர் கூறியது: ''அவர்கள் உங்களைக் கைது செய்யும்போது, நீங்கள் என்ன பேசவேண்டுமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் யோசிக்காமலும் இருங்கள்; அந்த வேளை யில் உங்களுக்கு எது அருளப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, ***பரிசுத்த ஆவியான வரே*** பேசுகிறவர்'' (மாற் 13:11). தேவைப்பட்டால் (இரத்த) ''சாட்சிகளாய்'' இறப்பதற்கும் நம்மைத் தைரியப்படுத்துவது பரி சுத்த ஆவியானவரின் ''வல்லமையே'' (அப் 1:8). இரத்தசாட்சி யாய் ஸ்தேவான் மரித்துக்கொண்டிருந்தபோது, பிதாவானவரது வலப்பக்கத்தில் இயேசுவானவர் நின்றுகொண்டிருந்த பரலோகத் தரிசனத்தை அவருக்குக் காட்டியது பரிசுத்த ஆவியானவரே

(7:55). நற்செய்தியை விசுவாசிப்பதற்கான இறுதியான அழைப்பைப் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையாகிய மணமகளுடன் சேர்ந்து விடுப்பதை இப்படி வாசிக்கிறோம்: ***''ஆவியும்*** மணவாட்டியும், வா, என்கிறார்கள்'' (வெளி 22:17).

- கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் இஸ்ரவேலர் திரும்பவும் ஆதி நிலையேகுதலில் பரிசுத்த ஆவியானவரது செயல்பாடு முக்கியமானது. அவர்கள் குத்தினவரை அவர்கள் நோக்கிப் பார்க்கும்படிப் பரிசுத்த ஆவியானவர் ''கிருபையின் ஆவியாயும், விண்ணப்பத்தின் ஆவியாயும்'' அவர்கள்மீது பொழியப்படுவார் (சக 12:10). சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவும்படி அவர் ''நியாயத்தின் ஆவியாகவும் சுட்டெரிப்பின் ஆவியாகவும்'' செயல்படுவார் (ஏசா 4:3,4). அவர்களைத் தேவன் எவ்விதம் தேற்றுவார் என்று பாருங்கள்: ''நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது நான் உங்களுடன் உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ***ஆவியானவரும்*** உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்'' (ஆகாய் 2:5). அவர்களைச் சிறையிருப்பிற்குள் அனுப்பியது தேவனே; அவர்களை மீட்டுத் திருப்பிக் கொண்டுவருபவரும் அவரே. இதோ, அவர் தரும் வாக்கு: ''நான் இஸ்ரவேல் வம்சத்தார்மீது என் ***ஆவியை*** ஊற்றினபடியால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன்'' (எசேக் 39:28,29).

- இன்று நமது உடலை ஆலயமாய்க் கொண்டு பரிசுத்த ஆவியானவர் நம்மில் குடிகொண்டுள்ளார் (1 கொரி 3:16; 6:19). உயிர்த்தெழுதலின் நாளில் நமது உடல்களுக்கு அவரே உயிர் தருவார். கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவர் அவரே (ரோ 8:11; 1:4). யோவானுக்குக் கிடைத்ததொரு தரிசனத்தில் வானத்திலிருந்து அவர் கேட்ட சத்தம்: ''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது ... ***ஆவியானவரும்*** 'ஆம்' என்று திருவுளம்பற்றுகிறார்'' (வெளி 14:13). நமது மரணத்தோடு நம்மில் ஆவியானவரது செயல்பாடு நின்றுவிடுவதில்லை; அது ''என்றென்றைக்கும்'' தொடரும் (யோ 14:16). அல்லேலூயா!



## ''பின்மாரி''

*இரட்டிப்பான நன்மைகள் தந்திட*
*இயேசு வாக்களித்தாரே*

*முன்மாரிமேல் பின்மாரி மழையே*
*உன்னதத்தினின்று வந்திறங்குதே*

*பெலத்தின்மேலே மா பெலனே*
*புதுப்பெலன் நாம் பெற்றிட*
*சால்வைதனை எலிசா அடைந்தாற்போல்*
*சோர்வின்றிப் பெலன் என்றும் நாடுவோம்*

*கிருபையின் மேல் மா கிருபை*
*கர்த்தரிடம் நாம் பெற்றிட*
*ஸ்திரீகளுக்குள் மரியாள் பெற்ற பாக்யம்*
*ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம்*

*ஜெயத்தின் மேலே மாஜெயமே*
*ஜெய தொனியாய்ப் பெற்றிட*
*போர் முனையில் சிறு தாவீதுபோல*
*போர் வீரராக என்றும் ஜெயிப்போம்*

*நம்பிக்கையின்மேல் நம்பிக்கை*
*நல் விசுவாசம் பெற்றிட*
*ஆதி அப்போஸ்தலர் காலம் நடந்த*
*அற்புதங்கள் நாம் என்றும் காணுவோம்*

*பரிசுத்தம் மேல் பரிசுத்தம்*
*பங்கமில்லாமல் பெற்றிட*
*நீதியின் சூரியன் இயேசுவுடனே*
*நீதி அணிந்து என்றும் ஆளுவோம்*

*மகிமையின் மேல் மா மகிமை*
*மறுரூபம் நாம் பெற்றிட*
*கண்ணிமை நேரத்திலே பறந்தேகி*
*கர்த்தருடன் நாம் என்றும் வாழுவோம்*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014

# (B)

# பரிசுத்த ஆவியானவரைக்
# குறித்த
# சுருக்கக் குறிப்புகள்



**19**

# ஆவியானவரை நான் என்ன செய்யவேண்டும்?
## What shall I do with the Holy Spirit?

''கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்?'' என்று பிலாத்து கேட்டதற்கு, மக்கள், பிரதான ஆசாரியராலும் மூப்பராலும் ஏவப்பட்டு, ''அவனைச் சிலுவையில் அறையவேண்டும்'' என்று சொன்னார்கள். சரித்திரம் திரும்பும். மார்க்கபக்தியுள்ள பழைய ஏற்பாட்டு யூதர்கள் தேவனது முதலாம் தேற்றரவாளனாகிய இயேசு கிறிஸ்துவைத் தள்ளிவிட்டதுபோல, புதிய ஏற்பாட்டு யுகத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் தேவனது இரண்டாம் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரைத் தள்ளிவிடுகின்றனர். சபையின் எல்லாச் சாபங்களுக்கும் காரணம் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த அறிவுப் பற்றாக்குறைதான். கிறிஸ்தவ நண்பரே, பின்வரும் கோர்வையை வாசித்து, தாழ விழுந்து, ''பரிசுத்த ஆவியானவரை நான் என்ன செய்ய வேண்டும்?'' என்ற வினாவிற்கு விடை கூறுவீர்.

1. பிதா, குமாரன், *பரிசுத்த ஆவியின்* நாமத்திலே ஞானஸ்நானம் பெறுங்கள். (மத் 28:19)
2. பரம பிதா உங்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளும்படிக் கேளுங்கள். (லூக் 11:13)
3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் (யோ 20:22; அப் 19:2)
4. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுங்கள். (லூக் 1:15)
5. தேவனது அக்கினியினால் சுத்திகரிக்கப்படப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். (மத் 3:11,12)

6. அறிவுக்கு முன்னாக ஆவியின் வல்லமைக்கும் அபிஷேகத் திற்கும் வாழ்க்கையில் இடமளியுங்கள். (அப் 1:7,8)

7. ஆவியினால் தேவனைத் துதித்து ஆராதியுங்கள். (யோ 4:24; அப் 2:4,11 ; 10:46; 1 கொரி 12:3)

8. பரிசுத்த ஆவியில் களிகூருங்கள். (ரோ 14:17; 15:13)

9. பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படியுங்கள். (எபி 3:7,8)

10. பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குச் சாதகமாய்ச் செயல்படுங்கள். (லூக் 2:25-27)

11. ஆவியின் புதிய அபிஷேகத்தைத் தினமும் அனுபவிக்கக் கீழ்ப் படிதலின் ஆவியினால் நிறைந்திருங்கள். (அப் 5:32)

12. பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுங்கள். (ரோ 8:1,14)

13. பரிசுத்தமாகுதலுக்கு அழைப்பை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியின் உதவி பெற்று அவரது கனியைக் கொடுங்கள். (1 தெச 4:7,8; கலா 5:22,23)

14. உலகத்தின் சிற்றின்பங்கள் பின்னே ஓடாமல் பரிசுத்த ஆவியினாலே நிறைந்திருங்கள். (லூக் 1:15; எபே 5:18)

15. உங்கள் உடல் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்றுணர்ந்து பாலியல் பாவங்களுக்கு உடலை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள். (1 கொரி 6:18-20)

16. பரிசுத்த ஆவியினாலே உடலின் பாவச் செய்கைகளை அழியுங்கள். (ரோ 8:13)

17. பரிசுத்த ஆவிக்குள் மனச்சாட்சியைச் சுத்தமாயும் குற்றமின்றியும் காத்துக்கொள்ளுங்கள். (ரோ 9:2)

18. பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்காதீர்கள். (அப் 7:51)

19. சாத்தானுக்குச் செவிகொடுத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லாதீர்கள். (அப் 5:3)



20. கெட்ட வார்த்தையினாலும் தீயச் சொற்களினாலும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபே 4:29-31)

21. பரிசுத்த ஆவியின் ஆறுதலளிக்கும் ஊழியத்தை மறந்து கலகம் பண்ணி அவரை விசனப்படுத்தாதீர்கள். (ஏசா 63:9,10)

22. பரிசுத்த ஆவியை அவித்துப்போடாதிருங்கள். (1 தெச 5:19)

23. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய்ப் பேசாதிருங்கள். (மத் 12:31,32)

24. பரிசுத்த ஆவியானவரின் விளங்காத செயல்களைக் கண்டனம் பண்ணி விடாதிருங்கள். (மத் 1:20; அப் 2:12)

25. பரிசுத்த ஆவியினாலே போதிக்கப்பட்டிருங்கள். (யோ 14:26; 1 கொரி 2:10-14)

26. உங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட தேவனுடைய ஆரோக்கியமான வசனங்களைப் பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்ளுங்கள். (2 தீமோ 1:14)

27. இயேசுவுக்காய்ச் சாட்சி சொல்லும்போது பரிசுத்த ஆவியின் வல்லமையைச் சார்ந்துகொள்ளுங்கள். (அப் 1:8; 4:31)

28. ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களை நடப்பிக்க எதிர்பாருங்கள். (மத் 1:18; லூக் 1:34,35)

29. மக்களுக்கு நன்மைசெய்து, ஆவியின் வல்லமையினால் அவர்களைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவியுங்கள். (அப் 10:38)

30. ஆவியானவரது வரங்களைக் குறித்து அறியாமையிலிராமல் அவற்றை விரும்பி நாடுங்கள். (1 கொரி 12:1; 14:1)

31. திருப்பணியில் தீர்மானங்கள் எடுக்க ஆவியானவரின் சத்தத்தைக் கவனித்திருங்கள். (அப் 13:2; 15:28; 16:6)

32. நற்செய்தியறிவித்ததால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படும் போது ஆவியானவர் தகுந்த வார்த்தைகளை அருள அவரை முழுவதுமாய்ச் சார்ந்திருங்கள். (மாற் 13:11; அப் 4:8)

33. துன்புறுத்தப்படும்போது பரிசுத்த ஆவியானவரின் நிறைவை நாடுங்கள். (அப் 7:54,55; 13:51,52)

34. திருச்சபையில் ஊழியங்கள், ஆளுகைகள் யாவும் பரிசுத்த ஆவியினாலேயே என்பதை மறந்துவிடாதிருங்கள். (அப் 20:28)

35. ஆவியானவரது உதவியினாலேயே எல்லா வேலைகளிலும் ஞானமும் நற்சாட்சியும் விளங்க நடந்துகொள்ளுங்கள். (அப் 6:3)

36. பரிசுத்த ஆவிக்குள் ஜெபியுங்கள். (யூதா 20: 1 கொரி 14:15; ரோ 8:26-28)

37. விண்தந்தையைத் தைரியமாய் அணுகச் செய்யும் புத்திர சுவிகார ஆவியின் சாட்சியில் மகிழுங்கள். (ரோ 8:15-17)

38. சாத்தானுக்கு எதிராய் ஆவியின் பட்டயத்தைக் கையாளுங்கள். (எபே 6:17)

39. ஆசீர்வாத வார்த்தைகளினாலும் ஜெபங்களினாலும் பரிசுத்த ஆவியின் தொடுதலைப் பிறர் அனுபவிக்க உதவுங்கள். (லூக் 1:41; அப் 8:15)

40. கிறிஸ்துவை மகிமைப்படுத்தி ஆவியானவரோடு சேர்ந்து, ''கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' எனக் கூப்பிடுங்கள்! (யோ 16: 13,14; வெளி 22:20)

■

*ஊற்றுத் தண்ணீரே, எந்தன் தேவ ஆவியே,*
*ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா!*
*ஆசீர்வதியும், என் நேச கர்த்தரே,*
*ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்!*

*இரட்சிப்பின் ஊற்றுக்கள் எந்தன் சபைதனிலே*
*எழும்பிட இந்த வேளை இறங்கிடுமே;*
*ஆத்ம பாரமும் பரிசுத்தமும்*
*ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே!*

— பாஸ்டர் ஜாய்சன், நாகர்கோயில்



**20**

# பரிசுத்த ஆவியானவரும் பரிசுத்த ஆகமங்களும்

## Holy Spirit & Holy Scriptures

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் பரிசுத்த ஆகமங்களின் அதிகாரத்தையும் ஒருங்கிணைத்துச் சமநிலைப்படுத்தாததாலேயே கிறிஸ்தவம் வெகுவாய்ப் பிளந்து கிடக்கிறது. இந்தச் சமநிலையின்மையினால்தான் நமது வேத வியாக்கியானங்களில் அதிக அளவில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒன்றை அடித்து அடுத்ததை அழுத்துவது நமக்குத்தான் பாதகம். பரிசுத்த ஆவியின் வல்லமையோடு திருவசனத்தின் அதிகாரத்திற்கு அடங்கி நடப்பவனே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவன். இவையே அவனது இரு இறக்கைகள். இவ்விரண்டையும் ஒருங்கிணைக்கும் சில திருவசனங்களை இங்கு கவனிப்போம் —

☐ தாவீதரசனின் கடைசி வார்த்தைகள்: ''கர்த்தருடைய ***ஆவியானவர்*** என்னைக் கொண்டு பேசினார்; அவரது ***வசனம்*** எனது நாவில் இருந்தது'' (2 சாமு 23:2).

☐ ஞானத்தின் அழைப்பு: ''என் கடிந்துகொள்ளுதலுக்குத் திரும்புங்கள்; இதோ, என் ***ஆவியை*** உங்களுக்கு அருளுவேன், என் ***வார்த்தைகளை*** உங்களுக்குத் தெரிவிப்பேன்'' (நீதி 1:23).

☐ உன்மீதிருக்கும் என் ***ஆவியும்*** நான் உன் வாயில் அருளிய என் ***வார்த்தைகளும்*** என்றும் உன் வாயிலிருந்து நீங்குவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (ஏசா 59:21).

☐ ''நீங்கள் எகிப்திலிருந்து புறப்படும்போது நான் உங்களுடன் உடன்படிக்கைபண்ணிய ***வார்த்தையின்படியே,*** என் ***ஆவியானவரும்*** உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்'' (ஆகாய் 2:5).

- ☐ ஏசாயாவின் தீர்க்கதரிசனப் புத்தகத்திலிருந்து இயேசு வாசித்தது: ''கர்த்தருடைய ***ஆவியானவர்*** என்மீதிருக்கிறார்; தரித்திரருக்குச் ***சுவிசேஷத்தைப்*** பிரசங்கிக்க என்னை அபிஷேகம்பண்ணினார்.'' ''சீடர்கள் ***பரிசுத்த ஆவியினால்*** நிரப்பப்பட்டுத் ***தேவ வசனத் தைத்*** தைரியமாய் அறிவித்தார்கள்'' (லூக் 4:17,18; அப் 4:31).
- ☐ ''தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனது ***வார்த்தைகளைப்*** பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ***ஆவியை*** அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்'' (யோ 3:34).
- ☐ இயேசு சொன்னது: ***''ஆவியே*** உயிர்ப்பிக்கிறது ... நான் உங்க ளுக்குச் சொல்லுகிற ***வசனங்கள் ஆவியாயும்*** ஜீவனாயும் இருக் கின்றன'' (யோ 6:63).
- ☐ இயேசு உரத்த குரலில் சொன்னது: ***''வேத வாக்கியம்*** சொல்லு கிறபடி என்னிடம் விசுவாசமாயிருக்கிறவனின் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்.'' ***பரிசுத்த ஆவியைக்*** குறித்து இப்படிச் சொன்னார் (யோ 7:38,39).
- ☐ விவாகரத்து குறித்த கேள்வியொன்றிற்குப் பதில் கொடுக்கையில் இயேசு சொன்னது: ''நீங்கள் ***வேத வாக்கியங்களையும் தேவ னுடைய வல்லமையையும்*** அறியாமல் தப்பெண்ணம் கொள்ளு கிறீர்கள்'' (மத் 22:29).
- ☐ இயேசு தமது ***வார்த்தையினாலும்*** தேவனுடைய ***ஆவியினாலும்*** பொல்லாத ஆவிகளைத் துரத்தினார் (மத் 8:16; 12:28).
- ☐ ***''வேதத்திலுள்ள*** எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளை உடையதாயிராது என்று நீங்கள் முந்தி அறியவேண் டும். தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனிதருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர் ***பரிசுத்த ஆவியினால்*** ஏவப்பட்டுப் பேசினார்கள்'' (2 பேது 1:20,21).
- ☐ தனது உடன் சீடரிடம் பேதுரு சொன்னது: ***''பரிசுத்த ஆவி*** தாவீதின் வாக்கினால் முன்னர் சொன்ன ***வேத வாக்கியம்*** நிறைவேறவேண்டியதாயிருந்தது'' (அப் 1:16).



- ☐ ''நீங்கள் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய ***சத்திய வச னத்தைக்*** கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குப்பண்ணப்பட்ட ***பரிசுத்த ஆவியால்*** அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள்'' (எபே 1:13).
- ☐ ***பரிசுத்த ஆவியினால்*** நிறைந்திருப்பதினால் வெளிவருபவை ''சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள்.'' அது போலவே ***கிறிஸ்துவின் வசனத்தினால்*** நிறைந்திருப்பதினால் வெளி வருபவை ''சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள்'' (எபே 5:18-20; கொலோ 3:16).
- ☐ ***ஆவியானவரின்*** அனுக்கிரகத்தின் ஒன்பது வெளிப்பாடுகளில் முதல் இரண்டு, ''ஞானத்தைப் போதிக்கும் ***வசனம்***, அறிவை உணர்த்தும் ***வசனம்''*** (1 கொரி 12:7,8).
- ☐ ***பரிசுத்த ஆவியானவர்*** தந்தருளியிருக்கிற வார்த்தைகளைக் கொண்டே ***வேத வாக்கியங்களை*** அப்போஸ்தலர் பிரசங்கித்துப் போதித்தனர் (1 கொரி 2:12,13).
- ☐ ''ஆரோக்கியமான ***வசனங்களின்*** சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள் வாசம்பண்ணும் ***பரிசுத்த ஆவியினாலே*** காத்துக்கொள்'' (2 தீமோ 1:13,14).
- ☐ ***''வேத வாக்கியங்கள்*** எல்லாம் தேவ ***ஆவியினால்*** அருளப்பட்டி ருக்கின்றன'' (2 தீமோ 3:16).
- ☐ கொர்நேலியுவின் வீட்டில் அப்போஸ்தலன் பேதுரு நிறைவேற் றிய ஊழியத்தைக் குறித்து அவர் பின்னர் அறிக்கையிட்டது: ''நான் பேசத் தொடங்கியபோது, ***பரிசுத்த ஆவியானவர்*** ஆரம்பத்தில் நம்மீது இறங்கியதுபோலவே அவர்கள்மீதும் இறங்கினார். யோவான் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்களோ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன ***வார்த்தையை*** அப்பொழுது நினைவுகூர்ந்தேன்'' (அப் 10:44; 11:15,16).
- ☐ தேவ ***வசனமே ஆவியானவரின்*** பட்டயம் (எபே 6:17).

□ தேவனது குரலாயிருந்த திருமுழுக்கினன் யோவான் மூலம் வந்த இறைச்செய்தியைப்பற்றிய தீர்க்கதரிசனம்: ''கர்த்தரின் ***ஆவி*** அதின்மேல் ஊதும்போது, புல் உதிர்ந்து, பூ உதிரும். மக்களே புல் ... நமது தேவனுடைய ***வசனமோ*** என்றென்றும் நிற்கும்'' (ஏசா 40:6-8).

□ ***''வேதத்தையும்*** சேனைகளின் கர்த்தர் தமது ***ஆவியின்*** மூலம் முந்திய தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொல்லியனுப்பின ***வார்த்தைகளையும்*** கேளாதபடித் தங்கள் இருதயத்தை வைர மாக்கினார்கள்'' (சக 7:12).

□ *''**பரிசுத்த ஆவியானவர்*** சொல்லுகிறபடி, இன்று ***தேவனுடைய சத்தத்தைக்*** கேட்பீர்களானால் உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள்'' (எபி 3:7).

□ ''உங்கள் உள்ளத்தில் என் ***ஆவியை*** வைத்து, உங்களை என் ***கட்டளைகளில்*** நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ள வும் அவைகளின்படிச் செய்யவும் பண்ணுவேன்'' (எசேக் 36:27).

□ ''கர்த்தருடைய ***புத்தகத்தில்*** தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடி இல்லாது இராது; அவரது ***வாய்*** இதைச் சொல்லிற்று; அவரது ***ஆவி*** அவைகளைச் சேர்க்கும்'' (ஏசா 34:16).

■

*ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுவோம்,*
*சத்தியத்தைக் கச்சையாய் அரையில் கட்டுவோம்,*
*ஆவிகளின் சேனையோடு போராட்டம் செய்வோம்,*
*அல்லேலூயா பாடியே அவனை வெல்லுவோம்!*

*ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது,*
*ஆத்துமாவை உயிர்ப்பிக்க அருமையானது,*
*ஆதியில் தேவன் தமது வார்த்தையைக் கொண்டே*
*ஆச்சரியமாய் உலகைப் படைத்தமைத்தாரே!*

— மிஷனரி K. பொன்ராஜ் ஐசக்



**21**

# பரிசுத்த ஆவியானவரது உதவிகள்
## Helps of the Holy Spirit

### முகவுரை

- பரிசுத்த ஆவியானவரை இயேசு அறிமுகப்படுத்திய விதம் —
  யோ 14:16 ... *இன்னொரு தேற்றரவாளன்* (= உதவியாளர்)
  கிரேக்கப் பதம்: *Parakletos* = ''உடனுதவ அழைக்கப்பட்டவர்''
  வாசியுங்கள்: யோவான் 14 & 16

***கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் உதவிகள்:***

**1. அவர் நமது தொழுகைக்கு உயிரூட்டுகிறார்.**
He enlivens our WORSHIP of God.

- சடங்காச்சாரமாய் ஆராதிப்பது அவருக்கு விருப்பம் கிடையாது—
  அப் 17:22-25 ... அத்தேனியரிடம் பவுல்
  யோ 4:20-24 ... சமாரியப் பெண்ணிடம் இயேசு

- ஆசரிப்புக் கூடாரத்தில் 3 பகுதிகள் —
  ஷெகினா மகிமை மகா பரிசுத்த உட்பிரகாரத்தில்.
  அப்படியே, உடல், ஆத்துமா, ஆவி.

  வெறும் உடற்பாவனைகளோ, மெய்சிலிர்க்கும் உற்சாகமோ அல்ல,
  உள்ளான மனிதனில் தேவனோடு இடைபாடு.

  நமது ஆவியில் ஆவியானவர் ஒரு விடுதலை தருகிறார் —
  பிலி 3:3 ... *ஆவியினாலே ஆராதனை... இயேசுவுக்குள் ...*

- *ஆவியினால் நிறைந்து தேவனைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி* —
  எபே 5:18-20

- நவநாவுகள் — ஆவியோடு, ஆவியில், துதிப்பது
  அப் 10:46 ... கொர்நேலியுவும் குடும்பமும்

- நமது ஜெபங்களில் ஆவியானவரின் உதவி —
  ரோ 8:26,27...*வாக்குக்கடங்கா பெருமூச்சுடன் வேண்டுதல்*

**2. வசனத்தைப் புரிந்துகொள்ள மனதைத் தெளிவிக்கிறார்.**
He enlightens us to understand God's WORD.

- ஆவியானவரே வேத வாக்கியங்களின் ஆக்கியோன் —
  2 பேது 1:20,21

  அவரே சத்திய ஆவியானவர் —
  யோ 16:13 ... *எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்*

- இயல்பாகப் புரிந்துகொள்ளுதல்
  vs. ஆவியானவரால் தெளிவு பெறுதல் (எபி 9:8)

  1 கொரி 2:9-14...*தேவனுக்குரியவை...கண் காணவில்லை ... ஆவியானவர் வெளிப்படுத்தினார்*

பைபிளைத் திறக்கும்போதெல்லாம் ஆவியானவரது உதவி நாடுங்கள். எனக்கு வேதத்தில் ஆவியானவர் மூலமே பிடிப்பு கிடைத்தது.

**3. ஆன்மீக யுத்தத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.**
He equips us for spiritual WARFARE.

- ஆவி மண்டலத்தில் இரு சக்திகள் —
  தேவன் X சாத்தான்
  ஒளியின் ராஜ்யம் X இருளின் ராஜ்யம்

- யுத்தம்: (அ) உள்ளே போராட்டம்
  (ஆ) வெளியே போராட்டம்

(அ) உள்ளே போராட்டம்:

கலா 5:17 ... *மாம்சத்திற்கு விரோதமாக ஆவி*
ரோ 7:22-24 ... பவுலுக்கு இருந்த பிரச்னை

ஆவியானவர் உதவும் விதம்: கலா 5:16 ...
ஊனியல்பின் இச்சைகளை மேற்கொள்ள
ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.

அவர் ''பரிசுத்த'' ஆவியானவரானதால் நமக்குப் பாவத்தின்மீது வெறுப்பு ஏற்படுத்துகிறார்.



நமது இதயங்களை ஆராய்ந்து, அழுக்குகளை அகற்றுகிறார் —
*''ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்''* (1 பேது 1:2)

(ஆ) வெளியே போராட்டம்:

உலகிலுள்ள தீய சக்திகள் —
யோ 14:17,30 ... *உலகின் அதிபதி*
எபே 6:12 ... *பொல்லாத ஆவிகளின் சேனைகள்*
:17 ... *பட்டயம்* ... தாக்கும் ஒரே படைக்கலன்

மனத்தொய்வுகளை மேற்கொள்ள உதவுகிறார்.

*சத்துரு வெள்ளம்போல் வரும்போது* —
ஏசா 59:19 ... *ஆவியானவர்தாமே கொடியேற்றுவார் ...*

**4. மனக்கவலைகளை மேற்கொள்ள நமக்குதவுகிறார்.**
He enables us to overcome WORRIES.

அவரது பெயரே *''தேற்றரவாளர்''* ( = ஆற்றித் தேற்றுபவர்)

- பரிசுத்த ஆவியானவர் *ஒரு மகிழ்விக்கும் நதி* —
  சங் 46:4 ... *ஒரு நதியுண்டு ... சந்தோஷிப்பிக்கும்*

- இறையரசின் வாழ்வே அதுதான் —
  ரோ 14:17...*சமாதானம்...ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்*
  (புசிப்பதாலும் குடிப்பதாலும் உண்டாகும் சந்தோஷமல்ல.)

- உலகம் தரும் விதமான சந்தோஷமல்ல ...
  பரிசுத்த ஆவியானவர் மூலம் —
  யோ 14:26,27 ... *கிறிஸ்துவின் சமாதானம் ...*

- துன்புறுத்தப்பட்ட சீடர் *ஆவியினாலுண்டாகும் சந்தோஷமடைந்தனர்* —
  அப் 13:50-52

- இயேசு: துயரப்படுவோரைத் தேற்றி ஆனந்தத்தால் நிரப்பவே ஆவியானவர் என்னை அபிஷேகம்பண்ணினார் —
  ஏசா 61:1-3 ...*சிங்காரம் ... ஆனந்த தைலம்*

**5. கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருக்கப் பலப்படுத்துகிறார்.**
He empowers us to be WITNESSES for Christ.

- கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருப்பதில் இரு பரிமாணங்கள் —
  — அப் 1:8 ... *''எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்''*
  (அ) வாழ்க்கையால், (ஆ) வார்த்தையால்

(அ) வாழ்க்கையால் சாட்சி (Through life)

இது *ஆவியின் ''கனி''* மூலம் — கலா 5:22,23

— உறவுகளில் மென்மை, இனிமை ...

— அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், தன்னடக்கம் ஆகியவற்றை வாழ்க்கையில் காட்டுதல்.

(ஆ) வார்த்தையால் சாட்சி (Through lip)

இது *ஆவியின் ''வரங்கள்''* மூலம் (1 கொரி 12:7-10).
அதாவது, ஆவியின் வல்லமை (அப் 1:8)
லூக் 24:47-49 ... *வல்லமையால் தரிப்பிக்கப்பட்டு*
*... எல்லா நாட்டினருக்கும் ...*

- தைரியமாய் நற்செய்தியறிவிப்பு — அப் 4:31
- விடுதலை ஊழியம் — அப் 10:38 / ஏசா 61:1
  (பிசாசின் பிடி, சுகவீனம், பில்லிசூனியம், மதுபானம், வெறிகள்)
- பயமுறுத்தல், துன்புறுத்தல் எதுவும் அசைக்காது (அப் 20:22-24)

**6. திறமையாய் வேலை செய்ய நமக்குச் சக்தி தருகிறார்.**
He energises us to WORK efficiently.

ஆன்மீகச் செயல்பாடுகளுக்கு மட்டுமல்ல,
தொழில் சார்ந்தவற்றிற்கும்

- எ.கா.) பெசலெயேல் — யாத் 31:1-5

ஆவியால் நிறைந்த மருத்துவர் சிறப்பாய்ச் சிகிச்சையளிப்பார்.
ஆவியால் நிறைந்த பொறியியலர் சிறப்பாய்க் கட்டுவார்.
ஆவியால் நிறைந்த ஆசிரியர் சிறப்பாய்க் கற்பிப்பார்.
ஆவியால் நிறைந்த ஓவியர் சிறப்பாய் வரைவார்.
ஆவியால் நிறைந்த மாணவன் சிறப்பாய்ப் படிப்பான்.



- எ.கா.) தானியேலும் குழுவினரும்
  தானி 1:17 / 4:18 ... *ஞானம் ... அறிவு ... சாமர்த்தியம்*

ஆவியானவரின் காரணப் பெயர்கள் (ஏசா 11:2) —
*ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி ...*
*ஆலோசனையையும் அறிவையும் அருளும் ஆவி ...*

வேலைக்குச் செல்லுமுன் தினமும் ஆவியால் நிறையுங்கள்.

**7. ஆரோக்கிய வாழ்வு அனுபவிக்க விடுதலையளிக்கிறார்.**
He emancipates us to enjoy WHOLENESS.

*''ஜீவன் ... பரிபூரண ஜீவன்''* (யோ 10:10)

- ஆரோக்கியம் (அ) உடலில்
  (ஆ) உள்ளில்

(அ) உடலில் ஆரோக்கியம் — ரோ 8:11
*சாவுக்கேதுவான உடல்களை உயிர்ப்பிக்கும் ஆவியானவர்.*
கல்வாரியின் புண்ணியங்களை நமதாக்குகிறார்.

— ஆவியானவரால் *''குணமாக்கும் வரங்கள்''* (1 கொரி 12:9,10)

— நமது உடலே ஆவியானவரின் உறைவிடம் (1 கொரி 6:19,20)
ஆரோக்கியமருளும் அவரது வல்லமை நமக்குள் பாயும்.

(ஆ) உள்ளில் ஆரோக்கியம் — 2 தீமோ 1:7
— *''தெளிந்த புத்தியுள்ள'' ஆவி*

மனதில் பாரமல்ல, பரவசம்!

ஆவியானவரே தேவனது *''தென்றல்''* (யோ 3:8)

நம்மீது வீசி நமக்குப் புத்துணர்வளிக்கிறார்.
மன இறுக்கம் அகலுகிறது.

**முடிவுரை**

இயேசு: *''நான் போகிறது உங்களுக்கு நல்லது ...*
*பரிசுத்த ஆவியானவர் வருவார்''* (யோ 16:7)

எவ்வளவு உண்மை!

# 22

# பரிசுத்த ஆவியானவர்: சுத்திகரிக்கும் அக்கினி

## Holy Spirit: The Fire of Sanctification

### முகவுரை

- *''நமது தேவன் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறார்!''*
  ப.ஏ. — உபா 4:24 ... மோசே சொன்னது
  பு.ஏ. — எபி 12:29 ... எபிரெய நிருப ஆக்கியோன் சொன்னது
- திரித்துவத்தின் மூன்று நபர்களில்,
  பரிசுத்த ஆவியானவரே பெரும்பாலும் அக்கினிக்கு ஒப்புமை —
  - ☐ லூக் 12:49,50 — *பூமியில் அக்கினி*
    (இப்பொழுதே பற்றியெரிய = கல்வாரிக்கும்
    பெந்தெகொஸ்தேக்கும் முன் ஆவியின் ஆசிகள்)
  - ☐ ஏசா 4:3 — *சுட்டெரிப்பின் ஆவி*
  - ☐ தானி 7:9,10— *சிங்காசனத்திலிருந்து அக்கினி நதி*
  - ☐ அப் 2:3,4 — *அக்கினிமயமான நாவுகள்*
  - ☐ ரோ 12:11 — *ஆவியில் அனல்*
  - ☐ 1 தெச 5:19 — *ஆவியை அவித்துப்போடாதிருங்கள்*

அவரது பெயரைப் போலவே, (''**பரிசுத்த**'' ஆவியானவர்),
அவர் பிரதானமாகச் ''**சுத்திகரிக்கும் அக்கினி**'' —

மத் 3:11,12 ... *பதரைச் சுட்டெரிப்பார்*
ஏசா 4:3 ... *அழுக்கைக் கழுவி ...*

பதரைச் சுட்டெரித்து நம்மைச் சுத்திகரிக்கிறார் —
ஏசா 5:24 ... *வைக்கோல் ... செத்தை*

இந்த **ஏசாயா 5ஆம் அத்தியாயம்** ஆறு முறை *''ஐயோ''* என்கிறது;
ஒவ்வொன்றும் ஒரு பாவத்தைக் கண்டிக்கிறது —



**1. தன்னலம்** (ஏசா 5:8)

- ஓசி 10:1 — *தனக்குத்தானே கனி, பயனற்ற இஸ்ரவேல்*
  ஒப்பிடுக: யோசேப்பு, ஆதி 49:22
- லூக் 3:9 — கனியற்ற மரம் அக்கினியில் போடப்படும்!
  அப்படியானால் என்ன செய்யவேண்டும்?
  பதில்: வச 10,11 — ஆடை கொடு, ஆகாரம் கொடு!
- 2 தீமோ 3:1,2 — *கடைசி நாட்களின்* முதல் அடையாளம்
- குடும்ப வாழ்வில் தன்னலம் —
  எபே 5:25-29,1,2

  சபை வாழ்வில் தன்னலம் —
  வரங்கள் ... 1 கொரி 14:12,13
  ஜெபம் ... மத் 6:9-13 ... ''எனது ... எனக்கு'' என்றல்ல.

  சமுதாய வாழ்வில் தன்னலம் —
  யோபு 31:16-23 ... எளியோர் ... திக்கற்றோர்

**2. சிற்றின்பக் களியாட்டுகள்** (ஏசா 5:11-14)

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதற்குப் பதிலாக (வச 11-14)
= அவரது மகிழ்ச்சிக்கு மாற்றுக்கள்

- அமரிக்கையாய் விசுவாச நடை போடுவதற்குப் பதிலாகப்
  பரவச நாட்டம், சடங்காச்சார மயக்கம்
  யாத் 32:1,6,7,11 — *பொற் கன்றுக்குட்டி*
  ஓசி 8:14 — *உண்டாக்கியவரை மறந்து கோவில்கள் கட்டுவது*
- பரிசுத்தமானவற்றை அசட்டைசெய்யும் பாவ இன்பங்கள்
  தானி 5:23-28 ... *அரசன் பெல்ஷாத்சார்*
  1 சாமு 2:12-14,17,22,25 ... ஏலியின் குமாரர்
- செல்வச் செருக்கு
  யோபு 31:24-28 ... தங்கம் என் தஞ்சம் அல்ல.
  ஆலோசனை — கொலோ 3:5-7 ... *தேவ கோபாக்கினை*

**3. மனப்பூர்வமாய், துணிகரமாய்ப் பாவம்** (ஏசா 5:18,19)

- எபி 10:26-31 ... *ஜீவனுள்ள தேவனின் கரங்கள் ... பயங்கரம்*
- நீதி 29:1...*அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும்...சடுதியில் நாசம்*
- 2 கொரி 7:10,11 ... *தேவனுக்கேற்ற துக்கம் + மெய்யான* மனந்திரும்புதல் (தேவனுக்கேற்ற துக்கத்தின் 7 அம்சங்கள்)

**4. உண்மையின்மை** (ஏசா 5:20)

- வெளி 21:8 ... *பொய்யர் அனைவரும் ... அக்கினி*
- நீதி 12:22 ... *பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பு*
- யோ 8:44 ... *பிசாசு ... பொய்க்குப் பிதா*
- மத் 5:33-37 ... இயேசு கண்டிக்கிறார்.

  யாக் 5:12 ... அப்போஸ்தலர் கண்டிக்கின்றனர்.
- ஆதி 18:12-15...சொல்வடிவு பெறாத சிந்தனையும் முக்கியம்.
- அப் 5:4 ... மனிதரிடம் பொய் என்பது ஆவியானவராகிய தேவனிடம் பொய்.

  பொய் என்பது மாய்மாலத்திற்கு நடத்துகிறது.
  மாய்மாலக்காரருக்கு அக்கினி (ஏசா 33:14,15)

**5. அகந்தையும் அகம்பாவமும்** (ஏசா 5:21)

- ஏசா 10:12-17 ... அசீரியாவின் பெருமையை எரித்தொழிக்க தேவன் அக்கினியாகிறார்.

  தேவனால் பயன்படுத்தப்பட்ட அதே பாத்திரம்
  இப்பொழுது பெருமையினால் எரிக்கப்படுகிறது.

- ரோ 11:17-22

  தேவன் சிலரை ஒதுக்கி நம்மை ஆசீர்வதிக்கிறார்.
  மேட்டிமைச் சிந்தை வேண்டாம்.

- ஏசா 47:8,10,14

  உடனடித் தண்டனையில்லாததால் கொழுத்த இதயம் (பிர 8:11)
  அது அக்கினிக்கு இரையாகும்.



**6. அநியாயம்** (ஏசா 5:22,23)

- யோபு 15:34

  *லஞ்சம் வாங்குபவனது வீட்டை அக்கினி அழிக்கும்.*

- 2 பேது 3:7,12,13

  அநியாயம் நிறைந்த இவ்வுலகு அக்கினிக்கு இரையாகும்.

- பாரபட்சம் ஒரு சாபம்.

  யாக் 2 1-4 ... *பொன் மோதிரம் ... கிழிந்த உடை*

- ஏசா 33:14-16

  *நியாயம் செய்பவனுக்குக் கன்மலை, அப்பம், தண்ணீர்.*
  அவன் அக்கினியால் அழிக்கப்படமாட்டான்.

- ஒபதியா 17,18

  யாக்கோபுக்கு லாபானின் அநியாயம்.
  யோசேப்புக்குச் சகோதரரின் அநியாயம்.

**முடிவுரை**

ஏசா 4 — சுத்திகரிக்கும் அக்கினி: வாக்கு (வச 3,4)
ஏசா 5 — பட்சிக்கும் அக்கினி: தண்டனை (வச 24)
ஏசா 6 — சுத்திகரிக்கும் அக்கினி: சுத்திகரிப்பு (வச 5-7)

மனந்திரும்பினால், அக்கினியினால் சுத்திகரிப்பு!
மனதைக் கடினப்படுத்தினால், அக்கினியினால் பட்சிப்பு!

*(1983இல் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் நடத்திய 13ஆம் வருடாந்திர வாலிபர் எழுப்புதல் முகாமில், ''நமது தேவன் பட்சிக்கும் அக்கினியா யிருக்கிறார்'' என்ற கருப்பொருளில், ஆசிரியர் கொடுத்த மூன்று செய்தி களில் ஒன்றுதான் இவ்வத்தியாயம்.)*

**23**

# அன்னிய பாஷை குறித்துத் திருமறை கூறுவது ...

## The Bible on Tongues

**1. இது ஒரு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம்.**

ஏசாயா 28:11, ''பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷை யினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.'' பவுல் அப்போஸ்தலன், அன்னிய பாஷையையும், தீர்க்கதரிசனத்தையும்பற்றிக் கூறும் அத்தியாயத்தில் இதை ஓர் எடுத்துக்காட்டாய்க் குறிப்பிடுகிறார் (1 கொரி 14:21).

**2. இது இயேசு கிறிஸ்துவினால் முன்னறிவிக்கப்பட்டது.**

மாற்கு 16:17, ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங் களாவன: என் நாமத்தினாலே ... நவமான பாஷைகளைப் பேசு வார்கள்.''

**3. இது ஆதிக் கிறிஸ்தவர்களின் வழக்கமான அனுபவம்.**

(அ) பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலொமேயுவும், மத்தேயுவும், அல் பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும், இயேசுவின் தாயாகிய மரியாளும், அவருடைய சகோதரரும், மற்றும் பலரும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டபோது அன்னிய பாஷையில் பேசினார்கள். அவர்களெல்லாரும் ஏறக்குறைய 120 பேராயிருந் தார்கள் (அப் 1:13,14; 2:4).

(ஆ) பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியின் உதவியினால் அன்னிய பாஷையில் பேசினார் (அப் 9:17; 1 கொரி 14:18).



(இ) இத்தாலியா பட்டாளத்து நூற்றுக்கதிபதியாகிய கொர்நேலி யுவும், அவனது இனத்தாரும், அவனது நெருங்கிய நண்பரும், ஒரு சுவிசேஷக் கூட்டத்தில்தானே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கியபோது அன்னிய பாஷையில் பேசினர் (அப் 10:1,24, 44-46).

(ஈ) எபேசுவிலுள்ள 12 சீடர்மேல் பரிசுத்த ஆவி வந்தபோது அவர்கள் அன்னிய பாஷையில் பேசினர் (அப் 19:1,6,7).

**4. இது இன்று நமக்கு ஓர் ஆசீர்வாதமான அனுபவம்.**

(அ) இது துதியையும், தொழுகையையும் மேம்படுத்துகிறது.

120 சீடரும் மேலறையில் அன்னிய பாஷையில் பேசியபோது, ''தேவனுடைய மகத்துவங்களையே'' பேசினார்கள் (அப் 2:11). ''நான் ஆவியோடும் பாடுவேன் ... நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது ... நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய்'' (1 கொரி 14:15-17).

(ஆ) இது ஜெபத்தை ஆழப்படுத்துகிறது.

''அன்னிய பாஷையில் பேசுகிறவன் ... மனிதனிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்'' (1 கொரி 14:2).

''நான் அன்னிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணும் ... நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்'' (1 கொரி 14:14,15).

அன்னிய பாஷையில் ஜெபிக்கும்போது நமது அறிவின் வரம் பையும் கடந்து செல்லுகிறோம்.

(இ) இது நமது சொந்த பக்திவிருத்திக்காய்க் கிடைத்த பெரிய ஈவு.

''அன்னிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; ... உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்.'' (தனிமையில் பேசினார் என்பது சொல்லாமலே விளங்கும்) (1 கொரி 14:4,18).

(ஈ) இது நம்மைப் புத்துணர்வுடன் வைத்துக்கொள்கிறது.

அன்னிய பாஷையைக் குறித்து ஏசாயா 28:11,12இல், ''இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல் (rest), இதுவே ஆறுதல் (refreshing)'' என்று விளக்கம் தருகிறது.

தாவீதின் முன்னடையாள அனுபவமாக இது அப்போஸ்தலர் 2:25,26இல் கூறப்பட்டுள்ளது.

(உ) இது ஊழியத்தில் அற்புதப் பயனுள்ளது.

(i) அன்னிய பாஷையைக் கேட்கும் அவிசுவாசிகளுக்கு இது ஓர் அடையாளம்.

''அன்னிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கின்றன'' (1 கொரி 14:22).

(ii) அர்த்தம் சொல்லக்கூடுமானால் விசுவாசிகளுக்குப் பக்தி விருத்திக்கான ஓர் ஏது.

''அன்னிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாய் விண்ணப்பம்பண்ணக்கடவன் ... சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு ...'' (1 கொரி 14:13,5). கிறிஸ்துவின் உடலாகிய சபையில் எல்லாருக்கும் ஆசீர்வாதமாக அளிக்கப்பட்டிருக்கும் ஆவியின் 9 வகை வெளிப்பாடுகளில் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வியாக்கியானம் பண்ணுதலும் அடங்கியுள்ளன (1 கொரி 12:7-10).

## 5. இதின் துர்ப்பிரயோகம் தவிர்க்கப்படவேண்டும்.

(அ) அன்னிய பாஷையும், அர்த்தம் சொல்லுதலும்

''யாராவது அன்னிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசட்டும்'' (1 கொரி 14:27,28).



(ஆ) அன்னிய பாஷையும் ஒழுங்கும்

''சகோதரரே, தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள். சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படட்டும் ... தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது'' (1 கொரி 14:39,40,33).

(இ) அன்னிய பாஷையும் அன்பும்

''நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்'' (1 கொரி 13:1).

## 6. இது கிறிஸ்து திரும்ப வரும்வரை செயல்படும்.

''தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோகும், அன்னிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோகும். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும்'' (1 கொரி 13:8-10).

கிறிஸ்துவின் வருகையின்போது நாம் நிறைவடைந்து பூரணப்படுகிறோம் —

''அவர் வெளிப்படும்போது ... அவருக்கு ஒப்பாயிருப்போம்''
(1 யோ 3:2).

(''அன்னிய பாஷை'' குறித்த
கூடுதல் விளக்கம் பக்கங்கள் 82-100இல் உண்டு.)

**24**

# அப்போஸ்தலர் நடபடிகளில் ‘‘வல்லமை’’

## “Power” in the Acts of the Apostles

1 : 8 ... வாக்களிக்கப்பட்ட வல்லமை
2 : 8 ... பேசுவதற்கு வல்லமை
3 : 8 ... துதிப்பதற்கு வல்லமை
4 : 8 ... பதில் கொடுக்க வல்லமை
5 : 8 ... அறிந்துகொள்ள வல்லமை
6 : 8 ... அற்புதங்களுக்கு வல்லமை
7 : 8 ... பிரசங்கிக்க வல்லமை
8 : 8 ... ஆனந்திக்க வல்லமை
9 : 8 ... எதிர்ப்புக்கெதிரான வல்லமை
10 : 8 ... கீழ்ப்படிய வல்லமை
11 : 8 ... தரிசனத்திற்கு வல்லமை
12 : 8 ... விடுதலைக்கு வல்லமை
13 : 8 ... வித்தைக்கெதிரான வல்லமை
14 : 8 ... முடியாதவற்றிற்கு வல்லமை
15 : 8 ... விசுவாசத்திற்கு வல்லமை
16 : 8 ... முன்செல்ல வல்லமை
17 : 8 ... கிளர்ச்சிக்கு வல்லமை
18 : 8 ... மனமாறுதலுக்கு வல்லமை
19 : 8 ... புத்திசொல்ல வல்லமை
20 : 8 ... ஐக்கியத்திற்கு வல்லமை



21 : 8 ... சுவிசேஷப்பணிக்கு வல்லமை
22 : 8 ... சாட்சிபகர வல்லமை
23 : 8 ... உயிர்த்தெழுதலுக்கு வல்லமை
24 : 8 ... பழிப்புக்கெதிரான வல்லமை
25 : 8 ... குற்றமின்மைக்கு வல்லமை
26 : 8 ... நம்பிக்கைக்கு வல்லமை
27 : 8 ... பாதுகாப்புக்கு வல்லமை
28 : 8 ... குணமாக்க வல்லமை

நாமும் இவ்விதம் பரிசுத்த ஆவியானவரது வல்லமையில் சார்ந்திருந்தால் அப்போஸ்தல நடபடிகளின் 29ஆம் ஆத்தியாயம் நம்மைப் பற்றியே இருக்கும்!

■

*வல்லமை தேவை, தேவா*
*வல்லமை தாரும், தேவா*
*இன்றே தேவை, தேவா*
*இப்போ தாரும், தேவா*

*பொழிந்திடும் வல்லமை*
*உன்னதத்தின் வல்லமை*
*ஆவியின் வல்லமை*
*அக்கினியின் வல்லமை*

*மாம்சமான யாவர் மீதும்*
*ஆவியை ஊற்றுவேன் என்றீர்*
*மூப்பர் வாலிபர் யாவரும்*
*தீர்க்கதரிசனம் சொல்வாரே*

# 25

# தீர்க்கதரிசன வரம்
## Gift of Prophecy

### முகவுரை

- பரிசுத்த ஆவியானவரின் அதிமுக்கியமான வரங்கள் அல்லது வெளிப்பாடுகளில் ஒன்று தீர்க்கதரிசனம் சொல்லுதல் —

  1 கொரி 14:1 ... *விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரம் ...*

  பவுலடியார் தந்துள்ள வரங்கள் பட்டியல் மூன்று —

| | |
|---|---|
| ரோ 12:6-8 | இம்மூன்று பட்டியல்களிலும் |
| 1 கொரி 12:7-11 | காணப்படும் ஒன்றே ஒன்று |
| எபே 4:13 | தீர்க்கதரிசன வரம்! |

  அதே வேளையில், ஆன்மீக வரங்களில் அதிகம் துர்ப்பிரயோகிக்கப்பட்டுள்ளதும் தீர்க்கதரிசன வரமே —

  எனவேதான் தீர்க்கதரிசன வரம் என்பதை அடுத்தே ‘‘கள்ளத் தீர்க்கதரிசிகள்’’ என அதிகமான இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது!
  (மத் 7:15; மாற் 13:22: 2 பேது 2:1: 1 யோ 4:1)

  தீர்க்கதரிசன வரத்தை ‘‘விரும்புங்கள்’’
  எனத் திருமறை சொல்லும் அதே வேளையில்,
  தீர்க்கதரிசன வரத்தைக் குறித்துக் ‘‘கவனமாயிருங்கள்’’
  என்றும் அது நம்மை எச்சரிக்கிறது!

**தீர்க்கதரிசன வரம் குறித்த திருமறைப் போதனை —**

- அடிப்படையாக, தீர்க்கதரிசி என்பவர் கர்த்தரின் ‘‘வாயானவர்’’ —



யாத் 7:1,2 ... மோசேக்கு ஆரோன் இருந்ததுபோல்

ஆம், தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் பேசுகிறார் —

பூர்வ காலத் தீர்க்கர்கள் — எபி 1:1
பிலேயாம் — எண் 24:2-4 ... அருமையான விளக்கம்
தாவீது — 2 சாமு 23:2
அவர் ஒரு தீர்க்கர் (அப் 2:29,30)
எரேமியா — எரே 15:16,17
வேறெதுவும் அவருக்கு முக்கியமாய் இல்லை.

- ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகட்குப்பின் வரவிருந்தவற்றை முன்னறிவிப்பதைவிடத் தங்கள் தலைமுறையினருக்கு ஏற்ற இறைவார்த்தையைக் கொண்டு வருவதே தீர்க்கதரிசிகளின் பிரதான பணியாயிருந்தது —

  அதாவது, முன்னறிவிப்பைவிட நேருக்குநேர் அறிவிப்பது (forthtelling than foretelling)

  அவர்கள் அழுத்திக் கூறியது அப்பாணியிலேயே —

  எ.கா.) ஆமோஸ் ... கர்த்தரின் நியாயங்கள்
  5:15,24; 6:12

  ஓசியா ... கர்த்தரின் அன்பு, இரக்கம்
  2:19,2023; 11:8

  ஏசாயா ... கர்த்தரின் நீதி
  45:9,24; 61:11

- இத்தீர்க்கதரிசிகள் இறைவார்த்தையை இரு முக்கிய வழிகளில் பெற்றனர் —

  அ) காண்பதின் மூலம்

  எ.கா.) ஏசாயா (ஏசா 1:1)
  எசேக்கியேல் (எசேக் 1:1)
  ஆமோஸ் (ஆமோஸ் 1:1)

ஆ) கேட்பதின் மூலம்
எ.கா.) எரேமியா (எரே 1:9)
ஓசியா (ஓசி 1:1)

■ **பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் சொல்லுதலுக்கும் புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் சொல்லுதலுக்குமுள்ள அடிப்படை வேறுபாடு —**

**அ)** ப.ஏ. — பெரும்பாலும் இஸ்ரவேலருக்குத் தீர்க்கதரிசனம்.
அதாவது, ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு

பு.ஏ. — திருச்சபைக்குத் தீர்க்கதரிசனம்.
அதாவது, பல்வேறு இனங்களுக்கு
(1 பேது 2:9,10)

**ஆ)** ப.ஏ. — தீர்க்கதரிசனம் தனி நபரது ஊழியம் ...
அதாவது, தனிச்சிறப்புள்ள ஒரு சிலரது

பு.ஏ. — அனைத்து விசுவாசிகளின் ஊழியம் ...
மோசேயின் விருப்பம் (எண் 11:17,25,29).
யோவேலின் முன்னுரை (யோவேல் 2:28-32).
இது பெந்தெகொஸ்தே நாளில் துவங்கிற்று.
*''வேலைக்காரர், வேலைக்காரிகளும்''*
தீர்க்கதரிசனம் சொல்வர் எனப் பேதுரு
கூட்டிச் சொன்னார்! (அப் 2:18)
அதாவது, *தேவனது மகத்துவங்களை* (வச 11)

**இ)** ப.ஏ. — கள்ளத் தீர்க்கதரிசனம் சொன்னால் தண்டனை
பெரும்பாலும் தீர்க்கதரிசிக்குத்தான் ...
உபா 18:19,20 ... அவன் கொல்லப்படுவான்.
மக்கள் அதிகம் நிதானிக்கவில்லை;
அமைதியாய்த் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்தனர்.

பு.ஏ. — தான் நம்புவதைக் குறித்த பொறுப்பு
ஒவ்வொரு விசுவாசிக்கும்
தேவனுக்குமுன் உண்டு.

(புதிய ஏற்பாடு பழையதைப் போன்றதல்ல/எரே 31:31,33,34)



தீர்க்கதரிசனங்களை விசுவாசிகள் நிதானிக்கவேண்டும்
1 யோ 4:1
''நான் என்ன செய்வேன்; அப்படியே நம்பிவிட்டேன்'' என
எந்த விசுவாசியும் சொல்லிவிட முடியாது ... 1 யோ 2:26,27

■ **தீர்க்கதரிசன ஊழியத்தில் இரு வகை —**

***அ) தீர்க்கதரிசி எனும் ஊழியம்***

எபே 4:11 ... பொதுவாக, கிறிஸ்துவின் திருவுடலாம்
முழுச்சபைக்கு (எபே 4:13)

எ.கா.) அப் 13:1 ... இவர்களில் ஒருவரும் அந்தியோகியா
ஊரார் அல்ல.
15:32 ... யூதாவும் சீலாவும்

மத் 23:34 ... தீர்க்கர்களும் ஞானிகளும்
*''அனுப்பப்பட்டனர்''*
10:41 ... பயணித்துவரும் தீர்க்கதரிசி

அப் 21:11 ... அகபு

***ஆ) தீர்க்கதரிசன வரம்***

ரோ 12:6 ... *கிருபையின்படி வரங்கள்*
1 கொரி 12:10 ... *ஆவியின் வெளிப்பாடு*
இது பெரும்பாலும் ''உள்ளூர்ச் சபைக்குள்'' வெளிப்படுவது

இவ்விருவகை தீர்க்கதரிசனத்திற்குத் தெளிவானதொரு
வரையறை —

> ''பரிசுத்த ஆவியின் அகத்தூண்டல் மூலம்,
> கிறிஸ்துவின் திருவுடலின் உறுப்பினர் ஒருவர்
> வழியாகப் பிற உறுப்பினர்களைக் கட்டியெழுப்பும்படிக்
> கர்த்தரிடமிருந்து வரும் வார்த்தை.''
>
> — *மைக்கல் கிரீன்*

• உள்ளூர்ச் சபைக்குரியதோ, பொதுவான சபைக்குரியதோ,
அது எந்தத் தீர்க்கதரிசனமாயிருந்தாலும்,
அது சில ***பரிசோதனைகளுக்கு*** உட்படுத்தப்படவேண்டும் —

**1. நிறைவேறுகிறதா எனும் பரிசோதனை**

உபா 18:22 ... *அது நிறைவேறாவிட்டால் ...*
அப் 11:28 ... *அது அப்படியே உண்டாயிற்று*

**2. உபதேசத்திற்கடுத்த பரிசோதனை**

தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டது நிறைவேறிவிட்டது என்பதால் மட்டும் அது மெய்யானது எனச் சொல்லிவிட முடியாது;
நிறைவேறாமல் போவதுதான் திட்டமான பரிசோதனை!
எ.கா.) உபா 13:1-3

சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் திருவசனத்திற்கு ஒத்திருக்க வேண்டும். எழுதப்பட்ட திருவசனமே உறுதிப்படுத்தப்பட்ட உபதேசம் —

1 கொரி 14:37 ... *ஒருவன் தன்னைத் தீர்க்கன் என்றெண்ணினால் ...*
அப் 26:22 ... *தீர்க்கதரிசிகள் சொல்லியவற்றிற்கு மிஞ்சாமல்*

15:15 ... *எருசலேம் ஆலோசனைச் சங்கம் ... ''தீர்க்கர்களின் வார்த்தைகள் ஒத்திருக்கின்றன''*

1 கொரி 4:6 ... *எழுதப்பட்டதற்கு மிஞ்சிச்* செல்லக்கூடாது

அப் 2 ... பேதுருவின் அருளுரை ...
*யோவேலினால் உரைக்கப்பட்டது*
தாவீதையும் யோவேலையும் பேதுரு குறிப்பிட்டார் —
அவரது பிரசங்கத்தைக் கவனித்துப் படியுங்கள் (வச 14-36)

2 தீமோ 1:13,14 ... அப்போஸ்தலர் போதித்த *ஆரோக்கியமான வசனங்களின் சட்டம் ...* நற்பொருள்

1 யோ 2:18-21 ... *அவர்கள் எங்களிடமிருந்து பிரிந்து போனார்கள் ...* சத்தியத்திலிருந்து வழிவிலகல்

2 யோ 10,11 ... ***இந்த** உபதேசத்தைக்* கொண்டுவராதவனை ஏற்காதீர், வாழ்த்தாதீர்

கலா 1:8 ... *வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து பிரசங்கித்தாலும் ...*



இவ்விதம் ஒரு நிகழ்வு ஏற்பட்டால் நாம் திடமாய் நிற்போமா?!

*(உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்* எனும் எனது நூலிலுள்ள 11ஆம் அத்தியாயமாகிய ''உபதேசங்களைச் சோதித்துப் பார்ப்பது எப்படி?'' என்பதை வாசியுங்கள்.)

**3. பக்திவிருத்தியுண்டா எனும் பரிசோதனை**

1 கொரி 14:3 ... விசுவாசிகள் ஊன்றிக் கட்டப்படவேண்டும் ... ஊக்கம் பெறவேண்டும் ... ஆறுதலடைய வேண்டும் — குறிப்பாகப் பிரச்னைகள், இக்கட்டுகளில் தைரியம்
(2 இரா 20:5; ஏசா 37:5,6)

*''புத்திசொல்லித் திடப்படுத்துதல்''* — (அப் 15:30-32)
திருத்தலாம், தகர்க்கக்கூடாது.

அன்பின் ஆவி நிலவவேண்டும் —
வரங்கள் பற்றிய 3 திருவனப் பகுதிகளிலும்
''அன்பு'' மையப்படுத்தப்பட்டிருக்கிறது —

ரோ 12:10; 1 கொரி 13/ எபே 4:15,32

**4. நடக்கை பற்றிய பரிசோதனை**

மத் 7:15-23 ... *கனிகள் ... அறியீர்களா?*
மீகா 3:11 ... பொருளாசை

கள்ளத் தீர்க்கதரிசிகள் மற்றும் துர்வுபதேசக்காரரின் முக்கிய அடையாளம் பொன்னாசை, மண்ணாசை.

யாத் 18:21 ... *உண்மையுள்ளோர் ... பொருளாசையற்றோர்*
2 பேது 2:1,3,15 ... *கள்ளத் தீர்க்கர்கள் ... பொருளாசை ... அநீதியின் கூலி ...*

முன்மாதிரியான எடுத்துக்காட்டுகள் —

- ☐ தானியேல் (தானி 5:17)
- ☐ எலிசா (2 இரா 5:16)
- ☐ பேதுரு (அப் 8:20)

☐ அப்போஸ்தலர் (1 கொரி 4:11; 2 கொரி 6:10)

☐ தீமோத்தேயு (1 தீமோ 6:10)

*பண ஆசை ... நீயோ, தேவ மனிதா ...*

*இலவசமாய்ப் பெற்றீர்; இலவசமாய்க் கொடுப்பீர்!* (மத் 10:7,8)

பணம் திரட்டுவதையே தனது ஊழியத்தில் பிரதானமாய்க் கொண்டுள்ள தீர்க்கன் அல்லது ஊழியனைக் குறித்து எச்சரிக்கை!

■ **தனிப்பட்டவருக்குத் தீர்க்கதரிசனம்**

தங்கள் எதிர்காலம் குறித்து அறிய யாவருமே துடிப்பர்!
நாளிதழ்களில் முதலாவது மக்கள் பார்ப்பது ராசிபலன்தான்!
குறிகாரர் மற்றும் சோதிடருக்கு எப்பொழுதுமே கிராக்கி!
கிறிஸ்தவர்களும் இப்படித்தான்!

***தனி நபர்களுக்குக் கொடுக்கப்படும் தீர்க்கதரிசனத் திற்குப் பரிசோதனைகள்:***

***1) திருமறையின் உபதேசம்***

ஏசா 8:19,20 ... *வேதம் ... சாட்சி ஆகமம் ... வார்த்தை*

***2) ஆவியானவரின் சான்று***

அது வேறே ஆவியானால், அபாய மணி கேட்பது போன்ற சலசலப்பு மனதில் உண்டாகும் (1 யோ 2:26,27)

எ.கா.) மரியாளும் எலிசபெத்தும்

உண்மையான தீர்க்கதரிசனம் கேட்டால் உங்கள் இதயம் *துள்ளும்!*

சொல்லப்படுவதை நேரமெடுத்து, ஜெபத்துடன், நிதானித்துப் பாருங்கள் — 1 தெச 5:17-21

***3) பொதுவான ஏற்பு***

— உடன் விசுவாசிகள் மற்றும் மூத்தோர் மூலம்
— சூழ்நிலைகள் மூலம்
— பொது அறிவின் மூலம்



— அது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறதா (வெளி 19:10)

*''இயேசுவைப் பற்றிய சாட்சியே தீர்க்கதரிசன ஆவி''*

■ **மிஷனரிப்பணிக்கு உதவும் தீர்க்கதரிசனம்** —

அப் 13:4 ... முதல் மிஷனரிக் குழுவினர் தெரிந்தெடுப்பு
16:6,7 ... ஆசியாவிலும் பித்தினியாவிலும் தடை
கலா 2:2 ... *தேவறிவிப்பினால்* எருசலேமுக்கு
அப் 15:28 ... பணிக்களப் பிரச்னைகளுக்குத் தீர்வு
*''பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாய்த் தோன்றியது''*
21:11 ... எருசலேமில் பவுலுக்கு நிகழவிருப்பது ... ஆவியானவர் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது (20:22,23)
11:28,29 ... பஞ்சம் ... நிவாரணம்

(Clifford Hill என்பவரது *"Prophecy: Past & Present"* எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளே இவ்வத்தியாயத்தில் அடங்கியுள்ளன.)

■

செத்த நிலையிலுள்ள சபைகளுக்குத் தீர்க்கதரிசனச் செய்திகள் வருமானால், அன்று எலும்புப் பள்ளத்தாக்கில் தீர்க்கன் எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தபோது நடந்தது இன்றும் நடக்கும் —

*உயிர் பெறுவீர், ஒன்று கூடுவீர்,*
*உலர்ந்த எலும்புகளே!*
*நீங்கள் அறியா ஒருவர் உங்கள்*
*நடுவில் வந்துவிட்டார்!*

**26**

# பகட்டு குறைவான வரங்கள்
## Less spectacular Gifts

- புதிய ஏற்பாட்டிலுள்ள 5 வரங்களின் பட்டியல்களில் நீண்டது, யாவராலும் விரும்பி வாசிக்கப்படுவது —

  1 கொரி 12:8-10

  இந்த 9-வரப்பட்டியல் பகட்டிலா வரங்களுடன் தொடங்குகிறது:
  *''ஞான வசன வரம்''* + *''அறிவு வசன வரம்''*

  அடுத்த நீண்ட பட்டியல்: ரோ 12:6-8

  *கிருபா வரங்கள்* — Charismatic gifts
  இப்பட்டியலிலுள்ள எட்டில் ஏழு பகட்டற்றவை —
  *''தீர்க்கதரிசனம்''* — இது ஒன்றுதான் கவர்ச்சிகரமானது.

- அதிக ஆர்ப்பாட்டமற்ற வரங்களில்
  கொரிந்து விசுவாசிகளுக்கு நாட்டமில்லை —

  எனவேதான் பவுல் பல கேள்விகள் தொடுத்தார்:

  1 கொரி 12:28 ... *உதவிகள் ... ஆளுகைகள் ...*

  தனது 7 கேள்விகளில் இவையிரண்டையும் விட்டுவிட்டார்!
  (வச 29,30)

  அவர் இவ்விதம் கேட்டாரா? —
  ''எல்லாரும் *உதவி* செய்கிறார்களா?!!!''

  அர்த்தம்: அனைவரும் ஒருவருக்கொருவர் ***உதவ*** வேண்டும்;
  மற்றதைவிட இதையே *''நாட''* வேண்டும் (வச 31)

  (எ.கா.) ஸ்தேவான் (1 கொரி 16:15-18) — 4 வசனங்கள்
  (எ.கா.) ரோமர் 16 — 26 உதவிக்காரர், உதவிக்காரிகள்!



*''பெபேயாள்''* துவங்கி (வச 1,2)
இப்பட்டியலில் 10 பெண்டிர்!

(எ.கா.)வில்லியம் கேரியின் சகோதரி 50 ஆண்டுகள் படுக்கை —

அவர்களால் பேசக்கூட முடியாது;
ஆனால் கேரிக்காய் ஜெபித்து அவரை
நீண்ட கடிதங்கள் மூலம் உற்சாகப்படுத்தினார்கள்!

இன்று கேரி போன்ற மிஷனரிகள் நமக்கு இல்லையென்றால்,
கேரியின் சகோதரி போன்ற ''உதவியாளர்'' இல்லாததே காரணம்!

- ***ஊக்குவிப்பு*** எனும் வரம் எவ்வளவாய்த் தேவை!

  ரோ 12:8அ ... *(புத்திசொல்லுதல்* = ஊக்குவித்தல்)

  சிறந்ததோர் எடுத்துக்காட்டு: பர்னபா
  அப் 4:36 ... *''ஆறுதலின் மகன்''*
  = ''ஊக்குவிப்பவன்''

  — அப்போஸ்தலருக்குப் பவுலை அறிமுகம் செய்ததும் அவரை வளர்த்ததும் பர்னபாதான்
  அப் 9:26,27 (எருசலேம்)
  11:23-26 (அந்தியோகியா)

  — ***மாற்குவை*** மீட்டெடுத்ததும் அவரே
  (அப் 15:39 / 2 தீமோ 4:11ஆ)

  பவுல் எழுதியது 13 நிருபங்கள்;
  மாற்கு எழுதியது 1 சுவிசேஷம்;
  பர்னபா ஒரு புத்தகம்கூட எழுதாவிட்டாலும்,
  இந்த 14 புத்தகங்களுக்குப் பின்னணியில் இருந்தார்!

- இன்னொரு கவர்ச்சியற்ற ஆனால் தேவைமிகு வரம்:

  ரோ 12:8இ *''கிருபா வரங்கள்''* (வச 6) —
  *''உற்சாகமாய்* ***இரக்கம்*** *காட்டுதல்''*
  நேசிக்கப்படாதோர், நேசிக்கப்பட முடியாதோர் நடுவிலும்
  புன்னகையுடன் பணியாற்றுவோருக்கு இருக்கும் வரம்!

(எ.கா.) அன்னை தெரசாவும் கருணை இல்லச் சகோதரிகளும்
(Missionaries of Charity)

■ இத்தகைய வரங்கள் பகட்டில்லாதிருக்கலாம் (spectacular); ஆனால் அவையெல்லாம் பரமனளித்தவை (supernatural)!

அவை *''பலமில்லாதவை''* போன்று தோன்றலாம்;
ஆனால் அவைதான் மற்றவைகளைவிட
*''மதிக்கப்படவேண்டியவை''* (1 கொரி 12:22-24)

உயரே இருக்கும் *''தலை''*கூட
கீழே இருக்கும் *''பாதங்களை''* அசட்டை செய்யக்கூடாது.

■ கவர்ச்சிக் குறைவான இன்னும் சில வரங்கள் —

☐ மணமாகாது தனித்திருத்தல் (1 கொரி 7:7)
☐ விருந்தோம்பல் (1 பேது 4:9,10)
☐ மன்றாடி ஜெபித்தல்: எரேமியா (எரே 9:1) போலவோ,
பவுல் (ரோ 9:1-3; 10:1) போலவோ,
இரவும் பகலும் புலம்புவது அரிது.
அப்படியே, ரீஸ் ஹவல்ஸ் (1879-1950),
ஜான் ஹைடு (1865-1912).
☐ எழுதுதல் — இவ்வரம் இல்லையேல் படியாத பேதுரு,
யோவான் போன்றோர் எப்படி எழுத முடியும்?
(அப் 4:13)

■ திருமறையை எழுதிய தீர்க்கரில் பலர் ***அற்புதங்களே*** செய்யவில்லை— (உ-ம்) ஏசாயா, எரேமியா, யோவேல், ஆமோஸ்

இயேசுவைப் பொருத்தவரை, தீர்க்கர்களிலெல்லாம் பெரியவர்
திருமுழுக்கினன் யோவான்தான் (மத் 11:11அ)

— அவர் அற்புத ஊழியனான *எலியாவின்*
*''ஆவியும் பலமும்'' கொண்டிருந்தார்* (லூக் 1:16,17)

— ஆனாலும் அவர் *அற்புதம் ஒன்றும் செய்யவில்லை*
(யோ 10:41)

■ திருச்சபைச் சரித்திரத்திலும் உயர்ந்து நிற்கும் தேவ மனிதர் பலர் பிரமிக்கத்தக்க அற்புதம் எதுவும் செய்யவில்லை:



ஜார்ஜ் முல்லர் (1805-1898)
— ஆயிரக்கணக்கான அனாதைகளைப் பராமரிக்கும் விசுவாசம்

ஹட்சன் டெய்லர் (1832-1905)
— சீனாவை ஊடுருவும் விசுவாசம்

அதோனிராம் ஜட்சன் (1788-1850)
— பர்மாவில் 6 ஆண்டுகள் கனியேதுமில்லை.
''ஊழியம் எப்படி?'' என்று அவரிடம் கேட்கப்பட்டது;
''ஒளிமயமான எதிர்காலம் திருவாக்குகளால்
தெரிகிறது'' என்றார்!
"The prospects are as bright as the Promises of God!"

இப்படி எத்தனையோ மிஷனரிகளுக்கு இவ்விசுவாச வரம் இருந்தது — எனவேதான் இருட்டுக்குள்ளும் இக்கட்டுக்குள்ளும் துணிந்து சென்றனர்!

■ பகட்டற்ற இன்னொரு வரம் —

*''ஆளுகை''* (1 கொரி 12:28) = தலைமைத்துவம்

இந்த வரத்தை நாம் ஒப்புக்கொண்டாலும்,
உயர்மட்டத் தலைமைத்துவத்தையே நினைக்கிறோம் —
(எ.கா.) எத்திரோ & மோசே (யாத் 18:21,25)

1000, 100, 50, 10 பேருக்குத் தலைவர்கள் —
10 பேருக்குத் தலைவராயிருப்பவர்களை நினைக்கிறோமா?

## முடிவுரை

அனைத்து வரங்களையும் சமமாக மதித்தால்தான்,
திருச்சபையின் அங்கத்தினர் ''ஒவ்வொருவரும்''
செயலாற்றுவதைக் காண முடியும் —

இல்லையேல்,
பெரும்பாலான திருச்சபையினர் வேலை இல்லாதோராக,
அல்லது வேலை குறைவானோராகவே, இருப்பர்!

**27**

# வரங்களை வெளிப்படுத்துவதில் சகச்சார்பு

## Interdependence in the Operation of Gifts

- ''தற்சார்பு (independence) அல்ல, *சகச்சார்பு* (interdependence)''
  — இதுவே இறையரசின் கோட்பாடு.

''எல்லா'' வரங்களும் பெற்றவர் எவருமிலர்;
இல்லையேல் ''உடல்'' எனும் ஒப்புமை பொருந்தாது.

9 வரங்களைப் பட்டியலிட்டவுடன்,
*''உடல்''* எப்படிச் செயல்படவேண்டுமெனப்
பவுல் விளக்குகிறார் —

1 கொரி 12:11 ... வரங்கள் பகிரப்படுவது *''தனி நபருக்கு''*
:12 ... செயல்படுவதோ *''கூட்டாக''*

எவ்வளவு விரிவான விளக்கம் பாருங்கள்: வச 12-27— *''உடல்''* —
16 வசனங்களில் 17 முறை!

- பிறரின்றி வாழுமளவிற்கு எவரும்
  போதுமான வரங்கள் பெற்றவரல்ல,
  போதுமான ஞானம் உள்ளவரல்ல,
  போதுமான பலம் நிறைந்தவரல்ல!

*''வேறொருவனுக்கு ... வேறொருவனுக்கு ...''* (1 கொரி 12:7-10)
... 8 முறை

சவால்நிறை கேள்விகளையும் கூற்றுக்களையும் பாருங்கள் —

☐ *''உடலானது ஒரே உறுப்பு **அல்ல,** அநேக உறுப்புகள்''* (1 கொரி 12:14)

☐ *''அவையெல்லாம் ஒரே உறுப்பானால், உடல் எங்கே?''* (வச 19)



தூயாவியானவர் எல்லா வரங்களையும் ஒரே நபர்மீது ***குவிக்காமல்,*** அவற்றைப் பகிர்ந்தளிக்கிறார் — 1 கொரி 12:11

ஒரு நபருக்கு மற்றவர்களைவிடக் கூடுதல் வரங்களிருந்தாலும் பெருமையடித்துக்கொள்ள இடமேயில்லை —

வரங்கள் அருளப்படுவது ***''கிருபையினாலேயே''*** —
ரோ 12:6 ... *கிருபையின்படியே ...*
எபே 4:7 ... *கிருபை ...*
1 பேது 4:10 ... *கிருபையுள்ள ...*
(இன்னொரு மொழியாக்கம்: *அருட்கொடைகள்)*

- ***குழுப்பணிக்கு*** முக்கிய காரணம் கிருபாவரங்களே —

இதோ சில எடுத்துக்காட்டுகள்:

☐ மோசேயும் ஆரோனும்

யாத் 4:14-16 ... மோசேக்கு வாயாக ஆரோன்!
மோசேயின் கோல்: யாத் 4:1-4,17 (தேவனுக்குமுன்)
ஆரோனின் கோல்: யாத் 7:8-12 (பார்வோனுக்குமுன்)
மோசேயின் பரந்த மனதுதான் என்னே!

☐ திருச்சபைச் சரித்திரத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு:

வில்லியம் பூத்: முக்கியமான மாநாடு ஒன்றில் பிரசங்கிக்கச்
செல்ல முடியாதபோது,
அவர் அனுப்பிய தந்தி: ''மற்றவர்கள்!''

அடுத்த வரிசையினரைப் பக்குவப்படுத்திப் பயன்படுத்துவது ''வரம் பெற்ற'' உயர்மட்டத் தலைவர்களுக்குக் கடினம்தான் —

*''கால்களைப்'' பார்த்துத் ''தலை''* ... (1 கொரி 12:21)

அதாவது, சபையினர், குழுவினர் அனைவரும் பயிற்றுவிக்கப் பட்டுத் திருப்பணியில் ஈடுபட மேய்ப்பர்களும் தலைவர்களும் முடிந்ததையெல்லாம் செய்யவேண்டும் —

தனி நபருக்கு ... *வரத்தை அனல் மூட்டு* (2 தீமோ 1:6)
சபையினருக்கு ... *வரத்தைக் கொடுங்கள்* (ரோ 1:10)

இல்லையேல், 1 சாமு 13:22 —
படைக்கலன் இல்லாப் படை வீரர்!
இன்றைய இந்நிலைக்காய், தெபொராளுடன் சேர்ந்து,
நாம் புலம்பவேண்டும் — நியா 5:8ஆ

□ இன்னொரு நேர்த்தியான எடுத்துக்காட்டு:

பேதுரு**வும்** யோவா**னும்**: ***''எங்களை*** *நோக்கிப்பார்!''* (அப் 3:4)
*''பேதுரு**வும்** யோவா**னும்**''* (வச 1,3,11; 4:13)
*''வெளியரங்கமான'' அற்புதத்தின்* இரகசியம் (4:16)

***குழு*** ஊழியத்தில்தான் ''எதிர்பாராதவை'' நடக்கும்:
— 12 பேரை அனுப்புகையில் பிசாசுமீது வல்லமை (மத் 10:1)
— 70 பேரை அனுப்புகையில் குணமளிக்கும் வல்லமை மட்டும் (லூக் 10:1,9)
எனவேதான், *''பிசாசுகளும் கீழ்ப்படிகின்றன''*
எனும் ஆச்சரியம் (வச 17)
நியமனப்படி, வல்லமை பின்னர்தான்
கொடுக்கப்பட்டது (வச 19)
— *சாத்தான் ''விழுந்தான்''* (வச 18) ... ***குழுப்*** பணியின் சக்தி.
குழு ''மனப்பான்மை'' — *70 பேர் ஆரவாரமாய் ...* (வச 17)

□ இன்னோர் எடுத்துக்காட்டு —

லீஸ்திரா நகரில் பவுலும் பர்னபாவும் (அப் 14).
சப்பாணி குணமடைந்தான்! என்னே பரபரப்பு!

(வச 12) பர்னபா — யூப்பித்தர் — கிரேக்கில்
தலைமைத் தெய்வம் — அமைப்பாளர்!
பவுல் — மெர்க்குரி — கிரேக்கில்
தூதறிவிப்புத் தெய்வம் — செய்தியாளர்!
போட்டியில்லை, அனுசரணை! கூட்டுறவில் கூட்டுழைப்பு!

■ தலைவர்களுக்கு ஒரு வார்த்தை:

திருத்துகிறேன் என்று எவரையும் தீர்த்துவிடாதீர்.
பாதகச் சிந்தை மக்களைப் பாழாக்கிவிடும்.



(எ.கா.) பவுலின் திருத்தங்கள் ஊக்குவிப்போடு
இணைந்திருந்தன —
1 கொரி 14:26ஆ,40 ... ***எதையும்*** *பக்திவிருத்திக்காய் ...*
:31 ... ***எல்லாரும்*** கற்கணும் ... தேறணும் ...
:39 ... பாஷை பேசுதலைத் தடுக்காதிருங்கள்
பேசிக்கொண்டே ... பேசாமலே ... இரண்டும் வேண்டாம்!

(எனது திருத்துதல் உபதேசங்களில் நான் இதை மறப்பதில்லை.)

■ நமது குழுவுக்குள் மட்டுமல்ல, நம்மிடமில்லா வரங்களை அப்பியாசிக்கும் பிற குழுக்களோடும் சகச்சார்பு இருக்க வேண்டும் —

(எ.கா.) திருச்சங்கங்களோடு திருச்சபைகள்;
திருச்சபைகளோடு திருச்சங்கங்கள்.

திருச்சங்கங்கள் (Missions): பாறை வெட்டியெடுப்போர்
திருச்சபைகள் (Churches): சிற்பம் செதுக்குவோர்

இயேசுவானவர் சொல்லியது —
ஒருவன் *விதைக்கிறான்,* இன்னொருவன் *அறுக்கிறான்;*
இருவரும் *''சேர்ந்து'' மகிழுகின்றனர்* (யோ 4:36)
பிறரது உழைப்பைப் பாராட்டி மகிழ்தல்!
இதுதான் ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்பது! (unity in diversity)

■ ஒன்றுக்கொன்று சார்ந்துள்ள வரங்களின் தன்மையும் நமக்குச் சகச்சார்பைப் போதிக்கின்றன —

1 கொரி 12:7-10,28; ரோ 12:8
*ஞானம் & அறிவு*
*குணமாக்குதல் & அற்புதங்கள்*
*நவநாவுகள் & அர்த்தம் சொல்லுதல்*
*அப்போஸ்தலர் & தீர்க்கர்*
*மேய்ப்பர் & போதகர்*
*ஆளுகைகள் & உதவிகள்*
*தலைமைத்துவம் & இரக்கம்*

கீழ்க்கண்டவற்றை நாம் செய்யத் தவறிவிட்டோம் —

☐ விசுவாசிகளைப் பயிற்றுவித்தல்
☐ பிறரிடமிருந்து கற்றறிதல்
☐ குழுக்களாய்ச் செயல்படுதல்

இதனால், ஒரு நபரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர 1000 கிறிஸ்தவர் மற்றும் 6 மேய்ப்பர்களுக்கு ஓராண்டு பிடிக்கிறது!

(Campus Crusade for Christ தந்த தகவல்)
என்னே பரிதாபம்!

- நற்செய்தியறிவிப்புப் பேராணை:

மாற் 16:16 ... *விசுவாசிக்கிறவன் ...*
:17,18 ... *அவர்களால் ... அவர்கள் ... அவர்கள் ...*
:20 ... *அவர்கள் ... அவர்களால் ... ஆமென்!*

- சார்லஸ் வெஸ்லியின் (1707-1788) ஒரு பாடல்:

*தேவா, நகர்த்திடும் எங்களை, நடத்திடும்;*
*கிருபா வரங்களைப் பகிர்ந்தளித்திடும்;*
*உம் சித்தப்படியே எங்கும் வைத்திடும்,*
*எங்கள் பணி முடித்திட உணர்த்திடும்;*
*எங்கள் நிலை தவறாது பிடித்திடும்;*
*ஒருவருக்கொருவர் துணையாய் நிறுத்திடும்;*
*பெற்ற கிருபை வீணாகாது காத்திடும்;*
*சிம்மாசனச் சிற்பியே, முடியச் செதுக்கிடும்!*



# 28

# பரிசுத்த ஆவியானவர் எப்போது துக்கப்படுகிறார்?

## When is the Holy Spirit grieved?

1. நாம் நமது உடலைப் பாவத்திற்குக் கொடுக்கும்போது ...
ஏனெனில், அவர் பரிசுத்தத்தின் ஆவியானவர்!
(1 கொரி 3:16,17; 6:19,20; சங் 51:11; ரோ 1:4)

2. நாம் உலகத்தோடு நெருங்கிய நட்பு கொள்ளும்போது ...
ஏனெனில், அவர் வைராக்கிய வாஞ்சையின் ஆவியானவர்!
(யாக் 4:4,5)

3. நாம் அவிசுவாசத்திற்கு இடங்கொடுக்கும்போது ...
ஏனெனில், அவர் விசுவாசத்தின் ஆவியானவர்!
(2 கொரி 4:13; ரோ 15:13)

4. நாம் பிறரை நேசிக்கத் தவறும்போது ...
ஏனெனில், அவர் அன்பின் ஆவியானவர்!
(எபே 4:2,3,26-32; கலா 5:22; ரோ 5:5; 15:30)

5. நாம் ஜெபத்தில் தன்னலமாயிருக்கும்போது ...
ஏனெனில், அவர் மன்றாட்டின் ஆவியானவர்!
(ரோ 8:26,27)

6. நாம் வேத வசனங்களுக்குக் கீழ்ப்படியாதிருக்கும்போது ...
ஏனெனில், அவர் சத்திய ஆவியானவர்!
(யோ 16:13; 1 யோ 5:6)

7. நாம் வேதத்தை நமது விருப்பம்போல் வியாக்கியானப்படுத்தும்போது ...
ஏனெனில், அவர் போதிக்கிற ஆவியானவர்!
(1 கொரி 2:10-14)

8. நாம் நமது சொந்த புத்தியின்மீது சாரும்போது ...
ஏனெனில், அவர் ஞானத்தின் ஆவியானவர்!
(ஏசா 11:2; 1 கொரி 12:8)

9. நாம் தேவ நடத்துதலை நாடாதிருக்கும்போது ...
ஏனெனில், அவர் ஆலோசனையின் ஆவியானவர்!
(ஏசா 11:2; ரோ 8:14)

10. நாம் எழுதப்பட்ட/சொல்லப்பட்ட தீர்க்தரிசனங்களை அற்பமாய் எண்ணும்போது ...
ஏனெனில், அவர் தீர்க்கதரிசன ஆவியானவர்!
(2 பேது 1:19-21; 1 தெச 5:19-22; வெளி 2:29)

11. நாம் திரும்ப நியாயப்பிரமாணத்திற்குப் போய்விடும்போது ...
ஏனெனில், அவர் புது உடன்படிக்கையின் ஆவியானவர்!
(2 கொரி 3:1-18)

12. நாம் நமது சொந்த பலத்தில் சாரும்போது ...
ஏனெனில், அவர் வல்லமையின் ஆவியானவர்!
(சக 4:6; லூக் 24:49; 1 கொரி 2:3,4)

13. நாம் கிறிஸ்துவுக்குச் சாட்சிபகரத் தவறும்போது ...
ஏனெனில், அவர் கிறிஸ்துவின் ஆவியானவர்!
(1 பேது 1:10-12; வெளி 1:9,10)

14. நாம் பிதாவானவரின் இரக்கங்களை மறக்கும்போது ...
ஏனெனில், அவர் பிதாவின் ஆவியானவர் !
(ஏசா 63:8-10; யோ 14:16)

15. நாம் பாடுகளின் வேளையில் முறுமுறுக்கும்போது ...
ஏனெனில், அவர் மகிமையின் ஆவியானவர் !
(1 பேது 4:12-16)

நாம் பரிசுத்த ஆவியானவரை *''எதிர்த்துக்கொண்டே''* இருந்தால்,
நாம் அவரைத் *''துக்கப்படுத்தி''* விடுவோம்;
நாம் அவரைத் *''துக்கப்படுத்திக்கொண்டே''* இருந்தால்,
அவரை *''அவித்து''* விடுவோம்.
(அப் 7:51; சங் 95:10; 1 தெச 5:19)



# 29

# திருச்சபை எவ்விதம் ஆவியானவரைப் புண்படுத்துகிறது?

## How the Church hurts the Holy Spirit

### முகவுரை

மனிதனோடு பூரண உறவு கொள்ளுவதே தேவனது நித்திய திட்டம்.
எனவேதான் மனிதனைத் தமது சாயலாகவே படைத்தார்.
இந்த ''உறவுக்கு'' மறுபெயர் கல்யாணம்.

திருமறை முழுவதுமே ஒரு கல்யாண நாடகம் —
ப.ஏ. — முகவுரை—கல்யாணம் வாக்குப்பண்ணப்பட்டது.
சுவிசேஷங்கள் — அங்கம் I — மணமகன் முன்நிறுத்தப்படுகிறார்.

நிருபங்கள்—அங்கம் II — மணமகள் ஆயத்தப்படுகிறாள்.
வெளிப்படுத்தல் — முடிவுரை — கல்யாணம் நடக்கிறது.

''ஆபிரகாம் — ஈசாக்கு — வேலைக்காரன் — ரெபெக்காள்'' — நிழல்.
இச்சரிதையில் முக்கிய பங்கு வகிப்பது—''வேலைக்காரன்'' — பரிசுத்த ஆவியானவர்

- இச்சரிதையில் ஆவியானவரின் பங்கு —
''சிருஷ்டிப்பு முதல் சிங்காசனம் வரை''
(யோபு 33:4/ஆதி 2:7)...முதல்...(வெளி 3:21,22) வரை.
இந்தப் பயணத்தில் அடிக்கடி ஆவியானவரைப் புண்படுத்துகிறோம்.
- ஆவியானவரின் மென்மையான சுபாவம் —
ஆதி 1:2 ... கூட்டின்மீது அசைவாடும் பறவை போல.
சங் 23:5 ... *எண்ணெய்* — மெதுவாய் இறங்கும்.
மத் 3:16 ... *புறா* — பறவைகளிலெல்லாம் மென்மை

காற்று, நெருப்பு போன்றவையெல்லாம் குறிப்பிடுவது
அவரது ***வல்லமையை*** — சுபாவத்தை அல்ல —
மென்மையாய் இடைபடுவதே அவரது ***சுபாவம்*** (ஆதி 6:3).
அவரது சுபாவமே அவரது ''கனியாய்'' வெளிப்படுகிறது
(கலா 5:22,23)

அதைத் திருச்சபை சாதகமாக்கிக்கொண்டு
திரும்பத் திரும்ப ஆவியானவரைப் புண்படுத்துகிறது.

**ஆவியானவரைச் சபை புண்படுத்தும் விதங்கள் —**

**1. ஆவியானவரை அசட்டைபண்ணுதல்** (Rejecting)

☐ 1 தெச 4:1-8
*''தேவனுக்குப் பிரியமாய்''* (வச 1)
பரிசுத்தத்திற்கான அழைப்பையும் கட்டளையையும்
அவமதித்தல் ... *''பரிசுத்தம் ... தேவ சித்தம்''* (வச 3)
*''பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்''* (வச 7)

பரிசுத்தத்தை ***இதய பூர்வமாய்*** வாஞ்சிக்கிறோமா?

☐ ஆவியானவரின் பெயரே — ''பரிசுத்த'' ஆவியானவர்.

ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் முதலாக வருவது —
லூக் 1:35 ... *''பரிசுத்த ஆவி''* மூலம் *''பரிசுத்தமுள்ளது''*

மக்களுக்கு ஆவியானவர் முதலாவது
அறிமுகப்படுத்தப்பட்டது —
மத் 3:11,12 ... *''பிரித்தெடுப்பு ... சுட்டெரிப்பு''*

ஆவியானவரால் *பரிசுத்தமாக்கப்படுவதிலேயே*
*தெரிந்தெடுப்பு* 1 பேது 1:2

☐ நாம் ஆவியால் நிறைந்திருந்தாலும், பரிசுத்தத்தைத் தீவிரமாய்
வாஞ்சியாவிடில், அவரை அசட்டைபண்ணுகிறோம்,
வேண்டாம் என்கிறோம்.

நீங்கள் பரிசுத்தத்தை ***''வாஞ்சிக்கிறீர்களா?''*** (மல் 2:11)



**2. ஆவியானவரின் ஆலயத்தைக் கறைப்படுத்துதல்** (Defiling)

☐ 1 கொரி 6:17-20... *உங்கள் உடல் ... ஆவியானவரின் ஆலயம்*
3:16,17 ... *தேவனுடைய ஆலயம் ... பரிசுத்தம்*

தூயாவியானவர் நமக்குள் தங்கியிருப்பதால்,
*கர்த்தரோடு ''ஒரே ஆவியாய்'' இசைந்திருக்கிறோம்.*

பாலியல் பாவங்கள் ஆவியானவர் தங்குமிடத்தையே அசுசிப்
படுத்துவதால் இந்த இசைவுக்குப் பாதகம் ஏற்படுத்துகிறது.

☐ பரிசுத்தமாகுதலைக் குறித்த பகுதியில்
முதலாவது சொல்லப்பட்டிருக்கும் கொடிய பாவம் —
1 தெச 4:3-6 ... *வேசி மார்க்கம்*

☐ தாவீதின் கதறல் (சங் 51:11) ... *பரிசுத்த ஆவியை*
*எடுக்காதிரும்*

☐ *''ஆவியின் கனிக்கு''* எதிரான *''ஊனியல்புச் செயல்கள்''*
கலா 5:17, 19-21 ***(முதல்*** நான்கு)

பாருங்கள்: வெளி 2:21 ... *வேசி மார்க்கம் ...*
*மனந்திரும்பத் தவணை*

மனந்திரும்பக் கடவுள் கொடுத்த ''நேரத்தை''
அசட்டை செய்கிறீர்களா?

மனந்திரும்ப ''மனது'' உண்டா?

விடுதலை நிச்சயம்! பிறந்ததே அப்படியென்று எண்ணாதீர்.

ஆவியானவரது ***அபிஷேகத்தால்*** *''நுகம்''* முறியும்.

**3. ஆவியானவருக்குக் கோபமூட்டுதல்** (Provoking)

☐ யாக் 4:4,5 ... ஆவியானவரின் வைராக்கிய வாஞ்சை
*''உலக சிநேகம்''* — ஆன்மீக விபசாரம்

பரலோக மணவாளனைத் தவிர எவரும் எதுவும்
மணவாட்டியைக் கவர ஆவியானவர் சகியார்!

— இப்பாவத்தைத் தேவன் இஸ்ரவேலில் கண்டித்தார் (எரே 3:20)
— தமது மணவாட்டி தனித்திருக்கவே விரும்புகிறார் (மீகா 7:14)
— சங்கீதப் புத்தகத்தின் துவக்க வசனங்கள்! (சங் 1:1)

□ சங் 45:10-12 ... *உன் ஜனம் ... தகப்பன் வீடு ... மறந்துவிடு*
மணமகள்மீது மணமகன் பிரியமாயிருக்க நிபந்தனை!
உலக சிநேகத்தை விட்டு அவரையே *''பணிந்து''* வாழும் போது, உலகத்தாரும் பொருளாதார ஆசிகளும் நம்மை *''நாடி வரும்.''* நாம் உலகை வெல்லுவோம்!

□ சிற்றின்பங்களுக்கு மாற்றாக ஆவியின் நிறைவு —
எபே 5:18 ... *மதுபான வெறி ... ஆவியினால் நிறைந்து ...*

□ எரே 2:2 ... *இளவயதின் பக்தி ... நேசம்* —
உங்களது *''ஆதி அன்பை''* இழந்துவிட்டீர்களா?
சபைக்கெதிராக ஆவியானவரின் முதல் குற்றச்சாட்டு —
வெளி 2:4-7 ... *ஆதி அன்பு ... உன் மீது குறைவு*
அன்பில்லையேல் *''சபிக்கப்பட்டவன்!''* (1 கொரி 16:22)

## 4. ஆவியானவரைத் துக்கப்படுத்துதல் (Grieving)

□ எபே 4:25-32

சகவுறவுகளில் சச்சரவுகள் —

| | |
|---|---|
| 1. பொய் (வச 25) | 5. பக்திவிருத்தியற்ற பேச்சு (வச 29) |
| 2. கோபம் (வச 26,27) | 6. கசப்பு (வச 31) |
| 3. திருட்டு (வச 28) | 7. புறங்கூறுதல் (வச 31) |
| 4. உதவாதிருத்தல் (வச 28) | 8. மன்னியாமை (வச 32) |

□ சங் 133:1,2 ... *சகோதரர் ஒருமித்து ... நன்மை ... இன்பம்*
கிறிஸ்துவின் ***தலையிலிருந்து*** அவரது ***உடலின் மீது***
இறங்கிவரும் ***ஆவியானவரின்*** அழகான சித்திரம்!

ஆவியானவரை ஆனந்தப்படுத்த ஆசிக்கிறீர்களா?
அல்லது,
ஆவியானவரது ஐக்கியத்தின் நோக்கமே மறந்துவிட்டதா?
பிலி 2:1-3 ... *ஆவியின் ஐக்கியம் ... ஏக சிந்தை ... அன்பு*



## 5. ஆவியானவரை அவித்துப்போடுதல் (Quenching)

□ 1 தெச 5:16-22

தினசரித் தியான வாழ்வில் முனைப்பின்மையும்
விழிப்பாயிருக்கத் தவறுதலும்
ஆவியானவரைத் துக்கப்படுத்தும் —

*1. சந்தோஷம்* (வச 16) — தேவனது மன்னிப்பு, மீட்பு, **கிருபையைத்** தினமும் நினைவுகூருதல்.
*''இது கர்த்தர் உண்டுபண்ணின நாள் ... மகிழ்ந்து ...''*

*2. ஜெபம்* (வச 17) — ஜெபப் பழக்கங்கள் —
அமைதி வேளை — அவசர ஜெபம்

*3. ஸ்தோத்திரம்* (வச 18) — தேவன் தந்துள்ளவற்றில் திருப்தி —
முறுமுறுப்பின்மை — பேராசை —
ஆசிகளை எண்ணிப்பார்க்கத் தவறுதல்

*4. தீர்க்கதரிசனம்* (வச 20,21) — எழுதப்பட்ட வார்த்தை &
சொல்லப்படும் செய்திகள்
தியானம் — ஆவியானவர் மூலம்
தேவ மனிதரின் எச்சரிப்புகள் —

ஆவியானவருக்குக் கீழ்ப்படியாமை
(அப் 7:51,53/அப் 5:32)

*5. சோதனைகள்* (வச 22) — கேள்விக்குரியதை அகற்றுதல் —
மடியில் நெருப்பு.

இவற்றில் தவறினால் ஆவியானவரின் அழகொளியை
இழப்போம்; ஆன்மீகக் கூர்மை மழுங்கிப்போகும்.

உங்கள் பலிபீடத்தில் ***நெருப்பு*** அணைந்துவிட்டதோ?
(லேவி 6:12,13)
மங்கியெரியும் திரியைத் ***தீண்டும்*** ஆண்டவரிடம் திரும்புங்கள்.

**6. ஆவியானவரை நிந்தித்தல்** (Insulting)

☐ எபி 10:26-29

முழுமையான பின்வாங்கல் — துணிந்து பாவம் —
காரணம்: நெருக்கங்கள், பிரச்னைகளினால் உற்சாகமிழப்பு,
மனத்தொய்வு.
(பாருங்கள்: வச 32,33,35,36)

பின்வாங்குவதற்குப் பிரச்னைகள் சாக்குப்போக்காகாது;
ஏனெனில் எச்சூழலுக்கும் ***போதுமான கிருபை*** தருகிறாரே —
*''கிருபையின் ஆவி''* (வச 29)

நமக்குள் இருக்கும் அவரது ஆவியானவர்: *''தேற்றுகிறவர்''*

தேவனோடு கோபமா? (வச 31 — *பயங்கரம்!)*
மனந்திரும்புங்கள்;
பிரச்னைகளைவிடத் தண்டனை கொடூரம் (வச 29)

## முடிவுரை

☐ வெளி 2:7,11,17,29
3:6,13,22 | *''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுவதைக் காதுள்ளவன் கேட்கட்டும்!''*

☐ சங் 139:7
:23,24 | *''உமது ஆவிக்கு மறைவாக எங்கே ஓடுவேன்?''*
*தேவனே, என்னை ஆராய்ந்து ''பாரும்!''*

☐ எபி 3:7,8 | *''**ஆவியானவர்** சொல்லுகிறார் ... இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்!''*

*(1984ஆம் ஆண்டு ரிவைவோ '84 என்ற பெயரில் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் பெண்களுக்கென்று தஞ்சாவூரில் நடத்திய 3-நாள் எழுப்புதல் முகாமில் ஆசிரியர் கொடுத்த மூன்று செய்திகளில் ஒன்றுதான் இவ்வத்தியாயம். இன்னொரு செய்தி 32ஆம் அத்தியாயத்தில் உண்டு.)*



**30**

# ஆவியானவரும் ஆதிநிலையடைதலும்

**Holy Spirit & Restoration**

## முகவுரை

- தியானப் பகுதி: ***எசேக்கியேல் 37***

- எழுப்புதலின் முடிவான நோக்கம் ''ஆதிநிலையடைதலே.''

  37:12 ... நாட்டிற்குத் திரும்புதல்
  36:38 ... அழிந்த நகர்களில் கோலாகலம்
  :35 ... பாழான தேசம் ஏதேன்போல் மாறுதல்

  எழுப்புதல் → ஆதிநிலையடைதல் — இல்லையேல்
  (Revival → Restoration) முழுமை பெறவில்லை!

- நடபடிகளிலுள்ள ஆதிச்சபையோடு ஒப்பிடுகையில் சோர்பு.
  ஆனால், இறைச்சித்தமும் இறைவாக்குகளும் —
  ஆகாய் 2:9 ... *''பிந்திய ஆலயத்தின் மகிமை ... பெரிது''*
  :6-9 ... *அசைவு ... வருகை ... நிறைவு*
  யோவான் 2:10 ... *அதிக ருசியான ரசம் கடைசியில் ...*
  யோவேல் 2:23-25 ... *முன்மாரி / பின்மாரி —*
  முழுமையாய் ஆதிநிலையடைய.
  *''வருஷங்களைத் திரும்பத் தருவேன்''*

- ஆதிநிலையடைதலில் படிகள் (எசேக் 37) —

  (i) *இரைச்சல்* (வச 7)
  (ii) *அசைவு* (வச 7)
  (iii) *எலும்போடு எலும்பு* (வச 7)
  (iv) *சேனை* (வச 10)

எ.கா.) சபையின் இருண்ட காலத்திலிருந்து —

மார்ட்டின் லூத்தர் — நீதிமானாக்கப்படுதல்
ஜான் வெஸ்லி — பரிசுத்தமாக்கப்படுதல்
சார்ல்ஸ் பின்னி — ஆவியின் அபிஷேகம்
1904 எழுப்புதல் — ஆவியின் வரங்கள்

*''எல்லாம்'' ஆதிநிலையேகும் காலம் வரை* (அப் 3:19-21)

- ஆதிநிலையடைதல் என்பது முழுச்சபைக்கு மட்டுமல்ல, தனி நபர்களுக்கும் —
  1 சாமு 30:19 ... *தாவீது **எல்லாவற்றையும்** திருப்பிக்கொண்டார்*
  யோபு 42:10,12,13 / 1:2,3 ... எல்லாம் இருமடங்கு!
  பேதுரு — 3 முறை மறுதலிப்பு — 3000 ஆத்துமாக்கள் (அப் 2:41)

- இவ்விதம் ஆதிநிலையடைதல் ***ஆவியானவராலேயே*** (எசேக் 37) —
  வச 1 ... *ஆவிக்குள்ளாக்கி ...*
  வச 3,9 ... *ஆவி*
  வச 14 ... *என் ஆவி*

□ நாமிருப்பது பரிசுத்த ஆவியானவரின் யுகம்.

□ கிறிஸ்துவின் எழுப்புதல் செய்திகளைக் கொண்டுவருபவர் — *''ஆவியானவர்'' சபைகளுக்குச் சொல்லுகிறதை ...* (வெளி 2:7,11,17,29 ...)

**ஆதிநிலையடைதலை ஆவியானவர் எங்ஙனம் சாத்தியமாக்குகிறார்?**

**1. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைக் (Lordship) குறித்த அறிவை ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.**

எசேக் 37:23,24 ... *இனி விக்கிரகங்களல்ல ... ராஜா ...*
1 கொரி 12:2,3 ... *விக்கிரகங்களை விட்டுக் கர்த்தரிடம் ...*

கர்த்தத்துவம் = ஒரு புதிய தலைமை, ஆளுகை
இனி *''வேறே ஆண்டவன்மார்'' கிடையாது* (ஏசா 26:13)



- சில விக்கிரகங்கள் —

அ) அகம்பாவம், சுயம், புய பலம், ...
ஏசா 2:11,17 ... *மேட்டிமை ... வீறாப்பு ...*

ஆ) நமது சாதனைகள்
ஓசி 14:3,8 ... *எங்கள் கரத்தின் செயல்கள்*

இ) நமது சம்பத்து
இரு எஜமானில்லை — ''தேவன் & பணம்'' (லூக் 16:13)
எ.கா.) அப் 5:2 — அனனியா & சப்பீராள்
''இயேசு எல்லாவற்றிற்கும் ஆண்டவர்;
இல்லையேல் எதற்கும் ஆண்டவரல்ல!''

100 சதவீதம் ஆண்டவருக்காகவே!
எ.கா.) நெப்போலியனின் சிறைக்கைதி — தனது கையில் நெப்போலியனின் அடையாளம் இருந்ததால் கையை வெட்டி எறிந்தான்.

பவுலின் கூற்று: *''இயேசுவின் அச்சடையாளங்கள் என் மீது... ஒருவனும் என்னை வருத்தாதிருக்கட்டும்''* (கலா 6:17)

- மதில்மேல் பூனை போன்ற வாழ்க்கை வேண்டாம்.
- எதைச் செய்தாலும் தேவனைப் பிரியப்படுத்தவே (1 கொரி 10:31)
- கர்த்தரின் படை சேர்ந்தவரானதால் இவ்வுலகக் காரியங்களில் சிக்கிக்கொள்ள மாட்டோம் (2 தீமோ 2:4)

**2. உண்மையான ஆராதனையை (Worship) ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.**

எசேக் 37:26,27 ... *பரிசுத்த ஸ்தலம் ... வாசஸ்தலம்*
A.W. டோசர்: ''கிறிஸ்தவம் இழந்த முத்துதான் ஆராதனை.''

தொழிலையே தொழுவது ✗ (Work is Worship.)
தொழுவதையே தொழிலாக்குவது ✓ (Worship is Work.)

■ எடுத்துக்காட்டுகள் —

அ) மன்னன் எசேக்கியா ஒரு சீர்திருத்தவாதி —
ஆராதனையைத் திரும்பக் கொண்டுவந்ததே
அவரது முதல் செயல்பாடு — 2 நாளா 29:3,25,29,30

ஆ) மன்னன் யோசபாத் பாடகரைப் படைவீரருக்கு முன்னால்
நிறுத்தினார் — 2 நாளா 20:21

இ) பெந்தெகொஸ்தேயும் அதைத் தொடர்ந்தும் —

அப் 2:11 ... *''தேவனது மகத்துவங்கள்''*
:47 ... *''தேவனைத் துதித்து ...''*
3:8 ... *''நடந்து ... குதித்து ... துதித்து ...''*
4:24 ... *''கர்த்தாவே, நீரே வானம், பூமி, கடல், எல்லாம் உண்டாக்கியவர்''*
10:46 ... *''அவர்கள் நவ நாவுகளில் தேவனைப் புகழ்ந்தனர்''*
16:25 ... *''பவுலும் சீலாவும் நள்ளிரவில் துதி பாடல்''*

■ ஆவியினால் நிறைந்தால் உடனடி விளைவு தொழுகையே —
*''கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி ...''* (எபே 5:18,19)
நவநாவுகள் — ஒன்பது வரங்களில் தேவனை நோக்கிய
ஒன்றே ஒன்று (1 கொரி 14:15-17)

■ தேவன் ஆவியாயிருக்கிறார்;
அவர் *''ஆவியோடும் ... கருத்தோடும்''* ஆராதிக்கப்படவேண்டும்.

பெந்தெகொஸ்தே வகையினரும், பிரதரன் வகையினரும்
ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவேண்டும்.

சார்ல்ஸ் வெஸ்லியின் பெரும்பாலான பாடல்கள்
எழுப்புதலின்போது இயற்றப்பட்டவையே.

**3. விசுவாசிகள் நடுவில் ஆவியானவர் ஐக்கியத்தை (Fellowship) ஏற்படுத்துகிறார்.**

எசேக் 37:15-22 ... இரு கோல்கள் ஒன்றாகின!
ஆவியின் நிறைவின் விளைவு —
*''ஒருவருக்கொருவர்''* ... எபே 5:18-21



ஒருமுகப்படுத்துவதில் ஆவியானவருக்கு நிகரில்லை.
எ.கா.) யூதர் & புறவினத்தார் ... 1 கொரி 12:13
அனைத்து விசுவாசிகள் ... அப் 4:31,32
*''பேதுருவும் யோவானும்''* ... அப் 3:1

அன்று ஆயிரங்கள் ஒருமனதாயிருந்தன ...
இன்று நூறுகள்கூட அப்படியில்லை!
பெருகுவதற்குப் பதிலாக பிரிவுகள்தான்.

■ ஆவியின் கனி — கலா 5:22,23

(ஏறத்தாழ ஒன்பதுமே சகவுறவுகளைப்பற்றியது.)

ஒருவருக்கொருவர் நாம் தேவை —
தனித்து நிற்பது கூடாது —

''நானும்'' ''என்'' தேவனும்! ×
எ.கா.) கர்த்தருடைய ஜெபம்: ... *''எங்கள் ... எங்கள் ...''*

■ நாம் எளிதில் இணையக்கூடிய இரு பகுதிகள் —

அ) ஆராதனை — *ஒரே பிதா*
*ஒரே கர்த்தர்*

ஆராதனை முறைகள் பலவிதமாயிருந்தாலென்ன?
எ.கா.) ஒரு பிள்ளை அப்பா என்று கத்தும்;
அடுத்த பிள்ளை மெதுவாகக் கூப்பிடும்!
இது காரியமா?

ஆ) ஆத்துமாதாயம் — *ஒரே சரீரம்* (திருச்சபையில் சேர்ப்பு)
ஒரே சத்துரு (எல்லாருக்கும் பொது)

நடைமுறை ஆலோசனைகள் —

- உள்ளூரில் கிறிஸ்தவத் தலைவர்கள் மாதமொரு முறை கூடுகை.
- பொது விடுமுறைகளில் கூட்டு ஜெபங்கள்.

## 4. திருவசனத்தில் படிப்பறிவை (Scholarship) ஆவியானவர் திரும்பக் கொண்டுவருகிறார்.

எழுப்புதலின் பிரதான, முடிவான நோக்கம்:

*''தேவனைப் பற்றிய அறிவு''*

எசேக்கியேல் 36,37 & 38இன் இறுதி வசனங்கள் —

36:38; 37:28; 38:23

*''நானே கர்த்தர் என்று* ***அறிந்துகொள்வார்கள்''***

இதைத் திருவசனம் மூலமே ஆவியானவர் செய்கிறார் (36:27)
பைபிள் படிக்கப் புதிய ஆர்வம் உண்டாகிறது;
பைபிள் தெரியாமை சபையை விட்டு விலகுகிறது.

எழுப்புதல் காலங்களில் வேதாகமப் பிரதிகளுக்குக் கிராக்கியுண்டாகும்.

நெகே 8:2,3,5,6 ... திருவசனத்திற்குப் புதிய மதிப்பு

பரிசுத்த ஆவியானவரே வேதத்தின் —

| ஆக்கியோன்: | ஆசிரியர்: |
|---|---|
| 2 பேது 1:20,21 | யோ 16:13 |

நடபடிகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் —

2:42 ... உபதேசம் கற்று நிலைத்திருந்தனர்.
17:11 ... தனித்தும் கூடியும் தினமும் ஆராய்ந்தனர்.

ஆலயத்தில் கேட்கும் பிரசங்கங்களோடு திருப்தியடைவர் பலர். வீட்டுப் பாடமே கிடையாது. எனவேதான் தோல்வி.

ஆவியினால் நிறைவு & ஆகமங்களால் நிறைவு
(எபே 5:18,19) (கொலோ 3:16)

எழுப்புதல் காலங்களில் மக்கள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்!

எ.கா.) அப் 20:7-11 ... *நள்ளிரவு ... விடியற்காலம்*

இவ்வளவு நேரம்தான் கவனிக்க முடியும் என்ற தாற்பரியத்திற்குத் திருமறை ஆராய்ச்சியின்போது இடமில்லை.



## 5. சுவிசேஷத்திற்காய்ப் பாடனுபவிக்க (Hardship) ஆவியானவர் போதுமான உற்சாகம் தருகிறார்.

எசேக் 37:10 ... *காலூன்றி ... மகா பெரிய சேனையாய் ...*
(உலர்ந்த எலும்புகள் → உற்சாக வீரர்)

புதிய இடங்களைக் கைப்பற்றவே சேனை —
38:23 ... *''அநேக நாடுகள்''*

எழுப்புதலின் விளைவு மிஷனரி இயக்கங்கள் பிறப்பு —

எ.கா.) ஜான் வெஸ்லி காலத்து எழுப்புதல் வில்லியம் கேரியையும் வில்லியம் வில்பர்போஸையும் பாதித்தது.

1791இல் வெஸ்லி இறந்தபோது இவ்விருவருக்கும் வயது 30; அடுத்து 40 ஆண்டுகள் இவர்கள் பணியாற்றினர்.

■ பாடனுபவிப்பும் நற்செய்தியறிவிப்பும் பிரிக்க முடியாதவை —

2 தீமோ 4:5 ... *தீங்கனுபவி ... சுவிசேஷகனுடைய வேலை*

ஆதி அப்போஸ்தலர், சுவிசேஷகர் பலர் இரத்தசாட்சிகள் —

+ ஸ்தேவான் கல்லெறியப்பட்டு இறந்தார்.
+ மத்தேயு எத்தியோப்பியாவில் வாளால் அறுப்புண்டார்.
+ மாற்கு தெருக்களில் சாகும்வரை இழுக்கப்பட்டார்.
+ லூக்கா தூக்கிலிடப்பட்டார்.
+ பேதுருவும் சிமியோனும் சிலுவையிலறையுண்டனர்.
+ அந்திரேயா சிலுவையில் கட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.
+ யாக்கோபின் தலை வெட்டப்பட்டது.
+ பிலிப்பு சிலுவையிலறையப்பட்டு, கல்லெறியப்பட்டார்.
+ பர்தொலொமேயு தோலுரிக்கப்பட்டார்.
+ தோமா (இந்தியாவில்) நமது அம்புகளுக்கு இரையானார்.
+ சின்ன யாக்கோபு கோபுரத்திலிருந்து தள்ளிவிடப்பட்டார்.
+ யூதா அம்புகளுக்குப் பலியானார்.
+ மத்தியாஸ் கல்லெறியப்பட்டு மரணமடைந்தார்.
+ பவுலின் தலை வெட்டப்பட்டது.

''இராயனே ஆண்டவர்'' என்று இவர்கள் சொல்லியிருந்தால்
தப்பியிருப்பார்கள்.

தூரத்தில் பார்த்து நின்ற அவர்களது குடும்பங்கள் —
விசுவாசத்தை மறுதலியாதிருக்க அவர்களை ஊக்குவித்தன.
இம்மாமனிதர் சுவிசேஷத்தை முழங்கி நரகத்தை முடக்கினர்!

கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் ஒரு மிஷனரி; ஏனெனில்
கிறிஸ்தவரல்லாதவர் ஒவ்வொருவரும் மிஷனரிக் களம்!

## முடிவுரை

நம்மைப் பரவசப்படுத்த அல்ல, இழந்ததையெல்லாம் திரும்பக் கொண்டுவரவே எழுப்புதல்! *''இந்த எலும்புகள் உயிரடையுமா?''* ஆம், ஒரு *''சேனையாய்''* உயிர்த்தெழும்!

1. கர்த்தத்துவம் (Lordship) — சேனையதிபன்
2. ஆராதனை (Worship) — வணக்கம்
3. ஐக்கியம் (Fellowship) — குழு மனப்பான்மை
4. படிப்பறிவு (Scholarship) — ஆயுதப் பயிற்சி
5. பாடனுபவிப்பு (Hardship) — புதிய இடங்கள்

• திருமறைச் சரித்திரம் மற்றும் திருச்சபைச் சரித்திரத்தின் எழுப்புதல்களுக்காய்த் தேவனுக்குத் துதியுண்டாகட்டும்!

நமக்கிருக்கும் திருவாக்கு:
*''இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பீர்கள்!''*

**பாடுவோம்:** *''எழுப்புதல் அனுப்பும், எழுப்புதல் அனுப்பும்,
எங்கள் உள்ளத்திலே ... சீக்கிரத்திலே!''*



# 31

# தூயாவியானவரும் தூதறிவிப்பும்
## Missionary Evangelism & the Holy Spirit

## முகவுரை

☐ விவிலியத்தின் இறுதிப் பக்கத்தில் ஒரு வசனம் —
வெளி 22:16,17

*ஆவியும்* — இயக்குநர் (Manager)
*மணவாட்டியும்* — செய்தியாளர் (Messenger)
*''வா'' என்கிறார்கள்* — செய்தி (Message)

***பரிசுத்த ஆவியானவரே*** இயக்குநர் என்பதை வலியுறுத்தாததே நமது மிஷனரிப் பணிகளில் மாபெரும் தவறுதல்.

ஆதிச்சபையோ அப்படியில்லை —
அப் 5:32 ... *''நாங்களும் பரிசுத்த ஆவியும் சாட்சிகள்''*
1 யோ 5:6 ... *ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார்*

☐ பழைய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டுகள் —
தாவீது: சங் 51:11-13 ... *உற்சாகமான ஆவி... பாவிகள் ...*
செருபாபேல்: சக 4:6,7 ... பிரமாண்ட வேலை ...
*என் ஆவியினாலேயே*

☐ புதிய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டுகள் —
அ) இயேசு கிறிஸ்து — சுவிசேஷங்கள்
ஆ) ஆதிச்சபை — நடபடிகள் & நிருபங்கள்

அ) இயேசு கிறிஸ்து —

அப் 10:38
*கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் ...*
*என்னை அபிஷேகம்பண்ணினார் ...* பிரசங்கிக்க
(லூக் 4:16-20) *குணமாக்க*
*ஆறுதல்படுத்த*
*திருப்ப*

ஆ) ஆதிச்சபை —

மிஷனரிப் பணிக்குத் திட்டம் —
அப் 1:8 ... *பரிசுத்த ஆவி வரும்போது* — 4 வட்டங்கள்

மையமில்லாது வட்டம் வரைய முடியுமா?
பரிசுத்த ஆவியின் வல்லமையே மையம்.

ஆவியினால் பிறவாவிட்டால் — இறையரசில் நுழைவு ...
ஆவியினால் நிரம்பாவிட்டால் — இறையரசில் பிறரைச் சேர்ப்பு ...

- ஆவியின் நிறைவை நாடியவர்கள் —
  அப் 1:13,14
  *மரியாள் ... பேதுரு ... யாக்கோபு ... யோவான்*
- அவர்களது நற்செய்திப்பணியின் இரகசியம் —
  தன்னார்வக் கிளர்ச்சி — ஒவ்வொருவரும்
  — ஒவ்வோரிடத்திலும்
  — ஒவ்வொருவரிடமும்

அருள்மாரியின் விளைவே அறுவடைப்பணி —
*''நான் ஊற்றுவேன் ... தொழுதுகொள்ளும் எவனும்''*
(அப் 2:17,21)

■ **அப்போஸ்தலர் நடபடிகளில் எடுத்துக்காட்டுகள்:**
= ''ஆவியானவரின் நடபடிகள்'' (Acts of the Holy Spirit)

☐ ஆவியின் நிறைவினால் தனிப்பட்டவரது தாக்கம்
பர்னபா ... அப் 11:24
நிரப்பப்பட்ட மனிதனின் ஈர்ப்பு.
ஆவியானவர் மக்களைக் கிறிஸ்துவிடம் ஈர்க்கிறார்.

☐ முதல் வரிசை மிஷனரிகள்
அப் 13:2-4 ... *ஆவியானவர் பேசினார் ... அனுப்பினார்*

☐ மாற்றுக் கலாச்சாரப் பணியில் ஆவியானவரின் நடத்துதல்
பிலிப்பு... 8:29,30 (எத்தியோப்பியன்)
பேதுரு ... 10:19,20 (செசரியன் / இத்தாலியன்)
பவுல் ... 16:6-9 (மக்கெதோனியன்)



☐ உபத்திரவம்
அப் 4:31... *இடம் அசைந்தது... நிரப்பப்பட்டனர்... தைரியம்*
20:22,23 ... *பரிசுத்த ஆவியானவர் ... சங்கிலிகள்*

☐ உபதேசக் குழப்பம் (கலாச்சாரம் கலந்தது)
15:29 ... *பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலம்*

☐ திருச்சபைத் தலைமை
மூப்பர்கள் : 20:28 ... *பரிசுத்த ஆவி ... கண்காணிகள்*
உதவிக்காரர்: 6:3 ... *பரிசுத்த ஆவி ... இந்த வேலை*

☐ திருச்சபை வளர்ச்சி
9:31... ஆவியின் நிறைவை வலியுறுத்தும் சபைகளிலேயே
இன்று சபை வளர்ச்சி அதிகம்.
காலத்தை நிதானித்து நடப்போம்!

■ வரலாற்று நிகழ்வுகள் நமது அனுபவங்களாக வேண்டும் —

— சிலுவையிலறையுதல் ... கிறிஸ்துவுடன் சிலுவையில்
(கலா 2:20)
— உயிர்த்தெழுதல் ... புதிய ஜீவன்
(ரோ 6:4)
— பரமேறுதல் ... உன்னதங்களில் அமர்வு
(எபே 2:6)
— அப்படியே, பெந்தெகொஸ்தே ... தனிவாழ்வில் நிறைவு
(எபே 5:18)

கல்வாரிக்கும் பெந்தெகொஸ்தேக்கும் இடையில்
எங்கேயோ திருச்சபை நின்றுவிட்டது!

திருப்தி → தேக்கம்

*(1992ஆம் ஆண்டு அஹமதாபாத்திலுள்ள மெதடிஸ்டு சபையில்
ஆசிரியர் அளித்த செய்தியே இவ்வத்தியாயம்.)*

# 32

# மணமகளாம் திருச்சபையை ஆயத்தப்படுத்தும் தூயாவியானவர்

## How the Holy Spirit prepares the Bridal Church

### முகவுரை

- ☐ கிறிஸ்துவின் முதல் வருகைக்கு *''மக்களை''* ஆயத்தப்படுத்த திருமுழுக்கினன் யோவான் வந்தார்.
- ☐ கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு *''மணமகளை''* ஆயத்தப்படுத்தப் பரிசுத்த ஆவியானவர் வந்துள்ளார்.
- ☐ கிறிஸ்துவின் இறுதிப் பிரசங்கம் ஆவியானவரைப்பற்றியதே (யோ 16)
- ☐ பிதாவாகிய ***தேவன்*** மனிதனோடு நித்திய உறவை வாஞ்சிக்கிறார்; மணமகனாகிய ***கிறிஸ்து*** அவ்வுறவுக்கு ஓரிடம் ஆயத்தம்பண்ணுகிறார்; பரிசுத்த ***ஆவியானவர்*** அவ்வுறவுக்கு மணமகளை ஆயத்தம்பண்ணுகிறார்.

### இவ்வுறவுக்கு ஆவியானவர் மணமகளை ஆயத்தம் பண்ணும் விதம் —

**1. விடுதலை** (Liberty)

☐ ரோ 7:1-6

நியாயப்பிரமாணம் எனும் ஒரு கணவனிடமிருந்து விடுவிக்கப் பட்டுக் கிறிஸ்து எனும் வேறொருவருடன் இணைப்பு ...

*''ஆளுகை , கட்டு'' — ''விடுதலை''*

*''மரணத்துக்கேதுவான கனிகள்''—''தேவனுக்கென்று கனி''*

*''பழமையான எழுத்து'' — ''புதுமையான ஆவி''*



☐ 2 கொரி 3:3,14-17

*''கற்பலகைகள்''* — *''சதையான பலகைகள்''*
*''இருதயமீது முக்காடு''* — *''எடுபட்டுவிட்ட முக்காடு''*

(ரெபெக்காளின் முக்காடு — ஆதி 24:65)

***ஆவியாயிருக்கிற*** *கர்த்தரிடம் திரும்புகையில், முக்காடு எடுபட்டுப்போகிறது.*

வேறு வார்த்தைகளில் —

☐ சக 4:6 — (சுய)*பலத்தினால் அல்ல ...*
*என் ஆவியினால் ஆகும் ...*

ரோ 8:2,3 — *கிறிஸ்துவின்* ***ஆவி***
*என்னை விடுதலையாக்கிற்று.*

☐ எனவே, பிரமாணக் கொள்கைக்கு விலகியோடுங்கள்!

☐ பவுலின் புலம்பல் —

2 கொரி 11:2-4 — ஒரே கணவராம் கிறிஸ்துவின் உண்மை/எளிமை
:13-15 ... *ஒளியின் தூதன்* மற்றும் கள்ள ஊழியக்காரர் ... வஞ்சகம்

கொலோ 2:16-23 — *மாயமான தாழ்மை, காணாதவைகளில் துணிவான நுழைவு, சுயவிருப்ப ஆராதனை, உடலை ஒடுக்குதல், முதலியன.*

கலா 3:3 — *ஆவியில் துவங்கி, மாம்சத்தில் முடிவு.*
மறுபடி *நுகம் அல்ல,*
*சுயாதீன நிலை!* (கலா 5:1)

**2. அச்சாரம்/உத்தரவாதம்** (Guarantee)

☐ பல வசனப் பகுதிகள் —

2 கொரி 1:21,22 ... *ஆவியென்னும் ''அச்சாரம்''* (Seal)
5:5 ... *ஆவியென்னும் ''அச்சாரம்''* (Guarantee)

எபே 1:13,14 ... *ஆவியால் ''முத்திரை''* (Guarantee)
4:30 ... *ஆவியாகிய ''முத்திரை''* (Seal)

□ இதன் பொருளென்ன?

— தேவனுடைய பிள்ளைகள் எனும் நிச்சயம்
ரோ 8:15,16 / மத் 3:16,17

— தேவ மகிமையின் ஐசுவரியத்தைச் சுதந்தரிக்க நிச்சயம்
எபே 1:13,14,15,18
(மரண சாசனத்தில் எழுதியுள்ளவைகளை ஆவியானவர் வெளிப்படுத்தி, அவ்வப்போது நிச்சயப்படுத்துகிறார்.)

— சாவாமையைத் தரித்துக் கிறிஸ்துவோடு வாழப் போகிறோம் எனும் நிச்சயம் (2 கொரி 5:1-7)

கண்டவுடன் காதலித்து, வாக்குகளை அள்ளிவீசி, திடீரென்று கைவிடும் நவீன வாலிபன் போன்றவரல்ல கிறிஸ்து!

நிச்சயதார்த்தத்திற்கும் திருமணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவியானவர் ***பொறுமையும், மனவுறுதியும்*** தருகிறார்.

## 3. அன்பு (Love)

□ ரோ 5:5 — இறையன்பு எழுத்தின்படி *''ஊற்றப்பட்டுள்ளது.''*

எபே 3:16-19 — *அன்பில் வேரூன்றி* ... ஆவியானவரால் அந்த அன்பை உணர்ந்துகொள்வது

நமது இதயங்களில் கிறிஸ்து குடிகொண்டுள்ளதை ஆவியானவர் நமக்கு உணர்த்தியவண்ணமிருக்கிறார்.
(விண்ணில் அல்லவோ கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்!)
எபே 3:17

□ பரலோக மணமகனைப்பற்றிய மேன்மைகளை ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்;
எனவே அவர்மீதுள்ள ***அன்பு*** வளர்ந்துகொண்டேயிருக்கிறது —

யோ 16:14,15 — இயேசு எவ்வளவு ''செல்வந்தர்'' ...

1 கொரி 12:3 — இயேசு எவ்வளவு ''பெரியவர்'' ...

1 கொரி 2:9-12 — இயேசு எவ்வளவு ''மகிமையானவர்'' ... என்றும் அவரை ''நேசிக்கும்'' நமக்காய் ஆயத்தம்பண்ணப்படுவதையும் வெளிப்படுத்துகிறார் (யோ 14:2,3)



ஆபிரகாமையும் ஈசாக்கையும் குறித்து லாபானிடம் வேலைக்காரன் எடுத்துச் சொல்லி ரெபெக்காளைக் கவர்ந்தான்—

| | |
|---|---|
| ஆதி 24:22,23 | மணமகனைப் பார்க்கும் முன்னரே |
| :28-32 | பொன்னும் வெகுமதிகளும் கொடுக்கப் |
| :35,36 | பட்டன. வீட்டிற்குப் போனபின் |
| :50,51,53 | மணமகளுக்கு என்னவெல்லாம் |
| :55-58 | கிடைத்திருக்குமோ! |

## 4. பேச்சுத் தொடர்பு (Communicaton)

இதய அன்பு வாயின் ஜெபத்தினாலும் துதியினாலும் வெளிப்படும்.

### அ) ஜெபம்

□ ரோ 8:26,27 — (i) ஆவியானவர் உதவுகிறார்!
ஆவியானவரோடு ஜெபம்

(ii) ஆவியானவரே ஜெபிக்கிறார்!
ஆவியானவரால் ஜெபம்

நம்மை அதிகமதிகமாய் ஆவியின் கட்டுப்பாட்டிற்கு ஒப்புக் கொடுத்து அவர் சித்தம் செய்வதால் இது சாத்தியமாகிறது.

பரவச அனுபவங்கள் நடுவில் இந்த ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர்.

□ எபே 6:18
யூதா 20 — (iii) ஆவியானவருக்குள் ஜெபம்

இதற்குத் தேவனளித்துள்ள ஏதுக்களில் ஒன்று நவநாவுகள் — (1 கொரி 14:2,14)

உன் 7:9 — *உறங்குவோரையும் பேசப்பண்ணும் நல்ல திராட்சரசம்*

மணமகன்-மணமகள் பேசும் நேச வார்த்தைகள் (1 கொரி 14:2)

ஜெப வாஞ்சையையும் ஊக்கத்தையும் அதிகரிப்பது ஆவியானவரே.

## ஆ) துதி

- எபே 5:18-20 ... *பாடித் துதித்துக் கீர்த்தனம்பண்ணி ...*
(பிராமண மணப்பெண்கள் பாடணும், ஆடணும்!)

அப் 2:4,11 ... நவநாவுகளால் *தேவனுடைய மகத்துவங்கள்*
(துதி, விண்ணப்பத்தின் தரத்தை ஆவியானவர் உயர்த்துகிறார்.)

## 5. நடத்துதல் (Guidance)

மூன்று பகுதிகளில் —

**அ) அனுதினக் காரியங்கள்** (ரோ 8:14)

அக்கினித் தூணும் மேகத் தூணும் நம்மை
நடத்தும் ஆவியானவருக்கு முன்னடையாளங்கள்.

இன்று எவ்விதம் நடத்துகிறார்?

(i) நாம் முழுவதும் விட்டுக்கொடுக்கும்போது இதயத்தில் குரல்—

நீதி 3:5,6 ... *சுய புத்தி அல்ல ... கர்த்தரில் நம்பிக்கை*
சங் 37:5,23,24 ... *கர்த்தருக்கு ஒப்புவி ... கர்த்தரால் உறுதி*

(ii) விசுவாசத்தில் அடியெடுத்து வைக்கையில், தவறினால், அவர் பின்னிருந்து நம்மைத் திருத்துவார் —

ஏசா 30:21 *... வலது புறம் ... இடது புறம் ... சத்தம்*

**ஆ) திருவசனத் தியானம்**

| | |
|---|---|
| யோ 14:26 | வசனத்தைப் புரிதலிலும் |
| 16:13 | அப்பியாசிப்பதிலும் உதவி |

அப் 15:28 — சூழலுக்கேற்ப வசனத்தை விளக்கித் தருவார்.
*''பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் ...''*
*(ஆவியும் மணவாட்டியும்)*

1 யோ 2:26,27 — வஞ்சகத்தை அடையாளங்காணல்



**இ) திருப்பணி**

| | |
|---|---|
| அப் 13:2,3 | — பணியின் துவக்கம் |
| 8:29 | — பணியில் நடத்துதல் |
| 16:6,7 | — பணியில் திருப்பம் |
| 11:12,15,16 | — பணியை உறுதிப்படுத்துதல் (நடத்துதல், நினைவூட்டுதல் மூலம்) |

இதனை ஆவியானவர் தமது வரங்கள் மூலம் செய்கிறார் —

| | |
|---|---|
| *ஞான வசனம்*<br>*அறிவு வசனம்* | எ.கா.) யோவேலிலிருந்து பேதுரு மேற்கோள் காட்டியது (அப் 2:16,17)<br>ஆமோஸிலிருந்தும் பேதுரு சொன்னதையும் யாக்கோபு மேற்கோள் காட்டியது (அப் 15:13-17) |

*தீர்க்கதரிசனம் உரைத்தல்,*
*ஆவிகளைப் பகுத்தறிதல்,* முதலியன.

## 6. ஆற்றுதல்/தேற்றுதல் (Comfort)

- மணமகளின் பூவுலக வாழ்வு வேதனையற்றது அல்ல. எனவேதான் பரலோகத் தேற்றரவாளனை இயேசு அனுப்பினார் — யோ 14:16,18; அப் 9:17

- ஏசா 59:19 ... சத்துருவின் ***வெள்ளத்தை*** ஆவியானவர் தடுக்கிறார்.

1 பேது 4:14 ... ***நிந்தைக்கெதிராய்*** அவர் மகிமையின் ஆவியானவர்.

அப் 20:22,23 ... ***பாடுகள்*** வருமுன்னரே ஆவியானவர் நம்மை ஆயத்தப்படுத்திவிடுகிறார்.

- ஏசா 63:9,10,14 — மணவாட்டியின் ***பாடுகளில்*** ஆவியானவர் பங்குகொள்கிறார்.

ரோ 8:18,23,26 — நமது ***பலவீனங்களிலும்*** துன்பங்களிலும் ஆவியானவர் உதவுகிறார்.

சோர்புறும் மணவாட்டிக்கு மணவாளனின் நித்திய இரக்கத்தை ஆவியானவர் ***நினைப்பூட்டுகிறார்*** (ஏசா 54:5-8)

**7. மறுரூபமடைதல்** (Transformation)

- □ 2 கொரி 3:18 — ஆவியினாலே மறுரூபமாக்கப்படுறோம்.
  4:4 — பிதாவின் சாயலானவரே மணமகன்.
  3:18 — மணமகனின் சாயலாக மணமகள்.
- □ ஆவியானவர் இதை எவ்விதம் செய்கிறார்? —
  - அ) சோதனையில் வெற்றி (லூக் 4:1,2,13,14)
  - ஆ) நற்குணங்களை உருவாக்குதல் (எபே 5:8,9)
  - இ) வரங்கள் மூலம் பக்திவிருத்தி (1 கொரி 12:7)
  - ஈ) ஊழியர்கள் மூலம் வளர்ச்சி
  (அப் 20:28 / எபே 4:11-13)

எல்லாவற்றின் முடிவான உச்சக்கட்டம்

- □ ரோ 8:28-30 ... *சகலமும் நன்மைக்கென்றே ...*
  — நமது வாழ்வில் தேவன் அனுமதிக்கும் சகல காரியங்களின் முடிவான நோக்கு ...
  அதாவது, ***''மணமகள் மணமகனைப் போலாகிறாள்!''***

■

*புவி மீதினில் சரீர மீட்பு*
*என்று காண்போம் என ஏங்கும்*
*மனம் மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்,*
*மணவாட்டியைச் சேர்த்திடவே!*

*குதூகலம் நிறைந்த நன்னாள்*
*நடுவானில் மின்னிடுமே;*
*இதுவரை இருந்த துன்பமில்லை,*
*இனி என்றுமே ஆனந்தம்!*

(1984ஆம் ஆண்டு ரிவைவோ '84 என்ற பெயரில் ஆசீர்வாத இளைஞர் இயக்கம் பெண்களுக்கென்று தஞ்சாவூரில் நடத்திய 3-நாள் எழுப்புதல் முகாமில் ஆசிரியர் கொடுத்த மூன்று செய்திகளில் ஒன்றுதான் இவ்வத்தியாயம். இன்னொரு செய்தி 29ஆம் அத்தியாயத்தில் உண்டு.)



**33**

# உனது உடல்: ஆவியானவரின் ஆலயம்

## Your body: The Temple of the Holy Spirit

*(தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்)*

### ■ உனது இருதயம்

நீ உன் இருதயத்தை இயேசுவுக்குத் திறந்தளித்துள்ளாயா? (வெளி 3:20)

அறிக்கை செய்யாத, மறைவான, பாவம் இன்னும் உன் இருதயத்தில் ஏதும் உண்டா? (நீதி 28:13)

மாற்கு 7:21,22இல் கூறப்பட்டவைகளிலிருந்து உன் இருதயம் சுத்திகரிக்கப்பட்டுள்ளதா?

உன் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூருகிறாயா? (மத் 22:37)

இதயப்பூர்வமாக எல்லாருடைய தப்பிதங்களையும் மன்னித்துவிட்டாயா? (மத் 6:15)

நீ பெருமைக்காரனா? (நீதி 16:5)

பொறாமை உண்டா? (நீதி 14:30)

நீ தவறிழைத்த ஒவ்வொருவரிடத்திலும் சென்று உன்னைத் தாழ்த்தி ஒப்புரவாகிவிட்டாயா? (மத் 5:23,24)

### ■ உனது உடல்

நீ உன் உடலைத் தேவனுக்குப் பிரியமான உயிர்ப்பலியாக ஒப்புக் கொடுத்திருக்கிறாயா? (ரோ 12:1)

பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிய உன் உடலை அருவருப்பான பழக்கங்களினால் கெடுத்துக்கொண்டிருக்கிறாயா? (1 கொரி 6:18,19)

நீ பெருந்தீனிக்காரனா? சோம்பேறியா? (நீதி 21:25)

உன் உடையலங்காரம் கடவுளைப் பிரியப்படுத்தி, மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கிறதா? (ரோ 12:2)

■ **உனது கண்கள்**

தேவனுக்கு முன்பாக நீ உன் கண்களோடு செய்த உடன்படிக்கையைக் காத்து வருகிறாயா? (யோபு 31:1)

இச்சையான பார்வையிலிருந்து உன் கண்கள் விலகியிருக்கின்றனவா? (மத் 5:28; 6:22,23)

அவைகள் நேராக நோக்குகின்றனவா? (நீதி 4:25)

துன்பப்படுகிறவர்களையும், வருத்தப்படுகிற மக்களையும் உன் கண்கள் இரக்கத்தோடு பார்க்கின்றனவா? (மத் 25:35-40)

■ **உனது வாய்**

அடங்காத உன் நாவைத் தேவனுக்கு அர்ப்பணித்துள்ளாயா? (யாக் 1:26; 3:8)

அவருக்கு உன் வாயின் வார்த்தைகள் பிரியமாயிருக்கின்றனவா? (சங் 19:14)

பொய் சொல்லுகிறாயா? மிகைப்படுத்திப் பேசுகிறாயா? (மத் 5:37)

பிறரைப் பழித்துரைத்து நியாயந்தீர்க்கிறாயா? (லூக் 6:37)

உன்னை நீயே புகழ்ந்து பேசுகிறாயா? (நீதி 27:2)

வீண் பேச்சு உண்டா? (மத் 12:36)

புறங்கூறுகிறாயா? (சங் 15:3)

கிறிஸ்துவைத் தயங்காது அறிக்கை செய்கிறாயா? (மத் 10:32)

உன் வார்த்தைகள் அன்பினாலும் கிருபையினாலும் நிறைந்துள்ளனவா? (கொலோ 4:6)



■ **உனது காதுகள்**

மற்றவர்களைப்பற்றிய தீதான காரியங்களைக் கேட்கும்படி உன் காதுகளைத் திறந்துவைத்துள்ளாயா? (சங் 15:3)

அருவருப்பான பாடல்களையும், இச்சையைக் கிளறும் கதைகளையும் கேட்கிறாயா? (1 தெச 5:22)

திக்கற்றவர்களின் சத்தத்துக்கு உன் காதுகளை அடைத்துக்கொள்கிறாயா? (யாக் 1:27)

■ **உனது கைகள்**

உன் கைகளில் சுத்தமும், நேர்மையும் உண்டா? (சங் 24:4)

கைக்கூலி வாங்குவதும், கொடுத்தலும் உண்டா? (சங் 15:5)

நீ பிறரைக் கொள்ளையிட்டிருக்கிறாயா? (எசேக் 33:15)

பண ஆசையினால் நீ உன்னை உருவக் குத்திக்கொள்ளுகிறாயா? (1 தீமோ 6:10)

இறையரசு விரிவடைய உன் பணத்தைத் தேவனுக்குத் தாராளமாய்க் கொடுக்கிறாயா? (2 கொரி 9:7)

உன்னைச் சபிக்கிறவர்களையும் ஆசீர்வதிக்கும்படி உன் கரங்கள் இயேசுவின் கரங்களின் நீட்டுதலாய் இருக்கின்றனவா? (மத் 5:44)

■ **உனது முழங்கால்கள்**

உன் ஜெப வாழ்க்கை கிரமமாக இருக்கிறதா? (தானி 6:10)

காலையில் அமைதி நேரத் தியானம் உண்டா? (நீதி 8:17)

திறந்த வேதத்தோடு ஒவ்வொரு நாளும் எவ்வளவு நேரத்தை நீ முழங்காலில் செலவிடுகிறாய்? (மத் 26:40; சங் 119:97)

ஆத்துமாக்களுக்காகவும், எழுப்புதலுக்காகவும் நீ கண்ணீரோடு ஜெபிக்கிறாயா? (புல 2:11,19)

உன்னை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறாயா? (மத் 5:44)

தேவனுடைய பிள்ளைகளோடுள்ள ஐக்கியத்தை நீ விட்டுவிட்டதுண்டா? (எபி 10:24,25)

## ■ உனது கால்கள்

நீ தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்துவிட்டு துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடக்கிறாயா? (சங் 1:1)

உன் ஆவிக்குரிய ஆரோக்கியத்துக்கு உகந்ததாயில்லாத இடங்களுக்கு நீ போகிறாயா? (சங் 1:1; நீதி 7:25-27)

இயேசுவின் நற்செய்திப்பணிப் பேராணைக்கு நீ கீழ்ப்படிகிறாயா? (மாற் 16:15)

பெரும்பாதைகளிலும், தெருக்களிலும், ஒதுக்கப்பட்ட மக்களிடம் செல்லுகிறாயா? (லூக் 14:23)

சுவிசேஷம் அறிவிக்கப்படாத கிராமங்களுக்குப் போகிறாயா? சந்திக்கப்படாத ஆதிவாசிகளிடம் போகிறாயா? (ஏசா 52:7)

பாவிகள் இருக்குமிடத்திற்கே செல்ல உன் கால்கள் எப்பொழுதும் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை அணிந்துள்ளனவா? (எபே 6:15)

■

*எந்தன் உள்ளம் தங்கும், இயேசு நாயகா!*
*உந்தன் வீடாய்க் கொள்ளும், இயேசு நாயகா!*
*இயேசு நாயகா, இயேசு நாயகா,*
*உந்தன் வீடாய்க் கொள்ளும் இயேசு நாயகா!*

*மாம்சக் கிரியை போக்கும், இயேசு நாயகா!*
*குழந்தை உள்ளம் ஆக்கும், இயேசு நாயகா!*
*இயேசு நாயகா, இயேசு நாயகா,*
*குழந்தை உள்ளம் ஆக்கும், இயேசு நாயகா!*

— N. எமில் ஜெபசிங் (1941-2013)



# ஒரு ஜெபப் பாடல்

*ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்,*
*ஆவியின் பலமொன்றே வாஞ்சிக்கின்றேன் யான்;*
*நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்,*
*ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்.*

*நித்யமான தேவனின் ஆவியே வாரும்,*
*பெந்தெகொஸ்தே வல்லமை நாடி நிற்கிறேன்;*
*தாழ்மை, உண்மை, உமது நாம மகிமை;*
*நித்யமான தேவனின் ஆவியே வாரும்.*

*அன்புநிறை தேவனின் ஆவியே வாரும்,*
*கல்வாரியின் அன்பினை என்னில் கொட்டிடும்;*
*அக்கினி, பரிசுத்தம் தந்து ஆசீர் வதியும்;*
*அன்புநிறை தேவனின் ஆவியே வாரும்.*

*இரக்கமுள்ள தேவனின் ஆவியே வாரும்,*
*கிருபையின் ஆவியை என்னில் ஊற்றிடும்;*
*பாசமும், தயவும் மாந்தரிடம் காட்டிட*
*இரக்கமுள்ள தேவனின் ஆவியே வாரும்.*

*விண்ணுலக தேவனின் ஆவியே வாரும்,*
*நிறைவாழ்வின் ஆசியை இப்போ பொழிந்திடும்;*
*தீர்க்கரே, இராஜாவே, எங்கள் ஆசாரியரே,*
*விண்ணுலக தேவனின் ஆவியே வாரும்.*

— லியோனார்டு ரேவன்ஹில் அவர்கள்
இயற்றியதொரு பாடலைத் தழுவியது.

# (C)

# பரிசுத்த ஆவியானவரைக் குறித்த கேள்வி-பதில்கள்



**34**

# ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் யாது?

## What is blasphemy against the Holy Spirit?

''மனிதர் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்; ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணம் சொல்வானாகில், அவன் என்றும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான்'' என்றார் இயேசு (மாற் 3:28,29; மத் 12:31,32; லூக் 12:10).

இவ்வார்த்தைகளைப் பெந்தெகொஸ்தேயினர் சில பெந்தெகொஸ்தே வெளிப்பாடுகளைப் பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் சரியானதென்று ஒத்துக்கொள்ளத் தவறும்போது அன்னாருக்கெதிராகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இவ்வளவு கடினமாக வார்த்தைகளை இயேசு பயன்படுத்தியதின் உண்மையான கருத்துதான் என்ன?

தூஷணத்திற்கு மரணமே தண்டனையாயிருந்தது. பழைய ஏற்பாட்டின் பிரமாணத்தின்படி அதற்கு நிவாரணமே கிடையாது (லேவி 24:10-16). ஆனால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ''சகல'' பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற புதிய உடன்படிக்கையின் வாக்கைப்பற்றி என்ன?

தமக்கு விரோதமான தூஷணத்தைவிட ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் கொடூரமானது என்று இயேசு சொன்னதேன்?

மீட்பின் திட்டத்தை உருவாக்கியது பிதாவானவர்; அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது குமாரனானவர்; மீட்பை அமுலாக்குவது ஆவியானவர். பாவத்தைக் குறித்து நம்மைக் கண்டித்துணர்த்தி மனந்திரும்புதலுக்குள் நடத்தக்கூடிய ஒரே சக்தி ஆவியானவரே (யோ 16:7-11). அவரது உதவியின்றி ஒருவராலும் இயேசுவைக்

கர்த்தரென்று கூப்பிட முடியாது (1 கொரி 12:3). ஒருவன் ஆவியான வரையே தூஷித்துவிட்டால் அவனை மனந்திரும்பச் செய்ய யாரு மில்லையே. இயேசு கிறிஸ்து தேவனது முதலாம் தேற்றரவாளர். பரிசுத்த ஆவியானவர் தேவனது இரண்டாம் தேற்றரவாளர். தேவனது ஆதீனத்தில் ''மூன்றாம்'' தேற்றரவாளர் கிடையாது!

பரிசுத்த ஆவியானவர் தேவனாகையால் எப்பாவமும் அவருக்கு விரோதமானதே (அப் 5:3,4). அவரை எதிர்க்கவோ, துக்கப்படுத் தவோ, அவித்துப்போடவோ கூடாதென அடிக்கடி நாம் எச்சரிக்கப் பட்டுள்ளோம். ஆனால் தூஷிப்பதென்றால் கெட்ட வார்த்தைகளை அருவருப்பாய்ப் பேசுவதாம். மக்களும் வேதபாரகரும் இயேசுவைப் பைத்தியக்காரனென்றும் பிசாசு பிடித்தவனென்றும் தீர்த்தபோது தான், அவர் ஆவியானவருக்கெதிரான தூஷணத்தைக் குறித்துப் பேசினார். அதாவது அவர்கள் பரிசுத்த ஆவியானவரையே பெயல் செபூல் என்றழைத்துவிட்டனர் (மாற் 3:21,22, 28-30).

ஆவியானவருக்கெதிரான தூஷணத்தைக் குறித்து எச்சரித்ததை அடுத்து இயேசு ''கெட்ட மரம் ... விரியன்பாம்புக் குட்டிகள் ... பொல் லாத பொக்கிஷம்'' ஆகிய உவமானங்களைக் கூறினார் (மத் 12: 33-35). அவரை இவ்விதமாய்க் குற்றஞ்சாட்டியவர்களைப் ''பொல் லாத விபசாரச் சந்ததியார்'' என்றழைத்தார் (வச 39). இதிலிருந்து, அவர்களது தூஷணம் வெறும் வார்த்தைகளல்ல, அவர்களது உள்ளான குணத்தின் வெளிப்பாடு எனத் தெளிவாகிறது.

இப்பாவத்தை எபிரெயர் 6:4-6; 10:26-29 ஆகிய பகுதிகள் குறிப்பிடுகின்றன. ''கிருபையின் ஆவியை நிந்தித்து ... தேவ குமா ரனை அவமானப்படுத்துவோருக்கு'' மனந்திரும்புதல் கூடாதது என் றும், அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடியது என்றும் நிருப ஆக்கி யோன் சுட்டிக்காட்டுகிறார். இது கிறிஸ்துவை வேண்டுமென்றே பிடிவாதமாகப் புறக்கணித்துச் சோரம்போகுதலைக் குறிக்கிறதென் பது தெளிவல்லவோ?

''ஆவியானவரது செயல்பாட்டை ஒருவன் மறுப்பது அறியாமை யினாலா அகங்காரத்தினாலா என்று அறிந்தவர் தேவன் ஒருவரே'' என மதிப்பிற்குரிய பெந்தெகொஸ்தே தலைவருள் ஒருவரான ஸ்டான்லி ஹார்ட்டன் (1916-2014) என்பவர் எச்சரித்துள்ளார். பெந்



தெகொஸ்தே அனுபவத்தைப் பிசாசின் செயல் என்று குற்றஞ்சாட்டி, ஆனால் பின்னர் தங்களது கண்கள் திறக்கப்பட்டு மனந்திரும்பி ஆவி யின் அபிஷேகம் பெற்ற ஆயிரக்கணக்கானோர் உண்டு. ''முன்னே நான் தூஷிக்கிறவனாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினால் அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்'' என்றார் பவுல் (1 தீமோ 1:13).

ஆவியானவரது வெளிப்பாடுகள் என்று அழைக்கப்படும் அநேக வினோதமான காரியங்கள் இன்று காணப்படுகின்றன. ஆனால் வேதத்தில் அவைகளுக்குத் தெளிவான சாட்சி இல்லாத பட்சத்தில் அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள எவரும் கடமைப்பட்ட வரல்ல. கவனமாயிருக்கவேண்டும்; அதே வேளையில் காலத் திற்குமுன் ஒன்றையும் முடிவாக நியாயந்தீர்த்துவிடவும் கூடாது!

இங்கு இன்னொரு கருத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கிறிஸ்துவின் பெயருக்காய் இறைமக்களை அவமதிப்போர் தேவனுடைய மகிமையுள்ள ஆவியானவரைத் ''தூஷிக்கிறார்கள்'' என்கிறது திருவசனம் (1 பேது 4:14). இதற்காய் அவர்கள் தேவ னுக்குப் பதில் சொல்லவேண்டும். அப்படியே, விசுவாசிகள் ஒருவ ரோடு ஒருவருக்குள்ள உறவில் ''தூஷண'' வார்த்தைகள் வெளிப்படு மானால் அது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தும் (எபே 4:30,31). உடன் விசுவாசிகளையே தூஷிக்கக்கூடாது என்றால், அபிஷேகிக் கப்பட்ட தேவனது ஊழியக்காரருக்கு எதிராய்த் தீது பேசுவதை அறவே தவிர்த்துவிடவேண்டும். ஊழியருக்கு விரோதமாய் எழும்பும் வாய்களையும் கைகளையும் தேவன் தண்டிப்பார் (2 சாமு 2:14-16; 3 யோ 9-11).

■

*வரவேணும், பரனாவியே,*
*இரங்குஞ் சுடராய் மேவியே!*
*மருளாம் பாவம் மருவிய எனக்கு*
*வானாக்கினியால் ஞான தீட்சை தர!*

— கீர்த்தனை 119, V. சந்தியாகு ஐயர், மதுரை

# 35

# ஜெபப் புத்தக முறையா, சுயாதீன ஆராதனையா?

## Liturgical Worship or the Freestyle?

சர்வ வல்லவரை ஆராதிப்பதே உன்னதமான கிறிஸ்தவ சேவை. தேவ மகிமையைப் பாடும் ஆராதனைக் குழுக்களை எழுப்புவதே நற்செய்திப்பணி மற்றும் மிஷனரி ஊழியங்களின் முடிவான நோக்க மாகும் (ரோ 10:14; 15:9-11). புதிய சபையினரது ஆராதனையைக் கருத்தாழமும் கிரமுமானதாக்கும் நோக்கோடு திருச்சபைப் பிதாக்கள் சபை கூடிவருதலில் பயன்படுத்தும்படி துதி ஜெப விண்ணப்பங் களை எழுதிக் கொடுத்தார்கள். ஆனால் நாளாவட்டத்தில் அவை அர்த்தமற்ற கடமையும் வறட்டுச் சடங்காகவும் மாறிவிட்டன. இச்சூழலில்தான் A. W. டோசர் போன்ற தீர்க்கர்கள் ஆராதனையைத் ''திருச்சபை தொலைத்துவிட்ட முத்து'' என்றழைக்கலாயினர்! சமீப காலங்களிலோ உலகெங்கிலும் துதி ஆராதனையின் ஆவி ஊற்றப் பட்டு, மூச்சடைத்துக்கொண்டிருந்த நிலையில் வசந்த காற்று வீசத் துவங்கியுள்ளது. இதில் பரவசமடைந்த கிறிஸ்தவர் பலர் ஜெபப் புத்தகங்கள் பயன்படுத்தி ஆராதிக்கும் பழைய முறையை அப்படியே தூக்கியெறிந்துவிட்டு சுயாதீன ஆராதனை முறையைத் தழுவியுள் ளனர். இது முதியவர்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையில் மட்டுமல்ல, புராதனச் சபைகளுக்கும் புதிய சபைகளுக் கும் இடையிலேயும் ஒருவித இறுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைச் சரி செய்வது எப்படி?

பொதுவிட ஆராதனைகளுக்கான ஜெபங்களைத் திருச்சபையின் முற்காலத்துத் தலைவர்கள் ஆவியானவரின் அபிஷேகத்தோடுதான் எழுதினார்கள். சபைகளை இந்நாட்களில் குதூகல ஆராதனைக்குள் நடத்துபவர்களை எழுப்பியுள்ளதும் அதே ஆவியானவர்தான். எனவே இருவகை ஆராதனைகளையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை



என்றல்ல, ஒன்றையொன்று மேம்படுத்துபவை என்று ஏற்றுக்கொள் வதே முதிர்ச்சியின் அடையாளமாகும்.

சமாரியப் பெண்மணியோடு உரையாடிக்கொண்டிருந்த இயேசு, ஆராதனையானது ''ஆவியோடும்'' அதே வேளையில் ''உண்மை யோடும்'' (அல்லது, சத்தியத்தோடும்) ஏறெடுக்கப்படவேண்டு மென வலியுறுத்தினார் (யோ 4:24). சபைக் கூடுகைகளில் ஆவியின் வரங்களை அப்பியாசிக்கும் வழிமுறைகளை எழுதிக்கொண்டிருக்கை யில் அப்போஸ்தலன் பவுல், ஜெபிப்பதும் பாடுவதும் ''ஆவியோ டும்'' அதே வேளையில் ''கருத்தோடும்'' இருக்கவேண்டுமெனக் குறிப்பிட்டார் (1 கொரி 14:15). புத்தக ஜெபங்களில் கருத்துச் செறிவு அதிகமென்பதில் சந்தேகமேயில்லை; சுயாதீனமாய் ஆரா திக்கும்போது பெரும்பாலும் ஒரு சில கருத்துக்களே திரும்பத்திரும்ப வருவதாகவும் வேத வெளிப்பாட்டின் குறுகிய பகுதிகளே பயன் படுத்தப்படுவதாகவும் அமைந்துவிடுகிறது. அதே வேளையில் புத் தக ஜெபங்களைப் பயன்படுத்தும்போது ஆராதிப்போரின் உள்ளான உணர்வுகளை விடுதலையோடு வெளிப்படுத்துவது தடைபடுகிறது. ஒன்றுக்கு அடுத்தது தேவை. ஒவ்வொரு வகையினரும் மற்றவரிட மிருந்து கொஞ்சம் சேர்த்துக்கொண்டால்தான் ஆரோக்கியமான சம நிலை கிடைக்கும். எந்த வழிபாட்டு முறையும் மற்றதைவிட உயர்ந் ததோ தாழ்ந்ததோ கிடையாது. ஜெபப் புத்தக வழிபாட்டு முறையி லேயே பழக்கப்பட்டவர்கள் இன்றையப் புதிய அலையைப் புத்துணர் வூட்டுவதாய்க் கருதுவது போலவே, சுயாதீன ஆராதனை முறையில் திரும்பத் திரும்ப ஒருசிலவற்றையே சொல்லிக் கருத்தாழமின்றி ருக்கும் நிலையினால் புளித்துப்போய் ''பழைய ரசமே நல்லது'' என உணரத் துவங்குவதும் உண்டு! (லூக் 5:39).

தொழுகையில் உடற்பாவனையும் கவனிக்கப்படவேண்டிய தொன்று. எழுந்து நிற்பது, தலை வணங்குவது மற்றும் முழங்காற் படியிடுவது தவிர வேறு உடற்பாவனைகள் புத்தக ஆராதனை முறை களைப் பின்பற்றும் சபைகளில் பொதுவாகக் காணப்படுவதில்லை. அடுத்த வகையினரோ வேதம் போதிக்கும் பிற பாவனைகளான கை களை உயர்த்துதல் (சங் 134:2; 1 தீமோ 2:8), கை கொட்டுதல் (சங்

47:1) மற்றும் நடனமாடுதல் (சங் 149:3; 150:4) ஆகியவற்றைச் சரளமாய் அப்பியாசிக்கின்றனர். வேத வசனங்களுக்கிடையே பாரபட்சம் காட்டுவதைத் தவிர்க்கவேண்டுமானால் முதற்குழுவினர் தங்களது தயக்கங்களை விட்டு வெளிவரவேண்டும். கலாச்சாரத்திற்கும் இங்கு இடமுண்டு என்பது உண்மை. திருமறையானது மத்திய கிழக்கத்திய கலாச்சாரத்தில் எழுதப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள எந்த உடற்பாவனையும் எந்தக் கலாச்சாரத்திற்கும் முற்றிலும் முரண்பட்டதாய்த் தோன்றவில்லை. வெறும் உணர்ச்சிவசம் பக்திவிருத்தியற்றது; ஆனால் நமது அன்பை ஆண்டவருக்கும் உடன் மனிதருக்கும் வெளிப்படுத்திக் காட்டவே உணர்ச்சிகள் தேவனால் நமக்கருளப்பட்டுள்ளன (மத் 22:37-39).

ஆயிரம்பேருள்ள பாடகர் குழுவின் பாடல்களை ரசிக்கும் சிலருக்குப் பெந்தெகொஸ்தேயினரின் சத்தமான ஆராதனையைச் சகிக்க முடியாது. அது தெய்வீக ஆராதனைக்கு ஒவ்வாத ஒழுங்கீனமெனக் குற்றஞ்சாட்டுவர். இங்குங்கூட திருமறை இரண்டையுமே செய்யப் போதிக்கிறது. ''நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்'' என்கிறது சங்கீதம் 46:10. அடுத்த சங்கீதமே நம்மைத் தேவனுக்கு முன்பாகக் ''கம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்'' என்றழைக்கிறது (சங் 47:1). சகரியா 2:10 நம்மைக் ''கம்பீரித்துப் பாடு'' என்றழைக்கிறது; 13ஆம் வசனத்திலோ ''கர்த்தருக்கு முன்பாக மவுனமாயிருங்கள்'' என்று சொல்லப்படுகிறோம்.

பெந்தெகொஸ்தேயினர் ஆராதனையை இன்னும் கூடுதல் ''ஒழுங்கும் கிரமமுமாய்'' நடத்தவேண்டுமென்று அறிவுறுத்துகிறேன் (1 கொரி 14:40). அதே வேளையில் பெந்தெகொஸ்தேயல்லாதவர் தங்களது ஆராதனையை இன்னும் விசையுள்ளதாக்க உற்சாகத்தையும் பரவசத்தையும் கூட்டிக்கொள்ளக் கேட்கிறேன். பரலோகத்தில் அமைதி அபூர்வம் என்பதை எப்பொழுதுமே அமைதியாக ஆராதிப்பவர்களுக்கு நினைப்பூட்டுகிறேன்! (வெளி 8:1). பெந்தெகொஸ்தேயல்லாதவரின் ஆராதனையைச் செத்தது என்று தீர்த்துக் கட்டுவதைப் பெந்தெகொஸ்தேயினர் நிறுத்தவேண்டும். சத்தத்தை மட்டும் வைத்து உயிரிருக்கிறது என்று நிரூபிக்க முடியாது. ''கர்த்தரின் ஆவி எங்கே உண்டோ அங்கே விடுதலையுண்டு'' என்ற வசனத்தைச் சூழமைவை விட்டு எடுத்து வியாக்கியானிக்காதீர்கள் (2 கொரி 3:17). இங்கு ''விடுதலை'' என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து கிடைக்கும் விடுதலைதானே தவிர தேவ சமூகத்தில் கட்டுப்பாடின்றி நடந்துகொள்வதற்கான அனுமதியல்ல (வச 14-16). ஆராதனையில் ''பய''பக்தியை ஒருபோதும் விட்டு விடக்கூடாது (பிர 5:1,2; எபி 12:28,29).



இசையைக் குறித்து ஒரு வார்த்தை: பழங்காலத்து ஆட்களுக்கு அதிரும் இசையும் வேகமான தாளங்களும் பிடிக்காது. சபைகளில் ஒருமனத்தைக் காத்துக்கொள்வதற்காக முதியவர்களின் உணர்வுகளை மதிக்கவேண்டும். அதே வேளையில், இளம் மற்றும் இனி வரும் தலைமுறையினரை நாம் இழந்துபோகாதிருக்க முதியவர்கள் சில காரியங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்; மாற்றம் என்றவுடன் சீற்றம் கொள்ளக்கூடாது.

பழங்காலப் பாமாலை, கீர்த்தனைப் பாடல்களைப் போன்று இறையியல் கருத்துக்கள் நிறைந்தவை அபூர்வம் (எபே 5:18,19; கொலோ 3:16). ஏராளம் தலைப்புகளின் மீது அவைகள் இயற்றப்பட்டவை. பெரும்பாலான நவீன காலப் பல்லவிகளோ ஒரு சில கருத்துக்களையே திரும்பத் திரும்பச் சொல்லுகின்றன; உபதேசக் கண்ணோட்டத்திலும் அவைகளுக்கு ஆரோக்கியம் போதாது. பாடல் இயற்றுபவர்கள் தங்கள் பாடல் மற்றும் பல்லவிகளை அரங்கேற்றுமுன் முதிர்ந்த வேதப் போதகர்களுடன் உட்கார்ந்து சரிபார்க்க வருந்திக் கேட்கிறேன். இறையியல் சத்து (= தேவனைப் பற்றிய அறிவு) இல்லாத ஆராதனை தேவனுக்குப் பிடிக்காது (ஓசி 6:3,6). பரலோகத்திற்குச் சென்ற பின்னரும் நாம் மோசேயின் பழங்காலப் பாட்டையும் பாடிக்கொண்டிருப்போம் (வெளி 15:3,4; உபா 32).

நான் உயர் ஆங்கிலிக்கன் திருச்சபைப் பின்னணியிலிருந்து வருகிறேன்; ஆனால் வெறுமனே ''உதடுகளின்'' சத்தம் அல்லது ''கைகளின்'' அசைவு என்றில்லாது ஆராதனையானது ''இருதயத்திலிருந்து'' எழுந்து வருமானால் அது பெந்தெகொஸ்தேயினரின் ஆராதனை முறையென்றாலும் சரி, பெந்தெகொஸ்தேயல்லாதோரின் ஆராதனை முறையென்றாலும் சரி, எனக்கு அதில் சந்தோஷமாய்ப் பங்குபெறுவதில் பிரச்னையேயில்லை! (ஏசா 29:13; 1:15).

# 36

# அமைதியாய் ஆராதிக்க முடியாதோ?

## Can we not Worship silently?

சத்தமாய் ஆராதிப்போரைப் பார்க்கும்போதெல்லாம் உயர் ஆங்கி லிக்கன் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்ட எனது மனதில் இதே கேள்வி தான் எழுந்தது. ஆனால் ஆவியின் அபிஷேகமும் ஆராதனை குறித்த வேதப் பகுதிகளின் ஆராய்ச்சியும் சத்தத்தை உயர்த்தி தேவனைத் துதிப்பது சரிதான் என்று எனக்குப் புரியவைத்துள்ளன.

''பலத்த காற்றில் கர்த்தர் இருக்கவில்லை... பூமியதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை ... அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப்பின் மெல்லிய சத்தம் உண்டாயிற்று'' (1 இரா 19:11-13). உரத்த சத்தத்திற்கு எதிராகப் பொதுவாய்க் காட்டப்படும் வசனம் இதுவே. அப்படியானால், பெந்தெகொஸ்தேயன்று பலத்த காற்றோ டும் அக்கினிமய நாவுகளோடும் ஆவியானவர் இறங்கினாரே, அதற்கு விளக்கமென்ன? (அப் 2:2,3). அதற்குச் சில நாட்களுக்குப் பின் சீடர் ஜெபித்துக்கொண்டிருந்த இடமே அசைந்ததே! (அப் 4:31).

''அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்'' என்று 46ஆம் சங்கீதம் சொல்லுகிறது (வச 10). ஆனால் தேவனுக்கு முன் ''கம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்'' என்று அடுத்த சங்கீதமே சொல்லுகிறது (47:1). ஆம், அமைதியாயிருக்க ஒரு காலமுண்டு; ஆர்ப்பரிக்க ஒரு காலமுண்டு! (பிர 3:7ஆ). தேவன் ''சுழல் காற்றிலிருந்து'' யோபுவுடன் பேசினார் (யோபு 38:1); ஆனால் தீர்க்கன் எலியாவுடன் ''மெல்லிய சத்தம்'' மூலம் பேசினார் (1 இரா 19:11,12).

ஆர்ப்பரித்து ஆராதிப்பதைப் பிரமாணங்களும் சடங்குகளும் நிறைந்துள்ள சபைகளால் சகித்துக்கொள்ளமுடியாது. குருத்தோலை ஞாயிறன்று திரள் கூட்டமான சீடரெல்லாரும் ஆனந்தமாய் மிகுந்த



சத்தத்தோடு தேவனைப் புகழ்ந்தபோது பரிசேயரில் சிலர் இயேசு விடம் சீடரை அதட்டச் சொன்னார்கள். ஆஹா, இயேசு அழகாய்ப் பதில் தந்தார்! ''இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்!'' என்றார் (லூக் 19:37-40). அமைதி எனப்படும் அபூர்வமான இடத் திலிருந்து வந்தவராச்சுதே அவர்! (வெளி 8:1).

சங்கீதப் புத்தகம்தான் இஸ்ரவேலரின் கீதப்புத்தகமாகும். கம்பீர மாய்ப் பாடி தேவனை ஆர்ப்பரிக்க அது திரும்பத் திரும்ப மக்களை அழைக்கிறது (சங் 66:1; 81:1). ''கம்பீர சத்தத்தை அறியும் மக்கள் பாக்கியமுள்ளவர்கள்'' என்று அது குறிப்பிடுகிறது (சங் 89:15). இவ் விதமாய் ஆராதிப்பதெல்லாம் பழைய உடன்படிக்கையின் காலத் துக்குத்தான் உரியதென தள்ளிவிடாதிருப்போம். புதிய உடன்படிக் கையின் துவக்கமே ஆனந்த துதியொலிதான் தெரியுமா? பெந்தெ கொஸ்தேயன்று எவ்வளவு சத்தம்! (அப் 2:1-6).

சாலொமோன் முடிசூட்டப்பட்டபோது இடம் அவர்கள் சத்தத் தினால் அதிரத்தக்கதாக மக்கள் மகா பூரிப்பாய் ஆர்ப்பரித்தார்கள் (1 இரா 1:39,40). நாம் ஆராதிக்கும்போது சாலொமோனிலும் பெரிய வரையல்லவோ முடிசூட்டுகிறோம்?

அமைதி, ஆர்ப்பரிப்பு இவை இரண்டுமே நமது உணர்வுகளின் வெளிப்பாடுகளாகும். இரண்டிற்கும் அதினதின் இடமுண்டு. பொது வாகவே தயங்காமல் வாய்திறந்து பேசுகிறவர்களுக்குச் சத்தத்தை உயர்த்தித் துதிப்பது இலகுவான காரியம். அடுத்த வகையினருக்கோ அப்படிச் செய்வது கடினம். ஆனால் ஆவியினால் நிரப்பப்பட்டபோது துதிப்பதில் ஒரு விடுதலை அடைந்துள்ளதாக இரண்டாம் வகையின ரில் பலர் சாட்சியிட்டுள்ளனர். ஒருவரையொருவர் கண்டனம் பண் ணாமல் உற்சாகப்படுத்தவேண்டும்.

பெந்தெகொஸ்தேயினரும் பெந்தெகொஸ்தேயினரல்லாதோ ரும் கூடுமானவரை சேர்ந்து ஆராதிக்கவேண்டும். அது பெந்தெ கொஸ்தேயினருக்குச் சமதளத்தில் நிற்கக் கால்களையும், பெந்தெ கொஸ்தேயினரல்லாதோருக்கு வானத்தில் பறக்கச் செட்டைகளை யும் கொடுக்கும்! இருவிதமாகவும் ஆராதிக்கக் கற்றுக்கொள்வது முதிர்ச்சியாகும். மட்டுமல்ல, மலட்டுக் கூச்சலுக்கும் மயான அமை திக்கும் தப்ப முடியும்!

# 37

# நடனமாடி ஆராதிக்கலாமா?

## Can we dance in Worship?

தாளத்திற்கேற்ப, பொதுவாக இசையுடன், உடலை அசைப்பதே நடனமாகும். தொன்றுதொட்டு நடனமானது தொழுகையோடு இணைந்து வந்திருக்கிறது. இஸ்ரவேலரது கீதப் புத்தகமான சங்கீதப் புத்தகம் நடனத்தோடு தேவனைத் துதிக்கும்படி பலமுறை தொழுவோரை அழைக்கிறது (சங் 149:3; 150:4).

நடனமென்பது ஒரு வெற்றிக் கொண்டாட்டமாகும். பார்வோனின் சேனைகள் மீது தேவ மக்களுக்குக் கிட்டிய வெற்றியை மிரியாம் முன்நடத்த இஸ்ரவேல் மகளிர் நடனத்தோடு கொண்டாடினார்கள் (யாத் 15:19-21). அம்மோனியரை முறியடித்துத் திரும்பிவந்த யெப்தாவை அவனது குமாரத்தி நடனத்தோடு வரவேற்றாள் (நியா 11:34). பெலிஸ்தியரைச் சங்காரம்பண்ணித் தாவீது திரும்புகையில் பெண்டிர் நடனத்தோடு ஆரவாரித்தார்கள் (1 சாமு 18:6,7).

நடனமென்பது மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் வெளிக்காட்டும் ஒரு செயலாகும். தேவமக்கள் பின்வாங்கிச் சீர்கெட்டுப்போனபோதோ தேவனது வீட்டைவிட்டு மகிழ்ச்சி ஒழிந்துபோனது. ஆடல் பாடலெல்லாம் அங்கலாய்ப்பாய் மாறிவிட்டதென எரேமியாவும் யோவேலும் புலம்பினர் (புல 5:15,16; யோவேல் 1:16). ''உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?'' என்று சங்கீதக்காரன் கதறினார் (சங் 85:6). புலம்பலெல்லாம் ஆடல் பாடலாகும் நாட்களுக்காய் அவர் ஏங்கினார் (சங் 30:11).

தேவனுடைய பெட்டி திரும்ப எருசலேமுக்குக் கொண்டுவரப்படுகையில் தாவீது தேவனுக்குமுன் நடனமாடினார் (2 சாமு 6:12-15). அது சபைக்குத் திரும்பிவரும் தேவமகிமைக்கு முன்னடையாளமாகும் (1 சாமு 4:21). நாம் இன்று எழுப்புதலின், ஆதிநிலையேகுதலின், காலங்களில் இருக்கிறோம். எனவே நடனமாடித் தேவனைத் துதிப்பது உயிர்பெறுகிறதென்பதில் ஆச்சரியமில்லை (எரே 31:11-13).



பாடுவதைப் போலவே, பயிற்சித்தும் நடனமாடலாம், பயிற்சியின்றியும் நடனமாடலாம். ஒன்றைவிட அடுத்தது மேலானதல்ல. யூத மக்கள் தங்களுக்கென்று ஒரு நாட்டியப் பாணியை வளர்த்துக் கொண்டார்கள். மேற்கத்திய நாடுகளின் பாணி வேறு. இந்திய நாட்டியமானது மென்மையும் கலையும் நிறைந்த அசைவுகளுக்குப் பெயர் பெற்றது. தொழுகையிலும் சாட்சி பகருதலிலும் தனி நடனங்களும் குழு நடனங்களும் இடம்பெறச் சபைகள் உற்சாகப்படுத்தவேண்டும். தேவாதி தேவனை ஆதிவாசி விசுவாசிகள் நடனத்தோடு சேர்ந்து ஆராதிப்பதைப் பார்த்திருக்கிறேன். என்னே பரவசமும் பக்தி விருத்தியும் நிறைந்த அனுபவமது!

மிக நேர்த்தியாக அமைக்கப்பட்ட வாத்தியக் குழுவோடு இரட்சணிய சேனையினர் (Salvation Army) தெருக்களில் சுவிசேஷப் பவனி செல்வர். கர்த்தரது புகழைக் கொண்டாடவும், அவரது புண்ணியங்களை அறிவிக்கவும் அனைத்துக் கிறிஸ்தவக் குழுக்களும் இவ்விதம் ஆடல் பாடலுடன் திறந்தவெளிப் பவனி செல்லவேண்டும் (சங் 68:24,25). குருத்தோலை ஞாயிறு பவனி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு (மத் 21:8-11). இவ்விதம் தேவனைத் துதிப்பது பரலோகில் சகஜமாயிருக்கும். இப்பொழுதே பயிற்சி பெறுவது நல்லது! (வெளி 7:9,10).

''புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு'' என்றெழுதினார் பிரசங்கி (பிர 3:1,4). தற்பரிசோதனையும் கண்ணீரோடுள்ள மனந்திரும்புதலையும் அடுத்துப் பொதுவாக ஆனந்த துதியொலி எழும்பும். ஆடல் பாடலுக்கு வழிவகுக்கும் இன்னொன்று ஆத்துமாதாயமாகும். நல்ல அர்த்தத்தில் ''நடனம்'' என்ற சொல் புதிய ஏற்பாட்டில் வரும் ஒரே இடம் இளைய குமாரன் சரிதையாகும் (லூக் 15:22-25). விண்தூதரும் இந்த நடனத்தில் சேர்ந்துகொள்வர்! (வச 10). இந்தியாவின் கிராமப்புறங்களில் அறுவடை நாட்டியங்கள் ஏராளமன்றோ?

ஆனாலும், எவ்வகை ஆராதனை முறையையும் எந்தவொரு சபையின்மீதும் நேரடியாகவோ மறைமுகமாகவோ திணிக்கக்கூடாது. தனது துதிபலிகளைத் தேவனுக்குச் செலுத்தத் தனக்கு விருப்பமான தொழுகை முறையைத் தெரிந்தெடுத்துக்கொள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் விடுதலையுண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித மனோதத்துவ நிலையுண்டு என்பதையும் மறந்துவிடக்கூடாது. நமது தேவன் பல்வகையில் பிரியப்படுகிறவர். ஒன்றாயிருத்தல் என்றால் ஒன்றுபோலிருத்தல் எனப்படாது. ஆண்களைவிடப் பொதுவாகப் பெண்கள் அதிகம் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். பழைய ஏற்பாட்டில் நடனமாடியது பெரும்பாலும் பெண்கள் என்பதற்கு இது ஒரு காரணமாயிருக்கலாம்!

ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆராதிக்கும் புதிய ஏற்பாட்டுச் சபைகளில் அந்தந்த கலாச்சாரம் ஒத்துக்கொள்ள முடியாத வழிபாட்டு முறைகள் அகற்றப்பட வேண்டும். சகலமும் ''ஒழுங்கும் கிரமமுமாய்'' செய்யப்பட வேண்டும்! (1 கொரி 14:33,40).

தொன்றுதொட்டுப் புராதனச் சபைகள் பயன்படுத்திவரும் ''கீர்த்தனைகள்'' எனும் புத்தகத்திலிருந்து ஒரு பாடல் (77) —

*என்ன என் ஆனந்தம், என்ன என் ஆனந்தம்!*
*சொல்லக் கூடாதே;*
*மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்*
*மன்னித்து விட்டாரே!*

*கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்*
*மகிழ் கொண்டாடுவோம்;*
*நாடியே நம்மைத் தேடியே வந்த*
*நாதனைப் போற்றிடுவோம்!*

— T. சத்தியநாதன், தஞ்சை



# 38

# பெண்கள் கரங்களை உயர்த்தி ஆராதிக்கலாமா?

## Can women lift hands in Worship?

ஆடவரும் பெண்டிரும் சபையில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென நடைமுறை ஆலோசனைகளைத் தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதும்போது, ''ஆண்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்று குறிப்பிட்டார் (1 தீமோ 2:8). அடுத்த வசனத்திலேயே பெண்கள் தகுதியான உடையுடுத்தவும், வெளியலங்காரத்திலல்ல நற்குணத்திலேயே அதிகக் கவனம் செலுத்தவும் வேண்டுமென அறிவுறுத்தினார் (வச 9). இப்படி எழுதப்பட்டிருப்பதால், ஆண்களைப்போல் பெண்களும் கைகளை உயர்த்தி ஜெபிக்கலாமா, ஆராதிக்கலாமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பெண்களுக்குக் கரங்களை உயர்த்தி ஆராதிக்க அனுமதியில்லை என்பது இங்கு பவுலின் கருத்தாய்த் தெரியவில்லை. சொல்லப்போனால், 9ஆம் வசனம் ''பெண்களும்'' என்றுதான் துவங்குகிறதேயன்றி ''பெண்களோ'' என்றில்லை! கரங்களை ஜெபத்தில் ஆண்கள் மட்டுமே உயர்த்தலாம் என்று சொல்லப் பவுல் இங்கு விழையவில்லை என்பது தெளிவு.

துதிக்கவும் ஜெபிக்கவும் கரங்களை உயர்த்துவது பொதுவான எபிரெயப் பழக்கம். மோசே பார்வோனிடம், ''என் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்'' என்றார் (யாத் 9:29). ''என் விண்ணப்பம் உமக்குமுன் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப் பலியாகவும் இருக்கட்டும்'' என்று தாவீது ஜெபித்தார் (சங் 141:2). ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து ஜெபிக்கும்போது சாலமோன் ''வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்தார்'' (1 இரா 8:22). எஸ்றா உபவாசத்துடன் தேவனுக்குமுன் முழங்காலிட்டு அவரை நோக்கித் தன் கை

களை விரித்தார் (எஸ்றா 9:5). யூதாவின் துன்மார்க்கத்தின்மீது கோபங்கொண்ட தேவன், ‘‘நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்’’ என்றார் (ஏசா 1:15).

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, ஜெபத்தில் கரங்களை உயர்த்தும் அல்லது விரிக்கும் இப்பொதுவான பழக்கம் ஆண்களுக்கு மட்டுமே இருந்ததென்று சொல்ல முடியாது. ‘‘மிரியாம் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; பெண்கள் யாவரும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவள் பின்னே புறப்பட்டுப் போனார்கள்’’ (யாத் 15:20). கைகளையே உயர்த்தாமல் இப்படி நடனமாடிச் செல்வது சாத்தியமா? அப்படியே, புதிய தளபதியை மெச்சிக்கொண்டு அரசன் சவுலை வாழ்த்துவதற்காகப் பெண்கள் ‘‘ஆடல் பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் மகிழ்ச்சியாய் எதிர்கொண்டு வந்தார்கள்’’ (1 சாமு 18:6). கைகளைத் தொங்கவிட்டுக் கொண்டோ மடித்துக்கொண்டோ இவ்வளவு குதூகல ஆட்டம் முடியுமா, கற்பனை செய்துபாருங்கள்! குருத்தோலைகளைக் கைகளில் பிடித்துக்கொண்டு இயேசுவுக்கு ஓசன்னா பாட வந்த பெருங்கூட்டத்தில் பெண்களில்லையோ? (யோ 12:12,13).

இறுதிக்கால அருள்மாரிக்காய் விண்ணப்பங்களை ஏறெடுக்க மணமகன் மட்டுமல்ல, மணமகளும் வெளியே வரவேண்டுமாம் (யோவேல் 2:16). இந்த அருள்மாரியில் குமாரர் மட்டுமல்ல, குமாரத்திகளும், ஊழியக்காரர் மட்டுமல்ல, ஊழியக்காரிகளும் நனைவர் (அப் 2:16-18).

ஆதிவாசிக் கலாச்சாரத்தில், ஆண்கள் வாத்தியங்கள் வாசிக்க, பெண்கள் நடனமாடுவர். பொதுவாக ஆண்களைவிடப் பெண்கள் தான் நேர்த்தியாய் நடனமாடுவாரென்பது யாவரும் அறிந்த உண்மை. மிஷனரிப் பணித்தளங்களின் ஆராதனைகளில் ஆதிவாசி நடனத்தை ஊக்குவிக்கிறோம். அது அழகாயிருக்கும்!

சேலை உடுத்தும் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களோ, குறிப்பாக முந்தானையை வைத்துதான் முக்காடு போடவேண்டியதிருக்கும் நிலையில், பெண்கள் துதிக்கும்போது கரங்கள் உயர்த்துவதை எதிர்ப்பர். சல்வார் அல்லது உடுப்புகள் போடுவோரிடையே இப்பிரச்னை



இல்லை. எப்படியென்றாலும் ஜெபிக்கும்போது ஆண்கள் தங்கள் கண்களை மூடித்தானேயிருக்கவேண்டும். ஆனாலும் எந்த உடற்பாவனையும் மறுபாலரைக் கவரும் வகையில் அமையாது பார்த்துக் கொள்ளவேண்டியது ஆண்-பெண் இருவருக்குமுண்டு! அதிலும் இறுக்கமான கலாச்சாரத்திலுள்ளவர்கள்?

ஆராதிக்கும்போது சில பெண்களின் உடற்பாவனை வெளிப்பாடுகள் குறைவாகவேயிருக்கும். அவர்களை கரங்களைத் தூக்கவோ நடனமாடவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ வற்புறுத்தக் கூடாது. துதிக்கும்போது சரளமாய்க் கரங்களைத் தூக்கும் பெண்களைக் குற்றஞ்சாட்டக்கூடாது. இது உபதேசத்திற்கடுத்த காரியமே அல்ல. ‘‘சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய்ச் செய்யப்படட்டும்’’ (1 கொரி 14:40).

■

பழங்காலத்துக் கீர்த்தனைப் பாடல் —

*தந்தானைத் துதிப்போமே — திருச்*
*சபையோரே, கவி — பாடிப் பாடி*

*ஒய்யாரத்துச் சீயோனே — நீயும்*
*மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,*
*ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி*
*செய்குவையே, மகிழ் கொள்ளுவையே — நாமும் —*

*தூரம் திரிந்த சீயோனே — உனைத்*
*தூக்கியெடுத்துக் கரத்திலேந்தி,*
*ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை*
*அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!*

*சிங்காரக் கன்னிமாரே — உம்*
*அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,*
*மங்காத உன் மணவாளன் யேசுதனை*
*வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும் —*

— V. மாசிலாமணி ஐயர், திருவண்ணாமலை

# 39

# அக்கினி அபிஷேகம் என்றால் என்ன?

## What is the Baptism of Fire?

மத்தேயுவும் லூக்காவும் பரிசுத்த ஆவியானவரோடு அக்கினியையும் குறிப்பிட்டனர்; மாற்குவும் யோவானும் அக்கினியைக் குறிப்பிடவில்லை (மத் 3:11; லூக் 3:16; மாற் 1:8; யோ 1:33). திருமுழுக்கினன் யோவான் சொன்னதை இயேசு மேற்கோள் காட்டியபோது அக்கினியைக் குறிப்பிடவில்லை (அப் 1:5). ஏனென்றால், ஆவியின் அபிஷேகம் விசுவாசிகளுக்குரிய ஆசீர்வாதம்; அக்கினியின் எரிப்பு அவிசுவாசிகளுக்கு வரும் தண்டனை! பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து நடபடிகளில் முதல் முறையாக ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட நான்கு சம்பவங்களில் ஒன்றிலும் லூக்கா அக்கினியைக் குறிப்பிடவில்லை (8:16,17; 9:17; 10:44; 19:6).

ஆவியானவர்மூலம் கிறிஸ்து செய்யப்போகும் ஊழியத்தை திருமுழுக்கினன் யோவான் இவ்விதம் முன்னறிவித்தார்: ‘‘தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்’’—தூற்றும் காற்றின் பணி! ‘‘பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்’’ — எரிக்கும் அக்கினியின் பணி! (மத் 3:12). காற்றும் அக்கினியும் அடையாளங்களாகப் பெந்தெகொஸ்தே நாளில் காணப்பட்டன (அப் 2:2,3). அடுத்தடுத்து ஆவியானவர் ஊற்றப்பட்ட சம்பவங்களில் இவை இல்லை.

ஆவியானவர் தேவன். அவர் ‘‘பட்சிக்கிற அக்கினி’’ (எபி 12:29). அவர் தமது ‘‘எரிச்சலினால்’’ நமது வாழ்விலுள்ள விக்கிரகங்கள் அனைத்தையும் பட்சிக்கிறார் (உபா 4:23,24; யாத் 20:4,5). அவை யாவும் எரிக்கப்பட நமக்கும் கட்டளை கொடுக்கிறார் (உபா 7:5). நமது இருதயத்தில் அவருக்குரிய இடத்தை எதுவும், எவரும் எடுக்கப் பொறுக்கமாட்டார். எல்லாவற்றிலும் அவரே முதல்வராயிருக்கவேண்



டும்! (கொலோ 1:18). நாம் உலகத்தோடு சிநேகங்கொள்ளும்போது அவரது கோபம் பற்றியெரியும் (யாக் 4:4,5). அவபக்தியுள்ள ஏசா வம்சத்தாரை எரித்தொழிப்பதற்கு யாக்கோபு வம்சத்தாரை ‘‘அக்கினியாகவும்,’’ யோசேப்பு வம்சத்தாரை ‘‘ஜுவாலையாகவும்’’ தேவன் பயன்படுத்துவார் (ஒபதியா 17,18).

தேவன் ‘‘புடமிடும் அக்கினி’’ போன்றவர் (மல் 3:2,3). நம்மை வெள்ளியைப்போல புடமிட்டு நம்மைக் கனத்துக்குரிய பாத்திரமாகச் செய்கிறார் (2 தீமோ 2:21). புடமிடப்படும்போது வேதனையாகத் தானிருக்கும். அது பாடுகளின் ஞானஸ்நானம்! (லூக் 12:49,50). ஆனால் புடமிடும் குகை வழியே நாம் செல்லுகையில், பொன்னிலும் விலையேறப்பெற்ற நமது விசுவாசம் இன்னும் சுத்தமாகும் (1 பேது 1:6,7).

தேவனிடமிருந்து சூடான செய்திகள் கொண்டுவரும் திருவசனத்தால் நாம் திளைத்திருக்கும்போது, தீர்க்கன் எரேமியாவுடன் சேர்ந்து நாம் சொல்லக்கூடிய சாட்சி: ‘‘கர்த்தருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது’’ (எரே 20:9). ‘‘என் வார்த்தை அக்கினியைப்போல் இருக்கிறதல்லவோ?’’ என்று கர்த்தர்தாமே சவால் விடுகிறார் (23:29). உயிர்த்தெழுந்த கர்த்தர் எம்மாவூர் சாலையில் சீடர்களுக்குத் திருவசனத்தை விளக்கியபோது, அவர்களது அறிக்கை: ‘‘அவர் வேத வாக்கியங்களை நமக்கு விளக்கிக்காட்டியபோது நமது இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?’’ (லூக் 24:32).

‘‘பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தில்’’ நாம் தினமும் நடக்கையில், நாம் இயேசு போலாகும்வரை ஆவியானவர் அக்கினியைப் போல நம்மைச் சுத்தம் பண்ணிக்கொண்டேயிருப்பார் (2 கொரி 3:17,18). அக்கினி அபிஷேகம் என்று தனி அனுபவம் எதுவும் கிடையாது.

ஜெபிக்கும்போது அல்லது துதிக்கும்போது தங்கள் உடலில் ஓர் அனலை உணர்ந்ததாகச் சிலர் சாட்சி பகருகின்றனர். இவ்வித உணர்ச்சியான அனுபவங்களுக்கு எதிராக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் இதை அக்கினி அபிஷேகம் என்று சொல்வதற்கு வேதத்தில் இடமில்லை.

# 40

# அன்னிய பாஷை ஒன்றுதான் அடையாளமா?

## Are Tongues the only Sign?

அன்னிய பாஷை ஒன்றுதான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத் திற்கு ஒரே அடையாளம் என்று திருமறையில் உபதேசமாக நேரடிப் போதனை இல்லை. ஆனால் ஆவியின் அபிஷேகத்தை மக்கள் பெற்றபோது அன்னிய பாஷையில் பேசியதற்குப் போதுமான எடுத் துக்காட்டுகள் உண்டு—

பெந்தெகொஸ்தேயன்று ஆவியைப் பெற்ற 120 சீடரில் அத்தனை பேரும் ''வெவ்வேறு பாஷைகளில் பேசத் துவங்கினார் கள்'' (அப் 2:4). பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவின் மீதும் அவன் வீட்டார் மீதும் இறங்கியபோது அவர்கள் ''பல பாஷைகளில் பேசித் தேவனைப் புகழ்ந்ததை'' பேதுருவோடு வந்திருந்த யூத விசுவாசிகள் கேட்டனர் (அப் 10:45). எபேசுவிலிருந்த சீடர்மீது பவுல் கைகளை வைத்தபோது அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்தார்; அவர்கள் அன்னிய பாஷையில் பேசித் தீர்க்கதரிசனம் சொன் னார்கள் (அப் 19:6). பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியால் நிறைந்த அந்த வேளையில் அன்னிய பாஷையில் பேசியதாகக் குறிப் பிடப்படாவிட்டாலும், பின்னர் கொரிந்தியருக்கு எழுதுகையில், ''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்; இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்'' எனக் குறிப்பிட்டார் (1 கொரி 14:18; அப் 9:17,18). சமாரிய விசுவாசிகள் ஆவியைப் பெற்றபோது சீமோன் போன்றதொரு மாயவித்தைக்காரன் ''காணக் கூடிய'' அடையாளம் ஒன்றிருந்தது (அப் 8:17,18).

இந்த எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில், ஆவியின் அபிஷே கத்தை ஒருவர் பெறுகையில் அன்னிய பாஷையில் பேசப் *பொது*



*வாக* எதிர்பார்க்கலாம். ஆனால் இதற்கு நேரடியான ''உபதேசம்'' என்று ஒன்று இல்லாததால், அன்னிய பாஷையில் பேசாத எவரும், பேசும்வரை, ஆவியின் அபிஷேகம் பெறவில்லை என்று சொல்ல முடியாது.

ஆயினும் அன்னிய பாஷை பேசுதலில் தியான வாழ்வுக்கான ஆசீர்வாதம் மிகுதியாயிருப்பதால் ஒவ்வொரு விசுவாசியும் தேவனி டத்தில் இக்கிருபையை நாட ஊக்குவிக்கப்படவேண்டும். ஆவியின் ஒன்பது வரங்களில் பிரதானமாக ஜெபத்திலும் துதியிலும் தேவனை நோக்கிச் செயல்படுவது அன்னிய பாஷைதானே (1 கொரி 12:7-10; 14:13-17). மட்டுமல்ல, இதனால் பேசுகிறவனுக்கும் பக்திவிருத்தி உண்டாகிறது (1 கொரி 14:4). 1963இல் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றது முதல் தினமும் எனது தனி ஜெபத்தில் அன் னிய பாஷையில் பேசுகிறேன்; இதனால் புத்துணர்வு பெற்று உள் ளான மனிதனில் பலப்படுகிறேன் (ஏசா 28:11,12; யூதா 20).

அன்பும் பிற நற்பண்புகளும் இல்லாமல் அன்னிய பாஷை பேசு வதும் சாத்தியம் (1 கொரி 13:1-3). ஒருவரது ஆன்மீக நிலையை அன்னிய பாஷையை வைத்துக் கணித்துவிட முடியாது. மரமானது அதின் ''கனியினால்'' அறியப்படும் (மத் 12:33). கனிகள் *அத்துடன்* வரங்கள் என்று இரண்டும் சமநிலைப்படுத்தப்படவேண்டும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அன்னிய பாஷையில் பேசுவது ஒன்றுதான் அடையாளம் என்று சாதிப்போர் பொதுவாகச் செய்யும் தவறு என்னவென்றால், அருள்மாரிக் கூட்டங்களில் அபிஷேகம் பெற விரும்புவோருக்குப் பயிற்சி (coaching) கொடுக்கத் தொடங்கிவிடுவார்கள். ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாய்த்தான் இருக்கும்; ஆவியினால் பிறப்பதுதான் ஆவியாய் இருக்கும்'' என் பதை நாம் மறந்துவிடக்கூடாது (யோ 3:6). தானாகவே காரியங்கள் நடப்பது ஆவியானவர் ஊற்றப்படுகையில் ஒரு முக்கிய அடையாளம்.

(இப்பொருள்மீது இன்னும் விரிவான விளக்கங்கள் பெற 9ஆம் அத்தியாயத்தைப் படியுங்கள்.)

# 41

# அன்னிய பாஷைகள் ஒழிந்துவிட்டனவா?

## Has speaking in Tongues ceased?

''அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களாலும் ஒழிந்து போகும், அன்னிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோகும்'' (1 கொரி 13:8). இவ்வசனத்தைச் சுட்டிக்காட்டி அன்னிய பாஷை வரமானது சபையிலிருந்து எடுபட்டுப்போயிற்று என்று வாதாடும் பல கிறிஸ்தவருண்டு. இதை நாம் இங்கு ஆராய்வோம்.

□ சபை பிறந்த பெந்தெகொஸ்தே அன்றுதான் அன்னிய பாஷைகள் முதல் முறையாகப் பேசப்பட்டன. சீடர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசத் ''தொடங்கினார்கள்'' என்று சரித்திராசிரியன் லூக்கா குறிப்பிடுகிறார் (அப் 2:4). குறிப்பாக புது விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற வேளைகளில் இவ்வனுபவம் தொடர்ந்து வெளிப்பட்டதையும் அவர் எழுதியுள்ளார் (அப் 10:44-46; 19:1-6). கடந்த இருபது நூற்றாண்டு சபைச் சரித்திரத்தில் நவநாவுகளில் பேசுவது இல்லாதிருந்த காலம் ஒருபோதுமில்லை. எல்லாச் சபைப்பிரிவுகளிலுமிருந்து கிறிஸ்தவர்கள் அதிகமதிகமாய் இவ்வரத்தைப் பெற்றனுபவிக்கிறார்களென்பதே கடைசி நாட்களின் கடைசி நொடிகளுக்குள் வந்துள்ள நாம் காணுவதாகும். அனைத்துலக நற்செய்திப்பணியைக் குறித்துப் பேசும்போதல்லவா இயேசு நவநாவுகளின் வரத்தைக் குறிப்பிட்டார்? (மாற் 16:15-17). எனவே, அன்னிய பாஷைகள் அல்லது நவநாவுகள் ஓய்ந்துவிட்டன என்ற கருத்திற்குச் ***சரித்திரம்*** சாதகமாயில்லை.

□ இரண்டாவது, புதிய ஏற்பாட்டின் ***உபதேசமும்*** பாஷைகள் ஒழிந்துவிட்டதாக ஒன்றும் சொல்லவில்லை. பெந்தெகொஸ்தேயை அடுத்து 25 ஆண்டுகட்குப் பின்னரே கொரிந்தியருக்குப் பவுலின் முதல் நிருபம் எழுதப்பட்டது. ஏற்கனவே இவ்வரம் எடுக்கப்பட்டிருக்குமானால் அதைக் குறித்து அவ்வளவு விரிவாக அவர் ஏன் விளக்க



வேண்டும்? பவுலைப் பொறுத்தவரை, ''நிறைவானது வரும்போது தான்'' அன்னிய பாஷைகள் ஒழியும் (1 கொரி 13:8-10). தனித்தும் மொத்தமாகவும் நாம் இன்னும் வளர்ந்துகொண்டுதானிருக்கிறோம். பூரணத்தையோ கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியையோ நாம் இன்னும் அடையவில்லை (எபே 4:11). கிறிஸ்து வெளிப்படும் போது நாம் அவரைப் போலிருப்போம் (1 யோ 3:2). அச்சம்பவம் துவக்கி நாம் அவரை முகமுகமாய்த் தரிசித்து அவரோடு முகமுகமாய்ப் பேசுவோம். அச்சமயத்தில் நமது அறிவு நிறைவாயிருக்கும்; அப்பொழுது விசுவாசமோ எந்த வரமோ தேவையிராது. அன்பு மட்டும் பரலோக மணவாளனுக்கும் அவரது மணவாட்டிக்குமிடையில் நீடித்து உச்ச நிலையடையும். எனவேதான், விசுவாசம், நம்பிக்கை ஆகியவற்றையும்விட அன்பு மேலானது எனப்படுகிறது! (1 கொரி 13:9-13).

□ மூன்றாவது, நவநாவுகளின் ***பயன்கள்*** இன்று அதிகமதிகமாய்த் தேவைப்படுகின்றன. இப்பொல்லாத நாட்களில் நாம் என்றுமில்லாத அளவு பலப்பட வேண்டிய பயிற்சி ஜெபமாகும் (எபே 6:13,18). அன்னிய பாஷைகள் ஜெபத்தையும் துதியையும் ஆழப்படுத்துகின்றன (1 கொரி 14:2,14,15). ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியுண்டாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நவநாவுகளில் பேசுவது சுய பக்திவிருத்தியுண்டாக்குவதற்கான ஓர் ஏதுவாகும் (1 கொரி 14:4). நான் பக்திவிருத்தியடையும்போது மற்றவர்களுக்குப் பணிசெய்ய நல்ல ஆயத்தமுள்ளவனாகிறேன். ஆவியின் பிற வரங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான உள்ளான விடுதலையைப் பெற்றுக்கொள்ள நவநாவுகள் உதவுகின்றன என்பது பொதுவாகக் கண்டறிந்தது (அப் 19:6). ஏசாயா இதை ''இளைப்பாறுதல்'' என்றும் ''ஆறுதல்'' என்றும் அழைக்கிறார் (ஏசா 28:11,12).

நமது அனுபவம் அல்லது அனுபவமின்மைக்கு ஏற்றாற்போல் திருமறையை விளக்கக்கூடாது. மாறாக, திருமறையின் தெளிவான போதனையைச் சிறுபிள்ளைபோல் ஏற்றுக்கொண்டு, நமக்காக நமது பரம பிதா வைத்திருக்கிற ''நன்மையானவை'' யாவற்றையும் ஆசையாய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும் (மத் 7:7-11; லூக் 11:13).

(இப்பொருளை இன்னும் விரிவாக
9ஆம் அத்தியாயத்தில் படிக்கலாம்.)

**42**

# வரங்கள் ஒன்பதா, பத்தொன்பதா?

## Nine gifts or nineteen?

இன்றையப் போதனைகளிலும் புத்தகங்களிலும் திரும்பத் திரும்ப ''ஆவியின் ஒன்பது வரங்கள்'' எனும் சொற்றொடரே பயன் படுத்தப்படுவதால், ஆவியின் வரங்கள் ஒன்பதுதானென்றும் அவை களில் ஒன்றாவது தனக்கில்லையென்றால் தான் வரமற்றவன் என்றும் சராசரி விசுவாசி நினைக்கிறான்! ஆனால் ரோமர் 12, 1 கொரிந்தியர் 12, எபேசியர் 4, 1 பேதுரு 4 ஆகிய அத்தியாயங்களில் வரப்பட்டியல்களைக் கவனித்துப் படித்தால் இப்பட்டியல்களெல் லாம் மாதிரிகள்தானென்றும், சொல்லப்பட்ட வரங்களெல்லாம் எடுத் துக்காட்டுகள்தானென்றும் (suggestive) தெளிவாகும். முழுமையான (exhaustive) பட்டியல் எதுவுமில்லை; எல்லாமே எடுத்துக்காட்டான வைதான். வானவில்லின் நிறங்கள்போல இவ்வரங்கள் ஒன்றுக் கொன்று நெருக்கமும் இணக்கமுமானவை.

திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டவற்றை விட்டுவிட்டால், மேற் கூறிய நான்கு அத்தியாயங்களின் பட்டியல்களிலிருந்து பத்தொன் பது வரங்களை வரிசைப்படுத்தலாம் — தீர்க்கதரிசனம், போதகம், ஆலோசனை, பகிர்தல், தலைமைத்துவம், இரக்கம், ஞானம், அறிவு, விசுவாசம், சுகமளிப்பு, அற்புதங்கள், பகுத்தறிதல், பாஷைகள், பாஷை வியாக்கியானம், உதவிகள், ஆளுகை, அப்போஸ்தலத்துவம், நற்செய்தியறிவிப்பு மற்றும் மேய்ப்பு. தமது வரங்களாக ஆவியான வர் இவ்வளவுதான் கொடுக்க முடியுமானால் அவர் பரம ஏழைதான்! இச்சிந்தை ஒழிக! ''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிற தற்கும் மிகவும் அதிகமாய்ச் செய்ய வல்லவர் அவர்!'' (எபே 3:20).

வேதத்தில் அங்குமிங்கும் வேறு பல வரங்களும் குறிப்பிடப்பட் டுள்ளன. ஆனால் நாம் அவைகளை அடையாளங்காணத் தவறு கிறோம். மணமாகாது தனிமையாயிருத்தல் ஓர் எடுத்துக்காட்டு.



இதைப் பவுல் ''தேவனால் அருளப்பட்ட வரம்'' என்றழைக்கிறார் (1 கொரி 7:7). விருந்தோம்பல் இன்னொரு வரமாகும் (1 பேது 4:9,10). விசுவாசிகள் யாவருமே உபசரிப்பவர்களாக இருக்கவேண்டும். ஆனால் ஒரு சிலர் நம்மால் புரிந்துகொள்ளமுடியாத அளவு உபசரிப்பில் தேறி யவர்களாயிருக்கிறார்களல்லவா? அது இன்று வெகுவாய்த் தேவைப் படும் சிறப்பு வரமாகும்! உபசரிப்பு என்பதின் மூலப்பொருள் அன்னி யருக்குக் காட்டும் அன்பாகும். இது எளிதோ? அடுத்து, மன்றாட்டு ஜெப வரம். எல்லாரும் ஜெபிக்கவேண்டும்; ஆனால் எல்லாராலும் எரேமியாவைப்போல் புலம்பவோ, பவுலைப் போல் துக்கங்கொண்டி ருக்கவோ முடியாது (புல 3:48-50; ரோ 9: 1-3; 10:1). ரீஸ் ஹவல்ஸ் (1879-1950), ஜெபிக்கும் ஹைடு (1865-1912) போன்ற பக்தருக்கு இவ்வரமிருந்தது. பாடலியற்றி இசையமைக்கும் புராதன வரத்தைப் பரிசுத்த ஆவியானவர் இன்று மகிமையாக மீட்டு வருகிறார் (எபே 5:18-20). இது தாவீதின், அதுபோல் தந்தை பெர்க்மன்ஸ் போன் றோரின், வரமாகும்! (2 சாமு 23:1,2). கைவினைக் கலைத்திறன் அதிகமாக விரும்பப்படத்தக்க இன்னொரு வரமாகும் (யாத் 31:1-5; 35:30-35). படிப்பறிவற்ற மேய்ப்பர்களும், மீனவர்களும் எழுதும் வரமின்றி வேத வாக்கியங்களை எழுதியிருக்க முடியுமோ? (2 பேது 1:20,21). இப்படி வரப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஒரு வாளி வைத்துக் கடல் நீரையெல்லாம் காலிபண்ண முயன்ற சிறு வனைப்போல் நாமிருக்கவேண்டாம்!

ஆவியின் வரங்களை விஞ்ஞான ரீதியில் வரையறைகள், வரை படங்கள் கொண்டு நாம் விளக்க முயன்றது இஸ்ரவேலரின் பரிசுத் தரை மட்டுப்படுத்திவிட்டது. ''வரம்பெற்ற'' சிறுபான்மையினரை ''வரமற்ற'' பெரும்பான்மையினர் ஆவென்று பார்த்துக்கொண்டிருப் பதுதான் அதின் விளைவு! ஆவியின் வரங்கள் ஒன்பதுமல்ல, பத் தொன்பதுமல்ல, தொண்ணூறுமல்ல, அது எண்ண முடியாதது. நமது வல்லமை முகாம்களின் பாடங்களைத் திருத்துவோம்; ஒவ்வொரு வருக்குள்ளும் மறைந்திருக்கும் வரங்களை அடையாளம் காண போம்; சபையின் அமைதிப் பெரும்பான்மையினரை அனல்மூட்டி யெழுப்பிச் செயல்வீரராக்குவோம். அப்பொழுது மட்டுமே சபை யானது இவ்வுலகில் தனது பொறுப்புப் பணியை நிறைவேற்றி முடிக்க முடியும்.

(கூடுதல் விளக்கம் பெற 26ஆம் அத்தியாயத்தைப் படியுங்கள்.)

**43**

# கைகளை வைக்குதல்பற்றி ...?

## What about Laying on of Hands?

கரங்கள் வைக்கப்படுவது திருமறையில் முதலாவது யோசேப்பின் இரு குமாரரை யாக்கோபு ஆசீர்வதித்த வேளையில் வருகிறது (ஆதி 48:14). அப்படியானால் கரங்களை வைப்பது தொன்றுதொட்ட பழக்கமாயிருந்திருக்கிறது. பாவ நிவாரணபலி, சர்வாங்க தகனபலி போன்றவற்றிற்காய் மிருகங்கள் கொல்லப்படுமுன் ஆசாரியர்கள் அவைகள்மீது கரங்களை வைக்கவேண்டுமெனத் தேவன் கட்டளையிட்டபோது இப்பழக்கம் ஒரு மார்க்கச் சடங்காய் மாறியது (லேவி 8:14,18,22; 16:21). நியாயப்பிரமாணக் காலம் முழுவதிலும் இச்சடங்கு தொடர்ந்தது (எண் 8:12).

தலைவர்களை நியமிக்கவும் கரங்கள் வைக்கப்பட்டன. தேவ மக்களை வாக்குத்தத்த நாட்டிற்குள் வழிநடத்திச் செல்ல யோசுவா நியமிக்கப்பட்டபோது மோசே அவர்மீது தனது கரங்களை வைத்தார் (எண் 27:22,23). சபையின் நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க முதற்குழு உதவிக்காரரை அப்போஸ்தலர் நியமிக்கும்போதும் அவர்கள் இம்முறையைப் பின்பற்றினர் (அப் 6:6).

நோயுற்றோரைச் சுகமாக்க இயேசு அவர்கள் மீது கரங்கள் வைத்ததைச் சுவிசேஷப் புத்தகங்களில் அடிக்கடி வாசிக்கிறோம் (மாற் 6:5; லூக் 4:40). நற்செய்திப் பேராணை கொடுக்கும்போது அவர், ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: ... வியாதிக்காரர் மீது கைகளை வைப்பார்கள், அவர்கள் சுகமடைவார்கள்'' என்றார் (மாற் 16:17,18). அப்போஸ்தலர் தங்கள் ஊழியங்களில் இதைச் செய்தனர் (அப் 28:8). மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கும் அப்போஸ்தலர் அவர்கள் மீது கைகள் வைத்தனர்



(அப் 8:17; 19:6). தங்கள் பிள்ளைகள் மீது இயேசு தமது கரங்களை வைத்து அவர்களை ஆசீர்வதிக்கப் பெற்றோர் விரும்பினர்; அவர் அதின்படிச் செய்தார் (மத் 19:13-15).

கரங்களை வைக்கும் இந்த யூதப் பழக்கம் இறுதியாகச் சபைக்குக் கிறிஸ்துவின் மூல உபதேசங்களில் ஒன்றாக மாறியது (எபி 6:2). ''ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வைக்காதே'' என்று பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவை எச்சரித்தார் (1 தீமோ 5:22). அதாவது, விருப்பம்போல் எல்லார்மீதும் கரங்கள் வைக்கப்படக்கூடாது என்பது போதனை. அத்தியாவசியமான வேளைகளில் மட்டும் கரங்கள் வைக்கப்படவேண்டும். ''ஒரு வார்த்தை மட்டும்'' சொல்லி மக்களுக்குச் சுகம் வரப்பண்ணலாம் (மத் 8:8; சங் 107:20). கரங்கள் வைக்கப்படாமல் கொர்நேலியு குடும்பத்தார் மீது ஆவியானவர் இறங்கினார் (அப் 10:45). தமது சித்தத்தின்படியே ஆண்டவர் தமது ஆவியானவர் மூலம் வரங்களையும் ஏதுக்களையும் தமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் அருளிச்செய்கிறார் (1 கொரி 12:4-11). கிறிஸ்து பரமேறியதால் தேவப்பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த சிலாக்கியம் இது (எபே 4:7,8). நமக்குள் தங்கியிருக்கும் ஆவியானவருக்குள் வரங்கள் தங்கியிருக்கின்றன. ''ஆவியின் அனுக்கிரகம் (வெளிப்பாடு)'' அந்தந்தச் சூழலின் தேவைக்கேற்ப பொருத்தமான வரத்தின் மூலம் செயல்படும் (1 கொரி 12:7அ). உள்ளே தங்கியிருக்கும் இவ்வல்லமை வெளிப்பட கரங்கள் வைக்கப்பட வேண்டியதில்லை. தனி நபர்கள் ஜெபத்துடன் விசுவாசத்தில் இவ்வரங்களைச் செயல்படுத்த வேண்டும். ஆனால், முக்கியமான ஊழியப் பொறுப்புகளில் நியமிக்கப்படுவோர்மீது மூப்பர்கள் கரங்களை வைத்துக் குறிப்பான வரங்கள் அருளப்பட உதவலாம் (1 தீமோ 4:14; 2 தீமோ 1:6; உபா 34:9).

சட்டென்று ஒருவர் மீதும் கரங்களை வைக்கக் கூடாதென்று பவுல் ஓர் ஊழியனை எச்சரித்தார் (1 தீமோ 5:22). சரளமாக எல்லாப் பிரசங்கிகளிடத்திலும் தங்கள் தலைகளைக் கொடுக்கக்கூடாதென்று நான் மக்களை எச்சரிக்கிறேன். நெற்றியில் கை வைத்துக் கீழே தள்ளப்படலாம், ஜாக்கிரதை!

# 44

# பிரசங்கிமார் மக்கள்மீது ஊதலாமா?

## Can preachers blow on people?

ஆவிக்குரிய வட்டாரங்களில் காணப்படும் திருமறைக்கு மிஞ்சிய கண்டுபிடிப்புகளைக் குறித்துத் திகைத்து நிற்கிறேன். வேதாகமக் காலங்களில் அப்போஸ்தலத் தலைவர்களுக்குச் சற்றும் தெரிந்திராத காரியங்கள் தயக்கமேதுமின்றி இன்று அப்பியாசிக்கப்படுகின்றன. இன்றையப் போக்கின் ஆபத்தை உணராத சபையினருக்காக என் இருதயம் புலம்புகிறது.

''வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?'' கடினமான கேள்விகள் கேட்கப்பட்டபோது கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் திருப்பிக் கேட்டது இதுதான் (லூக் 10:25,26; ரோ 4:1-3; கலா 4:30). திருவிவிலியமே நமக்கு முடிவான அதிகாரம்; அதற்கு மிஞ்சிப் போகத் துணியாதிருப்போம்.

மனிதன்மீது யாராவது ஊதினதாக வேதத்தில் இரு சம்பவங்கள் மட்டுமே உண்டு. அவையிரண்டிலும் ஊதியது ''தேவனே.'' ஆதியாகமம் 2:7, ''தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனிதன் ஜீவாத்துமாவானான்.'' யோவான் 20:22, ''இயேசு அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.'' தேவனே ஜீவனுக்கு அதிபதியானவர்; எனவே அவர் மனிதன்மீது ஊதினார் (யோ 1:4). மரணத்திற்குப்பின் மனிதனது ஆவி தேவனிடத்திற்குத் திரும்பிச்செல்லும் (பிர 12:7). இயேசுவே பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் கொடுக்கிறவர்; எனவே அவர் முன்னடையாளமாகத் தமது சீடர்மீது ஊதினார் (யோ 1:33; அப் 2:33). எனவே, மனிதர்மீது ஊதும் செயல் தேவன் ஒருவருக்கே உரியது. சாவுக்



கேதுவான மனிதன் எவனும் அதைச் செய்யத் தூண்டும் உபதேசம் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேதத்தில் எங்கும் கிடையாது.

உலர்ந்த எலும்புகளை மாபெரும் சேனையாக உயிரடையச் செய்யக் காற்றுத்திசை நான்கிலுமிருந்து ஆவி வந்ததாக எசேக்கியேல் 37இல் வாசிக்கிறோம். இங்கும் எலும்புகள் மீது ''ஊதும்படித்'' தீர்க்கதரிசிக்குச் சொல்லப்படவில்லை. மாறாக, எலும்புகளையும் ஆவியையும் நோக்கிப் ''பேசும்படியே'' அவருக்குக் கட்டளை வந்தது (வச 7,9,10). ஆம், மக்களுக்குப் பிரசங்கிப்பதும், அவர்களை ஆவியினால் நிரப்பும்படித் தேவனை நோக்கி ஜெபிப்பதுமே நாம் செய்யவேண்டியதாகும். அப்போஸ்தலர் அதையே செய்தனர் (அப் 8:14-17; 9:17,18; 10:44; 19:1-6). அப்போஸ்தலர் ஒருமுறையாவது மக்கள்மீது ஊதியிருந்தால்கூட, கரங்கள் வைக்குதலை அத்தனை முறை குறிப்பிட்ட லூக்கா கட்டாயம் அப்போஸ்தலர் மக்கள் மீது ஊதினர் என்றெழுதி வைத்திருப்பார்!

இன்றைய இத்துணிச்சலான செயல்களுக்கு மூலக்காரணம் நவீன விசுவாசக் கொள்கைக் கூட்டமே (Faith Movement) என்பது தெளிவு. ''உனக்குள் ஒரு கடவுள் இருக்கிறாரென்பதல்ல, நீயே ஒரு கடவுள்'' என்று இக்கொள்கைக் கூட்டத்தின் பிரபலப் பிரசங்கியார் ஒருவர் கூறியுள்ளார்! இவர் தனது தத்துவத்திற்கு சங்கீதம் 82:6ஐயும், அதை யோவான் 10:34-36இல் இயேசு மேற்கோள் காட்டியதையும் ஆதாரமாகக் கொள்கிறார். பூவுலக மன்னர்களையும் நீதிபதிகளையும் தேவனது பிரதிநிதிகளாகக் குறிப்பிடுவதுதான் இச்சங்கீதப்பகுதி போதிப்பதாகும். அவர்கள் முடிவில் மனிதரைப்போல் செத்து விழுவார்களென்றும் அது கூறுகிறது! (வச 6). (ரோமர் 13:1-6ஐயும் வாசியுங்கள்). ஒரு விவாதத்திற்கென்றே இயேசு சங்கீதத்திலுள்ள அவ்வசனத்தைக் கையாடினார். அந்திக்கிறிஸ்துவின் குணங்களில் ஒன்றுகூட நம்மைப் பிடித்துவிடாதபடி நாம் விழிப்பாயிருக்கவேண்டும் (2 தெச 2:3-12).

''அப்படியானால், பிரசங்கிமார் மக்கள்மீது ஊதும்போது அசாதாரண காரியங்கள் நடைபெறுகின்றனவே, அதைப்பற்றி என்ன சொல்

கிறீர்கள்?'' என்று சில விசுவாசிகள் கேட்கின்றனர். ''முடிவை வைத்து முறை சரியென்று சொல்ல முடியாது'' என்பதே அதற்கு எனது பதில். கிறிஸ்தவ வாழ்விலும் ஊழியத்திலும் ''என்ன'' என்பதைவிட ''எப்படி'' என்பதே காரியம் (1 கொரி 3:9-14; 2 தீமோ 2:5).

நான் ஒரு பெரிய வேதப் பண்டிதன் அல்ல; ஐம்பதாண்டுகளுக்குமேல் (1962-2018) வேதத்தைப் படித்துக்கொண்டிருக்கும் ஒரு மாணவன்தான். பிரசங்கிமார் மக்கள் மீதோ மைக் மீதோ ஊதும் செயலை என்னால் ஒத்துக்கொள்ளவே முடியவில்லை. மைக் வேலை செய்கிறதா என்று சோதிப்பதற்காகக்கூட அதின்மீது ஊதுவது பொறியியலின்படி சரியல்ல!

■

பழங்காலத்துப் பாமாலை (367) —
*(God is here and that to bless us ...)*

*ஆண்டவா பிரசன்னமாகி*
*ஜீவன் ஊதி உயிர்ப்பியும்;*
*ஆசை காட்டும் தாசர் மீதில்*
*ஆசீர்வாதம் ஊற்றிடும்.*

*அருள்மாரி எங்கள்பேரில்*
*வருஷிக்கப்பண்ணுவீர்;*
*ஆசையோடு நிற்கிறோமே,*
*ஆசீர்வாதம் ஊற்றுவீர்.*

*தாசர் தேடும் அபிஷேகம்*
*இயேசுவே! கடாட்சியும்;*
*பெந்தெகொஸ்தின் திவ்ய ஈவை*
*தந்து ஆசீர்வதியும்.*

*— James Milton Black, 1856-1938*



# 45

# ஆவியில் தரையில் விழுதலைப்பற்றி ...?

## What about being "slain in the Spirit?"

நான் இளைஞனாயிருந்தபோது (1965) ஒரு சுவிசேஷகி நடத்திக்கொண்டிருந்த சுகமளிக்கும் கூட்டமொன்றில் இக்காரியத்தை முதலாவது பார்த்தேன். அவர்களது தொடுதலுக்காக மக்கள் முழங்காலில் வரிசையாய் நின்றனர்; அவர்களில் பெரும்பாலானோர் சுகமடையாவிடினும் ஏறத்தாழ எல்லாருமே சரிந்துவிழுந்தனர். அக்கூட்டத்தில் தன்னார்வலனாக உதவிக்கொண்டிருந்த எனக்கு ஏனோ இப்பகுதியில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள ஒரு தயக்கமிருந்தது.

தரையில் விழும் இவ்வனுபவம் இன்று வெகுவாய்ப் பரவிப் பிரபலமடைந்து வருகிறது. இதைக் குறித்த மக்கள் எண்ணம் பெருமளவில் வேறுபட்டுள்ளது. சிலர் இதைத் தேவனிடமிருந்து வரும் ''புதிய காரியம்'' என அணைத்துக்கொள்கின்றனர்; மற்றவர்களோ இதைப் பிசாசின் வஞ்சகமென வெறுத்துத் தள்ளுகின்றனர். எதுதான் சரி?

வேத வசனத்தில் ''ஆவியில் விழுதல்'' என்று ஒருமுறைகூட குறிப்பிடப்படாதிருப்பது ஆச்சரியமானது. இவ்வனுபவத்தைச் சரியென்று சொல்லப் பொதுவாகக் கையாளப்படும் வசனங்கள் எதுவும் இதைக்குறித்த நேரடியான தெளிவான போதனையைத் தரவில்லை. அவற்றில் முக்கியமானவற்றை இங்கு கவனிப்போம் —

தேவ மகிமையின் தரிசனத்தைக் கண்டு தேவ சத்தத்தைக் கேட்டபோது தீர்க்கன் எசேக்கியேல் முகங்குப்புற விழுந்தார். ஆனால் ஆவி அவருக்குள் வந்தபோதோ அது அவரைக் ''காலூன்றி'' நிற்கும்படிச் செய்தது (எசேக் 1:28-2:2). அப்படியே, தானியேலும் பெரிய தரிசனமொன்றைக் கண்டு பரம சத்தத்தைக் கேட்டபோது,

தேவனுக்குமுன் தரையிலே முகங்குப்புற விழுந்தார். ஒரு கை அவரைத் தொட்டபோதோ அவருக்குக் ''காலூன்றி நில்'' என்று சொல்லப்பட்டது (தானி 10:8-11). இயேசுவின் மகிமையான தரிசனத்தை யோவான் கண்டபோது செத்தவன்போல் அவர் பாதத்தில் விழுந்தார். இயேசுவோ தமது வலது கரத்தை அவர்மீது வைத்துப் ''பயப்படாதே'' என்றார் (வெளி 1:17). தீர்க்கதரிசிகளின் இவ்விதத் தரிசன அனுபவங்கள் இணையற்றவை; இவற்றிற்கும் ''ஆவியில் விழுதல்'' எனப்படுவதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை. 120 ஆசாரியரின் ஆலய அனுபவம் 120 சீடரின் மேலறை அனுபவத்திற்கு அடையாளமானது. இரண்டிலும் யாருமே ''ஆவியில் விழவில்லை'' (2 நாளா 5:12-14; அப் 2:1-4).

மறுரூப மலையில் சீடர் தரையில் விழுந்தனர் (மத் 17:1-6). பூமியதிர்ந்து கல்லறை திறந்தபோது போர்ச்சேவகர் மரித்தவர்போல் கீழே விழுந்தனர் (மத் 28:2-4). இரண்டு சம்பவங்களும் ''பயத்தைக்'' குறிப்பவை. மாற்கு 3:11; 9:26,27 ஆகிய வசனங்கள் குறிப்பிடுவது பிசாசு பிடித்தவனின் அலைக்கழிப்புகள். சபையைத் துன்பப்படுத்தும் அகம்பாவியாகச் சவுல் கீழே விழுந்தார் (அப் 9:4; 26:14). இயேசுவைப் பிடிக்கவந்த போர்ச்சேவகர் கீழே விழுந்ததில் ஆவியானவரைப்பற்றிப் பேச்சில்லை (யோ 18:1-6). 1 கொரிந்தியர் 14:23-25இல் வாசிப்பது தானாகவே அவிசுவாசியொருவன் நெடுஞ்சாடையாய் விழுவதைக் குறிக்கிறது. முழங்கால்படியிடுவதுபோல் ''நாமாகவே'' தேவனுக்குமுன் நெடுஞ்சாடையாய், சாஷ்டாங்கமாய் விழுவதைப்பற்றித் திருமறையில் நிறைய வாசிக்கிறோம் (யோபு 1:20; சங் 72:11; மத் 2:11; யோ 11:32; வெளி 4:10; 19:4).

*பக்தரே வாரும், ஆசை ஆவலோடும்;*
*நீர் பாரும், நீர் பாரும், இப்பாலனை;*
*வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே!*
*சாஷ்டாங்கம் செய்ய வாரும் (3), இயேசுவை!*

எனவே, ''ஆவியில் விழுதல்'' என்று சொல்லப்படும் செயலுக்கு வேதத்தில் தெளிவான, முடிவான, நிறைவான சான்றில்லை. அதே வேளையில், ஒருவன்மீது ஆவியானவரது வல்லமை அசாதாரணமாய்



அளவில்லாமல் இறங்குகையில் அவன் தனது உடற்பலத்தை இழந்து விழுவதற்கான வாய்ப்பே இல்லை என்றும் சொல்லிவிடமுடியாது. கடந்தகாலப் பெரிய எழுப்புதல்களில் இது நடந்திருக்கிறது. ஜான் வெஸ்லி (1703-1791), ஜார்ஜ் வீட்பீல்டு (1714-1770), சார்லஸ் பின்னி (1792-1875) ஆகியோரது ஊழியங்கள் எடுத்துக்காட்டுகளாகும். ஆனாலும், அவர்களது கூட்டங்களில் பெரும்பாலும் பகடி பண்ணினோரும் எதிர்த்தோருமே தேவ வல்லமையால் தாக்கப்பட்டு விழுந்தனர். எங்கள் முகாம்களிலும் அருள்மாரி பொழியும் வேளைகளில் அங்குமிங்கும் ஒரு சிலர் விழுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் நேரடியான தெளிவான வேத வசனச் சான்று இல்லாததால், இவ்வனுபவத்தைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையானதொன்று என்றோ, அதிகக் கவனஞ்செலுத்தவேண்டியதொன்றாகவோ கணிப்பதில்லை. பிசாசானவன் போலிச்சரக்கு மன்னன். அஞ்ஞான மார்க்கங்களில் சாதாரணமாய்க் காணப்படும் ஆவிகள் பிடிப்பினால் மயக்கம் (Possession Trance) என்பதைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

கூட்டத்திலுள்ள மற்றவர்களைப் போன்று தானும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையின் நெருக்கம் (autosuggestion), அல்லது அது எப்படித்தானிருக்குமென்று பார்க்கலாமே என்றவொரு நாட்டம், இவை போன்றவையெல்லாம் ஒருவன் கீழே விழுவதற்குக் காரணங்களாய் அமையலாம். மக்களை வரிசையாய் நிற்கச் செய்வது, தலைக்காயம் ஏற்பட்டுவிடாமலிருக்கத் தாங்குவோரைப் பின்னால் நிறுத்துவது, பிரசங்கியார் ஒவ்வொருவரிடமாய் அதை நிகழ்த்தச் செல்வது போன்றவையெல்லாம் ஒருவிதமான எதிர்பார்ப்புச் சூழலை எளிதில் உருவாக்கிவிடும். மனோதத்துவமும், கூட்டவுணர்வும் (crowd dynamics) பெரிதும் செயல்படும். வேதத்தில் பெரும்பாலும் ''முகங்குப்புற'' விழுந்தார்கள் என்றிருக்கும்போது, இன்று ஏன் எல்லோருமே ''மல்லாக்க'' விழுகிறார்களென்பதும் இன்னொரு கேள்வி!

சுகத்திற்காகவும், ஆவியினால் நிரப்பப்படவும், ஜெபிக்கவும், ஊழியத்திற்காய் நியமிக்கவுந்தான் பிரதானமாகக் ''கைகளை வைக்குதல்'' ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்களைத் தலையில் தட்டவோ,

அடிக்கவோ, நெற்றியில் வைத்துத் தள்ளவோ அதைத் துர்ப்பிரயோகம் செய்யக்கூடாது. மக்கள்மீது அப்போஸ்தலர் கைவைத்தபோது அவர்கள் சுகமடைந்தார்கள், நிரப்பப்பட்டார்கள், அல்லது வரமருள் பெற்றார்கள்; கீழே விழவில்லை. நடபடிகளிலும், நிருபங்களிலும் நாம் இப்படித்தான் வாசிக்கிறோம். ''விசேஷித்த ஆசீர்வாதம்'' எனப்படும் ஒன்றை நீங்கள் இழந்துவிடுகிறோமோ என்று நினைத்தாலும் திருமறையின் வரம்புகளுக்குள் நின்றுவிடுவதுதான் எப்பொழுதுமே பாதுகாப்பு.

ஆவிக்குள் பிழைத்திருங்கள், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், ஆவிக்குள் ஜெபம்பண்ணுங்கள், ஆவியோடு ஆராதியுங்கள் என்றெல்லாம் பைபிள் கட்டளையிடுகிறது (கலா 5:25,16; எபே 6:18; பிலி 3:3). இந்த உள்ளான ஆன்மீகப் பயிற்சிகளில்தான் கவனம் செலுத்த வேண்டுமே தவிர வெறும் உணர்ச்சிவச அனுபவங்களை நாடி அலையக்கூடாது. ''ஆவிக்குள்'' அல்லது ''ஆவியில்'' எனும் வேதப் பதங்களைக் கொண்டு தனிப்பட்ட அனுபவங்களைத் திருமுழுக்காட்டி அவற்றைப் பொதுவானவைகளாக்குவதை நான் விரும்பவில்லை.

■

*எழுந்திடுவோம், நாம் எழுந்திடுவோம்,*
*இயேசுவின் வீரரே, எழுந்திடுவோம்;*
*அனுதினம் அழிந்திடும் பாரதம் காத்திட*
*தூசியை உதறி எழுந்திடுவோம்!*

*விழித்திருங்கள், நீர் கன்னியரே — நல்ல*
*விளக்குகள் எரிய எண்ணெய் ஊற்றுவீர்;*
*மணவாளன் வருகையின் சத்தம் கேட்பதாலே*
*கன்னியர்கள் நாமும் எழுந்திடுவோம்!*

*இந்து தேசம் வெல்ல முயன்றிடுவோம் — நல்ல*
*இயேசு முன்னே செல்வார், பயம் இனியேன்?*
*என்ன தடை வரினும் இயேசு நாமம் ஜெயிக்கும்;*
*இன்றே யாவரும் எழுந்திடுவோம்!*



# 46

## பரிசுத்த சிரிப்பு என்றால் என்ன?
### What is holy laughter?

ஆவியின் அபிஷேகத்தை விசுவாசிக்கும் சில குழுக்களிலும், பெந்தெகொஸ்தே வட்டாரங்களிலும் மக்கள் அடக்க முடியாத ஒரு விதச் சிரிப்பை அனுபவிப்பதாகவும், அந்நிலையில் ஓரிரு மணி நேரங்கள்கூடத் தரித்திருப்பதாகவும் சொல்லப்பட்டு அது ''பரிசுத்த சிரிப்பு'' என்றழைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒருவரை ஆனந்த தைலத்தால் அபிஷேகிக்கும்போது கர்த்தரில் களிகூருவது இவ்விதம் வெளிப்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்விதக் கூட்டங்களில் இச்சிரிப்பின் அனுபவம் பெறாதவர்கள் மகிழ்ச்சியைப் பூரணமாய் அனுபவிக்கவில்லையென்று சிரிப்பவர்களால் கணிக்கப்படுகிறார்கள். நவீனமானவைகளில் நாட்டங்கொண்டு விசுவாசிகளில் பலர் இப்பரவசத்திற்குள் இழுக்கப்படுகின்றனர்.

எக்காலத்தை எடுத்துக்கொண்டாலும் ஏதாவதொரு அலையானது சபையை மோதிக்கொண்டிருந்திருக்கிறது என்பதே சபைச் சரித்திரத்தில் நாம் காண்பதாகும். ஆனால் இந்த அலைகள் நலமானவையா எனத் திருவசன வெளிச்சத்தில் அலசிப் பார்ப்பது சபைத் தலைவர்கள், முதிர்ந்த விசுவாசிகள் ஆகியோரின் பொறுப்பாகும். ''நாம் இனிக் குழந்தைகளாயிராமல் ... வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்'' சீராக வளரவேண்டும் (எபே 4:13,14).

சிரிப்பு நல்ல மருந்து போன்றது! ''மனமகிழ்ச்சி நல்ல மருந்து'' (நீதி 17:22). நகைச்சுவையான நண்பரை விரும்பாதோர் யார்? எவரையும் புண்படுத்தாத வேடிக்கையும், நகைச்சுவையும் கிறிஸ்தவ ஐக்கியத்திற்குப் பொருந்தாததல்ல. தேவ மக்களின் பழைய ஏற்

பாட்டுச் சரித்திரத்தில் அவர்களது கொண்டாட்டங்களில் சிரிப்பு இடம் பெற்றிருந்தது (சங் 126:1-3). யோபு யாவற்றையும் திரும்பப் பெறுவார் என்பதை முன்னறிவித்த பில்தாத், ''இனி தேவன் உமது வாயை நகைப்பினாலும், உமது உதடுகளைக் கெம்பீரத்தினாலும் நிரப்புவார்'' என்றார் (யோபு 8:21). ஆனால் பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ ஆராதிப்பதைக் குறித்துப் பேசும்போது கை கொட்டுங்கள், கைகளை உயர்த்துங்கள், வாத்தியங்களை இசையுங் கள், கெம்பீர சத்தமிடுங்கள், நடனமாடுங்கள் என்றெல்லாம் குறிப் பிடப்பட்டுள்ளதுபோல் ''சிரியுங்கள்'' என்று எங்கும் சொல்லப்பட வில்லை. அப்போஸ்தலர் நடபடிகளில் மக்கள் மீது ஆவியானவர் இறங்கிய ஒரு சம்பவத்தில்கூட சிரித்தார்கள் என்று சொல்லப்பட வில்லை. ஆவியில் நிறைந்திருப்பதை வலியுறுத்தும் எபேசியர் 5:18-21இலும், அபிஷேகம் பெற்றோரின் கூடுகையைக் குறிப்பிடும் 1 கொரிந்தியர் 14:26இலும் சிரிப்பைப்பற்றிப் பேச்சே இல்லை.

கர்த்தரில் உண்மையாய்க் களிகூருவது அவரது சித்தத்திற்கும் வழிகளுக்கும் அடிபணிதலின் வெளிப்பாடாகும். அது நமது அனு தின வாழ்வில் காணப்படும் திருப்தி, திட நம்பிக்கை எனும் ''நிலை'' ஆகும். நம்மைச் சுற்றியுள்ளோர் இதைக் கவனியாது விடமுடியாது. பாடுகள், வேதனைகள் நடுவிலும் இம்மகிழ்ச்சி நிலைத்து நிற்கும் (அப் 13:50-52; 16:22-25; லூக் 6:22,23).

சிரிப்பை மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்று சொல்லிவிட முடி யாது. ''நகைப்பிலும் மனதுக்குத் துக்கமுண்டு; அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்'' (நீதி 14:13). தேவன் தரும் நிசமான நிரந்தரமான வற்றிற்குப் பதிலாக மலிவான மாற்றுக்களைக் கொடுத்து மக்களை மயக்குவதில் பிசாசுக்கு நிகரில்லை. இந்தியாவின் பல நகர்களில் ''சிரிப்பு மன்றங்கள்'' (Laughing Clubs) தோன்றியுள்ளன. வாரமொரு முறை அல்லது மாதமொருமுறை பல மணிநேரம் சிரிப்பதற்காகவே பல மதத்தினராகிய ஆடவரும் பெண்டிரும் கூடிவருவதற்காகவே இம்மன்றங்கள். இது ''பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷம்'' அல்லவே (ரோ 14:17).

புதிய ஏற்பாட்டுச் சபையின் ஆராதனைக் கூடுகையைப் பொறுத்த வரை கூட்டத்தினர் அனைவரும் அல்லது பெரும்பகுதியினரும் ''சிரிப்பின் ஆவியினால்'' தாக்கப்பட்டுச் சிரித்துக்கொண்டிருக்கிறார்



களென்றால் அது விபரீதம்தான். பவுலோ பேதுருவோ சென்றவிட மெல்லாம் சபையினரைச் சிரிப்புக்குள் வழிநடத்தினர் எனக் கற்பனை செய்தும் பார்க்க முடியுமா?

களியாட்டு இசைகளும், அஞ்ஞான மார்க்கங்களில் விழிப்புணர் வும் பெருகியுள்ள இக்காலத்தில், நமது சபைக் கூடுகைகளில் பய பக்தியும், தொழுகைகளில் பணிவுணர்வும் நிறைந்து காணப்படுவது அத்தியாவசியம். மனோதத்துவ வித்தைகளை எவ்விதத்திலும் கையா ளாதபடி தொழுகை நடத்துவோர் பார்த்துக்கொண்டு, தேவ மக்களை அவரது மேன்மையையும் தங்களது ஒன்றுமில்லாமையையும் உணர வழிநடத்தவேண்டும். இவ்விதப் பாணியில் ஒரு வேளை கண்ணீர் நிறைந்து வெளிப்படும் மகிழ்ச்சி இன்னும் ஆழ்ந்ததாயிருக்கும் (லூக் 6:21ஆ; யாக் 4:9,10).

சிரிப்புக்குள் நடத்துவோரைத் திருவசனச் சான்று காட்டச் சொன் னால், ''இது தேவன் செய்யும் புதிய காரியம்'' என்று உடனே சொல் லிவிடுகின்றனர். இதுதான் அத்தேனேயினரின் மனப்பான்மை (அப் 17:21). இப்படித் திருமறைக்குக் கூடுதலாக ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குழுவும் ''தேவனிடமிருந்து வரும் புதிய காரியம்'' என்று அங்கீகரித்து, அறிமுகம் செய்யத் துவங்கினால் நமது விசுவாசத் திற்கும் நடக்கைக்கும் அளவுகோல்தான் எது? அடித்தளத்தையே அசைக்கிறவர்களாகிவிடுவோமே!

■

*மகிழ்வோம், மகிழ்வோம், தினம் அகமகிழ்வோம்,*
*இயேசு இராஜன் நம் சொந்தமாயினார்;*
*இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்,*
*எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்!*

*ஆ, ஆனந்தமே, பரமானந்தமே,*
*இது மாபெரும் பாக்கியமே*

*அவர் வரும் நாளினில் என்னைக் கரம் அசைத்து*
*அன்பாய்க் கூப்பிட்டுச் சேர்த்துக்கொள்வார்;*
*அவர் சமூகமதில் அங்கே அவருடனே*
*ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்!*

— N. எமில் ஜெபசிங், 1941-2013

# 47

# விசுவாசிகளுக்குப் பிசாசு பிடிக்குமா?

## Can a believer be demon-possessed?

கீழ்வரும் தெளிவான திட்டமான இறைவாக்குகளை நோக்குங் கால், எப்படித்தான் தேவனது பிள்ளை ஒருவனுக்குப் பிசாசு பிடிக் குமோ என்று நினைத்தும் பார்க்கமுடியவில்லை—

□ ''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை; இஸ்ரவே லுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை'' (எண் 23:23).

□ ''சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ள உங்க ளுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது'' (லூக் 10:18,19).

□ ''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன ... அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக் கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது'' (யோ 10:27-29).

□ ''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரிய வர்'' (1 யோ 4:4).

விசுவாசியொருவன் பிசாசுகளால் வாதிக்கப்படலாம்; அவனது வாழ்க்கையின் சில பகுதிகளில் பிசாசுகளால் வெகுவாய்ப் பாதிக்க வும்படலாம்; ஆனால் ஒருபோதும் அவன் ஓர் அவிசுவாசியைப்போல் பிசாசினால் பிடிக்கப்படமுடியாது. நாம் பிசாசினால் வஞ்சிக்கப்பட லாம், நெருக்கப்படலாம், ஆனால் பிடிக்கப்படமுடியாது (மத் 24:24; 1 பேது 5:8,9). ஆவியானவரின் நடத்துதலைப் பின்பற்றத் தவறும் போது பிசாசுகள் நமது எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் ஆகிய வற்றைப் பாதிக்கும். ஒருமுறை பேதுரு தனது சிந்தனையில் சாத்தா னால் ஆட்டிப்படைக்கப்பட்டார் (மத் 16:23). அனனியா, சப்பீரா ளைப் பெந்தெகொஸ்தேக்குப் பின்னுள்ள ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம் (அப் 5:3,9). ஆனால் இவையொன்றும் பிசாசு பிடித்த லோடு சேராது.



நமது உடல் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. பரி சுத்த ஆவியானவரும் அசுத்த ஆவிகளும் சேர்ந்து குடியிருக்க முடி யாது (2 கொரி 6:15,16). ஆவியானவரை நாம் எதிர்க்கலாம், துக்கப் படுத்தலாம், அணைத்துவிடலாம். ஆனால் பாவம் செய்யும்போது அவர் நம்மை விட்டுப் போய்விடுவதில்லை. பழைய உடன்படிக்கை யின் காலத்தில்கூட, தாவீது பாவம் செய்தபின், பரிசுத்த ஆவியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி அவர் ஜெபிக்கவில்லை. மாறாக, ''உமது பரிசுத்த ஆவியை என்னிலிருந்து எடுத்துக்கொள்ளாமலிரும்'' என்றுதான் மன்றாடினார் (சங் 51:11).

தேவாலயத்தைக் குறித்து இயேசு பக்திவைராக்கியம் கொண்டி ருந்தார் (மத் 21:12,13). அப்படியே ஆவியானவரும் நமது உடல் களைக் குறித்து வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார். இயேசுவின் விலைமதியா இரத்தத்தால் கிரயங்கொள்ளப்பட்ட ஓர் உடலை தேவ னது பரம எதிரிக்காக ஆவியானவர் காலி செய்யமாட்டார் (1 பேது 1:18,19; எபே 4:30). வாடகைக்காரரைக் கிளப்புவதே இந்நாட்களில் கடினம்! ஒரு குறைந்த சக்தியானது தேவனாகிய சொந்தக்காரரைக் காலிசெய்து வெளியனுப்புவது சாத்தியந்தானோ? ''வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோத மாய்க் கொடியேற்றுவார்'' என்றிருக்கிறதே (ஏசா 59:19).

விசுவாசிகள் எப்பொழுதும் ஆன்மீகப் போராயுதங்களணிந்து எதிரியை முறியடிக்க விழிப்புடனிருக்கவேண்டுமென எபேசியர் 6:10-18 போன்ற பகுதிகள் வலியுறுத்துகின்றன. ஆவியானவராலும் திருவசனத்தாலும் நிறைந்திருப்பது பிசாசு பிடித்தலுக்கு எதிரான ஆயுள் காப்பாகும். விசுவாசிகள் பின்வாங்கி, மற்ற விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து தங்களைத் துண்டித்துக்கொண்டு, பாவக் காரியங் களிலும் மந்திரக் காரியங்களிலும் ஈடுபட்டு, திருவசன எச்சரிப்பு களுக்கும் ஆவியானவரின் சத்தத்திற்கும் நெடுகவே செவியடைக் கும்போது, அவர்கள் தாங்களாகவே ஆபத்தான எல்லைக்குள் நடை போடுகிறார்கள்.

விசுவாசிகள் சிலருக்குப் பிசாசு பிடித்திருப்பதாகச் சில தகவல் கள் அங்குமிங்கும் இந்நாட்களில் சொல்லப்படுகின்றன. பல காரியங்

களை இங்கு அலசிப்பார்க்கவேண்டியதிருப்பதால் அவ்வளவு சுலப மாக இதற்கு விளக்கம் கொடுத்துவிடமுடியாது. புதிய உடன்படிக்கை அமுலான பின்னர் திருமறையில் விசுவாசிகளுக்குப் பிசாசு பிடித்த தென்று தெளிவான எடுத்துக்காட்டு ஒன்றுகூட இல்லாத பட்சத்தில், ஆங்காங்கே கேள்விப்படும் சம்பவங்களை வைத்துக்கொண்டு, உபதேசச் சத்தியமாக ஒன்றையும் நிலைநாட்டமுடியாது.

விசுவாசிகளுக்குப் பிசாசு பிடிக்குமா? பிடிக்காது, ஆனால் விழித் திருங்கள்!

■

*கர்த்தரிலும் தம் வல்லமையிலும்*
*கிருபையாய் யாவரும் பலப்படுவோம்;*
*தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று*
*திராணியுடன் போர் புரிவோம்.*

*சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொள்வோம்,*
*சாத்தானின் சேனையை முறித்திடுவோம் — அவர்*
*சத்துவ வல்லமையால்.*

*மாமிசம் இரத்தத்துடனுமல்ல,*
*துரைத்தனம் அதிகாரம் அந்தகாரத்தின்*
*லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்*
*போராட்டம் நமக்கு உண்டு.*

*இரட்சண்யமாம் தலைச்சீராவும்*
*எச்சணமும் அணிந்துகொள்ளுவோம்;*
*தேவ வசனமெனும் ஆவியின் பட்டயம்*
*தேவை அதைப் பிடித்துக்கொள்வோம்.*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014



# 48

# கத்தோலிக்கர் அபிஷேகம் பெறுவதைப்பற்றி ...?

## What about Charismatic Catholics?

பெந்தெகொஸ்தே நாளன்று துவங்கிய ஆவியின் கடைசிக்கால அருள்மாரி நாம் கடைசிக்காலத்தின் இறுதி நோக்கி வரவர அதிக ரித்துக்கொண்டே வருகிறது. யோவேலின் தீர்க்கதரிசன வாக்கி லுள்ள ‘‘மாம்சமான யாவர் மீதும்’’ என்பது எல்லா நாட்டினரையும் சபைப் பிரிவினரையும் உள்ளடக்கியுள்ளது (அப் 2:17). பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் இன்று நடப்பித்துவரும் காரியங்களால் பாதிக்கப்படாத சபைப்பிரிவு எதுவும் கிடையாது. ரோமன் கத்தோ லிக்க சபையும் அதற்கு விதிவிலக்கல்ல. பாதிரியார்கள் உட்பட பல் லாயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் தாங்கள் ஆவியின் அபிஷேகம் பெற்று, அன்னிய பாஷைகளில் பேசி, வரங்களை அப்பியாசிப்பதாய்ச் சாட்சியிடுகின்றனர். கத்தோலிக்கரை மரியாள் வணக்கத்தாரென்று மட்டும் கணிக்கும் புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்க்கு இதை ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. இன்னும் கத்தோலிக்கராயிருந்து கொண்டு ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறேனென்று எப்படி எவரும் சொல்ல முடியுமென்பது அவர்களது கேள்வி. கிறிஸ்தவத்தில் மிகப் பெரும்பான்மையானது கத்தோலிக்க மார்க்கமாயிருப்பதால் இக்காரியத்தில் தெளிவு பெறுவது முக்கியம். இந்தியாவிலும்கூட கிறிஸ்தவம் என்றதும் கிறிஸ்தவரல்லாதோர் பலருக்கு மனதில் வரு வது கிறிஸ்துவின் பெயரல்ல, மாதா கோயில்தான்!

தேவன் ஏகாதிபத்தியர். இங்குதான் நாம் துவங்க வேண்டும். அவர் எதையும் செய்யலாம். கொர்நேலியுவுக்கு அவர் செய்தது போன்றது சபைச் சரித்திரத்தில் பலமுறை நடந்திருக்கிறது. கொர் நேலியு ஒரு கிறிஸ்தவரல்ல. ஆனால் அவர் ‘‘தேவ பக்தியுள்ளவரும் ... தேவனுக்கு பயந்தவரும் ... மிகுந்த தருமங்களைச் செய்து, எப்

பொழுதும் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தவருமாய்'' இருந்தார் (அப் 10:2). அவர் தனக்குக் கிடைத்திருந்த வெளிச்சத்தின்படி நடந்து வந்தார். பிரசங்கியார் பிரசங்கத்தை முடிக்குமுன்னரே, அவர் திருமுழுக்கு பெறுமுன்னரே, பாரபட்சமற்ற தேவன் அவர்மீதும் அவரது குடும்பத்தார்மீதும் தமது ஆவியைப் பொழிந்துவிட்டார் (அப் 10: 34,44-46). அப்படியே தேவ பக்தியுள்ளவர்களும் படைப்பின் ஆண்டவரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுமாகிய கத்தோலிக்கர்மீது தேவன் ஆவியைப் பொழிந்தருளுவாரானால் ''தேவனைத் தடுக்கிறதற்கு நாம் எம்மாத்திரம்?'' (அப் 11:17).

தேவாசீர்வாதங்கள் நம்மீது இறங்குவதால் நமது முறைகள் ஆமோதிக்கப்பட்டுவிட்டன என்றும் சொல்லிவிடமுடியாது. கிறிஸ்தவ வாழ்வின் துவக்க அனுபவத்தில் பொதுவாக முதலாவது வருவது மனந்திரும்புதல், அடுத்து திருமுழுக்கு, பின்னர் ஆவியைப் பெறுதல் (அப் 2:38; எபி 6:1,2). கொர்நேலியுவைப் பொறுத்தவரை மூன்றாவது வரவேண்டியது இரண்டாவதற்கு, அதாவது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு, முந்திவிட்டாலும், தண்ணீர் ஞானஸ்நானம் தேவையில்லையென்று யாரும் சொல்லவில்லை. மாறாக, அவர்களுக்கு உடனே ஞானஸ்நானம் கொடுக்கும்படி பேதுரு ''கட்டளையிட்டார்'' (அப் 10:47,48). நியாயந்தீர்க்கும் மனப்பான்மையில்லாத இவ்விதச் சாதகக் கண்ணோட்டம் கத்தோலிக்க நண்பர்களை முழுச் சத்தியத்தையும் தழுவிக்கொள்ள ஊக்குவிக்கும்.

புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்களாகிய நாம் கத்தோலிக்க மார்க்கத்தை விட்டு வெளியே வந்துவிட்டாலும் கத்தோலிக்க மார்க்கம் இன்னும் நம்மைவிட்டு வெளிவரவில்லை. நாம் சிலுவை உருவத்திற்குமுன் (cross) வணங்குகிறோம்; அவர்கள் சிலுவை சுருபத்திற்குமுன் (crucifix) வணங்குகிறார்கள். அனைத்து விசுவாசிகளும் ஆசாரியரென்பது நமக்கு ஏட்டுச்சுரைக்காய்தான். இன்றும் விசுவாசிகளைக் குருக்கள் (ஆசாரியர்), சபையார் (விசுவாசிகள்) என்று வெகுவாய்ப் பிரிக்கிறோம். ஆதிச்சபையில் புதிய ஏற்பாட்டு ஊழியர் அறியாதிருந்த பட்டங்களும் சிறப்பாடைகளும் நம்மிடை ஏராளம்.



இரட்சிப்பு கிரியைகளினாலல்ல, கிருபையினால்தானென்று நமக்கு இன்னும் சரிவர விளங்கவில்லையென்பது பெரும்பாலான நமது சாட்சிகளிலிருந்து தெளிவு. அப்பம் பிட்குதலில் அப்பப்பா எத்தனை ஆச்சாரம்!

ரோமன் கத்தோலிக்கர்கள் மரியாளை நடுவராய் வைத்து அவர்களிடம் அல்லது அவர்கள் மூலம் ஜெபிக்கின்றனர். புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் பிரசங்கிமாரை நடுவர்களாய்ப் பயன்படுத்துகின்றனர். இரண்டுமே தேவனுக்கு அருவருப்புதான். அன்று ஆலயங்களும் மடங்களும் கட்டுவதற்குத் தேவையான பணத்திற்காய்ப் போப்பாண்டவர் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்றதுபோல, இன்று சுகமளிக்கும் ஊழியர் பலர் ஜெப வியாபாரம் செய்கின்றனர். கத்தோலிக்கர் சிலைகளுக்கு மெழுகுவர்த்தி ஏற்றுகின்றனர்; நாம் படங்களுக்கு மாலையிடுகிறோம். ஒன்று முப்பரிமாண விக்கிரகாராதனை; அடுத்தது இரு பரிமாண விக்கிரகாராதனை, அவ்வளவுதான் வித்தியாசம்! ''கத்தோலிக்கருக்கு ஒரே போப்; புராட்டஸ்டண்டுகாரர்களுக்கு எத்தனையோ?'' என்றார் ஒருவர். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இப்படிச் சொல்வது கத்தோலிக்கர் செய்வதைச் சரியென்று சொல்ல அல்ல; புராட்டஸ்டண்டுகாரர்களைத் தங்கள் வீட்டைச் சரிசெய்ய அழைக்கவே! இரு திறத்தாருக்கும் தேவனருளும் செய்தியாவது: ''அறியாமையின் காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ எங்குமுள்ள மனிதரெல்லாம் (இரு வகுப்பினரும்) மனந்திரும்ப (மாற்றிக்கொள்ள) வேண்டுமென்று கட்டளையிடுகிறார்'' (அப் 17:30).

நமது கத்தோலிக்க நண்பர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமுண்டு. அடிப்படையாகக் கத்தோலிக்க சபை பிரிந்து நிற்கவில்லை. ஐயகோ, புராட்டஸ்டண்டு மார்க்கத்தில் எத்தனை பிரிவுகள், பிரிவுகளுக்குள் பிரிவுகள்! கத்தோலிக்கப் பாதிரிகள் மற்றும் கன்னிமாரின் ஒழுங்கு மற்றும் அர்ப்பணிப்பு ஒரு மாபெரும் சவால். ஊழல் மிகமிகக் குறைவு. நம்மைப்போல அவர்கள் ஆலயச் சொத்துக்களை விற்பதில்லை, பணத்தைச் சுரண்டுவதில்லை. சபைச் சொத்து எதுவும் பாதிரியாரின் தனிப்பெயரில் வாங்கப்படுவதில்லை.

அவர்கள் வரவு செலவு கணக்கு விபரங்கள் அவ்வளவு சுத்தமாயிருப் பதால் வருமானவரி அதிகாரிகளுக்கு அவர்கள் லஞ்சம் கொடுக்கத் தேவையில்லை. வேத மொழியாக்கங்களை மேம்படுத்துவதில் அவர் கள் நம்மை மிஞ்சுபவர்கள். கிறிஸ்தவரல்லாதோரைச் சந்திக்கும் நோக்கோடு அவர்கள் விவிலியத்தை இன்றைய நடைமுறை மொழி நடையில் கொண்டுவர அத்தனையையும் செய்வார்கள். சமூக சேவையில் அவர்களை யாரும் மிஞ்ச முடியாது. அவர்கள் தங்களது கட்டிடங்களையும் வளாகங்களையும் எவ்வளவு சுத்தமாய் வைத்தி ருக்கிறார்களென்பதைப் பார்த்தால் நாம் தலைகுனியவேண்டும். ஆலய ஆராதனைகளில் அவர்களது பக்திவிநயந்தான் என்னே! அவர் களது இத்தனை அன்பின் பிரயாசங்களையும் செயல்களையும் மறந்து விட தேவன் அநீதியுள்ளவரல்லவே! (எபி 6:10). அவருக்குப் பயந்து யார் நீதியைச் செய்தாலும் அவர் அங்கீகரிக்கிறார் (அப் 10:34,35). கத்தோலிக்க சபைக்கு வரும் தேவனது சந்திப்பிற்காய் அவரைத் துதிப்போம்.

முன்னாள் கத்தோலிக்கப் பாதிரியார் தந்தை பெர்க்மான்ஸ் சிறந்த தோர் எடுத்துக்காட்டு. கத்தோலிக்க சபையில் முழு அங்கத்தினரா யிருக்கும்போதுதான் அவர் ஆவியின் அபிஷேகம் பெற்றார். அந்த அபிஷேகத்தை யாராவது கேள்விகேட்க முடியுமா? அவர் இயற்றிய பாடல்களில் ஒன்றை அடுத்த பக்கத்தில் பாருங்கள். ஆவியான வரைக் குறித்து அவர் இயற்றியுள்ள வேறு சில பாடல்கள்: *''உந்தன் ஆவி எந்தன் உள்ளம் தங்கவேண்டும்,'' ''பரிசுத்த ஆவியே, பக்தர்கள் துணையாளரே,'' ''தாகமுள்ளவன்மேல் தண்ணீரை ஊற்றுவேன்,'' ''ஆளுகை செய்யும் ஆவியானவரே,'' ''உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்று எழவேண்டும்,'' ''ஆவியானவரே, என் அன்பு நேசரே!''*

பரிசுத்த ஆவியானவர் எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் என்றார் இயேசு (யோ 16:13). இது ஒரே நாளில் நடந்து விடாது. வெளிப்பாடுகளும் சீர்திருத்தங்களும் படிப்படியாகத்தான் வரும்.

முடிவாக, அபிஷேகம் பெற்றுள்ள கத்தோலிக்கருக்கு எனது அறி வுரைகள்: (1) திருவிவிலியத்தைக் கிரமமாகவும் கவனமாகவும்



வாசியுங்கள். புதிய ஏற்பாட்டில் துவங்குங்கள். (2) கிறிஸ்து கட்டளை யிட்டபடி திருமுழுக்கு பெற்றுக்கொள்ளுங்கள். (3) மரியன்னை யிடமோ மரியன்னை மற்றும் பரிசுத்தவான்கள் யார் மூலமோ ஜெபிப் பதை நிறுத்துங்கள். தந்தையாம் தேவனிடம் நேரடியாகக் குமாரன் இயேசு மூலம் ஜெபியுங்கள். (4) சிலைகளைக் கும்பிடாதீர்கள். எப்பாணியிலும் சிலை வணக்கம் வேண்டாம். (5) திருமறையை உத்தமமாய்ப் பிரசங்கிக்கும் சபைகளின் ஆராதனைகளில் கலந்து கொள்ளுங்கள். (6) நற்செய்திப்பணிக்காய்ப் புறப்பட்டுச் செல்லும் குழுக்களைச் சேர்ந்துகொள்ளுங்கள். (7) தேவையுள்ளோர் மற்றும் சந்திக்கப்படாதோர் நடுவில் நடைபெறும் மிஷனரி ஊழியம் மற்றும் சமூகநலப்பணிகளுக்கு உதவுங்கள். ''உங்களில் நற்செயலைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்வரை முடிய நடத்திவருவார்'' (பிலி 1:5).

■

*எங்களுக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரே,*
*இந்நாளில் உம் சித்தம் போல் நடத்திச் செல்லுமையா!*

*ஆவியானவரே, ஆவியானவரே,*
*பரிசுத்த ஆவியானவரே!*

*எப்படி நான் ஜெபிக்க வேண்டும், எதற்காக ஜெபிக்க வேண்டும்,*
*கற்றுத் தாரும் ஆவியானவரே!*
*வேத வசனம் புரிந்துகொண்டு விளக்கங்களை அறிந்திட*
*வெளிச்சம் தாரும் ஆவியானவரே!*

*எங்கு செல்ல வேண்டும், என்ன சொல்ல வேண்டும்,*
*வழி நடத்தும் ஆவியானவரே!*
*உம் விருப்பம் இல்லாத இடங்களுக்குச் செல்லாமல்*
*தடுத்து நிறுத்தும் ஆவியானவரே!*

— தந்தை பெர்க்மான்ஸ்

# 49

# எதுதான் ஆவிக்குரிய சபை?

## What is a Spiritual Church?

புதிய விசுவாசிகளுக்குத் தொடர் பணியாக ஆலோசனைகள் கொடுக்கப்படும்போது அவர்கள் ''ஆவிக்குரிய'' சபையொன்றில் பங்குபெறவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லும் போது பிரசங்கியார் எதை மனதில் வைத்திருக்கிறாரென்பதும் மக்க ளுக்கு என்ன புரிகிறதென்பதும் வெவ்வேறானவை. நடந்துமுடிந்த கூட்டம் அனைத்து சபைகளின் கூட்டு முயற்சியாயிருக்குமானால் ''ஆவிக்குரிய'' சபையை எப்படி அடையாளங்காணுவதென்று விளக் கப் பிரசங்கிமாருக்குத் தயக்கம்! ஆனால் கடினமான இக்கேள்விக்குப் பதில் சொல்லியாகவேண்டும்.

சபைகளைப் பொதுவாகப் பெந்தெகொஸ்தே சபைகள், பெந்தெ கொஸ்தேயல்லாத சபைகள் என்று பிரிக்கலாம். பரிசுத்தாவியான வரின் அபிஷேகத்தை எப்படிப் புரிந்துகொள்ளுகிறார்களென்பதி லேயே இங்கு முக்கிய வேறுபாடு. பெந்தெகொஸ்தே சபைகளெல் லாம் ''ஆவிக்குரிய'' சபைகளென்றும், மற்றவை அப்படியல்ல என் றும் சொல்வது தவறு. திருமறைப்பாணியில் சொன்னால் ''ஆவிக் குரிய'' எனும் பதம் ''மாம்சத்திற்குரிய'' அல்லது ''ஜென்ம சுபாவ'' எனும் பதங்களுக்கே எதிர்மறையாகும். ஆராதனை முறைமை, நிர் வாக அமைப்பு, திருமுழுக்கு அல்லது அப்பம் பிட்குதல் எப்படி என்பதல்ல ஒரு சபையை ''ஆவிக்குரியது'' அல்லது அப்படியல்லா தது என்று நிர்ணயிப்பது. குழுவாக அச்சபையின் குணம் எத்தகை யது, மற்றும் அதின் உறுப்பினர்களின் வாழ்க்கை முறை எப்படி யுள்ளது என்பதே காரியம். சொல்லப்போனால், கொரிந்து சபை யானது எல்லா விதத்திலும் ஒரு பெந்தெகொஸ்தே சபைதான். ஆவி யின் வரங்கள் அத்தனையும் அங்கு செயல்பட்டுக்கொண்டிருந்தன



(1 கொரி 1:7; 14:12அ). ஆனால் அப்போஸ்தலன் பவுலைப் பொருத்தவரை, அது ஓர் ''ஆவிக்குரிய'' சபையல்ல, ''மாம்சத்துக் குரிய'' சபை (1 கொரி 3:1-3).

இன்றைய நிலைமையை நேர்மையாய்ப் பகுத்துப் பார்த்தால், ஒரு சபையும் 100 சதவீதம் ஆவிக்குரியது அல்லது 100 சதவீதம் மாம்சத்துக்குரியது என்று சொல்ல முடியாதென்பதே ஒருபுறம் சாயாத கணிப்பாயிருக்கும். ஆவிக்குரியதும் மாம்சத்துக்குரியதும் கலந்தே எங்கும் காணப்படுகிறது. சதவீதம் ஒருவேளை வித்தியாசமாயிருக் கலாம். சில பெந்தெகொஸ்தே சபைகள் பெந்தெகொஸ்தேயல்லாத சபைகளைவிட மாம்சத்துக்குரியவைகளாகவும், சில பெந்தெகொஸ் தேயல்லாத சபைகள் பெந்தெகொஸ்தே சபைகளைவிட ஆவிக்குரிய வைகளாகவும் இருக்கின்றன. எனது பெந்தெகொஸ்தே நண்பர் சில ருக்கு இங்கு என்மீது கோபம் எழலாம்; ஆனால் உண்மை உண்மை தானே! (கலா 4:16). மட்டுமல்ல, ''ஆவிக்குரிய'' சபைகளென்று அழைக்கப்படும் சில சபைகளில் ''பாரம்பரிய'' சபைகளென்று அழைக் கப்படும் சில சபைகளைவிட வேத அடிப்படையில்லாத பாரம்பரி யங்கள் கூடுதலாயிருக்கின்றன என்பதும் நான் கண்டறிந்தது.

மறுபடி பிறந்தபின் ஒவ்வொருவரும் முதிர்ச்சி நோக்கி ''வளர'' அனுகூலமாயிருக்கும் உள்ளூர்ச் சபையொன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். தமது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் குறித்த தேவ சித்தம் அதுவே. உங்களுக்கென்று ஒரு சபையைத் தெரிந்தெடுக்கு முன் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள் —

***1. அது திருமறையைக் கடவுளின் வார்த்தை என்று விசுவா சிக்கிறதா?*** திருவசனமாகிய ஞானப்பாலைப் பருகும் அளவைப் பொறுத்தே நமது வளர்ச்சியிருக்கும் (1 பேது 2:3). திடமான வேத போதனை இருக்கும் சபைகளின் உறுப்பினர்கள் விரைவாகவும் வீரியமாகவும் வளருவார்கள். உபதேசத்தில் சிறுசிறு வேறுபாடு களைப் பொறுத்துக்கொள்ளலாம்; ஆனால் பிரதானமானவைகளில் ஒத்துப்போக முடியாது (எபே 4:4-6). பைபிள்மீது உங்களுக்கு

அலாதிப் பிரியத்தை உண்டுபண்ணுகிறவரும், பிரசங்கபீடத்தைத் துர்ப்பிரயோகம் செய்யாதவருமான மேய்ப்பர் நடத்தும் சபைக்குச் செல்லுங்கள்.

***2. அங்கு உண்மையான தொழுகை ஊக்குவிக்கப்படுகிறதா?*** ''உண்மையாய்த்'' தொழுதுகொள்ளுதலென்றால் ''ஆவியோடும் உண்மையோடும்'' தொழுதுகொள்ளுதலென இயேசு போதித்தார் (யோ 4:23,24). சில சபைகளின் தொழுகையில் ''உண்மை'' அதாவது ''கருத்து'' நிறைவாய் இருக்கும்; மற்ற சபைகளின் தொழுகையில் ''ஆவியில்'' உற்சாகம் அதிகமாயிருக்கும். கருத்தும் வேண்டும்; ஆவியும் வேண்டும் (1 கொரி 14:15).

***3. அங்கு ஐக்கிய உறவு இருக்கிறதா?*** நமது ஐக்கியங்கள் பலவற்றில் ''ஐக்கியம்'' கிடையாது. பணிவிடை செய்யப்படவே மக்கள் ஆராதனைக்கு வருகிறார்களே தவிர, ஒருவருக்கொருவர் பணிவிடை செய்ய அல்ல. ''கர்த்தரைப்'' பாடிக் கீர்த்தனம்பண்ணுவது உண்டு; ஆனால் சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ''ஒருவருக்கொருவர்'' புத்தி சொல்லுவது கிடையாது (எபே 5:19). ஏதோ ''Praise the Lord'' என்பார்கள், அல்லது கைகுலுக்குவார்கள், அவ்வளவுதான். ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யும் இச்சமதளப் பரிமாணத்தில் சிறிய சபைகள் பலமுள்ளவைகளாய்த் தோன்றுகின்றன. தேவையுள்ளோருக்குப் பொருளாதார நன்மைகளைப் பகிர்ந்தளித்ததே ஆதிச்சபையின் மிகப்பெரிய கவர்ச்சி (அப் 4:32,33). கிறிஸ்தவமே தானதர்மம்தான்! (யாக் 1:27).

***4. அதின் தலைவர்கள் விசுவாசிகளை ஊழியத்திற்குப் பயிற்றுவிக்கிறார்களா?*** மேய்ப்பர்தான் கதாநாயகர், சபையாரெல்லாம் பார்வையாளர்கள்தான் என்றிருக்கும் சபையில் எவரும் வளர எதிர்பார்க்கமுடியாது. தங்களுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாதென்றே எண்ணிக்கொண்டிருப்பது அநேக சபை மேய்ப்பர்களை முடமாக்கிவிட்டது; அதினால் அவர்கள் மற்றவர்களை நம்பி அவர்களுக்குப் பொறுப்புகளைக் கொடுப்பதில்லை. ''பரிசுத்தவான்களைச் சுவிசேஷ ஊழிய வேலைக்காய்ப்'' பக்குவப்படுத்துவதற்காகவே திருச்சபையில் ஐவகை ஊழியங்கள் அருளப்பட்டுள்ளன (எபே 4:11-13). வேறு வார்த்தையில் சொன்னால், ஒவ்வொரு விசுவாசியையும் ஓர் ஊழியனாய் மாற்றுவதே ஒவ்வொரு ஊழியனின் ஊழியமாகும். அத்தனையும் பூரணமாய் இல்லாவிட்டாலும், எல்லா உறுப்பினர்களும் தேவனுக்குமுன் ''இராஜாக்களும் ஆசாரியர்களுமாய்'' செயல்படும் சபையில் அங்கமாகுங்கள் (1 பேது 2:5,9). மட்டுமல்ல, தலைமைத்துவம் ஒரே நபர்மீது இராது பகிர்ந்தளிக்கப்படும் சபையே பாதுகாப்பானது.



***5. அது சந்திக்கப்படாதோரைத் தேடிச் செல்கிறதா?*** கனடாவில் People's Church எனும் திருச்சபையை நிறுவிய பண்டிதர் ஆஸ்வால்டு J. ஸ்மித் (1890-1986) அவர்கள், ''நற்செய்திப்பணியில் தீவிரங்காட்டாத சபை நலிந்து தீய்ந்துபோகும்'' என்பார். நீங்கள் தெரிந்தெடுக்கும் சபையில் நற்செய்திப்பணிக்கும் மிஷனரி ஊழியத்திற்கும் அதிமுக்கியத்துவம் கொடுக்கிறார்களாவெனப் பார்த்துக் கொள்ளுங்கள். மிஷனரிகளை அனுப்பித் தாங்காத அல்லது மிஷனரி இயக்கங்களைச் சாடையாய்த் தாக்குகிற மேய்ப்பரின் சபையில் நீங்கள் இருந்தால் மூச்சு முட்டிச் சாவீர்கள் (அப் 13:1-3). தங்களுக்கு விருப்பமான நற்செய்திப்பணி நிறுவனங்களோடு இணைந்து செயல்பட சபை உறுப்பினர்களுக்கு விடுதலை இருக்கவேண்டும். சபையானது சங்கிலியாகிவிடக்கூடாது. (The Church should not become a clutch!)

ஆவிக்குரிய சபையில் எதிர்பார்க்க வேண்டிய இன்னும் சில குணாதிசயங்களுமுண்டு. ஆனால் இவ்வைந்துதான் அடிப்படையானவை. குறைவற்றதை எதிர்நோக்குங்கள்; ஆனால் இருப்பதை ஏற்றுக்கொண்டு அதின் முன்னேற்றத்திற்காய்ச் செயல்பட்டு காரியங்களை மேம்படுத்திக்கொண்டே வாருங்கள். தேவையான அத்தனைக் குணாதிசயங்களும் எந்தவொரு உள்ளூர்ச் சபையிலும் இல்லாததால் உங்கள் தரிசனத்தை விரிவாக்கவும் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் பிற சபைகளுக்கும் சென்று வாருங்கள். ஒருவருடைய பலம் மற்றவரின் பலக்குறைவில் உதவும்.

# 50

# இதுதான் எதிர்ப்பார்த்திருந்த எழுப்புதலா?

### Is this the awaited Revival?

எல்லா நாடுகளிலும் எல்லாச் சபைகளிலுமுள்ள கிறிஸ்தவரி டையே ஓர் ஆன்மீக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாதது. நெடுங்காலமாய் ஜெபித்துக் காத்திருந்த எழுப்புதல் இதுதானென்பது பலரது கருத்து. மற்றவர்களோ கேள்விக்குரிய சில காரியங்கள் நடைபெறுவதால் இதை விட்டுச் சற்று ஒதுங்கி நிற் கிறார்கள். அப்படியானால் இன்றைய எழுப்புதலை நாம் நிதானிப்பது எங்ஙனம்?

எழுப்புதல் என்பது சபைக்குச் சாதாரணமானதன்று. நோயுற்ற அல்லது பின்வாங்கின சபைக்குத்தான் எழுப்புதல் தேவை. தேவ மக்களிடையே கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சி மங்கிய வேளையில்தான் சங்கீதக்காரன், ''தேவனே, உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?'' எனக் கதறினார் (சங் 85:6). தேவ மக்கள் வழிவிலகிச் சென்ற வேளைகளில்தான் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனந்திரும்புதலுக்கான அழைப்பும் எழுப்புதலுக்கான வாக்குகளும் கொடுக்கப்பட்டன. ஆனால் புதிய ஏற்பாட்டுச் சபை இவ்விதம் ஏறுவதும் இறங்குவதுமான பாணியில் செல்ல தேவன் விரும்புவதில்லை. நாம் கர்த்தருக்குள் ''எப்பொழு தும்'' சந்தோஷமாயிருக்கவும், அவரது பணியில் ''எப்பொழுதும்'' பெருகுகிறவர்களாயிருக்கவும், அவரது குமாரனின் வருகையை ''எப் பொழுதும்'' எதிர்நோக்குகிறவர்களாகவுமிருக்க அறிவுறுத்தப்பட்டி ருக்கிறோம் (பிலி 4:4; 1 கொரி 15:58; மாற் 13:35-37). ஆயினும், சபையின் இன்றைய நிலை அது இருக்கவேண்டியபடி இல்லாததால் ஆதிநிலையேகுவதற்காக அதற்கு எழுப்புதல் தேவைதான்.

தேவன் தமது மக்களை ஆவியானவரின் வல்லமையான அசை வாடுதலால் சந்திக்கவேண்டுமென்று பரிசுத்தவான்கள் பல்லாண்டு



களாய்க் கிருபாசனத்திற்குமுன் மன்றாடி வந்திருக்கிறார்கள். பெந்தெ கொஸ்தே நாளை முன்மாரியென்று வைத்துக்கொண்டு பின்மாரிக் காய் அவர்கள் தேவனிடம் கதறிக்கொண்டிருக்கிறார்கள் (சக 10:1). இன்றைய அசைவு அவ்வித ஜெபத்திற்குப் பதில்தானென்று நான் நம்புகிறேன். ஆனால் நமது தேவைகளை அது போதுமான அளவு சந்திக்கவில்லை. நாம் அடிக்கடி பாடுகிறதுபோல,

*அற்பமாய் சொற்பமாய் அல்ல;*
*திரளாய்ப் பெய்யட்டுமே!*

☐ நமக்கு நீதியின் எழுப்புதல் தேவை (ஓசி 10:12). அது நமது பின்மாற்றத்தையும் வெதுவெதுப்பையும் குணமாக்கி ஆழ்ந்த மனந் திரும்புதலுக்குள் நம்மைக் கொண்டுவரும். அவ்வித எழுப்புதல் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் சீர்குலைவையும் சரிசெய்யும் (2 நாளா 7:14). ஜான் வெஸ்லி (1703-1791), D. L. மூடி (1837-1899) மற்றும் சார்லஸ் பின்னி (1792-1875) போன்றோரின் ஊழியத்தின் மூலம் ஏற்பட்ட எழுப்புதலில் இக்குணாதிசயம் இருந்தது. தேவ னுக்குக் கீழ்ப்படிதல் நமக்கு முன்மாரியையும் பின்மாரியையும் கொண்டுவரும் (உபா 11:13-15).

☐ நமது வாழ்க்கையில் காரியங்களை எது முக்கியமென்று வரி சைப்படுத்த நம்மை நடத்தும் எழுப்புதல் நமக்குத் தேவை. மனித ரோடு பேசும் நேரத்தைவிட ஜெபத்தில் செலவிடும் நேரம் நமக்கு இன்பமாயிருக்கவேண்டும் (சங் 84:10). அனுதின ஆகாரத்தைவிட திருமறைத் தியானம் முக்கியமானதாக வேண்டும் (யோபு 23:12). இவ்வுலகத் தேவைகளைவிட இறையரசின் விரிவாக்கமே நமது சிந்த னைகளை ஆட்கொள்ளவேண்டும் (மத் 6:33). தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதைவிட அவருக்கு உசிதமானவை களைக் கொடுத்துவிடுவதே நம்மை அதிகம் பரவசப்படுத்தவேண் டும் (அப் 20:35ஆ). பிறர் நலனுக்காய்ச் சேவை செய்வது தன்ன லத்தை நம்மிலிருந்து விரட்ட வேண்டும் (பிலி 2:4,5).

இவ்வித நன்மைகளை ஓரளவு இன்றைய எழுப்புதலில் பார்க்க முடிந்தாலும், விரும்பும் ஆசீர்வாதங்களைவிட கேள்விக்குரிய காரியங்களே அதிகமாய் இருப்பதாய்த் தெரிகின்றன. மேற்குறிப்பிட் டுள்ள ஆன்மீக நன்மைகளைவிட கீழே விழுதல், ஊருதல், உதறுதல்,

சிரித்தல் இவைபோன்ற உடல்சார்ந்த வெளிப்பாடுகளிலேயே கவனம் ஈர்க்கப்படுகிறது. புதிதும் வல்லமையுமாக தேவன் தமது மக்களைச் சந்திக்கும்போது பிசாசும் அதிக விறுவிறுப்பாகிறான். அவன் போலி மன்னன். அவன் களைகளை விதைத்துவிட்டால், நல்ல தானியத்திலிருந்து அவற்றை வேறு பிரிப்பதே சிரமமாகிவிடுகிறது (மத் 13:24-30). எந்த எழுப்புதலிலும் கலப்படம் இருப்பதால் நிதானிப்பது அவ்வளவு எளிதல்ல. நூறு சதவீதம் இது பொய்யானது என்று எதையும் சொல்லிவிட முடிவதில்லை. உள்ளான கிருபைகளில் வளர்ந்துகொண்டு, வேத வசன வரம்புகளைத் தாண்டாமலிருப்பதே மிகவும் பாதுகாப்பாகும். எதிர்மறையானவர்களாய் மாறாமல் இருந்துகொண்டு பகுத்துப் பார்ப்பது சாத்தியம். பிள்ளையைக் குளிப்பாட்டிய தண்ணீரைக் கொட்டும்போது பிள்ளையையும் சேர்த்து எறிந்துவிடக்கூடாது!

தேவ மக்களைக் கட்டியெழுப்ப அவர்களை முதிர்ச்சிக்குக் கொண்டுவரும் மகா பெரிய பொறுப்பு எழுப்புதல்களில் தேவனால் பயன்படுத்தப்படும் ஊழியருக்கு வெகு அதிகமுண்டு. மக்களை வெறுமனே பரவசப்படுத்திக்கொண்டிருப்பதால் ஊழியரின் பெயர்ப் புகழை ஒரு வேளை தக்கவைத்துக்கொள்ளலாம். ஆனால் சோதிக்கும் நெருப்பானது இவ்விதச் செயல்களெல்லாம் ''மரம், வைக்கோல், புல்'' ஆகியவைதானென்று வெளிப்படுத்தும் (1 கொரி 3:12,13).

எழுப்புதலைக் குறித்துப் பேசும் நாம் எல்லாமே மகிமையாய் மாறிவிடப்போகிறதென்று நினைத்துவிடக்கூடாது. சொல்லப்போனால், அப்போஸ்தலரும் நமது ஆண்டவரும் முன்னறிவித்தபடி, இந்த யுகத்தின் இறுதிக்குள் நாம் வர வர, அக்கிரமம் பெருகும், அன்பு தணியும், வஞ்சகம் கூடும், பின்மாற்றம் அதிகரிக்கும் (மத் 24:12; 1 தீமோ 4:1-3). ஏற்கனவே இந்து, இஸ்லாம் மற்றும் ஆதிவாசி மார்க்கங்களில் ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. நெடுங்காலமாய் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே நமக்கு முடிவான எழுப்புதலாகும் (அப் 3:19-21). அதுவரை தீர்க்கன் ஆபகூக்கின் விண்ணப்பம் நமதாகட்டும் —

''கர்த்தாவே, ஆண்டுகளின் நடுவில்
உமது செயலை உயிர்ப்பியும்!'' (ஆப 3:2).



# பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய பொன்மொழிகள்

- இன்று திருச்சபையிலிருந்து பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுவாரானால், நாம் செய்துவரும் காரியங்களில் 95 சதவீதம் நடந்துகொண்டுதானிருக்கும்; ஒருவருக்கும் வித்தியாசம் தெரியாது. ஆனால் புதிய ஏற்பாட்டுப் பாணியில் இயங்கும் சபையிலிருந்து ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுவாரானால், அவர்கள் செய்துவரும் காரியங்களில் 95 சதவீதம் நின்று போய்விடும்; எல்லாருக்கும் வித்தியாசம் தெரியும். — *A.W. டோசர்*
- மனிதரது எண்ணங்களையும் கற்பனைகளையும் ஒருங்கிணைக்கப் பரிசுத்த ஆவியானவரின் உயிரூட்டும் சுவாசம் நிறைந்த பிரசன்னம் தேவை. அது இருக்கும்போது, இவ்வுலகிலும் இனி வரும் உலகிலும் மனிதரது இதயங்களில் பரலோகப் பரவசமும் மகிழ்ச்சியின் ஆரவாரமும் காணப்படும். — *சாது சுந்தர்சிங்*
- நமது இதயங்களில் இறையன்பை ஊற்றுபவர் பரிசுத்த ஆவியானவரே. அதினாலேயே நாம் மனுக்குலத்தை நேசிக்க முடியும்; உலகப் பொருள்மீதுள்ள பற்று தளரும்; கீழ்த்தர ஆசைகள் ஒழியும்; பார்வை சுத்தமாகும்; செருக்கு அகலும். கோபம், பெருமை, தீய எண்ணம், ஆகாத விருப்பங்கள் ஆகியவற்றினின்று நாம் விடுவிக்கப்படுவது அவராலேயே. — *ஜான் வெஸ்லி*
- வான் புறாவே, உமது செட்டைகளை விரியும்; உலகின் இருளை அகற்றும்; குழம்பித் தவிக்கும் எங்களைச் சீர்ப்படுத்தும்; வெளிச்சம் உண்டாகட்டும்! — *சார்ல்ஸ் வெஸ்லி*
- அனுப்பப்படுமுன் ஓடுவதில் என்ன பயன்? தேவ வல்லமையின்றி திருப்பணி செய்ய முயலுவதில் என்ன பயன்? ஆவியின் அபிஷேகமும், ஆவியின் நிறைவும், ஆவியின் பலமும் இல்லாது ஊழியம் செய்பவன் தனது நேரத்தை வீணடிக்கிறான். — *D.L. மூடி*
- பரிசுத்த ஆவியானவர் என்பவர் தேவனிடமிருந்து வரும் ஓர் ஆசீர்வாதம் அல்ல; அவரே தேவன். — *காலின் உர்குவார்ட்*

- திருச்சபையின் இன்றையத் தேவை கூடுதல் வசதிகளோ, சாதனங்களோ, அமைப்புகளோ அல்ல; பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தக்கூடியவர், ஜெப மனிதர், மன்றாட்டு வீரர் ஆகியோரே அத்தியாவசியத் தேவை. செயல்முறைகள் மூலம் அல்ல, செயல் வீரர்கள் மூலமாகவே ஆவியானவர் வழிந்தோடுவார். அவர் சாதனங்கள் மீதல்ல, சாமானியர் மீதே இறங்குவார். திட்டங்களை அல்ல, முழங்காலில் நிற்கும் திடகாத்திரரையே அவர் அபிஷேகிக்கிறார். *— E.M. பவுண்ட்ஸ்*
- பரிசுத்த ஆவியானவருக்கு நாம் கொடுக்கும் வாய்ப்பு எவ்வளவாய்க் குறைந்துவிட்டது! திருச்சபைகளும் மிஷனரி நிறுவனங்களும் அவரைக் கட்டி வைத்து, ஒரு மூலையில் உட்காரச் சொல்லிவிட்டு, தங்கள் அலுவல்களில் தீவிரமாயிருக்கின்றனர். *— C.T. ஸ்டட்*
- சுவிசேஷத்தினால் பரிசுத்த ஆவியானவர் என்னை அழைத்தார்; தமது வரங்களினால் என்னைப் பிரகாசிப்பித்தார்; மாறாத சத்தியத்தினால் என்னைக் காப்பாற்றுகிறார். *— மார்ட்டின் லூத்தர்*
- ஆண்டவரது பிரசன்னம் என்னை மேற்கொண்டது. ''என்னைக் கொன்றுவிடாதபடிச் சற்று விலகிக்கொள்ளும்'' என்று கெஞ்சத் தோன்றுமளவு அது அவ்வளவு மகிமையாயிருந்தது. *— மொர்தெகாய் ஹாம்* *(இவரது கூட்டத்தில்தான் 1934இல் பில்லி கிரஹாம் தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார்.)*
- பொருட்களை விளம்பரம் செய்து வியாபாரத்தை மேம்படுத்தும் கலையில் பரிசுத்த ஆவியானவருக்கு நிகர் எவருமில்லை. அவர் ஒரு நபரையே விளம்பரம் செய்வார்; அவர்தான் இயேசு கிறிஸ்து. *— கேத்தரின் குல்மேன்*
- கிறிஸ்துவின் மூலம், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன், அன்பின் பிரவாகத்துடன் நமது இருதயத்தைத் தேவனுக்குமுன் ஊற்றிவிடும்போது அவர் வாக்குப்பண்ணியவை நமதாகும். *— ஜான் பனியன்*
- சிலுவையிலறையப்படாத எவரும் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்க முடியாது. அலங்காரத்திற்காக ஒரு சிலுவைச் சின்னத்தைக் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு



அலைவதில் என்ன பயன்? பவுலடியார் குறிப்பிடும் சிலுவை என்பது நமது உடலிலும் உள்ளிலும் அச்சாரமாய்ப் பதிக்கப்படுவதாம். நமது உள்ளான மனிதனில் சிலுவையை அச்சடையாளமாக்குவது பரிசுத்த ஆவியானவரே. *— A.B. சிம்ப்சன்*

- பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர், திருச்சபை எப்பொழுதாவது எல்லா வேலையையும் பத்து நாட்கள் நிறுத்திவிட்டு ஆவியானவரது வல்லமை வெளிப்படும்படிக் காத்திருந்ததுண்டா? திட்டங்கள், சாதனங்கள், வசதிகள் ஆகியவைதான் நமது கவனத்தை ஈர்க்கின்றன; தேவ வல்லமையைப் பெறுவது பற்றிய கவலையில்லையே. *— ஹட்சன் டெய்லர்*
- தேவனுடைய ஆவியானவரின் சித்தத்தைத் தேவனுடைய வசனத்தின் வாயிலாகவே தேடுகிறேன். ஆவியானவரையும் ஆகமங்களையும் சேர்க்கவேண்டும். தேவனது வசனம் இல்லாது தேவனது ஆவியானவரை மட்டும் நான் நாடினால் வஞ்சிக்கப்பட்டுப்போகத்தான் வழிவகுக்கிறேன். *— ஜார்ஜ் முல்லர்*
- ஆவியானவரின் வல்லமையைப் பொருத்தவரை அதனை அனுபவித்தல் முதலாவது வரும்; அதனைப் புரிந்துகொள்ளுதலோ கடைசியில்தான் வரும். *— ஆஸ்வால்டு சேம்பர்ஸ்*
- பரிசுத்த ஆவியின் நிறைவில்லாத திருச்சபை அது இருக்கும் நாட்டிற்குச் சாபம்தான், ஆசீர்வாதம் அல்ல. கிறிஸ்தவ ஊழியனே, நீ ஆவியால் நிறைந்திராவிடில் யாரோ ஒருவரது பாதையை மறித்துக்கொண்டிருக்கிறாய்; பழமரமொன்று வளரவேண்டிய இடத்தில் பாழ்மரமாய் நீ நின்றுகொண்டிருக்கிறாய். *— சார்ல்ஸ் ஸ்பர்ஜன்*
- தேவனது ஆளுகைக்கு உட்படாது மனிதரால் மட்டுமே ஆளப்படும் சபை தோல்வியுறுவது நிச்சயம். வேதக் கலாசாலையில் பயின்றும் ஆவியின் நிறைவு இல்லாத ஊழியத்தில் அற்புதம் எதுவும் நிகழாது. *— சாமுவேல் சாட்விக்*
- இரட்சிக்கப்படாத திரள்கள் தங்களது உயிரற்ற தெய்வங்களை விட்டுவிட்டுக் கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிடுவதற்காக உயிருள்ள தேவனது அதிசய வல்லமை வெளிப்படவேண்டுமென்பதே ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்க்கையின் நோக்கம். *— T. L. ஆஸ்போர்ன்*

- நமது சபைகள் மனிதரால் நிரம்பி வழிவதால் அல்ல, நமது சபைகளிலுள்ள மனிதர் தேவ ஆவியினால் நிரம்பி வழிவதாலேயே இறையரசு விரிவடையும். — *டங்கன் கேம்ப்பெல்*

- மனந்திரும்பாதவர்கள் ஆவியானவரைக் குறித்துக் கேள்விப்பட அதிகம் விரும்பமாட்டார்கள். — *ராபர்ட் முரே மச்செயின்*

- திருவசனத்தைப் பிரசங்கிப்பதற்கு உங்களிடம் தேவனது வல்லமை இருக்கவேண்டுமென்று முன்பெல்லாம் சொல்லுவேன்; இப்பொழுதோ உங்கள் காலணிகளை மாட்டுவதற்கும் தேவனது வல்லமை தேவை என்கிறேன். — *பால் டேவிட் வாஷர்*

- எது தேவனால் உண்டானது, எது அவரால் உண்டானதல்ல என்று நமக்குள் குடியிருக்கும் ஆவியானவர் நமக்குப் போதிப்பார். இதனால்தான், சில வேளைகளில் ஓர் உபதேசத்தை ஏன் எதிர்க்கிறோமென்று காரணங்களை எடுத்துச்சொல்ல முடியாவிட்டாலும் நமது உள்ளத்தின் ஆழத்தில் ஆரோக்கியமற்ற ஒருவித சலசலப்பு ஏற்படுகிறது. — *வாட்மேன் நீ*

- பரிசுத்த அக்கினியைச் சபை இழந்துவிட்டதாலேயே பாதாள அக்கினிக்குள் இலட்சங்கள் விரைகின்றன. — *லியோனார்டு ரேவன்ஹில்*

- ஆண்டவரது பணியை உங்களது சொந்த பலத்தில் செய்வதுதான் உங்களை வெகுவாய்க் குழப்பும், களைப்பாக்கும், அழுத்தும். நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கும்போதோ இயேசுவின் ஊழியம் நதிபோல் உங்களிடமிருந்து புறப்பட்டு ஓடும். — *காரி டென் பூம்*

- பரிசுத்த ஆவியானவர் இறங்கித் தங்க வரும் யாவரும் தேவனது புதிய ஆலயமாகின்றனர். அவர்கள் தனி நபர்களாக இருந்தாலும் ஒரு குழுவாக இருந்தாலும், அவர்கள்தான் விண்ணுலகும் மண்ணுலகும் சங்கமிக்கும் இடமாம். — *N. T. ரைட்*

- 1983ஆம் ஆண்டு ஹாலந்தில் ஏறத்தாழ 5000 ஊழியர் பங்கேற்ற அகிலவுலக மாநாட்டின் மாலைக் கூட்டமொன்றில் பில்லி கிரஹாம் சொன்னது, ''நண்பரே, உங்கள் அறைகளுக்குச் சென்றதும் முழங்காலிட்டுப் புதிய அபிஷேகம் தரும்படி ஆண்டவரிடம் கெஞ்சுங்கள். அது கிடைத்துவிட்டது என்ற நிச்சயம் உங்களுக்கு வரும் வரை முழங்காலிலிருந்து எழும்பாதீர்கள்!'' — *பில்லி கிரஹாம்*



# வசன அட்டவணை Scripture Index

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரையுள்ள வசனக் குறிப்புகளின் ஆராய்ச்சித் தொகுப்பே இந்நூல். பல்வேறு கோணங்களிலிருந்து பல்வேறு அம்சங்களின்மீது எழுதப்பட்ட 50 அத்தியாயங்கள் இதிலுண்டு. இந்த அட்டவணையைத் தொகுத்தபோது, இந்நூலில் 2250 வசனக் குறிப்புகள் மேற்கோள் காட்டப்பட்டிருப்பதை அறிந்து அகமகிழ்ந்தோம். விவிலியத்தின் 66 புத்தகங்களில் ஒன்றுகூட விடப்படவில்லை! பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு, தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால், பிதாவாகிய தேவனை ஆராதிப்பதே இந்நூலின் கடைத்தொகை. திரித்துவ தேவத்துவத்தில் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டுள்ள மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியானவருக்கு உரிய இடம் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. வாசகர் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் இதுவே அனுபவமாகட்டும்!

***ஆதியாகமம்***

**1:2**—8,23,162,252
**2:7**—252,307
**6:3**—253
**8:12-15**—225
**11:4**—99
**12:2**—139
**14:18-24**—150
**18:12-15**—225
**24:22,23,28-32,35, 36,50, 51,53,55-58** — 272
**24:56,66**—205
**24:65**—270
**39:9**—42
**41:37-40**—71
**41:38**—43
**41:38-40**—197
**48:14**—305
**49:22**—224
**49:23-25**—43

***யாத்திராகமம்***

**2:11,12**—42
**4:1-4,17**—246
**4:14-16**—246
**7:1,2**—234
**7:8-12**—246
**7:10-12**—107
**9:29**—294
**15:19-21**—291
**15:20**—295
**18:21**—232
**18:21,25**—244
**20:4,5**—297
**23:14-17**—83
**27:20**—160
**28:41**—158
**30:22-33**—158
**31:1,2**—198
**31:1-5**—70,128,153,197,221
**31:2-5**—43 [304
**32:1,6,7,11**—224
**34:18-23**—83
**34:22**—22
**35:30-35**—304
**35:34**—198

***லேவியராகமம்***

**6:12,13**—133,256
**8:14,18,22**—305
**9:23**—133
**16:21**—305
**23:15,16**—22,83
**24:2**—160
**24:10-16**—282

***எண்ணாகமம்***

**8:12**—305
**11:16,17**—194
**11:17,25,29**—235
**11:24-30**—111
**11:25,29**—194
**12:6**—73
**23:23**—317

**24:2-4**—234
**27:22,23**—305

*உபாகமம்*

**4:23,24**—297
**4:24**—223
**7:5**—297
**13:1-3**—237
**13:1-5**—73
**16:10**—83
**18:19,20**—235
**18:22**—237
**அத். 32**—288
**34:9**—306

*யோசுவா*

**3:5**—105

*நியாயாதிபதிகள்*

**5:8ஆ**—247
**6:13**—101
**11:34**—291
**16:20**—183

*ரூத்*

**1:6**—152

*1 சாமுவேல்*

**1:13**—90
**2:12-14,17,22,25ஆ**—224
**4:21**—292
**10:1**—158
**10:5**—200
**13:22**—247
**16:13**—158
**16:23**—200
**18:6**—295
**18:6,7**—291
**30:19**—259

*2 சாமுவேல்*

**2:14-16**—284
**6:12-15**—291
**23:1**—127
**23:1,2**—156,199,304
**23:2**—93,214,234

*1 இராஜாக்கள்*

**1:39,40**—290
**8:22**—294
**19:11-13**—289
**19:16**—158

*2 இராஜாக்கள்*

**3:15-19**—200
**5:16**—238
**20:5**—238

*1 நாளாகமம்*

**25:1,3**—200
**28:11,12**—43,197

*1 நாளாகமம்*

**5:13,14**—192
**5:12-14**—311
**7:1-3**—193
**7:14**—330
**20:21**—261
**29:3,25,29,30**—261

*எஸ்றா*

**9:5**—295

*நெகேமியா*

**8:2,3,5,6**—263
**8:10**—79
**9:20**—8
**9:30**—97

*எஸ்தர்*

**2:12**—159

*யோபு*

**1:2,3**—259
**1:20**—311
**8:21**—315
**9:10**—103
**15:34**—226
**23:12**—330
**26:13**—8
**31:1**—277
**31:16-23**—224
**31:24-28**—224
**32:8**—22
**33:4**—252
**42:10,12,13**—259

*சங்கீதம்*

**1:1**—255,279
**1:2**—37
**5:8**—13
**15:3,5**—277,278
**16:8-11**—87
**19:14**—277
**23:5**—159,252
**24:4**—278
**30:11**—291
**37:5,23,24**—273
**40:1-3**—194
**45:10-12**—255
**46:4**—220
**46:4,5**—67
**46:10**—287,289
**47:1**—286,287,289
**அத். 51**—139
**51:10-12**—200
**51:11**—68,250,254,318
**51:11-13**—139,266





**66:1**—290
**68:18,19**—132
**68:24,25**—292
**72:11**—311
**74:9,10**—104
**77:13,14**—103
**81:1**—290
**82:6**—308
**84:10**—330
**85:6**—79,291,329
**89:15**—290
**89:15,16**—79
**95:10**—251
**103:2,3**—56
**104:30**—8,200
**106:33**—200
**107:20**—306
**118:15**—42
**118:24**—79
**119:9**—36,157
**119:18**—65
**119:92**—37
**119:97**—278
**119:105**—37
**119:111**—37
**119:130**—37
**122:1**—79
**123:2**—188
**126:1-3**—315
**133:1,2**—44,255
**134:2**—286
**136:4**—103
**139:7**—200,257
**139:7-13**—8
**139:23,24**—257
**141:2**—294
**143:10**—188,200
**144:1**—66
**149:3**—287,291
**150:4**—287,291

*நீதிமொழிகள்*

**1:23**—214
**3:5,6**—273
**4:25**—277
**7:25-27**—279
**8:17**—278
**12:22**—225
**14:13**—315
**14:30**—276
**16:5**—276
**17:22**—314
**21:25**—277
**22:28**—173
**27:2**—277
**28:13**—276
**29:1**—226

*பிரசங்கி*

**3:1,4**—292
**3:7ஆ**—289
**5:1,2**—288
**5:3**—74
**8:11**—225
**11:5**—76,184
**12:7**—307

*உன்னதப்பாட்டு*

**4:16**—163
**5:2அ**—94

*ஏசாயா*

**1:1**—234
**1:15**—288,295
**1:26**—196
**2:11,17**—260
**4:3**—223
**4:3,4**—207,226
**அத். 5**—223
**5:8**—224
**5:11-14**—224
**5:18-21**—225
**5:22,23**—226
**5:24**—223,226
**6:5-7**—226
**7:14**—74
**8:19,20**—172,239
**9:6**—102
**10:12-17**—225
**11:2**—22,70,149,198,222,
**26:13**—259 [250,251
**28:7-14**—120
**28:8**—180
**28:9**—27
**28:11**—97,227
**28:11,12**—30,43,97,229,300,
**29:13**—288 [302
**30:21**—57,273
**33:14,15அ**—225
**34:14-16**—217,226
**37:5,6**—238
**40:3**—13
**40:6-8**—34,217
**43:21**—35
**44:3**—25
**45:19,24**—234
**47:8,10,14**—225
**48:16**—9
**49:6**—75
**52:7**—139,279
**53:4,5**—15,109
**53:5**—56
**54:5-8**—275

**55:1,2**—157
**59:19**—49,110,169,220,274,
**59:19ஆ**—66 [318
**59:21**—214
**60:1**—164
**61:1-3**—49,67,136,146,159,
**61:11**—234 [160,220,221
**63:8-10**—251
**63:9,10,14**—49,67,212,274

***எரேமியா***

**1:9**—235
**1:10**—34,164
**2:2**—255
**2:13**—157
**3:20**—255
**6:16**—181
**9:1**—243
**15:16,17**—234
**20:9**—165,298
**23:28,29**—165
**23:29**—298
**31:11-13**—292
**31:15**—75
**31:31-34**—235
**32:17,27**—111

***புலம்பல்***

**2:11,19**—278
**3:48-50**—304
**5:15,16**—291

***எசேக்கியேல்***

**1:1**—234
**1:28**—310
**2:2**—310
**33:15**—278
**34:24,26**—196
**34:26**—150,156,196
**36:27**—217,263
**36:35**—258
**36:38**—258,263
**அத். 37**—139,258,308
**37:1**—259
**37:3,9**—259
**37:7**—258
**37:7,9,10**—163,258,264,
**37:12**—258 [308
**37:14**—259
**37:15-22**—261
**37:23,24**—259
**37:26,27**—260
**37:28**—263
**38:23**—263,264
**39:28,29**—207

***தானியேல்***

**1:7**—200
**1:17**—222
**4:18**—200,222
**5:11**—43
**5:17**—238
**5:23-28**—224
**6:3**—43
**6:10**—278
**6:26,27**—110
**6:28**—43
**7:9,10**—223
**10:8-11**—311
**11:32**—103

***ஓசியா***

**1:1**—235
**2:19,20,23**—234
**6:3,6**—288
**8:4**—195
**8:14**—224
**10:1**—224
**10:12**—151,330
**11:1**—74
**11:8**—234
**14:3,8**—260

***யோவேல்***

**1:13,16**—79,291,295
**2:21,23**—151
**2:23-25**—203,258
**2:23-29**—123
**2:21,27**—110
**2:28-32**—73,79,106,235

***ஆமோஸ்***

**1:1**—234
**5:15,24**—234
**6:12**—234
**9:11,12**—75

***ஒபதியா***

**vv17,18**—226,298

***யோனா***

**2:9**—184

***மீகா***

**3:5-8**—187
**3:11**—238
**5:2**—74
**7:14**—255

***நாகூம்***

**1:15**—139

***ஆபகூக்***

**3:2**—331

***செப்பனியா***

**3:9**—100





***ஆகாய்***

**2:5**—207,214
**2:6-9**—105,258

***சகரியா***

**2:10,13**—287
**4:6**—66,182,251,270
**4:6,7**—143,266
**4:8,9**—182
**7:12**—217
**10:1**—156,203,330
**12:10**—22,143,207
**13:6**—99

***மல்கியா***

**2:11**—253
**3:2,3**—298
**4:5,6**—41

***மத்தேயு***

**1:18-20**—73,212
**1:22,23**—74
**2:2,11**—80
**2:6**—74
**2:10**—78
**2:11**—31
**2:12**—73
**2:13,19,22**—73
**2:15**—74
**2:17,18**—75
**3:10**—19
**3:11,12**—22,24,164,210,223,
253,297
**3:16**—9,14,166,252
**3:16,17**—271
**4:1**—9
**4:4,7,10**—75
**5:23,24**—276
**5:28**—277
**5:33-37**—225,277
**5:44**—278
**5:45**—105
**6:9-13**—224
**6:15**—276
**6:22,23**—277
**6:33**—330
**7:7-11**—146,302
**7:15,22**—168,169,179,233
**7:15-23**—238
**7:15,25**—169
**7:21-23**—24,34,110,178
**7:26**—178
**8:8**—306
**8:16,17**—109,215
**9:1-7**—56
**10:1-5**—116,127
**10:1,7,8**—129,239
**10:16**—166
**10:18-20**—153
**10:32**—277
**10:41**—236
**11:5**—102
**11:11அ**—243
**11:20-24**—133
**11:28,29**—167
**12:18-21**—9
**12:28**—9,49,215
**12:31,32**—212,282
**12:33-35**—87,283,300
**12:36**—277
**12:38,39**—132,283
**12:44,45**—41
**13:24-30**—331
**14:15,16,**—178
**15:16,17**—180
**15:32**—178
**16:16-19**—148
**16:23**—317
**17:1-6**—311
**17:14-18**—180
**17:19-21**—106,133
**18:20**—55
**19:13-15**—306
**21:8-11**—292
**21:12,13**—318
**22:15-22**—115
**22:23-29**—12,103,215
**22:37-39**—276,287
**23:34**—236
**24:4-12**—17
**24:5**—168
**24:12**—206,331
**24:24**—317
**25:14,15**—125,126
**25:21**—130
**25:35-40**—277
**26:34**—145
**26:40**—278
**28:2-4**—311
**28:16,17**—29
**28:18-20**—8,16,55,88,210

***மாற்கு***

**1:8**—297
**3:11**—311
**3:21,22**—283
**3:28-30**—282,283
**6:5**—305
**7:21,22**—276
**9:14-27**—180,311
**9:38-40**—111
**11:15-17**—54
**13:10,11**—141,206,212

**13:22**—233
**13:31**—34
**13:35-37**—329
**14:31**—145
**16:14**—29
**16:15-18**—30,76,85,96,107,
110,123,129,137,146,227,
249,279,301,305
**16:18,20**—105,131,137,249


***லூக்கா***


**1:5,6,60,62,63**—42
**1:7,18,41,67**—42
**1:15**—210,211
**1:16,17**—41,243
**1:26-28**—73,78
**1:34-38**—8,9,13,74,76,103,
212,253
**1:40-45**—74,77,78,162,213
**1:46,47**—92
**1:46-55**—77,80
**1:53**—25
**1:54,55**—74
**1:64,67-79**—77
**2:10,17**—81
**2:13,14**—80,159
**2:15,16**—78
**2:20**—80
**2:21-24**—75
**2:25-27**—77,211
**2:28**—80
**2:28-35**—77
**2:30-32,38**—81
**2:36-38**—77,80
**3:9-11**—224
**3:16**—297
**4:1,14**—9,48
**4:1-12**—36
**4:1,2,13,14**—275
**4:16-20**—9,133,186,215,266
**4:40**—305
**5:39**—286
**6:21-23**—315,316
**6:37**—277
**6:44**—35
**7:22**—133
**7:44**—157
**8:16,17**—297
**9:17**—297
**10:1,9**—247
**10:17,21**—111,247
**10:18,19**—247,317
**10:21**—9
**10:25,26**—307
**10:34**—159
**10:44**—297
**11:11-13**—17,29,67,94,210,
**12:10**—282 [302
**12:11**—36
**12:49,50**—223,298
**14:23**—279
**15:10**—292
**15:22-25**—292
**16:13**—260
**19:6**—297
**19:37-40**—290
**22:32**—87
**23:31**—16
**24:19**—16
**24:27,44**—15
**24:32**—165,298
**24:41**—29
**24:47-49**—22,24,95,135,
145,221


***யோவான்***


**1:4**—307
**1:11**—15
**1:12**—15,57
**1:17**—15
**1:29**—14,164,166
**1:33**—15,297,307
**2:10**—258
**2:11**—102
**2:13-17**—16
**3:2**—14,101
**3:6**—193
**3:6-8**—184
**3:8**—147,161,222
**3:34**—215
**4:14**—15,174
**4:20-24**—24,62,218,327
**4:24**—35,92,193,211,286
**4:36**—248
**4:37,38**—146
**4:46-48**—133
**6:2**—108
**6:28,29**—103
**6:63**—215
**7:2,14,37-43**—28
**7:37-39**—15,29,139,156,215
**8:44**—225 **9:34**—102
**10:10**—222
**10:12**—169
**10:27-29**—317
**10:34-36**—308
**10:41**—243
**11:32**—311
**11:40**—101
**11:47,48**—110
**12:12,13**—295
**12:37**—108





**13:13**—14
**அத். 14**—61,218
**14:2,3**—203,271
**14:12**—102
**14:16**—14,61,121,159,207,
218,251
**14:16-18**—15,21,23,40,53,
67,68,83,160,274
**14:17,26**—199
**14:17,30**—220
**14:26**—14,22,38,45,46,64,
152,212,273,
**14:26,27**—67,220
**15:3**—157
**15:12**—16
**15:26**—64,72
**15:26,27**—188
**அத். 16**—61,218,269
**16:7**—222
**16:7-11**—282
**16:8,9**—15,34,135
**16:8-11**—48,202
**16:13**—57,64,90,152,160,
174,219,250,263,273,323
**16:13,14**—213
**16:14,15**—16,72,271
**16:23**—16
**16:33அ**—67
**17:4**—16,187
**18:1-6**—311
**20:22**—15,21,210,307
**20:22,23**—135
**20:30**—172
**20:31**—173


***அப்போஸ்தலர்***


**1:2**—9
**1:4**—24,68,95
**1:5**—24,297
**1:7,8**—207
**1:8**—10,16,23,38,69,81,86,
134,144,206,212,221,231,267
**1:8,9**—38,47
**1:13,14**—24,227,267
**1:15**—9
**1:16**—216
**அத். 2**—237
**2:1**—24
**2:2**—144
**2:1-6**—192,290,311
**2:1-12**—82,
**2:2,3**—161,289,294
**2:3,4**—9,15,24,30,44,63,84,
85,96,163,223,299,301
**2:4,11**—78,80,211,273
**2:7,8,12**—82,83,171
**2:8**—231
**2:9,10**—83
**2:11**—99,136,142,228,235,
**2:12**—212 [261
**2:13**—79
**2:14**—135
**2:14-36**—237
**2:16**—171
**2:16,17**—73,169,274
**2:16-18**—203,295
**2:16-21**—75
**2:17**—16,17,86,320
**2:17,18**—78,139,150
**2:16,17,21**—150,267
**2:18**—235
**2:16-21**—75
**2:19,20**—203
**2:20,21**—139,203
**2:22**—102
**2:25,26**—229
**2:25-28,34,35**—75
**2:26**—87
**2:29,30**—234
**2:33**—307
**2:37**—186
**2:38**—24,321
**2:38,41**—9
**2:39**—61
**2:40,41**—85,259
**2:42**—45,84,263
**2:43**—105
**2:44**—135
**2:44,45**—81,136,149
**2:46,47**—79
**2:47**—137,261
**3:1**—45,262
**3:1,3,11**—247
**3:2**—102
**3:4**—247
**3:8**—79,231,261
**3:14**—14
**3:14-16**—76,109
**3:19-21**—259,331
**3:19-23**—16
**3:21**—100
**4:4**—137
**4:8**—212,231
**4:13**—83,136,155,227,243
**4:16**—104,247
**4:24**—261
**4:25,26**—75
**4:29,30**—105
**4:30**—76,115
**4:31**—10,23,47,69,81,86,
142,145,212,215,221,268,289
**4:31,32**—262

**4:32**—44
**4:32,33**—327
**4:34,35**—81,136,149
**4:36**—131,242
**5:2**—260
**5:3,4**—15,211,283
**5:3,9**—317
**5:4**—225
**5:8**—231
**5:12**—105
**5:14**—103
**5:27,28**—188
**5:29,32**—145,188
**5:32**—10,211,256,266
**5:34,39**—110
**5:40,41**—79,140
**6:1-3**—195
**6:2-5**—42,153
**6:3**—136,153,195,213,268
**6:5,8**—129
**6:6**—305
**6:8**—106,231
**6:10**—153
**6:15**—69
**7:3,7,32-34,37,42,43,48-50**
**7:8**—231 [—75
**7:51**—211,251
**7:51,53**—256
**7:54,55**—49,213
**7:55**—10,86,153,207
**7:60**—69
**8:1-19**—25
**8:5-7**—129,147
**8:5-8**—189
**8:6**—106
**8:8**—140,147,231
**8:13**—108
**8:14-17**—308
**8:15**—24,213
**8:15-17**—96
**8:16,17**—147,297
**8:17,18**—86,299,306
**8:20**—238
**8:23**—146
**8:26**—189
**8:26,29**—147
**8:29**—10,190,274
**8:29,39**—267
**8:32-35**—75
**8:39**—190
**9:1-18**—26
**9:4**—311
**9:8**—231
**9:11**—13
**9:17**—30,227,274,297
**9:17,18**—299,308
**9:26,27**—242
**9:31**—10,49,152,268
**9:33-35**—146
**9:43**—147
**அத். 10**—26,140
**10:1,24,44-46**—228
**10:2**—321
**10:3,9-11**—73
**10:5,6,9**—147
**10:8**—231
**10:9-16**—190
**10:19,20**—10,190,267
**10:34,35**—323
**10:34,44-46**—321
**10:38**—9,23,24,49,56,129,
145,186,212,221,266
**10:44**—190,192,297,306
**10:44-48**—86,151,301
**10:45**—96,299,306
**10:45,46**—15
**10:46**—30,63,80,86,211,218,
**10:47**—96 [261
**10:47,48**—321
**11:8**—231
**11:12அ**—147
**11:12,15,16**—274
**11:15**—192
**11:15,16**—216
**11:17**—321
**11:22,23**—140
**11:23-26**—242
**11:24**—151,267
**11:26**—148
**11:28**—237
**11:28,29**—240
**12:8**—231
**13:1,2**—148,195,236
**13:1-3**—328
**13:2-4**—10,16,48,148,195,
212,267,274
**13:3,4**—148,195
**13:4**—140,191,240
**13:6-10**—146
**13:8**—108,231
**13:46,47**—75
**13:47,48**—140
**13:49-52**—49
**13:50,52**—23
**13:50-52**—10,69,79,140,153
**அத். 14**—247 [213,220,315
**14:1,2**—15
**14:3**—105,146
**14:8**—231
**14:12**—247
**14:22**—204





**அத். 15**—177
**15:3**—140
**15:5**—211
**15:6-9**—15,177,231
**15:12**—105
**15:13-17**—177,274
**15:13-21**—146
**15:13-22**—131
**15:15**—237
**15:15-17**—75,137
**15:16**—80
**15:22,28**—177
**15:25-28**—115
**15:28**—10,152,212,240
**15:29**—268
**15:30-32**—177,238,273
**15:32**—236
**15:39**—242
**அத். 16**—140
**16:6**—191,212
**16:6,7**—10,57,191,240,274
**16:6-9**—148,267
**16:8**—231
**16:9**—73
**16:14**—191
**16:16-18**—146
**16:22-25**—315
**16:24,25**—23
**16:25**—261
**17:8**—231
**17:11**—174,263
**17:22-25**—62,218
**17:25**—62
**17:30**—322
**அத். 18**—140
**18:8**—231
**18:9**—73
**19:1,2**—21,78
**19:1,6,7**—78,228
**19:1-7**—86,301,308
**19:2**—14,96,210
**19:6**—15,30,87,96,297,299,
**19:8**—231 [302,306
**19:17**—102
**19:19,20**—147
**19:21**—149
**20:7-12**—105,263
**20:8**—231
**20:17,29-31**—179
**20:22,23**—240,268,274
**20:22-24**—221
**20:23**—10,153
**20:28**—10,152,213,268,275
**20:35ஆ**—330
**21:8,9**—42,232
**21:11**—236,240
**22:8**—232
**22:17,18**—73
**23:7,8**—103
**23:8**—232
**23:9**—110
**23:11**—73
**24:8**—232
**25:8**—232
**26:8**—232
**26:14**—311
**26:22**—237
**27:8**—232
**27:23,24**—73
**28:3-6**—131,146
**28:8**—232,305
**28:31**—105


***ரோமர்***


**1:4**—14,207,250
**1:5**—22,55
**1:10**—246
**4:1-3**—307
**5:5**—15,23,39,250,271
**5:5,6**—144
**5:8**—15
**6:4**—268
**7:1-6**—269
**7:22-24**—65,219
**7:24,25**—59
**அத். 8**—51
**8:1**—33,202,211
**8:2**—51
**8:2,3**—270
**8:3-7**—52
**8:5,6**—52
**8:6,7**—52
**8:9**—23,53,54
**8:9,13**—40
**8:11**—9,15,49,55,71,207,222
**8:12,13**—34,56
**8:13**—211
**8:14**—24,35,56,188,193,
211,251,273
**8:15-17**—57,58,86,186,213,
**8:17-25**—58 [271
**8:18,23,26அ**—274
**8:23**—204
**8:26**—16,45,92
**8:26,27**—22,58,63,143,219,
**8:27**—35 [250,272
**8:26-28**—213
**8:28-30**—59,275
**8:29,30**—59,204
**8:31-39**—59
**8:34**—16

**9:1,2**—48,211
**9:1-3**—144,191,243,304
**10:1**—48,243,304
**10:1,2**—192
**10:8**—37
**10:8,9**—15
**10:9,10**—87
**10:14**—285
**10:15**—139
**10:17**—36
**10:20,21**—132
**11:17-22**—225
**அத். 12**—303
**12:1,2**—179,276,277
**12:3**—125,126
**12:6**—125,126,236,246
**12:6-8**—123,233,241
**12:7**—130,132
**12:8**—131,242,248
**12:10**—238
**12:11**—130,223
**12:19**—172
**13:1-6**—308
**14:10,11**—172
**14:17**—67,211,220,315
**15:2,3**—172
**15:9-11**—137,285
**15:13**—211,250
**15:18,19**—129
**15:30**—250
**அத். 16**—242
**16:1,2**—242
**16:19ஆ**—166

*1 கொரிந்தியர்*

**1:7**—326
**1:31**—172
**2:3,4**—251
**2:4**—145
**2:4,5**—108,185
**2:9**—203
**2:9-14**—46,64,219,271
**2:9,14**—76
**2:10**—204
**2:10,11**—8,35,161
**2:10-14**—212,250
**2:12,13**—216
**2:13**—199
**2:15**—64
**3:1-3**—326
**3:5-7**—146
**3:7**—151
**3:9அ**—188
**3:9-14**—309
**3:12,13**—331
**3:16,17**—16,54,207,250,254
**4:6**—172,237
**4:7**—128
**4:11**—239
**6:11**—34,57,205
**6:13**—109
**6:17-20**—211,254,276
**6:19**—16,66,207
**6:19,20**—222,250
**7:7**—243,304
**7:40**—161
**9:20-22**—149
**10:31**—197,260
**11:5**—98
**11:15**—180
**அத். 12**—90,98,113,303
**12:1**—113,122,212
**12:1,4-7**—89
**12:2,3**—14,259
**12:3**—80,86,94,197,211,271, [283
**12:4-6**—114
**12:4-11**—306
**12:7**—114,126,275
**12:7,8**—216,306
**12:7-10**—31,69,83,86,104, 114,124,146,221,229,245, [248,300
**12:7-11**—16,233
**12:8**—250
**12:8-10**—45,46,115,198,241
**12:8-11**—115
**12:9**—49,75
**12:9,10**—76,96,171,222,236
**12:11**—114,115,125,246
**12:11,12**—245
**12:11,18**—126
**12:12-27**—245
**12:12,15-26**—115
**12:13**—15,48,116,151,262
**12:14**—245
**12:14-27**—125
**12:17,19**—97,116
**12:18**—126
**12:19**—245
**12:21**—246
**12:21-24**—116
**12:22-24**—243
**12:25-27**—116
**12:26-30**—117
**12:27**—125
**12:28**—95,103,119,124,126, 130,131,241,244,248
**12:28-30**—117
**12:29,30**—87,241
**12:30**—85,96



**12:31**—117,241
**அத். 13**—90,98,113,238
**13:1**—100,172,230
**13:1,2**—117
**13:1-3**—300
**13:4-7**—118
**13:8**—96,118,301
**13:8-10**—93,230,302
**13:8-12**—31
**13:9**—19,84
**13:9-12**—118
**13:9-13**—302
**13:13**—118
**அத். 14**—90,98,113
**14:1**—19,126,146,212,233
**14:1-5**—119
**14:2**—30,93,228,272
**14:2,4,13,14**—96
**14:2,14**—31,272
**14:2,14,15**—302
**14:2,28**—96
**14:3**—159,238
**14:3,4**—78
**14:4,14-17**—45
**14:4**—31,300,302
**14:4,18**—93,228
**14:4,5,31**—119
**14:5அ,24அ**—87
**14:5**—78,117,119,121,229
**14:5,39**—96
**14:6**—88,119
**14:6,12**—117
**14:7-11**—120
**14:9**—94
**14:12**—95,117
**14:12அ**—326
**14:12,13**—224
**14:12,37**—115
**14:13**—229
**14:13-17**—300
**14:13,27,28**—96
**14:13,15,27,28**—120
**14:14**—30,92
**14:14,15**—91,228
**14:14-18**—120
**14:15**—35,93,94,193,213, 286,327
**14:15-17**—228,261
**14:16**—35
**14:17**—35,92
**14:18**—30,85,89,227,299
**14:18,19**—31,87
**14:19,26**—115
**14:20**—89
**14:21**—43,227
**14:21,22**—97
**14:22**—229
**14:22,24,25**—139
**14:22-25**—120
**14:23**—90,97
**14:23-25**—311
**14:24,25,29,30**—115
**14:26**—120,248,315
**14:26,31,39**—121,
**14:27,28**—90,115,229
**14:27-31**—121
**14:28**—89,93
**14:31**—16,121,248
**14:32**—97
**14:32-40**—121
**14:33,40**—97,121,230,293
**14:34,35**—98
**14:36**—98,99
**14:37**—237
**14:37,38**—90,122
**14:37,20**—122
**14:39**—90,248
**14:39,40**—230
**14:40**—248,287,296
**15:23**—22
**15:58**—151,329
**16:10,11**—163
**16:15-18**—241
**16:22**—255

*2 கொரிந்தியர்*

**1:21,22**—270
**1:22**—202
**1:24**—158
**2:9-14**—22
**2:14,15**—160
**2:17**—168
**3:1-18**—251
**3:3,14-17**—270
**3:6**—159,199
**3:14-16**—288
**3:15-17**—162
**3:17**—288
**3:18**—23,65,205,275
**3:17,18**—298
**4:4**—275
**4:13**—29,172,250
**5:1,5-7**—55
**5:1-5**—204
**5:1-7**—271
**5:5**—270
**5:18-20**—135
**6:10**—239
**6:15,16**—318
**7:10,11**—225
**9:7**—278

**10:4,5**—49
**10:8-10**—158
**11:2**—205
**11:2-4**—270
**11:4**—168
**11:13**—169,170
**11:13-15**—179,270
**12:1,7**—74
**12:12**—105
**13:14**—8

***கலாத்தியர்***

**1:6-8**—169
**1:7**—170
**1:8**—237
**2:2**—240
**2:4**—170
**2:7,8**—148
**2:20**—268
**3:1**—170,180
**3:3**—72,180,182,270
**4:16**—326
**4:29**—185
**4:30**—307
**5:1**—270
**5:5**—204
**5:16**—40,65,219
**5:17**—219
**5:17,19-21**—254
**5:22**—16,250
**5:22,23**—23,34,44,70,81,136,211,221253,262
**5:25**—62,193
**5:25,26**—313
**6:9ஆ**—151
**6:17**—260

***எபேசியர்***

**1:13-15,18**—202,215,268,270,281
**2:6**—268
**2:8-10**—18
**2:19,20**—90
**3:16-19**—271
**3:20**—303
**அத். 4**—303
**4:2,3**—44
**4:2,3,26-32**—250
**4:3,11**—19
**4:4-6**—326
**4:7**—125,126,246
**4:7,8**—306
**4:7-11**—124
**4:7-13**—16
**4:11**—236,302
**4:11-13**—275,328
**4:11-16**—177
**4:13**—78,169,233,236
**4:13,14**—314
**4:14**—35,169
**4:15**—12
**4:15,32**—238
**4:16**—152
**4:25**—255
**4:25-32**—255
**4:29-31**—212,255,284
**4:30**—15,202,270,318
**5:1,2**—224
**5:8,9**—275
**5:14**—164
**5:18**—18,41,255,268
**5:18,19**—93,199,261,263,288
**5:18-20**—24,45,62,194,216,218,273,304
**5:18,21**—44
**5:18-21**—261,315,327
**5:22-6:4**—41
**5:23**—109
**5:25-29**—224
**5:26**—157
**6:10-13**—48
**6:10-18**—318
**6:12**—220
**6:12,15**—146
**6:12,17**—66
**6:13,17**—203
**6:13,18**—302
**6:15**—279
**6:16**—75
**6:17**—36,213,216,220
**6:18**—16,48,272,313
**6:18-20**—144

***பிலிப்பியர்***

**1:5**—324
**2:1-3**—255
**2:4,5**—330
**2:6,7**—9
**2:13**—129
**3:2**—170
**3:3**—62,218,313
**3:18**—168,170
**4:4**—229
**4:5**—167
**4:8**—160

***கொலோசெயர்***

**1:18**—298
**1:27**—17,54



**2:4,8**—170
**2:16-23**—170,270
**3:1-4**—52
**3:5-7**—224
**3:16**—216,263,288
**4:6**—277
**4:16**—162

***1 தெசலோனிக்கேயர்***

**3:5**—176
**4:1-8**—253
**4:3-6**—34,253,254
**4:7,8**—211,253
**5:16-22**—256
**5:17-21**—239
**5:18**—35,251,256
**5:19**—65,212,223
**5:19-22**—175,251
**5:20,21**—256
**5:21,22**—181
**5:22**—256,278

***2 தெசலோனிக்கேயர்***

**2:3-12**—308
**2:7,8**—206

***1 தீமோத்தேயு***

**1:3**—170
**1:13**—284
**2:1,4**—186
**2:8**—286,294
**2:9**—294
**3:13**—130
**3:15**—91
**3:16**—9
**4:1**—169,175,203
**4:1-3**—331
**4:2**—170
**4:13-15**—163
**4:14**—127,306
**4:14,15**—130
**5:22**—306
**6:4,5**—170
**6:10**—239,278
**6:16**—53

***2 தீமோத்தேயு***

**1:6**—246,306
**1:6,7**—126,145
**1:6-8**—136
**1:7**—23,179,222
**1:13,14**—216,237
**1:14**—218
**2:4**—260
**2:5**—309
**2:16,17**—170
**2:21**—141,298
**2:26**—170,180
**3:1**—17
**3:1,2**—224
**3:13**—170,206
**3:15**—8
**3:16**—46,216
**4:3ஆ**—165
**4:5**—264
**4:11ஆ**—242

***தீத்து***

**1:10,11**—170
**2:13,14**—15
**3:10**—170

***பிலேமோன்***

**வச 15-20**—44

***எபிரெயர்***

**1:1**—234
**1:1,2**—17,169
**1:9**—1160
**2:3,4**—107,138
**2:4**—76
**2:11,12**—166
**3:7**—216
**3:7,8**—211,257
**5:12**—88,165
**5:14**—64,171,179
**6:1,2**—321
**6:2**—306
**6:4-6**—283
**6:10**—323
**9:14**—9
**10:24,25**—278
**10:26,29**—205
**10:26-29**—257,283
**10:26-31**—225
**10:29**—15,257
**10:31**—257
**10:32,33,35,36**—257
**11:3**—75
**11:8,15,17**—131
**11:24-27**—201
**12:15**—160
**12:27**—99,164
**12:28,29**—288
**12:29**—163,223,297
**13:8**—102
**13:8,9**—174

*யாக்கோபு*

**1:17**—84
**1:26**—31,277
**1:27**—278,327
**2:1-4**—226
**3:2**—31
**3:6**—44
**3:8**—44,277
**4:4,5**—205,250,254,298
**4:5**—16
**4:5,7**—66
**4:9,10**—316
**5:12**—225
**5:14**—159
**5:16**—88,107
**5:17**—88

*1 பேதுரு*

**1:2**—205,220,253
**1:6,7**—298
**1:10-12**—251
**1:12**—145
**1:18,19**—318
**2:1-3**—37
**2:2**—36
**2:3**—326
**2:5,9**—328
**2:9,10**—137,235
**3:18**—9
**அத். 4**—303
**4:9,10**—243,304
**4:10**—126,246
**4:10,11**—124
**4:11**—125
**4:12-14**—16
**4:12-16**—251
**4:13,14**—204
**4:14**—17,49,69,141,150,284,
**5:8,9**—317 [374

*2 பேதுரு*

**1:14; 3:2**—180
**1:19**—37,64
**1:19-21**—251
**1:20,21**—15,22,37,64,74,
155,215,219,263,304
**1:21**—46,121
**அத். 2**—180
**2:1**—169,233
**2:1,3,15**—238
**2:17**—181
**3:7,12,13**—226

*1 யோவான்*

**1:7**—56
**2:17**—33
**2:18**—168,169
**2:18-21**—237
**2:26,27**—64,175,236,239,273
**2:27**—162
**3:2**—230,302
**4:1**—168,233,236
**4:4**—108,317

*2 யோவான்*

**வச 10,11**—237

*3 யோவான்*

**வச 2**—107
**வச 9-11**—284

*யூதா*

**வச 3**—169
**வச 19**—8
**வச 19-21**—118
**வச 20**—16,22,133,193,213,
272,300
**வச 20,21**—93,204

*வெளிப்படுத்தல்*

**1:9,10**—251
**1:17**—311
**அத். 2**—154
**2:1,8,12,18**—16
**2:4-7**—255
**2:5,16**—205
**2:7,11,17**—10,41,205
**2:7,11,17,29**—16,257,259
**2:7,11,17,26,28**—206
**2:21**—254
**2:23**—66
**2:29**—251
**அத். 3**—154
**3:1,7,14**—16
**3:3,11**—205
**3:5,12,21**—206
**3:6,13,22**—16,257
**3:17**—183
**3:20**—183,276
**3:21,22**—252
**4:10**—311
**7:9,10**—100,292
**8:1**—287,290
**12:11**—66,75
**14:13**—207
**15:3,4**—288
**19:4**—311
**19:10**—77,87,240
**21:8**—225
**22:1,2**—67
**22:16,17**—266
**22:17**—48,135,186,189,
**22:20**—213 [207




***கிறிஸ்தவ வாழ்வில்***
***நிறைவாய் வளர உணவளிக்கும்***
***ஒரு தினசரித் தியான நூல் ...***



**Better**
**Everyday**

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி*

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

*கிடைக்குமிடம்:*


R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*

## ‘‘பைபிள் புதையல்கள்’’

by **R. ஸ்டான்லி**



ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-
*ஆங்கிலம், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*





# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

***by R. ஸ்டான்லி***

□ *160 இதயம் பேசும் கடிதங்கள்* □
□ *800 புகைப்படங்களும் வரைபடங்களும்* □
□ *30 எழுப்புதல் அறிக்கைகள்* □
□ *50 சவால் நிறை கட்டுரைகள்* □
□ *33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள்* □
□ *8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள்* □

1024 பக்கங்கள் □ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

# Bible Study Helps

## ■ *Bible Foundation*

Brother Stanley's handwritten notes of 4 weeklong Study Programmes of 1977, 1978, 1979 & 1984, in 4 Volumes, totally 400 pages of A4 size paper, spiral bound, cased in a rexin pouch. Available in English only. *Rs. 500/-*

## ■ *Bible Answers*

Frank Answers by R. Stanley to 100 Questions, frequently asked but rarely answered, under seven sections: Christian Life, Christian Doctrine, Holy Spirit & Gifts, Church, Christian Ministry, Sex & Marriage, Social Life. 240 Pages. Available in English and Tamil. *Rs. 100/-*

## ■ *Bible Treasures*

200 Corrective Bible Lessons, by R. Stanley, from the beginning of Christian Life to the end of Physical Life. 832 pages, Jacketed Hardcover. Available in English, Hindi, Kannada, Tamil and Telugu. *Rs. 500/-*

## ■ *Bible Pearls*

200 Select Sermon Outlines from Brother Stanley's 50+ years of pulpit Ministry, 1963-2016, under 14 heads, from Repentance to the Return of Christ. 1200 pages, Jacketed Hardcover. Available in English and Tamil. *Rs. 1000/-*

*Contact us for details.*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>* *<evangeline@stanleyonbible.com>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- ❒ *அறிவூட்டும் அகவுணர்வுகள்*
- ❒ *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?*
- ❒ *ஆனந்த அறுவடை*
- ❒ *இரட்சிக்கப்படுவது எப்படி?*
- ❒ *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*
- ❒ *இயேசுவின் அடிச்சுவடுகள்*
- ❒ *இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!*
- ❒ *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்*
- ❒ *எதிர்நீச்சல் வாலிபர்*
- ❒ *எழுப்புதல் வரும்போது ...*
- ❒ *ஐந்தப்பம் இருமீன்*
- ❒ *கண் திறக்கும் கட்டுரைகள்*
- ❒ *காட்டுத் தேன்*
- ❒ *கீழ்ப்படிதலே மேல்படி!*
- ❒ *சமநிலைக் கிறிஸ்தவன்*
- ❒ *சிறு நரிகள்*
- ❒ *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)*
- ❒ *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)*
- ❒ *நான் நிற்கும் கன்மலை*
- ❒ *நெஞ்சில் நெருப்பு*
- ❒ *பூர்வ பாதைகள்*
- ❒ *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!*
- ❒ *பொற்பழங்கள்*
- ❒ *பைபிள் பதில்கள்*
- ❒ *பைபிள் பரிசுத்தம்*
- ❒ *மாணவ மணிகளுக்கு...*
- ❒ *வல்லமை தேவனுடையது!*
- ❒ *விசுவாச வாழ்வு*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***
Stanley talks heart to heart with the Visitors of this Website.

❐

***General Messages***
Enlightening Articles for Christian Growth

❐

***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching

❐

***Bible Studies***
Studies on specific themes and select books of the Bible

❐

***Doctrinal Essays***
Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible

❐

***Youth Matters***
Practical Guidelines to Young Men and Young Women for Successful Living

❐

***Leaders Column***
Biblical Insights and Practical Lessons on Christian Leadership

❐

***Missionary Challenge***
Calling Christians to obey the Great Commission of Christ

❐

***My Answers***
Answers to Questions frequently asked but rarely answered

❐

***Quotable Quotes***
Stanley's analytical Statements about Christian Life and Ministry

❐

***Video Talks***
Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive daily devotions & updates instantly.)*



## *முடிவு வரிகள் ...*

□ கிறிஸ்தவ நண்பர்கள் எந்தச் சபைப்பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைத் தெளிவாய் அறிமுகம் செய்து, பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக அவர்களைக் கிறிஸ்துவுக்கு வல்லமையான சாட்சிகளாய் மாற்றுவதே இந்நூலின் நோக்கம்.

□ ஏற்கனவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்போர் இன்னும் கூடுதலாக அவர்மீது சார்ந்திருக்கவும், அவரது ஐக்கியத்தை அனுபவிக்கவும் இந்நூல் உதவும்.

□ இந்நூலைத் திரும்பத் திரும்ப வாசித்து, இதில் கொடுக்கப்பட்டுள்ள திருவசனக் குறிப்புகளை எடுத்துப் பார்த்து, இங்குள்ள உன்னத சத்தியங்களால் உங்களை நிரப்பிக்கொள்ளுங்கள். உங்கள் கிறிஸ்தவ வாழ்வும், வேலையும், திருப்பணியும் புரட்சிகரமாகும்.

□ உடன் விசுவாசிகளுக்கும் இறைப்பணியாளருக்கும் இந்நூலை அறிமுகம் செய்யுங்கள். இந்தியாவிலுள்ள வேதாகமக் கல்லூரிகளில் பயின்று வெளிவரும் ஒவ்வொருவருக்கும் இந்நூலை அன்பளிக்க ஆசிரியர் விரும்புகிறார். இதற்கான உங்கள் பொருளுதவி வரவேற்கப்படுகிறது. வங்கி விபரம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>   <evangeline@stanleyonbible.com>*